தமிழர் பண்பாடு - கம்பன் காவியம்

(ஐந்தாம் தொகுதி)

வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்

பேராசிரியர்
எஸ். வையாபுரிப்பிள்ளை

பேராசிரியர்

வையாபுரிப் பிள்ளை நூற்களஞ்சியம்

ஐந்தாம் தொகுதி

தமிழர் பண்பாடு-கம்பன் காவியம்

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையைப் பற்றிய கருதுகோள்களை, இக்காலத்தவர் மதிப்பீடு செய்து கொள்வதற்கு ஏதுவாக, நினைவு மன்றம் அமைத்து அதன் மூலமாக அவருடைய நூல்களை வெளியிடும் பணிக்கு அடித்தளமிட்டு மறைந்த, பேராசிரியரின் மூத்த மகளார்

திருமதி வை. சரோஜினி அம்மையார் அவர்களுக்கு

இந் நூற்களஞ்சியத் தொகுதியைக் காணிக்கை யாக்குகின்றோம்.

வையாபுரிப் பிள்ளை நூற்களஞ்சியம்

ஐந்தாம் தொகுதி

தமிழர் பண்பாடு - கம்பன் காவியம்

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை

நூற்றாண்டு நினைவு வெளியீடு-5

வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம்
'வையகம்' 2, 4ஆவது குறுக்குத் தெரு,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600 028.

முதற் பதிப்பு : அக்டோபர் 1993

© உரிமை பதிவு

விலை ரூ. 75-00

விற்பனை உரிமை

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
சென்னை-600 098

அச்சிட்டோர்:

கதிரவன் அச்சகம்,
14, எல். பி. ரோடு,
சென்னை-600 041.



பேராசிரியர் எஸ். வையாபுரி பிள்ளை

தோற்றம்
12—10—1891

மறைவு
17—2—1956

முகவுரை

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை நூற்களஞ்சிய வரிசையில் ஐந்தாவதாகத் ''தமிழர் பண்பாடு-கம்பன் காவியம்'' என்னும் இத்தொகுதி இடம் பெறுகிறது. தமிழர் பண்பாடு 1949-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலும், கம்பன் - காவியம் 1955-ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்களிலும் வெளிவந்தவை. தமிழர் பண்பாட்டுடன் தொடர்புடைய கம்பன்-காவியம் இத்தொகுதியில் இரண்டாவது பகுதியாகச் சேர்க்கப் பெற்றுள்ளது.

'தமிழர் பண்பாடு' என்னும் முதற் பகுதியில், தமிழர் பண்பாடும் இலக்கியமும், கலையுட பண்பாடும், பண்டைத் தமிழக வாழ்க்கை, புறநானூறும் தமிழரும், அகநானூறும் காதலும் முதலான கட்டுரைகளோடு, அகராதி நினைவுகள் என்னும் நூலிலிருந்து பண்டைத் தமிழ்நாடும் சமயமும், பக்தியும் தெய்வ வரலாறுகளும், பக்திப்பெருவெள்ளம் முதலான 9 கட்டுரைகள் சேர்க்கப்பெற்றுள்ளன. மேலும் காவிய காலம் என்னும் நூலின் (முதற் பதிப்பு) பிற்சேர்க்கையிலிருந்து 'தமிழகத்தில் திருமணம்' என்ற கட்டுரையும், 'தமிழின் மறுமலர்ச்சியிலிருந்து' 'நவீனகீதை' என்னும் கட்டுரையும் ' இலக்கிய விளக்கத்தினின்று ' 'தைந் நீராடல்' என்ற கட்டுரையும் முதற்பகுதியில் இடம் பெறுகின்றன,

கம்பன் காவியம்

இத்தொகுதியில் இரண்டாவது பகுதியாக அமைந்த கம்பன் காவியத்திலும், பொருத்தமுடைய சில கட்டுரைகள் சேர்க்கப் பெற்றுள்ளன, 'தமிழ்ச் சுடர்மணிகள்' நூலினின்று கம்பர்காலம், கம்பர் திருநாள், சடையப்பவள்ளல் ஆகிய மூன்று கட்டுரைகள் சேர்க்கப்பெற்றுள்ளன. முதற்பகுதியாகிய தமிழர் பண்பாட்டி னின்று கம்பனின் பாத்திரப் படைப்புக் கட்டுரைகள் இரண்டாவது பகுதியில் இடம்பெறுகின்றன. இராமசரிதையும் தமிழ்நாடும் இரண்டாவது பகுதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவ்வாறு பேராசிரியரின் மற்றநூல்களிலிருந்தவை பொருத்த முடைமை கருதி ஐந்தாம் தொகுதியின் முதல் அல்லது இரண்டாம் பகுதிகளில் சேர்க்கப்பெற்றுத் திருந்திய பதிப்பாக இத்தொகுதி வெளிவருகின்றது,

இப்பதிப்பின் தனிச்சிறப்பு

ஐந்தாவது தொகுதியில் முதற்பகுதி-தமிழர் பண்பாடு 1949ஆம் ஆண்டு ஜூன் திங்களில் முதன் முதலாக வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து 1951 1955, 1958, 1961, 1963, 1968, 1974 ஆண்டுகளின் பதிப்புக்களுடன் சேர்த்து மொத்தம் 8 பதிப்புக்கள் வெளிவந்தன. பேராசிரியரின் நூல்களில் இதுவே அதிகம் பதிப்புக்களைப் பெற்றது. மேலும் இந்நூல் இலண்டன் பல்கலைக் கழகத்தில் பாடப்புத்தகமாகவும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத் தக்கது.

கம்பன் காவியம் 1955-ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்களில் வெளிவந்தது. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை இதனை மயிலை ரசிகரஞ்சனி சபையில் தமிழ்ப் பேரறிஞர்கள் முன்னிலையில் அரங்கேற்றினார். அதேநாளில் ஆளுநர் ஸ்ரீபிரகாசா தலைமையில் நடைபெற்ற விழாவில் பேராசிரியரின் தமிழ்ப் பணியைப் போற்றும் வகையில் தமிழ் எழுத்தாளர் சங்கம் அவருக்குக் கேடயம் வழங்கிப் பாராட்டியது.

கம்பன் காவியத்தில் இடம்பெறும் கட்டுரை ஒன்று கம்பன் ஆராய்ச்சிப்பதிப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பதை விளக்குகின்றது. அதேகட்டுரையின் இறுதியில் கம்பனை ஆராய்வதற்கான பல கோணங்களைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

கம்பனுக்கு ஆராய்ச்சிப் பதிப்பு ஒன்றை உருவாக்கப் பேராசிரியர் பெருமுயற்சி மேற்கொண்டார். இதற்காகத் தம் வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவிட்டார். நீண்ட நாட்களாகக் குறிப்புக்களைக் குறித்துவைத்தார். ஆழ்வார் திருநகரி. தென் திருப்பேரை முதலான பல இடங்களிலிருந்தும் 77 கம்பராமாயணச் சுவடிகளைத் தேடித் தொகுத்தார். நேர்மையான நியதிகளை வகுத்தார். இவர் கனவு கண்ட ஆராய்ச்சிப் பதிப்பு பல்வேறு காரணங்களால் கைகூடவில்லை இது தமிழுலகிற்குப் பேரிழப்பே ஆகும்.

இதனை உணர்ந்த தமிழ்ப் புத்தகாலய உரிமையாளர் திரு. கண. முத்தையா தமது பதிப்புரையில்,

''பேராசிரியர் அவர்களின் கம்பராமாயண ஆராய்ச்சிப் பதிப்பும், அவர்களது விளக்கவுரையும் வெளிவராதவரை தமிழ்-இலக்கியக் கருவூலத்தில் காலியாக உள்ள. ஒரு பெரிய இடம் நிரப்பப்படாமலேயே இருக்கும். இப்பெருங் காரியம் நிறைவேறத் தமிழகம் துணைபுரிய வேண்டும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

பேராசிரியரின் முயற்சிக்குச் சான்றாதாரமாகக் கிடைத்த கடிதங்கள் பின் இணைப்பில் சேர்க்கப்பெற்றுள்ளன.

இத்தொகுதிக்கும் பொருட்குறிப்பும், உட்தலைப்புகளும் தரப்பட்டுள்ளன.

பேராசிரியர் மறைவுக்குப்பின் 1960 தொடங்கி 1980 களின் இறுதிவரை, அவரது நூல்கள் பரவலாகக் கிடைக்காத சூழல் இருந்தது. இக்காலங்களில் அவர் குறித்த மதிப்பீடுகளை மேடைகளிலும் பிற சூழல்களிலும் கேட்பவருக்கு, அவை சரிதானா என்று உறுதிப்படுத்த, அவரது நூல்களைத் தேடிப் படிப்பதற்கும் அரிதான சூழல் இருந்தது. எனவே அவர் 1940 தொடங்கி 1960 வரை செய்யப்பட்ட மதிப்பீடுகள் அப்படியே 1980 இறுதிவரை பரவலாக இருந்தது என்றே கருதமுடியும்.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் ஐந்தாவது நூற் களஞ்சியத் தொகுதி வெளிவரும் சூழலில், அவர் தொடர்பான மதிப்பீடுகள் எவ்வகையில் வெளிப்படுத்தப்படுகின்றன! அதற்கு நூல்களஞ்சியத் தொகுதி வெளியீடுகளின் பங்களிப்பு ஏதேனும் உண்டா? என்ற தன்மைகளைப் பதிவு செய்வதும் ஒருவகையில் அவசியம் என்றே கருதலாம்.

பேராசிரியர் நூற்றாண்டு நிறைவையொட்டி நடைபெற்ற கருத்தரங்குகளில், அவருடைய முதலிரண்டு நூற்களஞ்சியத் தொகுதிகளில் இருந்த செய்திகளில் பெரிதும் விவாதிக்கப்பட்டன. அச்சூழலில் அத்தொகுதிகள் வெளிவந்தமையால் அவரைப் பற்றிய மதிப்பீட்டாளர்கட்கு நேரடியான தரவுகள் கிடைத்தன. இந்தப் பின்னணியில் பேராசிரியர் குறித்த பழைய மதிப்பீடுகள் சிலரால் மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது, அவருடைய தமிழ்ப்பற்று குறித்து விரிவாகக் கருத்தரங்குகளில் விவாதிக்கப்பட்டது. அவருடைய பல்துறைப் புலமையும் பரவலாக அறியப்படும் சூழல் உருவாகி வருகின்றது. இந்தப் பின்

புலத்தில் நூற்களஞ்சியத் தொகுதிகளின் வெளியீடுகளின் பயன்பாட்டை நாம் பெரிதும் புரிந்து கொள்ள முடிகிறது.

எனவே இவ்வகையில் இப்போது வெளிவரும் ஐந்தாம் தொகுதியான தமிழர்பண்பாடு - கம்பன் காவியம்' என்னும் இத்தொகுதியும் தமிழாய்வில் ஆழங்காற்பட்டுத் திளைத்த பேராசிரியரின் ஆய்வு நெறியினைத் தமிழுலகம் நன்கு புரிந்து கொள்ள வாய்ப்பாக அமையும் என்று நம்புகின்றோம். கம்ப இராமாயணத்திற்குப் பல்வேறு பதிப்புகள் வெளிவந்துள்ள இன்றைய சூழலிலும் பேராசிரியரின் கம்ப ராமாயணப் பதிப்புச் சிந்தனைகளின் வழி அவர்தம் பேரார்வத்தை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

நன்றியுரை

இத்தொகுதி அச்சிடப் பெறுங்காலத்தில் சென்னைப் பல் கலைக்கழகத் தமிழ்த்துறையைச் சார்ந்த முனைவர் இ. சுந்தர மூர்த்தி அவர்களும் முனைவர் வீ. அரசு அவர்களும் அச்சுப் படிகளை ஒப்புநோக்கித் திருத்தி நல்லமுறையில் வெளிவரப் பெரிதும் உதவியுள்ளார்கள்; மேலும் ஆய்வு மாணவர் திரு.பு. ஜார்ஜ் இத்தொகுதிக்கான பொருட் குறிப்பு அகர நிரலை விரிவாகத் தொகுத்துள்ளார், கதிரவன் அச்சகத்தார் இந்நூலை அழகுற அச்சிட்டு வெளிவரச்செய்தனர். இவர்களுக் கெல்லாம் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றத்தின் சார்பில் நன்றிதெரிவித்துக் கொள்கிறோம்.

'வையகம்'
சென்னை-28
12—10—1993

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை
நினைவு மன்றத்தார்

உள்ளுறை

முதற் பகுதி
தமிழர் பண்பாடு

			பக்கம்
1	தமிழர் பண்பாடும் இலக்கியமும்	...	1
2	கலையும் பண்பாடும்	...	17
3	பண்டைத் தமிழக வாழ்க்கை	...	23
4	புறநானூறும் தமிழரும்	...	41
5	அகநானூறும் காதலும்	...	55
6	தைந்நீராடல்	...	60
7	தமிழகத்தில் திருமணம்	...	69
8	நகைச்சுவை	...	75
9	கலிங்கத்துப் பரணியில் நகைச்சுவை	...	84
10	பண்டைத் தமிழ்நாடும் சமயமும்	...	104
11	பக்தியும் தெய்வவரலாறுகளும்	...	108
12	பக்திப் பெருவெள்ளம்	...	114
13	பக்திப்பெருவெள்ளத்தின் விளைவு		118
14	பக்திக் கனியின் தீஞ்சாறு		122
15	வடநாட்டில் கண்ணன்		126
16	அவதாரங்களும் தென்னாட்டுத் தொடர்பும்	...	131
17	ராதாவும் கிருஷ்ணனும்	...	136
18	நவீன கீதை	...	141
19	சமயமும் லட்சியங்களும்	...	144
20	கற்றதனால் ஆய பயன்	...	152

இரண்டாம் பகுதி

கம்பன் காவியம்

			பக்கம்
1	இராமசரிதையும் தமிழ்நாடும்	...	175
2	கம்பன் கவிச்சக்கிரவர்த்தி	...	181
3	கம்பன் காவியம்	...	193
4	கம்பர் காலம்	...	207
5	கம்பர் திருநாள்	...	226
6	சடையப்ப வள்ளல்	...	243
7	கம்பனும் தமிழும்	...	251
8	கம்பன் பாத்திரப் படைப்பு	...	272
	1 உத்தம சகோதரன்	...	272
	2 இலக்குமணன்	...	279
	3 கும்பகர்ணன்	...	289
	4 மாயா சனகன்	...	312
	5 அழகுத் தெய்வம்	...	316
	6 கற்புத் தெய்வம்	...	325
9	கம்பன் ஆராய்ச்சிப் பதிப்பு	...	332
10	இராம காதை	...	361
11	கம்பராமாயணமும் ஜைன இராமாயணமும்	...	382
12	கம்பனைக் கற்கும் நெறிகள்	...	389
13	இராமாயணப் பதிப்பு முயற்சிகள்	...	396

பின்னிணைப்புகள்

		பக்கம்
1	Kamban as edited by T K. C. ...	403
2	The age of Kamban a Rejoinder ...	409
3	Kamban ...	416
4	கம்பனுக்குத் திருந்திய பாடம் ...	422
5	கம்பனுக்குச் சுத்தப் பதிப்பு முயற்சி...	424
6	கவிபணி கடிதம் ...	431
7	முன்னுரைகள் ...	438
	கம்பராமாயணப் பதிப்பு விவரம் ...	442
	பொருட் குறிப்பு அகர நிரல் ...	449

முதற் பகுதி

தமிழர் பண்பாடு

முதற் பகுதி

தமிழர் பண்பாடு

1. தமிழர் பண்பாடும் இலக்கியமும்

பண்பாடு தமிழுக்குப் புதுச் சொல்

பண்பாடு என்பது சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன், 1937-இல், நண்பர் திரு டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் புதிதாகத் தமிழுக்குக் கொண்டுவந்த ஒரு சொல். ஆங்கிலத்திலே கல்ச்சர் (culture) என்பதைத் தமிழில் இவ்வாறு மொழி பெயர்த்திருக்கிறார்கள். வேறு சிலர் 'கலாசாரம்' எனவும், 'பயிற்சிப் பண்பு' எனவும் மொழிபெயர்த்துள்ளனர். சாதாரணமாக, பண்பாட்டிற்கும் பண்பு என்பதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதுபோல் பலர்க்கும் தோன்றும். பண்படுதல் என்பது திருந்துதல், செம்மைப்படுதல், தகுதியாதல் என்று பொருள்படும். இவ் வினைச்சொல்தான் பண்பாடு என நீண்டு பெயராக அமைந்திருக்கிறது. 'தமிழர் பண்பாடு' என்றால் தமிழ் மக்களுக்கே தனித்துரிய திருந்திய மனப்பான்மை என்று பொருள்பட வேண்டும். தமிழ் மொழியிலேயும் தமிழ் இலக்கியங்களிலேயும் இத் தனிப்பட்ட திருந்திய மனப்பான்மை தெளிவாகவும் சிறப்பாகவும் விளங்குவதாகும்.

'கல்ச்சர்' பற்றிய சொற்போர்

ஒரு காலத்தில்,, அதாவது, சுமார் 1870-ஆம் ஆண்டினை அடுத்து, கல்ச்சர் என்ற சொல்லின் பொருளைக் குறித்து இங்கிலாந்திலேயே மிகப் பெரிய சொற்போர் ஒன்று நடந்து வந்தது. இந்தச் சொல்லைப் பிரபலமாக ஆட்சிக்குக் கொண்டு வந்தவர் மாத்யூ ஆர்னால்டு (Mathew Arnold) என்ற பேரறிஞர்.

இவரை மறுத்து எழுதியவர்களுள் ஒருவர் பிரடெரிக் ஹாரிஸன் **(Frederic Harrison)** என்ற வேறொரு பேரறிஞர். ஆனால், நாம் இந்த விவாதத்தில் தலையிடவேண்டாம். மாத்யூ ஆர்னால்டு கொண்ட கொள்கையையே நாமும் ஒத்துக்கொள்வோம். இவரது கருத்தில், 'கல்ச்சர்' எனப்படுவது ஒருவன் தன் குணநலங்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்திருக்கும் சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் பக்குவ நிலையே ஆகும்.

குணநலம் என்பதில் அறிவுநலம் முதலியனவும் அடங்கினவாக இவர் கொண்டனர். எனவே, அறிவு குணம் முதலியவை மேன் மேலும் நிரம்பிச் சமுதாய நலத்தை மேன்மேலும் பேணுகிற மனநிலை கல்ச்சர் எனப்படும். இது பக்குவமாகி முதிர்ந்து கொண்டே செல்லும் மனநிலை. இந்த நிலையைப் படிப்படியாகத்தான் ஒருவர் அடைய முடியும். இனிமேல் அடைய வேண்டும் ஒரு மேல்நிலை இல்லை 'என்ற முடிவும் இவ்விஷயத்தில் கிடையாது. கணக்கற்ற படிகளுள்ள ஓர் ஏணி என்று இதனைச் சொல்லலாம். மேன்மேலும் ஏற இடம் கொடுத்துக் கொண்டே செல்வதுதான் இதன் இயற்கை. மேன்மேலும் பயிற்சியினால் திருந்திப் பண்பட்டுக்கொண்டே வரும் மனப்பான்மைதான் கல்ச்சர் என்றும் பண்பாடு என்றும் கூறப்படுவதன் இயல்பு. இவ்வாறு திருந்திவரும் பண்பாட்டினால், ஒருவனது ஆன்ம இயற்கையிலே கனிவும் இனிமையும் மிகுகின்றன; உள்ளொளி பெருகுகின்றது; உயிர்த்தத்துவம் வளர்கின்றது; பிற மக்களின் மீது அன்பும் அருளும் செழிக்கின்றன.

பண்பாட்டின் தன்மை

இப் பண்பாட்டின் தன்மை எவ்வாறு அறியப்படுகின்றது? மக்கள் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் என்றுதான் பதில் சொல்ல வேண்டும் என்பர் மாத்யூ ஆர்னால்டு. ஆகவே இவையிரண்டும் சிறந்து காணப்படுகின்ற இலக்கியங்களால் பண்பாடு நமக்குப் புலப்படும் என்பது தெளிவாகின்றது. அதாவது ஓர் ஆசிரியனது பண்பாடு அவன் இயற்றிய இலக்கியத்தால் புலனாமென்பதே கருத்து.

ஓர் ஆசிரியனிடத்துச் சிறந்து விளங்கும் பல இயல்புகள் இருக்கலாம். இக்காரணத்தால் அவனது இலக்கியத்தில் அவ் ஆசிரியனது பண்பாடு புலப்படலாம். ஒரு சமுதாய மக்களிடத்தில்

அல்லது ஒரு தேசத்து மக்களிடத்தில் சிறந்து விளங்குவனவான பல இயல்புகளையும் உணர்வதற்குக் கருவி யாது? இவர்களுடைய பொதுப் பண்பாடு இலக்கியத்தால் விளங்குமா? ஒருவாறு விளங்கும் என்றே நாம் துணிந்து கூறலாம். 'நிலத்தினுடைய இயல்பை அதிலே முளைத்த முளை காட்டும்; இதுபோல, குலத்தின் இயல்பை அதிலே பிறந்தவருடைய சொல் காட்டும்' என்று திருவள்ளுவர் கூறினார்.

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல் (குறள் 959)

என்பது அவர் திருவாக்கு.

இது பண்பாட்டு விஷயத்திலும் உண்மையேயாம். ஒரு சமுதாயத்தை அல்லது ஒரு தேசத்து மக்களின் பொதுமையை நிலத்திற்கு ஒப்பாகச் சொல்லலாம். அதிலே தோன்றிய ஓர் ஆசிரியனை நிலத்தில் முளைத்த முளைக்கு ஒப்பாகச் சொல்லலாம். முளையானது நிலத்தின் இயல்பைக் காட்டுதல் போல, ஆசிரியனது இலக்கியத்தால் விளங்குகின்ற அவனது பண்பாடு, அவன் பிறந்த சமுதாயத்தின் பண்பாட்டையும் உணர்த்தும்.

சமுதாயத்தின் பண்பாடு

சமுதாயத்தின் பண்பாடு ஒருவாறு விளங்கலாம். ஆனால், ஆசிரியனது பண்பாடுதான் சமுதாயத்தின் பண்பாடு என்று உறுதி கூற முடியுமா? இப்படிக் கேள்வி கேட்க நியாயமுண்டு. ஆனால், ஒரு விஷயம் நாம் ஞாபகத்தில் வைத்தல் வேண்டும். ஒரு சமுதாயத்திற்கும் அதில் தோன்றிய ஓர் ஆசிரியனுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. சமுதாயப் பண்பாட்டில் சில அம்சங்கள் அவனிடம் பிரதிபலிக்கத்தான் செய்யும். இந்த அம்சங்கள் அவனது பண்பாட்டின் இயல்பிற் புகுந்து, அதனைப் பேதகதி செய்யாமல் போகமாட்டா. இங்ஙனமே, ஆசிரியனது பண்பாட்டிற் சில அம்சங்கள் அவனது சமுதாயத்தின் பண்பாட்டினைப் பேதிக்காமல் இருக்கமாட்டா. ஆகவே, இவ் இரண்டு பண்பாடுகளும் ஒன்றையொன்று தாக்கி, ஒன்றையொன்று வேறுபடுத்தும்; ஒன்றின் இயல்பு பிறிதொன்றின் இயல்பை நாம் அறிந்துகொள்வதற்கு இடந் தருவதாகும்.

ஒரு ஜாதியார் அல்லது ஓர் இனத்தவர்களின் பண்பாடு விளங்குவது அவர்களுடைய இலக்கியத்தில் மாத்திரமன்று. வேறு பல துறைகளிலும் அது சிறந்து காணப்படும். நடையுடை பாவனை, மொழி, இசை, சிற்பம் முதலிய கலைகள், அவர்கள் மேற்கொண்டுள்ள லட்சியங்கள், சமயக் கொள்கைகள், பிற மதம் பொறுக்கும் இயல்பு, அரசியற் கொள்கைகள், அரசியல் வரலாறுகள், சமுதாய நிலைமை, பெண்களின் நிலைமை, அறிவியற் சிறப்பு, கல்வி நிலையங்கள், நூல் நிலையங்கள், விஞ்ஞான நிலையங்கள் முதலியவை சிறப்பாகக் கூறத்தக்கன. இவற்றுள் 'தமிழ் மொழியும் இலக்கியமும்' எவ்வகையான பண்பாடுகளை உணர்த்துகின்றன என்று நோக்குவோம்.

முற்சங்க காலம்

முதலாவது, தமிழ் - இலக்கிய வரலாற்றை எடுத்துக்கொள்வோம். இப்போது நமக்குக் கிடைக்கும் இலக்கியங்களில் மிகப் பழையன கிறிஸ்து அப்தத்தின் 2-ஆம் நூற்றாண்டில் இயற்றப் பட்டவை. பொதுப்பட, இவற்றைச் சங்க இலக்கியங்கள் என வழங்குவர். முற்சங்க இலக்கியம், பிற்சங்க இலக்கியம் என்று இரண்டு கூறுகளாக இந்த இலக்கியங்களைப் பகுத்துக் கொள்வது நலம். இவற்றுள் முற்சங்க இலக்கியங்கள்: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு என்ற தொகை நூல்களிலுள்ள செய்யுட்களும், பத்துப்பாட்டில் முருகாற்றுப்படை யொழிய ஏனைய பாட்டுக் களுமாம். பிற்சங்க இலக்கியங்கள் : கலித்தொகைச் செய்யுட்கள், முருகாற்றுப்படை, பரிபாடற் செய்யுட்கள் என்பனவாம். இங்ஙனம் சங்க இலக்கியங்களை இரு கூறாகப் பிரித்துக் கொள்ளுதற்குத் தக்க காரணங்கள் உண்டு, இரண்டு வகை இலக்கியங்களும் புலவர்கள் பலர் பாடிய செய்யுட்களைப் பின்வந்த ஆசிரியர்கள் தொகுத்து வைத்த தொகை நூல்களே. எக்காலத்தில் இப்புலவர்கள் வாழ்ந்தனர் ? எக்காலத்தில் இப்பாடல்கள் தொகுக்கப்பெற்றுத் தொகை நூல்களாக அமைந்தன ?

முற்சங்கப் புலவர்கள் கி. பி. 100 முதல் 300 வரையுள்ள காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள் என்று நாம் பொதுப்படக் கொள்ளலாம். பிற்சங்கப் புலவர்கள் கி. பி. 600 முதல் கி. பி. 800 வரையுள்ள காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள் ஆகலாம். இவர்களுள் முற்சங்கப் புலவர்கள் இயற்றியவை சுமார் 4-ஆம்

நூற்றாண்டின் இறுதியிலும், பிற்சங்கப் புலவர்கள் இயற்றியன சுமார் 9-ஆம் நூற்றாண்டிலும் தொகுக்கப்பெற்றன என்று கொள்ளலாம்,

இவைகளை இலக்கியம் என்ற முறையிலேதான் நாம் இனி நோக்குதல் வேண்டும். மேற்பார்வையாய் நோக்குமிடத்து, சங்கப் பாடல்கள் 'லிரிக்ஸ்' (Lyrics) என்று ஆங்கிலத்திற் கூறப்படும் இனத்தைச் சார்ந்தவை. காதல், வீரம் முதலிய ஒவ்வொரு சுவையைப் பற்றிப் புலவன் உணர்ச்சி ததும்பப் பாடும் பாடல்களைத்தான் இவ்ஆங்கிலச் சொல் குறிப்பது. நாம் இவ்வகைப் பாடலை உணர்ச்சி ஒருமைப் பாடல் என்று குறிப்பிடல் தகும். இப்பாடல்களால் இரண்டு சிறப்பியல்புகள் புலனாகின்றன. சங்ககாலத்துத் தமிழ்மக்கள் கவித்வ சக்தி பெரிதும் வாய்ந்தவர்கள் என்பது ஒன்று; அவர்கள் உலக வாழ்க்கையிற் பெரிதும் ஈடுபட்டவர்கள் என்பது மற்றொன்று. முற்சங்க காலத்துப் பாடல்கள் பெரும்பாலும் தெய்வம் பற்றியன அல்ல. இப்பாடல்களை அகம் பற்றியவை என்றும், புறம் பற்றியவை என்றும் முன்னோர்கள் பிரித்துக்கொண்டனர். வேறு சில சிறப்பியல்புகளும் நாம் இங்கே உணர்தற்குரியன. நேர்மை, எளிமை, தெளிவு, சுருக்கம் முதலிய இயல்புகளும் இப்பாடல்களிலே புலனாகின்றன. இவ்வகை இயல்புகளும் நமது முன்னோர்களுக்கு இயற்கையில் அமைந்திருந்தன என்று கொள்ளலாம். அன்றியும், பேச்சிலுள்ள இயற்கை - ஒத்திசைப்பு (Speech rhythm) இப்பாடல்களில் எங்கும் காணலாம். இதுவும் செயற்கை நலன்களைப் பூர்விகத் தமிழ் மக்கள் விரும்பாதவர்கள் என்பதைத் தெரிவிக்கும். ஆனால், பத்துப்பாட்டில் வருவன போன்றுள்ள நீண்ட அகவல்கள் இங்ஙனம் அமைந்தன என்று கூறமுடியாது. நீண்ட அகவல்களைக் கையாளும் திறம் பிற்காலத்தேதான் வாய்த்தது போலும். இங்ஙனமாகத் தமிழர்களது சிறப்பியல்புகளை நன்கு புலப்படுத்துவனவாய் இவ் உணர்ச்சிப் பாடல்கள் முற்சங்க காலத்தில் தோன்றின.

பிற்சங்க காலம்

பிற்சங்க காலத்தே இரண்டு அம்சங்களில் பாடல்களின் தன்மை வேறுபட்டது. ஒன்று இசைக்குரிய பாடல்கள் அமைந்தவை; பிறிதொன்று தெய்வம் பற்றிய பாடல்கள் தோன்றியமை. முற்சங்க காலத்திலும் இசைக்கருவிகள் இருந்தன.

யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளொடும் வாரா ஆயினும், தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர் தம்மழலை. (புறம் 92)

என்பது முதலியனவாக வரும் பாடல்களால் இது தெளிவாகும். பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை முதலியவற்றில் யாழின் பல்வேறு உறுப்புக்களும் காணப்படுகின்றன. யாழ் முதலியவற்றைப் பாணர் என்ற ஒரு வகைச்சாதியார் துணைக் கருவிகளாகக் கொண்டு அரசர்கள் வள்ளல்கள் முதலியோர் களிடம் சென்று, அவர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்தனர். ஆனால் எவ்வகையான பாடல்களைப் பாடி னார்கள் என்று தெரிவதற்கு இடமில்லை. அகவற் பாக்கள் இசையோடு பாடுவதற்கு இடங்கொடுக்க மாட்டா. பிற்சங்க காலத்தில் காணப்படும் தாழிசைதான் இசையோடு பாடுதற்குப் பொருந்தியதாம். இங்ஙனமே, தெய்வம் பற்றிய பாடல்களும் பிற்சங்க காலத்தில் தோன்றியவையாம். முருகவேள் முதலிய கடவுளர்களைக் குறித்த பாடல்கள் பரிபாடலிற் காணப்படு கின்றமை இதனை ஆதரிக்கின்றது. ஆகவே பிற்சங்க காலத்தில் இசையுணர்ச்சியும் தெய்வ உணர்ச்சியும் தமிழ் மக்கள் உள்ளத்தில் இடங்கொண்டமை அறியலாம். இவற்றிற்கேற்ப, பாடல்களும் புதிய வடிவங்களை மேற்கொள்ளத் தொடங்கின. கலிப்பாடல்களும் பரிபாடல்களும் இப்புதிய வடிவங்கள். பரிபாடலிலே ஒவ்வொரு செய்யுளையும் இயற்றியவர் இவர் என்பதும், அதற்குரிய பண் இது என்பதும், இசையூட்டியவர் இவர் என்பதும் விளக்கமாகத் தரப்படுகின்றன. இதனால் கலித் தொகையிற் காட்டிலும், பரிபாடலில் இசை மிகுதியாய்த் தழுவப் பட்டதென்பது விளங்கும்.

பிற்சங்க காலத்தில் காணும் தெய்வம் பற்றிய கொள்கை, மேன்மேலும் தமிழகத்தில் வந்து குடிபுகுந்த ஆரிய மக்களது கலப் பினால், மிகவும் செழுமையுற்று வளர்வதாயிற்று. முதன்முதலில் இச் சமயக் கொள்கை வணக்கம் என்ற அளவில் நின்று, பின்னர்ப் பக்தியாய்ப் பெருக்கெடுத்துத் தமிழ் நாடு முழுவதும் ஓடிச் சென்று பரவலாயிற்று. சமயம் பற்றிய வாதப் பிரதிவாதங்களும் அங்கங்கே நிகழ்ந்தன. அரசர்களும் சமயங்களை ஆதரிக்கத் தொடங்கினர். இவர்கள் ஆதரவில் அவ்வச் சமயத்திற்குரிய திருக்கோயில்கள் தோன்றலாயின. அடியார்கள் திருக்கூட்டங் களும் மிகவாய்ப் பெருகின. கோயில்கள் தோறும் சென்று அடியார்கள் தோத்திரம் செய்து சைவ வைஷ்ணவ சமயங்களைத்

தமிழ் நாட்டில் நிலைநிறுத்தினர். தொடக்கத்திற் பக்தியை மேற்கொள்ளாது, தம் தம் கொள்கைகளின் பெருமையிலும் ஒழுக்கச் சிறப்பிலும் நம்பிக்கை வைத்திருந்த பௌத்த, ஜைன சமயங்கள் தோல்வியுற்று மக்களிடையே பரவாமற்போயின.

பக்திப் பெருக்கு

இங்குக் கூறிய பக்திப் பெருக்கின் விளைவாகத் தோன்றிய வைகளே தேவாரம், திருவாசகம், நாலாயிரம் முதலிய அருளிச் செயல்கள், பக்திப்பாடற் காலம் கி. பி. 600 முதல் 850 வரை யாகும். பாடுவதற்குத் தகுந்தபடி பலவகை விருத்தம், துறை முதலிய இனச்செய்யுட்கள் இப்பொழுதுதான் தமிழில் வரத் தொடங்கின. இதனால், சிறியதும் பெரியவுமாகிய அகவற்பாக் களை ஆண்டுவந்த தமிழ்ப் புலவர்கள் இப்பொழுது நியதிக்குட் பட்ட அளவிலே சுருங்கி அமைந்த சிறு பாட்டுக்களை இயற்று வதற்கு முடிந்தது. பண்களின் இயல்பும் இப்பொழுது அபிவிருத்தி யடைந்தது. தேவாரம் முதலிய பாடல்களைக் கோவில்களில் பலருங் கூடிநின்று பண்ணோடு ஓதிவந்தனர். புலவன் ஒருவனே பண்ணோடு இயைந்த பாடல்களைப் பாடிய காலம் இப்போது கழிந்துவிட்டது. பலருங்கூடி இப்பாடல்களைப் பண்ணுடன் பாடியதால், பண் உணர்ச்சியானது நாட்டிலே மிகுதியாகப் பரவிற்று. இதனால் புதுமையான இலக்கியங்கள் தமிழில் தோன்றுவதற்கு இடம் ஏற்பட்டது.

முற்கூறியவாறு பக்தியை மதிக்காதபடி சமயக் கொள்கை, ஒழுக்கச் சிறப்பு முதலியவற்றைச் சிறப்பாக மதித்துவந்த ஜைனர் முதலியோர் ஒழுக்க நூல்கள் பலவற்றை இயற்றினர். இவைகள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அடங்கியன. பக்தி நிகழ்ச்சிகள் ஒருபாலும், ஒழுக்கப் பெருமைகள் ஒருபாலும் தமிழ கத்தில் ஒரே காலத்தில் நிகழ்ந்தமையால், இங்கே கூறிய பக்தி நூல்களின் காலத்திலேயே ஒழுக்க நூல்களும் தோன்றின என்று கொள்ளலாம். தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் பெருஞ் சிறப்புத் தரக்கூடியதாக அமைந்தது வள்ளுவரது திருக்குறள் என்ற ஒழுக்க நூல். இது பெருமையால் முற்பட்டிருப்பது போன்றே, காலத்தாலும் முற்பட்டது என்று கொள்ளலாம். இந்நூலின் பெருமையை வியவாதார் இல்லை. தற்காலத் துள்ளாரில் சிலர் தமிழுக்குக் கதியாவர் இருவர் என்றும், 'க' கம்பனையும் 'தி' திருவள்ளுவரையும் குறிக்கும் என்றும் வினோத முறையில் கூறிவருவது, இந்நூலின் சிறப்பைத் தமிழ் மக்கள் போற்றிப் பாராட்டுவதை ஒரு சிறிதே விளக்குகிறது.

'பண்பாடு' என்பதற்கு மிகச் சுருங்கிய பொருள் கொண்டால், அதன் தன்மை உலகம் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் அறியப்படும் என்று ஆசிரியர் மாத்யூ ஆர்னால்டு (Mathew Arnold) கூறியதை ஒப்புக்கொள்வதாயிருந்தால், வள்ளுவரது திருக்குறள் தமிழ் மக்களது பண்பாட்டின் மேன்மையை மிக நன்றாக எடுத்துக் காட்டுகிறது என்னலாம்.

நல்லொழுக்கம்

இவ்வாறு நல்லொழுக்கத்தை மிகச் சிறப்பாக மதித்துப் பாராட்டியவர்கள் குலப்பெருமையைச் சிறிதும் மதியாத ஜைன சமயத்தவர்களாவர்.

> பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான் (குறள் 972)

என்றனர் திருவள்ளுவர். அரசாங்கத்தாருடைய ஆதரவு இன்றி, தனித்தனிக் கூட்டமாய், மலைக் குகைகளில் வாசம் செய்து கொண்டு, தங்கள் கொள்கைகளைத் தங்கள் ஒழுக்கத்தால் ஒருவாறு பரப்பி வந்தார்கள் இந்த ஜைனர்கள். சமயத்தையும் ஒழுக்கத்தையும் போலவே, தமிழையும் பிற மொழிகளையும் இவர்கள் பெரிதும் பேணி வந்தார்கள். தமிழில் பலவகையான இலக்கியங்களையும் செய்தவர்கள் பெரும்பாலும் ஜைனர்களே யாவர். இப்போது கிடைப்பனவற்றுள் முதன் முதலாகத் தோன்றிய தமிழ் இலக்கணம் தொல்காப்பியம் ஆகும். இவ் இலக்கணம் மிகவும் செம்மையாக அமைக்கப்பட்ட தலை சிறந்த ஒரு நூலாகும். இதுவும், யாப்பருங்கலவிருத்தியில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள பல பல இலக்கண நூல்களும், ஜைனர்கள் இத் துறையில் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியை நன்கு விளக்குகின்றன. தங்களுடைய சமய மேம்பாட்டினைப் பொது மக்கள் உணரவேண்டும் என்று கருதி, கதைகள் ரூபமாகப் பல நூல்களை இவர்கள் இயற்றினார்கள். காவிய காலம் தமிழ் நாட்டில் தொடங்குவதாயிற்று. கி பி. 750 முதல் 1000 வரை இம் முயற்சி நிகழ்ந்தது. பின்பும் ஒரு காவிய முயற்சி நிகழ்ந்தமையால், இதனை மூற்காவியகாலம் என்று நாம் கூறலாம். இக்காலத்தில்தான் சிலப்பதிகாரம் முதலிய பஞ்ச காவியங்கள் தமிழில் தோன்றின. சிலப்பதிகாரத்தின் ஆசிரியரைக் குறித்துப் பாரதி கூறியிருப்பது பலர்க்கும் ஞாபகமிருக்கலாம்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை

என்று கூறினார். இந்நூலிலே காணும் தமிழ்வளமும் வரிப்பாடல்களின் கவிதைச் சிறப்பும் இனிமையும், நாட்டியம் முதலிய கலை நூல்களின் கருத்தும், இதற்குத் தனிப்பெருமை அளித்துக்கொண்டிருக்கின்றன. இக்காவியம் இயற்றிய காலத்திலே தோன்றிய பிறிதொரு காவியம் மணிமேகலை. இது ஒன்றே தமிழில் தோன்றிய பௌத்த நூல்களுக்குப் பிரதிநிதியாக இப்பொழுது அகப்படுகின்றது. உதயணன் பெருங்கதையும் கவித்வச் சிறப்பு மிகுதியாய் விளங்கும் ஒரு காவியமாகும். அகவற்பாவில் அமைந்த காவியங்கள் இங்ஙனமாக, விருத்தத்தில் அமைந்த காவியங்களும் தமிழுக்குப் பேரணியாக உள்ளன. சூளாமணி, சிந்தாமணி என்ற இரண்டு காவியங்களும் சிறப்பாக எடுத்துக் கூறத்தக்கன. இக்காவியங்களும் தமிழ் மக்கள் சமயப் பற்று மிகுதியாய் உடையவர்கள் என்பதைத் தெரிவிக்கின்றன. அன்றியும் அவர்களது கலையுணர்ச்சியும், அழகுணர்ச்சியும் இவற்றிலே நன்கு புலனாகின்றன.

ஜைன சமயத்தால் விளைந்த நன்மை

ஜைன சமயத்தால் தமிழுக்கு விளைந்த நன்மை நீதிநூல்களும் காவியங்களும் மாத்திரம் அல்ல. அவர்கள் அடிக்கடி சமயப் பொருள் பற்றி விவாதம் புரிந்து வந்தமையால், சமய தத்துவங்களைப் பற்றிய நூல்களும் தமிழில் தோன்றலாயின. இக்காலம் தான் சமய சாஸ்திர காலம். கி. பி. 1000 முதல் கி. பி. 1350 வரை இக்காலத்தின் எல்லையெனக் கொள்ளலாகும். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன், அதாவது சுமார் கி. பி. 850-ஆம் ஆண்டில் தோன்றிய ஸ்ரீ சங்கராச்சாரியார் வேதாந்த சூத்திரத்திற்கு மகாபாஷ்யம் இயற்றியதும் ஸ்ரீ இராமாநுஜாச்சாரியர் தமது ஸ்ரீபாஷ்யம் இயற்றியதும் தத்துவ சாஸ்திர முயற்சி பெருகுவதற்குக் காரணமாக இருந்தன. மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதம் முதலிய சைவ சித்தாந்த சாஸ்திரங்களும் வைஷ்ணவ சாஸ்திரங்களும் ஜைன சாஸ்திரங்களும் தோன்றின.

காவியங்கள்

சமய உணர்ச்சியும், சாஸ்திர உணர்ச்சியும், ஒழுக்க உணர்ச்சியும், காவியக் கலை அறிவும் மேற்கூறியபடி மேம்பட்டு

வந்த பிற்பாடு, வேறு சில காவியங்கள் தோன்றின. இம்முறை தோன்றியவை ஜைன காவியங்களல்ல ; இராமாயணம், பாரதம் முதலிய வைதிக காவியங்களாகும். இவைகள் கி. பி. 1150 முதல் கி. பி. 1350 வரையுள்ள காலப்பகுதியில் இயற்றப்பட்டன. நன்கு சிருஷ்டிக்கப்பட்ட பாத்திரங்களின் வாயிலாக ஒழுக்கத்தின் சிறப்பையும், காவிய அமைப்பு முதலியவற்றால் பெருங் காப்பியத்தின் அழகு, நலன்கள் முதலியவற்றையும், இடை யிடையே கூறப்படும் உபகதைகள் முதலியவற்றால் சாஸ்திர உணர்ச்சியையும், கவிதையின் பேரழகினாலே கவித்வ ஆற்றலையும், இக்காவியங்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. காவியங்கள் என்று பன்மையில் நாம் கூறுவது அத்துணைப் பொருத்தமன்று. கம்பராமாயணம் ஒன்றுதான் இங்கே சிறப்பாக நாம் கருத வேண்டுவது. கம்பனுடைய பெருமையைக் குறித்துத் தமிழ் மக்களுக்குக் கூறவேண்டும் அவசியம் சிறிதும் இல்லை. ஆனால், ஒரு விஷயத்தை நாம் வற்புறுத்திக் கூறவேண்டும். தமிழ் மன்னராகிய சோழ அரசர்கள் தமிழ் நாட்டில் ஏகாதிபத்தியம் செலுத்தி, அன்னிய நாடுகளிலும் வெற்றியால் தங்கள் புகழைப் பரப்பி வந்த காலத்தே, இத்தமிழ்ப் பேரிதிகாசம் தோன்றியது. தமிழ் மக்களது கவித்வத்தின் பேரெல்லையைக் குறிப்பதாக இப்பெருங்காவியம் அமைந்துள்ளது.

கம்பனது காவியம் வடமொழிச் சார்பு பற்றியது. தமிழ் நாட்டிலேயுள்ள சமயக் கதைகளைத் தொகுத்துப் பெருங் காப்பியம் என்று சொல்லும் தகுதியில் அமைந்த ஒரு நூலும் தோன்றியது. அதுதான் பெரிய புராணம். இது சைவ மக்களால் பெரிதும் போற்றப்படுகிற ஒரு நூல். இலக்கிய அறிஞர்களும் இப்பெரிய புராணத்தைச் சிறந்ததொரு நூலாகவே பாராட்டி வருகிறார்கள்.

உரையியல் காலம்

ஏகாதிபத்தியம் செலுத்திவந்த சோழ அரசர்களுடைய பரம்பரை தோல்வியெய்திச் சிதைவுற்றது. ஏனைய பாண்டிய அரசர்கள் முதலானோரும் மிக்க க்ஷீணத்தை அடைந்தார்கள். இந்நிலையில் புதுவகையான நூல்களும் இலக்கியங்களும் தோன்றுவதற்கு வசதி ஏற்படவில்லை. அங்கங்கே பண்டை நூல்களைக் கற்று, அந்நூல்கள் இறந்துபடாமல் பாதுகாத்து வந்த பல அறிஞர்கள் இருந்தனர். அவர்கள் தமிழ் இலக்கியங்

களுக்கும் இலக்கணங்களுக்கும் உரைகள் இயற்றினர். தவிர, சமய சாஸ்திரங்களுக்கும் இவர்களில் சிலர் வியாக்யானம் வகுத்தார்கள். கி. பி, 1250 முதல் 1600 வரையில் இவ்வுரைகள் இயற்றும் முயற்சி நிகழ்ந்தது. இந்தக் காலம்தான் உரையியல் காலம். உரைகாரர்களுள் பாராட்டுதற்குரியவர்கள் நக்கீரர், இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலியோராவர். தமிழ் வசனத்திற்கு அடிகோலியவர்கள் இவ்உரைகாரர்களே. களவியலுரை கண்ட நக்கீரரே சிறப்பாகப் போற்றப்படுபவர், இவருரை எதுகை மோனை முதலிய நயங்கள் மிகுந்தது. மற்ற வர்களுள் இளம்பூரணர் உரை யாவரும் எளிதில் கற்றுணரும்படியாக உள்ளது. சேனாவரையர் உரையும், பேராசிரியர் உரையும் கல்வியாளர்களுக்கு மட்டும் விளங்கும் தரத்தன. பரிமேலழகர் திருக்குறளுக்கு ஒரு சிறந்த உரை இயற்றினார். இவ் உரைபற்றி ஒரு செய்யுள் உண்டு.

> பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள
> நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ? —நூலிற்
> பரித்தஉரை யெல்லாம் பரிமே லழகன்
> தெரித்த உரை யாமோ? தெளி.

இயல், இசை, நாடக நூல்கள்

அடியார்க்கு நல்லார் இயல், இசை, நாடக நூல்களை நன்றாக உணர்ந்து ஓர் அரிய உரையைச் சிலப்பதிகாரத்திற்கு இயற்றியிருக்கிறார். இவரது உரை இல்லாமற்போனால், பண்டைக் காலத்து வழங்கிய இசை, நாடகம் முதலிய பொருள்கள் பற்றி நாம் ஒன்றும் அறிய முடியாதவர்களாயிருப் போம். நச்சினார்க்கினியர் இலக்கிய இலக்கணங்கள் பலவற் றிற்கு உரை எழுதியவர்.

சோழ அரசர்கள் பெருமை பெற்று விளங்கிய காலத்திலே அந்த அரசர்களது வெற்றிச் சிறப்பு முதலியன பற்றிப் பல பிரபந்தங்கள் தோன்றின. உதாரணமாக முத்தொள்ளாயிரத்தைக் கூறலாம். இப்பிரபந்தங்களுக்கு முற்பட்டனவாகச் சமயச் சார்பு பற்றிய சில பிரபந்தங்களையும் கூறுதல் கூடும். அவை களை முற்காவிய காலத்தில் அடக்கி, அரசர்களைக் குறித்த பிரபந்தங்கள் தோன்றிய காலத்தைப் பிற்காவிய காலத்தில்

உட்படுத்துதல் வேண்டும். இவை கி. பி, 1000 முதல் 1300 வரையுள்ள காலத்தினவாகும். இப்பிரபந்தங்கள் ஒருவகையில் அரசர்களை மகிழ்வித்தும், பிறிதொரு வகையில் கவிச்சுவையால் பொது மக்களை மகிழ்வித்தும் வந்தன, இவற்றில் வரும் கவிதைகள் பல்வகையான சுவைகளையும் பெற்று இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. இவற்றுள் மிகச் சிறந்தன கலிங்கத்துப் பரணியும் மூவர் உலாவும் ஆம்.

சிற்றிலக்கியம்

இக்காலத்திற்குப் பின், தமிழ் இலக்கியமே ஒடுங்குதசையை அடைந்துவிட்டது என்று கூறுதல் வேண்டும். பெரும்பாலும் புராணங்களும் சில்லறைப் பிரபந்தங்களுமே பாடப்பெற்றன. சிற்றரசர்கள் ஒரு சிலர் அங்கங்கே தமிழை ஆதரித்தனர். கோயில் மடங்கள் முதலியவற்றிலிருந்தும் தமிழ்க் கல்வியும் புலமையும் ஒருவகையாகப் போற்றப்பட்டு வந்தன. எனினும் பொதுவாக நோக்குமிடத்து கல்வியும் புலமையும் ஒடுங்கியே வந்தன. இக்காலம் கி. பி. 1500 முதல் கி. பி. 1800 வரையாகும் என்று சொல்லலாம். ஆனால், இடையிடையே நல்ல இலக்கியங்களும் தோன்றாமற் போகவில்லை, சீறாப்புராணம் இங்கே கூறத் தக்கது, இவ்விலக்கியங்கள் தெய்வங்களைப் பற்றியனவும் சிற்றரசர்களைப் பற்றியனவுமாய் இருந்தன. குற்றாலக் குறவஞ்சியும், முக்கூடற் பள்ளும் சிறந்த எடுத்துக் காட்டுக்கள், பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகையவாம் என வகுத்துள்ளார்கள். இவற்றுள், ஒரு சில தவிர ஏனைய, எல்லாம் மிகக் கீழ்ப்பட்ட தரத்தன என்றே நாம் சொல்லவேண்டும்,

ஐரோப்பியர் வருகை

இக்காலப் பகுதியில் சுமார் 1600-ஆம் ஆண்டில் ஐரோப்பிய மக்கள் நமது இந்திய தேசத்திற்கு வரத் தொடங்கினார்கள். இவர்கள் தமிழ் நாட்டில் பிரபலம் பெற்று விளங்கி, அரசுரிமை பூண்டு நன்றாக ஆளத் தொடங்கிய காலம் 1800-ஆம் ஆண்டு முதல் என்று கூறலாம். அச்சு-யந்திரமும் இக்காலத்தில்தான் பிரபலமடையத் தொடங்கிற்று. 1800-ஆம் ஆண்டுக்கு மேல் ஒரு புதிய சக்தி தமிழ் மொழியிலும் தமிழ் இலக்கியங்களிலும் புகுந்து உலவத் தொடங்கியது. பெஸ்கி 1735-ஆம் ஆண்டில் தமது சதுரகராதியை இயற்றினர். தேம்பாவணியின் ஆசிரியரும் இவரே.

உயர்ந்த லட்சியங்கள்

மேல் விவரித்த இலக்கிய வரலாற்றை நாம் நோக்கினால், தமிழர்களது பண்பாடு எப்படி வளர்ச்சியுற்று வந்திருக்கிறது என்பது ஒருவாறு விளங்கும். ஆதியில் அவர்கள் உலகப்பற்று உடையவராய், உலக - அனுபவங்களில் ஈடுபட்டிருந்தனர். பௌத்த சமயமும், ஜைன சமயமும், வைதிக சமயமும் ஒரு புத்துணர்ச்சியையும் பரந்த நோக்கத்தையும் நமது மூதாதையர்களுக்கு அளித்தன. அன்றியும் கவிஞர்கள் சிலர், தங்கள் கவித்வ திருஷ்டியால் உயர்ந்த லட்சியங்களைக் கண்டு, அவற்றைத் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டினர்.

உண்டா லம்ம இவ்வுலகம் ; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே ; முனிவிலர் ;
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சி ;
புகழெனின் உயிருங் கொடுக்குவர் ; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே, (புறம் 182)

என்ற செய்யுள் இதற்குச் சான்று. வேறு சிலர் ஞானிகட்குரிய சமநிலையைத் தங்கள் அறிவுத் திறத்தால் உணர்ந்து அதன்கண் நின்று தம் ஒழுக்கச் சிறப்பைப் புலப்படுத்தினர்,

யாதும் ஊரே ; யாவரும் கேளிர் ;
தீதும் நன்றும் பிறர்தர வாரா ;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன ;
சாதலும் புதுவ தன்றே ; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே ; முனிவின்
இன்னா தென்றலு மிலமே; மின்னொடு
வானம் தண்டுளி தலைஇ ஆனாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம் ஆகலின், மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே;
சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே (புறம் 192)

என்ற செய்யுளால் இது விளங்கும்.

வைதிக மதச் சார்பு

பின்னர், வடநாட்டிலிருந்து தெற்கில் வந்த வைதிக ஆசாரங்களும், கிரியைகளும், வைதிகத் தெய்வங்களும் தமிழர்களது உள்ளத்தில் இடங்கொண்டன. தமிழ் மக்கள் வைதிகமதச் சார்பினராகி, அதன் கொள்கையிலே ஈடுபட்டு இம்மைப் பயனைப் பெறுவதோடு அமையாது. மறுமைப் பயனையும் அடைவதில் கருத்துக்கொண்டனர். இதன் பின்னர், சமயப் பற்று முதிர்ந்து தமிழ் மக்கள் பக்திப் பரவசராய் ஒழுகி வந்தனர். பக்தி - ஒழுக்கத்தோடு அமையாது, அதற்கு இன்றியமையா அடிப்படையாக இருக்கவேண்டும் நல்லொழுக்கத்திலேயும் இவர்கள் மனம் நன்கு ஊன்றி நிலைத்தது. இதன் பின்னர் பக்தர்களுடைய அற்புதச் சரிதங்களில் விருப்பங்கொண்டு, மக்களது இயற்கைக்கு மேற்பட்ட பல இயல்புகளை மனோ பாவனையினால் சித்திரிக்கத் தொடங்கினர். இச் சித்திரங்களும் பெரும்பாலும் சமயச் சார்பு பற்றியனவாகவே அமைந்தன. சமயத் தத்துவங்களையும் இவர்கள் ஆராய்ச்சி செய்தனர். இதனால், பொதுப்பட இவர்களுடைய ஆராய்ச்சியின் வன்மை நன்கு உரம் பெறுவதாயிற்று. இவ் ஆராய்ச்சி வன்மை இவர்கள் இயற்றிய சமய சாஸ்திரங்களில் மட்டுமன்றி உரை நூல்களிலும் புலப்படுகின்றன. சமயம் பற்றிய பல துறைகளிலும் இவர்களது அறிவு சென்று பெருமை பெய்தியது. ஆதிசங்கராச்சாரியர், ஸ்ரீ இராமாநுஜாச்சாரியர் முதலியோர்கள் இதற்குச் சான்றாவர். இங்ஙனம் அறிவின் பேரெல்லையை அடைந்த பிற்பாடு இவர்களுடைய சமயப்பற்றுச் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிற்று. இவ்வாறு குறைவதற்குப் புலவர்கள் இயற்றிய புராணங்களும் ஒரு முக்கிய காரணம், இவர்களுடைய கவித்வமும் சிறப்புக் குன்றி, மதிப்பிழந்து வருவதாயிற்று. முகம்மது சமயம், கிறிஸ்து சமயம் முதலிய் அந்நிய சமயங்களையும் இவர்கள் நாடலாயினர். ஐரோப்பியர் வரவினாலும், அச்சு - யந்திரப் பிரசாரத்தினாலும், ஆங்கிலச் செல்வாக்கினாலும் பூர்வ சரித்திர உணர்ச்சி நமக்கு மிகுந்தது. மேனாட்டு அறிவு சிறிது சிறிதாகப் பரவி ஒரு நூதன சக்தியை நமக்கு அளித்தது. பூர்வ இலக்கியங்களில் நமது கருத்துச் சென்றது. ஒரு புது வாழ்வு நிகழ்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

தேசிய உணர்ச்சி

இந்த நிலையிலே தேசிய வுணர்ச்சி நம்மை ஆட்கொண்டது. பாரதியின் பாடல்கள் இத்தேசிய வுணர்ச்சியைப் பொங்கி

யெழச் செய்தன. நமது நாடும் இலக்கியமும் உண்மையிலேயே மறுமலர்ச்சி அடைந்தன. இந்த மறுமலர்ச்சியில் பாரதி, தேசிக விநாயகம் பிள்ளை முதலியோரது கவிகளும், சில விஞ்ஞான நூல்களும் பற்பல வசன நூல்களும் தோன்றி அழகு செய்கின்றன. நாட்டுப் பற்றும், கலை விஞ்ஞானம், இலக்கியம் முதலியவற்றில் ஆர்வமும், தமிழர்கள் பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக இப்போது அமைந்துள்ளன.

தமிழ் மொழி

தமிழ் மொழியைக் குறித்துச் சில வார்த்தைகள்; தொல்காப்பியர் காலத்திலேயே பல அந்நிய மொழிச் சொற்கள் தமிழில் இடம்பெறலாயின.

> இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று
> அனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே

என எச்சவியல் (1) கூறும். பகைமையுணர்ச்சியுடன் தமிழ் மக்கள் அவற்றை அந்நியம் எனத் தள்ளியதில்லை. அறிவின் வளர்ச்சிக்கு அவசியம் எனக் கண்டால், தமிழ் மக்கள் அவற்றை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டனர். அவற்றுள் வடசொற்கள் முக்கியமானவை. இச் சொற்கள் நாளடைவில் பெருகிக்கொண்டே வந்தன. ஒரு காலத்தில் வடசொற்கள் எல்லை கடந்து நூல் வழக்கில் புகுந்து, தமிழ் மொழியையே கவளீகரிக்க தொடங்கின. மணிப்பிரவாள நடை என்று இதைச் சிலர் போற்றவும் செய்தனர். அளவுகடந்த இச்சொல்வழக்கைக் கண்டிப்பதிலும் ஒதுக்கிவைப்பதிலும் பழந்தமிழ் மக்கள் பின்வாங்கியதில்லை. கன்னடச் சொற்களும், தெலுங்குச் சொற்களும் தமிழில் கால-அடைவில் வழங்கின. சோழர் காலத்திற்குப் பின்பு, தெலுங்க அரசர்களுடைய ஆட்சி தமிழ் நாட்டில் நிலைபெற்ற போது, இத் தெலுங்குச் சொற்கள் மிகப் பலவாய்த் தமிழ் மொழியில் இடம் பெற்றன.

இங்ஙனமே, முகமதிய அரசர்கள் தமிழ்நாட்டில் சிற்சில இடங்களில் ஆட்சிபுரிந்த காலத்தில் இந்துஸ்தானிச் சொற்களையும், அரபுச் சொற்கள் முதலினவையும் தமிழ் பெற்றுக் கொண்டது. ஐரோப்பியர் வரவிற்குப் பின், போர்த்துகீசு, டச்சு, பிரஞ்சு, ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களையும், தமிழ் மொழி ஏற்றுக்கொண்டது. இப்பொழுது ஆங்கிலச்

சொற்கள் பலவற்றை ஏற்று நாம் வழங்கி வருகிறோம். இவற்றை வழக்கிலிருந்து ஒழிப்பது பெரும்பாலும் முடியாத காரியம் என்றே தோன்றுகிறது. இவ்வாறாகச் சங்ககாலந்தொட்டு இந்நாள் வரை, ஈராயிரம் ஆண்டுகளாக, தமிழ் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொண்டுதான் வந்திருக்கிறது. இதன் விளைவாக, தமிழ் மொழியும் வளம் பெற்றுச் செழித்து வருகிறது. தமிழ்மொழிக் குரிய இந்த நல்லியல்பும் தமிழ் மக்களுடைய ஒருவகைப் பண்பாட்டை உணர்த்துகிறது என்று நாம் துணியலாம். தன்னியல்பு கெடாது, காலகதியோடு ஒத்து இனிது செல்வது தான் இப் பண்பாட்டின் இயற்கை. இந்த இயற்கைக்கு மாறாக நாம் முயன்றால் அது பயன்படுமா ?

இலக்கியத்தின் வழியாகவும், மொழியின் வழியாகவும் தமிழ் மக்களுடைய பண்பாடு பலவகையிலும் திருந்தி மேம்பாடுற்றுச் செழித்து வந்திருப்பது மேற்கூறியவற்றால் விளங்கும்.

2. கலையும் பண்பாடும்

கலையின் வகைகள்

பண்பாடு என்பதைக் குறித்துப் பொதுவாக நாம் கூறினோம் அதனோடு தொடர்புடைய கலையைக் குறித்தும் சில சொல்ல வேண்டும். அதுபற்றி விரிவாய் அறிவிக்கும் தமிழ் நூல்கள் இல்லை. உதாரணமாக, கலையின் (Arts) வகைகளை எடுத்துக் கொள்வோம். ஆங்கில ஆசிரியர்கள் நுண்கலை (Fine arts) என்றும், விரிகலை (Liberal Arts) என்றும் ஒழுக்கக் கலை (Arts of conduct) என்றும் பகுத்து உணர்த்துகிறார்கள். இப்பாகுபாடு நமக்கு முற்றிலும் அந்நியமானதாகும். மேலும், நுண்கலைகளை நிலைக்கலைகள் என்றும், சலனக் கலைகளென்றும், இரு கூறுபடுத்துகிறார்கள். சிற்பம், சித்திரம், வாஸ்து வித்தை என்ற மூன்றும் நிலைக் கலைகளாம். வாஸ்து வித்தையை Architecture என்றும் சிற்பத்தை Sculpture என்றும், சித்திரத்தை Painting என்றும் ஆங்கிலத்திற் கூறுவர். இசை, கவிதை, நாடகம் அல்லது கூத்து, என்பவற்றைச் சலனக் கலைகள் என்பர். இந்தக் கூறுபாடுகளின் விவரங்களெல்லாம் நமது நாட்டிலுள்ள நூல்களில் பொதுவாகக் காணப்படமாட்டா.

பழங்காலந்தொட்டு நமது நாட்டில், கலை என்ற சொல் ஒரு பொதுப்பட்ட பொருளில் வழங்கி வந்தது, ''கலை ஞானமே கல்லாமே கற்பித்தானை'', ''கலைபயிலுங் கருத்தன்'' என அப்பர் சுவாமிகளும். ''கலைகளும் வேதமும் நீதி நூலும்'' எனத் திருமங்கையாழ்வாரும், ''கலை மலிந்த தென் புலவர்'' எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், ''திருவார் கலை நவின்ற பொருள்களெல்லாம்'' என மணிவாசகரும் கூறியுள்ளார்கள். இவ்வாறு ஒரு பொதுப்பொருளில் 'கலை' என்ற சொல் தமிழ் நாட்டில் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பு வந்ததாகத் தெரியவில்லை. வந்துள்ள பிற்பட்ட நூல்களிலும் ஒரு சில இடங்களில் கலையும் கல்விப்பொருளும் ஒன்று என எண்ணும்படியாகப் பிரயோகங்கள் உள்ளன. ஆனால், வடமொழியில் கௌடில்ய அர்த்த சாஸ்திரமும் வாத்ஸ்யாயனர் காமசூத்திரமும் கலைகள் இத்தனை

என்று எண்ணிட்டு அவற்றின் விவரங்கள் இன்ன என்று தெளிவாகக் கூறுகின்றன. இக்கலைகளில் ஒரு சில, நுண்கலைகள் என்பவற்றில் அடங்குவன. கீதம், நிருத்தியம், சித்திரம் அல்லது ஓவியம், சிற்பம் என்னும் நான்கு கலைகளையும் பற்றிய வடமொழி நூல்கள் ஏழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் பிரசாரத்திற்கு வந்தன என்று கொள்ளலாம்.

அறுபத்துநான்கு கலைகள்

வடமொழியில் கலைகள் 64 என வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இக்கலைகள் பெரும்பாலனவற்றைப் பெண்கள்தாம் கற்றுவந்தனர். அவருள்ளும் வேசியரே மிக்க ஆர்வத்துடன் பயின்று வந்தனர். இவ்வாறு கற்றுவந்த வேசியர்களுள் கீதம், வாத்தியம், நிருத்தம் முதலிய 64 கலைகளிலும் வல்லவர்களாய், ரூபகுண சீலங்களில் சிறந்தவர்களா யுள்ளவர்கள், அத்தகுதி பற்றிக் 'கணிகை' என்ற பெயர் பெற்று, அரசசபை முதலியவற்றில் அமர்வதற்குரிய சிறப்புப் பெற்றனர் என்று என்று காமசூத்திரம் கூறுகின்றது. தமிழில் பெரும் புகழ் பெற்று விளங்கும் சிலப்பதிகாரத்திலும் 'எண்ணெண்கலை' என்ற பிரயோகம் காணப்படுகிறது. இதுவும் கலைகள் 64 என்ற கருத்தை மேற்கொண்டு கூறுவதாம். இதுவுமன்றி, வேசியர்க்கே இவ் எண்ணெண் கலைகள் உரிய என்பதை, இக்காவியத்தை இயற்றிய சேரர் குலத்து இளங்கோ அடிகள், ''எண்ணெண் கலையோர் இருபெரு வீதியும்'' என்று வேசியர் தெருவை வர்ணிப்பதால் அறியலாம். உரைகாரரும் இத்தொடருக்கு 'வேசையர்' என்று பொருள் எழுதினர். 'கணிகை' என்ற சொல் பரிபாடலிலும், சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் வந்துள்ளது.

இவ்வாறு, வேசியர்க்கெனக் கலைகள் ஒதுக்கப்பட்ட போதிலும், அரசர், பிரபுக்கள் முதலிய உயர்குலத்துப் பெண்களிற் சிலரும், தங்கள் தந்தை கணவர் முதலியோர் விரும்பிய முறைகளில் இக் கலைகளைக் கற்று வந்தனர். ஆனால் ஒரு முக்கியமான விஷயம் கவனித்தற்குரியது. இவ் வேசியர்களே நாட்டியம் முதலிய கலைகளைக் கற்று, தம் காலத்துப் பரப்பி, பிறரையும் கற்பித்து, பிற்காலத்துப் பரம்பரைகளையும் இக் கலைகளை அனுபவிக்குமாறு செய்தனர்.

ஆடவருள் இக்கலைகளைக் கற்றவர் இல்லையோ என ஒரு கேள்வி எழலாம். கற்றவர் உண்டு. வேசியர் யாவர் பொருட்டுக்

கற்று வந்தாரோ, அவர்களுள் ஒரு பகுதியினர் தாம் இக்கலைகளைக் கற்று வந்தனர். அப்பகுதியினர் யாவரெனின், நகரங்களிலே பிறந்து வளர்ந்து செல்வப் பொருள்களில் திளைத்து வாழ்ந்தவரேயாவார். இவர்களை 'நகர நம்பியர்' எனச் சிலம்பும் மேகலையும் கூறும். காமசூத்திர ஆசிரியர் 'நாகரிகர்' என்று அவர்களைச் சுட்டுவர். இச் சொல் முதன் முதலில் மேற்கூறியவாறு நகரத்தில் வாழ்பவர் என்றும், 'நாகரிகம்' என்பது நகர மாந்தரின் தன்மைகள் என்றும் பொருள்பட்டிருந்தன. நகரமாந்தரின் தன்மைகள் முறையே வருமாறு :—

ஒன்று : நகரத்திலே பலவகைப்பட்டோரோடும் கலந்து பலவகை அனுபவமும் உடையவராயிருத்தல்.

இரண்டு : இவ்வாறு வாழ்பவர்கள் ஓரளவில் திறமையுடையவர்களாயிருத்தல்.

மூன்று : நகரத்தில் வாழ்க்கை.

நான்கு : மேற்கூறிய மூன்றாம் இயல்புடையோரிற் சிலர் தயாளம், கண்ணோட்டம் முதலிய நல்லியல்புடையராயிருத்தல்.

மணிமேகலையிற் சொல்லிய 'நகர நம்பியர்' முதலாவது சொல்லப்பட்ட தன்மை வாய்ந்தவர். திவாகரத்தில், ''நகரப் பதியோர் சதுரர் நாகரிகர்'' என வருவதில், நகரப்பதியோர் சதுரராகவும் (கெட்டிக்காரர்) நாகரிகராகவும் இருத்தல் என்ற இரண்டாவதும் மூன்றாவதுமாகிய தன்மைகளைக் காட்டி நிற்கும். குறளில் ''நாகரிகம் வேண்டுபவர்'' என்ற இடத்திலே பரிமேலழகர் நான்காவது வகைப்பட்ட தன்மையைக் குறிப்பிட்டனர்: இவ்வாறாக நாகரிகம் என்ற சொல்லின் பொருள் வரவர உயர்ந்து சிறத்தல் காணப்படும். நற்றிணையிலும் (355) இச்சொல் காணப்படுதல் வியப்பிற்கிடனாயுள்ளது.

தற்காலத்தில் நகர மக்கள் வேறு, நாகரிக மக்கள்வேறு, City men, civilised men என்ற இரண்டு ஆங்கிலச் சொற்களும் இவ் வேறுபாட்டை நன்றாக உணர்த்தும். காமசூத்திரம் கூறும் நாகரிகர்களே அந்த நூலிற் காணும் கலைகளை உணர்ந்து, தாம் ஈட்டியுள்ள பொருள்களினால், இன்ப வாழ்வு வாழ்தல் கூடும். மெகஸ்தனீஸ் என்ற கிரேக்க ஆசிரியர் (கி. மு. நான்காம் நூற்றாண்டு) கூறியது இங்கே அறியத்தக்கது.

''சமயநூல் முதலியவைகளைக் கற்று முப்பத்தேழு வருஷங்கள் ஆனபின்பு, ஒவ்வொருவரும் தமது வீட்டிற்கு மீண்டு, எஞ்சிய காலத்தில் மெல்லிய ஆடையுடுத்து, இனிய உணவு உண்டு, ஆபரணாதிகள் அணிந்து, யாதொரு பயமுமின்றி மிக்க குதூகலத்தோடு மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர். போதுமெனத் திருப்தியாகுமளவு பெண்களை மணந்து சுகித்து வந்தனர்.''

பலரும் வினோதார்த்தமாகக் கூடும் சமாஜங்களும், தற்காலத்தில் ஆங்கிலத்தில் Social gathering or clubs என்று கூறப்படும் கோஷ்டிகளும், குடியர்கள் கூடும் ஆபானங்களும் வினோத விளையாடல்கட்குரிய உத்யான யாத்திரைகளும், இன்னும் இவை போன்றவை பலவும் இந் நகர நம்பியர் வாழ்விலேதான் அமைந்திருந்தன. தமிழ்நாட்டில், கோவலன் மாதவி இருவர்களின் சரித்திரங்களும் இதனை நன்கு உணர்த்த வல்லன.

கலைகளின் வரலாறு

இனி, இக்கலைகளின் வரலாற்றினைச் சுருங்கச் சொல்லுதல் வேண்டும். அரசர், வள்ளல்கள் முதலியோர்களின் முன்னிலையில் இக்கலைகள் தொடக்கத்தில் வளர்ந்து வந்தன. இக்கலைகளைப் பரப்பிவந்த வேசியர்களும் ஆடவர்களோடுற்ற நெருங்கிய தொடர்பால் தம் ஒழுக்கத்தில் கேடுறலாயினர். பின்னர் இவ்விரண்டு நிலைகளினின்றும் கலைகளை மீட்டு உச்சநிலைக்குக் கொண்டுவரும்படியான முயற்சிகள் நடந்துவந்தன.

இம்முயற்சிகளின் நிலைக்களமாக விளங்கியவை ஆலயங்களும் ஏனை மதப்பிரவர்த்தன ஸ்தாபனங்களுமாம். ஏழாம் நூற்றாண்டுக்கு மேல், தென்னாடெங்கும் பல இடங்களில் ஆலயங்கள் நிறுவப்பெற்றன. ஆலயங்களில் நிகழ்ந்த விழாக்களில் வேசியரது நடன முதலியவற்றால் இக்கலைகள் வளர்ச்சியுற்றன. கோயில் அதிகாரிகளின் மூலமாகவும், ஊர்ப் பெருமக்களின் மூலமாகவும், அரசர்கள் வள்ளல்கள் மூலமாகவும் இக்கலைகள் பாதுகாக்கப்பட்டன. ஆனால் அரசர்கள் முன்போல அத்தனை அதிகமாக ஆலய பரிபாலனஞ் செய்யமுடியவில்லை. அவர்களுக்கு அரசாங்கத் தொழிலின் நெருக்கடிகள் மிகுதியாய்விட்டன. அன்றியும் பிறநாட்டு அரசரோடுள்ள தொடர்பும் பெருகிவிட்டன எனினும், தம்மால் இயன்ற அளவு திருக்கோயில்களைப் பரிபாலித்தும் கலைகளைப் பேணியும் வந்தனர்.

அவர்களது திருநாமத்துக் காணியாக ஏற்படுத்திய நிபந்தங்களும் கலைகள் வளரப் பயன்பட்டன. கலைகளும் பொதுமக்களின் அனுபவத்தையும் ஆதரவையும் நோக்கமாகக் கொள்ளும்படி நேர்ந்தமையால், அதன் தன்மையில் சில வேறுபாடுகள் தோன்ற லாயின. இக் கலைகளைப் பேணிவந்த வேசியரின் நிலையும் தளரலாயிற்று. பெரும்பாலும் இக்காலத்தில்தான் கோயில்களில் விழாக்கள் தோன்றத் தொடங்கின.

இதன் பிற்பாடு, சோழ ராஜ்யம் வெற்றியால் பெரிதும் சிறப்புற்று விளங்கியது. அரசர்கள் தங்கள் பெயரோடு இணைத்து இவ்விழாக்களைக் கொண்டாட வேண்டுமென்று கருதினர். அவ்வப்பொழுது நிகழ்ந்த அரசியற் செய்திகளை விஷயமாகக் கொண்டு கலைகள் உருவெடுக்கலாயின. 'ராஜராஜ நாடகம்' முதலியன மேற்கூறியதற்குச் சான்றுகளாம். கோயில்களுக்கு ஐதிகங்களும் பலவாறாகப் பிறந்துவிட்டன. இவைபற்றிய நூல்களும் கலைக் காட்சிகளும் எழலாயின. உதாரணமாக, 'பூவிருந்தவல்லி நாடக'த்தைச் சொல்லலாம்.

கலைகளின் பரப்பு

இங்ஙனமாக, கலைகளின் பரப்பு நாளடைவில் அதிகரித்துக் கொண்டே வந்தது. முதலாவது லௌகிகத் துறையில் தொடங்கி பின் வைதிகத் துறையில் சென்று, மீண்டும் லௌகிக - வைதிகத் துறைகளிற் புகுந்து, பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் கலைகள் ஒருவாறு ஒழுங்கு பெற்றன என்று கூறலாம்.

ஆனால், இக்கலைகளுக்குப் பற்றுக்கோடாக, இருந்த வேசியர்கள் மட்டும் வரவரத் தம் தன்மையிற் குன்றிவிட புருஷர் களுக்குரிய விளையாட்டுப் பொருள்களாக மாறிவிட்டனர். கலை களைப் பற்றிய மதிப்பும் இதற்கியைய மாறத் தொடங்கியது. சில காலத்திற்கு முன்வரை வேசியரின் கதியும், கலைகளின் கதியும் இவ்வாறாக நடைபெற்று வந்தன.

இந்த நிலையில் கலைகள் பொதுக்கல்வியோடு தொடர்பு கொள்ளலாயின. ஆண்களும் பெண்களும் கலைகளைச் சுவைத்து இன்புறலாயினர். கலைகள் வேசியர்க்கே உரியன என்ற கொள்கை மாறலாயிற்று. கலாசாலையில் சங்கீதத்தை இருபாலருமே கற்கின்றனர். சங்கீதத்திலும் நடனத்திலும் பெண்களில் பெரும்பாலோர் சிறப்பாகப் பயிற்சி பெறுகின்றனர்.

நமது மன்னர்கள் கலைகளை வளர்ப்பதில் எப்பொழுதுமே கண்ணுங்கருத்துமாக இருந்துவந்துள்ளனர். சுவாதித் திருநாள் மஹாராஜா சங்கீதக் கலையில் பெரும் புலமையுடையவராய், பன்னூறு கீர்த்தனங்களை இயற்றி மங்காப் புகழுடன் விளங்கும் செய்தி பலரும் அறிந்ததே.

இக்கலைகள் சிறப்புற ஓங்கி, கல்விக்கும் பண்பாட்டிற்கும் உறுதுணையாக உதவிநின்று, நமது மக்களுக்குக் கலையின்பம் அளிப்பதோடு ஒழுக்கத்தை உருவாக்கும் சாதனமாகவும் அமைவதாகுக.

இது திருவனந்தபுரம் ரேடியோ நிலையத்திலிருந்து 25-2-52 இல் 'கலையும் கல்வியும்' என்ற தலைப்பில் ஒலிபரப்பியதை அடிப்படையாகக் கொண்டு எழுதியது.

3. பண்டைத் தமிழக வாழ்க்கை

காதல் வீரம்

பண்டைக் காலத்துத் தமிழக வாழ்க்கையைக் குறித்துப் பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அவைகளை நோக்கினால் காதல் நிகழ்ச்சிகளும் வீர நிகழ்ச்சிகளும் அன்றி வேறு நிகழ்ச்சிகள் அக்காலத்தில் நம் நாட்டில் நிகழவில்லை என்றே தோன்றும், இவை இரண்டும் மிகவும் சிறந்தன என்றும், கவிதைக்கு மிகவும் பொருத்தமாயுள்ளன என்றும், எளிதில் நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால், இவைகள், பொதுப்பட நோக்குமிடத்து, பிறர்க்கின்றிப் பண்டைத் தமிழ் மக்களுக்கு மட்டும் தனித்துரிய செய்திகள் அல்ல. பல பல தேசத்துச் சரித்திரங்களிலும் ஆதிகாலத்தில் இந்த இருவகைப்பட்ட நிகழ்ச்சிகளும் உள்ளனவே; இவற்றைப்பற்றிய கவிதைகள் பல தேசத்து மொழிகளிலும் ஆதிகாலத்தில் நிரம்பக் காணப்படுவனவே, மேலும், இவை இரண்டும் தமிழ் மக்களின் பொதுவான லட்சியங்கள் என்றே கொள்ளத்தக்கன. குறித்த ஒரு பருவத்தில்தான் இவை நிகழக்கூடியவை. ஆகவே, இவை இரண்டையும் நீக்கி, பண்டைக் காலத்துத் தமிழ் மக்களுடைய தினசரி வாழ்க்கை நெறியை அவர்கள் இயற்றியுள்ள பாடல்களிலிருந்து ஊகிப்பதே தக்கதாகும்.

மக்களின் தினசரி வாழ்க்கை அவர்களது நாட்டின் சீதோஷ்ண நிலைமையைப் பெரிதும் பொறுத்தது. தமிழ்நாட்டில் கார், வாடை, முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு பெரும் பொழுதுகள் உண்டென்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. (அகத். 6-12). இவைகள் வடமொழியில் பிற்கால வழக்காக நிலைபெற்ற ஆறு ருதுக்களையும் முறையே பின்பற்றுகின்றன. இவ் இலக்கண மரபை நீக்கிவிட்டு உண்மையை நோக்கினால், வெயிற்காலம், மழைக்காலம், பனிக்காலம் என்ற மூன்று பருவ காலங்கள்தான் தமிழகத்தில் உண்டு. வெயிற்காலம் மிக நீண்டது; ஏனைய இரண்டும் சுருங்கியவை.

உடைகள்

முதலாவதாக, இந்தச் சீதோஷ்ண நிலைக்குத் தக்கபடி தமிழ் மக்களின் உடைகள் அமைந்திருந்தன. ஆடவர்கள் பொதுவாக உடுப்பவை இரண்டே ஆடைகள்.

> உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
> பிறவு மெல்லாம் ஓரொக் கும்மே (புறம், 189)

என்று ஒரு செய்யுளில் வருகின்றது.

பெண் பாலார் நீண்ட ஒற்றையாடை உடுத்திவந்தனர் என்று கொள்ளலாம். இவ் ஆடைகள் மக்களது செல்வ நிலைக்கும் தகுதிக்கும் தக்கபடி தரந்தரமாய் இருந்தன. கூறை, நல்லாடை, பட்டாடை என மூன்று தரங்கள் திவாகரத்தில் காணப்படுகின்றன. கூறை சாதாரண ஆடையாயிருத்தல் வேண்டும். வறுமையினால் வருந்திய ஒருவனது ஆடை,

> வேற்றுஇழை நுழைந்த வேர்நனை சிதாஅர் (புறம், 69)

என்று கூறப்படுகிறது. இதற்கு மாறாக, செல்வத்தில் மகிழும் மன்னர் முதலியோருடைய நல்லாடை,

> போதுவிரி பகன்றைப் புதுமலர் அன்ன
> அகன்றுமடி கலிங்கம் (புறம் 393)

என்று கூறப்படுகிறது. பட்டாடை சங்க காலத்திலேயே காணப்படுகிறது. பொருநராற்றுப்படையில் (155)

> கொட்டைக் கரைய பட்டுடை நல்கி

என வந்துள்ளது.

தொழிலாளர்கள் ஒற்றை ஆடையைத் தாங்கள் செய்து வந்த வேலைக்கு ஏற்ப உடுத்து வந்தார்கள். இதனை உடுத்து முறை 'தற்றுடுத்தல்' எனப் பிற்காலத்து வழங்கினர்; 'தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்' என்பது குறள் (1023). வீரர்களாயுள்ளோர் தங்கள் மார்பிலே கவசம் அணிந்து வந்தனர்.

புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே (புறம். 13)

என்ற செய்யுள் சான்றாகும்.

குப்பாயம்

தற்காலத்தில் வழங்கும் உடுப்பு முதலியன பண்டைக் காலத்தவர் அறியாத உடைகள். நமது நாட்டிற்கு வந்த யவனர் முதலியோரே சட்டை அணிந்திருந்தனர். அவரது சட்டை வகையை 'மெய்ப்பை' என்று வழங்கினர்;

மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்

என்பது முல்லைப் பாட்டு (60)

பிற்காலத்தார் இச் சட்டைவகையைக் 'குப்பாயம்' என்றனர் (திருவாசகம், 177), பாதத்திற்குச் செருப்பு அல்லது தொடு தோல் (மதுரைக்காஞ்சி, 636) அணிவதும் அக் காலத்தில் உண்டு.

செருப்பிடைச் சிறுபரல் அன்னன் (புறம், 257)

என ஒரு வீரன் குறிப்பிடப்படுகிறான். இச் செருப்பு 'அடி புதை அரணம்' (பெரும்பாண். 69) என்றும் வழங்கியது. மல்யுத்தம், தேகப்பயிற்சி முதலியவற்றில் கிரேக்கர்கள் நிர்வாணமாயிருந்தார்கள் என்பர். அவ்வாறு தமிழ் மக்கள் ஆடையின்றி இருந்ததாகத் தெரியவில்லை.

வீடுகளின் அமைப்பு

இரண்டாவதாக, வீடுகளின் அமைப்பும் சீதோஷ்ண நிலையைப் பொறுத்ததேயாகும். மலைப் பிரதேசங்களில் புல்வேய்ந்த குடிசைகள் இருந்தன. 'புல்வேய் குரம்பைக் குடில்' என்பது புறம், (120). சிலவற்றின் முற்றத்தில் பந்தர்களும் இடப்பட்டிருந்தன. அங்கே, யானைக்கன்று மான்கன்று முதலியன சிற்சில சமயத்து வந்து அங்குள்ள சிறு குழந்தைகளோடு விளையாடிக் களித்தலும் இனியதோர் காட்சியாக இருந்தது.

முழந்தா ளிரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந் தோடி

என்பது குறுந்தொகைச் செய்யுள் (394).

வறுமைமிக்க எளியவர்களுடைய குடில்களை வளிமறை அதாவது காற்றைத் தடுப்பதற்குரிய இடம் என்று ஒரு செய்யுள் (புறம், 196) குறிப்பிடுகிறது. சிறிதளவு பொருளுடையவர்கள் சிற்றில்களில் வசித்துவந்தனர். இச் சிற்றில்களிலும் தூண்கள் நடப்பட்டிருந்தன. 'சிற்றில் நற்றூண்பற்றி' என்பது புறம் (86). செல்வர்களுடைய மனை உயர்நிலை மாடமாய், முன்வாயில், புறக்கடை முதலிய உறுப்புக்கள் பல அமைந்ததாய் விளங்கியது. வாயிலில் இந்தக் காலத்துப்போலப் பூத்தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. 'தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை' (புறம், 105) என்பது சான்று. அரசரின் இருக்கை கம்பீரமான தோற்றத்தோடு அமைக்கப்பட்டிருந்தது. இதனைக் கோயிலெனச் சிறப்பாக வழங்கி வந்தனர். இக்கோயிலைப் பற்றிய பல விவரங்கள் நெடுநல்வாடையில் அழகுறக் கூறப்பட்டுள்ளன. மாடம் முதலியன சுடுமண்ணினால் தொழில் திறன் பெரிதும் விளங்கச் சுண்ணந் தீற்றி நன்றாகக் கட்டப்பட்டிருந்தன (பெரும்பாண், 405).

பேரில்லங்களில் தற்காலத்துப்போல நாற்காலி முதலியன இருந்தனவாகத் தெரியவில்லை; கட்டில்கள் உண்டு. அவற்றில் 'நுரை முகந்தன்ன மென்பூஞ் செக்கை' (புறம், 50) அதாவது, பூம்பள்ளி அமைக்கப்பட்டிருந்தது. எளியோர்களுடைய வீட்டில் தோலும் பாயுமே படுக்கையாக அமைந்தன (புறம், 317), குளிர் காலத்தில் தீக்கடை கோலினால் நெருப்பு உண்டுபண்ணுதலும் குளிர்காய்தலும் மலைப்பிரதேச முதலியவற்றில் காணப்பட்டன (பெரும்பாண். 178, நெடுநல். 8).

பொது இடங்கள்

மூன்றாவதாக, வீட்டிற்குப் புறத்தேயுள்ள இடங்களிலும் தட்டுத் தடையின்றி மக்கள் இனிது பழகிவருவதற்குச் சீதோஷ்ண நிலை மிக அனுகூலமாயிருந்தது. தற்காலத்தில் பட்டண வாசிகள் தங்கள் பக்கத்தில் வசிக்கும் அயலார்களையே தெரிந்து கொள்வதில்லை. முற்காலத்திலே, அரசரும் குறுநில மன்னரும்

மற்றைய மக்களும் தாராளமாக நெருங்கிப் பழகுவதற்குச் சௌகரியம் வாய்த்திருந்தது.

ஊர்ப்புறத்தே பொது இடங்கள் இருந்தன. இப்பொது இடங்களில் 'அறம் உரைக்கும் மன்றம்' கூடுதல் வழக்கம். மன்றம் என்னும் சொல்லுக்கே 'பொதுவிடம்', 'நீதித்தலம்' என்ற இரண்டு பொருள்களும் உண்டு. இங்கே முதியோர்கள் சென்று சூது ஆடுதலும் (புறம், 52), சிறுவர்கள் சென்று விளையாடுதலும், ஊர்க்குப் புதியராய் வந்தோர்களும் இரவலர்களும் (புறம், 375) தங்குதலும் சாதாரண நிகழ்ச்சிகள். அன்றியும், விழவு முதலியன கொண்டாடுதலும் இப் பொதுவிடத்தில்தான். பொது இடப் பழக்கத்தால் அரசர்களும் வள்ளல்களும் காட்சிக்கு எளியராயிருந்தனர், பரிசிலர்கள் அரசர் வாழுங் கோயில்களிலுங் கூடத் தாராளமாக உட்புகுந்து தங்கள் கவித் திறமை முதலியவற்றைக் காட்டி வந்தனர். இச் செய்தியைப் புறநானூற்றுப் பாடல்கள் பல உணர்த்துகின்றன. ஆனால், வாயில் காவலர்[1] மூலமாகத் தமது வரவைத் தெரிவித்தல் வழக்கம். இதற்குத் தொல்காப்பியர் 'கடை நிலை' எனப் பெயரிட்டனர்.

காவலர்க்கு உரைத்த கடைநிலை யானும்

என்பது புறத்திணைச் சூத்திரம் (29).

எளிய வாழ்வு

இங்ஙனமாக, ஆடம்பரம் சிறிதுமின்றி எளிய வாழ்வு வாழ்ந்து வந்த பண்டைத் தமிழர்கள் சூரியன் உதிக்கச் சில நாழிகைக்கு முன்பே அதிகாலையில் விழித்துவிடுவார்கள். இவ்வாறு விழிப்பதற்குக் கோழி கூவுதலும் பறவைகள் கத்துதலும் அனுகூலமாயிருந்தன.

ஒண்பொறிச் சேவல் எடுப்ப ஏற்றெழுந்து (புறம் 383)

எனவும்,

---

1. வாயில் காவலரைப் படிகாரர் என்று பிராகிருதத்திலும், ப்ரதி ஹார: என்று வடமொழியிலும் வழங்குவர் (கம்ப. பள்ளி படை 1)

வெள்ளி தோன்றப் புள்ளுக்குரல் இயம்பப்
புலரிவிடியல் (புறம் 385)

எனவும் புறநானூற்றில் வந்துள்ளன. பிற்காலத்தில், வட நாட்டிலிருந்து ஆரியமக்கள் வந்து பெருகிய பின்னர் அந்தணர் களும் அதிகாலையில், வேதத்தை ஓதி மக்களைத் துயிலுணர்த் தினர்.

நான்மறைக் கேள்வி நவில்குரலெடுப்ப
ஏம இன்றுயில் எழுதலல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே,

இங்ஙனம் பரிபாடல் கூறுகிறது (பரிபாடல் திரட்டு, மதுரை, 2).

நீராடுதல்

துயிலுணர்ந்தவுடன் நீராடுதல் இக்காலத்துக் கிராமாந்தரங் களிற் போலவே, பண்டைக் காலத்தும் வழக்கமாயிருந்தது.

'மணலினால் செய்த பாவைக்குப் பூக்களை அணிந்து' நீராடுகின்ற பெண்களோடு தானும் கைகோர்த்து, அவர்கள் சேர்ந்து நின்ற இடத்தே தானும் சேர்ந்துநின்று, அசைந்து நின்ற இடத்தே தானும் அசைந்து நின்று, கபடற்ற மனத்தராகிய அப் பெண்களின் கூட்டத்தோடு நீர்த்துறையிலே (நீரோடு நெருங்கித்) தாழ்ந்துள்ள மருதமரக் கிளைகளில் ஏறி, கரையிலுள்ளவர் திகைக்க, தண்ணீர் சிதர்ந்து பரவ, ஆழ்ந்த குளத்திலே ஒருவன் துடுமெனப் பாய்ந்து குளித்த செய்தியொன்று புறநானூற்றிலே (243) அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தெழுந்த பாவை நோன்பு அதிகாலையில் நிழ்ந்த இந்நீராட்டினை அடிப் படையாகக் கொண்டதே. நீராடும்பொழுது எண்ணெய் தேய்த்து நீராடுதலும் பண்டை வழக்கமே. கருவுயிர்த்த பெண் களுக்கு உரியதாகத் தொல்காப்பியனார் கூறும் 'நெய்யணி மயக்கம்' (கற்பியல், 5) இவ் வழக்கத்தை ஒட்டி யெழுந்ததே.

நீராடுவதற்கு முன் நாம் காலையில் க்ஷவரம் செய்து கொள்ளுகிறோம். ஆனால், முன் காலத்தில் அதற்குரிய கருவிகள் அருகியே கிடைத்தன. என்றாலும் காட்டுமிராண்டி

யாக இருக்க முடியாதல்லவா? கத்தரியாகிய மயிர் குறை கருவி யால் ஏகதேசமாக முகமயிர் முதலியவற்றைக் கத்தரித்து வந்தார்கள். பெரும்பாலும் மீசை தாடி வளர்க்க நேரிட்டது. இதனை

குருஉமயிர் மோவாய் (புறம் 257)
மையணற் காளை (புறம், 83)

முதலிய தொடர்கள் நன்கு புலப்படுத்தும். நீராடியபின் இளைய ஆடவர்களும் இளம் பெண்களும் இக்காலத்துப் போலவே முற்காலத்தும் தங்கள் தலைமுடியை மிகவும் பேணி வந்தார்கள். ஆண்கள் எண்ணெய் நீவிப் (புறம், 279) பதஞ் செய்தனர். அவர்கள் தங்கள் தலைமுடியைப் பூவினால் புனைந்துகொண்ட செய்தி புறநானூறு (242) முதலியவற்றில் காணப்படுகிறது. பெண்கள் தம் கூந்தலுக்குப் புகையூட்டி, மயிர்ச் சாந்து பூசி, மாலை புனைதல் மிகச் சாதாரணமான செய்தியேயாகும் (புறம் 146.) ஆனால், நிலைக்கண்ணாடி முன்னர் நின்றுகொண்டு மணிக்கணக்காய்த் தலைமுடியை அலங்கரித்தல் முற்காலத்தில் இல்லை.

பருவஞ் சிறிது மிக்கவர்கள், நீராடிய பின்னர், சிவாலயம் முதலிய இடங்களுக்குச் சென்று தெய்வங்களை வழிபட்டனர். முக்கட் செல்வன் நகர் வலஞ் செயற்கே' (புறம். 6) என்பது இவ்வகை வணக்கத்தை உணர்த்துகிறது. இதன்பின் சிலர் தங்கள் தங்கள் தொழில்மேற் சென்று வருவர். தொழில் இன்னதென்பது சாதியைப் பொறுத்தது. சாதியை விளக்குமிடத்து அதைப் பற்றிச் சொல்லுகிறேன். சிலர் நாளங்காடியிலுள்ள கடைகளுக்குச் சென்று (மதுரைக் காஞ்சி, 430) வேண்டும் பண்டங்கள் வாங்கி வருவர்.

பகலுண்டி

பின்னர், உச்சிப்பொழுதில் பகலுண்டி உண்ணுதல் வழக்கம். இதுதான் பிரதான உண்டியாகும். தகுதிக்குத் தக்கபடி பலதரத்தி லிருந்து. ஏழைகள் கூழ் சமைத்து வெந்த கீரை முதலியவற்றால் பசியாற்றி வந்தார்கள் (புறம். 159). செல்வர்கள் பாலை உலையாக ஏற்றி ஆக்கிய வெண் சோறும் நெய் முதலிய கலந்த சோறும் உண்டு மகிழ்ந்தனர் (குறுந்தொகை, 210) தாளிதத்தால் பக்குவம் செய்யப்பட்ட பலவகைக் கறிகளும்

குழம்புகளும் (குறுந், 167) அவர்களுக்கு அருமையல்ல. நிணம் நிரம்பிய மாமிசத்தை அவர்கள் பெரிதும் விரும்பினார்கள் (புறம், 150). தாலத்திலே சோறு படைத்து அதனைச் சுற்றிப் பரப்பி வைத்த சிறு பொற்கலங்களிலே கறிகளைப் பெய்து உண்ணுதல் வழக்கம் (புறம், 160). ஈசலை மோரோடு கலந்து காய்ச்சிய புளிங்கறி ஓர் அரிய உணவுப்பொருள் (புறம், 119). முயல் முதலியவற்றைத் தீயிற் சுட்டும் அருந்தினர் (புறம், 34). இவைகளேயன்றி மதுவையும் அவர்கள் மிகுதியாகப் பானஞ் செய்தனர் (புறம், 235). இம்மதுவை மூங்கிற் குழாயிலே நெடுநாள் ஊற்றிவைத்துப் பக்குவப்படுத்தினர் (மலைபடுகடாம், 171). இளம் பெண்கள் இதனைப் பொற்கலத்தில் வார்த்து ஏந்தி உண்பித்தனர். யவனர்கள் தங்கள் தேசத்திலிருந்து கப்பல் மூலமாகக் கொண்டுவந்த மதுவகை மிகவும் பாராட்டப்பட்டது.

யவனர் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி (56)

என்பது புறநானூறு. தற்காலத்தில் நாம் மிகப் பெருமையுடன் குறிப்பிடுகிற சைவ உணவு என்பது பண்டைத் தமிழகத்தில் இல்லை. அந்தணரும் ஊன் உண்டும் மது நுகர்ந்தும் வந்தனர் (புறம், 113).

பாடல், ஆடல்

உண்டிக் காலத்தை அடுத்து, மன்னர், வள்ளல்கள் முதலானோரது மாளிகை முற்றத்தில் பந்தரின் கீழ்ப் பாணர் புலவர் முதலியோர் பாடுதலும், விறலியர் முதலாயினார் ஆடுதலும் நிகழ்ந்தன. அல்லியக் கூத்து முதலிய கூத்துக்களும் (புறம், 83). நாடகம் முதலிய (பட்டினப் பாலை, 113) காட்சிகளும் நடைபெற்றன. பாணர் முதலியோரது திறமையை வியந்து அவர்களுக்குத் தக்க பரிசில் அளிப்பது வழக்கம், 'பாண்பசிப் பகைஞன்' (புறம், 180) என ஒருவன் கூறப்படுகின்றான். ஆனால், இப்பாணர் முதலிய இரவலர்க்கு இன்ன பொழுது என்பதில்லை; எக்காலத்தும் சென்று வள்ளல் முதலியோரைக் கண்டு பரிசில் பெற்றனர். அதிகமான், நெடுமான் அஞ்சி என்ற வள்ளலை, 'பரிசிலர்க்கு அடையாவாயிலோயே' (புறம், 206) என ஒரு செய்யுள் அழைக்கின்றது.

இவ் இரவலர்களுக்கு உணவு, கள், ஆடை முதலியவை அளிக்கப் பட்டன. அரசர் வீற்றிருக்கும் சபை 'நாளவை' (புறம், 54) என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. அவர்கள், தங்களது பெருந் தகுதிக்கு ஏற்ப, யானைகளும் ஆபரணங்களும் பரிசிலாக வழங் கினர். பாணன் பொன்னாலாகிய தாமரைப் பூவும், பாடினி பொன் அணிகலமும் பெறுதல் மரபு (புறம், 11), பொற்காசுகள் அளித்ததாகச் சங்க நூல்களில் ஓரிடத்தும் காணப்படவில்லை. பதிற்றுப் பத்துப் பதிகங்களின் இறுதிக் குறிப்பிற் காண்பன பிற்கால வழக்காகும். அந்தணர்களும் இந் நாளவையிற் சென்று பொன் முதலியன பெற்றுவந்தனர்.

ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து (புறம், 367)

என்ற அடிகள் இதற்குச் சான்று.

குடும்ப வாழ்வு

முற்காலத்து மக்கள் குடும்ப வாழ்விலே பெரிதும் ஈடுபட் டிருந்தனர். கற்பு நெறியில் ஒழுகிய மனைவியையும் அவர்கள் பால் பெற்றெடுத்த புதல்வனையும் பெரிதும் பாராட்டினர். கற்புடைய மனைவியை 'மனைக்கு விளக்காகிய வாணுதல்' (புறம், 314) எனப் புகழ்ந்தனர்.

உயிரினும் சிறந்தன்று நாணே : நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று

எனத் தொல்காப்பியரும் (களவியல், 23) கூறினர்.

மயக்குறும் மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே (புறம், 188)

என மக்கட்பெறுதலை இல்வாழ்க்கையின் பெருநோக்கமாகக் கூறியுள்ளான் பாண்டியன் அறிவுடைநம்பி.

இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின் றெய்துப
செருநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோ ரெனப்
பல்லோர் கூறிய பழமொழி (அகம், 66)

என மக்கட்பேற்றால் இருவகைப் பயனும் தாம் எய்தலாம் என்றும் நம் முன்னோர் கருதினர். வள்ளுவரும்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள், 60)

என்றனர். ஆனால் 'ஒருவனுக்கு ஒரே மனைவி' என்ற கருத்துப் பொதுவாக அக்காலத்து இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மனைவியர் பலர் இருந்தாலும் அவர் அனைவருடைய காதலுக்கும் கணவன் உரியவனாயிருந்தான். அவனும் தன் மனைவியரை அன்போடு பேணி வந்தனன். இருபுறமும் காதல் இல்லாத மணம் ஒரு கொடிய தீச்செயலாகவே கருதப்பட்டது (புறம். 73).

மனைவியர் தம் கடமைகளை ஆர்வத்துடன் செய்து வந்தனர். கணவனுக்குத் தமது கைப்படச் சுவையாக உண்டி யாக்கினர் (குறுந். 167), இவ்வுண்டியை

ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமுதம் புரையுமால் எமக்கென
(தொல். கற்பு. 5)

கணவனும் நுகர்ந்து மகிழ்ந்தான். விருந்து போற்றுதலும் மனைவியின் சிறந்த கடமைகளுள் ஒன்று.

விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்

என்பது தொல்காப்பியம் (கற்பு, 11).

விருந்தோம்பல்

பிற்காலத்தில் திருக்குறள் 'விருந்தோம்பல்' எனத் தனிப் பட்ட ஓர் அதிகாரம் வகுத்துள்ளது. வீட்டில் கணவன் இல்லாத காலத்தும், மனைவியர் விருந்தினரை உபசரித்தனர் (புறம்.151). இவற்றையெல்லாம் பின்பற்றி

மறப்பருங் கேண்மையோடு அறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்

எனச் சிலப்பதிகாரம் (11, 85-6) கூறும்.

கணவனைப் பிரிந்து மகளிர் இருந்த காலத்துக் கூந்தலும் மேனியும் பேணாதபடி வாடி வதங்கியிருந்தனர் (புறம், உ147). அவனது வரவை இவர்கள் எதிர்நோக்கிக் கலக்கமுற்ற செய்தியை ஒருசெய்யுள் கூறுகிறது (புறம், 41.) இவ்வாறெல்லாம் அருமைப் பட்ட கற்பினை

கடவுள் சான்ற கற்பு (புறம், 198)
வடமீன் புரையுங் கற்பு (புறம், 122)
தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் (சிலப், 1, 27)

எனப் புகழ்ந்தனர்.

இக்கற்புடையார்க்குக் கணவனையன்றி வேறு தெய்வமில்லை வான்மீகி முனிவரும் (அயோத்யா, 24, 26-27) இக்கருத்தைக் கூறுதல் நாம் அறிந்து இன்புறத்தக்கது. இவர்கள் 'பெய்' என்றால் மழை பெய்யும்* எனப் பிற்சங்க காலத்துள்ள நூல் களிலும் குறளிலும் காணப்படுகின்றது. 'வறனோடின் வையகத்து வான் தருங் கற்பினாள்' என்பது கலித்தொகை (16).

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை

என்பது திருக்குறள் (55).

சிறப்பு மிக்க இக் குடும்ப வாழ்வில் மகளிர் புகுந்து மனைவி யாக அமைவதற்கு முன்னே, இளமைப் பருவத்திலே கழங்காடுதல் (புறம், 36) முதலிய விளையாட்டுக்களில் பொழுது போக்கி வந்தனர். கன்னிப் பருவம் வந்ததும் காதல் அரும்பத் தொடங் கிற்று என்று கொள்ளலாம். அக்காலத்தில் வீர வாழ்வே பெரு வாழ்வு எனக் கருதப்பட்டிருந்தமையால், இப் பெண்கள் வீரர்

*Any man that lives in unbroken chastity can do this (bring rain): Apastamba ii, 9, 23, 7. In his sexual purity, therefore, there lies magic power; this is a widespread belief, indead, in the world, and stil alive today even among cultured European mankind—J. J. Meyer; Sexual Life in India vol. ii p. 547.

களையே பெரிதும் காதலித்து வந்தனர். பெருங்கோழி நாய்கன் என்ற கப்பல் வியாபாரியின் மகள் ஒருத்தி ஆமூர் மல்லன் என்ற வீரனைக் காதலித்த செய்தி புறநானூற்றில் வருகிறது. ஒரு சார் குலத்திற் பிறந்த மகளிர் மறத்தையே போற்றிவளர்த்து வந்தனர். இவர்களை 'மூதில் மகளிர்' என்பர் (புறம், 279). தன் மகன் போர்க்குச் சென்று புறங்கொடுத்தான் என்ற வதந்தியைக் கேட்டு, 'அங்ஙனமாயின், அவனுக்குப் பால் சுரந்தளித்த என் நெஞ்சை அறுத்து எறிவேன்' என்று கோபித்து, போர்க்களத்திற்கு உடன் சென்று அங்கே பிணங்களினிடையே உறுப்புக்கள் சிதைந்து கிடக்கின்ற தன் மகனைக் கண்டு, அவனை ஈன்ற பொழுதிலும் பெரிதும் மகிழ்ந்தாள் என ஒரு மூதில் மகளைப் பற்றி ஒரு செய்தி கேட்கின்றோம் (புறம், 278).

திருமணத்தில் சடங்குகள் இல்லை

காதற்கு அறிகுறியாக முத்தமிடுதலும், மணவினையில் தாலி கட்டுதலும் பிற சடங்குகள் நிகழ்த்துதலும் பண்டைக் காலத்தில் இல்லை யெனவே தோன்றுகிறது.

கணவன் இறந்ததும் சில பெண்கள் தீப்பாய்ந்து உயிர் துறந்தனர். சிலர் கைம்மை விரதத்தை மேற்கொண்டு உடலை வருத்தி உயிர் தாங்கி வந்தனர்; இவர் உட்கொள்ளும் உணவு வெந்த வேளைக் கீரையும் அல்லி யரிசியும்தான் (புறம், 246). இவரது கூந்தலை மழித்து விடும் வழக்கமும் வளையைக் கழற்றிவிடும் வழக்கமும் அக்காலத்தில் உண்டு (புறம், 25, 250). பெண்டிற்குப் பலவகையான உரிமைகள் இருந்தபோதிலும், அவர்கள் கணவனுக்கு உரியவான உடைமைப் பொருள்களுள் ஒன்றாகவே முற்காலத்தில் கருதப்பட்டு வந்தனர். இதற்கு விலக்காக உள்ளவர்கள் விறலி, பரத்தை முதலிய இனத்தவர்களே.

பண்டைக் காலத்தில் அடிமை மக்களும் இருந்தனர் என்று எண்ண இடமுண்டு. 'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் என்ற தொடரும் (தொல். அகத். 25) 'அடிமை (தொல். சொல், 57) என்ற சொல்லும் தொல்காப்பியத்துள் வந்துள்ளன. இவை தக்க சான்றுகளே எனினும், அடிமை என்னும் நிலைக்குரிய இயல்புகள் எல்லாம் அக்காலத்து இருந்தன என்று ஒரு தலையாகத் துணிய முடியவில்லை.

தமிழ்ச் சமுதாயம்

தமிழர் சமுதாயத்தில் நால்வகைச் சாதிகளும் தொல்காப்பியர் காலத்திலேயே இடம் பெற்றுவிட்டன. அந்தணர் அரசர், வைசியர், வேளாளர் என்ற வகுப்பினரை முறையே குறித்துத் தொல்காப்பியச் சூத்திரங்கள் உள்ளன (மரபு. 71, 72, 77, 81). இம் முறையையும் சொற்களையும் நோக்குமிடத்து, அந்தணர் வேளாளர் என்ற சொற்கள் தமிழ்ச்சொல் என்பதில் ஐயந் தோன்றுகிறது.[1] 'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்' என்ற புறநானூற்றுப் பகுதியும் (183) இந்நால்வகை வருணத்தையே குறிக்கிறது. இந்த வருணங்கள் சமுதாயத்தின் அஸ்திவாரமென்று சொல்ல முடியாது. தொழிலாற் பெயர் பெற்ற பல சாதிகளும் முற்காலத்து இருந்தன. கொல்லன், குயவன், வேட்டுவன், இடையன், மல்லன், கூத்தன், தச்சன், குறவன், பாணன், கடம்பன், துடியன், பறையன், புலையன் முதலிய சாதிப் பெயர்கள் புறநானூற்றால் தெரிய வருகின்றன. இவர்களுள், புலையன் அபரக்கிரியைகளையும் நடத்திவந்தனன் என்ற சில செய்யுட்களால் அறிகிறோம் (புறம், 360).

நால்வகைச் சாதிகளில் அந்தணர் சிறப்பாகப் போற்றப் பட்டனர். அரசன் வணங்கியது இவர்களையே.

பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே

என்பது பதிற்றுப் பத்து (63). இவர்கள் அரசனுக்கு வேண்டிய யாகங்களைச் செய்து வந்தனர் (புறம், 224). அரசன் பொருட்டுத் தூது சென்றவர்களும் இவர்களே (புறம், 34). வைதிக சமயத்தையும் கல்வியையும் கற்றுப் பேணி வந்தவர்களும் இவர்களே (புறம், 166). இவர்களுக்குத் துன்பு இழைத்தவர் பெரும்பாவிகளெனக் கருதப்பட்டனர் (புறம், 34). நாடுகள் முதலியன கொடுத்து அரசர்கள் இவர்களைப் பாதுகாத்தனர் (புறம், 122). இவர்களும் அரசுபாரந் தாங்கி ஆட்சி புரிந்தனர். 'அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே' என்பது தொல்காப்பியம் (மரபு. 0) இவர்கள் இரவலராயிருப்பதும் முற்காலத்தில் இழிவென்று கருதப்படவில்லை. (புறம் 200).

---

1. பௌத்தத் துறவிகளில் ஒரு சாரார்க்கு அந்தாணந்திகர் என்ற பெயர் (Sacred Books of the Buddhists II P.35 f.n.) 'வ்ருஷள' என்ற வட சொல்லிற்குச் சூத்திரர் என்று பொருள்.

அரசர் பற்றிய செய்திகள்

நாடு காவல் செய்யும் அரசர்களைக் குறித்துத் தொல் காப்பியமும் திருக்குறளும் பல செய்திகளைத் தெரிவிக்கின்றன. ஆனால் இவைகள் அரசனுக்கு இருக்கவேண்டும் உத்தம இலக் கணங்கள் என்றே கொள்ளத்தக்கன. மேலும் இவ்இரு நூல் களும் காலத்தாற் சிறிது பிற்பட்டன. இவற்றிற்கு முற்பட்ட புறநானூற்றில் வருவன தமிழ் அரசர்களுக்குத் தனித்து உரியன.[1] ஒரு செய்யுளில் (புறம், 29) ஓர் அரசன் ஒவ்வொரு நாளும் செய்த செயல்கள் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. பாணர்களால் சூழப் பெற்ற நாளோலக்கத்தில் இருத்தல், பின்பு மகளிரோடு சிறுதுயில் கொள்ளுதல், முரசொலிக்கக் கொடியோர்களைத் தண்டித்து நல்லோர்களைப் பாதுகாத்து நீதி வழங்குதல், பின்னர், தமது படை மக்களுக்கு உதவியாற்றுதல்; இச் செயல்கள் முறையே நிகழ்ந்து வந்தன.

அக்காலத்தில் உத்தம வாழ்வு வாழ்ந்த ஒரு குறுநில மன்னன் செய்கைகளை ஒரு செய்யுள் விளக்கமாகத் தெரிவிக்கின்றது. அச் செய்யுள் வருமாறு :

தொடியுடைய தோள்மணந்தனன்

*   *   *

செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை உயர்பு கூறினன்
வலியர் என வழிமொழியலன்
மெலியர் என மீக்கூறலன்
பிறரைத் தான் இரப்பு அறியலன்
இரந்தோர்க்கு மறுப்பு அறியலன்
வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்
வருபடை எதிர் தாங்கினன்
பெயர்படை புறங்கண்டனன்

*   *   *

பாணுவப்பப் பசிதீர்த்தனன் — ஆங்குச்
செய்ப எல்லாம் செய்தனன் (புறம், 299)

---

1. அமைச்சர் அல்லது மந்திரியர் உள்ளிட்ட ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் முற்சங்க காலத்து இருந்தன எனற்குச் சான்றில்லை.

'காதலுக்குரிய இளம் பெண்ணை மணம் புரிந்தான். தன் பகைவர்களை வேரறுத்தான்; நண்பர்களை மேம்படுத்தான்; தன்னைக் காட்டிலும் வலியவரென்று ஒருவர்க்கும் பின் மொழிந்து சென்றதில்லை, மெலியவரென்று தன் பெருமையைக் காட்டியதுமில்லை; பிறரை இரந்து ஒன்று கேட்டதில்லை. தன்னிடம் இரந்து வந்தவர்க்கு மறுத்ததும் இல்லை. அரசவையிலே தன் புகழ் தோன்றச் செய்தான்; படையை எதிர்த்துப் போர் புரிந்து புறங்காட்டியோடச் செய்தான்; தன்னிடம் வந்த பாணர்கள் மகிழும்படி பசி தீர்த்தான்; இவ்வாறாகச் செய்ய வேண்டுவன எல்லாஞ் செய்தான்' என்பது அச் செய்யுளின் கருத்து.

உத்தம லட்சியங்களும், பெருநோக்கங்களும், தத்துவ விசாரணைகளும் தெய்வபக்தியும் இதில் இல்லை. ஆனால் உண்மையிலேயே இது சிறந்த அழகிய வாழ்வு அல்லவா?

அரசர்களும் பிற வீரர்களும் போரிலன்றிப் பிறவாறு சாக நேரிடின், அவர்களைத் தருப்பையில் கிடத்தி வாளால் கீறி அடக்கஞ் செய்தல் வழக்கம் (புறம், 93). போரிலே பட்ட வீரர்களுக்குக் கல்நட்டு அவர் பெயரெழுதி அதனை வணங்குதல் வழக்கமாக இருந்தது. புறநானூறும் (221) தொல்காப்பியமும் (புறத். 5). திருக்குறளும் (771) இதற்குச் சான்றுகளாகும்.

தொழில்கள்

வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை

என்பது தொல்காப்பியம் (மரபு. 73). நிலவழியாகவும் நீர் வழியாகவும், இவர்கள் வாணிகம் நடத்தி வந்தனர். நீர் வழியாக மரக்கலங்களில் அயல்நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பண்டங்களோடு திரும்பிய செய்திகள் புறநானூற்றிலே காணலாம் (புறம், 30, 343). இவர்களுள்ளே, நச்சினார்க்கினியர் கருத்தின்படி, 'வேத வணிகர்' எனப்படுவோரது இயல்புகள் பட்டினப்பாலையில் (207 - 212) தொகுத்துக் கூறப்படுகின்றன.

நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறை
பல்பண்டம் பகர்ந்துவீசும் [கொடாது

என்பது அப்பகுதி. வியாபாரப் பொருள்களை மூடையாகக் கட்டி, அரச முத்திரையிட்டுக் காவல் செய்வது வழக்கம் (பட்டினப். 131 - 7).

வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி

என்பது தொல்காப்பியம் (மரபு. 76). வேளாளரை உலக மாகிய தேரைத் தாங்கி அது செல்லுதற்கு வேண்டும் அச்சாணி என்று பிற்பட்ட திருக்குறள் கூறும்.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை யெல்லாம் பொறுத்து

என்பது அக்குறள் [(1032).

இத்தொழிலையே அனைத்துவகைத் தொழிலினும் சிறந்த தொழிலாகக் கொண்டிருந்தனர்.

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை (குறள், 1031)

என்பது திருக்குறள். புறநானூறும்

பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே (35)

என்று உழுத சாலின் பெருமையை விளக்குகிறது. மேற் கூறியவை போன்ற சாதித் தொழில்களிலே தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் நாடோறும் ஈடுபட்டு வந்தனர்.

சமயங்கள்

பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் வைதிக சமயத்தையும் அருக பௌத்த சமயங்களையும் போற்றி வந்தனர். அந்தணர் வேள்வி இயற்றுதலும், பொது மக்களில் ஒரு சாரார் முக்கட் செல்வன் ஆலயத்தை வலஞ்சூழ்ந்து பணிதலும், திருமால் முதலிய தெய்வங்களின் வழிபாடும் வைதிக சமயம் பரவியிருந்ததைக் குறிக் கின்றன. அருகசமயம் முதலியன வைதிகசமயத்தோடு வாதப் போர்கள் புரிந்து வந்தன.

இகல் கண்டோர் மிகல் சாய்மார்
மெய்யண்ண பொய் உணர்ந்து
பொய்யோரது மெய்கொளீஇ (புறம் 166)

என்றது புறநானூறு. தொல்காப்பியரும் திருவள்ளுவரும் அருக சமயத்தவர்கள் ஆரிய தெய்வங்களையே யன்றி முருகன் முதலிய நாட்டுத் தெய்வங்களையும் முற்காலத்தோர் போற்றினர், பேய் பூதம் முதலிய சிறு தெய்வங்களும் வணக்கத்திற்குரியவாயிருந்தன. விதி என்று சொல்லப்படுவதனை முற்றும் நம்பி வந்தனர் (புறம், 192). இவ்விதியைப் 'பால்' என்ற பெயரால் (புறம்,75) வழங்கினர். பல பிறவிகள் உண்டென்றும், அக்காலத்து மக்கள் நம்பினர். சுவர்க்கம் (புறம் 214), நரகம் (புறம், 5), இம்மை மறுமை (புறம், 134: குறுந். 49) முதலியவும் அவர்கள் கொண்டனவே. இக் கொள்கைகளைத் தவிர, வேறு தத்துவ ஆராய்ச்சி யிருந்ததாகப் புலப்படவில்லை. இவைகளும் தினசரி வாழ்க்கையைப் பல வழிகளில் நெறிப்படுத்தின.

கல்வி

சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாததான கல்வி அக்காலத்தும் மிகவும் போற்றப்பட்டு வந்தது. கல்வியாளர்கள் நன்கு மதிக்கப்பட்டனர்.

அறிவுடை யோனாறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே

என்று புறநானூறு (183) கூறும். இச்செய்யுள் தானே

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே

என்று கூறுதலால், கல்வியின் பெருமையும் இன்றியமையாமையும் நன்றாக விளங்குகின்றன. சாகுமளவும் கல்வி கற்கவேண்டும் என்பது பிற்காலத்து லட்சியம்.

யாதானும் நாடாமால் ஊராமால்என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு (குறள் 397)

என்பது திருக்குறள். மனைவியைப் பிரிந்து சென்றும் மூன்று ஆண்டுகள் கல்வி கற்பது மரபு என்பர் தொல்காப்பியர்.

ஆண்களைப் போலவே பெண்களும் கல்வி கற்றுப் புலவர்களாக விளங்கினர். ஆனால் கல்வியைக் கற்றற்குரிய பொது நிலையங்கள் முற்காலத்து இருந்தனவாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் தத்தம் முயற்சியினாலே ஆசிரியர்களை அடுத்துக் கல்வி கற்று வந்தனர் என்றே கருதவேண்டும். இக் கல்வியறிவு பற்றியும் தமிழ் மக்கள் நாள்தோறும் முயன்று வந்தார்கள் என்று ஊகிக்கலாம்.

இங்ஙனமாக, பண்டைத் தமிழ் மக்களது அன்றாட வாழ்க்கை எளிமையும் மேன்மையு முடையதாய், சிறிதும் கபடற்றதாய், குடும்ப நெறியில் உளம் கூர்ந்ததாய், பொருளீட்டி இன்புறுதலில் ஈடுபட்டதாய், உபகாரஞ் செய்தலை மேற் கொண்டதாய், மேலுலகத்தும் பயன்படவல்லதாய் அமைந்து, தமிழகத்துக்குப் பெரும்புகழ் விளைத்துவந்தது. தமிழரது பண்பாட்டின் மேன்மையை இத்தகைய இனிய வாழ்க்கை நன்கு புலப்படுத்துகிறது.

4. புறநானூறும் தமிழரும்

புறநானூற்றிலுள்ள[1] செய்யுட்கள் இயற்றப்பெற்றுச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்டன. இந் நீண்ட காலத்தை எளிதாகச் சொல்லிவிட்டோம். 'ஆனால் இதன் பொருண்மையை அத்தனை எளிதாக உணர்ந்துகொள்ள முடியாது. பல்வேறு துறையிலும் தமிழ் நாட்டில் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகள் மூலமாகத்தான் இதனை ஒருவாறு அறிய முடியும்.

காலமென்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழாய்க் கீழது மேலாய்
மாற்றிடுந் தோற்றம்

என்றனர் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை.

அரசியல் துறை

அரசியல் துறையை நோக்குவோம். நம் தமிழ்நாட்டு மூவேந்தர் வமிசங்களும் பல நூற்றாண்டுகள் அரசு புரிந்து மாய்ந்தன. பல்லவ வமிசம், சளுக்கியவமிசம், எத்தனையோ குறுநில மன்னரது வமிசங்கள், விஜயநகரத்து அரச வமிசம், நாயக்கர் வமிசம், பாளையக்காரர் வமிசம் ஆங்கிலத் துரைத் தனம் இவை அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிபுரிந்து கழிந்தன.

இருங்கடல் உடுத்த இப்பயங்கெழு மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே (புறம், 363)

என்றனர் ஒரு புலவர்.

---

1. புறநானூறு தொகை நூல்களுள் இறுதியில் தொகுக் கப்பட்டது. அதன் செய்யுட்களைப் பாடினோர் வெவ்வேறு காலத்தினர்.

சமயத்துறை

சமயத் துறையைக் காண்போம். பௌத்தம் மிகச் சிறப்புடன் பல நூறு ஆண்டுகளாக வழங்கிவந்து பின்னர் எக்காரணத்தினாலோ, நம்முடைய தமிழ்நாட்டினின்று மறைந்துவிட்டது. ஜைனமும் அப்படியே வெகுகாலம் வழங்கி இப்போது அங்கங்கே அருகி நின்றுள்ளது. பாசுபதம், காளாமுகம், காபாலிகம் முதலிய மதங்களும் இப்போது ஆராய்ந்து இயல்பு காணவேண்டிய பண்டைப் பொருள்களாய்விட்டன. இவையெல்லாம் போக, சைவ சமயத்திலும் சமயாசாரியர்கள் நால்வர், நாயன்மார்கள், சங்கராசாரியர், நீலகண்ட சிவாசாரியர், மெய்கண்டதேவர் முதலியோர்கள் தங்கள் அருட்பெருஞ் செயல்களை நிகழ்த்தி இறைவனது திருவடி நீழலையடைந்துவிட்டனர். இவ்வாறே ஆழ்வாராதியரும் நாதமுனி முதலிய ஆசாரியர்களும் இராமாநுஜரும் தங்கள் அருள் விளங்கும்படி பூவுலகில் நிலவிப் பரமபதம் அடைந்துவிட்டனர். இவர்கள் அனைவர்க்கும் முன்புள்ள ஒரு காலத்தில் சமய - உணர்ச்சி யாதாயிருக்கக்கூடும் என்று நம் மனம் கலக்கமடைகின்றது,

> குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை
> வெறுங்கூடு காவல் கொண்டாள் (புறத்திரட்டு, 1546)

என்று ஒரு பிற்காலப் புலவர் கூறுகிறார். இதுபோல, தமிழ் மக்களது வாழ்க்கைச் சரித்திரத்தில் மேற்கூறிய அருட்பெருஞ் செல்வர்கள் வாழ்வையும் அவர்கள் இயற்றிய அரிய தொண்டுகளையும் சிறிது மறந்துவிட்டால், நாம் வெறுங்கூடு காவல் கொள்பவர்களாய்த்தான் இருப்போம் என்று கருதத் தோன்றுகிறது.

இலக்கியம்

இனி நமது இலக்கியச் சரிதத்தை எடுத்துக்கொள்வோம். திருவள்ளுவர், கொங்குவேள், இளங்கோவடிகள், திருத்தக்கதேவர், சேக்கிழார், கம்பநாடர்; இப்பெருங் கவிகள் அனைவரும் என்றும் அழியாத இலக்கியச் செல்வங்களை நமக்கு அளித்து, தங்கள் வாழ்வின் பயனை முற்றுவித்துப் போயினர். இவர்களுடைய திருநாமங்களையும் இவர்கள் இயற்றியளித்துள்ள கவிதைப் பெருங்கோயில்களையும் சற்று மறக்க முயலுவோம். யாது எஞ்சியுள்ளது என்று நினைப்பதற்கு முன் நம் உள்ளம் பகீரென்கிறது. வெறுங் கூடுதானும் உள்ளதோ என்று நம்மை ஐயுறச் செய்கின்றது. ஒரு புலவர்,

திருத்தக்க மாமுனி சிந்தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேன்—உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேன் குறள்அணுகேம்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு

என்று கூறினர். இவரது மனப்பான்மையைத்தான் நாமும் அடைந்துவிடுவோம்.

செய்யுட்கள்

இனி, **செய்யுட்களின்** சரிதத்தை நோக்குவோம். இதன் கண்ணும் எத்தனையோ வேறுபாடுகள் நிகழ்ந்துவிட்டன. யாப்பருங்கலவிருத்தியை நாம் நோக்கினால் எத்தனை செய்யுள் வகைகள் மறைந்து போயின என்று ஒருவாறு அறியலாம். புதியனவாகச் சில செய்யுள் வகைகள் பெரும் புலவர்களால் கையாளப்பட்டுப் பெருமையடைந்து பின் ஒளியிழந்து மங்கின.

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவஎல்லாம் அளந்தார் ஓர்ந்து

என்பது திருவள்ளுவமாலைச் செய்யுள். இங்ஙனம் புகழப்பட்ட குறள் வெண்பா* வள்ளுவராலேயே சிறப்பெய்தி விளங்கிப் பின் வாழ்விழந்தது. விருத்தக் கவித்திறங்களெல்லாம் தமிழில் சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டளவில் தோன்றியவையே. அகப் பொருட் கவிகட்குச் சிறப்புரிமையுடையதாகப் போற்றப்பட்டுள்ள கட்டளைக் கலித்துறையும் பிற்காலத்துப் புதிதாய்ப் புகுந்ததுவே. இங்குக் குறித்தன போன்ற செய்யுளினங்களால் இயன்ற பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்களும் பிற்பட்டு இடைக்காலத்தில் தோன்றியனவே. பிள்ளை என்ற சொல்லை

---

*குறள் என்ற பெயர் குறள்வெண்பாவிற்கு வழங்கியது திருவள்ளுவரது பெருநூலின் பின்னர் என்றே கொள்ளத்தக்கது. தொல்காப்பியர் இட்ட பெயர் 'குறுவெண்பாட்டு' (செய்யு. இளம், (114, 151) என்பதேயாகும், யாப்பருங்கலத்தில் தான் குறட்பெயர் முதன் முதற் காணப்படுகிறது. இதன் விருத்தியில் முந்துநூல் மேற்கோள் யாதும் தரப்படவில்லை.

மக்களின் இளமைக்கு வழங்குதல் மரபன்று என விதித்துள்ளது தொல்காப்பியம்.

> குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
> கிழவ அல்ல மக்கட் கண்ணே (மரபு, 23)

என்பது மரபியற் சூத்திரம். மக்களின் இளமைக்குக் 'குழவி' 'மகவு' என்ற இரண்டே சொற்கள் வழங்கின; பிள்ளை முதலிய பிற சொற்கள் அப்பருவத்து மக்களுக்கு உரியன அல்ல. இங்ஙன மிருப்ப, மக்களின் குழந்தைக்குப் பிள்ளை எனப் பெயரிட்டு அப் பருவத்து நிகழ்த்தும் செயல்களைப் பிரபந்தமாக அமைத்து இயற்றுதல் பிற்கால வழக்கென்று சொல்லவும் வேண்டுமோ? எனவே, பெரும்பான்மையாய் வழங்கிய செய்யுளினங்களும் பிரபந்த வகைகளும் இடையிலே தோன்றி, தற்காலத்தில் தம் வாழ்வு முடியும் நிலையிலுள்ளன. பண்ணத்தி முதலிய பல பல செய்யுள் நூல்கள் பன்னூறு ஆண்டுகட்கு முன்புதானே வழக்கொழிந்தன.

மொழி வேறுபாடு

இனி, தமிழ் மொழியிலே ஏற்பட்டுள்ள வேறுபாடுகளைக் கூர்ந்து நோக்குவோம். முதலாவது நாம் கவனிக்கத்தக்கது திராவிட மொழிகளிற் பலவும், புறநானூற்றுக்குப்பின், இவ் இரண்டாயிரம் ஆண்டுகளிற் பல்வேறு காலங்களில் தோன்றினமை. மலையாளம் சுமார் கி. பி. 1000-இல் தமிழி லிருந்து கிளைத்தது. இதற்கு 4, 5 நூற்றாண்டுகட்கு முன்னே கன்னடமும் தெலுங்கும் கிளைத்தன. தமிழுக்கும் இவற்றிற்கும் இடையே உள்ளது தாய்மைத் தொடர்பா அல்லது தங்கைத் தொடர்புதானா என்ற விவகாரம் இப்போது அவசியமில்லை. ஆசிரியர் சுந்தரம் பிள்ளை,

> கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
> உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்

என்று கூறியது பெரும்பாலும் உண்மையேயென்ன நடுநிலையாளர் யாவரும் ஒப்புக்கொள்வர். இதனால் தாய்மை என்னும் பெருமை காரணமாகப் பிற திராவிட மொழிகளின் இளமை குறித்து நமது தமிழன்னை நகுகின்றாள் என்று கருதுதல் தவறு. மொழி வரலாறு அறிந்தவன் இங்ஙனம் ஒருபொழுதும் கருதான். இம்மொழிகளெல்லாம் தோன்றுவதற்கு முன்பு புறநானூற்றுச்

செய்யுட்களிற் பல தோன்றின என்று அச்செய்யுட்களின் தொன்மையும், அத்தொன்மையின் அளவும் தெளிவாகப் புலப் படுவதற்கு மாத்திரமே இங்கு இச்செய்தி கூறப்பட்டதாகும்,

சொற்செல்வம்

இரண்டாவது கவனிக்கத்தக்கது தமிழ் மொழியின் சொற் செல்வம். தொல்காப்பியனார் தாமே

> இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று
> அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (எச்ச. 1)

என்று கூறினார். பலபல வடசொற்களும் ஒருசில திசைச் சொற்களும் பண்டைப் பாடல்களில் காணப்படுகின்றன. ஆனால் அவ் வடசொற்களிற் பெரும்பாலான வடமொழியினின்றும் நேரே வந்தனவல்ல; பாகதவடிவில் தமிழில் வந்து புகுந்தனவாம். உதாரணங்கள் : பாசி, ஊசி என்பன. இவை 'பாசிச் சொல்லாது ஊசி முன்னாது' (229) எனப் புறநானூற்றில் வருகின்றன. இச்சொற்கள் முறையே கீழ்த்திசை, வடதிசை என்று பொருள் படும் ; பிராசி, உதீசி என்பன இவற்றிற்குரிய வடசொற்கள், திசைச்சொற்களும் மிக மிக அருகியே வந்துள்ளன. 'நெய்யுலை சொரிந்தமையூன் ஓசை' (புறம், 261) என்ற இடத்து ஓசை என்றது ஆகுபெயரான் ஓசையையுடைய கறியை : இஃது ஒரு திசைச் சொல்' என்று உரைகாரர் எழுதினர்.

பிற்பட்டகாலத்திலே அளவற்ற வடசொற்கள் குடிபுகுந்தன. தேவாரத்தில் ஒரு பக்கம் திருப்பிப் பார்த்தால் போதுமானது; 100-க்கு 20 விழுக்காடு வடசொற்கள் காணப்படும். எனவே, முதலில் சமயம் பற்றிய சொற்களே மிகுதியாய் ஆளப்பட்டன. பின்னர், தத்துவ நூல் பற்றிய சொற்கள் இன்னும் மிகுதியாய்க் கொள்ளப்பட்டன. வரவர, வடசொற்கள் மிகுந்து மணிப் பிரவாள நடையென ஒன்று கி. பி. 9-ஆம் நூற்றாண்டளவில் தோன்றத் தொடங்கிற்று. கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளை வடமொழி விழுங்கிவிட்டது போல் தமிழ் மொழியை அது விழுங்கிவிடவில்லை. இது தமிழின் இயற்கை யாற்றலையும் நம் மூதாதையரது அறிவின் நுட்பத்தையும் நன்கு உணர்த்துகிறது. திசைச் சொற்களும் வரவரப் பெருகிவிட்டன. காலம் செல்லச் செல்ல, கன்னடம், சிங்களம், தெலுங்கு, துலுக்கு, போர்த்துகீசிய மொழி, டச்சு மொழி, பிரஞ்சு,

ஆங்கிலம் முதலியவற்றிற்குரிய சொற்களும் தமிழில் வந்து புகுந்தன. புறநானூற்றுச் செய்யுட்கள் தோன்றியபின் இரண்டாயிரம் ஆண்டுகளாக இத்தனை மொழிச் சேர்வுகளும் ஏற்பட்டுள்ளன. இச்சொல்லின் தொகுதியே யன்றி வாக்கிய அமைதியும் சிறிது சிறிதாக மாறியுள்ளது. உதாரணமாக, 'அருங்கேடன்' என்பது கேடு அரியன் அதாவது கேடு இல்லாதவன் என்று பொருள்படும். இத்தொடர் வடமொழி வாக்கிய அமைதியைப் பின்பற்றியது. பள்ளிச் சிறுவர்கள் 'நான் உடைத்தாயிருக்கிறேன்' என்று பாடம் படிப்பதை நாம் அடிக்கடி கேட்கிறோம். இது ஆங்கில வாக்கிய அமைதியைப் பின்பற்றியது. யாழ்ப்பாணத்து உலக வழக்கில் வழங்கும் வாக்கிய அமைதி நமக்குப் புதுமையாகவே இன்றும் உள்ளது. தமிழிற்கு இயல்பா யுள்ள வாக்கிய அமைதியினின்றும் வேறுபட்டுப் பல புத்தமைதி களும் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தோன்றி வந்திருக் கின்றன.

மேலே பலவேறு மொழிகளுக்குமுரிய சொற்களைக் குறித்தோம். அந்தச் சொற்கள் எல்லாம் நமது நாட்டிற்கும் பிறநாடுகளுக்கும் இருந்த தொடர்பினால் ஏற்பட்டன. இத் தொடர்பிற்கு அறிகுறியாகவும் உள்ளன. இத் தொடர்புகளும் பல காரணங்களால் உண்டாயின. வாணிகம், குடியேற்றம், சமயம், கல்வி, அரசாட்சி, கூலிப்படை முதலியன இக்காரணங் களுள் ஒருசில. இங்ஙனமுள்ள கூட்டுறவுகளெல்லாம் கால அடைவில் வரவர நிகழ்ந்தனவாகும்.

கருத்துலகில் நிகழ்ந்தவை

இங்கே கூறியன எல்லாம் சுமார் இரண்டாயிரம் ஆண்டு களாகப் புறத்தே கண்கூடாக நிகழ்ந்த நிகழ்ச்சிகள், கண்ணுக்கு அப்பாற்பட்டனவாய், அகத்தே, உள்ளத்திலே, கருத்துலகிலே நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை வரையறை செய்து கூறுதல் அருமையிலும் அருமை. ஆங்கிலேயராட்சி நிலைபெற்றதன் பின்பு நமது உள்ளப்பாங்கில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளைக் கவனித்தால் நான் சொல்வதன் உண்மை நன்கு புலப்படும். நமது சமயக் கொள்கைகளிலே, சமுதாயக் கொள்கைகளிலே, இல்வாழ்க்கைக் கொள்கைகளிலே அரசாட்சிக் கொள்கைகளிலே, கூட்டுறவுக் கொள்கைகளிலே, கல்விக் கொள்கைகளிலே, இன்னும் எத்தனையோ வகையான கொள்கைகளிலே நமது மனப்பான்மை பெரிதும் வேறுபட்டுவிட்டது. இதனை யாவரும்

எளிதில் உணரக்கூடும். ஆங்கிலேயராட்சி தமிழ்நாட்டில் நிலை பெற்று நிகழ்ந்தது சுமார் 150 ஆண்டுகளே ஆகும். இச்சுருங்கிய காலத்தில் இத்தனை வேறுபாடுகள் நமது கருத்துலகில் தோன்றி னவாயின் இரண்டாயிரம் ஆண்டுகளில் எத்தனை வேறுபாடுகள் இக்கருத்துலகில் தோன்றியிருக்கக்கூடும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

நமது காலத்திற்கும் புறநானூற்றுச் செய்யுட்கள் தோன்றிய காலத்திற்கும் இடைப்பட்ட மிக நீண்ட காலத்தில், புறவுலகிலும் அகவுலகிலும் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை இங்கே சிறிது விரிவாகக் கூறியது ஒரு பயன் கருதியாகும். ஏதோ இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு என்று லகுவாகச் சொல்லளவில் உணர்ந்து கொண்டாற் போதாது. காலத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் பொருண்மையுண்டு. ஒவ்வொரு பகுதியும் அகம், புறம் என்ற இருவகை யுலகிலும் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளால் நிரம்பியிருக் கின்றது. நூற்றாண்டுக்கு நூற்றாண்டு வேறுபாடு; தலை முறைக்குத் தலைமுறை வேறுபாடு. பின் தலைமுறையிலுள்ளார் முன்னுள்ள தலைமுறையாரினின்றும் விலகி வேறுபட்டு வந்திருக் கிறார்கள். இவ்வேறுபாடு வரவரப் பெரிதாகி வளர்ந்துள்ளது. முடிவு யாது? நாம் இப்போது வாழும் உலகம் வேறு; நமது மூதாதையரான புறநானூற்றுக் கவிஞர்கள் வாழ்ந்த உலகம் வேறு. இவ் இரண்டு உலகங்களும் தேசம் இடையிட்டவையல்ல; காலம் இடையிட்டவையாகும். புறநானூற்று உலகிற் புகுந்து அக்கவிஞர்களது சித்த விருத்தியை அறிவதற்கும் அவர்கள் கூறுவனவற்றை நன்கு உணர்ந்துகொள்வதற்கும் மிக்க முயற்சி இன்றியமையாததாகும். அதனை ஆராய்ச்சியாளர் செய்துவர வேண்டும். அம்முயற்சிக்கும் நமக்கும் இங்கே யாதொரு தொடர்பும் இல்லை. வேறொரு நோக்கோடு இப்புறநானூற்றை நோக்குதலே இப்பொழுது நாம் மேற்கொண்டது. தற்காலத்து இளஞ் சகோதரர்களுக்கு வேண்டுவனவாகிய சில சில நன்மொழி களையே, திருவாணைகளையே (messages), இத்தொகை நூலிலிருந்து இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர்கள் கூறும் கருத்துக்கள் நமக்குச் சிறிதும் பொருத்தமாகுமா என்று சிலர் நினைக்கலாம். ஆனால் பெருங்கவிஞர்களெல்லாம் எக்காலத் துக்கும் பொதுவான கருத்துக்களை அங்கங்கே கூறிச் செல்வர். பெருங்கவிஞர்களுக்குரிய இயல்புகள் பலவற்றில் இதுவும் ஒன்று என்று சொல்வது தவறாகாது. இந்தப் பொதுக் கருத்துக்களே

யன்றி, அவர்கள் கூறிய்ன வேறு சிலவும் கால தேச வர்த்தமானங்கட்கு இயையச் சார்த்தி யுணரத் தக்கனவாம். அவற்றினின்றும் நமக்கு நன்மை பயப்பன சில உய்த்துணரத் தக்கனவாயிருக்கும். ஆதலால் இந்த ஐயப்பாடு வேண்டாததாகும்.

முதலாவதாக, நாம் கண்டுகொள்ள வேண்டுவது ஒன்று உண்டு. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நமக்கு நாட்டுப்பற்று என்பது போய்விட்டது, நாட்டுக்காக உயிர் விடுதல் என்பதும் பழங்கதையே வீரம், தீரம் என்பன எல்லாம் அகராதியிற் காணும் சொற்களாய் முடிந்தனவேயன்றி, அவற்றிற்கும் இன்றுள்ள நமது வாழ்க்கைக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமற் சென்றொழிந்தது. நம் நாடு நலம் பெறவேண்டுமாயின், இந் நல்லுணர்ச்சிகளை நாம் மீண்டும் பெறுதல் வேண்டும். இங்ஙனம் பெறுதற்குப் புறநானூற்றுச் செய்யுட்களைவிட நமக்கு உற்ற துணை வேறு யாதுமில்லை. பாரி என்னும் வள்ளல் இறந்த பிற்பாடு அவனது பெண் மக்களும் கபிலரும் அவனது குன்றை நோக்கிக் கூறிய செய்யுட்கள் அவர்களது நாட்டுப் பற்றை மிக நன்றாக உணர்த்துகின்றன.

அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம்; எம்குன்றும் பிறர்கொளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே (112)

இச்செய்யுளிலே எத்தனை சோகம்! தாங்கள் பெண்களாய்ப் பிறந்தமையால் இக்குன்றினை இழந்தோம் என்று கூடப் பாரி மகளிர் கருதுவதுபோலத் தோன்றுகிறது. தாங்கள் இளமை முதல் இன்புற்று விளையாடி வளர்ந்த இக் குன்றை எளிதிற் பிரிய மனம் வருமா?

ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும், சிறுவரை
சென்றுநின் றோர்க்கும் தோன்றும், மன்ற;
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகும் முன்றில்
தேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே (114)

என்ற செய்யுளில் அவர்கள் பிரியாவிடை பெற்றுப் பிரிகின்ற தன்மை எவ்வளவு நன்றாகப் புலப்படுகின்றது!

வீர வாழ்க்கை

புறநானூற்றுக் காலத்தில் வாழ்ந்தவர்கள் 'ஒரு பகல் வாழ்க்கைக்கு உலமருதல்' (வருந்துதல்) மிகவும் இழிவானதென்று கருதினார்கள் (புறம், 51), போர் புரிந்து வாழும் வீர வாழ்க்கையே வாழ்வென்றுகொண்டார்கள். வீரனுக்கே பேரழகி உரியள் என்ற கொள்கையும் இருந்தது.

திருநயத் தக்க பண்பின்இவள் நலனே
பொருநர்க் கல்லது பிறர்க்கு ஆகாதே (342)

என்ற அடிகளால் இதை உணரலாம். போரிடை வீழ்தலையே நன்மரணமாக மதித்தார்கள். அம் மரணம் பெறாதவிடத்தே, பெறாதவனைத் தருப்பையிற் கிடத்தி வாளால் இருகூறு படுத்து வீரமரணம் பெறும்படி செய்தனர் (புறம், 93). போரில் முதுகு காட்ட நேரிட்டால், உண்ணாவிரதமாய் வடதிசை நோக்கியிருந்து உயிர்துறந்தார்கள். (புறம் 65,66,). ஒருவன் இயற்றிய வீரச் செயலைப் பாருங்கள் :

வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்தன் ஒருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலின், பெருங்கடற்கு
ஆழி யனையன் மாதோ ; என்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்
புரவிற்கு ஆற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே (330)

இவ்வகை வீரனது புகழுடம்பைத் தமிழ் மக்கள் தெய்வமாக்கி நடுகல் அமைத்து வணங்கி வந்தனர். ஒவ்வொருவர்க்கும் உரிய கடமைகளைக் கூறும் இச்செய்யுளைக் கவனியுங்கள்:

ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே ;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே :
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
தண்ணடை நல்கல் வேந்தர்க்குக் கடனே ;
ஒளிறுவா ளருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. (312)

T-6272

தேசப்பற்றையும் வீரவுணர்ச்சியையும் இன்று நாம் மீண்டும் பெறுதற்கு வேண்டும் உள்ளக் கிளர்ச்சி புறநானூறு என்ற இப்பண்டை நூலால் விளைவதுபோல வேறு எந்த நூலாலும் விளைவதில்லை.

சமூக சேவை

இரண்டாவதாக, சமூக சேவையை நோக்குவோம். இக் கருத்தை ஓர் அழகிய செய்யுள் மிக அழகாக விரித்துக் கூறுகின்றது.

உண்டால் அம்மஇவ் வுலகம்; இந்திரர்[1]
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சி;
புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே (182)

இச்செய்யுளிலே 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்ற கருத்து நயம்பெற உரைக்கப்பட்டுள்ளது. சமூக சேவையின் உயிர்நாடி எதுவோ அதைத் தேர்ந்தெடுத்து அதனை ஓர் ஆணையாக நமக்குத் தந்திருக்கிறார் ஆசிரியர். இவ்வுண்மை எல்லாக் காலத்தார்க்கும் எல்லாத் தேசத்தார்க்கும் பொது வல்லவா? இதற்கு இலக்கியமாக நாம் யாரைக் கொள்ளுதல் கூடும்? காந்தியடிகளைத்தான் கூறுதல் வேண்டும்.

இங்குக் கூறிய நெறியிலே சென்றவன் சமூகத்திற்கு உண்மை யான தொண்டு இயற்றியவனாவன். ஒன்று மனங்கொள்ளத் தக்கது. நாட்டு மக்கள் பசியால் ஆயிரக்கணக்காய்த் துன்புற்று வருந்துகிறார்கள். அவர்களை நம்மால் இயன்ற அளவு காப் பாற்றல் நம் கடமை. இயன்ற அளவு பொருளாலும் பிறபடி யாலும் உதவி செய்தலை நாம் மேற்கொள்ளல் வேண்டும். புறநானூற்றுப் புலவரொருவர் இவ்வாறு உதவிவந்த வள்ள லுக்கு ஒரு பட்டம் அளித்திருக்கிறார்; 'பசிப்பிணி மருத்துவன்' என்று.

---

1 இந்திரர் - தேவர் (சிலப், xvi, 173 உரை)

பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே (173)

இவ் அடிகள் என்றும் நமது ஞாபகத்தில் இருத்தல் வேண்டும்.

பெண்களின் நிலை

சமூகத்தைப் பற்றிக் கூறும்பொழுது சமூகத்துக்கு அச்சுப் போன்றிருக்கும் பெண்களைக் குறித்துச் சொல்லுதல் அவசியம். ஒரு சமுதாயம் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமையி னின்றும் அதனுடைய நாகரிகத்தின் தன்மையும் பண்பாட்டின் மேன்மையும் (culture) அளவிடப்படும் என்று கூறுவர். நமது நாட்டில் அவர்களை வெகுகாலமாக அடிமைகளாகவும் ஆடு, மாடுகள் போலவும் நடத்தி வந்திருக்கிறோம். புறநானூற்று முன்னையோர் அவ்வாறு செய்யவில்லை. அவர்களை மிக்க கௌரவத்தோடு நடத்திவந்திருக்கிறார்கள்.

மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன் (314)

என்று புறநானூற்றுப்புலவரொருவர் கூறுகிறார். இதனால் பெண்களை மிகப் பெருமையாகப் போற்றிவந்தார்கள் என்பது விளங்கும். மனைவி கணவன் என்ற இருவரிடையுமுள்ள அன்பு பற்பல வகைகளில் உணர்த்தப்படுகின்றது. ஏகபத்னி விரதமே தக்கதென ஒரு புலவர் உய்த்துணர வைக்கின்றனர்.

வடமீன் புரையும் கற்பின் மடமொழி
அரிவை தோளளள வல்லதை
நினதென இலைநீ (122)

என்பது ஒரு புறப்பாட்டு. கணவன் இறந்தவுடன் மனைவி இறத்தலை 'சககமனம்' எனப் பெயரிட்டு ஒரு சமுதாய வழக்க மென்று கூறிவிடுவர். ஆனால் ஓர் அரிய செய்யுளில் தன் அரும்பெறல் மனைவி இறந்தும் தான் உயிர் வாழ்ந்திருப்பதை நினைத்து ஒரு கணவன் புலம்புகின்றான்.

ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை (245)
இன்னும் வாழ்வல் என்இதன் பண்பே

என்ற அடிகளில் இச் செய்தி புலப்படுகிறது.

கல்வியின் பெருமை யாவரும் நன்கறிந்தேயாம்.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் (393)

என்றனர் வள்ளுவர். பின்வரும் புறநானூற்றுச் செய்யுள் என்றும் மனத்தில் வைத்துப் போற்றத்தக்கது :

உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே :
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே (183)

100-க்கு 93 பேர் எழுத்து வாசனை யற்றிருக்கும் நம் நாட்டினர்க்குக் கல்வியின் இன்றியமையாமையை இச் செய்யுள் மிகத் தெளிவாகவும் அழுத்தமாகவும் வற்புறுத்திக் கூறுகின்றது.

அறநெறி

இனி நாம் மேற்கொள்ள வேண்டும் குறிக்கோள் சிலவற்றைக் காண்போம். நாம் அறத்தை முதன்மையாகக் கொண்டு, அதன் நெறியில் நின்று வாழவேண்டும் என்று பல பல இடங்களில் (28,362) புறநானூற்றுச் செய்யுட்கள் உணர்த்துகின்றன:

சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல (31)

என்று ஒரு புலவர் கூறுகின்றார். இங்கே புலவர் அரசனது குடையை வருணிக்கின்றார். 'பொருளும் இன்பமும் அறத்தின் பின்னே தோன்றும் காட்சிபோல, சேர பாண்டியருடைய இரண்டு குடையும் பின்னாக ஓங்கிய நினது ஒன்றாகிய வெண்கொற்றக் குடை' என்பது கருத்து. இவ் அறத்தின் வழியே செய்யப் படுகின்ற நல்வினை யொன்றுதான் நமக்கு உறுதுணை யாவதென்று வேறொரு புலவர் வற்புறுத்துகின்றார்.

வாழச் செய்த நல்வினை யல்லது
ஆழுங் காலைப் புணைபிறி தில்லை (367)

என்பது அவர் கூறிய பாட்டு.

இந்த நல்வினையைத் திரட்டி வைப்பவர்களே 'நல்லவர்' என்ற பெயருக்கு உரியவர். இவர் வாழுமிடமே நல்லதாயிருக்கும் என்று ஒரு கவிஞர் விளக்குகிறார் :

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (187)

என்பது அக்கவிஞர் நன்மொழி.

இங்ஙனம் நல்லவராய் வாழ்ந்தோர்க்கே இவ்வுலகத்துப் புகழுண்டு ; ஏனையோர்க்கு மேலுலகத்தும் நற்பேறு இல்லையென்று மற்றொரு புலவர் பறைசாற்றுகின்றார்.

இவண்இசை யுடையோர்க் கல்லது அவணது
உயர்நிலை யுலகத்து உறையுள் இன்மை (50)

என்ற அடிகள் இவ்வாறு முழக்குகின்றன. இகவாழ்வினை நெறிப்படுத்தும் தத்துவ நன்மொழியை (Philosophy of life) கீழ்வருஞ் செய்யுள் நன்றாக உணர்த்துகின்றது :

யாதும் ஊரே ; யாவருங் கேளிர் ;
தீதும் நன்றும் பிறர்தர வாரா ;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன ;
சாதலும் புதுவ தன்றே ; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே ; முனிவின்
இன்னா தென்றலும் இலமே ; மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின், மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே ;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. (192)

இவ்வாறாக, இப் புறநானூறு பல நூற்றாண்டுகட்கு முன்பு தோன்றியதேயாயினும் தற்காலத்துக்குரிய நெறிகளையும் எக்காலத்துக்கும் உரிய உண்மைகளையும் நமக்குக் காட்டிக் கொண்டு நிற்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது. நமது முன்னோர்களது பண்பாட்டினையும் நன்கு எடுத்துக்காட்டி, அதன்கண் நாம் மகிழ்ந்து ஈடுபடும்படி செய்கின்றது. இந்நூலினைக் கற்றுப் பயனடைதல் தமிழ் மக்கள் அனைவர்க்கும் கடனாகும். கற்றற்கு வேண்டும் உள்ளத்தையும் தகுதியையும் தமிழ்ப் பற்றையும் உண்மைத் தமிழுணர்ச்சியையும் இறைவன் நம்மவர்களுக்கு அருள்புரிவானாக.

5. அகநானூறும் காதலும்

காதலுணர்ச்சி தோன்றாத காலம் இல்லை: இது தோன்றாத இடமில்லை. இதனுடைய ஆச்சரியமான சக்தியினால் இயக்கப்படாத உயிரினமும் இல்லை. மக்கள் அநாகரிகமாய் வாழ்ந்துவந்த காலந்தொட்டு இன்றுவரை இக்காதல் அவர்கள் மனத்தில் நிலைத்துவந்திருக்கிறது. மக்களை விட்டு விட்டு, அவர்களுக்குக் கீழ்த்தரமாயுள்ள பிராணிகளை எடுத்துக் கொண்டாலும், அவைகளிடத்தும் இவ்வுணர்ச்சியானது வியாபித்தே வந்திருக்கிறது. இனி எக்காலத்திலாவது எங்காவது இவ்வுணர்ச்சி தானும் மறைந்துவிடலாம் என்று நினைப்பதற்கும் இடமில்லை: ஆகவே இது நித்தியம் என்று சொல்வதில் என்ன தடை?

காதல் – நெறி

ஆனால் இந்த நித்தியப்பொருளினுடைய தோற்றம் ஒரே படியாய் இருப்பதில்லை. மக்களுடைய நாகரிகத்துக்கும் பழக்க வழக்கங்களுக்கும் தக்கபடியும் வேறுபடுகிறது. தற்காலத்தை எடுத்துக்கொண்டோமானால், சினிமா அரங்குகள், நாடக அரங்குகள், ஆண்களும் பெண்களும் சேர்ந்துழைக்க நேரிடும் பற்பல துறைகள் : இவற்றிலெல்லாம் காதல் நிகழ்ச்சிகள் நிகழ்வதைக் காண்கிறோம். மதங்கள் முன்னேற்றம் அடைந்து, இருபாலாரையும் தம் வசமாக இழுத்து அவர்களை இயக்குவித்த காலத்திலே, கோயில் குளங்கள் கூடக் காதலுக்கு நிலைக்களமாக இருந்ததை நாம் படித்திருக்கிறோம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரைக் காதலித்த வரலாறு பிரசித்தமானதே. அக்காலத்திற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, சமய ஆசாரங்களும், சமுதாயக் கட்டுப்பாடுகளும் அத்தனையாக முதிர்ந்து இறுகவில்லை. தமிழ்நாட்டில் மட்டுமன்று: எல்லா நாடுகளிலும் இப்படியே. மக்கள் தட்டுத் தடை அதிகமில்லாது, ஒருவரோடொருவர் உறவாடி வந்தனர். பொதுப்படையாக இயற்கையோடு ஒட்டிய நெறியில் இவர்கள் வாழ்ந்துவந்தார்கள் என்று சொல்லலாம். அந்தப் பழைய காலத்தில் தமிழ்நாட்டில் எவ்வகையான காதல் - நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்று

தெரிந்து கொள்வதற்கு நாம் விரும்புவது இயற்கையல்லவா? காதல் - நெறியும் மக்களது பண்பாட்டினை உணர்த்தவல்ல தல்லவா? அந்த நிகழ்ச்சிகளைக் கூறும் நூல்களுள் மிகப் பெரிய நூல் **அகநானூறு** ; இதை **நெடுந்தொகை** என்றும் சொல்லுவது உண்டு.

இந்நூல் ஒரு புலவரால் செய்யப்பட்டதல்ல. 144 புலவர்கள் பற்பல சமயங்களில் பாடிய 400 செய்யுட்களைக் கொண்டது இந்தப் பழையநூல். இப்படிப் பல புலவர்களால் இயற்றப் பெற்று ஒருவரால் தொகுக்கப்பட்டதனாலே, இதைத் தொகை நூல்களுள் ஒன்று என்று சொல்லுவார்கள். இதைத் தொகுக் கும்படியாகக் கட்டளையிட்டவன் **உக்கிரப்பெருவழுதி** என்ற ஒரு பாண்டிய அரசன். இந்நூலில் அடங்கிய செய்யுட்களில் மிகப் பெரியவை 31 அடிகள் கொண்டவை. போர் முதலிய விஷயங் களைப் **புறம்** என்று சொல்லுவதும், காதல் முதலிய விஷயங்களை **அகம்** என்று சொல்லுவதும் தமிழ்ப் புலவர்களுடைய வழக்கம். அதனாலேதான் இந்த நூலுக்கு **அகநானூறு** என்று பெயர்.

காதல் காட்சிகள்

இந்த நூலிலும் அகத்தைப் பற்றிக் கூறும் மற்றைச் சங்க நூல்களிலும் வருணிக்கப்படுகிற காதற் காட்சிகளுக்கும் இவற்றிற்குச் சுமார் 500 ஆண்டுகளுக்குப் பிற்பட்ட நூல்களில் வருணிக்கப்படும் காதற் காட்சிகளுக்கும் அதிக வேறுபாடு உண்டு ; பிற்பட்ட நூல்களில் உள்ள காட்சிகள் நாடக அரங்கிலுள்ள நடிப்புக்களே. இவற்றில் ஓர் ஆண் மகனும் ஒரு பெண்மகளும் தன்னந்தனியாக ஒரு சோலையிலே சந்திப்பது; அங்கே பெண்மகளைப் பார்த்தவுடன் ஆண்மகன் 'இவள் பூமியி லுள்ளவளோ ? தெய்வலோகத்திலுள்ளவளோ ? நாகலோகத்தில் உள்ளவளோ ? என்று சந்தேகப்படுவது : பின்னால் சில காரணங்களைக் கொண்டு இவ்வுலகத்தில் உள்ளவள்தான் என்று துணிவது ; இவை போன்ற பல விநோதக் காதல் - நடிப்புக்கள் உள்ளன. உதாரணமாக, இறையனார் களவியற் பொருள் களைக் கூறலாம். இவைகள் வாழ்க்கையிலே உண்மையாக நிகழக்கூடியவை யல்ல. இவை நகைச்சுவைக்குத் தக்க எடுத்துக் காட்டாகுமே தவிர, உண்மையென்றோ கவிச்சுவையுடையன என்றோ கொள்ள முடியாது. ஆனால் அகநானூறு முதலிய நூல்களில் வருகின்ற காதல் நிகழ்ச்சிகள் வாழ்க்கையிலே நிகழக் கூடியவையாகும் ; கவித்வ ரீதியில் உண்மையென்று கருதக்

கூடியவையாகும். சில பொழுது அவை உயர்ந்த லட்சியங்களைக் காட்டுவதாக இருக்கலாம். ஆனாலும் அவை முற்றும் இயல் பானவை என்பதும், உண்மையில் நிகழக்கூடியவை என்பதும் மறுக்கமுடியாத விஷயங்கள்.

இங்கே கூறிய உண்மையைப் பின்வரும் உதாரணங்களிற் காணலாம்.

யாக்கைக்கு, உயிரியைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோளே

என்று அகநானூறு (339) கூறுகின்றது. யாக்கை என்றால் உடம்பு என்று பொருள். உடம்பும் உயிரும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதனவாய் உள்ளன. இவையிரண்டும் தொன்று தொட்டு வேற்றுமையில்லாமல் கலந்தே வருவன. இவை இரண்டும் இன்பதுன்பங்களைச் சமமாக அனுபவிப்பன. அவ்வாறே கணவனும் மனைவியும் வேற்றுமையின்றி இருப்பவர்கள்; இன்ப துன்பங்களை ஒருமிக்க அனுபவிப்பவர்கள்; ஒருவருக்கொருவர் இன்றியமையாது உள்ளவர்கள். இப்படியாக இந்த அடிகளின் பொருளை விளக்கலாம். ஆனால் இந்தப் பொருள் விளக்க மெல்லாம் உவமானத்தின் நயத்தை முழுதும் எடுத்துக்காட்டி விடுவதாகாது. சொல்லுந்தோறும், சொல்லுந்தோறும், இந்த அரிய உவமானம் புதிய ஓர் இன்பத்தை நமக்கு விளைக்கிறது. இந்த நயத்தை உணர்ந்தே தமிழ் வேதம் செய்த திருவள்ளுவர்,

உடம்பொ டுயிரிடை யன்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு (1122)

என்று கூறுகின்றார்.

ஆழ்ந்த சிருஷ்டி ரகசியம்

'வாழ்தல் அன்ன காதல்'. 'சாதல் அன்ன பிரிவு'; இவை எத்தனை பொருட் பொலிவு உள்ளனவாக அமைந்திருக்கின்றன. ஆழ்ந்த சிருஷ்டி ரகசியம் ஒன்று இவற்றில் பொதிந்து கிடக்கிறது. ஆனால், இச் சொற்களில் ததும்புகிற உணர்ச்சியும் வேகமும் அழகும்தான் நம்மை முக்கியமாகக் கவர்கின்றன. இம்மூன்றும் பாரதியின் பாடலில்.

காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல் (பாரதி குயிற்பாட்டு)

என்று வரும் அடிகளிலும் தோன்றி உள்ளக் கடலின் அடி நிலத்தைத் தொட்டுவிடுகின்றன. இப்படிப்பட்ட உத்தம மான காதல் வாழ்வு வாழ்ந்தவர்கள் எவ்வாறு ஒருவரை யொருவர் காதலிக்க நேர்ந்தார்கள்?

மாலைப்பொழுது ; கடற்கரை. அங்கே வாழ்ந்துவந்த சிறு பெண்களின் சிறு கூட்டம். அவர்கள் மணலில் சிறு வீடு அமைத்தும், சிறு சோறு சமைத்தும் விளையாடி வந்தார்கள். தளர்ந்து ஓரிடத்தில் உட்கார்ந்தார்கள். கல்வி கற்று மெலிவ தற்குரிய கலாசாலைகள் முற்காலத்திலே இல்லையல்லவா? அதனால் இப்பெண்கள் அனைவரும் உடல் நலங்குன்றாமல் இளமை தளிர்த்து விளங்க, அழகு சோபிக்கக் கூடியிருந்தனர், அப்பொழுது ஆண்மகன் ஒருவன், புருஷ லட்சணங்கள் பலவும் பொருந்தியவன், அங்கே வர நேர்ந்தது. பெண்கள் கூட்டத்தில் ஒருத்தியைக் கண்டதும், அவனுடைய மனத்திலே என்றுமில்லாத ஒரு புதிய உணர்ச்சி, மனத்தைப் பறிகொடுத்தது போன்ற ஒரு தளர்ச்சி. இத் தளர்ச்சி, உடம்பிலும் தாக்கிவிட்டதுபோல உணர்ந்தான். அப்பெண்களை நோக்கிப் 'பொழுதுபோய் விட்டது. எனக்குச் சோர்வாக இருக்கிறது; நீங்கள் சமைத்து வைத்திருக்கும் உணவு கிடைத்தால் மிகவும் உபகாரமாயிருக்கும்' என்றான். இதைக் கேட்டதும், அப்பெண்கள் முகத்தைக் கவித்து, ஒருவர் முதுகின்பின் ஒருவர் ஒடுங்கியிருந்து கொண்டு, 'இந்த உணவு உங்கள் போன்றவர்களுக்கு ஏற்றதல்ல' என்று சொல்லினர். சொல்லிவிட்டு, உடனே, 'அதோ ஒரு கப்பல் வருகிறது. அதைப் பார்க்கப் போவோம்' என்று தம்முள் கூறிக் கொண்டு தாங்கள் அமைத்த சிறு வீடு முதலியவற்றைக் காலினாலே அழித்துவிட்டு அனைவரும் செல்லத் தொடங்கி னார்கள். அவ்வாறு சென்றவர்களுள் தான் முன் பார்த்த ஒருத் தியை மீளவும் உற்றுநோக்கி, 'நான் போகட்டுமா?' என்று வருத் தத்துடன் சொல்லி அந்த ஆண்மகன் தயங்கி நின்றான். அப்படி அவன் நின்ற தோற்றம் அந்தப் பெண்ணின் கண்ணுள்ளே நின்று கொண்டேயிருந்தது. இந்த முறையிலே நேர்ந்த காதலின் பயனாகத்தான் அவர்கள் இருவரும் மணம் புரிந்து காதல்வாழ்வு வாழ்ந்துவந்தனர். இச் சித்திரம் அகநானூற்றில் 11-ஆம் செய் யுளில் வரையப்பட்டுள்ளது.

இச் செய்யுள் இயற்றிய புலவன் தன் இதயம் நிரம்பிய உணர்ச்சியிலே எழுதுகோலைத் தோய்த்து எழுதினான் என்று தான் நாம் சொல்லவேண்டும். 'ஒருவர் முதுகின்பின் ஒருவர் ஒடுங்கியிருந்துகொண்டு' என்றது தமது நாட்டுச் சிறு பெண் களின் இயல்பை எத்தனை நன்றாக உணர்த்துகிறது! 'நான் போகட்டுமா!' என்று சொல்லி நிற்பவனது உள்ளத்திலே, எத்தனை வருத்தம் தேங்கியிருந்தது என்பதை யாரால் அளவிட முடியும்!

இன்பமும் துன்பமும்

வேறொரு சித்திரம். காதல் வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்து வருவது இயற்கையே. காதலனைப் பிரிந்து வாழுங் காலத்தில் காதலியின் செயலைப் பாருங்கள். காதலன் எப்பொழுது வருவான் என்று ஏங்கிய வண்ணமாயிருக்கிறாள். இந்த ஏக்கம் மற்றவர்கள் அறிந்துவிடக் கூடாது என்று நினைக் கிறாள். இதனைக் குறித்துப் பிறரோடு பேசுவதற்கோ மனமும் நாணமும் இடங்கொடுக்கவில்லை. ஆனால் காதலோ கடல் போலக் கொந்தளித்து இதயக்கரையை மோதி அழித்துவிடும் போல் தாக்கியது. தான் அருமையாகப் பேணி வளர்த்துவரும் கிளியை முன்கையில் ஏந்தி 'இன்று வருவாரோ சொல்' என்று மழலை மொழியாற் கேட்கின்றாள். பிறர் செவியிற்பட்டுவிடக் கூடாதென்று மெல்லப் பேசுகிறாள். ஆனால் அச்சொற்களிலே எத்தனை அன்பு! அகநானூறு கூறுவதைக் கேளுங்கள் :

> செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி
> இன்று வரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென
> இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
> மழலை இன்சொற் பயிற்றும்
> நாணுடை அரிவை (34)

இச்செய்யுளை நினைக்க நினைக்க மனம் கனிவுறுகிறது. இதிலுள்ளது போன்று எத்தனையோ அழகிய சித்திரங்கள் அடங்கிய நூல் அகநானூறு. இவற்றை நாம் ஆழ்ந்து நோக்கி னால், அங்கே உண்மையுணர்ச்சியும், கவியழகும், உயிர்த் தத்துவமும் துடிதுடித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். தமிழ் மக்களது பண்பாட்டின் ஓர் அம்சம் இவற்றால் புலனாகின்ற தல்லவா ?

இந்த நூலை நம் முன்னோர்கள் நமக்குத் திரட்டிவைத்துள்ள குலதனம் என்று சொல்வது மிகையாகுமா ?

6. தைந்நீராடல்

தைமாசப் பிறப்பன்று சூரியன் தனுர் ராசியிலிருந்து மகரத்திற் பிரவேசமாகி உத்தராயணத்தைத் தொடங்குகிறான். இதனால் மகர ஸங்கிராந்தியென்று இதற்குப் பெயர். இவ்வுத்த ராயணம் தை மாசம் முதல் ஆனி மாசம் முடியவுள்ள பாதி வருஷ காலமாகும். இதனைத் தேவர்களுக்குப் பகற் பொழுதென்றும் ஆடி முதல் மார்கழி மீறாகவுள்ள ஆறு மாதங்களும் அவர்களுக்கு இராப் பொழுதென்றும் நமது புராணங்கள் கூறும்.

தை மாசப் பிறப்பு பன்னூறாண்டுகளாக நமது விசேஷ தினங்களிலொன்றெனக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ் வகைக் கொண்டாட்டத்தினாலும் தற்காலத்தில் இம் மாசப் பிறப்பினைத் தமிழ் மக்கள் போற்றிவரும் முறையினாலும் இம்மாசத்திற்குரிய பெயர்க்கு ஒரு காரணம் ஒருவரால் கற்பிக்கப் பட்டது. மாசப் பிறப்பன்று பொங்கலிட்டுத் 'தை' 'தை' என்று குதித்தாடுவதனால் 'தை' என்ற பெயர் உண்டாயிற்று என்றனர்! விநோதமான இச் சொல்வரலாற்றைக் கண்டு பிடித்தவர் ஆங்கிலத்தில் பெரும்புலமை வாய்ந்தவரெனப் புகழ் பெற்று ஆங்கில ஆசிரியராகக் கலாசாலையில் விளங்கியவர். ஓரளவு தமிழ்க் கல்வியும் பெற்றிருந்தவர். நமது நாட்டில் சொல் லாராய்ச்சியின் நிலைமை இவ்வாறுள்ளது. சிறிது ஆராய்ந்து நோக்கினால், உண்மை புலப்படாமற் போகாது.

வான நூலறிவு நம் தமிழ் மக்களிடை வழங்கியதற்கு முன்பாக, வடமொழி மக்களிடையே வழங்கி வந்ததெனச் சரித்திரம் சான்று பகரும். வராஹமிகிரர் முதலிய வடமொழி யாசிரியர்களே ஜோதிஷ நூல்கள் பலப்பல இயற்றி, அவ் அறிவை அபிவிருத்தி செய்து வந்துள்ளார்கள். ஓராண்டிலுள்ள மற்றை மாதங்களின் பெயர்களெல்லாம் வடமொழிப் பெயர்களே. உதாரணமாக, சித்திரை, பங்குனி, வைகாசி முதலியவற்றைக் கூறலாம். இதனால் 'தை' என்ற பெயரும் வடமொழிக்குரிய தாகவே இருத்தல் வேண்டும். மேலும் சித்திரை முதலியன அவ்வப் பெயர்களாற் குறிக்கப்படும் நக்ஷத்திரங்களிலிருந்து தோன்றியவை. இவற்றைப் போலவே 'தை' என்பதும்

நக்ஷத்திரப் பெயரினின்றும் தோன்றியதாதல் வேண்டும். வடமொழியில் இம்மாதத்திற்கும் திஷ்ய (= புஷ்ய = பூசம்). நக்ஷத்திரத்திற்கும் 'தைஷ' என்பது பெயர். இது பாணிநீய சூத்திரத்தாலும் (VI, 4, 149). அதன் வார்த்திகத்தாலும் விளங்கும். 'தைஷ' என்பதுதான் 'தைஇ' எனத் தமிழில் பண்டை யிலக்கியங்களில் வழங்கியது. உதாரணமாக, 'தைஇத் திங்கட் டண்கயம் போல' என்ற புறநானூற்றுச் செய்யுளைக் (70) காட்டலாம்.

சொல்வரலாறு எப்படியேனும் இருக்கட்டும். தைமாதங் குறித்து ஜோதிஷ நூல்கள் கூறுபவற்றுள் பண்டைத் தமிழ்மக்கள் கொண்டன யாவையென நோக்குவோம். பண்டை என்பதனால் சுமார் இரண்டாயிரம் ஆண்டு முன்புள்ள காலத்தைக் கருதுகிறேன். முற்காலத்தில் ஓர் ஆண்டைப் பல பருவங்களாகப் பிரித்துணர்ந்தனர். மூன்று, ஐந்து, ஆறு, ஏழு, பன்னிரண்டு, பதின்மூன்று, இருபத்துநான்கென இப்பருவங்களைக் கணக்கிட்டனர். பிற்காலத்தில் பருவங்கள் ஆறு எனக் கொள்ளப் பட்டன. அவை வருமாறு :

1. கார்		ஆவணி, புரட்டாசி,	குறுந். 382	வர்ஷமி காலம்	தக்ஷிணாயநம்
2. கூதிர்	[illegible]	ஐப்பசி, கார்த்திகை,	ஐங்குறு. 252	சரத் காலம்	
3. முன்பனி		மார்கழி, தை		ஹேமந்தம்	
4. பின்பனி		மாசி, பங்குனி		சிசிரம்	உத்தராயணம்
5. இளவேனில்		சித்திரை, வைகாசி	ஐங்குறு. 361 அகம் 229	வஸந்தம்	
6. முதுவேனில் (கோடை)		ஆனி, ஆடி (காரே கூதிர் etc திவாகரம்)	குறுந். 376	க்ரீஷ்மம்	

இவற்றுள் இருவகை வேனிலும் 'வேனில்' என ஒன்றனுள் அடக்கி, பருவம் ஐந்தெனவே தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகிறது (அகத்திணை, 6 - 8, 11, 12). ஆனால் ஐங்குறு நூற்றில் 'இளவேனிற் பத்து' என்ற ஒரு பகுதி உள்ளது. 'வேனில் இளவேனில்' (அகம், 277), கன்னிள வேனிலு வாரார்' (அகம்; 229) என இளவேனிற் பருவப் பெயராலேயே குறிக்கப் பட்டுள்ளது. முதுவேனிலாகிய 'கோடை' புறநானூறு (174)

முதலியவற்றில் உள்ளது. கோடையை 'வேனில்' என்னும் வழக்கும் 'பெருவறங் கூர்ந்த வேனிற் காலை' எனப் புறநானூற்றிலும் (224), ஐங்குறுநூற்றிலும் (322) வருகிறது. முன்பனி, பின்பனி யென்பன தொல்காப்பியத்திற் காணப்படினும் சங்கநூல் வழக்கில் இவ் வேறுபாடு வெளிப்படையாய்த் தரப்படவில்லை. முன்பனி, 'தைஇ நின்ற தண் பெயற் கடை நாள்' (அகம். 269) என்பது முதலியவற்றிலும், பின்பனி என்பது 'பங்குனி முயக்கங் கழிந்த வழிநாள்' (அகம், 137, புறம். 229) என்பன முதலியவற்றிலும் கொள்ளப்பட்டுள்ளமை காணலாம். அற்சிரம் என்பது சங்க நூல்களிற் பெருவழக்கு. இப் பெயராலும் முன்பனிக் காலம் உணர்த்தப்படுகிறது. இங்குக் கூறியவற்றால், சங்க நூல்கள் கூறும் பருவங்கள் ஐந்தே என்பது தெளிவாம். ஐந்தனுள்ளும் தைமாசம் முன்பனிப் பருவத்தைச் சார்ந்தது.

> காரே கூதிர் முன்பனி பின்பனி
> சீரிள வேனில் முதுவேனில் என்றாங்கு
> இருமூ வகைய பருவம்; அவைதாம்
> ஆவணி முதலா இரண்டிரண் டாக
> மேவின திங்கள் எய்தினர் கொளலே (134)
>
> காரெனுங் காலப் பெயர்சரற் காலம் (136)
>
> கூதிர்க் காலமும் குளிர்பனிக் காலமும்
> ஆகு மென்ப அற்சிர நாளே (137)

என்னுந் திவாகரச் சூத்திரங்கள் இங்கே அறியத் தக்கன.

இம்மாதத்தில் மழைக்குப் பின் பனிக்காலம் தொடங்குதலால், குள முதலியவற்றில் நீர் நிரம்பி, குளிர் மிகுதியாயிருக்குமென்பர்.

> தைஇத் திங்கட் டண்கயம் போல
> கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர் (புறம். 70)

என்றும்

> தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
> வயங்குகதிர் கரந்த வாடை வைகுறை (அகம். 24)

என்றும் வருவன இதனைப் புலப்படுத்தும். தைமாதத்திற் குளிரை உவமையாக எடுத்தாண்ட இடங்களும் உள்ளன. 'தண்கயம் போல' என மேலே காட்டியது ஒரு சான்று. தைமாதத்தில் பாரியின் பறம்பிலுள்ள சுனையில் நீர் மிகக் குளிர்ந்து இனிதாயிருக்கும் என ஒரு செய்யுள் கூறுகிறது.

பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
வெய்ய யுவர்க்கும் என்றனிர்
ஐய, அற்றால் அன்பின் பாலே

என்ற குறுந்தொகைச் செய்யுளே (196) இங்குக் கருதப்பட்டது.

மேற்கூறிய இயல்புடைய தைமாதத்தில் முற்காலத்தில் என்ன நிகழ்ந்த தென்பதை நோக்குவோம். மகளிரே இம் மாதத்தில் நீராடும் விசேஷத்தை வழக்கமாய்க் கொண்டாடி வந்தனர். தைநீராடல் வருமிடங்களிலெல்லாம் ஆடவர்கள் நீராடுதலைப் பற்றிய குறிப்பு முற்சங்க நூல்களில் யாதும் காணப்படவில்லை. தொல்காப்பியத்தில்

பெயரினுந் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன

என்ற சூத்திரத்திற்கு (கிளவி, 50) இளம்பூரணர் இன்று இவ்வூரா ரெல்லாம் தைந்நீராடுப' என்பதனைக் காட்டி, 'தைந்நீராடுதல் என்ற தொழிலில் ஆடவரன்றி மகளிரே கருதப்பட்டனர் என்று கூறுகின்றனர். இதுவே முற்காலத்து வழக்கம் என்பது 'வழக்கு வழிப்பட்டன' என்பதனால் விளங்கும். மகளிரும் விடியுமுன்பு அதிகாலையில் பலர் திரள் திரளாய்ச் சென்று குளிர்ந்த நீர் நிரம்பியிருக்கும் கயங்களில் நீராடி வருவர்.

நறுவீ யைம்மால் மகளி ராடும்
தைஇத் தண்கயம் போலப்
பலர் படிந்து

என ஐங்குறுநூற்றுச் செய்யுளொன்று (84) பலர் திரளாகச் சென்று நீராடுதலை உணர்த்துகிறது. இந்நீராட்டு அதிகாலையில் நிகழ்ந்த தென்பது

பெரும்புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து

என்ற நற்றிணையால் (80) அறியலாம். குளிர்ந்த நீர் நிரம்பி யிருக்கும் கயங்களில் நீராடுதல் வழக்க மென்பது

தைஇத் திங்கட் டண்கயம் போலக்
கொளக்கொளக் குறைபடா (புறம், 70)

தெண்ணீர்க் குமிழி யிழிதரும்
தண்ணீர்த் தைஇ நின்ற பொழுதே (நற்றிணை, 124)

என்பவற்றால் அறியலாம். இந் நீராட்டின் முன்பு, மகளிர்க்கு அவர் அன்பு செய்த காதலர் தழையும் மாலையும் கொடுப்பர்; அவற்றை மகிழ்ந்தேற்றுச் சென்று நீராடுவர். இது

தழையுந் தாரும் தந்தன னிவனென
இழையணி யாயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கட் டண்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள் (நற்றிணை, 80)

என்ற அடிகளால் விளங்கும். இந் நீராட்டு நிகழ்ந்த பின்னர், ஆசாரமாக இருந்து உணவுண்பர்; 'நோன்பியர் தையூணிருக் கையிற் றோன்றும் நாடன்' என்ற நற்றிணை (22) இதனைத் தெரிவிக்கின்றது. நீராட்டே நோன்பெனக் கூறப்பட்டுள்ளது. (தொல், புறத், 20, உரை மேற்கோள்),

குரவைக் கூத்து

தைமாசத்தில் நிகழ்ந்தது இந் நீராட்டு மாத்திரமே யன்று. வேறொரு நிகழ்ச்சியும் இக் காலத்தில் நிகழ்ந்ததென நாம் அறிகிறோம். சிறுமியர் தங்கள் இடையில் மாவின் பூங்கொத்தும் குழையும் அணிந்து அவை அசைந்து புரள, சூரியோதய சமயத்தே ஊதுகொம்பும் சங்கும் முழங்க, நாம் வண்டல் மண்ணினாற் செய்து விளையாடிய வண்டற் பாவையோடு சென்று, அதனை நீர்த்துறையிலே இட்டு, பின் குரவைக் கூத்தாடுவர். இது

தைஇ நின்ற தண்பெயர் கடைநாள்
பொலங்காசு நிரைத்த கோடேந் தல்குல்
நலங்கேழ் மாக்குரல் குழையொடு துயல்வரப்
பாடுர்ப்பு எழுதரும் பருவாய் மண்டிலத்து

வயிரிடைப் பட்ட தெள்விளி யியம்ப
வண்டற் பாவை யுண்டுறைத் தரீஇத்
திருநுதல் மகளிர் குரவை யயரும்
பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை (அகம். 269)

என்பதனால் உணரப்படும்.

இங்கே கூறியவற்றால் கன்னியர் விளையாட்டின்பத்தின் பொருட்டும், தமது காதலனைக் கணவனாகப் பெறுதற் பொருட்டும், தைந்நீராடல் புரிவரென்பதும், இளஞ் சிறுமியர் இம் மாதத்தில் விளையாட்டின்பம் பொருட்டாக மாத்திரம் வண்டற் பாவை இயற்றி, குரவையயர்வரென்பதும் நன்கு விளங்கும்.

பிற்காலத்தில் வேறுபாடுகள்

இவை சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்கள் வழக்கமாய்க் கொண்ட ஒழுக்கமாகும். சுமார் ஏழு நூற்றாண்டுகள் சென்ற பின்னர் இவ்வொழுக்கத்தில் முக்கியமான வேறுபாடுகள் தோன்றின. இக்காலப் பகுதியில் தமிழ் மக்களிடையே சமய வுணர்ச்சி மேன்மேலும் சிறந்து விளங்குவதாயிற்று. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி இவ்வுணர்ச்சி சிறந்தோங்குவதற்கு முக்கிய காரணமாயிருந்தனர். நாயன்மார்கள் சைவ சமய உணர்ச்சியையும் ஆழ்வார்கள் வைஷ்ணவ சமய உணர்ச்சியையும் வளர்த்தது போல, ஜைன சமயப் பெரியார்களும் அச் சமயவுணர்ச்சியை வளர்த்தனர். இதனால் வழக்க வொழுக்கங்க ளெல்லாம் சமய வேடம் புனைந்து ஒரு புதிய காட்சியை நமக்கு அளித்தன. இங்ஙனம் வேறுபட்ட காட்சியைத் தந்தவற்றுள் தைந்நீராட்டும் ஒன்றாம். இதன் புதிய தோற்றத்தை அறிந்துகொள்ள முயலுவோம்.

தைந்நீராடல் விளக்கமாகக் காணப்படுவது நல்லந்துவனார் இயற்றிய 11-ஆம் பரிபாடலில்தான். கலித்தொகையாலும் (59) இது கூறப்பட்டுள்ளது. முதலில் கலித்தொகைப் பாடலை நோக்குவோம். இங்கே

வையெயிற் றவர் நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ

என வந்துள்ளது. தலைவியை நோக்கி 'நீ உன் காதலனாகிய எனக்கு அருள்புரியவில்லையென்று யான் கூற, அதனைக்

கேட்ட அயலார் உன்னைப் பழிக்குமளவில், மகளிரிடையே நின்று, பலவகை அணிகளால் அழகு நிரம்பி நீ தைந்நீராடிய தவத்தின் பயனைப் பெறுவாயோ?' என்பது இதன் கருத்து. கன்னியர் பலர் ஒருசேர நின்று நீராடுவர் என்பதும் அந் நீராட்டில் தம்மை அணிகளால் அழகுறுத்திக் கொள்வ ரென் பதும், அது தவச் செயலாகவே கருதப்பட்ட தென்பதும் விளங்கும். நீராடுங்கால் அணிகலம் புனைந்திருத்தலும் நீராட்டி னைத் தவம் என்று கூறுதலும் முற்சங்க நூல்களிற் காணப்படாத புதிய செய்திகளாம். 'நோன்பியர் தையூ ணிருக்கையிற் றோன்றும் நாடன்' என மேற்காட்டிய நற்றிணையில் (22) தைந் நீராட்டுக் குறிக்கப் படாமையால், இந் நீராடலே 'நோன்பு' எனச் சிறப்பித்துக் கூறப்பட்டதென்றலில் ஐயப்பாடு கொள்ள லாம். அது வேறு வகை நோன்பினைக் குறித்ததாக இருக்கக் கூடும்.

பரிபாடல்

பரிபாடலில் தைந்நீராடல் பற்றி வந்துள்ளது பின்வருமாறு :

ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்கப்
புரிநூ லந்தணர் பொலங்கல மேற்ப
வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா வாடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமண லருவியின்
ஊதை யூர்தர உறைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்
றையல் மகளி ரீரணி புலர்தர
வையை நினக்கு மடைவாய்த் தன்று
மையாட லாடல் மழபுலவர் மாறெழுந்து
பொய்யாட லாடும் புணர்ப்பி னவரவர்
தீயெரிப் பாலுஞ் செறிதவமுன் பற்றியோ
தாயருகா நின்று தவத்தைந்நீ ராடுதல்
நீயுரைத்தி வையை நதி (பரி. 11 ; 76 - 92)

மையாட லாடல் மழ புலவர் - மையோலை பிடித்த இளைய புலவர்க்கு, கல்வி தொடங்கின பருவத்திலுள்ள சிறுவர்க்கு. பொய்யாடல் - காமக்குறிப் பில்லாத விளையாட்டு. புணர்ப்பு - மகளிர் கூட்டம். செறி தவம் - புலன்க ளடக்கிச் செய்யும் தவம். முன் பற்றியோ - முன் அடுத்தடுத்துச் செய்தோ.

இங்கே கன்னியர்கள் வையை நதியில் தைந்நீராடும் நோன்பு வர்ணிக்கப்படுகிறது. இந் நீராட்டு விழாவை ஆகமத்தில் வல்ல அந்தணர் மரபிற் பூசகர்கள் திருவாதிரை யன்று தொடங்கு வார்கள். சடங்கு முறைகளை யறிந்த முதுமைப் பருவத்து அந்தண ஸ்திரீகள் நோற்கு முறையைக் காட்ட, அந்தணர் களுக்குத் தானஞ் செய்து, நிலம் மழை 'பெய்தலாற் குளிர்வதாக என்று வாழ்த்தி, பனி பெய்யும் வைகறையில் கன்னியர்கள் நீராடுவார்கள். நீராடி, ஈரப் புடவையோடு நீர்க் கரைக்கு வந்து, அங்கே வசித்து வந்த அந்தணர்கள் வளர்க்கும் யாகத் தீயில் புடவையை உலர்த்துவார்கள். இங்ஙனம் தாயருகில் நிற்க தைந்நீராடும் நோன்பு இக் கன்னியர்க்கு வாய்த்தது முன்பு இவர்கள், மிக்க இளமைப் பருவத்தே, கல்வி தொடங்கும் பருவத்துச் சிறுவர் விளையாட்டிற்கு எதிராக, காமக் குறிப்பற்ற விளையாட்டை யாடிப் புலன்க ளடக்கிச் செய்யுந் தவத்தினை அடுத்தடுத்துச் செய்த காரணத்தா லாகும்.

பல நூதன அம்சங்களும் இவ்வர்ணனையிற் புலப்படுகின்றன. நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியன இது சமயச் சார்பாக மாறிவிட்டது என்பதும் திருவாதிரை யன்று இந் நீராட்டு நோன்பு தொடங்குமென்பதுமேயாம். அம்பா ஆடல் என்ற பெயரும் இதற்கு ஏற்பட்டது. இச் சமயச் சார்பும், திருவாதிரை யன்று தொடக்கமும் முற்சங்க நூல்களிற் காணாதன. கலித்தொகையும் 'தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ' என்று கூறுதலால், இதுவும் சமயச் சார்பை உணர்த்துகிறது என்றே கொள்ளுதற் குரியது. இக்காரணத்தால், இவை யிரண்டு நூல்களும் முற்சங்க காலத்திற்குப் பிற்பட்டெழுந்த சமயக் கிளர்ச்சிக்குப் பின் தோன்றின வாதல் அறியப்படும்.

மார்கழி நீராடல்

திருவாதிரை யன்று இந் நீராட்டு நோன்பு தொடங்குவதாக இங்கே கூறப்படுதலால். இது பாவை நோன்பின் வேறாவ தென்றே துணியத்தக்கது. பாவை நோன்பில் மார்கழி முதல் தேதி நீராட்டுத் தொடங்குவதாகும். இந் நோன்பிற்குரிய அருளிச் செயல்களே திருவெம்பாவையும் திருப்பாவையுமாகும். திருவெம்பாவையில் 'மார்கழி நீராடல்' என்றே இது குறிக்கப் படுகிறது. திருப்பாவையும் 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்' என்றும் வருதலால், பாவை நோன்பு நிகழ்ந்த நாட்களில் ஒரு சிறந்த நாள் பாடற்குரியதாய் எடுத்துக்கொள்ளப்

பட்டதென்பதும், அதன்கண் வரும் 'கூடாரை வெல்லுஞ்சீர் என்ற 27-ஆம் செய்யுளில் வருங்காலச் செய்திகள் கூறப்படுதலால், பௌர்ணிமையும் மிருகசீர்ஷமும் சேர்ந்த நாளுக்குப் பின்பும் மார்கழி மாதமுடிய இந் நோன்பு நிகழ்ந்ததென்பதும் விளங்கும். இங்குக் கூறியவற்றால் மார்கழி நீராட்டு வேறு, தைந்நீராட்டு வேறு என்று எளிதில் துணியலாம்.

தைமாசம் முதல் தேதியில் நிகழும் நீராட்டு, காமனைக் குறித்து நோற்கும் நோன்பின் தொடக்கம் என்பது

தையொரு திங்களும் தரைவிளக்கித்
தண்மண் டலமிட்டு மாசிமுன்னாள்
ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து
அழகினுக் கலங்கரித் தனங்கதேவா
உய்யவு மாங்கொலோ வென்றுசொல்லி
உன்னையும் உம்பியை யுந்தொழுதேன்
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை
வேங்கட வற்கென்னை விதிக்கிற்றியே

என்ற நாய்ச்சியார் திருமொழிப் பாசுரத்தால் விளங்கும். இப் பாசுரம் குறிக்கும் நோன்பின் ஆதிநிலையே சங்க நூல்களிற் காணப்படுவது என்று நாம் கொள்ளலாம்.

இங்ஙனமாக, சங்ககாலந் தொட்டுச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது தைமாசப் பிறப்பு. இதில் பொங்கலிட்டு உத்தராயணப் புதுமை கொண்டாடும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றியதாதல் வேண்டும். தையில் பௌர்ணிமை சேரும் தைப்பூச நாளும் முற்காலத்தில் சிறப்பாகக் கருதப்பட்டது, இது

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்

என்ற சம்பந்தரது திருவாக்கினால் அறியலாகும்

தைமாசப் பிறப்பன்று, தற்கால வழக்கத்தில் பழையவற்றில் களையக்கூடியனவற்றைக் களைந்து வீடு முதலியனவெல்லாம் சுத்தமாக்கி, வெள்ளையடித்து, மக்களனைவரும் மிக்க ஆசாரமாக இருக்கின்றனர். கன்னியர்கள் அதிகாலையில் நீராடி வந்து, விடிவதற்கு முன் ஈர வஸ்திரத்தோடு நின்று, உலையேற்றிப் புதிதாகக் கொண்டு வந்த பனையோலையால் தீயெரித்து, பொங்கலிட்டுக் கொண்டாடி வருகின்றனர்.

7. தமிழகத்தில் திருமணம்

மக்களது நாகரிக வாழ்விலே திருமணத்தைப்போல அத்தனை முக்கியமான நிகழ்ச்சி வேறொன்றும் இல்லை. இக் கருத்துப் பற்றியே ஸம்ஸ்காரங்களுள் மிக முக்கியமானது திருமணம் என்று வடமொழியாளர் கூறியுள்ளனர். இத் திருமண நிகழ்ச்சியில் பல்வேறு சடங்குகளும் காணப்படுகின்றன. காலந்தோறும் இடந்தோறும் சடங்குகள் வேறுபட்டு வந்துள்ளன. முதலாவதாக, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் எவ்வகையான திருமணச் சடங்குகள் நிகழ்ந்தன என்பதை இலக்கியங்களின் மூலமாக அறிய முயலுவோம்.

மேலே மக்களது நாகரிக வாழ்க்கை என்று கூறினேன். நாகரிக வாழ்க்கைக்கு முற்பட்ட அநாகரிக வாழ்க்கையில் திருமணம் என்ற ஸம்ஸ்காரமும் அதனைப் பற்றியுள்ள சடங்குகளும் காணுதற்கிடமில்லை. ஆணும் பெண்ணும் தம்மில் எதிர்ப்பட்டுக் காம வசத்தராய் நின்று ஒழுகும் ஒழுக்கமே இந்த அநாகரிக வாழ்வில் நிகழ்ந்தது. மிருகப் பிராயமாயிருந்த கூட்டம் நமது பாரத தேசத்தில் என்றுமே இருந்ததில்லை என்று மகாமகோபாத்தியாய பி. வீ. காணே முதலிய சில ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால் சமூக இயல் நூலில் வல்லவர்கள் இதனை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இது உலகெங்குமிருந்த அநாகரிக காலம் நமது தேசத்தில் மட்டும் எக்காலத்தும் இருந்ததில்லையென்று கூறுவதனோடு ஒக்கும். அன்றியும் தொல்காப்பியம் என்ற பழைய நூலில் அநாகரிக வாழ்க்கை இருந்தது என்பதற்குச் சான்று காணப்படுகிறது. தொல்காப்பியர்,

> பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப

என ஒரு சூத்திரம் இயற்றியிருக்கிறார். விவாகச் சடங்கு இல்லாத மணம் மிகப் பூர்வகாலத்தில் நிகழ்ந்தது என்றும், அதற்குப் பிற்பாடு பொய் முதலியன தோன்றிவிட்டமையால் சடங்கு முதலிய கட்டுப்பாடுகள் மணத்தில் இடம் பெற்றன என்றும் இச்சூத்திரம் உணர்த்துகிறது. ஆகவே, அநாகரிக மணம்

நிகழ்ந்த காலம் ஒன்று உண்டு என்பது இதனால் விளங்குகின்றது. வேறொரு சான்றும் இங்கே காட்டத்தக்கது. வடமொழியாளர் வகுத்த எண்வகை மணத்தில் காந்தருவ மணம் என்பதும் ஒன்று. இதுவும் ஆணும் பெண்ணும் இச்சைவழிச் சென்று கூடும் கூட்டமே யாகும். ஒரு காலத்தில் இச்சைவழி கூட்டமான இவ்வகை அநாகரிக மணம் நிகழ்ந்தது என்பதற்கு இக் காந்தர்வமும் ஒரு சான்றாகும்.

நாகரிக வாழ்க்கையில் புகுந்துள்ள தமிழ் மக்களிடையே சடங்குகள் கால அடைவில் வரவரப் பெருகிக்கொண்டே வந்தன. இவ்வாறு பெருகுதற்கு ஒரு காரணமாயிருந்தவர்கள் ஸ்மிருதி நூல்கள் இயற்றிய ஆசிரியர்களாவர். சடங்குகளால் திருமணம் தூய தன்மை அடைகிறது என்று இவர்கள் கருதினர். மணமகனும் மணமகளும் இத் தூய தன்மையை உணர்ந்து, தமது பொறுப்பையும் உணர்ந்து, பரஸ்பரம் இருக்கவேண்டும் அன்பு நிலையையும் உணர்ந்து குடும்ப வாழ்க்கையில் செம்மையாக ஒழுகுதற்கு இச் சடங்குகள் உதவின. இதனால் சடங்குகள் எவ்வளவுக்கெவ்வளவு விரிவுபட்டு நிகழ்ந்தனவோ அவ்வளவுக் கவ்வளவு மணவினையின் முக்கியத்துவத்தை மணமக்கள் உணர் வார்கள் என்று கருதப்பட்டது. ஸ்மிருதி ஆசிரியர்கள் இக்கருத் திற்குஇணங்கத் தங்கள் தங்கள் ஸ்மிருதிகளில் சடங்குகள் பற்றி வரவர விரிவாக எழுதிவைக்கலாயினர்.

ஸ்மிருதிகள் பலவற்றையும் நோக்கினால் அவற்றில் கூறப்பட் டுள்ள சடங்குகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதற் பகுதியைப் பூர்வாங்க நிகழ்ச்சிகள் அல்லது தொடக்க நிகழ்ச்சிகள் என்று பெயரிட்டுக் கொள்ளலாம். இதில் பெண் கேட்டுச் செல்லுதல், பெற்றோர் இசைதல், மணநாள் குறிப்பிடுதல், பந்தக்கால் நடுதல், சுற்றத்தார் முதலியவர்களை அழைத்து விருந்திடுதல் முதலியவை அடங்கின. இரண்டாவது பகுதியில் தான் மணவினை சடங்குகளுடன் நிகழ்வது. இதுவே மிக முக்கிய மான பகுதி. இதில் பாணிக்கிரகணம், ஓமம் வளர்த்தல், தீவலம் வருதல், சப்தபதி என்பன மிக முக்கியமானவை. சப்தபதி என்பது அக்னிக்கு வடக்காகச் செய்வது. ஏழுசோற்றுத் திரளை வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். மணமகளை மேற்குத் திசை யிலிருந்து தொடங்கி இச் சோற்றுத் திரளைகளின்மீது ஏழு அடி யெடுத்து வைக்கும்படியாக மணமகன் நடத்திச் செல்லுவான். இந்தப் பகுதிக்குப் பின்னர் வேறு சில அபரச் சடங்குகளும்

நிகழும். அவற்றுள் அம்மி மிதித்தல்; அருந்ததி காணுதல் முதலியவை அடங்கும்.

இம் மூன்று பகுதிகளைச் சார்ந்தனவாக எந்த எந்தச் சடங்குகள் பண்டைக்காலத்தில் தமிழகத்தில் நிகழ்ந்தன? இவற்றைத் தெரிந்துகொள்வதற்கு இரண்டு செய்யுட்கள் உதவுகின்றன. இவை முறையே அகநானூற்றில் வரும் 86, 136-ஆம் செய்யுட்களாகும். 86-ஆம் செய்யுளை இயற்றியவர் நல்லாவூர் கிழார் என்பவர். கிழார் என்பது வேளாள மக்களுக்குப் பண்டைக்காலத்து வழங்கிய பெயர். ஆதலால் அவர்களிடையே வழங்கி வந்த மண நிகழ்ச்சிகளை இச்செய்யுளிற் குறிப்பிடுகிறார் என்று கொள்ளுதல் தகும். 136-ஆம் செய்யுளை இயற்றியவர் விற்றூற்று மூதெயினனார் என்பவர். இப்பெயரிலிருந்து இவர் ஆரிய வகுப்பைச் சார்ந்தவர் அல்லர் என்பதும், தமிழ்நாட்டுப் பழங்குடி மக்களுள் ஒருவர் என்பதும் விளங்கும். ஆகவே, தமிழ் மக்களில் ஒரு சாராரிடத்து வழங்கிய மணச் சடங்குகளை இவர் குறிக்கின்றார் என்று நாம் கொள்ளலாம்.

86-ஆம் செய்யுளில், முதலாவதாக விருந்தினர்க்கு உண்டி அளித்தல் கூறப்படுகிறது. இவ் உண்டி அளித்தலுக்குப் பெருஞ் சோற்றமலை என்று பெயர். உளுந்து கலந்து வேவித்துப் பக்குவப்படுத்திய சோற்றையே இச்செய்யுள் குறிப்பிடுவதனால் இவ்வகை உணவே மணவினைக் காலத்தில் அளித்தற்குரியது எனப் பண்டைத் தமிழ் மக்கள் கருதினார்களாதல் வேண்டும். இங்ஙனம் உண்டி அளித்தல் இடையறாது நிகழ்ந்து கொண்டிருக்குமாம். பின்னர் பெரிய பந்தர் அமைத்து அதன் அடியில் மணலைப் பரப்பி, மனைவிளக்கு நிறுத்தி, பூமாலைகளைத் தொடர்ந்து தொங்கவிடுதல் சொல்லப்படுகிறது. இதன் பின் மணவினைக்கு எனக் குறித்த நாள் விளக்கப்படுகிறது. இந்நாள் பூர்வபக்ஷத்தில் இருக்கவேண்டுமாம். சமயம் அதிகாலை. அசுபகிரகங்கள் யாதும் இல்லாதிருக்கவேண்டும். சந்திரன் சுபநட்சத்திரங்களோடு கூடியிருக்கவேண்டுமாம். பின்னர், மணமகளை நீராட்டுதல் கூறப்படுகிறது. இந் நீராட்டினை 'வதுவை நன்மணம்' என்று இச் செய்யுள் குறிப்பிடுகிறது. நீராட்டுவோர் புத்திரப் பேறுடைய நான்கு மகளிர்கள். இவர்கள் 'கற்பில் வழுவாதபடி கணவனைப் பேணும் சிறந்த மனைவியாக விளங்குக' என்று வாழ்த்தி நீராட்டுவர். நீராட்டுதற்குரிய மஞ்சனநீர் முதலியவற்றையும் வேறு திரவியங்களையும் சுமங்கலிகளான முதுபெண்டிர்கள் குரவை முதலிய ஆரவாரத்தோடு முறையே கொடுத்து உதவுவார்கள். இம் மஞ்சன நீரிலே பூவும்

நெல்லும் கலந்து காணப்படும். இங்ஙனம் அமைந்த வதுவை மணத்திற்குப் பிற்பாடு மணமகளின் பெற்றோர்கள் 'பெரு மனைக்கு உரிமையுடையவளாக விளங்குக' என்று வாழ்த்தி, ஆரவாரத்தோடு விரைந்து புகுந்து மணமகளை மணமகனுக்கு அளிப்பர். பின்னர் இரவில் இவர்கள் ஓர் அறையில் உடனுறைந்து இன்புறுவர்.

அகம் 136-இல் சில புதிய விவரங்கள் தரப்படுகின்றன. உளுத்தஞ் சோறேயன்றி, இறைச்சியொடு கலந்த வெண்சோறும் அளிக்கப்படுவதுண்டு. இவையே யன்றி உயர்ந்தோர்களை வணங்குதலும் முற்படச் சொல்லப்படுகிறது. ஆனால், இப் பெரியோர்கள் இன்னார் என்பது விளக்கப்படவில்லை. நற்சகுனம் பார்த்தலும் இச்செய்யுளில் தரப்படுகின்ற ஒரு புதிய செய்தியாம். சந்திரன் ரோகிணியோடு கூடியிருக்கும் நாள் மணத்திற்குப் பொருந்தியது என்பதும் இங்கே தெளிவாகக் கூறப்படுகிறது. பௌதாயன கிருஹ்ய சூத்திரத்திலும் (I 1, 18 - 19), மானவ கிருஹ்ய சூத்திரம் (17, 5) முதலியவற்றிலும் இந்த ரோகிணி மணவினைக் குரிய நட்சத்திரங்களுள் முதலாவதாக வைக்கப்பட்டுள்ளது. மணவினை நிகழும் இல்லத்தை அலங்கரித்தல் தவிரத் தெய்வத்தைப் பேணுதலும், மணமுரசு ஒலிப்பித்தலும் இச் செய்யுளில் சேர்க்கப்பட்டுள்ளன. வதுவைக் கலியாணமாகிய நீராடுதலின் பின் மணமகளை ஆபரணம், மாலை முதலியவற்றால் அலங்கரித்தல் கூறப்படுகிறது. இம்மாலை வாகையிலையும், அறுகங் கிழங்கும், மலர் மொட்டும் வெண் நூலில் கட்டியதாய் உள்ளது. இதனைச் சூட்டித் தூய உடையை அணிவித்து மணமகளை அழைத்து வருவர். பின்னர் மணல் நிரப்பிய பந்தலிலே அவளை மணமகனுக்குக் கொடுப்பர்.

பிறிதொரு செய்யுளில் (அகம். 221) ஓர் அரிய செய்தி உணர்த்தப்படுகிறது. மணமகளின் பெற்றோர்கள் மதுபானம் அருந்தி, வீட்டினை அலங்கரித்து, மணலைக் குவித்து 'எமது மகளுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்துள்ளோம்' எனக் கூறி மணம் பற்றிய ஒரு விழாவைப் பூர்வாங்கமாக இயற்றுவர். ஸ்மிருதிகளிற் கூறப்படும் வாக்கு நிச்சயத்தோடு இதனை ஒப்பிடலாம்.

பழங்கால மணவினை

பழங்காலத்தில் மணவினை நிகழ்ந்த முறை இதுவேயாம். பாணிக்கிரகணம், ஓமம், தீவலம் வருதல், சப்தபதி முதலியன

சங்க காலத்தில் நிகழ்ந்தன அல்ல. புரோகிதர்கள் மந்திரம் ஓதுதலும் மண வினையில் இல்லை என்றே கூறலாம். தாலி கட்டும் சடங்கும் காணப்படவில்லை. மிகப் பிற்பட்ட சுமார் 6, 7-ஆம் நூற்றாண்டுகளில் இவைகளில் பலவற்றையும் தமிழ் மக்கள் கைக்கொண்டனர். உதாரணமாகச் சிலப்பதிகாரத்தைக் காட்டலாம். இதில் கோவலன், கண்ணகி என்ற இருவரது மணமும் சிறிது விரிவாகத் தரப்பட்டுள்ளது. பெண்களை யானை யின் பிடரியில் ஏற்றி ஊரார்க்கு மணவினைச் செய்தியை அறிவித் தனர். முரசும் மத்தளமும், சங்கும் ஒலிக்க, மாங்கலிய சூத்தி ரத்தை ஊர்வலமாகக் கொண்டுவந்தனர்.[1] மாலைகளைத் தொங்கவிட்ட தூண்களுக்கு மேலாக நீல விதானமும் முத்துப் பந்தரும் அமைத்தனர். சந்திரன் ரோகிணியோடு கூடியிருக்கும் நாளில், வேதாங்கம் ஆறனுள் ஜோதிஷத்தில் வணிகர்க்குக் கூறிய நெறியிலே புரோகிதன் சடங்குகளைச் செய்விக்க, இருவரும் தீவலம் செய்தனர்.

'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டித்
தீவலம் செய்வது ... ...'

என்று இக்காவியம் கூறுவது நோக்கத்தக்கது. முளைப்பாலிகை யைப் பெண்கள் ஏந்தி நின்றனர் என்ற செய்தியும் இக் காவி யத்தில் புலப்படுகின்றது. இம் மணவினை நிகழ்ச்சி யைப் பெருங்கதை என்ற தமிழ் நூல் இன்னும் மிக விரிவாக எடுத்துச் சொல்லுகின்றது. (உஞ்சை, 48, 84, 100, இலாவாண, 3, 1-167).

இங்ஙனமே நாச்சியார் திருமொழியில் 'வாரணமாயிரம்' என்ற பகுதி மிக விரிவாக மணவினைச் சடங்குகளை உணர்த்து கிறது. பூரண பொற்குடம் வைத்தல், தோரணம் நாட்டுதல், நாள் நிச்சயித்தல், மணமகன் வருதல், மணமகளை மந்திரபூர்வம் கோடிப்புடைவை உடுத்தி மணமாலை அணிவித்தல், தீர்த்தங் களால் நீராட்டுதல், பார்ப்பனப் பெரியோர்கள் இருவருக்கும் காப்புநாண் கட்டுதல், மணமகன் பாதரக்ஷை அணிந்து, பெண்கள் தீபம், கலசம் முதலியவற்றை ஏந்தி நிற்க, மணமகள் இல்லம்

---

1. 'மங்கல அணி யெழுந்தது' என்ற மூலத் தொடருக்கு இவ்வாறு அரும்பதவுரைகாரர் பொருள் கொள்ளுவர்.

புகுதல். மத்தளம் கொட்டவும் சங்கு ஊதவும் முத்துப் பந்தரின் கீழாக மணமகன் பாணிக்கிரகணம் செய்தல். வேத மந்திரங்கள் கோஷிக்க நாணலை வட்டமாகப் பரப்பிய இடத்திலே மணமக்கள் இருவரும் தீவலம் செய்தல், அம்மி மிதித்தல், பொரி முகந்து அட்டுதல், இருவரையும் வீதிவலம் செய்வித்து யானைமேற் கொண்டு சென்று மஞ்சனமாட்டி வைத்தல், இம் மணவினை களையெல்லாம் நாச்சியார் கனவிற் கண்டதாக அருளிச் செய்திருக்கின்றார். கம்பராமாயணம், (பால, கடிமணப், 86-93) முதலிய பிற்காலத்துக் காவியங்களிலும் மணச் சடங்குகள் ஸ்மிருதிகளை அனுசரித்துக் கூறப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் நோக்குமிடத்து ஆதியில் ஆரியர் கலப்பு மிகுதியாக இல்லாத காலத்தே மணச் சடங்கு ஒரு சிலவே இருந்தமையும், பின்னர் அவர்களுடைய கூட்டுறவு தமிழ்நாட்டில் பெருகப் பெருக, மணச் சடங்குகளும் பெருகி விட்டமையும் நன்கு புலப்படும்.

T. 6272

8. நகைச் சுவை

பண்பாட்டின் அம்சம்

பண்பாட்டின் பல்வேறு அம்சங்களைப் பற்றிக் கூறும் பொழுது நகைச் சுவை என்ற பொருளுக்கு இடமுண்டா என்று பலரும் ஐயுறுதல் கூறும். ஆனால், நகைச்சுவைதான் ஒருவனுக்குப் பூரணமான மனிதத் தன்மையைக் கொடுப்பது. நகைக்க அறியாதவன் அரை மனிதனாகத்தான் கருதப்படு வான். தனி மனிதர்களைப் போலவே, சில தேசத்தவர்களது பண்பாட்டின் இயல்பும் இந் நகைச்சுவையால் தெரியத் தகும். உதாரணமாக, ஐரிஷ் மக்களின் நகைச்சுவை ஒரு தனி வகையைச் சார்ந்தது; அம்மக்களின் பண்பாட்டினை நன்றாக உணர்த்துவது என்பர். நமது நாட்டிலும் அவர்களைப் போன்ற இனத்தவர்கள் உள்ளமை நன்கு அறியப்பட்டதே.

கண்ணிற்கும் காதிற்கும் புலப்படுவனற்றை ஆதாரமாகக் கொண்டே நகை முதலிய சுவை தோன்றும் என்று பொதுவாக நினைக்கலாம். இது உண்மையே. ஆனால் கண் செவி என்ற இரண்டிற்கும் அடிப்படையாக இருக்கிற மனத்தின் நிலையும் நகைச்சுவைக்கு இன்றியமையாதது.

> கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரும்
> உணர்வுடை மாந்தர்க் கல்லது. (மெய்ப்பாட். 27)

நகை முதலிய சுவையின் நயம் தெரிய முடியாது என்று தொல்காப்பியரும் மனநிலையின் அவசியத்தை வற்புறுத்தியிருக் கிறார். மிகவும் எளிதான சில விஷயங்களால் இவர் சொல்வதன் உண்மை விளங்கும்.

முதலாவதாக, எல்லாராலும் நன்றாகச் சிரிக்க முடியாது. இதை உங்கள் அனுபவங் கொண்டே நீங்கள் தெரியக்கூடும். சிலரது கண்களுக்கு முன் எவ்வளவு வேடிக்கை காட்டினாலும் அவர்களால் சிரிக்க முடிவதில்லை. அவர்களுடைய மன

அமைப்பில் ஏதோ ஒரு குறைபாடு இருப்பதால், சிரிப்பதற்கு அவர்கள் மனம் இடங்கொடுப்பதில்லை. இதனால் சிரிப்பதற்கு ஏற்ற மனநிலையொன்று உண்டென்பது விளங்கவில்லையா ?

இரண்டாவதாக, தக்க மனநிலையில் மனத்தினாலும் சிரிப்ப துண்டென்று வள்ளுவர் முதலிய ஆசிரியர்கள் குறித்திருக் கிறார்கள்.

பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் (குறள், 271)

என்றும்

மகிழ்ந்துள்ளம் உள்ளுள் உவப்ப துடைத்து
(குறள், 1057)

என்றும் அவர் கூறுகிறார். சூர்ப்பணகை இராமனை நெருங்கித் தனது காதலை வெளிப்படக் கூறி அரசர்கள் மணந்துகொள்வதற் குரிய வம்சத்தில் தான் பிறந்தவள் என்று தெரிவிக்கிற இடத்தே, இராமன் தன் மனத்துள்ளே சிரித்துக்கொண்டா னென்று சொல்லப்படுகிறது. கம்பன்

அருத்தியள் அனைய கூற
அகத்தறு நகையின் வெள்ளைக்
குருத்தெழு கின்ற நீலக்
கொண்டலுண் டாட்டங் கொண்டான்.
(சூர்ப்பணகை, 51)

என்று பாடுகிறான்.

தக்க மனநிலை

நகைப்பு நிகழ்வதற்கு ஒரு தக்க மனநிலை வேண்டும் என்றேன். இந்நகைப்பு, பொருள் நிரம்பிப் பூர்த்தியாகவேண்டு மானால், மனத்திலிருந்தெழுந்தே வெளிப்புறப்பட வேண்டும் என்பது வள்ளுவர் வாக்கால் அறியலாம். மனநிலை தக்கதா யமைந்து நகைப்பு உள்ளிருந்தெழுமாயின், வெளித் தோன்றுவது புன்னகையாயிருப்பினும் பொருள் நிரம்பியிருக்கும் என்பது கம்பன் வாக்கினால் அறியலாம். இம் மனநிலை யில்லாமற் போனால் மனத்திற்கும் நகைப்புச் செயலுக்கும் யாதொரு தொடர்பு மில்லாமல் பார்ப்பவர்களுக்கு நகைப்பு உண்டாகும்.

இதற்குக் கள்ளுண்டவனுடைய நகைப்பை உதாரணமாகக் கூறலாம். மனநிலை தக்கதாயில்லாது துன்பத்தால் நிரம்பி யிருக்குமானால், அப்போது நிகழும் புன்னகை பார்ப்பவர் மனத்தைச் சோகத்தில் ஆழ்த்திவிடும். தன் கணவன் தன்னைப் பிரிந்து வெளி நாட்டிற்குச் செல்லப்போகிறான் என்பதைக் குறிப் பினால் உணர்ந்த ஒரு மங்கை அவனிடம் அணுகும்போது,

நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்து தன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள். (அகம் 5)

என்று வருணிக்கப்படுகிறாள். இங்ஙனமே கோவலன் தன்னுடன் வழிவந்த கண்ணகியை நோக்கி 'உன் விஷயத்தில் பல தவறுகள் செய்துவிட்டேன். நான் வா என்று அழைத்தவுடன் எப்படி நீ மனமொப்பிவந்தாய்?' என்று கேட்க, அவள் 'நீர்' என்னுடன் இல்லாமையாகிய வருத்தத்தை மறைத்தொழுகினேனாக, உமது பெற்றோர்கள் என் குணத்தைக் கண்டு என்னை அன்போடு பாராட்டினார்கள். அப்போது என் முகத்திலே சிறிது புன்னகை அரும்பிற்று. இப்புன்னகை துன்பங் காரணமாகத் தோன்றியது என்று அதன் போலித்தன்மையை அவர்கள் உணர்ந்து மிகவும் வருந்தினார்கள். அவர்கள் துன்புறும்படி செய்துவிட்டீரே என்பது தான் எனது வருத்தம்' என்று கூறுகிறாள்.

பெருமகள் தன்னொடு ..மா நிதிக்கிழவன்
... ...
அற்புளஞ் சிறந்தாங்கு அருள்மொழி யளைஇ
எற்பாராட்ட யான் அகத் தொளித்த
நோயுந் துன்பமும் நொடிவது போலும் என்
வாயல் முறுவற்கு அவருளம் வருந்தப்
போற்றா ஒழுக்கம் புரிந்தீர். (சிலப். xvi 74-81)

என்பது இளங்கோவடிகள் வாக்கு, இங்கு மனநிலையோடு பொருந்தாத புன்னகை 'வாயல் முறுவல்' (அதாவது உண்மை பற்ற, போலியான புன்னகை) என்று சொல்லப்படுகிறது. இவ்வாறாக நகைப்பு அல்லது புன்னகையின் தன்மையே மன நிலையால் மாறிவிடுகிறது.

மேற்கூறியவற்றால் நகைப்பு வெளிப்பட நிகழ்வதற்கும் நகைப்பு தன்னகத்தே உண்டாவதற்கும், வெளிப்பட நிகழும் நகைச்சுவையை மிகுவித்தற்கும், குறைத்தற்கும் நகைப்பின் தன்மையையே மாற்றிவிடுவதற்கும் மனநிலையே காரணமாகும் என்பது விளங்கும். எனவே, மனநிலையும் நகைச்சுவைக்கு ஒரு முக்கிய காரணமென்பது புலனாகின்றது. இங்ஙனம் கூறிய அளவில், இச்சுவைக்கும் பண்பாட்டிற்கும் உரிய தொடர்பு* விளங்குவதாகும்.

பழமொழி

வேறொன்று; நகைச் சுவையைப் பற்றிப் பலமொழிகளிலும் எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களை ஓரிடத்தில் தொகுத்துவைப்ப தானால், எத்தனையோ வண்டிப் பாரங்கள் இருக்கும். தமிழ், வடமொழி, கிரீக்கு, லத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி முதலிய மொழிகளிலெல்லாம், இச்சுவை பற்றிப் புத்தகங்கள் உள்ளன. பண்டைக்காலத்து ஆசிரியர்களும், இடைக் காலத்து ஆசிரியர்களும், தற்காலத்து, ஆசிரியர்களும், எழுதியிருக் கிறார்கள்; ஆண் பெண் இருபாலாரும் இதுபற்றி எழுதுவதில் போட்டியிட்டிருக்கிறார்கள். பற்பல துறைகளிலும் வல்லவர்கள் இச்சுவையை ஆராய்ந்திருக்கிறார்கள். தத்துவ நூல், உள நூல், பிரகிருதி நூல், உடல்நூல், சமுதாயநூல், இலக்கியங்கள் முதலியவற்றில் வல்ல பல அறிஞர்களும் இச்சுவையின் மர்மத் தைத் துருவித் துருவி விசாரணை செய்திருக்கிறார்கள். சில பேரறிஞர்களது பெயர்களைக் கேட்டமாத்திரையில் நமக்கு வியப்பு உண்டாகும். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், டார்வின், ஷோப்பென்ஹாயெகர், காண்ட், பெர்க்ஸன், பவ்ரூயிட், ஹாஸ்லிட் முதலியோர் அப்பேரறிஞர்களுள் ஒரு சிலர். நமது நாட்டிலேயும் தொல்காப்பியம் நகை முதலிய சுவைகளைப் பற்றிக் கூறியுள்ளது. வடமொழியில் பல நூல்கள் இதைப் பற்றித் தோன்றியுள்ளன. நெடுங்காலமாகப் பற்பல தேசங்களில் பற்பல பேரறிஞர்களும் ஆராய்ச்சி செய்தபோதிலும், நகைப்பு இவ் அனைவரது முயற்சியையும் பார்த்து நகைப்பதாகவே தோன்று

*Human culture is a thing in itself, with its own laws & principles. The dominant factor is the human mind with its needs and desires-Perry : Growth of civilisation, p. 142.

கிறது; ஆனால், இவ்வனைவரும் நகைப்பு உளநூற்குரிய பொருளெனக்கொண்டு விசாரணை செய்திருக்கிறார்கள். ஆகவே உளவியல்பு அல்லது பண்பாடுபற்றியது நகைச்சுவை என்பது விளங்குகிறதல்லவா? இவர்கள் ஆராய்ச்சியின் போக்கும் இம்முடிபினையே வற்புறுத்துகிறது. நகைப்பின் உற்பத்தியாது? எவ்வகையான நிலைமைகளில் இது தோன்றுகிறது? தோன்றும்போது நிகழும் மன நிலைகள் யாவை? இதற்கும் புன்னகைக்கும் தொடர்பு உண்டா? இந்நகைப்பின் விளைவு யாது? இதனை எவ்வகையிற் பயன்படுத்தல் வேண்டும்? என்பன போன்ற கேள்விகளே விசாரணைக்குரிய பொருள்களாக அமைந்து வந்திருக்கின்றன. இந்த விசாரணை நமக்கு வேண்டாம். இதனைப் போன்றே பண்பாட்டிற்கும் நகைச்சுவைக்குமுள்ள தொடர்பின் இயல்புகள் முதலியவை பற்றிய ஆராய்ச்சியும் நாம் இங்கே மேற்கொள்ள வேண்டாம். நகைப்புக் குறித்துத் தொடங்கி அழுகையாய் முடியக் கூடாதல்லவா? உளநூல் ஆசிரியனும், சமுதாய நூல் ஆசிரியனும், சொற்போர் புரிந்து, இவ் இயல்புகளைத் தீர்மானித்துக் கொள்க என விட்டுவிடுவோம். இங்கே, மனநிலை காரணமாக, பொதுமுறையாலும், இலக்கியத்தாலும் புலனாகும் நகைச் சுவையை மட்டும் நோக்குவோம்.

மிக எளிதான மனநிலையை எங்கே காணலாம்? குழந்தைகளிடத்தேதான் காணக்கூடும். வயது வந்தவர்களாகிய நம் கண் முன்னே கிலுகிலுப்பையை ஆட்டி ஒலிக்கச் செய்தால் நாம் சிரிக்க மாட்டோம். தொட்டிலிற் கிடக்கும் சிறு குழந்தை அந்த ஒலியைக் கேட்டால் கலகலவென்று சிரிக்கத் தொடங்கிவிடும். ஒலியில் நகைப்புக்கு இடமானது ஒன்றுமில்லை. அதைக் கேட்கும் குழந்தையின் மனநிலையின் காரணமாக, அதற்குச் சிரிப்பு உண்டாகிறது.

இந்தக் குழந்தையின் மனநிலையோடு ஒத்த மனநிலையுடையவர்கள் பைத்தியக்காரர்களும், குடிகாரர்களும். இவர்கள் செய்யும் காரியங்களும் சொல்லும் வார்த்தைகளும் நகைப்பு விளைவிக்கக் கூடியனவாகவே இருக்கும். கள்ளுண்டார் செய்யும் வினோதச் செயல்களை உண்டாட்டுப் படலத்திற் கம்பன் நகைச்சுவை ததும்ப விவரித்திருக்கிறான். பின்வரும் செய்யுளை நோக்குங்கள் :

அழிகின்ற அறிவி னாலோ பேதைமை
யாலோ ஆற்றிற்
சுழியொன்றி நின்ற தன்ன உந்தியாள்
தூய செந்தேன்
பொழிகின்ற பூவின் வேய்ந்த பந்தரைப்
புரைத்துக் கீழ்வந்து
இழிகின்ற கொழுநி லாவை நறவென
வள்ளத் தேற்றாள். (உண்டாட்டுப். 15)

குழந்தைகளுக்கு வயது அதிகப்பட அதிகப்பட, அவர்கள் மனநிலையும் அபிவிருத்தி யடைந்து வருகிறது. அபிவிருத்திக்குத் தக்கபடி அவர்களால் விளையும் நகைச்சுவைக்குரிய சொற்களும் செயல்களும் வேறுபடுகின்றன. ஐந்து வயதுப் பையன் ஒருவன் தன் தகப்பனாரைப் பார்த்து, 'நான் பாட்டியைக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேன்' என்கிறான். 'என் அம்மாவை நீ கலியாணம் பண்ணிக்கொள்ள முடியாது' என்று தகப்பன் சொல்ல, 'என் அம்மாவை நீ எப்படிக் கல்யாணம் பண்ணிக் கொண்டாய்? அதுபோல நானும் உன் அம்மாவைச் செய்து கொள்வேன்' என்று பதில் சொல்லுகிறான்.

வயதும் சிறிது அதிகமாகிக் குறும்புத்தனமும் உள்ள சிறுவர்கள் காட்டும் நகைச்சுவை தனி வகையைச் சார்ந்தது. ஊருக்குப் புதியரான ஒரு சந்நியாசி தபாலாபீசுக்குப் போகும் வழியைப் பற்றி ஒரு பையனிடம் கேட்டார். அவன் வழியைக் காட்டிவிட்டு, 'தாங்கள் ஊருக்குப் புதிது போலிருக்கிறதே. தாங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டான். அவர் மோட்சத்திற்குப் போம்வழியை ஜனங்களுக்கு உபதேசிக்கிறேன்' என்று கௌரவமாய்ப் பதில் சொன்னார். 'தபாலாபீசுக்குப் போக வழி தெரியாதவர் மோட்சத்திற்கு வழி சொல்லிக் கொடுக்கிறாராம்!' என்று அந்தப் பையன் சிரித்தான்.

நல்ல பையன்களைப் போன்ற மனப்பான்மையுடையவர்கள் உபாத்தியாயர்கள் எனக் கருதப்படுகிறார்கள். இம் மனப்பான்மைக்குப் பல காரணங்கள் உண்டு. தாம் மேற்கொண்ட ஒரு துறையிலேயே எப்பொழுதும் உழைத்து வருபவர்கள்: அதிகமாய் உலக-அனுபவம் இல்லாதவர்கள்: அன்றியும் தமது துறையி லன்றிப் பிறவற்றில் மிக்க மறதியுள்ளவர்கள். குழந்தை யுள்ளங்

களோடு மிகவும் பழகுபவர்கள். ஆகவே, உபாத்தியாயர் விளைக்கும் நகைச்சுவை மிகவும் ருசிகரமாயிருக்கும். கமலாம்பாள் சரித்திரத்தில் வரும் 'அண்டர் புகழும் ஆடுசாபட்டி அஷ்டாவதானம் அம்மையப்ப பிள்ளை' என்ற பெரும் பட்டம் தாங்கிய தமிழாசிரியரை நினைக்குந்தோறும் நமக்கு அடக்க முடியாத நகைப்பு வருகிறதல்லவா?

மேதாவிகள்

ஒரு துறையில் மனம் ஊன்றி உழைத்து வருபவர்கள் எவ்வளவு பெரிய மேதாவிகளானாலும் நகைப்பிற்கு இடமான சொற் செயல்களைச் செய்து விடுகிறார்கள். நியூட்டனைப் பற்றிக் கேள்வியுற்றிருப்பீர்கள். அவர் கணிதத்தில் மேதாவி. அவர் வீட்டில் வளர்ந்து வந்த முயல்களுக்கு ஒரு கூடு தயாரிக்கும் படி ஒரு தச்சனிடம் ஏற்பாடு செய்திருந்தார். தச்சன் ஒரு மரக்கூடு செய்து அதற்கு ஒரு வாசல் மட்டும் வைத்து அவரிடம் காட்டினார். அவர் 'ஒரு வாசல் வைத்திருக்கிறாயே! இதன் வழியாகப் பெரிய முயல் போய் வரலாம்; சிறிய முயல்கள் போய் வருவதற்கு வழியில்லையே என்றாராம்! இது நியூட்டனுடைய மனநிலையிலிருந்து விளையக் கூடும் அரிய நகைச்சுவை யல்லவா?

அறிவுவன்மையும் திண்ணிய மனநிலையும் உடையவர்கள் பலவேறு நோக்கத்துடன் வேண்டுமென்றே நகைச்சுவையை விளைவிப்பது உண்டு வெறுக்கத்தக்க செயல்கள் அல்லது வழக்கங்களை ஒழிப்பதற்கு இகழ்ந்து நகைப்பதைக் காட்டிலும் சிறந்த உபாயம் கிடையாது. சமுதாயங்கள் சீர்திருந்தும் உபாயங்களுள் இவ்வகை நகைச்சுவையும் ஒன்றாகும். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை இயற்றிய **நாஞ்சினாட்டு மருமக்கள்வழி மான்மியம்** இந் நகைச் சுவைக்குச் சிறந்த உதாரணமாகும். மேனாட்டு ஆசிரியருள் டிக்கன்ஸ் என்பவரது நவீனங்களை உதாரணமாகச் சொல்லலாம்.

தொல்காப்பியர் கூற்று

இவ்வாறாக, மனப்பண்பினால் அல்லது மனநிலையால் விளையும் நகைச்சுவைகள் எத்தனையோ உள்ளன. இவற்றை யெல்லாம் தொகுத்துத் தொல்காப்பியர்,

எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான்கு என்ப
(மெய்ப்பாட். 4)

என்று கூறினார். எள்ளல் என்பது இகழ்ச்சி: பேதைமை என்பது கேட்டதை ஊன்றியுணராது மெய்யாகக்கொள்ளும் மன நிலை. மடமையென்பது பொருள் தெரியாதபடி மயங்கி யறியும் மனநிலை. இவ்விரண்டு மனநிலைகளும் இகழ்ச்சி செய்யும் மனநிலையும் இளமையிலுள்ள மனநிலையும் நகைச் சுவையை விளைவிக்கும் நான்கு காரணங்கள் என்பர் என்பது இதன் பொருள்.

தொல்காப்பியர் கூறாதது

தொல்காப்பியர் கூறாத ஒரு பொருளையும் குறிக்க வேண்டும். நகைப்பிற்கும் அழுகைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நகைப்பு மிகுதியாய் எல்லை கடந்து நிகழுகிற இடத்தில் கண்களில் நீர்த்துளிகள் தோன்றுவது சாதாரணமாகக் காண்பதே. இவ்வாறே பெருந்துன்பத்தின் இறுதியிலே மனமுடைந்து அதன் உள்ளிருந்து பீறியெழுந்து சிரிப்புத் தோன்றுவதும் நாம் அருகிக் காண்பதே. இந்திரசித்து விடுத்த பிரமாஸ்திரத்தால் இலக்குமணன் முதலியோர் மயங்கி விழுந்த செய்தி தெரிந்து இராமன் போர்க்களம் சென்று புலம்பி மயங்கி விழுகிறான். இராமனும் பட்டழிந்தான் என்று தவறாக உணர்ந்து சீதையை விமானத்தில் ஏற்றி வந்து இராமன் முதலியோரை அரக்கர் காட்டுகின்றனர். கற்புத் தெய்வமாகிய சீதை நினைப்பும் உயிர்ப்பும் நீத்தாள்; தண்ணீர் அருவி போல் பாய்ந்தது! நிலத்தில் விழுந்து புரண்டாள்! உடல் முழுதும் வியர்த்தாள்; வெதும்பினாள்; எழுந்தாள்; மலர்க்கரம் நெரிந்தாள்; சிரித்தாள்; ஏங்கினாள்; பின்பு புலம்பி அழுதாள். சீதையின் வார்த்தைகள் கல்லையும் உருக்குந் தன்மையன; சோகத்தின் பேரெல்லையைக் காட்டக் கூடியன. இங்கே 'சிரித்தாள்' என்றது இயற்கைக்கு எவ்வளவு பொருந்தும்?

சில சமயங்களில், எங்கே நகைப்பு முடிகிறது. எங்கே அழுகை தொடங்குகிறது என்று வரையறுத்துச் சொல்ல முடியாத படி இரண்டும் கலந்திருப்பதும் உண்டு. ஒரே வெளிக்காரணம் பற்றி நகைப்பும் அழுகையும் ஒருவனுக்கே உண்டாகக்கூடு மானால் அவன் மனநிலையில் ஏதோ விகற்பமிருக்க வேண்டும் என்று நாம் ஊகிக்கலாம்.

மேற்கூறியவாறெல்லாம் தோன்றி நிகழும் நகைப்பை மனப் பண்பினால் விளையும் நகைச்சுவை யென்று சொல்லுதல் பொருத்தமில்லையா? மனப்பண்பு என்பது என்ன? பற்பல காலங் களிலும் நிகழும் மனநிலைகளின் பொதுவிளைவாகிய மன அமைப்புத்தானே?

நகைப்பு நற்குடிபிறப்போடு ஒத்ததன்று எனச் செஸ்டர் பீல்டு பிரபு தமது குமாரர்க்கு அறிவுரை புகட்டியிருக்கிறார். நம்மவர்களிலும் இவ்வாறு கூறியவர்கள் உள்ளார்கள். காரியாசான்,

நகையொடு மந்திரம் நட்டார்க்கு வாரம்
பகையொடு பாட்டுரையென் றைந்தும்—தொகையொடு
மூத்தார் இருந்துழி வேண்டார் முதுநூலுள்
யாத்தார் அறிவினர் ஆய்ந்து
(சிறுபஞ். 85)

என்று சான்றோர் ஆசாரத்தை மொழிந்தனர்.

ஆனால், பெரும்பாலும் உடலின் நலத்திற்கும் மனத்தின் நலத்திற்கும் மனத்தின் எழுச்சிக்கும் நகைப்பு ஓர் அறிகுறியாகும் என்றுதான் நகைச்சுவையை ஆராய்ந்த மேனாட்டு அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த ஆராய்ச்சி முடிவை கொண்டு விடுவோம். உயிரினங்களுள் மனிதன் மட்டுமே நகைத்து மகிழக் கூடியவன் என்று ஹாஸ்லிட் கூறுகிறார். மனித இனத்திற்குப் பிறப்புரிமையான அந்த இயல்பைக் கைவிட்டுவிடாமல் நாம் அனைவரும் நகைக்கத் தக்கனவற்றைக் கண்டுங் கேட்டும் உளம் நிரம்ப, உடல் குலுங்க நகைத்து மகிழுவோமாக.

9. கலிங்கத்துப்பரணியில் நகைச்சுவை

செயங்கொண்டார் மனத்திட்பம்

பேய் என்றால் எல்லாரும் பயப்படுவார்கள். அப்பேய்களைக் குடும்பம் குடும்பமாக வரவழைத்து அவைகளைக் கேலி செய்வதற்கு எவ்வளவு மனத்திட்பம் வேண்டும், பாருங்கள். அத்தகைய மனத்திட்பம் படைத்தவர் செயங்கொண்டார் என்ற புலவர். இவர் வாழ்ந்த காலம் பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதி; சுமார் 850 ஆண்டுகளுக்கு முன், முதற் குலோத்துங்க சோழனது ஆஸ்தான கவிஞராக விளங்கினார். தமது புலமைச் சிறப்பினால் கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டமும் பெற்றார்.

இவரது பெரும் புலமைக்கு அறிகுறியாக இன்று விளங்குவது கலிங்கத்துப்பரணி என்ற ஒரு நூலேயாம். பரணியென்பது 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. சிலப்பதிகாரம் முதலிய பஞ்ச காவியங்கள் தோன்றிய காலத்தின் இறுதியில், பிற்காலச் சோழ வம்சமும் அரசு புரியத் தொடங்கிற்று என்னலாம். இக்காலத்துக்குச் சுமார் 200 ஆண்டுகட்கு முன்னர், பிரபந்தங்கள் தோன்றலாயின என்றும் நாம் கருதலாம். இவற்றுள் முற்படத் தோன்றியவை ஒருசில தெய்வங்களைப் பற்றியனவாகவே இருந்தன. சம்பந்தரது திருவெழுகூற்றிருக்கை, திருமங்கை மன்னரது பெரிய திருமடல், சிறிய திருமடல் முதலியன உதாரணங்களாம். பிரபந்த வகைகளும் வரவர மிகுதியாய் அபிவிருத்தியடைந்தன. இப்பிரபந்தங்களை உட்படுத்திப் பாட்டியல் நூல்கள் தோன்றத் தொடங்கின. வெண்பாப் பாட்டியலில் ஐம்பத்தாறு வகைப் பிரபந்தங்களும், பன்னிரு பாட்டியலில் அறுபத்தைந்து பிரபந்தங்களும், பிரபந்த மரபியலில் அறுபத்தாறு பிரபந்தங்களும் காணப்படுகின்றன.

இவற்றில் ஒரு சில, தெய்வங்களைப் பற்றியன என்றேன். சில, அரசர் முதலியோரைப் பற்றியன. இன்னுஞ் சில, பள்ளர்,

---

இதன் சுருக்கம் 20-7-53-இல் திருவனந்தபுரம் ரேடியோ நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது.

குறவர் முதலியோரது சமுதாய வாழ்க்கையைப் பின்பற்றியன. ஆனால், இவ்வகையிலும் திருமால், சிவன் முதலிய தெய்வங்களின் சிறப்புக்களும் இடையிடையே காணப்படும். அரசர்களைப் பற்றிய பிரபந்தங்களில், அவர்களது ஆட்சித் திறம், கொடை முதலிய சிறப்பியல்கள் பலபடப் பாராட்டப் பெற்றிருக்கும். வீரஞ் சார்ந்த போர் வெற்றியும் அரசர்களுக்கே உரியன. இவ்வகை வெற்றியைப் பற்றிக் கூறும் பிரபந்தமொன்றற்குப் பரணியென்று பெயர். அரசர்களுக்கே உரிய இப்பிரபந்த வகையைப் பிற்காலத்தார் தெங்வங்கட்கும் உரியவாக்கி, புராணங்களிற் காணும் அவர்களது வெற்றி குறித்தும் பாடி வந்துள்ளனர். தக்கயாகப் பரணி, இரணிய வதைப் பரணி முதலியன உதாரணங்களாம். இவ்வர்க்கத்தோடு அமையாது தத்துவப் பொருள்களை யெடுத்துக்கொண்டு, அவை தம்மில் போர் நிகழ்ந்ததாகக் கற்பித்து, அதன்கண் நேரிடும் வெற்றியையும் குறித்து மிகப் பிற்பட்டகாலத்தார் பரணிப் பிரபந்தம் இயற்றியுள்ளனர். உதாரணமாக, தத்துவராய் சுவாமிகள் இயற்றிய அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி முதலியவற்றைக் கூறலாம். எல்லாப் பரணிகளிலும் கலிங்கத்துப் பரணியே மிக்க சிறப்பு வாய்ந்தது. இதற்கு,

பரணிக்கோர் செயங் கொண்டான்

என்ற செய்யுட் பகுதி சான்று.

வெற்றிச் சிறப்பைப் பாடுவது

பரணி, போர்க்களத்தில் யானைப் படையை அழித்து வென்ற ஓர் அரசனது வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்து பாடுவது. பிரபந்த வகைகளை விவரித்துக் கூறும் பாட்டியல் நூல்களில் முதன் முதலில் தோன்றியது வெண்பாப் பாட்டியல். இது இத்தனை யானையைப் பரணித் தலைவன் அழிக்க வேண்டுமென்று குறிக்கவில்லை. பின் தோன்றிய பன்னிரு பாட்டியல் 900 யானைகளை அவன் கொன்றிருக்க வேண்டுமெனத் திட்டப் படுத்தியது. சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இலக்கண விளக்கப் பாட்டியல் அவன் கொன்றழித்த யானைகள் 1000 ஆதல் வேண்டுமெனக் கணக்கிட்டுள்ளது.

பரணியைப் பாடும் முறை

பரணியைப் பாடு முறை அறிதற்குரியது. மூதிர் பெண்டிர் பலர் பரணி நாளன்று நாட்காலையில் நீராடி உலர்ந்த வஸ்திர

மணிந்து தம்மை அலங்கரித்துக்கொண்டு, வீடுதோறுஞ் சென்று ஆங்காங்குள்ள மகளிரைத் துயிலுணர்த்தி, தாம் காளி கோயிலின் முற்றத்திலே ஆவேசமுற்று. குரவைக் கூத்தாடிப் பாடும் பரணிப் பாட்டைக் கேட்டு மகிழுமாறு வாயிலைத் திறந்து வரும்படி அழைப்பர். அவர்கள் முன்னிலையில் பாடியாடுவதாகப் பரணிப் பிரபந்தத்தை இயற்றுதல் மரபு. இங்ஙனம் பாடியாடுதல் உண்டென்பது பரணிகளில் வரும் வள்ளைப் பாட்டுக்களாலும் (கலிங்க. 514 - 531) அறிந்துகொள்ளலாம். இம் மரபினை,

காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை
புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து
துணங்கையர் குரவையர் அணங்கெழுந் தாடிப்
பெருநில மன்னன் இருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி

(சிலம். 5, 67-73)

எனச் சிலப்பதிகாரமும்

புறநடஞ் சேர்குர வைப்பொருள்
　　மேலிங் கிருவர் மன்னர்
திறனுளும் யானைப் படைசெற்று
　　வென்ற வொருவன் செய்கை
நெறிபடு நேரடி யேமுதல்
　　நீண்டன ஈரடியாய்ப்
பெறுவன தாழிசை யாற்பர
　　ணிப்பெயர் பேசுவரே

என நவநீதப் பாட்டியலும் உணர்த்தும். இதனாலேயே கடைதிறப்பு இவ்வகைப் பிரபந்தங்களில் முற்பட வைக்கப்பட்டுள்ளது. இறுதியில் பரணிக்கூழ் அட்டு உண்டு மகிழ்தல் வழக்கம். நச்சினார்க்கினியரும், (தொல். செய். 149) 'பரணியாவது காடுகெழு செல்விக்குப் பரணிநாட் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப் பற்றியது. அது பாட்டுடைத் தலைவனைப் பெய்து கூறலிற் புறத்திணை பலவும் விராயிற்று' என்றெழுதியமையும் அறியத்தக்கது, பரணிக்கூழ் அடுதல் மரபு என்பது,

கிடைக்கப் பொருது மணலூரில்
கீழ்நா ளட்ட பரணிக்கூழ்
படைத்துப் பயின்ற மடைப்பேய்கள்
பந்தி தோறும் வாரீரே

என்ற பரணிச் செய்யுளாலும் விளங்கும்.

போர்க்கள வெற்றியைக் குறித்து வரும் பிரபந்தங்கள் மூன்றாகும். அவை செருக்களவஞ்சி, களவழி, பரணி என்பன. செருக்களவஞ்சியில் மனிதருடலையும், யானை முதலியவற்றி னுடலையும், பேய், கழுகு முதலியவும் தின்று களித்து ஆரவாரஞ் செய்ய, பூதமும் பேயும் பாடியாடும் போர்க்களத்தைப் பாடுவது. களவழியில் வதையுண்ட வீரர்களின் உடலுறுப்புக்களும், யானை முதலியவற்றின் உடலுறுப்புக்களும், சிதறுண்டு கிடக்கும் தோற்றத்தை உவமம் முதலியவற்றால் வர்ணித்துப் பாடுவது. இரண்டும் சரித நயமற்ற சிறு பிரபந்த வகைகள், பொருணயமும் சிறந்து விளங்குதற்கு இவற்றில் இடமில்லை. கவிஞனது கவித்துவச் சிறப்பு முழுதும் நன்கு வெளியாதற்கு இவை இடந் தரமாட்டா. ஆனால், பரணி அங்ஙனமன்று. சரித நயம் பொருணய முதலியவை நன்கு தோன்ற இயற்றப்படுவது. கவித்துவத் திறம் முழுமையும் விளங்குவதற்கு இடந்தருவது. எனவே, பிரபந்த வகைகளில் முன்னை யிரண்டினும் இப் பரணி சிறந்ததாகும்.

சரிதநயம்

என்னவகையான சரிதநயம் என்று நாம் அறிதல் வேண்டும். முதலாவது பாட்டுடைத் தலைவனைப் பற்றியது. முதற் குலோத்துங்கன் சோழ அரசர்களுள் பெரும்புகழ் பெற்றவன். சக்கரக்கோட்ட முதலிய வட நாட்டுப் பிரதேசங்களையும் பாண்டி நாடு, சேர நாடு என்ற தென்தேசங்களையும் வென்று தன் அடிக்கீழ்ப் படுத்தினான். மனுநீதி வழுவாது காத்தான். வரையாது கொடுக்கும் வள்ளன்மையில் மேம்பட்டவன். கவிதை முதலிய கலைகளையும் கவிஞர்களையும் போற்றி வந்தான்,

பரிசில் சுமந்தனர் கவிஞர் ;
பகடு சுமந்தன திறைகள் ;
அரசர் சுமந்தனர் கழல்கள் ;
அவனி சுமந்தன புயமும்

தனக்குப் பகைவரும் போரும் இல்லாமையினாலே

வருசெருவொன் றின்மையால் மற்போரும்
சொற்போரும் வாதப் போரும்
இருசிறைவா ரணப்போரும் இகல்மதவா
ரணப்போரும் இளைய கண்டே
கலையினொடுங் கவிவாணர் கவியினொடும்
இசையினொடுங் காதல் மாதர்
முலையினொடு மனுநீதி முறையினொடு
மறையினொடும் பொழுது போக்கி

வாழ்ந்து வந்தான். ஒருநாள் பாலாற்றின் கரையிலே பரிவேட்டையின் பொருட்டு வடக்கே செல்லக் கருதினன். யானை மீது ஆரோகணித்து, அரசியர் மருங்கு வர மந்திரி தந்திரிகள் புடைசூழ, நால்வகைப் படைகளும் உடன்வரச் செல்லலாயினன். வழியில் தில்லைநகர், திருவதிகை முதலிய ஸ்தலங்களில் தங்கிப் பின்பு கச்சிமா நகரை யடைந்தனன். இந் நகரிலே தென்மேற்கிலுள்ள சித்திர மண்டபத்திலே

மண்ட லீகரும் மாநில வேந்தரும்
வந்துணங்கு கடைத்தலை வண்டைமன்
தொண்டை மான்முதல் மந்திர பாரகர்
சூழ்ந்து தன்கழன் சூடி யிருக்கவே

கொலுவீற்றிருந்தனன். அப்பொழுது திருமந்திரவோலையாள் அரசனை வணங்கி, திறைசெலுத்திக் காட்சி பெறுதற்குப் பல மன்னர்களும் திருவாயிலில் காத்திருக்கின்றனர் எனத் தெரிவித்தனன். திறைப்பொருள்களை யெல்லாம் அரசன் கண்டருளி, திறைசெலுத்தாதார் யாரேனும் உளரோ என்று கேட்க, வடகலிங்கத்து மன்னன் இருமுறையாகத் திறை செலுத்தவில்லையென்று அறிந்தான். அரசன் பெருங் கோபங்கொண்டு விரைவிற் படையெடுத்துச் சென்று அவனுடைய கோட்டைகளை யெல்லாம் அழித்து, அவனையும் சிறைபிடித்து வாருங்கள் என்று பணித்தனர். உடனே வண்டைமன்னனாகிய கருணாகரத் தொண்டைமான் தான் சென்று பொருது பகையை அழித்து மீளுதற்கு உத்தரவு வேண்ட, அவனுக்கு விடையளிக்கப்பட்டது. அவ்வாறே இளவரசாகிய விக்கிரம சோழனுடனும் வாண கோவரையன், முடிகொண்டசோழ மூவேந்தவேள் என்ற இரண்டு உபசேனாதிபதிகளுடனும் படையெடுத்துச் சென்றனன். பாலாறு (இது முற்காலத்தே காஞ்சி நகர்க்கு வடக்காக

ஓடிக்கொண்டிருந்தது). பொன்முகரி, கொள்ளியாறு, பெண்ணையாறு, கோதாவரி, பம்பாநதி, கோதமை முதலிய வற்றை யெல்லாம் கடந்து சென்று, பெரியதொரு கடல் போல் சோழ சைனியம் பரந்துசென்று கலிங்கதேசத்தை அடைந்தது. கலிங்க அரசனாகிய அனந்தபன்மன், மந்திரியர் தடுக்கவும் பொருட்படுத்தாது. போருக்கு எதிரூன்றி நின்றனன். இரு சேனைகளுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. கலிங்க சேனை முற்றும் அழிவுற்றது. புறகிட்டு ஓடி ஒரு குன்றில் ஒளிந்திருந்த அனந்தபன்மனைச் சிறைபிடித்ததாகத் தெரியவில்லை. ஆனால் கலிங்க நாட்டை அழித்து ஜயஸ்தம்பம் நாட்டி யானை குதிரை களுடனும் நவநிதிக்குவையுடனும் மகளிருடனும் கருணாகரன் மீண்டுவந்து தன் அரசனாகிய அபயன் அடியைத் தலைமிசைச் சூடினன். இப் போர்க்களம்

தேவாசுர ராமாயண மாபாரத முளவென்று
ஓவாவுரை ஓயும்படி உளதப்பொரு களமே

என்று கூறப்படுகிறது.

முதல் குலோத்துங்கனது கலிங்கப் போர் வரலாறு இங்ஙன முள்ளது. இவன் எத்தகைய அரசர் பரம்பரையில் தோன்றியவன்? இச் சரிதத்தை இராச பாரம்பரியம் என்னும் பகுதியிற் காணலாம். அக்காலத்து வழக்கத்தை அனுசரித்து, திருமால் முதல் குலோத்துங்கன் ஈறாகவுள்ள பரம்பரை கொடுக்கப் பட்டுள்ளது. இங்ஙனம் குலமுறைப் பெருமையைச் சொற் சீரடியார் கிளத்துதல் 'மெய்க்கீர்த்தி' எனப்படும். அபயன் முன்னோர்களில் 'பௌராணிக புருஷர்களாகிய மனு, இக்குவாகு, மாந்தாதா, முசுகுந்தன், சிபி, சுராதிராசன் முதலியோர் காணப்படுகின்றனர். மனு பசுவின் பொருட்டு மகனை முறை செய்தவன் எனக் குறிக்கப்படுகிறான். சுராதி ராசன் சோழமண்டலம் அமைத்தவன், இவனுக்குப் பின் சரித்திர புருஷர்கள் கூறப்படுகிறார்கள். இவர்கள் முறையே இராஜகேசரி பரகேசரியென்ற பெயர்களை மாறிமாறிச் சூட்டிக்கொண்டு அரசாண்டு வந்தனர்.

இராச கேசரி புரந்து பரகேசரி களாம்
இருவ ராணைபுலி யாணையென நின்ற புகழும்

என்பது பரணிச் செய்யுள். இச் சரித்திர புருஷர்களுக்கு முன், கற்பித புருஷர்கள் ஒரு சிலர் கூறப்படுகின்றனர், காலனோடு

வழக்குரைத்த கிள்ளிவளவன், காவிரி நீர் கொணர்ந்த சித்திரதன்வன், நமனை வென்ற சுரகுரு, இந்திரனையே புலியாகத் தனது கொடியிற் கொண்ட வியாக்கிரகேது, வரதராசனைப் பணி கொண்டவன். தூங்கெயி லெறிந்த தொடித்தோட்செம்பியன், பாரதப் போரில் பாண்டியர் படைக்கு உணவளித்தவன். பிலத்துவாரத்தின் வழியாகச் சென்று நாக கன்னியை மணந்தவன் முதலியோர் இவ்வகையினர். இவர் களுக்குப் பின்னர், களவழிக் கவிதை கேட்டுச் சேரனைச் சிறைவீடு செய்த சோழன் செங்கணான் 'முகரி'யைப் படத் தெழுதி அவன் கண்ணை அழித்த கரிகாலன், பட்டினப்பாலை கொண்டவன். ஈழமுங் கூடலும் வென்ற முதற் பராந்தகன். சேர நாட்டில் சதயநாள் விழா வைத்த முதல் இராசராசன். கங்கையும் கடாரமுங் கொண்ட முதல் இராசேந்திரன். கம்பிலிச் சயத்தம்பம் நாட்டிய இராசாதித்தன். கொப்பப் போர் வென்ற இரண்டாம் இராசேந்திரன். மனுநெறி புதுக்கிய இராச மகேந்திரன் என்ற அரசர்கள் அரசு புரிந்தனர். அபயனாகிய முதற் குலோத்துங்கன் குந்தளரைக் கூடற் சங்கமத்து வென்ற வரலாறு முடிய நாம் இங்கே அறிகின்றோம். பாண்டியனையும் சேரனையும் இவன் வென்று அடிப்படுத்தியது பிறிதோரிடத்துக் கூறப்படுகின்றது.

குலோத்துங்கன் கலிங்க வெற்றி

இம் முதற் குலோத்துங்கனது கலிங்க வெற்றியைப் பற்றியதே கலிங்கத்துப் பரணி. 'பரணியாவது காடுகெழு செல்விக்கு (அதாவது காளிதேவிக்கு) பரணிநாட் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப் பற்றியது. அது பாட்டுடைத் தலைவனைப் பெய்து கூறலிற் புறத்திணை பலவும் விராயிற்று' என்று நச்சினார்க்கினியர் விளக்கியமை மேலே குறிக்கப் பட்டது. காளிதேவி பகைவரைப் புறங்காட்டி யோடச் செய்வள் என்றும், வஞ்சிகுடி வேந்தன் படையெடுத்துச் செல்லும்போது இத் தேவியும் பூதகணங்களோடு அவன் முன்னர் எழுந்தருளுவள் என்றும், பூதங்களும் நெற்பொரி, அவரை, துவரை, மாமிசம், குடர், உதிரம் முதலிய நிரப்பிய அகன்ற பாத்திரங்களைக் கையிலேந்திச் செல்லும் என்றும் வெண்பாமாலையால் அறிகின்றோம்.

நீடோளான் வென்றி கொள்கென
நிறைமண்டை வலனுயரிக்
கூடாரைப் புறங் காணும்
கொற்றவைநிலை யுரைத்தன்று

என்ற 40-இல் கொளுவும்

ஆளி மணிக்கொடிப் பைங்கிளி பாய்க்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை—மீளி
அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும்,

அணங்குடை நோலை பொரிபுழுக்கல் பிண்டி
நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துக்—கணம்புகலக்
கையிரிய மண்டைக் கணமோடி காவலற்கு
மொய்யிரியத் தான்முந் துறும்

என்ற வெண்பாக்களும் இங்கே அறியத்தக்கன.

களப்பலி யூட்டுதல்

போர்த் தொடக்கத்தின் முன்னர் நிகழ்த்தும் களப்பலி யூட்டுதலும் காளிதேவிக்கே என்பது மரபு.

மெய்வரு காளி முன்னர்
மெய்யுறுப் பனைத்தும் வீரன்
கொய்வரு நிலையிற் கொய்து
கொடுத்தனன் என்ப மன்னோ

என்றார் வில்லிபுத்தூரர். பாரத வெண்பாவிலும் (453)

தொல்லரச ரீண்டப்போய்ச் சோரிப் புனல்சிந்தி
எல்லையில்சீர் மாகாளிக் கேய்தொழிலார்

எனக் கூறுகின்றது. இதன் உரைப் பகுதியில்

வீரஸ்திரீக்குத் துரியோதனனையும்......பலியாக உதகம் பண்ணி அலகைக்கும்} பக்ஷிசாதிகளுக்கும் சுரோணிதமும் மாங்கிசமும் தானம் பண்ணி

என வருகின்றது. இது ''கொற்றவை'' நிலை என்று கூறப் படும். காளிதேவியைத்தான் நம் நூல்கள் காடுகிழவோள்,

கொற்றவை, துர்க்கை யெனப் பல பெயர்களால் உணர்த்து கின்றன. பரணி யானைபிறந்த நாள்: அதனால் வேந்தன் மத்தகஜம் போல் பகைவனை மதியாது படையெடுத்துச் செல்லுவான் (சீவக சிந். 1813, உரை). யமனை அதிதேவதை யாக உடைய நாள்: அதனால் பகைவனுக்கு நாசம் விளைவது உறுதி, காளிதேவிக்கு உகந்த நாள்: இக் காரணத்தால் இந் நாளுக்கு 'காடுகிழவோள்' என அவளது பெயரையே இட்டு வழங்குவர்.

> காடு கிழவோள் பூதம் அடுப்பே
> தாழி பெருஞ்சோறு தருமனாள் மோதமெனப்
> பாகு பட்டது பரணிநாட் பெயரே

என்று திவாகரம் கூறிற்று. (தருமன் - யமன். போதம் - யானை.) எனவே காளியையும் அவளது பேய்க்கணங்களையும் தமது பரணியின் கட்டுக்கோப்பிலேயே செயங்கொண்டார் அமைத்து விட்டனர்.

காளி தேவி கொலுவீற்றிருக்கை

காட்டிலே அமைக்கப் பெற்ற புதுக் கோயிலிலே பேய்கள் சூழக் காளிதேவி கொலு வீற்றிருக்கின்றாள். காடு அபயனது கோபக்கனலால் வெள்ளாறும் கோட்டாறும் புகையால் மூட வெந்த வனத்தை நினைப்பூட்டுகிறது. அவளது கோயிலின் கருவில் போரில் உயிரிழந்த அரசருடைய பட்டமகிஷி களின் ஆபரணத்திலுள்ள மணிகளே இடப்பெற்றன. பகை வீரர்களது நிணத்தை உதிரம் விட்டுக் குழைத்து அவர்கள் கருந்தலைகளைச் செங்கலாக அடுக்கியதே சுவர். இங்ஙனமே கோயிலின் தூண், உத்திரம், மட்டப்பா, நாசிகை, கவிப்பு, கோபுரம், நெடுமதில், மகரதோரணம், மாலை முதலிய பல வகைத் தூக்குகள், விளக்குகள் முதலிய எல்லாம் அபயனது வெற்றியின் பெருமையையும் எதிர்ந்த சேனைத் தொகுதியின் அழிவுபாட்டின் பெருமையையும் போர்களின் கடுமையையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. அவளது கோயிலின் முன்பாக வீரர்கள் தம் உறுப்புக்களை அரிந்து பலி கொடுத்துள்ளனர், தேவியின் அவயவங்கள் அடிமுதல் முடிகாறும் அமானுஷ்யத் தோற்றம் விளங்க, இடையிடையே அபயன் பெருஞ் சிறப்புக்கள் விளங்க வர்ணிக்கப்படுகின்றன. இவளது நடனத்தைப் பற்றி

தரணி பரித்ததெனப் பரணி தரித்தபுகழ்ச்
சயதர னைப்பரவிச் சதிகொள் நடத்தினளே (109)

என்றது இங்கே குறிக்கத் தக்கது. அவளது திருமேனியின் பெருமை,

அண்டமுறுங் குலகிரிகள்
அவளொருகால் இருகாதிற்
கொண்டணியும் குதம்பையுமாம்
கோத்தணியின் மணிவடமாம் (119)

என்றதனால் விளங்கும்.

பேய்கள் சூழ்தல்

தேவியை அகலாது சூழ்ந்திருந்த பேய்கள் கவிஞனது பேராற்றலால் நமது கண்முன்னே தோன்றிவிடுகின்றன. கன்னங் கரேரென்று நெடியவாயுள்ள பனைகள் காலுங்கையுமுடைய போலிருந்தன அப் பேய்கள். அவற்றின் வாய்கள் பெரிய பிலத்துவாரங்களோடு எது மிக அகலம், எது மிக ஆழம் என்று வாது செய்யுமாம். அவை உட்கார்ந்திருந்தால் அவற்றின் முழந் தாள்கள், முகங்களுக்கு மேலே மூன்று முழம் உயர்ந்திருக்குமாம். அவற்றின் மூக்கிலேயுள்ள முடமயிர்கள் பெரும் பாம்புகள் தொங்கிக் கிடப்பன போன்றிருக்குமாம். செவிகளிலே ஆந்தைகள் உள்ளொதுங்கியிருக்க, வௌவால்கள் அங்குமிங்கும் உலாவிப் பறக்குமாம். பற்கள் கொட்டும் ஏர்க்காலும் கோத்தமைத்தன போன்றிருக்குமாம். அவற்றின் தலைகள் வானத்தைத் தாங்கித் தகர்க்குமாம். உதடுகள் அவற்றின் மார்புவரை தாழ்ந்து தட்டுமாம். நெடிய மூங்கில்களைக் கண்டால், குழந்தைப் பேய்கள் 'அம்மா, அம்மா' என்று கூத்தடிக்குமாம். ஒட்டகங் களைக் கண்டால் தாய்ப் பேய்கள் 'என் பிள்ளையல்லவா' என்று ஒக்கலில் வைத்துக்கொள்ளுமாம். இப்படிப்பட்ட பேய்களில் ஒரு சிலவற்றிற்குப் பசிக் கொடுங்கனலால் வயிறு தீய்ந்து முதுகுந் தீய்ந்துவிட்டது. ஒரு சிலவற்றிற்குக் கால் முடமாகிவிட்டது. முன்னொரு முறை அபயன் புரிந்த போரில் பகையரசனது தலையினின்றும் சிதறிய மூளைச் சேற்றிலே வழுக்கி விழுந்து மொழி பெயர்ந்து இவ்வாறாயிற்று. மூளைச் சோற்றிற்கு அத்தனை அவா! சிலவற்றிற்குக் கை சொத்தையாய்ப் போய் விட்டது; முன்பொருகாற் களத்திற் கூழடுதற்கு ஆய்ந்தெடுத்த

வெண்பல் அரிசியை உரலிலே இட்டு யானையின் நீண்ட கொம்பாகிய உலக்கை கொண்டு குற்ற, அவ்வுலக்கை பட்டு வலக்கை இவ்வாறாயிற்று: சோறாக்கப் பொறுக்கவில்லை. சிலவற்றிற்குக் குருதியும் குடருங் கலந்தட்ட சூடான கூழ் தெறித்து ஒரு கண் குருடாயிற்று. காய்ச்சிய கூழ் மிக்க சூடுள்ளதாயிருக்க அதன் ருசியால் அதனைக் குடித்து, நாச் சுருண்டு உள்விழுந்து முழு ஊமைகளாய்விட்டன சில பேய்கள். அபயனது குழந்தைப் பருவத்தில் அவன் நிகழ்த்திய பெரும் போர்த் திறத்தினைக் கண்டு சேனை வீரர்கள் செய்த பேரார வாரத்தால் சில பேய்கள் செவிடாய்ப் போய்விட்டன. அரசன் கடாரத்தை அழித்தபொழுது பெருகிய குருதிப் பேராற்றிலே ஆடி நீந்திய சில பேய்களுக்குக் குரக்குவாதம் பிடித்து அவை கூன்முதுகாயின,

அச்சமும் புதுமையும் நகைச்சுவையும் ஒருங்கே விளைக்கும் இத்தகைய பேய்கள் தன்னை அகலாது சேவிக்க, தேவி கொலுவிருந்தனள். அப்பொழுது குடர்மாலையும் நிணச் சட்டையுமிட்டு ஒரு பேய் அவள் திருமுன்பு வந்து வணங்கி நின்றது. இதுதான் கோயில்நாயக நெடும்பேய். இப் பேய் தாயே, முன்பு ஒருமுறை சுரகுரு என்ற சோழர்பெருமான் தூதாக எமனிடத்திலே செல்லவிட்ட ஒரு வீரன் செல்லுமுன்பு உமக்குப் பலிக்கொடையாகத் தனது தலையை அரிந்து வைத் தனன். அத் தலையை ஊனசை யாற்றாத ஒரு பேய் தின்று விட்டது. இதனைக் கண்டு அப்போயின் தலையை அரிந்து விட நீர் ஆணையிட்டீர். அப் பேய்க்கு உறவாயிருந்த சில பேய்கள் உமது கோபத்திற்கு அஞ்சி ஒளிந்தோடிப்போயின. இது தேவியின் திருவுள்ளம் அறிந்ததே.

அப் பேய்களின் ஒரு முதுபேய் இங்குவந்துள்ளது. தேவியிடம் விண்ணப்பஞ் செய்தற்கு : இப் பேய் வேறொரு குற்றமும் செய்ததில்லை: தாயின் திருவுள்ளம் எப்படியோ?' என்று பணிந்து கேட்க, தேவியும் அம் முதுபேயை அழைத்துவருக என்று கட்டளையிட்டனள். அப்பொழுது முதுபேய் அஞ்சி அஞ்சி வந்தது, 'என் குற்றத்தை மன்னித்து அருள்செய்யவேண்டும்' என அடிவீழ்ந் திறைஞ்சி வணங்கிற்று. தேவியும் 'ஊனசையாற் பிழை செய்த அப்பேயின் தலையை அறுத்து. எமது பக்தனாகிய வீரனது சரீரத்திற் பொருத்தி அவனுக்கு உயிர் கொடுத்ததோடு எமதுகோபமும் தணிந்தது: பிழையும் பொறுத்தனம்' என்று அருளிச் செய்தனள். பின்பு, முதுபேய் 'ஆயிரம் இந்திர ஜால

வித்தைகள் கற்று வந்துள்ளேன். அவற்றைத் தேவி கண்டருள வேண்டும்' என்று விண்ணப்பஞ் செய்து, ஆணை பெற்று, அவ் வித்தைகளைக் காட்டிற்று. அவை பேய்கள் உகந்து காணக் கூடியவையா யிருந்தன. அபயன் முற்காலத்தே போர்க்களங் களில் கொன்றழித்த நால்வகைச் சேனைகளின் குறைத்தலைப் பிணங்களும், அற்ற தோள்களும், குடர்களும், நாள்களும். இழுக்கு மூளைகளும், நிணங்களும், பிணமலைகளும், உதிர வாறுகளும், பேய்களின் கொக்கரிப்பும் எல்லாம் அவற்றின் கண்முன் தோன்றின. 'பிணங்களைத் தின்றுகொண்டிருந்த பேய்களில் நம்முடைய கூட்டத்தைச் சாராத சில பேய்களையும் இங்கே பார்' என்று முதுபேய் காட்டியதும், கண்டுகொண் டிருந்த பேய்களுக்குப் பொறுக்க முடியவில்லை. நாம் காண்பது இந்திரஜால வித்தை என்பதையும் மறந்து, ஒன்றின் மேல் ஒன்று விழுந்தடித்துக்கொண்டு பசிப்பிணியைத் தணிக்கத் தொடங்கின. ஆனால் வெற்று நிலமும், வெற்று விசும்பும், வெறுங் கையும்தான் கண்ட பலன்.

விழுந்து கொழுங்குரு திப்புன லென்று
　வெறுங்கை முகந்து முகந்து
எழுந்து விழுந்தசை யென்று நிலத்தை
　இருந்து துழா விடுமே.

யோகினி மாதர் சிரிப்பொலி

இவ் வெற்று முயற்சிகளுக்கிடையே ஒரு சத்தம் கேட்டது. அது யோகினி மாதர்களின் சிரிப்பொலி. அவர்களுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. முறம்போலுள்ள தம் நகங்கள் முறிந்து போம்படி அவர்கள் கொட்டிக் கொட்டிச் சிரித்தார்கள். சிரித்துச் சிரித்து அவர்களது முகம் கோணிப்போய் விட்டது; அவர்கள் முதுகு திரும்பி விட்டது. அவர்களது விலாப் புறம் இற்றுப் போயிற்று. சிரிப்பொலி கேட்டதும், பேய் களுக்குப் புத்தி தெளிந்தது. ஒருவனைச் சீர்திருத்தி அறிவு தெளியும்படி செய்வதற்குப் பிறரது நகைப்பைக் காட்டிலும் சிறந்த கருவி வேறில்லை யல்லவா? அதுபோல் பேய்க்கணங்க ளெல்லாம் தேவியை வணங்கி 'இந்திரசால வித்தை போதும், நிறுத்த அருள்புரிய வேண்டும். இல்லாமற் போனால், நமது பிரஜைகளாகிய பேய்களெல்லாம் மாண்டுபோவது உறுதி, என்று முறையிட்டன. ஆனால் முதுபேய் 'நான் கற்ற வித்தை

களை யெல்லாம் கடைசிவரை கண்டருள வேண்டு'மென்று முறையிட்டது. மக்களினத்திலும் ஏதேனும் வித்தை வல்லவர் இவ்வாறு வற்புறுத்துதல் சாதாரண நிகழ்ச்சி யல்லவா! இம் முறையூட்டைக் கேட்ட பேய்க்கணங்கள் முதுபேயை நோக்கி 'மாயப் பாவி, இன்னும் எங்களைத் துன்புறுத்துதற்குத் துணிந்தாயா? தாயின்பேரில் ஆணையிட்டிருக்கிறோம், நிறுத்து' என்று கூக்குரலிட்டன. முதுபேயும் இந்திரஜால வித்தையை நிறுத்தி, 'உமது கோபத்திற்கும் சுரகுருவின் கோபத்திற்கும் அஞ்சி நான் இமகிரியி லிருந்தேன். அங்கே நான் சாதன மந்திர வித்தைகள் பலவும் கற்றுள்ளேன். அவைகளைக் காண்' என்று காட்டிற்று. பின்னர் 'உமது பழஅடியார் அடியாளாகிய உருத்திர யோகினி, என்னை இன்னும் இமகிரியில் தங்கியிருக் கும்படி செய்து அபயனது இராச பாரம்பரியத்தை உணர்த்திற்று. அதனைக் கேளும்' என்று கூறி விவரித்தது. தேவி சோழ வம்சத்தை விவரித்த பரிசு மிக அழகாக உளதென்று வியந்து, 'பேய்களே! நீங்களெல்லாம் அவ் வம்ச பரம்பரையைக் கற்றுய்ம்மின்' என்று திருவாய் மலர்ந்தனள்.

பேய்களின் பசிக்கொடுமை

பசித்தவன் காதிலே பஞ்சாட்சரம் ஜெபி யென்றால் முடியுமா? பேய்களுக்குத் தங்கள் பசிக்கொடுமை தீர்க்கும் வழியைப் பற்றித்தான் சிந்தை சென்று கொண்டிருந்தது. அக் கொடுந் தீயால்,

வேசைக்கு விறகானேம்; மெலியா நின்றேம்;
மெலிந்தவுடல் தடிப்பதற்கு விரகும் காணேம்;
சாகைக்குத் தனையாசை போதும்; பாழிற்
சாக்காடும் அரிதாகத் தந்து வைத்தாய்

என்று பலவாறாக முறையிட்டன. அபயன் போர்கள் நின்று விட்டன. நாங்களும் உணவின்றி நெற்றாய்ப் போய்விட்டோம் என்று முடிவிற் கூறின. அப்பொழுது இமகிரியினின்றும் வந்த முதுபேய் தான் வரும் வழியிற் கலிங்க நாட்டில் நிகழ்ந்த துர்நிமித்தங்களைத் தெரிவித்தது. இந் நிமித்தங்களின் விளைவைக் கணிதப் பேய் உணர்த்த அறிந்து கலிங்கப் போர் நிகழும் என்றும், அதற்குப் பரணிக்கூழ் உண்டென்றும், அதனால் பேய்களின் பசி தீருமென்றும் தேவி கூறியருளினள்.

பேய்களின் மகிழ்ச்சி

இதைக் கேட்டதும், பேய்களுக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவற்றின் உடல் பூரித்துத் தடித்தன, நடன மாடின. அடிக்கடி நாவினால் உதட்டை நக்கி நனைத்தன. ஆடி இரைத்து ஆரவாரஞ் செய்தன. ஆனால் ஒரு சிறு சந்தேகம் அவைகளுக்கு உண்டாய்விட்டது 'போர் புரிபவனோ தெய்வப் பிறப்பல்ல; ஒரு மனுஷ்யன். அவனை எதிர்ப்பவனோ இதுவரை அவனுக்குக் கப்பம் கட்டிவந்தவன். இப் பகைவனிடம் பெருஞ் சேனை யிருப்பதற்கு இடமில்லை. விளைவது பெரும் போரா யிருக்க முடியாது. இந்தப் போரில் அழியும் பிணங்கள் எங்கள் பசிப்பிணியைத் தீர்ப்பதற்குப் போதுமா?' என்று தேவியின் முன்பு கூறின. தேவியும் இக்கலிங்கப் போர் இலங்கைப் போருக்கு ஒட்டிரட்டியாகும் என்றுணர்த்தி, இலங்கைப் போர் நிகழ்த்திய திருமாலே இங்கே அபயனாக அவதரித்திருக்கிறா னென்று விளக்கி, அபயனது அவதார மகிமையைக் கூறினள். பின்பு அவன் வெற்றிச் செயல்களை விரித்துணர்த்தி, அவன் பாலாற்றங்கரையில் பரிவேட்டையாடுதற்குப் புறப்பட்ட செய்தியையும், கச்சியில் அவன் முகாமிட்ட செய்தியையுஞ் சொல்லி நிறுத்தினள்.

அப்பொழுது கலிங்கப் போரை நேரிற் கண்ட ஒரு கூளிப்பேய்,

> தன்னுடைய கால் தனது பிற்பட மனத்துவகை
> தள்ளி வர

ஓடிவந்து, கலிங்க நாடு முழுதும் கலிங்கரது குருதி வெள்ளம்; அதனை அள்ளியுண்ண வாருங்கள் என்றது. உணங்கிப் போன வயிறுகள் குளிரும்படி குருதியை உவந்து பருகுதற்கு

> கணங்கள் எழுக! எழுக!
> கணங்கள் எழுக! எழுக!

என்று கூவிற்று கேட்ட உவகையால் மெய்ம்மறந்திருந்த பேய் களை நோக்கி 'பாவிகளே, சும்மா இருக்கிறீர்களே, அங்கே பருந்தும் கழுகும் பிணத்தை யுண்டு வயிறுகள் பீறிப்போயினவே' என்று அலறிற்று.

என்செயப் பாவிகாள் இங்
கிருப்பதங் கிதற்கு முன்னே
வன்சிறைக் கழுகும் பாறும்
வயிறுகள் பீறிப் போன

என்று அலறிற்று. அங்கே கிடக்கிற பிண முதலியவற்றைப் பார்த்தால் உங்களுக்கு 'வயிறுகள் போதா: வாய்களும் போதா; எயிறுகளும் போதா' என்று இரங்கிற்று. இவற்றையும் தீராப் பெரும்பசியையும் பிரமாவை வேண்டிப் பெற வேண்டும் என்றது.

கூளிப்பேய்

இந்த மகிழ்ச்சிச் செய்தியைக் கேட்ட பேய்கள் உடல் பருத்தன; சிரித்தன; ஒன்றன்மேலொன்று விழுந்தன; இச் செய்தியைக் கொணர்ந்த கூளிப்பேயை முத்தமிட்டன. ஒக்கலில் தாங்கிய பிள்ளைகள் கீழே விழவிழத் துணங்கைக் கூத்தாடின; வள்ளைப் பாட்டுப் பாடின. தேவியை வாழ்த்தின கனவுரைத்த பேயினைத் தம்தம் கழுத்தின் மேல் ஏற்றிக்கொண்டு ஆடின. இச் செயல்களெல்லாம் மக்கள் செயல்களை நமக்கு நினைப்பூட்டி அறாத பெருநகையை விளைக்கின்றன.

இவற்றையெல்லாம் கண்டுகொண்டிருந்த தேவி கூளிப் பேயை நோக்கி, 'போர் நிகழ்ச்சியை உள்ளபடி சொல்லுக' என்று கட்டளையிட்டனள். கூளியும் கச்சிநகர்க் கொலுவி லிருந்து தொடங்கி அபயனது ஏவல்தாங்கிச் சென்ற கருணா கரனது படையெழுச்சியையும் போர் நிகழ்ச்சியையும் அவனது மீட்சியையும் விஸ்தரித்துக் கூறி முடித்தது

பின்னர் தேவி இத்தகைய களத்தைக் காண வேண்டுமெனக் கருதி, பேய்க்கணங்களுடன் சென்று போர்க்களக் காட்சிகளை யெல்லாம் சுவை பெருக வர்ணித்துக் காட்டுகின்றாள். ஆனால், அவள் அருள் - நாயகி அல்லவா? அவள் உள்ளத்தே சோகங் குமுறிப் பீறிடுகின்றது.

பொருதடக்கை வாளெங்கே? மணிமார் பெங்கே?
போர்முகத்தி லெவர்வரினும் புறங் கொடாத
பருவயிரத் தோளெங்கே? எங்கே? என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின், காண்மின்

இவை இறந்துபட்ட வீரனொருவனுடைய தலைவியின் வார்த்தைகள். இவற்றில் எத்தனை சோகம்! இங்ஙனம் பல காட்சிகளைக் காட்டிப் போர்க்களத்தை முழுதுங் காட்டுதற்கு முடியாதென்று கூறிமுடித்துப் பேய்களை நோக்கி 'நீங்கள் அனைவரும் குருதியாடிக் கூழ் அடுங்கள்' என்று அருளினாள். அவைகளும் அவளைக் கும்பிட்டு அவள் கட்டளையை மேற்கொண்டன.

கலிங்கங்களைப் புனைதல்

நீராடி, உலர்ந்த ஆடையுடுத்து, ஆபரணம் அணிந்து, தைப் பொங்கல் முதலியன இட்டு நம் பெண்டிர் மகிழ்வார்களல்லவா பேய்களும் அவ்வாறே செய்கின்றன. முதலிலே பெண் பேய்கள் ஒன்றையொன்று பெயரிட்டு அழைக்கின்றன. குறுமோடி, நிலைமாலை, கூரெயிறி, நீலி, மறிமாடி குதிர்வயிறி என்பன இப் பெயர்கள். இவைகள் குட்டைச்சி, அரிசிப்பல்லி முதலிய பெயர்களை நினைவூட்டி நமக்கு நகை உண்டுபண்ணுகின்றன. இவைகள் பல்விளக்கி நாக்கு வழிக்கின்றன; நகங் களைகின்றன; எண்ணெய் தேய்த்து, அதன் வெண்மூளையைத் தேய்த்துப் போக்கிக் குருதி மடுவிலே பாய்ந்து நீராடுகின்றன. குருதிக் குட்டங்களிலே அம்பும் வேலும் குந்தமும் நிரம்பியிருத்தலால் கரையிலிருந்து குளிக்கும் படி எச்சரிக்கப்படுகின்றன. ஆழ்ந்த குருதிமடுவிலே நீந்தி நெடு நேரம் அமிழ்ந்து விளையாடாமல் விரைவிற் கரையேறிக் கலிங்க கரது கலிங்கங்களை (ஆடைகளை)ப் புனைந்துகொள்ளும்படி ஏவப்படுகின்றன. பின்பு சூடகம், பாடகம், விடுகம்பி, கருநாண், இரட்டைவாளி, பாகுவலயம், ஏகாவளி, வன்னசரங்கள் முதலிய அணிகளை அணிகின்றன. ஆனால் இவ்வணிகள் பிணக்குவியலினின்றும் கிடைத்த கோளகை, பாராவளை, முரசம், யானைத் துதிக்கை முதலியவற்றால் அமைந்தன. பெண்பேய்கள் தங்களை அலங்கரிக்கத் தொடங்கினால் எளிதில் அது முடியுமா? நேரம் ஆய்க்கொண்டேயிருந்தது; பசிவெப்பமோ மிகுதியாயிற்று. 'அலங்காரம் போதும்; கூழ் சமைக்க வாருங்கள்' என்று ஒரு குரல் வர, பேய்கள் எல்லாம் சமையல் வேலையில் முயன்றன.

கூழ் சமைத்தல்

யானையின் பிணமலை மேலே, வானிற் பறக்கின்ற கழுகின் சிறகாகிய மேற்கட்டியின் கீழே, அடுப்பு அமைக்கப்பட்டது. பொழிமதத்தால் நிலத்தை மெழுகி, கொம்பினின்றுதிர்ந்த முத்துப்பொடியால் கோலமிட்டு, மத்தகங்களை அடுப்புக் கட்டி

ஆக்கி, ஆனைப் பானையை அடுப்பிலேற்றி குதிரையினுதிரத்தை உலையாகச் சொரிந்து, பட்ட வீரரின் கண்களிலுள்ள கோபக் கனலால் நெருப்பு மூட்டி, குந்தம் கோல் முதலியவற்றை விறகாக எரித்தன. உலையிலிடும் அரிசியாகக் கலிங்க வீரர்களின் பற்கள் கொள்ளப்பட்டன. அவற்றைத் தீட்டுதற்கு முரசமே உரலாகவும் யானைத் தந்தம் உலக்கையாகவும் அமைந்தன. அரிசி தீட்டும்போது அரசனைப் புகழ்ந்து அப்பெண் பேய்கள் வள்ளைப்பாட்டுப் பாடின. தீட்டி முடிந்ததும் சல்லவட்டத்தைச் சுளகாகக் கொண்டு தவிடு போகப் புடைத்தன. அம்பறாத் தூணிகளை நாழிகளாக்கி, தூணி மாவைக் கலந்து, பெரிய விற்கூடைகளால் அரிசியை முகந்து, உலையிற் பெய்தன. இவ்வாறு கூழ் சமைத்து முடிந்தது. சமைப்புப் போதுமாவென்று நோக்கி ருசி பார்த்து, கூழைத் துடுப்பால் துழாவித் துழாவி வடித்தன. குருதிப் பேராற்றிலே தண்ணீர் எடுத்து வைத்துக் கொண்டு, உண்ணுமிடத்தைக் குதிரை வாலால் தூர்த்து, குருதிநீர் தெளித்துத் தூயதாக்கின. உண்கலமாக மண்டலீகரின் தலைமண்டைகள் உதவின. பொற்கலங்களும் வெள்ளிக்கலங்களும் அமைத்துக் கொள்ளப்பட்டன. கூழைப் பகிர்ந்து வார்ப்பதற்கு உதவிய அகப்பைகள் வேல்பாய்ந்த தலைகளே.

பரிசு படவே கலப்பரப்பிப்
பந்தி பந்தி படவுங்கள்
வரிசை யுடனே யிருந்துண்ண
வாரீர் கூழை வாரீரே

என்று அழைக்க, பேய்களெல்லாம் இருந்துண்ணத் தொடங்கின. கூழைப் படைப்பதற்கு அவ் வேலையில் முன்னமே பயிற்சி பெற்ற பேய்களும் முன்வந்தன.

கூழ் வார்த்தல்

உண்ணுதற்கு முன் அந்தணர் துறவிகள் முதலானோர்க்குப் பிக்ஷையளித்தல் நம் நாட்டு மக்களது மரபல்லவா? இந்த மரபு பேயினத்தார்க்குள்ளும் வழங்கியதாம். அவ்வினத்தார்க்குள்ளும் அந்தணப்பேய், சமணப்பேய், புத்தப்பேய் முதலியன உண்டாம்! அந்தப் பேய்களுக்கெல்லாம் பிக்ஷையளிக்கப்பட்டன. அந்தணப் பேயைக் குறித்து இந்நூல்,

அவதி யில்லாச் சுவைக்கூழ்கண்டு
அங்காந் தங்காந் தடிக்கடியும்
பவதி பிட்சாந் தேகியெனும்
பனவப் பேய்க்கு வாரீரே

எனக் கூறுகின்றது.

கூன், குருடு, ஊமை முதலிய ஊனங்களுடைய பேய்களுக்குக் கூழ் அளிக்கப்பட்டது. ஞுவிட்பேய் தனியாகக் கவனிக்கப் படுகிறது, பிறவிமுடப் பேயும் அவ்வாறே. இந்தப் பேய் ஓட்டைக் கலத்தை யெடுத்துக் கூழ் வாங்கிற்று, அது ஒழுகுவதைக் கண்டு கலத்தைமறித்துப் பார்த்ததாம்; திகைத்துப் போயிற்றாம்! ஒரு கூத்திப் பேயின் செயலைக் கண்டு எல்லாப் பேய்களும் சிரித்தனவாம். இந்தப் பேய் தன் கணவன் உண்ணானென்று சொல்லி, தனக்கும் அவனுக்கும் படைத்த கூழையெல்லாம் தானே யுண்டு குலுங்கடித்ததாம்!

தடியால் மடுத்துக் கூழெல்லாம்
தானே பருகித் தன்கணவன்
குடியா னென்னக் குலுங்கடிக்கும்
கூத்திப் பேய்க்கு வாரீரே

என்று இதுகுறிக்கப்படுகிறது. இப்பகுதி நகைச்சுவையின் சிகரமாய் அமைந்துள்ளது. ஞாபகத்தோடு ஊர்ப்பேய்க்கும், கனவுகண்ட பேய்க்கும், கணக்கப்பேய்க்கும் கூழ் வார்த்து, பின் பேய்கள் உண்டுமுடித்து வாய்பூசித் தாம்பூலம் தரித்தன. குதிரையின் செவிச் சுருள்தான் வெற்றிலை; அதன் பரடுதான் பாக்குப் பிளவு; கலிங்க வீரரது கண்ணிலுள்ள வெள்ளைதான் சுண்ணாம்பு.

பேய்களின் நடனம்

இவ்வாறு உண்டுகளித்து, ஏப்பமிட்டு, பேய்களெல்லாம் கும்பிட்டு நடனமிட்டன. இந்நடனங்களிலும் போர்க்கள நிகழ்ச்சிகளையே புலப்படுத்தின. நடனமுடிந்தபின் அபயனை வாழ்த்திப் பரணிநாளைக் கொண்டாடின.

நம் செயல்களிலே தாம் நகைச்சுவையைக் காணுதல் பெரும் பாலும் இல்லை; வேறொருவன் காட்டினால் அவனை வெறுப்

போம். பிறரிடத்தே நகைப்புக்குரிய செயல்களைக் கற்பித்து அச்சுவையை யுண்டுபண்ணுதல் மிகச் சாதாரணமான அனுபவம். விலங்குகள், பறவைகள் முதலியவை மக்களின் இயல்புடையன என்று கருதி, அவற்றின் செயல்களிலே நகைச் சுவை முதலியவற்றை ஓர் ஆசிரியன் காண்பித்தல் அவனது பாவனாசக்தியின் ஒரு சிறப்பாகும். நமது தேசத்துப் பஞ்சதந்திரக் கதைகளும், கிரேக்க தேசத்து ஈஸாப் கதைகளும் தக்க சான்றுகளாம். இரண்டும் உலகப் பிரஸித்தமானவை. காண முடியாத பேய்களைச் சிருஷ்டித்து, உயிருள்ள உண்மைப் பிறவிகள் போலக் கண்முன்னே நிகழ்வித்து, நகை முதலிய பலவகைச் சுவைகட்குமுரிய செயல்களை அவைகளிடத்தே கற்பித்து அச் சுவைகளைக் காட்டி மகிழ்வித்தல் மிக அரியதோர் பாவனாசக்தியின் விளைவாம். இவ்வகைப் பாவனாசக்தி படைத்தவர் கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார். இந்த அரிய சக்தியின் விளைவாகத் தோன்றியது கலிங்கத்துப்பரணி என்ற சிறந்த நூல்.

பேய் உலகம்

போர்க்களத்தைப் பாடுதலில் பேயுலக மொன்றைச் சிருஷ்டித்தல் எதற்கு என்று கேட்கலாம். அரசனுக்கு வெற்றியுண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கப்படும் தெய்வம் காளிதேவி. இவளது பரிவாரமாகப் பேய்களைத்தான் நமது புராணங்கள் கூறுகின்றன. அன்றியும் போர்க்களத்தில் பிணங்களைத் தின்பதற்குக் கழுகு, பருந்து, நரி முதலியன மிகுதியாய் வருதல் இயற்கை. இவற்றுடன் பேய்களும் கூடிநின்று அழிந்த பிணங்களைத் தின்னும் என்பது நமது நம்பிக்கை. இதனால் வெற்றி வர்ணனையிலும் போர்க்கள வர்ணனையிலும் பேயுலகம் நிரந்தரமாக ஓர் இடம் பெற்றுவிட்டது.

மேலும் மக்களுள் எவராலும் நேரிற்கண்டு உரைக்க முடியாத பல காரணங்களும் சோழ அரச பரம்பரை வர்ணனை முதலியவற்றில் வருகின்றன. அமானுஷ்யமான இச் செயலைச் செய்வதற்கும் அமானுஷ்ய வியக்திகளே வேண்டும்.

கவித்வ முறையில் நோக்கினால் உண்மையுலகில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சியொன்று மக்கள் மனத்தில் வேரூன்றி நிலை நிற்பதற்கு அமைத்துக்கொண்ட உபாயமென்று இச்சிருஷ்டி

யைக் கருதலாம். உண்மையுலகைக்காட்டிலும் பாவனையுலகு மனத்தை எளிதிற் பற்றி நின்று ஒருகாலத்தும் மறைந்துவிடா தல்லவா?

ஒரு கோர யுத்தத்தின் நிகழ்ச்சிகள் நமக்கு அச்சமும் அருவருப்பும் விளைக்கும். இச் சுவையுணர்ச்சியை மாற்றினா லன்றி, நமது மனம் அமைதி பெறமாட்டாது. இங்ஙனம் இங்ஙனம் மாற்றி இடையிடையே நகைச்சுவை விளைத்தற் பொருட்டே செயங்கொண்டார் ஒரு பேயுலகினைச் சிருஷ்டித்தார் எனத் தோன்றுகிறது.

இவ் அரிய நூலிலேயுள்ள நகைச்சுவை யொன்றைத்தான் இங்கே கூறினேன். இதன்கண் எத்தனையோ இலக்கியச் சுவைகள் உள்ளன. தமிழிலக்கியங் கற்பவருக்கு அவை யென்றும் மிக்க இன்பத்தைத் தரத்தக்கன.

10. பண்டைத் தமிழ்நாடும் சமயமும்

தெய்வ நம்பிக்கை எக்காலத்தும் மக்கள் உள்ளத்தில் தூண்டா மணிவிளக்காக ஒளிர்ந்துதான் வரும். இதற்கு எத்தனை பிரதிகூலங்கள் இருந்தாலும் அத்தனையையும் அது வெற்றிகொண்டுதான் வந்திருக்கிறது. நம்முடைய உள்ளத்திலேயே எப்பொழுதும் லௌகிக நாட்டம் இருந்து வருவதினின்று சிறிதேனும் விடுதலை பெற்று பரந்த மேல்நோக்குடன் முயற்சி தோன்றுவது இயற்கை. உள்ளமும் மலினமற்றுத் தூய்மை எய்தி விளங்கும். மக்கள் பருவமும் ஒரு நிலையில் நின்று லட்சியங்களைப் பின்பற்றவும் இந்த நம்பிக்கை துணைபுரியும். இவைபோன்ற பல காரணங்களால் தெய்வ நம்பிக்கை நித்தியமாக உள்ளது என்றே கூறிவிடலாம்.

இதற்கு எதிரிடையாக ஆதிகாலம் தொடங்கி இன்றுவரை பலரும் முயற்சிகள் செய்து வந்திருக்கின்றனர். மிகப் பண்டைக் காலத்தில் நாஸ்திகர்கள் என்ற சார்வாகர்கள் பற்பல காரணங்களை எழுதி, தெய்வம் என்பதே இல்லை என்று வாதம் புரிந்தனர். அவர்களது வாதங்களின் நெறி பண்டைக் காலத்துக் கொள்கைகளோடு நெருங்கிய தொடர்புடையதாய் இருந்தது. ஆகவே, வெகு சீக்கிரத்தில் அது மறைந்து ஒழிந்தது. சுமார் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் மேலைத் தேசங்களில் விஞ்ஞான வளர்ச்சி மிகவாய்ப் பெருகிவந்தது. அதன் நிமித்தமாக ஆஸ்திகக் கொள்கைகளை மறுத்துப் பல பெரியவர்கள் எழுதி உள்ளார்கள். ஆனால், தெய்வம் என்பது மனித முயற்சியினால் கண்டுபிடிக்கப்படும் ஒரு பொருள் அல்ல. அதன் வியாபகம் இவ்வுலகிற்கும் அப்பாற்பட்டதாய், எங்கும் நிறைந்துள்ளது. எனினும் அணுவுக்குள் அணுவாகவும் அது அடங்கியிருக்கிறது. விஞ்ஞான முறைகளுக்கு அது அப்பாற்பட்டது. எனவே, விஞ்ஞானப் பெரியோர்களினுடைய கொள்கையும் விரைவில் மறைந்துவிட்டது. தெய்வ சாந்நித்தியம் முன்போலவே எங்கும் நிரம்பி ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் தெய்வ நம்பிக்கை பற்றி எழுதியவர்கள் எல்லாரும் பெரும்பாலும் அவர்களுடைய மனோ பாவனையை, மிகவாகப் பயன்படுத்தி முடிவு கட்டினார்கள். இந்தக் காரணத்தினாலேயும் அவர்களுடைய முடிவு கொள்ளத்தகாதனவாய் இருக்கின்றன.

தெய்வத்தின் வரலாறு

இவ்வகை ஆராய்ச்சிகளைக் காட்டிலும் மிக முக்கியமானது என்று நான் கருதுவது, ஒவ்வொரு தெய்வத்தினுடைய வரலாறே யாகும். மக்களுடைய பக்குவ நிலைகளுக்குத் தக்கபடி இவ்வரலாறுகள் பெருகி வந்திருக்கின்றன. இவ்வரலாறுகளைச் சான்றுகள் மூலமாக நாம் துணிதலும் இயலும். இத்தகைய வரலாறுகளை எங்கே நாம் காணலாம்? நமது இலக்கியங்களில் தான் காணவேண்டும். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து பெருகி வந்திருக்கிற நமது இலக்கியங்கள் இத் தெய்வ வரலாறுகளையும் அங்கங்கே குறிப்பிட்டுச் சொல்கின்றன மிகப் பண்டைக் காலத்துத் தோன்றிய இலக்கியங்களை சங்க இலக்கியம் என்பர். இவ் விலக்கியங்களை இயற்றிய புலவர்கள் ஒரு சமயத்தார் அல்லர்; ஒருகாலத்து வாழ்ந்தாரும் அல்லர். குறித்த ஒரு தேசப் பகுதியினரும் அல்லர். நாம் பொதுப்படச் சங்க இலக்கியம் என நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு என்பவற்றையே கொள்ளுவோம். பரிபாடல், கலித்தொகை இந்த இரண்டும் சிறிது பிற்பட்டது. பத்துப் பாட்டும் சங்க இலக்கியமேயாம்; ஆனால் முருகாற்றுப்படையை அதினின்றும் நீக்கிவிடல் வேண்டும். அது மிகப் பிற்பட்ட ஒரு நூலாகும். மேற்குறித்தவாறு சங்க இலக்கியங்களில் மட்டும் வருகின்ற தெய்வங்கள் பின்வரும் தொல்காப்பியச் சூத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

> மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்
> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
> சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.

இங்கே மாயோன் என்றது கிருஷ்ணன். சேயோன் என்றது முருகக்கடவுள். வேந்தன் என்றது இந்திரன். இத்தகைய தெய்வங்களில் முருகன் தவிர பிறர் எல்லாம் வடநாட்டுத் தெய்வங்கள் என்பது நாம் அறியத்தக்கது. இதனால் ஓர் உண்மை விளங்குகிறது. தெய்வக் கொள்கையொடு வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு ஆதிகாலம் முதற் கொண்டே இருந்து வந்திருக்கிறது என்பதே அவ்வுண்மை. முருகக் கடவுள் ஒருவர்தான் தமிழ்நாட்டிற்குத் தனித்து உரிய தெய்வம். மேற்குறித்தவர்களே அன்றி. சிவபிரான், உமாதேவி,

லட்சுமிதேவி, பலராமன் முதலிய சில தெய்வங்களும் தமது பண்டைய இலக்கியங்களில் காணப்படுகின்றனர். சிவபிரான் அவர் திரிபுரம் எரித்த சரித்திரத்தோடு புலப்படுத்தப்படுகிறார். உமாதேவி அவருடைய ஒரு பாகத்திலே உள்ளவர் என்பதும், அவரது தோற்றம், வடிவு முதலியவைகளும் புறநானூற்றுக் காப்புச் செய்யுளாலும், அகநானூற்றுக் காப்புச் செய்யுளாலும் விளங்கும். கண்ணபிரானைக் குறித்து நற்றிணையில்,

வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே

என்று புகழுரை கூறப்படுகிறது. அவர் துவராவதி (துவாரகை) ஆண்டவர் என்பதும், அஞ்சன வண்ணர் என்பதும், சூரியனைச் சக்கரத்தால் மறைத்தார் என்பதும் புறநானூற்றில் விளங்குகின்றன. அவருக்கு மூத்தவரான பலராமர் நாஞ்சில் படையை உடையவர் எனக் குறிக்கப்படுகின்றார். முருகக் கடவுள் சூரனோடு போர் புரிந்த சரித்திரமும் ஒரு வகையாகக் கூறப்படுகிறது. முருகக் கடவுள், திருச்செந்தூரில் கோயில் கொண்டிருந்தனர். இது ஓர் அரிய செய்யுளால் விளங்குகிறது:

வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை.
(பு. நா. 55)

மேற்குறித்த தெய்வங்கள் எல்லாம் வைதிகச் சார்புடையவை. ஜைனம், பௌத்தம் முதலிய சமயங்களும் ஆதிகாலத்திலேயே தமிழ்நாட்டில் புகுந்துவிட்டன. ஆனால், அம் மதத்தினர்களில் துறவிகளே தென்னாட்டிற்கு மிகுதியாக வந்தவர்கள். ஊர்களுக்கு வெளிப்புறத்தேயும், மலைக்குகை முதலியவற்றிலேயும் வசித்துவந்தனர். அருகன் என்ற ஒரு தெய்வமும், புத்தன் என்ற ஒரு தெய்வமும், நாம் நினைக்கிறபடி தெய்வங்கள் அல்ல. ஜீவாத்மாக்களே படிப்படியாயும், தங்களுடைய அனுஷ்டானத்தினாலும் ஒழுக்க மேம்பாட்டினாலும், ஞான உயர்வினாலும், தவத்தாலும் சிறந்து பரிபூர்ணத்வம் பெற்று விளங்கிய பெரியோர்கள் என்பது நாம் அறியத் தக்கது. எனவே இவ்விரு மதங்களும், மக்களுடைய இகவாழ்வை முக்கியமாகப் பேணி வந்தனவேயன்றி, கோவில்கள் எடுத்தல் விழா எடுத்தல், முதலிய நெறிகளை ஆதியில் பின்பற்றவில்லை. வைதிகச் சமயத்தவர்கள் நாளடைவில் பெருகினர். அரசர்களும் மக்களும் அதனையே பெரிதும் போற்றிவந்தனர். பல அரசர்கள் யாகம் செய்வித்து

வந்தனர். இதனால் அந்தண வகுப்பினர் இன்றியமையாதவர்கள் ஆயினர். சுமார் கி. பி. ஆறாம் நூற்றாண்டு முடிய இந்த நிலையில்தான் தமிழ்நாடு, சமயம் பற்றிய அளவில், இருந்து வந்திருக்கிறது.

ஜைன சமயம்

ஆனால், வெகு சீக்கிரத்தில் ஜைன சமயம் மேம்பட்டு வருவதாயிற்று. அரசர்களாலும், மக்களாலும் பெரிதும் போற்றப்படும் நிலையை எய்தியது. இதற்குரிய காரணங்கள் பல. இவர்கள் மந்திர சக்தியிலும், தர்க்கத்திலும் சிறந்து விளங்கினார்கள். ஆகவே, மற்ற வைதிக மதத்தை எளிதில் வெற்றி கொண்டனர். அரசர்களும், அவர்களுக்கு விளங்காத பிராகிருத மொழிகளில் இவர்கள் செய்து வந்த தர்க்கத்தைக்கண்டு பிரமித்து, இவர்கள் சமயமே உயர்ந்தது என்ற முடிவுக்கு வந்தனர். நாட்டு மக்களும் இவர்களுடைய ஒழுக்கத்தையும், அதனை வற்புறுத்தி வந்த செய்யுட்களையும் பார்த்து, இவர்கள் சமயம் சிறந்ததுதான் என்று கண்டனர். கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் ஞானசம்பந்தரும் அப்பரும் விளங்கிவந்த காலத்தில் சமண சமயத்தின் நிலை இவ்வாறாக இருந்தது. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் ஜைன சமயம் சிறிது நிலைகுலையத் தொடங்கிற்று. இதற்குக் காரணம் ஞானசம்பந்தர் முதலியோரது பக்தி நெறியே என்பது உறுதி.

சைவம், வைஷ்ணவம் முதலிய வைதிகச் சமயங்களின் முயற்சியும், தெய்வ வரலாறுகளின் பெருக்கமும் இதன் பின்னரே தமிழ்நாட்டில் தோன்றின. இத்தோற்றத்தின் விளைவாகக் கடவுள், கண்ணன் முதலிய தெய்வங்களின் சிறப்பு மக்களால் எவ்வாறு உணரப்பட்டது என்பதைப் பின்னர் விளக்குவேன்.

11. பக்தியும் தெய்வ வரலாறுகளும்

நமது தெய்வங்களின் பெருமைகள் பலவகையாலும் பெருகி, வளர்வதற்குக் காரணம், நமது முன்னோர்களது பக்தியே என்று குறிப்பிட்டேன். இந்தப் பக்தி விளைவதற்கு நமது தமிழகம் பண்பட்டிருந்தது. சங்க காலத்துப் புலவர் பெருமக்கள், தங்களை ஆதரித்துவந்த அரசர்களையும், குறுநில மன்னர்களையும், அழகாகப் பாராட்டி வந்தார்கள். புகழ்வது என்பது சாதாரண மாக நாம் நினைப்பதுபோல் எளிய காரியமல்ல; நேரடியாக முகத்துக்கு முகமாய்ப் புகழ்வது மனிதத்தன்மையும் அல்ல. பலருக்கும் சுவைக்கேடு உண்டாகும். எனவே புகழ வேண்டிய முறை நேரடியாக அல்ல; மறைமுகமாகவே நமது புகழ்ச்சிகளைப் பண்டைப் புலவர்கள் வெளியிட்டு வந்தார்கள். உதாரணமாக, கீழ்வரும் செய்யுளை நோக்குங்கள் :

> பாரி பாரி என்று பல ஏத்தி
> ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
> பாரி ஒருவனும் அல்லன்
> மாரியும் உண்டு - ஈண்(டு) உலகு புரப்பதுவே.

இதில் உபமானப் பொருளைக் கொண்டு உபமேயப் பொருளின் சிறப்புக்கள் அனைத்தையும் புலவர் வெளியிட்டிருக் கின்றார். இவ்வுபமான உபமேயமும் நேரடியாகச் சொல்லப் படவில்லை.

உபமேயப் பொருள் உலகத்தைக் காத்துவருதல் எவ்வளவு அழகாக எடுத்துக் கூறப்படுகிறது என்பது நாம் செய்யுளை வாசித்து வாசித்து அறிந்துகொள்ளக் கூடியது.

பலரும் பல இடங்களில், பலவாறு புகழ்ந்து வருகிறார்கள் என்பதை, 'பாரி, பாரி' என்று இருமுறை பெயரைச் சொல்லி அழைத்து, தமது அன்புடைமையையும், ஆராமை யையும் புலவர் குறிப்பிக்கும் அழகு தனிப்பட்டது. பாரி என்று சாதாரணமான ஒருவனைக் குறிக்கிறார்கள் எனப் பலரும்

நினைத்தல் கூடும். பலர் வாயிலும் அப்பெயர் வழங்குவதாயினும், அவன் சாதாரணமானவன் அல்லன். அவன் பெயரைச் சொன்ன வுடனேயே அவனுக்கு நிகரானது மாரி என்பது நமக்கு உடனே தோன்றுகிறது. இப்படி எத்தனையோ நயங்கள் இச்செய்யுளில் உள்ளன.

இவ்வாறு புகழ்ந்து புகழ்ந்து பழகிய நாவையுடையவர்கள் நமது பண்டைப் புலவர்கள். பழைய இலக்கண ஆசிரியர்களும் இவர்களுக்குத் துணை புரிந்து வந்திருக்கிறார்கள். அரசர்கள் முதலியோர்களைத் தெய்வங்களோடு ஒப்பிட்டுக் கூறும் மரபைப் ''பூவை நிலை'' என்று இலக்கணம் கூறும். இவ்வகையாகப் பாடுபவர்கள் புகழ்மொழியில் மிகுதியும் பயின்று வந்தவர்களே.

ஆனால், அக்காலத்தில் தமிழ்நாட்டில் விளக்கமுற்றிருந்த தெய்வங்கள் சிலவே. அவைகளுடைய பெருமைகளும் பிற வரலாறுகளும் மிகுதியாகப் பரவவில்லை. ஆகவே, தமிழ்நாடு சம்பந்தப்பட்ட அளவில் அந்தத் தெய்வங்களின் வரலாறு மிகமிகச் சுருக்கமாகவே இருந்தன. மக்களைப் பாடிப் பாடிப் புலவர்கள் பலருக்கும் அருவருப்பு உண்டாயிற்று என்று தோன்று கிறது. சில அரசர்கள் அவ்வாறு அருவருப்பு உண்டாவதற்குக் காரணமாகவும் இருந்தார்கள்.

புலவர்கள், அவர்களைப் பாடாதபடி தெய்வங்களைப் பாடுதல் ஆத்ம லாபத்திற்காகவாவது, பயன்படுமென்று கருத லானார்கள். எப்பொழுதும், ஒரேபடித்தான தெய்வ வரலாறு களைக் கூறிக் கூறி, அலுத்துப்போகும் பருவமும் வந்தது. எனவே, தெய்வங்களின் பெருமை பலபட விரிந்து வளர்ந்து ஓங்கவேண்டும் என்ற கருத்து புலவர்களுக்கு உண்டாயிற்று.

அக்காலத்தில்தான் மகாபாரதம் முதலிய இதிகாசக் கதைகள் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கின. அவைகளையும் புலவர்கள் பயன்படுத்தினார்கள். ஆனால், வணக்க முறையில் அல்ல, அவர்கள் தெய்வ வரலாறுகளைப் பயன்படுத்தியது. இங்கும் அங்குமாக ஒரு சில இடங்களில் இதிகாச விஷயங்களை இவர்கள் குறிப்பிட்டுச் சென்றனர். ஆனால், வரலாறுகளைப் பெருக்குவதில் இவ்விதிகாசக் கதைகளால் தமிழ் மக்களுக்கும் புலவர்களுக்கும் ருசி ஏற்பட்டது. பல வரலாறுகளும் புதிதாகத் தோன்றலாயின.

கோயில்கள்

வேறொரு முக்கியமான விஷயமும் இத்தகைய வரலாறுகள் பெருகுவதற்குக் காரணமாயிற்று. அரசர்கள் பலர் அங்கங்கே கோயில்கள் அமைக்கத் தொடங்கினார்கள். ஒவ்வொரு கோயிலிலும் விக்கிரகங்கள் நிரம்ப ஏற்பட்டன. விக்கிரகங்கள் ஏற்படவே, தெய்வங்களின் வரலாறுகளும் விரிவாகி வளர்ந்தன. சிற்பிகள் கோயில்கள் அமைத்ததோடு, விக்கிரகங்களுக்குப் பலவகையான உருவங்களைக் கொடுத்து, அவற்றின் மூலமாகவும் தெய்வ வரலாறுகள் பெருகிவரச் செய்தனர்.

முருகக் கடவுளின் வரலாற்றை எடுத்துக்கொண்டு, அவரது சரித்திரம் எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதை இனி நோக்குவோம்.

அவர் குறிஞ்சி நிலக் கடவுள் என்பது சங்க நூல்களால் புலப்படுகின்றது. பெண்களின் காதல் நோயைக் குறித்து நிகழ்ந்து வந்த வெறி ஆடல்களில் இக்கடவுள் பூசகர் மூலமாக ஆவேசித்து நிற்பர். இதுவும் சங்க நூல்களில் காணப்படுவதே. இவ்வெறியாடல் 'வேலனாடல்' என்றும் வழங்கப்பட்டது. முருகக் கடவுளும் வேலன் என்ற பேர் கொண்டனர். 'வேல்' என்ற ஆயுதமும் இவர்க்கு உரித்தாயிற்று.

மலையாள அகராதியில் காட்டுத் தெய்வம் என்று இவரைக் குறிப்பிட்டிருக்கிறது. இவருக்குச் சேயோன் என்ற பெயர் வழங்கியது. இப்பெயரிலிருந்து பலவகையான பெருமைகள் சொல்லப்பட்டன. சேய் என்றால் குமரன் என்று பொருள்.

குமரக் கடவுள்

ஆகவே, இவரைக் குமரக் கடவுள் என்று கொண்டனர். குமரக் கடவுளானால், இவரது பிதா யார் என்ற கேள்வி எழுவது இயல்பே. ஆகவே சிவபெருமானின் புத்திரர் என்ற ஒரு வரலாறு தோன்றிற்று. குமரக் கடவுள் என்ற பெயருக்கும் சேய் என்ற பெயருக்கும் பொருத்தமாக வடிவு, அழகு, இளமை முதலியன இத் தெய்வத்திற்கு உரிமையாக்கப்பட்டன. இவரது பிறப்புப் பற்றிய வரலாறுகளும் பல தோன்றின.

இவ்வரலாறுகளுள் ஒன்று பரிபாடல் ஐந்தாம் பாட்டில் குறிக்கப்பட்டுள்ளது. நச்சினார்க்கினியரும் இவ்வரலாற்றைக்

குறித்து எழுதியுள்ளார். இவ்வரலாற்றில் சிவபெருமானது புத்திரர் என்றும், சரவணப் பொய்கையில் கார்த்திகை மகளிர் அறுவரால் வளர்க்கப்பட்டவர் என்றும் விளங்குகிறது. இக்காரணங்களினாலேயே தமது தந்தையைக் காட்டிலும் இவர் சிறந்தவர் என்ற கருத்து முருக பக்தர்களுக்கு உண்டாயிற்று. தந்தைக்கே உபதேசம் செய்தார் என்ற வரலாற்றிற்கு இது காரணமாயிற்று

சிவபெருமானுக்கு ஐந்து முகங்களே கூறப்பட்டுள்ளன. முருகப்பெருமான் ஆறு முகங்கள் உடையவரென வர்ணிக்கப் படுகின்றார். இவருக்குச் சரவணபவன் என்ற பெயரும், கார்த்திகேயன் என்ற பெயரும் உண்டாயின. இவருடைய அருஞ் செயல்களில் ஒன்று சூரபத்மனின் வதை இவன் ஓர் அவுணன். இவனைப் பற்றிய வரலாறு வடமொழி நூல்களில் விசேஷமாக உரைக்கப்படவில்லை. அங்கே பிரசித்தமாக வழங்கி வந்தது 'தாரக வதம்' ஆகும். ஸ்கந்த புராணத்தை விரித்து எழுதியவர் சூரபத்மனையும் தாருகனையும் பிணைத்து எழுதிவிட்டார்.

ஆகவே முருகக் கடவுள், இவ் அவுணனை வதம் செய்து 'தாரகாரி' என்ற பெயரையும் பெற்றார். சூரபத்மனோடு நிகழ்த்திய போரில் முருகக் கடவுள் படை எடுத்துச் சென்று, வழியில் ஆறு ஸ்தலங்களில் தங்கினர் என்று கொண்டனர். இதனால் ஆறுபடைவீடுகள் முருக பக்தர்களான நமக்குக் கிடைத்தன, அவைகள் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம், பழமுதிர்சோலை (திருமாலிருஞ்சோலை) குன்றுகள்.

இவருக்குத் தேவியாய் முதலில் அமைந்தவர் மலைக்குறவர் மகளான வள்ளி அம்மை. இத்தொடர்பு இவரது தெய்வத் தன்மைக்குப் பொருந்தவில்லை; இந்திரனது மகளாகிய தெய்வயானையை மணந்தார் என்ற சரித்திர வரலாறு பொருத்த மாயிற்று.

இவருக்குச் சிறப்பாக உரியது கடப்ப மரம். பூர்வ காலத்தில் ஒவ்வோர் அரசரது வம்சத்திற்கும் தனிப்பட உரிய காவல்-மரங்கள் இருந்தன. இவ்வழக்கத்தோடு ஒட்டி முருகக் கடவுளுக்கும் கடப்ப மரத்திற்கும் தொடர்பு ஏற்படலாயிற்று. ஆனால், ஸ்தல புராணக்காரர்கள் கடப்ப வனத்தில் (அதாவது மதுரையில்) எழுந்தருளியவர் என்று வரலாறு கூறினர்.

இவருக்குக் கொடியாயுள்ளது சேவல். காடுகளில் குறவர் களிடையே சேவல் மிகுதியாய் உள்ளமையினால், அது கொடி யாய்க் கொள்ளப்பட்டது.

அவ்வாறே மயில்களும் ஏராளமாக மலையில் உண்டு. ஆகவே மயிலை வாகனமாகவும் கொடியாகவும் கொண்டனர். இவரது வாகனமாகப் பண்டை நூல்களில் யானையும் கூறப்படுகிறது. அந்த யானைக்குப் 'பிணிமுகம்' என்று பெயர். 'பிணிமுகம்' என்றால் மயில் என்று பொருள். ஆகவே, மயில் வாகன மாவதற்குப் பொருத்தமும் அமைந்துவிட்டது வரலாற்றிலே இவற்றை இசைப்பதற்கு, சூரன் இவ்வடிவுகளை அந்திய காலத்தில் எடுத்தான் என்று கருதலாயினர்.

இச்சரித்திரங்கள் எல்லாம், சொல்வதற்குக் கற்பனை போல் தோன்றினாலும், நாளடைவில் மக்களது உள்ளத்தில் சிறிது சிறிதாக ஊறி வளர்ந்து, வளர்ந்து ஆதிகாலந்தொட்டே ஏற்பட்டுள்ளன என்ற நினைப்பே நம் மனத்தில் முளைத்து நிற்கின்றது. இவற்றிற்கு ஏற்ப, சிற்பிகளும் இவ்வரலாறு களைக் கல்லில் செதுக்கி வடிவங்களை அமைத்து வந்தனர்.

சங்க நூல்களில் திருச்செந்தூர்

சங்க நூல்களில் திருச்செந்தூரைத் தவிர, மற்றைய ஸ்தலங் களைப் பற்றி யாதும் கூறப்படவில்லை. சிறிது பிற்பட்டு, திருப்பரங்குன்றத்திற்கும் உரியன் என்ற வரலாறு பிறந்தது. இவர் சிவகுமாரர், அறுமுகம் உடையவர் முதலிய கருத்துக்க ளெல்லாம் பிற்பட்ட பரிபாடல், முருகாற்றுப் படை முதலிய வற்றிலன்றிச் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை.

புலவர்கள் இந்த வரலாற்றுப் பெருக்கத்தோடு அமைந்துவிட வில்லை. தங்கள் உயிரைக் காட்டிலும் சிறந்ததாகப் போற்றி வந்த தமிழ்மொழிக்கும் முருகக் கடவுளுக்கும் தொடர்பு உண்டு என்ற வரலாற்றையும் கண்டுகொண்டனர். தமிழ் இலக்கணம் முதல் முதலிற் செய்தவர் அகத்தியர். இந்தக் காரணம் பற்றி உபசாரமாக இவரைத் 'தமிழின் தந்தை' என்று கூறலாயினர்.

"அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு" என்று வில்லிபுத்தூரார் பாடியுள்ளார். அகத்தியரின் குரு முருகக்

கடவுள் என்றும், இந்தத் தெய்வத்தினால் இயற்றப்பட்ட இலக்கணம் உண்டு என்றும், அவ் இலக்கணத்தின் பெயர் 'குமரம்' என்றும் பாவனைகளைப் பெருக்கினர். இவ்வாறு இலக்கண நூல் செய்வித்தார் என்ற செய்தியோடு நில்லாமல், வேறு ஒரு புதிய செய்தியையும் அமைத்தனர்.

இறையனார் என்றவர் பண்டைக் காலத்துப் புலவர்களில் ஒருவர் இவர் ஓர் அகப்பொருள் நூல் இயற்றினார். அதற்கு இறையனார் அகப்பொருள்' என்று பெயர். ஆனால், இறையனார் என்பது சிவபெருமானுக்கும் ஒரு பெயர் என்று நாம் அறிவோம். எனவே, அவரே இந்நூல் செய்தாரென்று கொள்ளப்பட்டது. அவரது நூலுக்கு உரை கேட்கத் தகுந்தவர் அவருடைய குமாரர் அன்றி வேறு இருக்கமுடியாதல்லவா?

ஆகவே முருகக் கடவுளே, ''உருத்திரசன்மன்'' என்ற பெயரோடு வாழ்ந்தனர் என்றும், அவரே உரை கேட்டனர் என்றும் ஒரு வரலாறு தோன்றியது. இவ்வரலாறு இறையனார் அகப்பொருள் முன்னுரையில் காணப்படுகிறது. இதனால் தமிழோடு முருகக் கடவுள் தொடர்பு உடையவரென்று புலவர்கள் பாராட்டி வருகின்றனர்.

முருகக் கடவுளின் சரித்திரங்களைப் பாரதத்திலும், வடமொழியில் வால்மீகி ராமாயணத்திலும், குமார சம்பவத்திலும் காணலாம். தமிழில் பரிபாடல், முருகாற்றுப்படை, தேவாரம், திருப்புகழ், கந்தபுராணம் முதலியவற்றில் விரிவாகக் கூறப்படுகின்றன. காவடிச் சிந்தில் இவருடைய வரலாறு மிகவும் ரஸ பாவத்துடன் காணப்படுகிறது.

பக்தி இயக்கமானது 7-ஆம் நூற்றாண்டில் தொடங்கிச் சிறப்பாக வளர்ந்து வந்திருப்பதற்கு முக்கிய காரணங்கள் இவ் வரலாறுகளேயாகும். வரலாறுகளைப் பக்தியும், பக்தியை வரலாறுகளும் ஒன்றை ஒன்று புஷ்டியாக்கி, நமது உள்ளத்திலே பெரியதோர் தெய்வ உணர்ச்சியை உண்டாக்கிவிட்டன. கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகக் கடவுளே என்று போற்றி வருகிறோம்; அவரைப் பற்றிய சிறந்த பாடலாகிய திருமுருகாற்றுப்படையைப் பக்தியோடு பாராயணம் செய்துவருகிறோம்.

12. பக்திப் பெருவெள்ளம்

இறைவன் அளவில்லா ஆற்றல் உள்ளவன். அவனிடம் எல்லாம் அடக்கம். அணுவுக்கு அணுவாகவும், மேருவுக்கு மேரு வாகவும் இருப்பவன். அவனன்றி உலகத்தில் ஓர் அணுவும் அசைவதில்லை. அவன் இப்படியன், இந்நிறத்தன், இவ்வண் ணத்தன் என்று எழுதிக் காட்ட முடியாது. எவ்வாறு நாம் வர்ணித்தாலும், அவ்வர்ணனைகளுக்கு எல்லாம் லட்சியமாகவே இருப்பவன். அப்பேர்ப்பட்ட இறைவனை முன் கூறியவாறு ஆறுமுகம் முதலியனவுடைய முருகக்கடவுளாக நாம் பாவிப்பதில் யாது ஒரு கற்பனையும் இல்லை. நமது மனத்திற்கு உகந்த தாகவும் மனத்தைக் கனிய வைப்பதாகவும் உள்ள எந்த வடிவத்திலும் நாம் இறைவனைக் கண்டு, அவனுடைய பேரழகுக்கும் பேராற்றலுக்கும் அடிமையாகலாம். ஆகவே, நமது முன்னோர்கள் முருகக் கடவுளைப் பல வடிவாகப் பாவனை செய்து, மேன்மேலும் அவரது பெருமையை விளங்க வைத்தது முற்றிலும் இயல்புடையதேயாகும்.

இப்பெருமையின் வளர்ச்சி மானஸிகம், பாஷ்மம் என்ற இரண்டு கூறாகத் தோன்றி வந்திருக்கிறது என்று கருதலாம்.

பல வடிவமாக நினைத்தல்

ஒன்று, மானஸிக வளர்ச்சி, இந்த வளர்ச்சி நம்முடைய மனத்திலே பல வடிவாக அவனை நினைத்து நினைத்து, அவனுடைய உண்மைப் பெருமைகளை அளந்து அறிய முயலும் முயற்சிகளால் ஏற்படுவது. இந்த முயற்சிகளில் ஒரு பகுதி தத்துவ முறையை அனுசரித்தும், மற்றொரு பகுதி பௌராணிக முறையை அனுசரித்தும் இருக்கும். முருகக் கடவுளின் ஆறு முகம் இன்னின்ன தத்துவங்களை விளக்குவது என்று முடிவுகட்டுவது தத்துவ முறை; ஒவ்வொரு முகமும் இன்னின்னபடி இருக்கும், இன்னின்னவற்றைச் செய்யும், ஆறு முகங்கள் எப்படி ஏற்பட்டன என்றெல்லாம் புராண வாயிலாக அறிய முயல்வது புராண முயற்சி.

இப் புராண முயற்சிக்கும், பாஹ்ய வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பாஹ்ய வளர்ச்சி புராணத்தைக் கூறும் வரலாறுகளையும், புராண வரலாறுகள் பாஹ்ய வளர்ச்சியையும் பெருகச் செய்தன,

இப் புராண வளர்ச்சிக்கும் பாஹ்ய வளர்ச்சிக்கும் முக்கிய காரணமாய் இருந்தவை கி. பி. 7-ஆம் நூற்றாண்டு அளவில் இருந்த அரசியல் நிலைகள் முதலியனவாம். அக்காலத்தில் பல்லவ அரசர்கள் மேலோங்கியிருந்தனர். பிற்காலச் சோழர்கள் தோன்றிச் செழித்தது பிற்காலத்தில்தான், இவர்களுடைய உச்ச நிலை தஞ்சைப் பிரதேசங்களில் 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வெளியாயிற்று. பாண்டிய அரசர்கள் ஓர் முக்கிய நிலையை அடைந்திருந்தார்கள். அவர்களுள் சிலர் சோழர்களை அடிக்கடி போரில் வெற்றி கண்டும், பல்லவ அரசர்களையும்கூடப் பல முறை தாக்கியும் வந்தனர். எனவே, முக்கியமாக அக்காலத்தில் சொல்லக்கூடியவர்கள் பாண்டியர்களும் பல்லவர்களுமேயாவர்.

இவ் அரசர்கள் அடிக்கடி தம்முள் போர் செய்து வந்தனர். தாம் வெற்றி யடையவேண்டுமானால் தெய்வானுக்கிரகம் இருக்க வேண்டும் என்று கொண்டனர். வெற்றிபெற்ற பின்னரும் அவற்றைக் கொண்டாடுவதற்கு இறைவனை வணக்கம் செய்து போற்றுவது வழக்கமாயிற்று. இக்காரணங்களால் பல கோயில்களைப் பல இடங்களிலும் எடுக்கலாயினர். பல்லவ அரசன் எடுப்பித்த கோயில் மகாபலிபுரம் என்பதை யாவரும் அறிவர். கோயில்களை அமைத்து, அங்கே விக்கிரக ஸ்தாபனமும் செய்து, நித்திய நைமித்திக பூஜைக்காக நிபந்தங்களும் விட்டுக் கொடுத்தனர். இதனால் கோயில்கள் மிக நன்றாகப் பாதுகாக்கப் பட்டுச் செழிப்புற்றுப் பெருகின, அக்கோயில்களிலே அரசர்கள் நேரில் வந்திருந்து தான தருமங்கள் செய்வதும் உண்டு. அரசர்களுடைய பத்தினியர்கள், உறவினர்களும் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்கு திருநந்தா விளக்கு முதலியன அமைத்தற்கு வேண்டும் மான்யங்களை விட்டுக்கொடுத்தனர். இவர்களேயன்றி அரசர்களுக்கு அணுக்கர் ஆகவும், அவர்களுடைய பிரீதியைப் பெறவேண்டியவர்களாகவும் உள்ளவர்களும் கோயிலுக்கு வேண்டும் நிபந்தங்களை அடிக்கடி ஏற்படுத்தி வந்தனர். கோயில்கள் மிகுதிப்படவே அவற்றின் சுற்றுப்பிராகாரத்திலும் மற்ற இடங்களிலும் பற்பல தெய்வங்கள் சிறப்ப வடிவில் வைக்கப் பட்டன. அத் தெய்வங்களுக்கும் நிபந்தங்கள் ஏற்படுத்துவது

வழக்கமாயிற்று. இத்திருக்கோயில்களில் பூஜை முதலியவற்றிற்கு அன்னிய இடங்களில் இருந்து புரோகிதர்கள், தீக்ஷிதர்கள் முதலானவர்களை வரவழைத்தனர். அவர்கள் தங்குவதற்கு என வீடு முதலிய பல சௌகரியங்களைச் செய்து கொடுப்பதற்கு அரசர்கள் உதவி வந்தனர்.

கோயில்களின் பெருமை

அரசியல் நிலை இவ்வாறாக, கோயில்களின் பெருமையும் நாடு எங்கும் பரவலாயிற்று. கோயில் இருக்கும் ஊரில் உள்ளாரே தவிர, அயல் ஊர்களில் உள்ளவர்களும் சுவாமி தரிசனத்தின் பொருட்டுக் கோயில்களுக்கு வருவது வழக்கமாயிருந்தது. ஆனால், அக்காலத்தில் பாதைகள் செம்மையாய் இல்லை. செல்லவேண்டிய தூரமும் மிகுதியாக இருந்தது. நாடு காவலும் ஓர் அளவு குறை உள்ளதாகவே இருந்தது. இக்காரணங்களால் ஓர் ஊரிலிருந்து மற்றை ஊர்களுக்குச் செல்பவர்கள், கூட்டம் கூட்டமாகவே சென்று வந்தனர். பக்தர் குழாங்கள் பெருகியது. இவ்வாறே ஞானசம்பந்த சுவாமிகள் சிறுவராய் இருக்கும்போதே அவரை எடுத்துக்கொண்டு அவரது தந்தையார் தோள்மீதும் பிற்காலத்தில் பொற்சிவிகையின் மீதும் ஆரோகணித்துச் சென்றும், மற்றைய பக்தர்கள் எல்லாம் உடன் வர, சிவ கோஷத்துடன் ஊர் ஊராகச் சென்று சுவாமி தரிசனம் செய்து அங்கங்கே திருப்பதிகம் பாடிய வரலாறு பெரியபுராணத்தில் நன்றாக விளங்கும். அப்பர் சுவாமிகளும் இப்படியே பக்த குழாத்துடன் சென்று வந்தனர். இவ்வகைக் குழாங்கள் ஒன்றோடு ஒன்று கூடும்போது எத்தனை குதூகலிப்பும், ஆரவாரமும் இருந்திருக்கும் என்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம். இந்தப் பக்தர்கள் குழாம் குழாமாகக் கோயிலிருக்கும் ஊர்களுக்குச் செல்வதையே பெரியதோர் பேறாகக் கருதிவந்தனர்.

> ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து
> எங்கள் குழாம் புகுந்து

என்பது பெரியாழ்வார் வாக்கு. இங்ஙனமே இக் குழாங்கள் தொன்றுதொட்டு எத்தனையோ தலைமுறையாகப் பக்தி பூண்டு வந்திருப்பதாகக் கருதிக்கொண்டனர். இதனை நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலியோர்கள் மிகவும் அழகுபடக் கூறியிருக்கின்றார்கள். ''பழ அடியோம்'' என்று மாணிக்கவாசகர் வழங்குகின்றார். பக்த குழாங்கள் பெருகவே, பக்தி வெள்ளமும் ஓங்கிப் பெருகுவதாயிற்று.

சமய வாதங்கள் இவ்வெள்ளத்தை மிகுதிப்படுத்துவதற்கு ஒருவாறு பயன்பட்டன என்று கூறலாம். முக்கியமாக, பௌத்தம், ஜைனம் முதலிய அவைதிக சமயங்களும், சைவம், வைஷ்ணவம் முதலிய வைதிக சமயங்களும் அடிக்கடி வாதங்கள் நிகழ்த்துவார்கள். இவ்வாதங்களில் வெற்றி தோல்வி காண்பது முடியாதது. பௌத்த, ஜைன சமயத்தார் தங்கள் சமயமேதான் உலகில் மேம்பட்டவை என்று கூறிவந்தார்கள்.

அவ்வாறே சைவ வைஷ்ணவ சமயத்தாரும் தங்கள் சமயமே உலகத்தில் சிறந்தவை என்று கூறிவந்தார்கள். ஆனால், ஒரு விளைவு கவனித்தற்குரியது. ஒவ்வொரு சமயத்தவனும் தன் சமயத்தில் மிக மிக ஆழ்ந்து ஈடுபட்டு வந்தனன். ஆகவே, தமது சமயத்தை எவ்வாறெல்லாம் மூர்த்தி விசேஷங்களாலும், வரலாற்றுப் பெருமையினாலும் அலங்கரிக்க முடியுமோ, அவ்வாறெல்லாம் மக்கள் அலங்கரித்து வந்தனர்.

இவ்வரலாறுகளில் தெய்வங்கள் ஒன்றோடொன்று போர் புரிதலும் காணப்படும். சைவ சமயத்தின் மேம்பாட்டைக் காட்டுவதற்கு வைணவ தெய்வமாகிய திருமால் அவருக்கு ஆற்றலில் அடங்கியவர் என்றும், அவ்வாறே திருமாலின் ஏற்றத்தைப் புலப்படுத்துவதற்குச் சிவபெருமானை ஆற்றலில் குறைந்தவர் என்றும் கதைகள் புனைதல் வழக்கமாயிருந்தது.

கோயில்களும் சித்திரசாலையாகவும், கீத வாத்திய நிருத்தங்களின் அரங்காகவும், வேதம் ஓதும் பாடசாலையாகவும், கல்வி பயிலும் கழகமாகவும், ஊர்ப் பொது மன்றமாகவும் பிற்காலத்தில் சிறப்பு எய்தின. இச்சிறப்புக்களாலும் பக்தி பலபடியாக வளர்ந்து வந்தது. இங்ஙனம் பலவாறாகப் பக்தி கரை புரண்டு பெருகுவதாயிற்று. அரசர்கள் தங்கள் பெருமைக்கும் செல்வ நிலைக்கும் ஏற்க, திருக்கோவில்களைப் பெரிதாக அமைத்து, சமய வழிபாட்டை நிலைநிறுத்தி வந்தனர். 7-ஆம் நூற்றாண்டில் தொடங்கி நாயன்மார்கள். ஆழ்வார்கள் காலம் முடிய நமது நாடு புண்ணிய நாடு என்ற பேருக்கு ஏற்றபடி பக்தியில் திளைத்தெழுந்து அனைவராலும் போற்றற்குரிய தெய்வப் பாடல்களால் நிரம்பி விளங்கியது.

13. பக்தி வெள்ளத்தின் விளைவு

'நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்' என்றனர் வள்ளுவர். இதை ஒப்ப, பக்தி வெள்ளம் பாய்ந்து பரந்த இடங்களில் எல்லாம் அந்த இடங்களுக்குத் தக்கபடி விளைவுகளும் வேறுபட்டன. சிற்ப நூல்களின் விளைவை எடுத்துக்கொள்வோம். இவைகள், பல்வேறு சமயங்களின் தன்மைக்கும் தக்கபடி, வேறு வேறு கருத்துக்கள் அமைந்த நூல்களாய் அமைந்தன. கோவில்களின் எடுப்பு நிலைகளும் கூட இவ்வாறுதான் வேறுபட்டன. மூர்த்தி லக்ஷணங்களின் வேற்றுமைகளைக் குறித்து நாம் சொல்ல வேண்டியதில்லை.

முதலாவது மிகப் பண்டைக்காலம் தொட்டு நமது நாட்டில் விளங்கிய பௌத்த ஜைன சமயங்களைப் பார்ப்போம். புத்தருடைய விக்கிரகம் தனிப்பட்ட களையுடன் தியானமூர்த்தியாயும் சாந்தமூர்த்தியாயும் விளங்குவதைக் காணலாம். பௌத்த சமயத்தில், 'பௌத்த ஜாதகம்' என்ற ஓர் அரிய நூல் தோன்றியது. புத்தரின் பூர்வ ஜன்ம வரலாறு பற்றிய கதைகளை இந்நூல் கூறுகிறது. இதற்கு மிக விரிந்த ஓர் வியாக்கியானமும் உண்டு. ஜைன சமயத்திலும் இவ்வாறே அருகக் கடவுளின் மூர்த்தி விசேஷம் சாந்த சொரூபியாய் விளங்குகிறது. பல அருகர்களுடைய பிறப்பு வரலாறுகளும் தோன்றுவனவாயின. இவற்றின் நோக்கமாக, அதாவது பௌத்த ஜாதகங்களுக்கும், அருகர் பிறப்பு வரலாற்றிற்கும் அடிப்படையாக உள்ள ஒரு கொள்கை உண்டு. உலகத்தில் நிகழ்வது எல்லாம் கர்மானுசாரத்தைப் பற்றியது என்பதே அக் கொள்கை. நிகழும் ஜன்மத்தில் ஒருவனுக்கு ஏதாவது குறைகள் ஏற்படுமானால், அக்குறைகளுக்கு அவனது முந்திய ஜன்மத்தில் அவன் செய்த தவறுகளே காரணமாகும். அங்ஙனமே அதற்கு முன்புள்ள பூர்வ ஜன்மத்தில் தவறு செய்வதற்குரிய காரணத்தைக் காணுதல் வேண்டும். இக்கொள்கையை நுட்பமாகக் கடைசிவரை கொண்டுசென்று நிலைநிறுத்துவர். ஒருவனுக்கு இந்த ஜன்மத்தில் நிகழும் நன்மைகளும் இங்ஙனமேயாகும். எனவே, இவ்விரு சமயத்தினரும் நன்மை, தீமை என்ற பாகுபாட்டை மிக முக்கியமாகக்

கொண்டு, மக்களது நல்லொழுக்கத்தையே மிகவும் போற்றி வந்தனர். பௌத்த சமயத்தில் புத்த நிலையை அடைவதற்கு அடுத்து முன்புள்ள நிலையைப் 'போதி சத்துவ நிலை' என்பர். இந்தப் போதி சத்துவர்களுடைய சரித்திரம் மிகவும் சுவையுள்ளது; பொருட் பொலிவுள்ளது. இவைகளை எல்லாம் பௌத்த ஜாதகக் கதைகள் நன்கு விளக்குகின்றன. இக் கதைகள் பாலிமொழியில் உள்ளன. இவற்றை மொழி பெயர்த்து ஆங்கிலத்தில் பலர் பல தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார்கள். சுமார் ஐந்நூறு கதைகள் வரை நமக்குக் கிடைக்கின்றன. இக் கதைகளும் சிற்பத்துக்குரிய பொருளாய் அமைந்துவிட்டன.

ஜைன சமய வரலாறு, பௌத்த சமய வரலாற்றோடு மிக நெருங்கிய ஒப்புமையுடையது. எனினும், இரு சமயத்தினிரிடையேயும் அடிக்கடி தர்க்கம் நிகழ்ந்துவந்தது. இவர்களது கடவுளரின் பூர்வ வரலாற்றில் பல அம்சங்களும் புதிதாகக் காணப்படுகின்றன. நாம் 'நாகர்' என்று வழிபடும் தெய்வம், 'பார்சுவ நாதர்' என்ற அருகக் கடவுளுக்கு நிழல் செய்து நின்ற நாகத்தையே என்று சொல்லலாம். இவ்வரலாறுகளில் புராணக் கதைகள் மிகவாய்ப் புகுந்துவிட்டன. இக்கதைகளும் சிற்பத்திற்குரிய பொருள்களாய்த் திகழ்ந்தன.

அருகக் கடவுளரின் வரலாறுகளைத் தவிர, அந்தச் சமயத்திற்குரிய பெரியோர்களது வரலாறுகளும் பலவாய்த் தோன்றின. இவர்களை 'அறுபத்துமூவர்' என்று கணக்கிடுவர். 'திரிஷஷ்டி சலாகா புருஷர்கள்' என்று இவர்களை வழங்குவார்கள். இவர் வரலாறுகள் 'அர்த்த மாகதி' என்ற பிராகிருத மொழியில் முதன் முதலில் எழுதப்பட்டன; பின்னர் வடமொழியிலும் கன்னட மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டன. இதன் பௌராணிகத் தன்மையை நோக்கி, 'ஸ்ரீபுராணம்' என இச் சரித்திரத் தொகுதியை வழங்குவர். இவ்வரலாறுகளைப் பற்றி எல்லாம் சிற்பங்கள் நமது நாட்டில் பல இடங்களிலும் காணப்படுகின்றன.

மக்கள் வாழ்வு எப்படி நிலையற்றதோ, அதுபோலத்தான் சமயங்களின் வாழ்வும் என நினைக்க வேண்டியிருக்கிறது. பௌத்த சமயம் நமது தென்னாட்டில் மறைந்து போயிற்று. ஒருவாறாக ஜைன சமயம் ஒரு சில இடங்களில் உயிர் வாழ்ந்திருக்கிறது. பௌத்த, ஜைன மூர்த்திகள் சிவ, விஷ்ணு மூர்த்திகளாக இப்பொழுது பல இடங்களிலும் வணங்கப்பட்டு வருகின்றன.

சைவ, வைஷ்ணவ சமயங்கள்

நமது தென்னாட்டில் முக்கியமாய்ச் சிறந்து விளங்கும் சமயம் சைவம், வைஷ்ணவம் என்பவையாம் இவ்விரு சமயங்களிலும் தெய்வ வரலாறுகளும் உள்ளன: அடியவர்கள் வரலாறுகளும் உள்ளன. தெய்வ வரலாறுகள் சிவபுராணம், ஸ்காந்தம் முதலியவற்றிலும் காணப்படுகின்றன. அடியவர்களின் வரலாறுகள் பெரியபுராணம் முதலியவற்றிலும், திவ்ய சூரிய சரிதம். குருபரம்பராப் பிரபாவம் முதலியவற்றிலும் விளக்கப்படுகின்றன. சைவ, வைஷ்ணவ தெய்வங்களின் வரலாறுகளில் முறையே உக்கிர பாவமும், சாந்த பாவமும் நிலவக் காணலாம். இத் தெய்வங்களின் அடியார்கள் சரித்திரங்களிலும் இந்த பாவ வேறுபாடுகள் பலவகையாக வெளிப்படுகின்றன. சிற்பிகள் இவ் வேறுபாடுகளை உணர்ந்து அவற்றிற்கு ஏற்றபடி மூர்த்தி விசேஷங்களை அமைத்துவந்தனர்.

முருகனும் கண்ணனும்

தெய்வங்களில் முருகக் கடவுளும், கண்ணபிரானும், இராம பிரானும், நம்மால் என்றென்றும் போற்றி அனுபவிக்கத்தக்க பெருமை வாய்ந்தவர்கள். முருகக் கடவுள் வள்ளியை மணம் புரிந்த வரலாறு புராணங்களில் கூறப்படுவது தவிர, தனிப்பட நாடகத்திலும் வெள்ளித் திரையிலும் காட்டப் படுகின்றன. அவரது இளமையும், வள்ளியை மணம்புரிவதற்கு வேண்டி அவர் எடுத்துக் கொண்ட முதுமையும், சாகசங்களும் நம் மனத்திலே என்றும் இனிமை தரத்தக்க காட்சிகளாக உள்ளன. அவர் ஆரோகணித்து வரும் மயிலும், பிற சின்னங்களும் ஓவியக் கலைஞர்களுக்கு என்றும் கவர்ச்சி தரும் லட்சியமாக அமைந்தவை. அவரது வீரச் செயல்களும் நமது பாவனைக்கு உகந்தவையாக விளங்குகின்றன. அவரது இளமையும், அழகும், முதுமையும்,

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருள்

ஆகவும்.

பின்னைப் புதுமைக்குப் பேர்த்துமப் பெற்றியன்

ஆகவும், அவர் உள்ளமையைப் புலப்படுத்துகின்றன. தமிழிலே அவரது பிறப்பு. திருவிளையாடல், அருளாட்சி முதலியவற்றை நமக்கு உணர்த்தும் பண்டை நூல்கள் பரிபாடலும், திருமுரு

காற்றுப்படையுமாம். இந்நூல்கள் தோன்றிய காலம் 6-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம். இவரது பெருமையை இனிய சப்த சித்திரங்களால் நமக்கு அருளிச் செய்துள்ளது திருப்புகழ் ஆகும். இதனை இயற்றியவர் அருணகிரிநாதர்: 15-ஆம் நூற்றாண்டில் பிரபுட தேவராயர் காலத்தில் வாழ்ந்தவர்.

வைஷ்ணவ தெய்வங்களை எடுத்துக்கொண்டால், இராமாயணம் என்னும் இதிகாசத்தின் தலைவனாகிய ஸ்ரீராமனும், பகவத்கீதை செய்த கண்ணபிரானும் இங்கே சிறப்பாக எடுத்துக் கூறத்தக்கவர்கள். ஸ்ரீராமர் அவரது சொல்லுக்கும் வில்லுக்கும் பெயர் சிறந்தவர்: தக்க கௌமாரப் பருவத்திலே முடி சூட்டச் சென்று, மாற்றாந்தாயின் கட்டளையாலும், அவள் வயப்பட்ட தந்தையின் சொல்லாலும் காட்டுக்குச் சென்றவர். அங்கே நிகழ்ந்த சோக சம்பவங்கள் மக்கள் உள்ளத்தில் என்றென்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கும். இந்தச் சோகத்தை மிகுதிப்படுத்துவதற்கு அவரது இளம் மனைவி சீதை அவரது தம்பியாகிய லஷ்மணன் முதலியோர் அடைந்த இன்னல்கள் இராமசரிதத்தில் முக்கியமான இடம் பெற்றுவிட்டன. ஒன்றன்மேல் ஒன்றாக நிகழும் சம்பவங்கள் அனைத்தும் சோக சிகரத்தை எட்டிப் பிடிக்கும் படிகளாகவே உள்ளன. இவைகள் இளைஞர்கள் முதல் முதியோர்வரை அனைவரையும் தன் வயப்படுத்தும் தன்மையன. 'கற்பார் இராமபிரானையல்லால் மற்றுங் கற்பரோ?' என்றார் நம்மாழ்வார்.

குலசேகராழ்வார் இந்த இராமசரிதம் பற்றி அருளிச் செய்துள்ள பாசுரங்கள் கற்போர் உள்ளத்தைச் சோகம் பெருகிப் பொங்கிவரும் ஊற்றுக் கண்ணாக மாற்றிவிடுகின்றன. இதனைப் போன்ற வரலாறு வேறு தேசத்து நூல்களில் காணப்படுமோ என்பது மிகவும் ஐயப்படத்தக்கதே. கம்பன் வால்மீகி என்ற இரு பெரும் புலவோர்களது உள்ளங்களையும் கவர்ந்து ஈர்க்கும் பெரும் சிறப்புப் பெற்றது இவ்வரலாறு.

ஆனால், மேற்கூறியது கௌமாரப்பருவத்து வரலாறுகளைப் புலப்படுத்துவது. இளமைப் பருவத்தை இவ்வரலாறு நமக்குத் தெரிவிக்க மாட்டாது. இப்பருவத்தைத் தெரிவிப்பது கண்ணபிரானது திவ்விய சரித்திரமேயாம். பக்தி வெள்ளத்தின் விளைவாகச் சிவபெருமான், முருகக் கடவுள், இராமபிரான், கண்ணபிரான் என்று நால்வரும் சிறந்து மேம்பட்டு விளங்குகின்றனர். இவர்களைப் பற்றிய சிற்பங்களும் இலக்கியங்களும் பக்திப் பாடல்களும் தமிழ் நாட்டுக்கு என்றும் அணி செய்வனவாகும்.

14. பக்திக் கனியின் தீஞ்சாறு

பக்தியின் விளைவுகளை முற்பகுதியில் நோக்கினோம், அந்தப் பக்திக் கனியின் தீஞ்சாறு எனக் கருதவேண்டுவது கண்ணன் என்னும் ''கரும் தெய்வம்,'' இவ்வாறு கொள்வதற்குரிய காரணத்தை நாம் நோக்குதல் வேண்டும். குழந்தைப் பருவம் முதல், மேலுள்ள எல்லாப் பருவங்களிலும் இத்தெய்வத்தின்பால் மக்கட் பண்பு மிகுதியாய்க் காணப்படுகிறது, இவ்வாறு வேறு எந்தத் தெய்வத்தினிடமும் காணப்படவில்லை. ஆகவே கண்ணனது குழந்தைப் பருவம் முதல் இறுதிவரை அவன் மீது அன்பு கொண்டு மக்கள் போற்றி வந்தனர். யார் குழந்தையாய் இருந்தாலும், குழந்தைஎன்ற சொல்லளவிலேயே நாம் மகிழ்ந்து விடுகிறோம், அழகுள்ள குழந்தை என்றால் நம் அன்பிற்கு எல்லை இருக்குமா?

குழல் இனிது யாழ்இனி[து) என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

என்றனர் வள்ளுவர், மழலைச் சொல்லின் இனிமையினைக் கண்டு இவ்வாறு மகிழ்ந்தனர் என்றால், அதன் உள்ளத்தில் இனிமையும் ஹாஸ்யமும் எப்போதும் கனிந்து கொண்டிருக்குமானால், எவ்வளவு தூரம் தமிழ்மறை எழுதிய இவர் மகிழ்ந்திருப்பார் என்று நம்மால் கணக்கிட முடியாது, கண்ணன் அரசுபுரிந்து வரும் பருவத்திலும் குழந்தை உள்ளம் அவனிடமிருந்து நீங்கிவிடவில்லை. அவன்கூட ஒரு சாலை மாணாக்கனாக இருந்த குசேலனுடைய சரித்திரத்தை நோக்கினால் இது விளங்கும்.

ஆனால், தமிழ் உலகில் இவன் முதன் முதலில் நமக்குக் காட்சி அளிப்பது குழந்தைப் பருவத்தில் அன்று; சிறந்ததோர் தெய்வீக வீரனாகவே இவன் நமக்குப் புலப்படுகின்றான். சூரியனை அவுணர்கள் கைக்கொண்டு ஒளித்ததை, இவன் மீட்டு வந்தான் என ஒரு புறநானூற்றுச் செய்யுள் கூறுகிறது. வேறொரு செய்யுள் இவன் இடைப் பெண்களோடு விளையாடியிருந்த யௌவனப் பருவத்தைக் குறிக்கிறது, நீராடச்[சென்ற கோபியர்கள் ஒரு சமயம் தங்கள் புடவைகளை யமுனை நதியின் கரையில் அவிழ்த்து வைத்துவிட்டு நீராடிக்கொண்டிருந்தனர். அப்போது,

விளையாட்டுப் பிரியனான கிருஷ்ணன் அங்கே வந்து புடைவை களை எடுத்துக்கொண்டு கரையிலிருந்த குருந்தமரத்தில் ஏறிப் பதுங்கிக்கொண்டிருந்தான். கோபியர்கள் அரையளவு நீரில் நின்று எவ்வளவோ வேண்டியும் புடைவைகளைக் கொடுக்க வில்லை. இச்செய்தி இவனது மூத்தவரான பலராமருக்கு எட்டியதும், அவர் கோபித்து வந்துகொண்டிருந்தார். இதைக் கண்ணன் அறிந்தான். ஒரு பக்கம் தமையனாரது கோபம்; மற்றொரு பக்கம் விளையாட்டுத் தோழியரது மானம் போதல், சமயோசிதமாக ஓர் யுக்தி தோன்றிற்று. இலைதழைகள் செறிந்த குருந்த மரக்கிளைகளைத் தாழ்த்திக் கொடுத்தான் புடைவைகளை யாசித்துக் கொண்டிருந்த கோபியர்களது மானம் காப்பாற்றப்பட்டது. தமையனார் கோபியர்களைப் பார்க்கவில்லை; தாம் கேள்வியுற்றது பிழையெனக் கண்டு, தம்பியிடம் குற்றம் காணாதவராய், கோபம் நீங்கி மீண்டனர். இது ஓர் அழகிய வரலாறு அல்லவா? இவ்வரலாறு அகநானூற்றில்

> வண்டனல் தொழுநை வார்மணல் அகன்துறை
> அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்
> மரம்செல மிதித்த மாஅல் போல

என அழகுற எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

கண்ணன் கம்சனது மருமகன் என்பது முதல் முதலில் கலித் தொகையில்தான் வெளிப்படுகிறது. அவ்விடத்திலும் 'கம்சன்' என்ற பெயர் தரப்படவில்லை. அவன் கண்ணனைக் கொல்லும் பொருட்டுக் குதிரையின் முகத்தோடு வந்த கேசீ என்ற அசுரனை வதைத்தான் என்ற இடத்து மறைமுகமாகத் தான் கம்சன் குறிக்கப்படுகிறான். கேசவன் என்ற பெயர் இவ்வரலாற்றினால் ஏற்பட்டது என்பர். எவ்வாறாயினும் அவனது குழந்தைப் பருவத்தை ஒருவாறு இதினின்று ஊகித்தல் தகும். சிறிது பின்னர், பலவகை வரலாறுகளும் காணப்படு கின்றன. முக்கியமாகப் பரிபாடல் என்ற நூலில் பல சரித்திரங் களைக் காணலாம். ஒன்றில் இவன் ஆல், கடம்பு, யாற்றிடைக் குறை, மலை முதலிய இடங்களில் வேறு வேறு பெயரைப் பெற்றிருந்தான் என்றுள்ளது. இது முருகக் கடவுளின் வாழ்விடங்கள் போல் தோன்றுகிறதல்லவா? பிற வரலாறு களைத் தொகுத்து நோக்கினால், இவன் கருடனது செருக்கை நீக்கினான் என்றும், துழாய் மாலையை உடையான் என்றும், நீலமணி, காயாம்பூ முதலியவற்றின் நிறத்தை ஒப்பான் என்றும், திருமாலிருஞ்சோலை முதலிய இடங்களில் இவன் வாழும் தெய்வ

மாக உள்ளான் என்றும், இவன் மார்பில் உள்ள மறு லட்சுமி என்றும் நாம் அறிகிறோம். இவையே அன்றி, இவன் பல தத்துவங்களுக்கும் நாதன் என்ற ஞானப்பொருளையும் இந்நூல் நமக்குத் தெரிவிக்கிறது. அன்றியும் பிரகலாத ஆழ்வானின் சரித்திரமும் இதில் விரிவாகக் கூறப்படுகிறது. ஆனால் கண்ணனது குழந்தைப் பருவத்தைக் குறித்து யாதும் காணப்படவில்லை.

பெரியாழ்வாரும் ஆண்டாளும்

இந்நிலையிலே நமது 'நாட்டில் பக்திப் பெருவெள்ளம் கரை புரண்டோடுவதாயிற்று. இப் பிரவாகத்தில் முதல் முதல் மூழ்கி ஈடுபட்டவர்கள், பெரியாழ்வாரும் அவரது புத்திரியாராகிய ஆண்டாளும் ஆவர். முதல் மூன்று ஆழ்வார்களும் யோகத்தில் வல்லவர்கள் என்று கூறுவர். குலசேகர ஆழ்வார் ஸ்ரீராமனது வரலாற்றை அனுபவித்துப் பாடினார் என்று முன்னர்க் குறித்தேன். இதுபோலவே, பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தைக் கடவுளாகவும், ஆண்டாள், அவனை யௌவனப் பருவத்தில் உள்ள நாயகனாகவும் பாடி மகிழ்ந்து பக்தியை வளப் படுத்தினார்கள். பெரியாழ்வார் இடைச்சேரியில் கண்ணன் பிறந்தது தொடங்கியே அவனை வர்ணித்து, அவன்மீது அனைவரும் கனிந்து அன்பு கொள்ளும்படி செய்திருக்கின்றனர்.

வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ண மெதிரெதிர் தாவிடக்
கண்ணன் முற்றம் கலந்தள றாயிற்றே.

ஓடுவார் விழுவா ருகந்து ஆலிப்பார்
நாடுவார் நம்பிரா னெங்குற்றா னென்பார்
பாடுவார்களும் பலபறை கொட்ட நின்று
ஆடுவார்களு மாயிற்றாய்ப் பாடியே

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை யிறுத்திடும்
ஒடுக்கிப் புல்கி லுதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன்நங்காய்

இவ் இளம் பருவத்தில் அவனது அழகு, அவனைத் தாலாட்டுதல், அம்புலியை விளையாட வா என்று அவன்

அழைத்தல், ஏதேனும் கேட்பவர்களுக்கு அவன் உட்கார்ந்து கொண்டு தலையை அசைத்தல், அவன் கைகொட்டிச் சிரித்தல் தட்டுண்டு தடுமாறி நடத்தல், தாயின் முதுகுப்புறத்தைக் கட்டிக் கொள்ளுதல், அவன் அப்பூச்சி காட்டி பயப்படுத்தல், அவன் தாய்ப்பால் குடித்தல், அவனுக்குக் காது குத்துதல், அவனை நீராட்டுதல், அவனது முடியை வாரும்போது காக்கையை அழைத்தல், அவன் ஆனிரைக்குப் பின் சென்று மேய்த்து வருவதற்காகக் கையில் கோல் கொடுத்தல், அவனுக்குப் பூச் சூட்டுதல், அவனுக்கு ரட்சா பந்தனம் செய்தல் முதலிய எல்லாம் இனிய அழகிய பாடல்களில் கேட்போர் மனம் கனிந்துருகுமாறு இவ் ஆழ்வார் பாடியுள்ளார். அன்றியும் இளமையிலே காணப்படும் சேஷ்டைகளையும் பல வகையாக வகுத்துக்கொண்டு இவ் ஆழ்வார் நமக்கு விளக்குகிறார்.

இளமைப் பருவத்திலேயே தெய்வத் தன்மை காட்டி, கோவர்த்தன கிரி எடுத்தல் முதலிய அருஞ் செயல்களை இவன் செய்தமை நமக்கு உணர்த்தப்படுகிறது. கண்ணன் யௌவனப் பருவம் எய்துகிறான். ஆனிரை மேய்க்கப்போன இடத்தில் புல்லாங்குழல் எடுத்து ஊதி, அனைத்துயிரையும் பரவசப்படுத்திய அருஞ் செய்தி ஒரு பதிகத்தில் இசை இனிமை ததும்பக் கூறப்படுகிறது. பின்னர் இவன் கோபிகளோடு செய்த சிறு விளையாட்டுக்களும் சேஷ்டைகளும் வர்ணிக்கப்படுகின்றன. இவ்வாறெல்லாம் கண்ணபிரானது இளமைப் பருவம் நமது காட்சியில் புலப்பட்டு, நம்மை அன்பினால் குழைந்துருகச் செய்கின்றது. ஆண்டாளும் தனது பாசுரங்களின் ஆற்றலினாலேயே இவனை மணவாளனாகப் பெறுகின்றான். நாமும் பக்தியின் பேரெல்லையை அடைகின்றோம். அதனுடைய இன்சுவைக் கனியின் தீஞ்சாற்றைப் பருகிக் களிப்புக் கொள்கின்றோம்.

பின்னர், பக்தி புரண்டோடிய நமது தமிழ் நாடு வறண்டு போய்விட்டது. வேறு பலவகையான பொருட் குவியல்கள் நிரம்பின, பின் கம்பன் தோன்றி 'படிகொண்ட கீர்த்தி இராமாயணமென்னும் பக்தி வெள்ளம்' மீண்டும் செழிப்புற்றுப் பெருக்கெடுத்து நாடெங்கும் பரவியோடச் செய்தனன் பின்பு நமது தேசிய கவி பாரதி வரும்வரை ஒரே வறட்சி நிலைதான்.

பாரதி கண்ணனுடைய பேரழகைக் கண்டான். அவனது சிறு சேஷ்டைகளுடைய இன்பத்தை உணர்ந்தான். அவனைப் பல நிலைகளிலும் பார்க்கலானான். அவற்றையெல்லாம் கண்ணன் பாட்டு என்ற இனிய செய்யுள் தொகுதியில் நாம் பாடி அனுபவிக்கலாம்.

15. வடநாட்டில் கண்ணன்

கண்ணன் தமிழ்நாட்டில் புரிந்த திருவிளையாடல்களை முன்னர்க் கண்டோம். இனி வடநாட்டிற்குச் சென்று கால முறைப்படி அவன் லீலைகளை உணர முயலுவோம். 'கண்ணன்' என்ற பெயர் பிராகிருதச் சொல். அதற்கு உரிய வடமொழிச் சொல் 'கிருஷ்ணன்' என்பது. 'கண்ணன்' என்ற பிராகிருதப் பெயரை வைத்துக்கொண்டு கம்பன் இயற்றிய அருமையான செய்யுளை இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ளலாம் :

யாதினும் உயர்ந்தோன் தன்னை யாவர்க்கும் கண்ணனென்றே
ஓதிய பெயர்க்குத் தானே உறுபொருள் உணர்த்தி விட்டான்.

'கண்ணன்' என்பதைப் பிராகிருதம் என்று கொள்வதைக் காட்டிலும், 'யாவர்க்கும் கண் போன்றவன்' என்ற பொருளைக் கம்பன் போற்றுகின்றான் என்பது வெளிப்படை.

'கிருஷ்ணன்' என்ற பெயர் மிக மிகப் பண்டைக் காலத்து வடமொழி இலக்கியத்தில் அறியப்படாதது அன்று.

ரிக்வேதத்தில் (VIII. 74) ஒரு சிறு சுலோகத்தை இப் பெயருடையார் இயற்றியுள்ளார். இவரைக் கிருஷ்ண ஆங்கிரஸர் என்று ஒரு பிராம்மணம் கூறும். இது வேதகாலத்தைச் சார்ந்தது.

சாந்தோக்கிய உபநிஷத்தில் (III. 17.6) கிருஷ்ணனை, 'தேவகி புத்திரன்' என்றும், கோர ஆங்கிரஸ என்ற முனிவரது மாணவன் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த உபநிஷத்தின் காலம் சுமார் கி. மு. 700 என்பர்.

மகாபாரதம் ஒரே காலத்தில் இயற்றப்பட்டது அன்று. அதன் முற்பகுதிகள் சுமார் கி. மு. 400-இல் இருந்து எழுதப்பட்டன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இதில் கிருஷ்ணனைத் தெய்வமாகக் கொள்ளவில்லை; வீர புருஷனாகவே கொண்டிருக்கிறார்கள்.

வடமொழி வியாகரணம் இயற்றிய பாணினி முனிவர் (IV. 3·98-இல்) வாசுதேவனும் அர்ச்சுனனும் வணக்கத்திற்கு உரியர் என்று கூறியிருக்கிறார். ஆனால் இந்த வணக்கத்திற்கு என்னபொருள் என்பது அறியப்படவில்லை. பெரும்பாலும் ஷத்திரிய வீரர்களைத் தெய்வாம்சம் உடையவர்களாகக் கருதிய தாகவே இருக்கலாம்

சந்திரகுப்த மௌரியன் என்ற அரசன் காலத்தில் வந்த மேலை நாட்டுத் தூதுவராகிய மெகஸ்தனீஸ், மதுரை, கிருஷ்ண புரம் என்ற இரண்டு நகரங்களும் அடங்கிய 'சௌரசேன' என்ற நாட்டில், 'இராக்கிலிஸ்' வணங்கப்படுகிறார் என்று கூறுகிறார். இந்த 'இராக்கிலீ' ஸைக் கிருஷ்ணன் என்று ஆராய்ச்சியாளர் கொள்கின்றனர். மெகஸ்தனீஸ் இந்தியாவிற்கு வந்த காலம் கி. மு, 320.

கஸூண்டி என்ற இடத்தில் சுமார் கி. மு: 200-இல் எழுதிய ஒரு கல்வெட்டு இருக்கிறது. இதில் சங்கர்ஷண வாசுதேவர் களுக்கு உரிய கோயிலின் பிராகாரம் அமைத்ததைப் பற்றிக் கூறியிருக்கிறது

சுமார் கி,மு.180-இல் பெஸ் நகரில் ஒரு கல்வெட்டிருக்கிறது. இதில் வாசுதேவனைத் 'தேவதேவன்' என்றும், அந்தத் தெய்வத் திற்குத் தட்சசீலையில் உள்ள பாகவத எலிய டோரஸ் என்பவன் ஒரு கருடத்வஜம் அமைத்தான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சுமார் கி.மு. 200-இல் எழுதிய மகாபாரதப் பகுதி கிருஷ்ணனை 'அதிமானுஷ்ய வியக்தி' என்று கூறுகிறது. இன்றும் முற்றும் தெய்வத் தன்மை தோன்றியதாகக் காணப்படவில்லை.

சுமார் கி. மு, 150-இல் பதஞ்சலி, நமது மகாபாஷ்யத்தில், வாசுதேவனின் பக்தர்களைக் கூறுவதோடு அவன் 'பகவான்' என்றும், கேவலம் ஷத்திரிய வீரன் அல்ல என்றும் கூறுகிறார். அன்றியும், கிருஷ்ணனைச் சங்கஷர்ணரோடு நெருங்கிய தொடர் புடையவராகக் கொண்டு, அவரது லீலைகளை அமைத்த நாடகங்கள் உள்ளன என்றும் குறிப்பிடுகிறார். இந்த நாடகங்கள் கஸிபந்தத்தையும் கம்சவதத்தையும் முக்கியமாக உணர்த்து கின்றன.

நானாகாட் குகையில் உள்ள ஒரு கல்வெட்டு, சங்கஷணரையும் வாசுதேவரையும் தொடர்புபடுத்திக் கூறுகிறது.

மகாபாரதத்தின் பிற்பகுதிகளும், அதர்வண வேதத்தைச் சேர்ந்த உபநிஷத்துக்களும், சில புராணங்களும் கிருஷ்ண வாசுதேவனைப் பரம்பொருளாகக் கூறுகின்றன.

கிருஷ்ணனைப் பற்றிய பழங்காலச் சான்றுகள் இத்தனையே உள்ளன. கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னர், ஆரியர்கள் தங்கள் பூர்வ வாழ்வு இடத்தை விட்டு, கிழக்கே பிரயாணம் செய்து, சரஸ்வதி நதியைக் கடந்து, யமுனையும் கங்கையும் கூடுமிடத்திற்குக் கிழக்கே வந்து தம் புதிய வாழ்வைத் தொடங்கினர். இந்த இரு எல்லைகளுக்கும் இடையிலே குருக்ஷேத்திரம் என்ற புண்ணிய பூமி இருந்தது. இங்கேதான் குரு வம்சத்தினருக்கும், பாஞ்சால வம்சத்தினருக்கும் மகாபாரதம் எனும் பெரும் போர் நிகழ்ந்தது. இதுவே 'மகாபாரதம்' என்னும் இதிகாசத்திற்கு மூலமாக உள்ளது.

இந்த இதிகாசத்தில் உண்மை நிகழ்ச்சிகளையும், பூர்வ கதைகளையும் பிரித்து உணர்தல் அருமையாம். ஆனால், இந்த யுத்தத்தில் கலந்து கொண்டவர்களுடைய பெயர்கள் மிகப் பூர்விகக் காலத்தில் உள்ள இலக்கியங்களிலேயே காணப் படுகின்றன.

மகாபாரத இதிகாசத்தில் மிக முக்கியமான பாத்திரமாக விளங்குகிற கிருஷ்ணன், உண்மையிலேயே குருக்ஷேத்திரத்தில் போர் புரிந்த ஒரு க்ஷத்திரியனாக இருக்கலாம்.

இது உண்மையானால் இந்தப் பிரதேசத்தை அடுத்துள்ள இடம் ஒன்றில் பாரத யுத்த காலத்தில் கிருஷ்ணன் பிறந்தான் என்று கொள்ளலாம். அவனுடைய தந்தையின் பெயர் வாசுதேவர்; அன்னையின் பெயர் தேவகி. அவனது அண்ணாவின் பெயர் பலராமர் அல்லது சங்கர்ஷணர் என்பது. அவன் யது வம்சத்தின் ஒரு கிளையாகிய 'விருஷ்ணி' அல்லது 'சாத்துவத குடும்பத்தில் பிறந்தவன் இக் குடும்பம் வடமதுரைப் பிரதேசத்தை அடுத்து வாழ்ந்து வந்தது என்றும் ஊகிக்கலாம். இந் நகரத்தைத்தான் சரித்திரமும் புராணக் கதைகளும் கிருஷ்ணனது வரலாற்றோடு இணைத்துக் கூறுகின்றன.

அந்தக் காலத்தில் சம்பவங்களும், சமயக் கொள்கைகளும் அந்தண வகுப்பினர் சிலரது கையில் அகப்பட்டுத் தத்தளித்தன.

இவர்களுக்கு எதிரிடையான கொள்கைகளைப் போதித்தவர்கள் க்ஷத்திரிய வீரர்கள். இவ்வீரர்கள், அந்தணர் அல்லாதாரிடத்தே நாம் கற்கவேண்டிய வித்தைகளைக் கற்றுவந்தனர். உதாரணமாக, துரோணாச்சாரியிடத்தில் அர்ச்சுனன் முதலியோர் வில்வித்தை பயின்றனர். சமயத்தைப் போதித்து வந்த முனிவர்களிடத்தேயும் இவர்கள் சில காலம் உபதேசம் பெற்று வந்தனர். சாந்தோக்கிய உபநிஷத்தில் கூறுவது இதுபோன்ற நிகழ்ச்சி என்றே கருதலாம். கோர ஆங்கிரஸர் என்னும் முனிவரிடத்தில் கிருஷ்ணன் பெற்ற தத்துவ உபதேசங்களை இங்கே குறிப்பிடுகின்றேன். ஆகவே, கிருஷ்ணன் தனது நண்பர்களுக்குக் குருக்ஷேத்திர யுத்தத்தில் உதவி புரிந்த க்ஷத்திரிய வீரனாகவும், முனிவர்களிடமிருந்து தத்துவ உபதேசம் பெற்ற மாணவனாகவும் நமக்குக் காட்சியளிக்கிறான். கம்ச வதம் ஒருவேளை உண்மை நிகழ்ச்சியாகவும் இருக்கலாம்.

கிருஷ்ணவாசுதேவன் சூரிய வணக்கத்தைச் சாத்துவதர்களுக்கு உபதேசித்தான் என்று சொல்லப்படுகிறது. பின்னர், கிருஷ்ணனே அவ்வணக்கத்திற்குரியவனாக மாறிவிடுகிறான். இதுபோன்ற வரலாறுகள் பௌத்த சரித்திரத்திலும் ஜைன சரித்திரத்திலும் நிரம்பக் காணப்படுகின்றன. இவ்விரு சமயத்தவரும் உண்மையில் ஒரு சில அந்தணர்களுடைய கொடுங்கோன்மையை வெறுத்து. உண்மை ஞானத்தை வேண்டி வெளியேறியவர்கள்தாம். ஆனால், வணங்குவதற்கு ஒரு கடவுள் இல்லாமல் அவர்களால் இருக்க முடியவில்லை. அந்தச் சூன்யமான இடத்தில் தங்கள் மத ஸ்தாபகர்களையே வைத்துப் பூஜித்து வந்தனர். இது போன்றதுதான் கிருஷ்ணனைச் சூரியனுக்குப் பதிலாக வணங்கிவந்ததும்.

கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாசுதேவ சமயம் நன்கு நிறுவப்பட்டிருந்தது. ஆனால், பரம்பொருளாக அவனை இன்னும் கொள்ளவில்லை. ஏனெனில், அவனை அர்ச்சுனனோடு ஒத்த நிலையிற் சேர்த்து வணக்கத்திற்கு உரியவன் என்று பாணினி கூறுகின்றார். இந்த வாசுதேவ சமயத்தின் முக்கிய ஸ்தானம் வடமதுரைப் பிரதேசமெனவே யூகித்தல் வேண்டும்.

கி. மு. 2-ஆம் நூற்றாண்டளவில் வாசுதேவனைத் தேவதேவனாகக் கொண்டனர். பதஞ்சலி தமது பாஷ்யத்தில் இதைத் தெளிவாக்குகின்றார். ஆனால், கிருஷ்ணனை இவ்வாறு பரம்பொருளாகக் கொள்வதை அக்காலத்திலிருந்த அனைவரும் ஒப்புக்கொண்டிருந்தனர் என்று நினைக்க முடியவில்லை. சிவபெருமானுக்கு அடுத்த ஸ்தானம்தான் அவனுக்கு உரியது என்று அவனை இழித்துரைக்கவும் சிலர் தலைப்பட்டனர். இவ்வாறு தலைப்பட்டவர்களில் முக்கியமானவர்கள் பிராமணர்கள் என்று சிலர் கூறுகின்றனர். ''ஜாதிக் கட்டுப்பாடுகள் ஒழிந்துவிடும்; வேதங்கள் மறக்கப்பட்டு ஒழியும்; ஞானயோகம். பக்தியோகத்தால் கபளீகரிக்கப்படும்'' என்று இவர்கள் கருதினார்கள். இந்தக் காலத்தில்தான் அவதாரம் என்ற கொள்கை ஏற்பட்டிருக்கவேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

16. அவதாரங்களும் தென்னாட்டுத் தொடர்பும்

சைவ சமயம் பற்றிய அளவில் அவதாரம் என்பதே இல்லை. பிற்காலத்தார் சிலர், தம்மைச் சுப்பிரமணியம் முதலிய கடவுளர்களோடு ஒப்பிட்டு, அவர்களுக்குத் தாங்கள் சமம் என்று கண்டு, அபரசுப்பிரமண்யம் என்பது முதலாகத் தம்மைத் தாமே பெயரிட்டு அழைத்துக்கொண்டனர். இது அவதாரம் அன்று என்பதை எளிதில் உணரலாம்.

திருமால் (அதாவது, வைஷ்ணவ) சமயத்தவர்கள்தான் அவதாரத்தை உடன்பட்டவர்கள். தங்களுக்குரிய கடவுளாகிய திருமால் தாமே உலகின் ரட்சணத்தின் பொருட்டுப் பல்வேறு அவதாரங்கள் எடுத்ததாக இவர்கள் கூறுவர். பிற்காலத்தவர்கள் பத்து அவதாரங்கள் உள்ளன எனக் கணக்கிட்டிருக்கின்றனர்.

மீனே ஆமை வராக நரசிங்கம்
வாமனன் பரசுராமன் இராமன்
பலதேவன் வாசுதேவன் வருகற்கி என்று
ஆகும் ஈரைந்தும் அரி அவதாரம்

என்பது திவாகரம்.

தேவுடைய மீனமாய், ஆமையாய்
ஏனம்அரி குறளும் ஆகி
மூவுருவி லிராமனாய்க் கண்ணனாய்க்
கற்கியாய் முடிப்பான் கோயில்

என்று பெரியாழ்வாரும் அருளிச்செய்திருக்கின்றனர். இவ் அவதாரங்கள் ஒவ்வொன்றின் கதைகளை நோக்கினால், இவை எல்லாம் உலக ரட்சணத்தின் பொருட்டு நிகழ்ந்தன என்பது தெளிவாம். இவ் அவதாரங்களுள் மிகு முக்கியமானவை இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் என்று சொல்ல

வேண்டா. இராமன் ராமாயணத்திற்குக் கதாநாயகன். கிருஷ்ணன் பாரத யுத்தத்திற்கு அடிப்படையாய் இருந்து, அதனை முற்றும் நிகழ்வித்தவன். இருவரும் வடநாட்டிலும் தென்னாட்டிலும் போற்றி வணங்கும் தெய்வங்களாகிவிட்டனர்.

இவர்களைப் பற்றிய சரித்திரங்கள் வளர்ந்துகொண்டே வந்தன. ஒவ்வொரு நாட்டிலும் அங்கங்கே முக்கியமாக வழங்கிய வரலாறுகள், இவர்களைப் பற்றிய இதிகாசத்தில் சேர்ந்து விட்டன. ஆகவே, இராமன் நமது பரத கண்டம் முழுமைக்கும் உரிய ஓர் சம்பூர்ணராமனாக உருவெடுத்து விளங்குகின்றான்,

இதுபோலவே கிருஷ்ண சரிதமும் வளர்ந்து பெருகி வந்தது. இவனும் இராமனைப் போலவே அகில இந்தியாவுக்கும் உரிய பழம்பெரும் தெய்வமாக முதிர்ந்துவிட்டான்.

இவ்வரலாறுகள், வேறு சில காரணங்களாலும் மிகுந்து கொண்டே வந்தன. வைதிக சமயம் ஒரே சமயமாக நம்மால் கருதப்பட்டபோதிலும், அதிலே பல உட்கிளைகள் உள்ளன. சைவம், வைஷ்ணவம் முதலியவற்றையே இங்கே குறிக்கிறேன். ஒவ்வொரு கிளைச் சமயமும், தன் தன் தெய்வமே பரம்பொருள் என்று பாவித்தது. ஆகவே, ஏதேனும் ஒரு தெய்வத்திற்கு இழுக்குத் தருவதாகப் புராணங்களில் ஒரு கதை காணப்படு மானால், அந்த இழுக்கை நீக்குவதற்கு வேறு கதைகள் புனையப் பட்டன. உதாரணமாக, திருமால் பிரகலாதனின் பொருட்டுத் தூணினும் உளனாய் நரசிம்ம வடிவத்தில் தோன்றினான். இது தோன்றிய தோற்றத்தைக் கம்பன் மிகத் திறம்பட வர்ணிக் கிறான்,

நசைதிறந் திலங்கப் பொங்கி நன்றுநன் றென்ன நக்கு
விசைபிறந் துருமு வீழ்ந்த தென்னவோர் தூணின் வென்றி
இசை திறந் தமர்ந்த கையால் எற்றினான் எற்ற லோடும்
திசைதிறந் தண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம்

என்பது அந்த வர்ணனை. இவ்வாறு தோன்றிய நரசிங்கம், இரணியனது மார்பைப் பிளந்து ரத்தத்தைக் குடித்து, ரத்த வெறியால் மற்றும் உலகத்தை எல்லாம் அழிப்பதற்கு ஒருப்பட்டு நின்றது. அச்சமயத்தில் தேவர்கள் லட்சுமிதேவியை வேண்ட, அவள் நரசிம்மத்தின் அருகில் சென்றதும் ரத்த வெறி தீர்ந்தது

என்று வைஷ்ணவர்கள் கூறுவர். ஆனால், சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள், தேவர்கள் எல்லோரும் சிவபிரானிடம் சென்று முறையிட, அவர் சரப வடிவில் வந்து, நரசிம்மத்தின் கொட்டத்தை அடக்கினார் என்று கூறுவர். 'சரப புராணம்' என்று ஒரு புராணமும் தமிழில் உண்டு.

இங்ஙனமே கிளைச் சமயங்களின் விரோத மனப்பான்மையால் கதைகள் வளர்ந்துகொண்டே சென்றன.

கிளைச் சமயங்களைத் தவிர, புறச் சமயங்களும் இத்தகைய வரலாறுகள் பெருகுவதற்குக் காரணமாய் இருந்தன. உதாரணமாக, பௌத்த சமயத்தையும் ஜைன சமயத்தையும் கூறலாம். பௌத்தர்கள் ராமனைப் பற்றியும் தசரதரைப் பற்றியும் புராணங்கள் எழுதி, அவர்கள் இருவரும் தங்கள் போதிசத்துவர்கள் ஆவார்கள் என்று எழுதி வைத்தனர். இச்சரிதங்கள், 'தசரத ஜாதகம்,' 'இராம ஜாதகம்' என்ற ஜாதகக் கதைகளில் உள்ளன.

ஜைனர்களும் பின்வாங்கவில்லை. அவர்கள் 'பௌம சரிதம்' என்ற நூலில், ராமாயணம் முழுவதையும் அமைத்திருக்கின்றனர். இதில் இராமன் ஒரு ஜைன அரசனாக இருந்தான் என்று கூறப்படுகிறது. கண்ணன் என்பது பிராகிருதச் சொல் என்றேன். இந்த ஜைனர்கள் கண்ணன் சரித்திரத்தில் பல பகுதிகளையும் தங்களுக்கு உரியனவாகக்கொண்டு, கிருஷ்ணனை ஒரு ஜைன முனிவனாகவும் ஜைன அரசனாகவும் கொண்டு கதை வளர்த்தனர்.

இவ்வாறெல்லாம் தெய்வ சரிதங்கள் வளர்ந்து, மேலும் மேலும் பெருகிக்கொண்டே போயின. அகச் சமயம், புறச் சமயம் என்பவற்றின் தெய்வ வரலாறுகள் தவிர, இந்தச் சமயங்களுக்குரிய பக்தி நெறியும், வரலாறுகளும் பெருகின. இத் தெய்வங்கள் அடியார்களுக்கு அருள்புரிந்த சரித்திரங்கள், இவர்கள் அடியார் பொருட்டுச் செய்துள்ள அற்புதங்கள், அடியார்கள் செய்துள்ள அற்புதங்கள் இவை எல்லாம் இவ்வித பக்தியின் விளைவே.

தெய்வ வரலாறுகளில் வடநாட்டில் கிருஷ்ணன் - ராதை இவர்கள் இடையில் உள்ள காதற் கதைகளும் சிறப்பாகக் கூறத்தக்கன. இவ்விருவரும் நிகழ்த்திய நாட்டியம் 'ராசக்

கிரீடை' என்று சொல்வது. இந்நாட்டியத்தில் அமைந்த காதற் பாட்டுகள் மகாராஷ்டிர மொழியில் மிகவும் பிரசித்தமாய் உள்ளவை. 'ராசக்கிரீடை' யின் அநுபவத்தில் மீராபாய் சிறந்து விளங்கிய செய்தி, இன்றும் நமது மனத்தை உருக்குகிறது. பக்தி யின் ஓர் அம்சமாக உள்ள இவ்வகைப் பாட்டுக்கள் நாடெங் கும் பரந்தன.

தென்னாட்டிலும் இதனோடு ஒத்த சரித்திரம் ஒன்று தோன்றிவிட்டது. இங்கே கண்ணனின் காதலுக்குரியவளாக விளங்கியது நப்பின்னைப் பிராட்டி. இவருடைய சரித்திரங்கள் பொதுவாக நன்கு அறியப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இந்தப் பெயரும் வடநாட்டில் கிடையாது. பின்னை என்ற பெயர்க் காரணமும் அறியக்கூடவில்லை. பின்னைப் பிராட்டியாரைக் குறித்து நம்மாழ்வார்,

பின்னைகொல்? நிலமா மகள்கொல்?
திருமகள்கொல்? பிறந்திட்டாள்

என்று பாடியுள்ளார்.

இந்தச் சரித்திரம் தவிர, ஸ்ரீ ஆண்டாள் சரித்திரமும் நாம் இங்கே கவனிக்கத் தக்கது. வடநாட்டில் ராதை என்ற காதலியின் கதையோடு மீராபாய் என்ற சரித்திரம் அறிந்த ஒரு பெண்ணின் கதையும் சேர்ந்து வருவதுபோல, நப் பின்னையின் சரித்திரத்தோடு உண்மையில் வாழ்ந்த ஆண்டாளின் சரித்திரமும் சேர்ந்துள்ளது என நாம் அறிந்து மகிழலாம்.

ஆண்டாள் மிக அருமையான காதற் பாடல்களைக் கண்ணன் மீது பாடியிருக்கிறார். ஆனால், இக் காதற் கவிதைகளைத் தொடங்கியவர் பெரியாழ்வார் என்று கூறுதல் வேண்டும். இவ் விருவருந்தாம் கண்ணபிரானின் சரித்திரம் தமிழ்நாட்டில் பரக்க வழங்குவதற்கும், அவன்மீது உள்ள பக்தி சிறந்து ஓங்குவதற்கும் காரணமாய் உள்ளவர்கள்.

பின்வரும் பாடல்களைப் பாடி நோக்குக :

பாலைக் கறந்தடுப் பேறவைத்துப்
பல்வளையாள் என்மகள் இருப்ப
மேலை அகத்தே நெருப்பு வேண்டிச்
சென்று இறைப் பொழுதங்கே பேசிநின்றேன்

சாலக் கிராமம் உடைய நம்பி
சாய்த்துப் பருகிட்டுப் போந்துநின்றான்;
ஆலைக் கரும்பின் மொழியனைய
அசோதை நங்காய், உன்மகனைக் கூவாய்

என்பது பெரியாழ்வார் பாசுரம்.

நீரி லேநின் றயர்கின்றோம் நீதி யல்லா தனசெய்தாய்:
ஊரகம் சாலவும் சேய்த்தால் ஊழி யெல்லாம் ஊர்வானே
ஆர்வ முனக்கே உடையோம் அம்மனை மார்கா ணில் ஒட்டார்
போர விடாயெங்கள் பட்டைப் பூங்குருந் தேறியி ராதே

என்பது ஆண்டாள் பாசுரம். இவைகளைப் படிக்குந்தோறும் பக்தியும் காதலும் ஒன்றுபட்டு நம் மனத்தை, அள்ளுகின்றன.

17. ராதாவும் கிருஷ்ணனும்

வடநாட்டுக் கிருஷ்ண சரித்திரங்களிலே பிரபலமாய் விளங்கும் ராதாவைக் குறித்துத் தென்னாட்டில் ஒன்றும் அறியமாட்டோம். இச்சொல்லுக்குச் செல்வம் அல்லது வெற்றி என்பது பொருள். இப்பெயர் கோபியர்களில் ஒருத்திக்கு வழங்கி வந்தது. இவள் நந்தகோபாலுக்குத் தந்தை முறையினள். எனவே, இவளைப் 'பின்னை' என்றும் 'நப்பின்னை' என்றும் தமிழ் மக்கள் வழங்கினர். இவளைப் பற்றித்தான்,

துப்புடைய யர்கள் தம்சொல் வழுவா தொருகால்
தூய கருங்குழல் நற்றோகை மயிலனைய
நப்பினை தன்திறமா நல்லிடை யேழ்விய
நல்ல திறலுடைய நாதனு மானவனே

என்றார் பெரியாழ்வார்.

இவளைத்தான் கிருஷ்ணன் மிகமிக மோகித்து, இவளோடு அன்பு லீலைகள் புரிந்துவந்தான் என்று சொல்லுவார்கள். இந்த லீலைகளைக் குறித்து ஜயதேவர் என்ற வடமொழி ஆசிரியர், 'கீதகோவிந்தம்' என்ற அழகிய இனிய செய்யுளைப் பாடியுள்ளார். இசை இனிமையிலும், தாள அமைப்பிலும், சொற்களின் இனிமையிலும் இதை வெல்லக்கூடிய நூல்கள் மிகச் சிலவே உள்ளன. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இது இயற்றப்பட்டது என்பர். இதற்குத் தமிழில் ஓர் அழகிய மொழி பெயர்ப்பு வருமாயின் அது மிகவும் போற்றத்தக்கதா யிருக்கும். கிருஷ்ணனை எப்படி விஷ்ணுவின் அவதாரம் என்று கொண்டிருக்கிறோமோ, அதேபோல ராதையையும் லட்சுமியின் அவதாரம் என்று கூறுவோர் உண்டு.

வேறு ஒரு விஷயமும் இங்குக் கூறத்தக்கது. ராதா - கிருஷ்ண லீலைகள் சாதாரணமாகக் கருதும் சரீர சுகத்தைப்

---

*பின்னை - பின் பிறந்தவன்;

பற்றியது அன்று என்பர். இறைவனுக்கும் உயிர்களுக்கும் உரிய தொடர்பை இச்சரிதம் வெளியிடுகின்றது என உட்கிடையான பொருள் ஒன்றைக் கற்பிப்பார்கள். இதனை முற்றும் கற்பிதம் என்று சொல்லுவதற்கும் இல்லை. அதற்கு உரிய குறிப்புக்களும் ஏகதேசமாக அங்கங்கே காணப்படுகின்றன.

நமக்குப் புலனாவதெல்லாம் வெளிப்படையான பொருள் தான். கோபிகா ஸ்திரீகள் பலரையும் கிருஷ்ணன் தனது காதலி களாகக் கொண்டு, வடமதுரையை அடுத்துள்ள முல்லைக் காடு களில் திரிந்துவந்தான் என்று சரித்திரம் கூறும். இக்காதலனுக்கு வரம்பு முறையுங்கூட இல்லை என்றே தோன்றுகிறது. கிருஷ்ண னுக்கு அத்தைமுறை ராதை என்று ஒரு சரித்திரம் கூறும். இந்தச் சரித்திரமும் இங்கே நாம் அறிதற்குரியது. இச்சரித்திரம் முழுவதும் பாகவத புராணத்தில் விரிவாகக் கூறப்படுகிறது. நமது பாரதநாட்டிலே பிருந்தாவனம் என ஓர் இடம் இருக்கிறது. அது கிருஷ்ணனுக்குப் பூலோகத்தில் மிக உகந்த இடமாக இருந்தது. அதில் அனுபவிக்கத் தக்க இன்பங்களுக்கு எல்லையே இல்லை. அது சுவர்க்கத்தைக் காட்டிலும் பெரிது. அதன் அழகு சொல்லி முடியாதது. அந்த இடத்திலே எத்தனையோ இடையர் குலங்கள் வசித்துவந்தன. இடையர் குலங்களுக்கெல் லாம் தலைவன் நந்தன் என்பவன். இவன்தான் கிருஷ்ணனைத் தனது வளர்ப்புப் பிள்ளையாகக் கொண்டு வளர்த்து வந்தவன். பிருந்தாவனத்திற்கு வடக்கே வடமதுரை இருந்தது. அதை உக்கிரசேனன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவனுக்குக் கம்சன் என்ற புத்திரன் இருந்தான். இந்தப் புத்திரன் தனது நாட்டினின்றும் தன் தந்தையை விரட்டிவிட்டுச் சிம்மாசனத்தில் வலிந்து ஏறிக் கொடுங்கோன்மை புரிந்துவந்தான். அவன் செய்து வந்த அநீதிகளுக்கும், தீய செயல்களுக்கும் கணக்கே இல்லை.

பூதேவியால் இந்தக் கொடுங்கோன்மையைச் சகிக்கமுடிய வில்லை, பசு வடிவம் தாங்கி, நான்முகனாகிய பிரம்மாவினிடத் தில் சென்று வணங்கி, தனது குறைகளைக் கூறினாள். ''எல்லா வற்றையும் படைத்த தெய்வமே! நான் இருப்பது உன்னால்தான். ஆகவே, என்னைக் காப்பாற்றும் பொறுப்பு உன்னைச் சார்ந்தது. கம்சன் என்ற அரசன் பாபச் செயல்களில் முழுதும் ஈடுபட்டு, என்னை மிக மிக வருத்தி நைவிக்கிறான். இந்தக் கொடுங்கோன் மையை இனி என்னால் பொறுக்க முடியாது. இவனைப் படைத்தது நீதான், ஆகவே, இவனை அடக்குவதையும் நீதான் செய்துவிடவேண்டும்'' என்று முறையிட்டாள்.

பிரம்மாவிற்கு மிகவும் கோபம் வந்தது. பூதேவியோடு கூடச் சிவபெருமானிடத்திற்குச் சென்றார். தம்மிடம் வந்த பூதேவியிடமிருந்து தாம் கேள்வியுற்ற கொடூரச் செயல்களைப் பற்றிக் கூறினார். பின், சிவனும் ஏனை இருவரும் சேர்ந்து பரம்பொருளாகிய விஷ்ணுவிடம் சென்றார்கள். அவனை வணங்கிய பின், பசு வடிவில் வந்த பூதேவி பின்வருமாறு கூறத் தொடங்கினாள்: ''தேவ தேவனே! நீ எங்கள் பிரார்த்தனைகளை எல்லாம் அன்போடு கேட்டு, எப்பொழுதும் அருள்புரிகின்றாய். என்னுடைய துக்கத்தை உன்பாற் சொல்லி, உன்னிடம் இருந்து ரக்ஷை பெறும்பொருட்டு இங்கு வந்துள்ளேன். மிகக் கொடியோனான கம்சன், இதுவரை கண்டும் கேட்டுமிராத கொடூரச் செயல்களைச் செய்துவருகிறான். அநீதியை நீக்கி, நீதியை நிலை நிறுத்திச் சிஷ்ட பரிபாலனம் செய்யும்படி, உனது திருவடிகளில் தலைவைத்து வணங்குகிறேன்.''

இதைக் கேட்டதும் விஷ்ணு பிரம்மாவை நோக்கி, ''கம்சனுக்கு ஏதாவது தனிப்பட்ட வரம் அளித்திருக்கிறீரா?'' என்று கேட்டார். பிரம்மா, ''நான் அளித்த வரம் இது: கம்சனை அவனது மருகன் அல்லாமல் வேறு ஒருவனும் வதைக்க முடியாது. ஆதலால், தேவரீர் அவனது தங்கையாகிய தேவகியின் வயிற்றில் பிறக்க வேண்டும். இதைத் தவிர வேறு வழி இல்லை'' என்றார். எனவே, பிரம்மாவின் கூற்றுப்படி, விஷ்ணு தேவகியின் புத்திரனாக அவதாரம் செய்தார். இந்தத் தேவகி, வாசுதேவன் என்பவனது மனைவி, கம்சன் இவற்றை எல்லாம் அறிந்து எங்கும் ஒற்றர்களை நியமித்தான். வாசுதேவனையும் தேவகியையும் விலங்கிட்டுச் சிறையிலிட்டான். ஆனால், வெகு சீக்கிரத்திலேயே ஓர் அஷ்டமியில் கிருஷ்ணன் பிறந்தான். இதைத் தெரிந்தவுடன், இந்தக் குழந்தையைக் கொன்றுவிடுவது என்று கம்சன் தீர்மானித்துக்கொண்டான். ஆனால் தேவகி காவலாட்களின் கடுமைக்குத் தப்பி, கோகுலம் என்ற நகரத்திற்குக் குழந்தையை அனுப்பிவிட்டாள்,

அதே காலத்தில், நந்தனின் மனைவியான யசோதைக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. கம்சனது நோக்கத்தைத் தவிர்ப்பதற்காக இந்த இரண்டு குழந்தைகளும் மாற்றப்பட்டன. யசோதைக்குத் தான் பெற்ற குழந்தை ஆணா பெண்ணா என்பது நிச்சயம் இல்லாமல் இருந்தது. ஆகவே. அவளுக்குக் குழந்தைகளை மாற்றிவிட்டது தெரியாது. கிருஷ்ணனைத் தான் பெற்றெடுத்த மகனாகவே பாவித்தாள்.

கம்சன் தன் தங்கை பிரசவித்தாள் என்று தெரிந்ததும், குழந்தையைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டான்.' ஆனால், குழந்தையோ வெகு தூரத்தில் நந்தன் வீட்டில் சௌக்கியமாக வளர்ந்துவந்தது. கம்சன் தன் கோபத்தைக் கிருஷ்ணனுக்குப் பதிலாக மாற்றப்பட்ட பெண் குழந்தையிடத்தில் தீர்த்துக் கொள்ள நினைத்தான். இந்தக் குழந்தையும் தெய்வாம்சம் பொருந்தியது. இந்தக் குழந்தையிடம் ' பத்திரகாளி'யின் அம்சம் இருந்தது என்பர்.

குழந்தைப் பருவத்தில், பருவத்திற்கேற்ற பல வகையான விளையாட்டுக்களைக் கிருஷ்ணன் செய்துவந்தான். பொதுப்பட அவன் செய்துவந்தது. பால், வெண்ணெய் முதலியவை களைத் திருடித் தன் தோழிப் பெண்களோடு பகிர்ந்து கொள்வது. இவ்வாறாக, முல்லை நில வாழ்க்கையை அவன் வாழ்ந்துவந்தான். வேய்ங்குழல் ஊதுவதும் அவனுடைய முக்கியத் தொழிலாக இருந்தது.

மணப்பருவம் அடைந்ததும், எல்லையற்ற இன்பக் கேளிக்கை யிலேயே அவன் பொழுதுபோக்கினான். இந்தக் கேளிக்கையில் உறவு முறைகூட அவனைத் தடைப்படுத்தவில்லை என்று கூறுவர். பெண்களை வலிந்து எடுத்துக்கொண்டு செல்வதும், அவர்களைத் தனக்குரிய பெண்களாக வைத்து அவர்களோடு கொஞ்சி லீலைகள் புரிவதும்தான் அவன் மேற்கொண்ட செயல்கள்.

மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு
வீங்கிருள்வாய் என்தன் வீதியூடே
பொன்னொத்த வாடைக்குக் கூடலிட்டுப்
போகின்றபோது நான் கண்டுநின்றேன்

கண்ணுற் றவளைநீ கண்ணாலிட்டுக்
கைவிளிக்கின்றதும் கண்டே நின்றேன்
என்னுக்கு அவளைவிட்டு இங்கு வந்தாய்?
இன்னும் அங்கே நட நம்பி! நீயே

என்று குலசேகர ஆழ்வார் பாடுவதை இங்கே படித்து நாம் இன்புறலாம்.

இதன் இடையிலே தனது மாமனாகிய கம்சன்மீது போர் தொடுத்தான். அவனை வென்று கொன்று அரசியலை உக்கிர சேனனிடம் ஒப்படைத்தான்.

கோபியரோடு லீலை புரிந்தது காணாது என்று, திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றும் இச்சைப்பட்டான். இதன் பொருட்டு ருக்மிணி முதலிய பல பெண்களைப் பிடித்துக் கொண்டு வந்தான். இப் பத்தினியர்களே பதினாயிரம் பேர் இருந்தார்களாம்! அவனுடைய சந்ததிகளுக்கு எல்லையுண்டா? போர் முயற்சியிலும் அவன் குறைந்தவனாகக் காணப்படவில்லை பாணாசுரன் முதலியோரைப் போரில் எதிர்த்தான். பாணா சுரனின் புத்திரியாகிய உஷா, கிருஷ்ணனுடைய பௌத்திரனான அநிருத்தனைக் காதலித்து இருவருக்கும் களவொழுக்கம் நிகழ்ந்த காலத்து, பாணாசுரன் இதனையறிந்து, அநிருத்தனைச் சிறை யிலிடுவித்தான். கிருஷ்ணன் சிவபிரான் முதலியோர் பாணாசுர னோடு மிக நீண்ட காலமாகப் போர் புரிந்ததன் பயனாக அநிருத்தனுக்குச் சிறைமீட்சி ஏற்பட்டது. பின்பு காதலர்க ளுக்குள் திருமணம் நிகழ்ந்தது. இப்போர்களுக்குப் பின்னர் சமுத் திரத்தினிடையில் துவாரகை என்ற நகரைக் கட்டித் தன் பெரிய குடும்பத்தை அங்கே ஸ்தாபித்தான். அவனது குழந்தைகள் எல்லாரும் அவன் கண் முன்னாலேயே ஒவ்வொருவராக இறந் தனர். அவனும் ஒரு சாபத்தினால் ஒரு வேட்டுவனுடைய அம்பு பட்டு இறந்தான்.

கிருஷ்ணன் சரித்திரம்போல் நமது மனத்தைக் கவரக்கூடிய வேறு தெய்வ சரித்திரம் இல்லை. ஒருவேளை ஆறுமுகக் கடவு ளின் சரித்திரத்தைத்தான் சொல்லலாம். நாம் இன்று அவனைத் தெய்வமாக வழிபடுகிறோம் என்றால், அவனிடம் தெய்வத் தன்மை முற்றிலும் விளங்குகிறது. அவனிடம் உள்ள குறைகள் மக்களினத்திற்குரிய குறைகள். இக் குறைகளே நாம் அவனை அன்பு செய்யும்படித் தூண்டுகின்றன. மகாபாரதத்தில் அர்ச்சுன னுக்குக் கீதையை உபதேசித்தான் என்ற சரித்திரம் உண்டு. இந்தக் கீதைதான் 'பகவத்கீதை' என்று பிரசித்தமாய் விளங்குவது. இக் கீதையைப் போற்றாத மக்கள் இல்லை. இதைப்பற்றி ஆழ்வார்கள் பாசுரங்களில் யாது ஒரு குறிப்பும் கிடையாது என்பது இங்கே மனங்கொள்ளத் தக்கது.

18. நவீன கீதை

ஸ்ரீ பகவத் கீதையை அருளிச் செய்தவன் கண்ணபிரான். வேத உபநிஷதங்களுக்குச் சமமாகக் கருதப்படும் அக் கீதை நமது பாரத தேசத்து மக்கள் அனைவராலும் போற்றப்பட்டு வருகிறது. சமய சாஸ்திரமாகவும், தத்துவ சாஸ்திரமாகவும், அது பெரும் புகழ் பெற்று விளங்குகிறது. தேசீய உணர்ச்சி நம் நாட்டில் பரவிவரும் இக்காலத்தில் அப் பெருநூல் தேசீய நூற் செல்வ மாகவும் பாராட்டிக் கற்கப்படுகிறது. அதன் வரலாறு நம் நாட்டினர் அனைவரும் அறிந்ததேயாகும்.

பாரத யுத்தம் தொடங்கிவிட்டது. கௌரவரும் பாண்டவரும் தத்தம் சேனைகளை அணிவகுத்து நிறுத்தியிருக் கின்றனர். இருதிறத்தாரது படைகளுக்கும் நடுவே, அருச்சுனன் தனது ரதத்தைச் செலுத்துவித்துப் படைகளையும் படைத் தலைவர்களையும் நோக்குகிறான். இரு பக்கத்திலும் தந்தைகள், பாட்டன்மார்கள், ஆசாரியர்கள், மாமன்மார்கள், சகோதரர்கள் புத்திரர்கள், பௌத்திரர்கள், நண்பர்கள் முதலியோர்கள் காணப்படுகிறார்கள். அருச்சுனன் அச்சங் கொள்ளுகிறான்; இவர்களைக் காப்பதன் பொருட்டுப் போர்புரிவது இயற்கையா யிருக்க, இவர்களையே கொல்வது பழியும் பாவமும் ஆமென்று கருதுகிறான்; போர் புரிவதில் சிறிதும் கருத்தின்றிக் கோழை யாய் நிற்கின்றான். அவனது ரதத்தின் சாரதியாயிருந்த கிருஷ்ணன் அவனைத் தேற்றித் தைரியம் ஊட்டிப் போர் புரியச் சொல்கிறான். அத்தேற்ற வாசகமே நமது கீதையாய்ப் பரிணமித்தது.

உலக வாழ்வே போர் மயமாக உள்ளது. இப்போர் பூண்டு நிற்கும் வேஷங்கள் பலபடியாக இருக்கும். அது நிகழ்வதற்குரிய காரணமும் பலவகையாயிருக்கும். அது நிகழும் களங்களும் பல்வேறு திறத்தவையாயிருக்கும், ஆனால் போர் நிகழாத காலமோ இடமோ கிடையாது. பகைமைக்காகப் போர்; நட்புக் காகப் போர்; பகைமையை ஒழித்துச் சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காகப் போர்; பிறரை அடிமையாக்கப் போர்; அடிமை நிலையை ஒழிக்கப் போர்; ஒத்துழைப்பிற்குப் போர்;

ஒத்துழையாமைக்குப் போர்; மண்ணுக்காகப் போர்; பொன்னுக் காகப் போர்; உணவுக்காகப் போர்; உண்வின்மைக்காகப் போர்; லாபத்திற்காகப் போர்; நஷ்டத்திற்காகப் போர்; ஸாத்விகப் போர்; அஸாத்விகப் போர் — ஏதாவது ஒரு வடிவில் ஏதாவது காரணம் பற்றிப் போர் நிகழ்ந்த வண்ணமாகவே இருக்கிறது. வாழ்க்கைப் போராட்டம் என்பது பரம்பொருளைப் போல் நித்தியத்துவம் பெற்றுள்ளது. இதனை ஒழிப்பதற்கு அணுகுண்டுப் பிரயோகத்தாலும் இயலாது.

இந்நிலையில் நாம் யாது செய்தல் வேண்டும்? போர் புரிந்து நமது கடமையை நிறைவேற்றுதலே தக்கது. இதனைத்தான் அருச்சுனனுக்கு உபதேசஞ் செய்யு முறையால், கண்ணபிரான் நமக்கு உணர்த்தியிருக்கிறார். ஆனால் இங்கே கடமையென்பது க்ஷத்திரிய தருமமாகும். வருணாச்சிரம தர்மங்களின் மீது கட்டப் பட்டது. தற்காலத்தில், இது மிகவும் குறுகிய பொருள் அல்லவா?

பகவத்கீதை தோன்றியது சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன் என்பர் ஆராய்ச்சியாளர். அக்காலத்துள்ளாரது மனநிலையி னின்றும் நமது மனநிலை எவ்வளவோ மாறுபட்டுவிட்டது. அவர்களது சூழ்நிலையும் பெரிதும் வேற்றுமைப்பட்டன. அவர்கள் நோக்கமும், நமது நோக்கமும் ஒற்றுமைப்பட்டன அல்ல. இப்போதுள்ள நோக்கங்கள் யாவை ? ஜாதி வேற்றுமை ஒழியவேண்டும்; தீண்டாமை ஒழிய வேண்டும்; ஒற்றுமை பெருக வேண்டும். பாரத மக்கள் அனைவரும் ஒரு குலத்தினர் என்ற கருத்து உறுதியடைந்து அது அனுபவத்தில் உண்மையாதல் வேண்டும். ஜாதி வாழ்க்கை யென்பது தேசீய வாழ்க்கையில் ஒன்றி மறைந்துவிடுதல் வேண்டும். இவ்வொன்றிய தேசீய வாழ்க்கையினால்தான் அடிமை வாழ்வு ஒழிந்து சுதந்திர வாழ்வு பெறுதல் கூடும். இச்சுதந்திர வாழ்வு பெறுதலே நமது கடமையாகும். இக் கடமையை நிறைவேற்றுதற் பொருட்டு எவ்வகையான தியாகத்தையும் நாம் புரியத் தயாராயிருத்தல் வேண்டும். இப் புதிய உபதேசத்தை, தமிழ் மக்களுக்கு அறிவு றுத்திய பெரும் பேராசிரியர் நமது தேசீய கவி சுப்பிரமணிய பாரதிதான். தேசீய உணர்ச்சி நிரம்பிய இவரது பாடல்களைத் 'தேசீய கீதை' அல்லது 'நவீன கீதை' என்பதில் சிறிதும் தவறில்லை. பகவத் கீதை ஸமஸ்கிருத மொழியில் இயற்றப் பட்டது. ஆதலால் சிலரே அதனை அறியக்கூடும். தத்துவ சாஸ்திர மாதலால் அவருள்ளும் மிகச் சிலரே அதன் கொள்கை களை உணர்ந்து அனுபவத்தில் கையாள முடியும். ஆனால் நமது

தேசிய கீதை தமிழ்ச் செய்யுளில் அமைந்துள்ளது. அதன் தமிழ் வழக்கொழிந்த பழந் தமிழ் அல்ல. ஆதலால் தமிழ் மக்கள் அனைவராலும் அது எளிதிலுணர்ந்து மேற்கொள்ளத் தக்கதாயுள்ளது.

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம் (வந்தே)

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத் தேசத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே (வந்தே)

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒன்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்? (வந்தே)

புல்லடிமைத் தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி (வந்தே)

புதுமைத் தமிழில், ஆத்ம சக்தி முழுதும் வெளிப்படத் தோன்றுமாறு பாடிய இச் செய்யுட்கள் 'நவீன கீதை' என்பதை நாம் தெளிவுறக் காணலாம். இந் நவீன கீதையின் உபதேசங்கள் நமக்கு வழிகாட்டியாய் என்றும் நிலவுக!

19. சமயமும் லட்சியங்களும்

சமயம் அல்லது மதம் என்றதன் கருத்தை நாம் வரையறை செய்ய முயல்வது அவசியமன்று. வரையறை செய்வதானால் ஆதிகாலந்தொட்டு இன்றுவரை, எல்லாத் தேசங்களிலுமுள்ள எல்லா மதங்களுக்கும் பொதுவாயிருக்கும் அடிப்படையான கருத்துக்களைத் தேர்ந்து தொகுத்து வைக்கவேண்டியதாகும். ஒருவரது கல்வியின் திறத்தையும் ஆராய்ச்சி வன்மையையும் மட்டுமே அவ்வகை இலக்கணமானது புலப்படுத்தும். முடிவில் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் அதனைக் கொள்ளுதல் வேண்டும். நமது சமூகங்களுக்கு அதனால் பலன் யாதும் விளையும் என்று சொல்ல முடியாது.

ஆனால், பலவேறு சமயங்களும் ஆதிகாலந் தொட்டு மக்களையும், சமுதாயங்களையும் ஆட்டி வந்திருக்கின்றன. எவ்வகையான லட்சியங்களை மேற்கொண்டு இச்சமயங்கள் வழங்கி வந்தன என்பதை நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். வரலாற்று முறையிலேயே இந்த லட்சியங்களை நாம் அறிதல் வேண்டும். இம்முறையிலே தோன்றுகிற சிற்சில கருத்துக்களைத் தான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

ஆதிகாலத்தில் மக்கள் இனம் இனமாகவும் கூட்டங் கூட்டமாகவுந்தான் வாழ்ந்து வந்தனர், அவர்களுக்குச் சாதாரணமாகவுள்ள இயற்கை நிகழ்ச்சிகளும் கூடப் பெரியதோர் அச்சத்தை உண்டாக்கின. இயற்கை நிகழ்ச்சிகளுக்குரிய இயற்கைக் காரணங்களைத் தெரிந்துகொள்ள அவர்களுடைய அறிவு பக்குவப்படவில்லை. இந்நிகழ்ச்சிகளைத் தங்கள் அறிவுக்கு அப்பால் நின்ற தெய்வங்கள் உண்டு பண்ணிவருகின்றன என்று கொண்டார்கள். அத்தெய்வங்கள் இன்ன சமயத்தில் இது செய்யும் என்று அவர்களுக்குத் தெரிய முடியாதல்லவா? இதனால், அவை தங்களுக்குக் கெடுதி ஏதாவது செய்துவிடும் என்று அடிக்கடி பயங்கொண்டு வந்தார்கள். தெய்வங்களுக்குப் பலி முதலியன சேர்ந்து பிரீதி செய்தால் அவை துன்புறுத்தா என்றும் கருதினார்கள். இதனாலேயே உயிர்ப்பலி யிடுதல் முதலிய கிரியைகள் ஆதிகாலத்தில் ஏற்பட்டன. இவை நாளடைவில் சமூகத்தினரின்

பழக்க வழக்கமாகவும் ஆசாரமாகவும் சடங்குகளாகவும் பரிண மித்து விட்டன. ஆகவே, முதற்படியில் சமூகத்திற்கும், அடுத்த படியாகச் சமூகத்தில் உட்பட்ட தனி மனிதனுக்கும், தெய் வங்கள் பிரீதிப்பட்ட பொழுது நன்மை விளைந்தன என்று கருதி வந்தார்கள், சமூகத்தின் நலமே லட்சியமாக முதலில் விளங்கிற்று.

வெகுவிரைவில், பலியிடுதல் முதலிய கிரியைகளில் சமூகத்தில் ஒரு சிலர் பயிற்சிபெற்று, பொதுமக்களால் நன்குமதிக் கப்பட்டார்கள். இங்ஙனம் பயிற்சி பெற்றவர் தங்களுக்கு ஏற்பட்டு விட்ட கௌரவத்தை இழக்க எளிதில் மனம் பொருந்தாதவரா யினர். இதனாலேயே குருக்கள் வகுப்பினர்கள் சமுதாயத்திற்குள் தோன்றிவிட்டார்கள். இவர்கள் தெய்வப்பிரீதி பற்றிய கிரியை களையும் சடங்குகளையும் வெகுவிரிவாக அமைத்தனர். தெய்வங்கள் தம்மோடு நெருங்கிய உறவுகொண்டு லீலைபுரித லுளதெனவும் காட்டினர். சமுதாயமும் இக்காட்சிகளை விரும் பியது. இதற்கும் மேலாக தங்களிடத்திலே தெய்வம் தோன்றி வெளிப்படுவதாகவும் தங்களிடத்திலே தெய்வத்தன்மையும் ஏற் பட்டு விட்டதாகவும் தாங்களே நம்பி அற்புதங்களை செய்ய முற் பட்டனர். சமுதாயத்தில் உட்பட்டவர்கள் குற்றம் யாதேனும் செய்வதாயிருந்தால் அதற்குப் பரிகாரம் அல்லது பிராயச்சித்தம் உண்டென்றும், பரிகாரச் செயல்களைச் செய்து முடித்தால் குற்றம் நீங்கிவிடும் என்றும், குருக்கள் போதித்து வந்தார்கள். பரிகாரச் செயல்களின் காரணமாக, இக் குருக்கள் முதலான வர்கள் சமுதாயத்திற்கு இன்றியமையாதவர்கள் என்று பொது மக்கள் தெளிந்துகொண்டனர். இவர்களுடைய சொற்சக்தி மிகுதிப்பட்டது. சமுதாயத் தலைவனோடு அல்லது அரசனோடு சமத்வம் என்ற நிலைமையும் இவர்களுக்குக் கிடைத்தது. சில சில துறைகளில், அத் தலைவனுக்கு மேற்பட்டவர்களாகவும் இவர்கள் விளங்கினார்கள். சமூகத்தில் தலைமை அல்லது அரசியலில் தலைமையே இரண்டாவது படியில் லட்சியமாக விளங்கிற்று.

குற்றம் பரிகாரம் முதலிய கருத்துக்கள் ஏற்படவே, சமுதாயம் என்ற ஸ்தூலத் தொகுதியைக் காட்டிலும் சிறப்பாகத் தனி மனிதன் கருதப்பட்டான். ஏனென்றால், குற்றம் செய்வது தனி மனிதனாகவேனும் அல்லது சமூகத்தின் உட்பிரிவு ஒன்றாக வேனும்தான் இருத்தல் கூடும். பிராயச்சித்தம் செய்பவர்களும்

அவ்வாறே தெய்வத்தின் பிரதிநிதிகளாகிய குழுக்கள் இத் தனி மனிதர்களாலேயே அதிக இலாபம் பெற்று வந்தார்கள். ஆகவே, தனி மனிதனுடைய நன்மையைத் தெய்வம் முக்கியமெனக் கருதுவதாகக் கொள்ளப்பட்டது. சமூகத்தின் நன்மை அடுத்த படியாகவே அமைவதாயிற்று. இங்கே தனி மனிதனது இம்மை நலமே சமய லட்சியமாகக் கொள்ளப்பட்டது.

இங்ஙனமாக, தனி மனிதனுக்கும் தெய்வத்திற்கும் தொடர்பு மிகுதியாய் ஏற்பட்டுவிடவே, இதினின்றும் பல விளைவுகள் உண்டாயின. ஒருவன் ஒரு குற்றம் செய்தான் என்று வைத்துக் கொள்வோம். அவன் குற்றம் செய்யும் வரை சிறந்த நல்லியல்புகளை உடையனவாகவும் இருந்தனன் என்றும் நாம் கொள்வோம்; திடீரென அவனது மனமானது திரிந்து குற்றம் செய்ய முற்படுவானேன்? குற்றம் செய்த அவனுக்குப் பலன் வேண்டாமா? தண்டனை வேண்டாமா? இவைகள் சில சமயங்களில் இல்லாமல் போய்விடுகின்றனவே! பரிகாரம், பிராயச் சித்தம் இவற்றின் மூலமாகத் தெய்வங்கள் குற்றம் செய்தவனை மன்னித்து விடுதல் சரியாகுமா? நீதி என்பதொன்று இருக்க வேண்டுமல்லவா? அந்த நீதிக்குத் தெய்வங்களும் உட்பட்டுத் தானே இருக்கவேண்டும்? இவை போன்ற பல கேள்விகள் தோன்றத் தொடங்கின. அப்பொழுதுதான் நீதி, நல்லொழுக்கம் என்ற கருத்துக்கள் மக்களின் சமூகத்தில் தோன்றத் தொடங்கின, ஒருவன் இகவுலகில் செய்கின்ற காரியங்களுக்குக் காரணமாக முற்பிறவியும், அவற்றிற்குப் பலன்களாக மேலுலகமும் மறு பிறவியும் உள்ளன என்று ஆதிமக்கள் கருதி வந்தார்கள். எனவே, நீதி, கருமம், மறுபிறப்பு, மேலுலகம் முதலிய கொள்கைகள் சமயத்தோடு ஒன்றி நிலைத்துவிட்டன. இந்நிலையில் தனி மனிதனது மறுமை நலமே லட்சியமாக முடிந்தது.

ஆனால், இக்கொள்கைகள் பரவப்பரவ விருத்தியடைய விருத்தியடைய, இவற்றிற்கு எதிரிடையான கருத்துக்கள் தோன்றவும் இடம் ஏற்பட்டுவிட்டது. பலவகையான சமய பேதங்களுக்கும், கொள்கை பேதங்களுக்கும் விதை விதைக்கப் பட்டதென்றே சொல்லவேண்டும்; குருக்கள் முதலியோர் களுடைய ஆதிக்கியம் பொறாமையையும் விளைத்திருத்தல் வேண்டும். அந்த ஆதிக்கியம் ஒழிவதற்குப் பலரும் முயற்சி செய்து வரலாயினர். இதில் முக்கியமாகக் கூறத் தக்கவர்கள் அரசரது வமிசத்தினரேயாவர். இவர்கள் தங்களுடைய முதன் மைக்குக் குருக்கள் தடையாயுள்ளனர் என்பதை உணர்ந்து,

அம் முதன்மையை எவ்வாறு நிலைநாட்ட முடியும் என்று பல பல வகையாக ஆலோசனை செய்து, வேண்டும் முயற்சிகளையும் புரிந்து வந்தார்கள். நாளடைவில் குருக்கள் தங்கள் பதவியை இழக்கலாயினர். மதபேதங்களும் அரசர் முதலியோர்கள் செய்த முயற்சிகளும் இவ்வாறு குருக்களுடைய நிலைமை குலைந்து போவதற்கு முக்கியமான காரணங்களாய் இருந்தன.

ஆனால், சமயக்குருக்கள் எளிதில், விரைவில், தங்கள் பதவிகளை இழந்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. பல நூற்றாண்டுகளாகப் போர்களும் சிறு கலகங்களும் நிகழ்ந்து வந்தன. சமயத்தின் பேரால் உயிரிழந்தவர்களுக்குக் கணக்கே இல்லை. இரத்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடின; அரசுகள் மாறின; தேசங்கள் அழிந்தன என்றாலும் சமய முதன்மை இலகுவில் மாறுபடவில்லை. அரசாங்கங்களின் துணையைக் கொண்டும், சமயப் பிரசாரகரின் துணையைக் கைப்பற்றியும், மக்களுடைய அறியாமையை நன்கு பயன்படுத்திக் கொண்டும், பூர்வத்திலுள்ள அனுஷ்டானங்களை இறுகக் கைப்பற்றிக் கொண்டும், சமயங்கள் தங்கள் பதவியைப் பாதுகாத்து வந்தன.

மக்கள் அறியாமையிலேயே என்றும் மூழ்கி யிருப்பார்களா? அவர்களுடைய அறிவு பலவகையிலும் விருத்தியாகிக் கொண்டே வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே மேல் நாட்டில் விஞ்ஞான அறிவு தலைசிறந்து ஓங்கத் தொடங்கிற்று. பேரறிஞர்கள் பலர் சமயத்தின் அஸ்திவாரக் கொள்கைகளையே ஐயமுறத் தொடங்கினர். இவ் அறிஞர்களைப் பின்பற்றிச் சாதாரண மக்களும் சமயக் கொள்கைகளையும் கதைகளையும் புரளி பண்ணினார்கள். பலர் இவற்றைப் புறக்கணித்துத் தம் மனத்தை உலகியல் விஷயங்களிலே செலுத்தினார்கள். பல்லாயிர வருஷங்களாக மக்களை அடக்கி யாண்டுவந்த சமயங்கள் நொறுங்கி அழிந்துபோகும் நிலை வந்துவிட்டது. மேல் நாட்டவர்கள் நமது பாரத தேசத்தில் புகுந்து, நமது பண்டைக் கொள்கைகளும், சமய உணர்ச்சிகளும் மாறுவதற்குக் காரணமாய் அமைந்தார்கள். என்றாலும், நமது நாட்டிலே விஞ்ஞான அறிவு மிகமிகச் சுருக்கமாயிருந்தபடியாலே, எளிதிலே சமயங்களின் மீதுள்ள பற்று அகன்றுவிடவில்லை; நீதி நெறிகளுக்கு முரண்படாதவையாயும், அவற்றை வலியுறுத்துவனவாயும், மக்களுக்கு நிலைத்த பயன்களைத் தருவனவாயும், அவர்களுக்கு நிரம்பிய

சாந்தியை அளிக்கக் கூடியனவாயுமுள்ள சமய தருமங்களை வேண்டும் ஆற்றலோடு எடுத்து உபயோகித்து, நல்வழிப்படுத்துவதற்குப் பல பெரியோர்கள் பாரத தேசத்தில் தோன்றத் தொடங்கினார்கள். அவர்களுள் இராமகிருஷ்ணபரமஹம்ஸர் ஒருவர். இவருடைய கடைக்கண் நோக்கம்பெற்ற பெரியோர்களுள் சுவாமி விவேகாநந்தர் முக்கியமாக எடுத்துக் கூறத் தக்கவர். இவர் நமது தேசத்து இளைஞர்களுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அவர்களைத் தேசபக்தியிலும், சமய பக்தியிலும், நீதிப் பற்றிலும்; சிறந்தவர்களாகச் செய்வதற்குப் பெரிதும் முயன்றார். இவர் காரணமாகவே, நமது நாட்டில் சமயம் என்பது ஒரு புதிய கௌரவத்தை அடைந்தது. புதிய லட்சியங்களும் கைக்கொள்ளப்படலாயின.

சுவாமிகளுடைய கருத்துக்கள் சிலவற்றை நாம் இவ்விடத்தில் நினைவுக்குக் கொண்டுவருதல் தகும். முதலாவது, இறைவன் எல்லா உயிர்களிடத்தும் தங்கியிருப்பவன்; அவனுக்குப் பாரபக்ஷம் கிடையாது. ஆகவே, எல்லா உயிரினங்களும் இறைவனுடைய சன்னிதியிலே ஒரே நிலையிலுள்ளவர்கள் ஜாதி வேறுபாடு என்பதே இல்லை * தீண்டாச்சாதியார் என்ற பகுப்பு அர்த்தமற்றது. அனைவரும் ஒற்றுமையாக, உடன் பிறந்த சகோதரர்களாக, வாழக் கடமைப்பட்டவர்கள்.

இரண்டாவது, சமயங்களின் உண்மை நிலையை நோக்கும் போது அவைகள் ஒன்றற்கொன்று முரண்பட்டன அல்ல என்பது தெளிவாகும். எல்லா நதிகளும் கடலை நோக்கியே செல்லுகின்றன. அது போல, எல்லாச் சமயங்களும் இறைவனை நோக்கியே செல்லுகின்றன. ஒரே பொருளின் வெவ்வேறு பகுதிகளை மட்டும் கண்டு அதுதான் முழுப்பொருள் என்று கருதிப் பெயரிடுவது போலவும், ஒரே பொருளுக்கு வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு பெயர்களிருப்பது போலவும்தான். உலகத்திலே பற்பல சமயங்களும் உள்ளன. இந்த இரண்டாவது கருத்தைக் கம்பன் இயற்றிய மூன்று கவிகளிலே மிகத் தெளிவாகக் காணலாம். எனினும், இக் கருத்து நாடெங்கும் பரவி நிலை கொண்டது நமது சுவாமிகளால்தான். அக்கவிகள் வருமாறு:

---

* பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (குறள். 972)

கல்லிடைப் பிறந்து போந்து
    கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும்
    இயம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையின் ஒன்றே யாகித்
    துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும்
    பொருளும்போல் பரந்த தன்றே.

(பால. ஆற்று. 19)

தோள்கண்டார் தோளே கண்டார்;
    தொடுகழற் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்;
    தடக்கை கண்டாரும் அஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே
    வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயந் தன்னான்
    உருவுகண் டாரை யொத்தார்,

(உலாவியல். 19)

பேரை யொரு பொருட்கே பல்வகையாற் பேர்த் தெண்ணும்
தாரை நிலையை தமியை பிறரில்லை

(இரணியன். 159)

மேற்குறித்த இருவகைக் கொள்கைகளும் 'ஒற்றுமை' என்ற லட்சியத்தை வற்புறுத்தின.

மூன்றாவதாக, எல்லா உயிர்களும் சமம் என்பது கொள்கை யளவில் அமைந்துவிடாதபடி அனுஷ்டானத்தில் கொண்டுவர வேண்டும் என்ற உறுதிப்பாடு, நமது நாட்டிலுள்ள சமயங்கள் அனைத்திலும் இறைவன் எல்லா உயிர்களிடத்தும் அந்தர் யாமியாக இருக்கின்றான் என்ற கொள்கை பண்டைக்காலந் தொட்டு வழங்கிவருவதுதான். ஆனால், இக்கொள்கை கேவலம் அறிவுப்பொருளாய் மாத்திரம் இருந்ததேயன்றி, பொதுப்படை யான அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. சிற்சில

காலங்களில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரச் சிற்சிலர் முயற்சி செய்துள்ளனர். ஆனால், அம்முயற்சி சிறிது காலம் பயன்விளைத்துச் சிற்சில நன்மைகளைச் செய்து அம்மட்டோடு நின்றுபோயிற்று. ஜாதி மதங்களைப் புறக்கணித்து, எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டி, அவர்களது துன்பத்தைப் போக்கி, சமத்துவ உணர்ச்சியை உண்டுபண்ணி, அவர்கள் இன்புறச் செய்வதே தமது கடமை என இராமகிருஷ்ண பரம ஹம்ஸரின் மரபினர் கொண்டுள்ளார்கள். இதன் பொருட்டு உழைத்து வருவதற்கென்றே எவ்வகைப் பற்றுமற்ற துறவு ஸ்தாபனங்களும் நாட்டப்பெற்றன. இங்ஙனமாக, சமத்துவம் அனுஷ்டிக்கப்படவேண்டும் என்ற புதிய லட்சியம் விளைவதாயிற்று.

இச் சிறந்த கொள்கைகளோடும் அனுஷ்டானத்தோடும் ஒத்துநோக்குதற்கு உரியன தற்காலத்து ஸோவியத் உலகத்தின் கொள்கையும், லட்சியமும். ஒரு முக்கியமான வேறுபாடு நாம் ஊன்றிக் கவனித்தற்குரியது. நம்மவர்களது கொள்கைப்படி, ஏழைகள், கீழ் வகுப்பினர் என்று கருதப்படுபவர்கள், துன்பத்தில் உழன்று கொண்டிருப்பவர்கள், முதலியவர்கள் நம்முடைய கருணைக்கு இலக்கானவர்கள் என்று நாம் கருதுகிறோம். இதனால், உயர்வு தாழ்வு என்பன இக்கொள்கையினின்றும் நீக்கப்படவில்லை. கருணை செய்பவர்கள் மேல் நிலையுள்ளவர்கள், கருணையைப் பெறுபவர்கள் கீழ்நிலையிலுள்ளவர்கள். இவ் வேறுபாடு நம்மவர்களால் இதுவரை ஒழிக்கப்படவில்லை. சிலர் 'எங்களைக் கருணை காட்டுபவர்கள் என்று கருதுதல் கூடாது. ஏழைகள் முதலானவர்களின் வேலைக்காரர்கள் என்றோ அல்லது அவர்களது பொது வேலைக்காரர்கள் என்றோதான் கூறவேண்டும்' என்று சொல்லலாம். இங்கேயும் உயர்வு, தாழ்வு என்ற கொள்கை இருப்பதைக் காணலாம். உயர்வு, வாழ்வு என்ற கொள்கையே ஒழியவேண்டும் என்பது தான் சோவியத் உலகினரின் கொள்கை. அனைவரும் சமம் என்றால், அனைவருக்கும் ஒத்த உரிமை உண்டு; இன்பம் அடைவதற்கும் நல்வாழ்வு பெறுதற்கும் சந்தர்ப்பங்கள் ஒத்தனவாய் அமைதல் வேண்டும்; ஒருவகையிலும் ஏற்றத்தாழ்வு கூடாது. இவைகளே ஸோவியத்து கொள்கைகள். உடைமை என்பது இருக்கும்வரை ஏற்றத்தாழ்வு இருப்பது உறுதி. ஆகவே, எவனுக்கும் தனிப்பட உடைமை என்பது இருத்தல் கூடாது. இக் கொள்கையும் நம்மவர்க்குப் புதிதல்ல. வள்ளுவர் 'யான்' எனது என்பவை ஒழியவேண்டும்' என்று கூறுகின்றார்.

யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் (குறள். 346)

என்பது திருக்குறள் இங்கே 'செருக்கு' என்பது உடைமை பற்றி யெழுந்த ஏற்றத்தினால் உண்டாவது 'வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்' என்றது அளவுபடாத இன்ப நிலையை அடைவான் என்று பொருள்படும். ஒரு வேறுபாடு நோக்கத்தக்கது. வள்ளுவர் கூறியது உண்மைத் துறவிகளுக்கேயாம்; பொது மக்களுக்கு அன்று.

ஆகவே, இந்த ஸோவியத் முடிபும் நம்முடைய சமயங்களின் லட்சியமும் ஒன்றா யிருப்பதைக் காணலாம். நமது சமயத்தின் சார்பாக உழைத்து வரும் துறவிகள் முதலிய அனைவரும் சமுதாயத்தின் நன்மையை நாடி உழைத்து வருபவர்களும் கடைப் பிடிக்கவேண்டும் முக்கியமான ஒழுக்கத்தையே ஸோவியத் கொள்கை உணர்த்துகின்றது. அது யாது என்றால், அனைவருக்கும் ஒத்த உரிமை உண்டு. அவ்வுரிமையை அவர்கள் அடைவதற்கு நாம் முயலுதல் வேண்டும்; அம்முயற்சியில் உடைமை முதலிய பற்றுக்கள் ஒழிதல் வேண்டும் என்பதுவே யாகும். இக வாழ்விலே இவ்வாறு ஒழுகுதலே சமயங்களின் சிறந்த லட்சியமாகும். இந்த லட்சியம் கைகூடுமாயின் இம் மண்ணுலகு விண்ணுலகினும் சிறந்து மேம்படுதற்கு ஐயம் உண்டா? பண்பாட்டின் சிகரமாக அன்றோ இது விளங்குவது?

20. கற்றதனால் ஆய பயன்

பொருள் சம்பாதிப்பதற்குத்தானே நாம் படிப்பது? இந்தக் காலத்தில் பணமுடைஞ்சல் அதிகமாக இருக்கிறது. அரசாங்கத் தாருக்குக்கூட வருகிற வருமானம் போதவில்லை. அந்நிய நாட்டிலிருந்து பண உதவி வந்தால், அதை ஏற்றுக்கொள்ளும் நிலைமையில்தான் நாம் இருக்கிறோம். நமது நாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சலுகை காட்டிக் காட்டி, உயர்தர வகுப்பினர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் கீழ் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். வெகு சீக்கிரத்தில் இவர்கள் வறுமைப்பிணியால் கட்டுண்டு அரசாங்கத்தாரின் இரக்கத்திற்குப் பாத்திரமாவார்கள் என்று தோன்றுகிறது. எத்தனையோ புதுத் திட்டங்கள் வகுத்துக்கொண்டு அரசாங்கம் செல்கிறது. அவற்றிற்கெல்லாம் பணம் வேண்டும். ஏதோ அல்ப சொல்பத்தை வைத்துக்கொண்டிருக்கிறவர்களைக் கசக்கிப் பிழிந்தால் அல்லாமல் பணமுடை நீங்கமாட்டாது.

பள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும் மாணவர்கள் மூலமாக அவர்களது பெற்றோர்களைத் தண்டித்துப் பண வசூல் செய்கிறார்கள், சமீபத்தில் இதற்கு நிவிர்த்தி உண்டு என்று எனக்குத் தோன்றவில்லை. ஆண்டுதோறும் மாணவர்கள் தொகை பெருகுகிறது. கல்வித் திட்டங்கள் நூதன முறையில் வளர்க்கப்படுகின்றன. பெற்றோர்களுக்குத் தம் மக்களின் கல்விச் செலவு ஏறிக்கொண்டே செல்கிறது. இவ்வாறு அமைந்திருக்கும் காலத்தில், நமது படிப்பெல்லாம் பொருள் சம்பாதிப்பதற்குத் தானே என்று நாம் நினைப்பதில் குற்றமொன்றும் இல்லை. பண வருவாயின் பொருட்டுத்தான் நாம் கற்றல் வேண்டுமென்று நான் கருதுவதாக எல்லாருக்கும் தோன்றும். ஆனால், உண்மை அது அல்ல.

பெருமையும் புகழும்

இந்தப் பண வருவாயைக் காட்டிலும், எத்தனையோ மடங்கு பெருமை தருவதான பிறிதொரு பயனையும் நாம் இங்கே நினைவு கூரலாம். ஆனால், இந்தப் பயனை அவ்வாறு அளவிட முடியாது. பெருமையும், பதவியும், புகழும் எளிதிற்

கிடைப்பனவா? இவற்றை அளவிட முடியுமா? இவைகளைக் கல்வியின் பயன் என்று கூறுவதில் தடையில்லை அல்லவா? 'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு' என்றும், 'அறிவுடைய ஒருவனை அரசனும் விரும்பும்' என்றும், 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்றும் நமது பெரியோர்களும் கூறியுள்ளனர். இவைகளைக் கல்வியின் பயன் என்று சொல்லலாம். ஆனால் நான் கருதுவது இவற்றைக் காட்டிலும் சிறந்த வேறு ஒரு பயனை, எவ்வகையாக இப்பயனைத் தெரிந்து கொள்வது என்பதை நாம் நன்றாகச் சிந்தித்தல் வேண்டும். நல்ல, சிறந்த நூல்களைக் கற்பதனால் நற்குணமும், நல்லொழுக்கமும் விருத்தியாகின்றன. இதைக் 'கல்வியின் எதிர் காலம்' என்று பொருள்படும் ஓர் ஆங்கிலச் சிறு நூலில், அதன் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். அதே நூலில் கற்பதற்கு முன் நமது மனச் சுவர் காலியாய் - வெற்றிடமாய் இருக்கிறது என்றும், கல்வி கற்றதன் பின் அதில் ஆழமான சித்திரங்கள் தோன்றுகின்றன என்றும் கூறுகின்றார். இவருக்கு முன்னும் இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். 'மில்டன்' முதலிய பெருங் கவிஞர்களும் இக்கருத்தை உட்கொண்டு, ''ஒரு பெரியோனது உயிர் ஆற்றலே அவன் இயற்றிய பெருநூல்'' என்கிறார். அவருக்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரிஸ்டாடில், ''ஆன்ம வளர்ச்சியின் பொருட்டே கல்வி கற்பது'' என உறுதி கூறுகிறார். நமது நாட்டிலும்,

... ...கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

எனக் கல்வியின் அவசியம் வற்புறுத்தப்படுகிறது.

ஆனால், என்ன விதமாக ஆன்ம வளர்ச்சி ஏற்படுகிறது? நூல் கற்பதனால் உண்டான பயன், தோற்றத்தால் அறியக்கூடியபடி விளங்குகிறதா? - என்ற கேள்விகளுக்கு விடை கொடுப்பது எளிதல்ல. என்ன விதமான லாபம் என்பதும் நமக்குப் புலப்படவில்லை. இவர்கள் கூறுவன எல்லாம் கல்வி கற்றவனுக்குப் புலப்படுமேயல்லாது ஏனையோருக்குப் புலப்படா. நாம் முன் கூறியபடி. அதைத் தொட்டு எண்ணிப் பார்க்க அளவிடமுடியாது. அது இன்ன வகையினது என்று வர்ணிப்பதும் சாத்தியமல்ல. கல்வி முற்றும் நமது வசமாய் நாம் அதனைக் கையாளத் தொடங்கியதன் பின்னரே, அதன் நன்மை விளங்கக் கூடியதாய் உள்ளது;

அவ்வாறு சித்தி எய்தும் வகையில், அதன் தன்மையைக் குறித்துச் சிற்சில குறிப்புக்கள்தான் நம்மால் தர முடியும்.

'கற்றல்' என்றேன். இதனால் நல்ல நூல்களை, நல்ல முறையில் கற்பதைத்தான் நான் மனத்தில் கொண்டுள்ளது. நாலடியாரில்,

கல்வி கரையில, கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து

எனக் கூறப்பட்டுள்ளது.

மதிநுட்பம்

இவ்வகையாகத் தேர்ந்தெடுத்த நூல்களைக் கற்பதனால், நமது மனமும் பாவனையும் வாழ்க்கையுண்மையை உணரும் மதி நுட்பமும் பலதிறப்பட்ட பொருட்காட்சிகள் நிரம்பி அழகு பெறு கின்றன. இம்மூன்றும் புதியவாக உயிர்த் தத்துவம் பெற்றன போலத் தூண்டப்படுகின்றன. இவ்வாறு கனவிலும் நனவிலும் நிகழ்கின்றன. சிற்சில காலங்களில், நாம் நினைத்தறி யாதபடி பாடல்களின் துணுக்குகளும் முழுப் பாடல்களும் நமது மனத்தில் உதித்துவருகின்றன. சில காலங்களில் சட்டை யிட்டு வெளியே புறப்படும்போது, இவ்வாறு நிகழ்தல் உண்டு. ரயிலிலிருந்து கீழ் இறங்கும்போதும், இந்த நிகழ்ச்சியைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் உள்ள சில அழகிய அடிகள் இவ்வாறு தோன்றுதல் சர்வ சாதாரணமானது. கம்பனது மகா காவியத்திலிருந்து எத்தனையோ அடிகளும், பாடல்களும் இவ்வாறு வருதலை நமது அனுபவத்தில் காண்கிறோம். பாடல்கள் மட்டும்தான் இப்படி வரும் என்பது இல்லை. அழகிய கதையை வாசிக்கிறோம்; அந்தக் கதையில் அபூர்வமான சந்தர்ப் பங்கள் நிகழ்கின்றன. அவை நமது மனத்தை விட்டு அகலுவ தில்லை. நமது நித்திரையில் கூட அவைகள் தோன்றிக் கதா பாத்திரங்களில் நம்மை ஈடுபடும்படி செய்கின்றன.

மனவளர்ச்சி

வெகு காலத்திற்குமுன் எனக்கு நிகழ்ந்த ஓர் அனுபவத்தைச் சொல்கிறேன். 'ஸ்காட்' எழுதிய 'ஐவன்ஹோ' (Ivanhoe)

என்ற சரித்திரக் கதையை வாசித்துக்கொண்டிருந்தேன். முடித்த இரவு முழுவதும் அதே நினைவாக இருந்தது. அதன் பல பகுதிகளும் பாத்திரங்களும் முற்றும் என்னைக் கவர்ந்துவிட்டன, இவ்வாறே பல ஆண்டுகளுக்குப் பின்னர் நான் வாசித்த 'பிரைடு அண்டு பிரிஜுடீஸ்' (Pride ane Prejudice) என்ற ஆங்கிலக் கதையில் பல சம்பவங்களும் என் நித்திரையைப் பங்கப்படுத்தி வந்தன. செய்யுளில் ஏதேனும் ஓர் அடி ஞாபகத்திற்கு வந்தபின், அதனோடு தொடர்ந்து நிகழ்ந்த சந்தர்ப்பங்கள், காட்சிகள் முதலியன, நமது மனத்தைக் கவர்ந்து இன்பத்தை ஊட்டுகின்றன. இவைகள் எல்லாம் நமது மனத்தையும், நமது நல்லொழுக்கம், நற்குணம் முதலியவற்றையும் வளர்ச்சியுறச் செய்கின்றன. இக் காட்சிகளின் நல்லியல்பும் அளவும் நமக்குப் பெரும் துணையாக உதவுகின்றன. இவற்றால் நமது பாவனையானது நிறைந்து திகழ்கிறது. மேன்மேலும் நல்ல நோக்கத்தை மேற்கொள்கிறது. ஆனால், இதுபோன்ற நிகழ்ச்சிகளால் மட்டும் பூர்ண திருப்தி அடைந்துகொள்ள முடியாது, இவைகளால் கல்வி இல்லாதாரைவிட நாம் சிறந்து விளங்குகிறோம் என்பது உண்மைதான். ஆனால், இந்த அளவு போதியது ஆகாது. நாம் பெறும் பயனில் ஒரு மிகச் சிறிய அம்சத்தையே இது விளக்குவது. இப்பயனின் தன்மையை அடுத்துக் காண்போம்.

2

குறளின் கருத்து

தமிழ்மறை இயற்றிய திருவள்ளுவர்,

'கற்றதனால் ஆயபயன் என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'

என்று அருளிச் செய்திருக்கிறார். இதற்குச் சாதாரணமாக, கற்றதற்குப் பயன் இறைவனை வணங்குதல் என்று கூறி முடிப்பர். கல்லாதவர்களும், எழுத்துவாசனை இல்லாதவர்களும் பக்தியோடு ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வணங்குதல் கண்கூடு. இது கல்வியின் பயனன்று. கல்லாதவர்களைத் தவிர, விலங்கினம் முதலியவைகளும் தெரியாமலே மக்கள் செய்வது போலவே, இறைவன்மீது பூத் தூவுதல் முதலியன செய்வது பற்றிய கதைகள், புராணங்கள் முதலியவற்றில் மிகவாகக் காணப்படுகின்றன. இப்படி இருக்க, கற்றதற்குப் பயன்

இறைவனை வணங்குதல் என்று எவ்வாறு சொல்வது? 'பொன் மலர் நாற்றமுடைத்து' என்று சொல்வதுபோல, கற்பவர்கள் தெய்வ, சிந்தனையுடையவர்களாய் இருந்து, தெய்வ வணக்கம் செய்து வருவாராயின், அவர்கள் உலகில் சிறப்புற்று விளங்கு வார்கள் என்பது இக்குறளின் பொதுக் கருத்தாக இருக்கலாம்.

பொருள் வருவாயும் தெய்வ உணர்ச்சியும் கல்விப் பயனாக அமையும் என்று இன்றுகூடத் தற்காலத்தார் கொள்ளமாட் டார்கள். தற்காலத்தார் என்று குறிப்பிடுவது மேலை நாட்டு அறிஞர்களையும், அவர்களைப் பின்பற்றும் நம்மவர்களையும் தான். அவர்கள், நமது அறிவு விசாலித்து, வாழ்க்கையின் இயல்பை, அதிநுட்பமாய்க் கவனிக்கும் திறமையே கல்வியால் விளையும் பயன் என்பர். ஒவ்வொருவனுடைய தனிப்பட்ட வாழ்க்கையும் மிகச் சுருங்கியது. ஆனால், வாழ்க்கை என்பதைப் பொதுப்பட நோக்குவோமானால், அது மிக விரிந்தது; பலதிறப் பட்டது. அதில் அடங்கிய கருத்துக்கள் எத்தனையோ சிக்கல் உடையதாய் இருக்கும். ஒரு தனிப்பட்ட மனிதனால் இவை அனைத்தையும் தெரிந்துகொள்ள முடியாது. தற்காலத்தில் அரசியல், சமூக நிலை முதலியவற்றில் ஈடுபட்டு வரும் ஒருவ னுக்கு, வாழ்க்கையின் இயல்புகள் நன்றாகத் தெரியவேண்டும் என்று நினைப்போம்; ஆனால், அவனுடைய சொந்த வாழ்க்கை யிற்கூட ஒரு சிறு பகுதியையே அவன் அறிந்துகொள்ள இயலும்; வாழ்க்கையின் அளவு பெருக, அதைப்பற்றிய அறிவு விரிய விரிய, நமது அறிவும் மதி நுட்பமும் அவற்றை உட்கொண்டு, வாழ்க் கையின் இயல்பை ஒருவாறாக உணரப் பயன்படுகின்றன. நமது சொந்த உயிர்வாழ்க்கையை நாம் நேர்முகமாக அனுபவத்தால் தெரிந்துகொள்கிறோம். பிறருடைய வாழ்க்கை நிலையை அறிந்துகொள்வது எப்படி?

இங்கே பிறர் என்று நான் சொல்லியதை ஆழ்ந்து கவனித்தல் வேண்டும். நமது காலத்திற்கு முற்பட்ட அனைவரும் பிறரே, அதுபோல நமது நாட்டிற்கு அப்பால் உள்ள தேசங்களில் வாழ்ந்துவருபவர்களும் பிறரே, இங்ஙனமாகக் காலம் இடை யிட்டும் தேசம் இடையிட்டும் வாழ்ந்துவருபவர்கள் எல்லாம் பிறர்களே ஆவர். இவர்களுடைய் வாழ்க்கை இயல்பை எவ்வாறு அறிதல் முடியும்?

பல நூல்களைக் கற்றல்

பல நூல்களையும் கற்பதனால்தான் அதனை அறிதல் கூடும். மக்கள் வாழ்வின் நிலை, நம்முடைய மதிநுட்பத்தின்

இயல்பு. நம்முடைய அனுபவம் இவைகள் எல்லாம் பலவாறாக ஒன்றோடொன்று தொடர்புபட்டு நின்றும், விரிந்தும், ஆழ்ந்தும் நமக்கு உதவுகின்றன. நம்கூட, நாம் காலத்தவ ராய் இருப்பவர்களோடு, நாம் கொண்டுள்ள தொடர்பு மிக மிக எளிதாய் அமைகின்றது. நாம் எதிர்பார்த்தவைகளும் கூடியவரையில் முற்றுப் பெறுகின்றன. நமக்கு உலகத்தைப் பற்றி ஏதேனும் வெறுப்புகள் இருக்குமானால், அவ் வெறுப்புகள் எல்லாம் நீங்கி நம்முடைய அனுபவம் முதிர்ச்சியுறுகின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாக மக்களுடைய லட்சியப் பண்பாடு. குன்றின்மேல் இட்ட விளக்குப்போல் நமக்குப் புலப்படுகிறது.

இவைகள் எல்லாம் நாம் நூல்களைக் கற்பதனால் விளையும் பயனாகும். ஆனால், இவற்றைப் பணம், காசு முதலியவற்றைப் போலத் தொட்டுத் தெரிந்துகொள்ள முடியாது. நூல்களைக் கற்று, அவற்றின் பொருள்களை நம்முடையதாக ஆக்கிக்கொள் வதிலேதான் அதன் சிறப்பு முற்றிலும் இருக்கிறது. இவ்வாறாக ஆக்கிக்கொள்ளுதல் எல்லாராலும் முடியாது. இக்காலத்தில் பலரும் நூல்களைக் கற்கிறார்கள். அவ்வாறாகக் கற்பவர்களில் பெரும்பாலோர் ஒரு பயனும் இல்லாதபடி கற்றுவருகிறார்கள். தற்காலிக மகிழ்ச்சி கொள்ளுவதற்கும், கடினமான வேலை செய்தபின் மனத்திற்கு நெகிழ்ச்சியைக் கொடுப்பதற்கும், அல்லது பெருந் துன்பத்தினின்று அகன்று செல்வதற்கும்தான் நூல்களை எடுத்துக் கற்கிறார்கள்,

அதாவது, பொழுதுபோவதன் பொருட்டே நூல்களைக் கற்பர். காலம் என்பது விலைமதித்தற்கரிய நிதி. இந்த நிதியை இரு கைகளாலும் எடுத்து வீணே சிதறுகிறார்கள். இந்தக் காலம் அவர்களுக்கு ஒரு பாரமாக இருந்துவருகிறது. நூல்களைக் கற்றால் இந்தச் சுமை இறங்கும் என்று கருதியும், காலத்தைச் சிறிது சிறிதாகப் போக்கிவிடலாம் என்று கருதியும் வருகிறார்கள். வேறு எதன் பொருட்டும் இவர்கள் கற்பதாகத் தெரியவில்லை. ஏதாவது பயன் கருதியிருப்பார்களாயின், அந்தப் பயனுக்குரிய அடையாளம் சிறிதாவது அவர்களிடத்தே இருக்கும். ஏதாவது பயன் இருக்குமானால் அது அவர்கள் அறியாதபடியே தோன்றி விடுகிறது? அறியாத பயன்கள் நன்மையையும் விளைவிக்கலாம். தீமையையும் விளைவிக்கலாம். கற்பவர்களிடத்தில் அந்தப் பயன் தங்குவதாகத் தெரியவில்லை, ஒருகால் தங்குமாயின் அது கேடு விளைவிப்பதாகவும் இருக்கலாம்.

ஏதேனும் ஒரு நூலை வாசித்தவரை எடுத்துக்கொள்வோம். 'நூலைக் கற்றீரே, என்ன பயன்?' என்று கேட்டால், அவரால் ஒன்றும் பதில் சொல்ல முடியாது. பொழுது போக்குக்காக அவர்கள் எழுதிவரும் தினசரிக் குறிப்புப் புஸ்தகத்தில் பயன் உள்ள ஒரு குறிப்பும் காணப்படாது.

''இந்தப் புத்தகத்தைப் படித்தேன். இது எனக்குப் பிடித்திருக்கின்றது. அது எனக்குப் பிடிக்கவில்லை'' என்ற குறிப்புக்கள் தான் காணப்படும். புத்தகத்தை வாசித்த பிற்பாடு, அது அலமாரிக்குள் புகுந்துவிடுகிறது. அது ஒரு கதையாக இருக்குமானால் கேட்கவே வேண்டாம். வாசித்த அனுபவமெல்லாம் அந்தப் புத்தகத்தை மூடி வைப்பதோடு சரி... ! இதற்கு மாறாகப் பயனுள்ளபடி வாசித்தால், அந்தப் புத்தகம் அதோடு நின்றுவிடுவதில்லை. அதைப் பற்றிச் சிந்தனை செய்வார்கள். இதனால் வாசித்துப் பயன் பெறுவதற்கும் வாசிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

வாசித்த பின், நாம் என்ன அனுபவத்தை அதிலிருந்து பெற்றுக்கொண்டோம் என்ற முடிவைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். இவ்வாறு நிகழ்வதற்குச் சில சில நியமங்கள் நமக்கு வேண்டும். அந் நியமங்களைக் குறித்துப் பின்னர் நோக்குவோம்.

3

வாழ்க்கையின் விழுப்பம்

பொதுப்பட, நமது வாழ்க்கையின் விழுப்பத்தை நமது மக்கள் சரியாக உணர்ந்துகொள்வது இல்லை. வாழ்க்கையின் விழுப்பம் என்றாலே அவர்களுக்குப் பொருள் விளங்குவதும் அரிது. வாழ்க்கையை ஒரு விநோத நிகழ்ச்சியாகவே அவர்கள் கொண்டுள்ளார்கள். இவ்வாறு ஏற்பட்ட மனப்பான்மைக்கும் வாழ்க்கையின் விழுப்பத்திற்கும் வெகு தூரம். இதை ஓர் உதாரணத்தால் விளக்குகிறேன்.

பெரும்பாலோர் தினசரிப் பத்திரிகை வாசிக்கின்றனர். பலர் அதில் காணும் விநோத நிகழ்ச்சிகளைப் பார்த்து அதனோடு அமைந்துவிடுகிறார்கள். அதாவது 'அரசகுமாரன் பிச்சைக்காரியை மணந்தான்' என்ற தலைப்பில் எவ்வளவு மோகம் இருக்கிறது என்பது தினசரிப் பத்திரிகை வாசிப்பவர்களுக்குத்

தெரியும். அந்தப் பகுதியைத் திரும்பத் திரும்ப வாசிப்பதிலும், தாம் வாசித்ததைப் பிறருக்கு எடுத்துச் சொல்வதிலும் மிக்க மகிழ்ச்சி கொள்கிறார்கள். இதே மனப்பான்மை மிருகக்காட்சிச் சாலைக்குச் செல்வதிலும் காணப்படுகிறது. அங்கே புதியதாக ஓர் குரங்கினம் வந்திருக்கிறது என்றால், ஆயிரக்கணக்கான மக்கள் கூடிவிடுகிறார்கள். இரண்டு தலையுள்ள ஒரு குழந்தை காட்சிச்சாலைக்கு வந்திருக்கிறது என்றால், அதைப் பார்ப்பதற்கு ஜனங்கள் லட்சக்கணக்கில் கூடிவிடுகிறார்கள். அந்தக் காட்சியைப் பார்ப்பதில் தங்களுக்கு எவ்வளவு கஷ்டம் நேரிட்டாலும் பொருட்படுத்துவது இல்லை. இவைகள் எல்லாம் வாழ்க்கையின் கௌரவத்தை, விழுப்பத்தைச் சிறிதும் கவனியாத குறைபாடாகும். முன் கூறியதுபோல், இம் மனப்பான்மை உடையார்க்கு உண்மையான கல்வியும், பயனும் கிடைப்பது அருமை.

வாழ்க்கையின் விழுப்பத்திற்கு ஓர் உதாரணம் கொடுக்கிறேன். ஜி. கே. செஸ்டர்டன் என்ற ஆங்கில ஆசிரியரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் வயிற்றுப் பசியால் மாண்டவர்களைப்பற்றி எழுதும்போது, அவ்வாறு மாண்டவர்கள் நமக்கு மிகுந்த துன்பத்தை விளைவிக்கிறார்களெனக் கூறிவிட்டு "கேவலம் மரணந்தானே அதி துக்கமானது" என்று கூறி முடிக்கின்றார். இம்முடிவு வாழ்க்கையின் விழுப்பத்தை நன்கு புலப்படுத்துகின்றது. இதேபோல ஆசிரியர் வள்ளுவர்,

> "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்"

என்றார். இதில் ஜாதி வேற்றுமை தொழில் மூலமாக ஏற்பட்டிருப்பது ஓர் உண்மை. எல்லா உயிர்களும் பிறப்பினால் ஒத்தவை என்பது மற்றோர் உண்மை. இவ்விரண்டிலும் பிந்தியது வாழ்க்கையின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. அரசகுமாரன் பிச்சைக்காரியை மணந்தது, வாழ்வின் சிறப்பல்ல. ஆனால் திருமணம் என்பது வாழ்வின் சிறப்பிற்கு அடையாளமாக நின்று கௌரவம் அளிக்கிறது. இவைகளைப் போலப் பல உதாரணங்கள் காட்டலாம்.

நம்முடைய கல்வி பயனுடையதாய் இருக்கவேண்டுமானால் அது வாழ்வின் சிறப்பை மேற்கொண்டதாக இருக்கவேண்டும். எங்கெங்கெல்லாம் இந்த வாழ்க்கையின் விழுப்பத்தைக் காண்கிறோமோ, அங்கெல்லாம் நாம் நன்றாக அவ்விழுப்பத்தை

அறிந்துகொள்வதற்குத் தவறக்கூடாது. அவ்வகை நிகழ்ச்சிகளை உண்மை வாழ்விலும் காணலாம்; நூல்களிலும் காணலாம். அவற்றைக் கண்டதும் அவற்றின் இயல்பைத் தெரிந்துகொள்வதற்கு நாம் பயிற்சி செய்துகொள்ள வேண்டும்.

இதற்குரிய நோக்கமும், திடீர் என்று ஏற்படுவதும் ஆகலாம்; ஏதேனும் ஒரு புஸ்தகத்தை வாசித்துக்கொண்டு இருக்கும்போது அதில் ஏதேனும் ஒரு வாக்கியம் நமக்கு நமது நோக்கத்தை இவ்வழியிற் செலுத்தலாம். ஒரு முறை இந்த எளிய ஆடம்பரமற்ற அடிப்படையான உண்மையைக் கண்டுகொண்டோமானால் நாம் கல்வி கற்றதின் பயனை அடைவோம் என்பது திண்ணம்.

சரியாக உள்ள மனநிலை

இதிலிருந்து ஓர் உண்மை புலப்படுகிறது. நமது கல்வி மேன்மேலும் கல்வியை வளர்ப்பதற்குப் பயன்படும் என்பதே இவ்வுண்மை. ஆனால், ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே குறிப்பிட வேண்டும். சரியாக உள்ள மனநிலையில் நாம் நூல்களைக் கற்றல் வேண்டும். அதாவது இலக்கியம் என்பதன் ஆத்மாவை நாம் வசீகரித்தல் வேண்டும். இவ்வாறு வசீகரிக்க வேண்டுமானால், நமது இலக்கியங்களின் பூர்வ சரித்திரம் உண்மையாகவே புலப்படுதல் வேண்டும். புராதன இலக்கியங்கள், அவை தோன்றிய காலத்து, அவற்றிற்கு இருந்த தனிப்பட்ட உயிர் ஆற்றலோடு தற்காலத்திலும் அது விளங்குதல் வேண்டும். இந்த அரிய உண்மையை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் அவசியம்.

இதனை விளக்குவதற்கு ஒன்று சொல்கிறேன்; அதாவது புதிய விஷயமோ, அல்லது நாம் ஆழ்ந்து அறியாத கல்விப் பொருள் ஒன்றோ நம் மனத்தில் முதன்முறை தாக்கும்போது அந்த விஷயம், அல்லது பொருளினுடைய பூர்வ சரித்திரம் முழுமையும் ஒன்றுசேர்த்து அறிதல் வேண்டும். காலமுறைப் படியும், பொருள் முறைப்படியும் பாகுபடுத்தி அவற்றைத் தெரிந்துகொள்கிறோம். அவ்வாறு தெரிந்துகொண்டவுடன் அவற்றிற்குத் தற்காலத்திலே உள்ள உண்மை இயல்பும் நமக்கு நன்றாக வெளியாகிறது. இப்படி வெளிப்பட்டவுடன் நம் அறிவு விரைவில் தொழில்பட்டு அப்பொருள்களை நன்றாக உணர்ந்துகொள்கின்றது.

உதாரணமாக, தமிழ் இலக்கியங்களை எடுத்துக்கொள்வோம்; அதன் அளவு மிகுதியாக உள்ளது. முதல்முதலிலே, அதன் சரித்திரத்தை வாசித்துக்கொள்வோம் என்று முற்பட நினைத்துக்கொள்வோம். பல நூற்றாண்டுகள் செல்லச் செல்ல அது வளர்ந்து வந்திருக்கிற பொது நெறியானது நமது மனத்தில் படுகிறது. இன்ன காலப் பகுதியில் இன்ன நெறியில் இது பரந்து வந்திருக்கிறது என்று தெளிவாக உணரலாம்.

முற்காலப் பகுதிக்கும், பிற்காலப் பகுதிக்கும் உள்ள தொடர்புகளையும் நாம் அறிகிறோம். முற்காலப் பகுதி இலக்கியங்கள் அதற்கு அடுத்து வரும் காலப் பகுதியில் உள்ள இலக்கியங்களை நெறிப்படுத்துகின்றன. அப்போது பொது நெறிகளும் வகுக்கப்படுகின்றன. இவற்றால் தெளிவான எல்லைப் பகுதிகளும், தலைமைக் குறிப்புக்களும் நமக்குக் கிடைக்கின்றன. இதன் மேல், பூர்வ இலக்கியங்கள் நம்முடைய காலத்து இலக்கியங்கள் போலவே நமக்கு முற்றும் உண்மையாகவே முடிகின்றன.

நமது இலக்கிய வாழ்வில் ஒரு தலைமையான பங்கு நமது பூர்வ இலக்கியங்கள் எடுத்துக்கொள்கின்றன என்று நாம் கூறலாம். ஆகவே, நாம் இலக்கியங்களைக் கற்பதில் முதலாவதாக இலக்கிய சரித்திரத்தை அறிந்துகொள்வது அவசியம். அவ்வாறான சரித்திரம் தமிழ் மொழியில் எழுதப்படவில்லை. அவசியம் என்று நினைப்பாரும்கூட மிகவும் அரியர். காலங் கடந்த ஆராய்ச்சி என்று இகழ்ந்து பேசுவோரும் பலர் உளர். உண்மையான தமிழ்த்தொண்டு ஆற்றுவதில் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சி மிகச் சிறந்ததாய் உள்ளது என்பதை நாம் அறிவதில் எத்தனையோ நன்மை உள்ளது.

4

ஆராய்ச்சியின் விளைவு

இலக்கிய வரலாற்று ஆராய்ச்சி மிகவும் இன்றியமையாதது என்று மேற்கூறினேன். இவ்வாராய்ச்சியால் தமிழின் நிலையும், இலக்கியம் தோன்றிய காலத்தில் உண்டான தமிழின் நிலையும், சமூக நிலையும், பிற சூழ்நிலைகளும் தெரியவரும். உதாரணமாக நெடுநல்வாடை என்ற பழைய நூலை நாம் கற்போமானால், அந்

நூலில் அக்காலத்தில் உள்ள வாடைக் காற்றுக் கொடுமையும், அப்பொழுது ஜீவஜந்துக்கள் படுகிற அவஸ்தையும் மிக அழகாகக் கூறப்படுகின்றன. அரசனது மாளிகையும், அங்கே நாயகனைப் பிரிந்து தனியே வருந்தும் ராணியின் துயரமும், போருக்குப் புறப் பட்டுச் சென்று அங்கே பாசறையில் அரசன் இருக்கும் இருப்பும், பிற செய்திகளும் நமக்குப் புலப்படுகின்றன. இதனை வாசிக்கையில் ஏதோ ஒரு மரபைப் பின்பற்றி ஒரு புலவர் பாடுகின்றார் என்ற கருத்து நமக்குப் புலப்படுவதில்லை; உண்மையாகவே நிகழ்ந்த நிகழ்ச்சியைப் புலவர் பாடுவதாகவே தோன்றுகிறது. வேறு ஒரு காரணமும் கூறினேன்.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் பாசுரங் களைப் பலரும் வாசித்திருப்பார்கள், அவற்றின் மூலமாகக் கிருஷ்ணனது லீலைகள் தெரிவதோடு, இவ் ஆழ்வார் காலத்து மக்கள் எப்படியெல்லாம் விளையாடல் புரிந்துவந்தார்கள் என்பதையும் நாம் நன்கு அறிகிறோம். இளமையில் தற்காலத்தில் கிராமாந்திரங்களில் நிகழ்வது போன்ற நிகழ்ச்சிகளே அப்பாடல் களில் காணப்படுகின்றன. காக்கை அழைத்தல், பூச்சூட்டுதல் முதலிய செயல்கள் எல்லாம் இன்றும் நடப்பனவே.

இவ்வாறு உள்ள பாடல்களை எல்லாம் கற்று நூதன நாவல்கள் இயற்றவும் கூடும். ஸ்காட் என்ற ஆங்கில ஆசிரியர் பல பழம்பாடல்களைக் கற்று அவற்றின் சூழ்நிலைகளை வைத் துக்கொண்டு அழகிய நாவல்கள் இயற்றியுள்ளமை நாம் எல்லோரும் அறிவோம், சரித்திர வடிவிற் புனைந்த நாவல்கள் நமது நாட்டில் மிகுதியாய் இல்லை. இப்போழுதுதான் சில சில தோன்றத் தொடங்கியிருக்கின்றன.

மேற்கூறியது ஒரு நன்மை. இரண்டாவதாக, ஆராய்ச்சியால் விளையும் வேறொரு நன்மையைக் குறித்துச் சில வார்த்தைகள்; நமக்குப் பண்டைப் பழம்பெரும் நிதியாகக் கிடைத்திருப்பது சங்க இலக்கியங்கள் என்ற தொகுதியாம். இத் தொகுதியின் பின் **பதினெண் கீழ்க்கணக்கு** என்ற தொகுதி, சைவ - வைஷ்ணவ சமயத்தினர்களால் தொகுக்கப்பட்ட சில தொகுதிகள். **புறத் திரட்டு** என்ற அருமையான பாடல் தொகுதி நூல், **பன்னூல் திரட்டு, பெருந்தொகை** முதலியவைகளாம். ஆனால், இவை களை மதிப்பிடுவதற்குக் கருவிகள் வேண்டும். ஒவ்வொன்றும் இன்னின்ன தன்மை வாய்ந்தன என்று நாம் முற்றும் கற்றுத் தெரிந்துகொண்டால் அன்றி, இவற்றை மதிப்பிட இயலாது.

கவிதை

கவிதை, உண்மை இல்லாதது என்பது இவ்வகை ஆராய்ச்சியினால் ஒருவாறு புலனாகும். தொகை நூல்களும் பல வேறு நெறிபற்றி, பலவாகத் தோன்றுதல் மிக அவசியமாம். செய்யுட்கள் மாத்திரம்தான் தொகை நூல்களாக அமைக்கத் தக்கன என்று எண்ணுதல் தவறு; உரைநடை நூல்களும் இதற்குப் பயன்படுவனவே. உதாரணமாக, பாரதியின் வசன நூல் பகுதிகளில் பெருஞ் சிறப்புடையவை காணப்படுகின்றன. காலந்தோறும் இவ்வுரைநடைப் பகுதியில் சென்றிருக்கும் நெறியைப் புலப்படுத்தி உரைநடைத் தொகுதியில் அமைத்தல் வேண்டும். விஷயங்களுக்குத் தக்கபடியாகவும் இவைகள் அமையலாம். இந்த முயற்சியில் பாடப் புத்தகங்களில் வருகின்ற உரைநடைத் தொகுதிகளைத் தவிர, வேறு யாதும் வந்ததாகத் தெரியவில்லை. செய்யுள் தொகுதியை மதிப்பிடுதல் எளிதான காரியமன்று. உரைநடைத் தொகுதியை மதிப்பிடுதல் பெரும்பாலும் பொது மக்களால் இயலக் கூடியவை. தமிழின் உண்மை இயல்பையும், ஆசிரியர்களின் திறமையையும் இவ்வகைத் தொகுதிகளால் நாம் எளிதில் அறியலாம்.

வேறு ஒரு பயனையும் இங்கே கூற விரும்புகிறேன். அது ஆசிரியர்களைப் பற்றியது ஆராய்ச்சி நெறிப்படி கால அடைவுக்குப் பொருந்த அமைந்த ஆசிரியரைப் பற்றிய இக் குறிப்புக்கள் நமது நூல்களில் அங்கங்கே காணக் கிடைக்கின்றன. அவர்களைப் பற்றி ஒன்றும் தெரியாத இடத்திலும் புதியதாகக் கதைகள் புனைந்துவிடுகிறார்கள்.

உதாரணமாக அவ்வையார் சரித்திரத்தை எடுத்துக்கொள்வோம். அவரைப் பற்றி எத்தனையோ நவீனமான கதைகள் சேர்த்து ஒரு புதிய அவ்வையாரைச் சிருஷ்டித்துள்ளார்கள். உண்மையை அறிவது ஆராய்ச்சியாளர்க்குக் கஷ்டமாக இருந்தபோதிலும், பொதுமக்கள் இக் கதையினை உண்மையென நம்பி மிகவும் இன்புறுகிறார்கள். அவ்வையாருக்கு வள்ளுவர் உடன் பிறந்தவர் என்ற கருத்தும் நூதன சிருஷ்டியில் உள்ளது. வள்ளுவரைப் பற்றியும் உண்மையில் நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், அவரையும் பற்றிய கதைகளோ மிகப் பலவாக உள. அக்கதைகளுள் அவரது மனைவியாகக் கூறப்படும் வாசுகியின் சரித்திரம் மிகவும் விநோதமானது. வள்ளுவரைப் போன்ற தூயஉள்ளத்தையுடைய பெரியார்க்கு எல்லா வகையிலும் பரிசுத்தையாக

இருக்கும் ஒரு மனைவியைத் தேடிக் கண்டுபிடித்திருக்கிறார்கள்! அவள் கணவன் சொல்லைச் சிறிதும் மீறாதவள்; அவர் சொற்படியே நடப்பவள். அவளைப் பற்றி ஒரு செய்யுளும் இருக்கிறது.

அந்தச் செய்யுள் அவள் இறந்த பிற்பாடு வள்ளுவர் கூறியதாக அமைந்தது :

அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொல் தவறாத பாவாய் — அடிவருடிப்
பின்தூங்கி முன்எழும் பேதையை யான்பிரிந்தால்
என்தூங்கும் கண்கள் எனக்கு

இந்தச் செய்யுளால், அவருக்குத் திருமணமானதும், எல்லா வகையிலும் சிறந்தவளான ஒரு மனைவியை அடைந்ததும், அவள் நாயகனுக்குப் புரிந்த பணிவிடைகளின் சிறப்பும் உணர்த்தப் படுகின்றன. சொன்ன சொல் தவறாதவள் என்பதற்கு ஒரு செய்யுளும் கூறப்பட்டிருக்கிறது. கிணற்றில் வாசுகியம்மையார் நீரிறைத்துக் கொண்டிருந்ததாகவும், அப்போது, ''இங்கே வா'' என்று வள்ளுவர் கட்டளையிட்டதாகவும், பாதிவரை வந்த வாளியை அப்படியே வாசுகி விட்டுவிட்டு வந்ததாகவும், திரும்பச் சென்று நீர் இறைக்கும் வரை அந்த வாளி நடுக் கிணற்றில் தொங்கிக் கொண்டிருந்ததாகவும் கதை புனையப்பட்டுள்ளது.

இது போன்ற கற்பனைகளால் இப்பாட்டு வள்ளுவர் பாடியதல்ல என்பதற்கு அதன்கண்ணேயே சான்று இருக்கிறது. தூங்குதல் என்பதற்கு உறங்குதல் என்ற பொருள் வள்ளுவர் காலத்தில் இல்லை; பிற்பட்ட காலத்தே தோன்றியதாம். ஆனால், இப் புனைகதைகளால் வள்ளுவர் வாழ்க்கை நம் மனத்தில் நன்றாகப் பதிந்துவிடுகிறது: ஒன்றும் தெரிய முடியாத சூன்யத்திலே ஓர் உருவம் நமக்குப் புலப்பட்டுவிடுகிறது.

5

வாழ்க்கை வரலாறு

வாழ்க்கை வரலாறு தெரியாத பெரியோர்கள் ஒரு சிலரைக் குறித்தும் சில வார்த்தைகள் சொன்னேன். வரலாறுகள் தெரிந்த பெரியோர்களைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல

விரும்புகிறேன். இவ்வாறு தெரிந்தவர்கள் மிகச் சிலரே. ஒரு சிலர் தங்கள் வாழ்க்கையைக் குறித்துத் தாமே எழுதியுள்ளார்கள். ஸ்ரீ டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரின் 'என் சரித்திர'த்தையும் திரு. வி. க. எழுதிய வாழ்க்கை வரலாற்றையும் இங்கே குறிப்பிடலாம். சாமிநாதையர் அவர்கள் இயற்றிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களுடைய சரித்திரத்தையும் நாம் இங்கே கூறலாம். இவைகள் எல்லாம் நன்றாக எழுதப்பட்டனவே. ஆனால், ஐயர் அவர்கள் எழுதியவை அவர்களுடைய உண்மை இயற்கையை நன்றாகப் புலப்படுத்துவன என்று கூற முடியவில்லை. அவர்கள் கற்ற வரலாறும், நூல்கள் அச்சிட்ட வரலாறுமே பெரும்பாலும் அவற்றில் உள்ளன. திரு. வி. க. அவர்கள் எழுதிய வரலாற்று நூலில் வரலாற்று அம்சம் மிகச் சிறந்து காணுகிறது.

சிலர் தாம் எடுத்துக்கொண்ட பெரியாரது வாழ்க்கையின் பெருமையை மட்டும் அறிவிக்கவேண்டும் என்று கருதி அவர்களது குற்றம் குறைகளை மறைத்தேவிடுவர். இது உண்மையான வரலாற்று நூலுக்கு முற்றும் பொருந்தாததாம். எல்லா அம்சங்களையும் நன்கு எழுதவேண்டியதே வரலாற்று ஆசிரியரின் கடமையாகும். இன்ன செய்தியைச் சொன்னால், ஆசிரியரை இழிவாக எண்ணுவர் என்ற எண்ணமே இருத்தல் கூடாது. உண்மையை மறைத்தல் பெரும் பிழையாகும்.

ஐயரவர்கள் இயற்றியன போன்ற நூலிலிருந்தும் சில சில முக்கியமான விஷயங்கள் நமக்குப் புலப்படுகின்றன. முற்காலத்து ஆசிரியர்கள் தாம் பாடம் சொல்வதோடு, புராணம், பிரபந்தம் முதலியனவும் இயற்றி வந்தனர். அந்தப் புராணங்களைப் படிப்பவர்கள் பெரும்பாலும் அவர்களுடைய மாணாக்கர்களே யாவர், அதற்குப் பொருள் சொல்பவர்களும் அதன் ஆசிரியர்களேயாவர். சில சமயங்களில் தங்களுடைய பிரதம மாணாக்கரைக் கொண்டு பொருள் சொல்லுவித்தலும் உண்டு. ஒரு முறை மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஒரு புராணம் இயற்றி, அதற்குப் பொருள் சொல்லும்படியாகத் தமது முதல் மாணாக்கராகிய தியாகராச செட்டியாரை நியமித்தனர். அவர் கலாசாலையில் உபாத்தியாயராக இருந்தவர். தமக்குப் பொழுதில்லை, பொருள் சொல்வதும் மிகக் கடினம் என்ற காரணங்களாலேயே ஒதுக்கி வைத்துக்கொண்டே வந்தார். மாணாக்கர்கள் பொருள் சொல்லும்படி வற்புறுத்தினர், தியாகராச செட்டியார் சிறிது முன்கோபி. நேரே தமது ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் சென்றார். ''பொருள்

விளங்காத பாடல்களையெல்லாம் பாடிவைத்துப் புராணமாக்கி, என்னை உரை சொல்லும்படி கழுத்தறுக்கிறீர்களே ; இது நியாயமா?'' என்று கேட்டார். இது மீனாட்சிசுந்தரம் பிள்ளையினுடைய இயல்பையும், தியாகராச செட்டியாரின் இயல்பையும் நன்கு எடுத்துக்காட்டுகிறதல்லவா?

மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்ற பெயர் மாத்திரம்தான் நமக்குத் தெரிகின்றதே தவிர, அவர் எவ்வாறு இருந்தார், அவரது உருவ அமைப்பு எப்படி இருந்தது என்பவை எல்லாம் நமக்கு நன்கு தெரியமாட்டாது. இவற்றைப் பற்றி எல்லாம் வரலாற்று ஆசிரியர்கள் எழுதவேண்டும். ஒரு முறை மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஒரு வில்வண்டியில் ஏறித் தமது மாணாக்கர் களுடன் அபலூருக்குச் சென்றார். புறப்பட்ட அப்போதே ஒரு புராணம் இயற்றத் திட்டம் போட்டுக்கொண்டார். ஒரு மாணாக்கர் இவர் சொல்லியதை எழுதிவந்தார். தாம் கருதிய ஊருக்கு வந்து சேருமுன் புராணம் முடிந்துவிட்டது. இதெல்லாம் அவர் வாக்கு வன்மையையும் பாடல் இயற்றும் திறத்தையும் நமக்குக் காட்டுகின்றன அல்லவா? டாக்டர் சாமிநாதையருடைய 'என் சரித்திர'த்தில் காணும் செய்திகள் வேறு ஒரு வகையைச் சார்ந்தவை. அவர் ஏடுகள் தேடிச் சலிப்புற்றதும், வித்வான்கள் தங்களிடம் 'அந்த நூல் இருக்கிறது, இந்த நூல் இருக்கிறது' என்று புளுகி அவரை அழைத்துச் சென்றதும், சென்ற இடங்களில் பெரும்பாலும் சிறந்த நூல்கள் இல்லாமையும், அதற்காக மனம் கோணாமல் அவர்கள் திரும்பி வந்த வரலாறு களும் மிகுதியாகக் காணப்படும். இப்படியெல்லாம் சென்று மிக அபூர்வமாக அவர்கள் தேடிக் கொண்டுவந்த ஏடுகளை, அவர்களிடம் இருந்து தட்டிப் பறித்துக்கொண்டு போக முயன்ற முயற்சிகளும் அவருடைய சரிதத்தில் காணலாம். பெரும்பாலும் பிறர்மீதுள்ள குற்றச்சாட்டுகளே இந் நூலில் மிகுதியாகக் காணப்படும்.

ஒரு காலத்தில் மதுரையில் 'ஸ்காட்' (சுகாத்தியர்) என்ற பெயருடைய ஒரு வழக்கறிஞர் இருந்தார். அவர் தமிழிலும் - முக்கியமாகக் குறளில் பயிற்சி பெறவேண்டும் என்று கருதித் திருக்குறளை நன்கு கற்றார். திடீர் என்று அவருடைய அறிவிலே ஒரு ஜோதி புறப்பட்டுவிட்டது. எதுகை மோனை இல்லாது வள்ளுவர் போன்ற பெரியார் செய்யுள் இயற்றுவாரா என்பதற்கு விடை காண முயன்றார். முதற் குறளே அவருக்குத் தப்பிதம் என்று தோன்றிவிட்டது. 'அகர முதல எழுத்தெல்லாம்

ஆதி' என்ற அடி வள்ளுவர் செய்திருக்கலாம் என்று ஒருவாறு ஒப்புக்கொண்டார். 'பகவன் முதற்றே உலகு' என்பது முற்றும் பிழையெனக் கண்டார். ஏனென்றால் அதில் மோனையே இல்லை. மோனையில்லாப் பாட்டை வள்ளுவர் பாடுவாரா? 'முகரம் முதற்றே உலகு' என்று இருக்கவேண்டும் என்று தீர்மானித்தார். இது 'பைபி'ளில் வரும் கருத்திற்கு மிகப் பொருத்தமாயிருந்தது. இப்படியே, பொருட்பால் முடியத் திருவள்ளுவரைத் திருத்தி யமைத்து, தமது கருத்துப்படி ஆங்கிலத்தில் ஒரு மொழி பெயர்ப்பும் செய்து அச்சிட்டார். அச்சிட்டுப் பலருக்கும் அனுப்பினார்.

சாமிநாத ஐயர் அவர்களிடம் நேரில் கண்டு கொடுக்க வேண்டும் என்று கருதி, அவர் வசிக்கும் கும்பகோணம் வந்து, நமது 'பூட்ஸ்' முதலியவற்றைக் கழற்றிவிட்டு, அவர் வீட்டு வாசலில் வெகு நேரம் காத்திருந்தார். ஆனால், ஐயரவர்களுக்கு இவருடைய புகழ் முன்னமேயே எட்டிவிட்டது. வெளியில் வந்திருப்பவர் யார் என்று உளவு தெரிந்துகொண்டு, வீட்டில் அகத்தே இருந்து வெளியே வரவேயில்லை. அன்று சிவ பூசை வெகுநேரம் நடைபெற்றது.

பத்து மணி சுமாருக்குக் கலாசாலைக்குப் புறப்பட வேண்டு மல்லவா? ஆகாரத்தை முடித்துச் சட்டை முதலியன தரித்து வெளியே வந்தார்கள். துரைமகனாரைப் பார்த்ததும், 'என்ன விசேஷம்?' என்று அப்போதுதான் பார்ப்பதுபோல் கேட்டு, தற்போது பள்ளிக்கு நேரம் ஆகிவிட்டது என்றும், வேறு ஒரு சமயம் பார்க்கலாம் என்றும் சொல்லிப் போய்விட்டார். பின்னால் ஸ்காட் என்பவருக்கு ஐயரவர்கள் தரிசனமே கிடைக்க வில்லை. அவருடைய புஸ்தகங்களின் பிரதிகள் முழுதும் அச்ச டித்தபடியே பெரும்பாலும் அவர் கைவசம் இருந்தன. சேதுபதி அவர்களை இத் துரைமகனார் சென்று பார்த்து முறையிட்டுக் கொண்டார். அவர் அந்நூலைக் கொண்டுவரச் சொல்லி, அவற்றை மேற்பார்வை யிடுவதுபோலப் பார்த்து, 'எவ்வளவு பிரதிகள் தங்களிடம் இருக்கின்றன?' என்று கேட்டு, அவ்வளவு பிரதிகளையும் வாங்கி அக்னிப்பிரவேசம் செய்வித்தார் என்று கேள்வி.

இதைப் போன்றே ஒருவர் நன்னூலைச் சுருக்கிப் பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற முறையில் பதிப்பித்து வெளியிட்டனர். ஐயரவர்களுடைய அபிப்பிராயத்தையும் தியாகராச செட்டியா

ருடைய அபிப்பிராயத்தையும் பெற்றுப் போகவந்தார். அவரு டைய பதிப்பில் ஏதோ ஒரு பிழையைக் காட்டி, 'நன்னூலைச் சுருக்கப் போகாதீர்கள்' என்ற ஆசியுரையுடன் விடைகொடுத்து அனுப்பினர்.

திரு. வி. க. அவர்களது வாழ்க்கை வரலாறு வேறு வகையில் நமக்கு இன்பமூட்டுகிறது. அவர்கள் சிறந்த கல்வியாளர். அதோடு, நல்ல சைவ சித்தாந்தி; தேசியப் பற்றும் மிக உடையவர்; அதனோடு தேசியப் பற்றுக்குச் சாதனமாகத் தொழிற் சங்கம் முதலியவற்றில் ஈடுபட்டுத் தலைவராய் விளங் கியவர். ஒரு சிறந்த தேசியப் பத்திரிகைக்கு ஆசிரியராய் இருந் தவர்; நல்ல எழுத்தாளர்; நல்ல பேச்சாளர்; எதனையும் கூர்ந்து அறியும் அறிவாளர். இவர் எழுதிய வரலாற்று நூலில் பல விஷயங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. இவர் உண்மையை மறைப்பவர் அல்லர்.

6

மக்கள் இயல்பை உணர்ந்தவர்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரம், என் சரிதம், திரு. வி. க. வாழ்க்கை வரலாறு இவை போன்ற விரிவான சுய சரிதங்கள் நம் நாட்டில் இல்லை. நமது பெரியவர்களைக் குறித்து வெளிவந்துள்ள சில நூல்கள் மிகச் சுருக்கமாகவும், குறிப்பாகவும் மாத்திரமே அமைந்துள்ளன. சுயசரிதங்கள் நல்ல முறையில் வெளிவந்தால்தான் மக்களுடைய இயல்புகளைக் கற்று நாம் உணர முடியும். தினசரி நூல்கள் இரண்டு இருக்கின்றன. அவைகள் ஆனந்தரங்கம் பிள்ளையைப் பற்றியதும், அவருடைய புத்திரரைப் பற்றியதுமாகும். ஆனந்தரங்கம் பிள்ளையின் தினசரி, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 12 பகுதிகளாக வெளி வந்திருக்கின்றன. சென்னையில் ஆண்ட ஆங்கில துரைத்தனத் தார். அதை வெளியிட்டு மொழி பெயர்த்துப் பல ஆண்டுகள் ஆனபோதிலும் இப்பொழுதுதான் மூலத்தில் நான்கு பகுதிகள் வெளிவந்திருக் கின்றன. வெளிவரவேண்டிய பகுதிகள் பல உள்ளன.

ஆனந்தரங்கம் பிள்ளை புதுச்சேரியில் மிகப் பிரபலமாக விளங்கியவர். 200 ஆண்டுகளுக்கு முன்னர் இவரது காலம். இவரைப் பற்றிப் பல பிரபந்தங்களும் உள்ளன. சமஸ்கிரு

தத்திலும் இவரைப் பற்றிய ஒரு ஜீவிய சரித்திரம் உண்டு. அதனை டாக்டர் வி. ராகவன் அவர்கள் பதிப்பித்திருக்கிறார்கள். ஆனந்தரங்கம் பிள்ளையின் புத்திரர்களுடைய தினசரி, புதுவை புத்தகாலயத்திலும் பாரிஸ் புத்தகாலயத்திலும் உண்டு. அவை எக்காலத்தில் வெளிவருமோ அறியமாட்டோம்.

சில பெரியவர்களின் சரித்திரங்களை அறியவேண்டும் என்ற அவா பலருக்கும் இருக்கிறது. ஆனால் அதனை நிறைவேற்று வதற்குப் போதிய உபகரணங்கள் இல்லை. எழுதுவோர் தமது சொந்தக் கற்பனையினாலே பலவற்றையும் சிருஷ்டித்துக்கொள் கின்றனர். சாதுர்ய வசனங்கள் என்ற பெயரோடு 'செந்தமிழ்' பத்திரிகையில் வெளிவந்த குறிப்புக்களைப் பலரும் பார்த்திருக்க லாம். அவற்றுள் சில கற்பனை ; சில உண்மை.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேள்வியுற்ற ஒரு சரித்திரக் குறிப்பைக் கூறலாம் என்று எண்ணுகிறேன். முகவை ராமானுஜக் கவிராயர் என்ற தமிழ்ப் பெரியாரைப் பற்றிப் பலரும் அறிந்திருப் பார்கள். அவர்கள் ராமநாதபுரத்தைச் சார்ந்தவர்கள். வெகு காலமாக ராணுவத்தில் சேர்ந்து, வேலை பார்த்துவந்தார்கள். பின்பு தமிழ் கற்று, பிரபலமான பண்டிதராக இவர் விளங்கினார். நன்னூலுக்கு இவர் ஓர் அரிய உரை இயற்றினார். இன்னும் எத்தனையோ நூல்களும் செய்திருக்கின்றார். இவர் சென்னைக்கு வந்ததும் பல சிஷ்யர்கள் இவரிடத்தில் தமிழ் கற்கவேண்டும் என்ற ஆவலோடு நெருங்கிப் பழகினர். இவருடைய சிஷ்யர்களில் ஒருவர் பிற்காலத்தில் உயர் நீதிமன்றத்து நீதிபதியாக விளங்கினார்.

ஒருமுறை இந்த நீதிபதி 'எஸ்பிளனேட்,டில் சவாரி போய்க் கொண்டிருந்தார். பாதசாரியாய் வந்த தமது ஆசிரியரை இவர் பார்க்கவில்லை. ஆகவே, வணக்கம் செய்யாது நேரே போய் விட்டார். பின்பும் ஒருமுறை அதே இடத்தில் நீதிபதி போய்க் கொண்டிருக்கும்போது, ஆசிரியரும் பாதசாரியாகவே போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது ஆசிரியர் தாம் எப்பொழுதும் கையில் வைத்திருந்த கம்பை எடுத்துக் காட்டி, வண்டியை நிறுத்தும்படிச் சொன்னார். வண்டி நின்றதும், நீதிபதியைக் கீழே இறங்கச் சொல்லி, அவருக்கு வணங்காமற் சென்ற தண்டனைக்காக நீதி செலுத்தினார். அதுமுதற்கொண்டு நீதிபதி ஒருநாளும் தமது ஆசிரியரை மறந்தது கிடையாது.

இந்த வரலாற்றைக் கூறியவர் எனது நண்பர் காலஞ்சென்ற சி. ஆர். நமச்சிவாய முதலியார் அவர்கள்.

இது சிறிது வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் அக் காலத்தில் ஆசிரியர்கள் எவ்வளவு கடுமையாக இருந்தார்கள் என்பதையும், ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஒழுங்கு முறையைக் கவனித்து நீதி செலுத்தினார்கள் என்பதையும் நமக்குக் காட்டு கிறது. மக்கள் இயல்பையும் நாம் தெரிந்துகொள்கிறோம். இனிமேல் முகவை ராமானுஜக் கவிராயர் அவர்களை நாம் மறக்கமுடியுமா?

கற்பவர்களது இன்பத்திற்கும், அவர்கள் மக்களது இயல்பை உணர்ந்துகொள்வதற்கும் நூற்கல்வி பெரிதும் பயன்படும். இது மேற்கூறியவற்றால் நன்கு விளங்கும். ஆனால் ஓர் எச்சரிக்கை: ஜீவிய சரிதம் எழுதுபவர்கள் தங்களுடைய திறமையைக் காட்டு வதற்கும், தாங்கள் அறிவு முதலியவற்றால் மேம்பட்டு விளங்கு கிறோம் என்பதைக் காட்டுவதற்கும் ஜீவிய சரித்திரத்தைப் பயன் படுத்தக்கூடாது. சரித்திர நாயகனுடைய ஆத்ம விளக்கம் செய் வதற்கே ஜீவிய சரித்திரம் எழுதுதல் வேண்டும். நாயகனோடு பல்லாண்டுகள் பழகி, நாள்தோறும் குறிப்புகள் எடுத்துக் கொண்டு, தினசரி, கதைகள், கடிதங்கள், பிற நிகழ்ச்சிகள் முதலியவற்றை எல்லாம் பயன்படுத்தி, செவ்விய முறையிலே ஜீவிய சரிதம் எழுதப்பெறுதல் வேண்டும்.

எழுதும் ஆசிரியன், தன் இயல்புக்குத் தக்கபடி இச் சரித் திரத்தை எழுதுதல் கூடாது. நேர்மையாக, சரித்திர புருஷன் குணங்கள் விளங்கும்படி நன்றாக எழுதப்பட்ட சரித்திரமே நமக்குத் தேவை. ஒரு சிலர் நாயகனது குணங்களைக் குற்றங் கற்பிப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டு மிகக் கேவலமாக எப்படி எழுத முடியுமோ அப்படி எழுதி விடுகிறார்கள். இதற்கு உதாரணம் இல்லாமற் போகவில்லை. ஆங்கிலத்தில் அலெக் ஸாண்டர் போப் என்ற கவிஞரைப் பற்றி நன்கு அறிந்திருப் பீர்கள். அவர் மசிக்குப் பதிலாகத் தம் நெஞ்சில் பேனாவைத் தொட்டு எழுதியவர் என்று கூறுவார்கள். இது உண்மை என்பது அவர் எழுதிய 'டன்ஸியாட்' (Dunciad) என்ற கவிதையால் புலனாகும். இது போன்ற நூல்களில் ஆசிரியர் புகழ் நிலைத்து நிற்க முடியாது. இதை நன்றாக மனத்தில் வைத்து, உண்மையான ஜீவிய சரிதங்களை எழுதத் தமிழ் மக்கள் முற்பட்டு வருதல் வேண்டும்.

ஜீவிய சரிதங்களுக்கு அடுத்தபடியாக நாம் எடுத்துக் கூறத் தக்கது நவீனங்கலாகும்.

இந்தப் பெயரால் 'நாவல்ஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்லப் படும் நூல் வகைகளைக் குறிக்கிறேன். இதுவும் ஒரு வகையில் ஜீவிய சரித்திரமே யாகும். கதாபாத்திரத்திரங்களுடைய குண விசேஷங்கள் எப்படி விமர்சித்து வருகின்றன என்பதையே, நவீனங்கள் விளக்கமாகவும், வர்ணனை மூலமாகவும், சரித்திர மூலமாகவும், நிகழ்ச்சிகள் மூலமாகவும், இன்னும் பல பல வழியாகவும் வெளியிடுவதையே நோக்கமாகக் கொண்டவை. இவ்வாறு எழுதப்பட்ட நூல்களும் தமிழில் அதிகமாக இல்லை என்றுதான் கூறவேண்டும்.

முதன் முதலாகப் பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம் பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் முதலியவை வெளிவந்தன. இவற்றுள் பிரதாப முதலியார் சரித்திரத்தில் பல வேடிக்கைகளு டன் முக்கியமாக நீதிகளும் விளக்கப்பட்டிருக்கின்றன. கமலாம் பாள் சரித்திரத்தில், சரித்திரம் மிக அழகாக அமைந்தபோதிலும், பல வேதாந்த விஷயங்கள் இடையிடையே சேர்க்கப்பட்டுள்ளன. பத்மாவதி சரித்திரம் ஆரம்பமுதல் இறுதிவரை அழகாகச் சென்று கொண்டிருக்கும் கதையாகும்.

இவற்றிலெல்லாம் கதாபாத்திரங்களின் ஆத்மவிளக்கம் நன்கு காணப்படும். மேற்கூறிய நூல்களை இயற்றியவர்கள், ஆங்கிலம் முதலியன கற்று, விரிந்த மனப்பான்மை உடையவராய் இருந் தனர். இவர்களுக்குப் பின்னால் சில புலவர்கள் இவ்வித நூல்களை இயற்றத் தொடங்கினர். இவர்கள் நூலினகத்தே வேறு புலவர்களைப் பாத்திரங்களாக அமைத்துத் தங்களுடைய ஆவலைத் தீர்த்துக்கொண்டார்கள். 'அஷ்டநாக பந்தங்கள்', 'கமல பந்தங்கள்', 'ரத பந்தங்கள்' முதலியன இவர்கள் நூல்களில் பல இடங்களில் காணப்படும். சரித்திரத்திற்கும் இவற்றிற்கும் தொடர்பு இல்லாமல் போனால், பரவாயில்லை அல்லவா? நவீனத்தின் வரலாறு மிக விநோதமாக உள்ளது. அதைப் பற்றித் தனியாக எழுதுவதுதான் உசிதம். நவீனங்கள் தோன்றி வெகு காலத்திற்குப் பிற்பாடு இப்போது பிரபலமாய் விளங்கும் சிறு கதைகள் எழுதப்பட்டன.

இவ்வகை நூல்களும் முதல் முதலில் சிறு குழந்தைகளுக்கும், அவர்களைப் போன்ற அறிவு நிலையில் இருக்கும் பிற

மக்களுக்கும் உதவக்கூடியபடி நீதி நிறைந்த சிறு கதைகள் முதலியன தோன்றின. இந்நீதிகளை எத்தனை முறைதான் வற்புறுத்திச் சொல்வது? எத்தனை வகையில்தான் சொல்வது? எத்தனை காலமாகச் சொல்வது? ஏதேனும் பலன் உண்டா? மக்களுக்கு நீதி என்று சொன்னவுடன் அலுத்துப் போய்விட்டது. இந்நிலையில் அந்நிய நாட்டுப் பிறவியாகச் சிறுகதை இனங்கள் தோன்றத் தொடங்கின. இதன் இயல்பும் எழுதும் முறையும் மக்களை வசீகரித்தன. மக்கட்குரிய பண்பும் இவற்றில் மிகுதியாகக் காணப்பட்டது. எனவே இவைகளுடைய வாழ்க்கை மிக நீடித்ததாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை. இவைகளும் கற்றதனால் ஆய பயன் என்பதற்கு ஓர் அம்சமாக விளங்குகின்றன.

கம்பன் காவியம்

(இரண்டாம் பகுதி)

1. இராம சரிதமும் தமிழ்நாடும்

இராமசரிதம் பாரத தேசம் முழுமைக்கும் உரியதோர் பொதுவுடைமை. பொதுவுடைமையாய் அமைந்தது சமீப காலத்தோ அல்லது சில பல நூற்றாண்டுகளுக்கு முன்போ நேர்ந்தது என நினைப்பது தவறு. மிகப் பூர்வகாலந் தொட்டே இங்ஙனம் அமையப்பெற்று வருவதாகும். நம் நாட்டில் பலரும் வால்மீகியே முதன் முதலில் இராம சரிதத்தை சிருஷ்டித்தவரென்றும். அவருக்கு முன்பு அச்சரிதம் வழங்கியதில்லை என்றும் கருதுகிறார்கள். ஆனால், இது சிறிதும் உண்மையன்று என்பது வால்மீகி ராமாயணத்தில் முதற் சருக்கமாகிய நாரத வாக்கியத்தால் அறியலாகும். அச் சருக்கத்தில் வால்மீகி நாரத முனிவரை நோக்கி, 'உலகத்தில் உத்தம புருஷன் யார்?' என்று கேட்கிறார். அதற்கு விடையாக நாரத முனிவர் 'இராமனே' எனக் கூறி அவன் சரிதத்தை விவரிக்கத் தொடங்குகிறார். இதனால் வால்மீகியார்க்கு முன்பாகத் தானே இராம சரிதம் வழங்கி வந்தமை உய்த்துணரலாகும்.

சங்க நூல்களில் இராமசரிதப் பகுதிகள்

இவ்வாறு, அதிபுராதன காலத்துத்தானே பாரத தேச முழுமையும், அதாவது இமயம் முதல் குமரி வரையும், இச் சரிதம் வழங்கி வந்துள்ளது.* தற்காலத்தில் நம்மவர் சிலர் இச்சரிதம் வடநாட்டுக்குரிய சரித்திரம் என்றும் பிற்பட்ட காலத்தேதான் இது நமது தமிழ் நாட்டிற் புகுந்துள்ளதெனவும் கருதுகின்றார்கள். இதில் ஓரளவு உண்மை இருக்கலாம். என்றாலும் மிகமிகப் பழங்காலந்தொட்டு இச்சரிதம் நம் நாட்டில் வழங்கி வந்திருக்கிறது. முதலாவது முற்சங்க நூல்கள் சிலவற்றில் இராம சரிதப் பகுதிகள் சில காணப்படுகின்றன. புறநானூற்றில்,

* பேராசிரியர் சாட்விக் தமது வீரயுகம் என்ற நூலில் (Prof. Chadwick: The Heroic Age p. 28-29) வெளியிட்டுள்ள சில கருத்துக்கள் இராமாயணம் பற்றியும் பொருந்துமென்றே தோன்றுகிறது. ஆரிய மக்கள் தென்னாடு புகுந்து, அங்கே பரவிக் குடியேறி, அங்கிருந்த மக்கள் தங்கள் சமயத்தைத் தழுவும்படியாகச் செய்து, பரதகண்ட முழுவதிலும் ஒரே

கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு
அறாஅ வருநகை யினிதுபெற் றிகுமே (புறம் 378)

எனக் காண்கின்றது. அகநானூற்றில்,

வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கு முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றால் இவ் அழுங்க லூரே

என வந்துள்ளது. மதுரைக் காஞ்சி என்னும் சங்கப் பாட்டில் இராவணனைப் பற்றிய செய்தியொன்று மிக்க தொன்மைக் காலத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய (வரி 40, 41)

இங்கே 'தென்னவன்' என்றது இராவணனை, கடவுள் என்றது அகத்திய முனிவரை. இம் முனிவர் 'பொதியின் கணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து அவன் உள்ளிட்ட இராக்கதர்களை ஆண்டு இயங்காமை விலக்கினார்' என்பது பண்டைப் பௌராணிக வரலாறு. பிற்சங்க நூல்களுள் கலித் தொகையில்,

---

வகைப்பட்ட பண்பாட்டினை நிறுவி, ஒற்றுமையுணர்ச்சியை உண்டுபண்ணிய செய்தியை இராமாயணப் பேரிதிகாசம் பொதுப்படையாகக் கூறுகிறதென்று நாம் கொள்ளலாம். இதற்கும் மேலாகச் சென்று, இராமாயணத்திற் காணும் ஆரிய வீரர்களையும் அரக்கர் முதலிய இனத்தவர்களையும் உண்மைச் சரித்திர மக்கள் எனவும், அதில் வரும் பல செய்திகளும் உண்மை வரலாறுகள் எனவும் துணிதல் சிறிதும் ஒப்பத்தக்க தன்று.

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்ப்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல (38)

என இராமாயணத்தின் உத்தர காண்டச் செய்தியொன்று கூறப்பட்டுள்ளது. பரிபாடலில் (19)

இந்திரன் பூசை, இவள் அகலிகை; இவன்
சென்ற கவுதமன்; சினனுறக் கல்லுரு
ஒன்றிய் படியிது என்றுரை செய்வோரும்

என அகலிகை சாபம் பற்றிய சித்திரம் திருப்பரங்குன்றத்துச் சித்திர மண்டபத்தில் வரையப்பட்டிருந்ததெனக் குறிக்கப் பட்டுள்ளது. இவள் கல் வடிவிற் கிடந்தாளெனக் காளிதாசர் (ரகு வம்சம் XI 34) தெரிவிக்கிறார். வால்மீகி இங்ஙனம் கூறவில்லை.

மேற்குறித்தன முற்சங்க பிற்சங்க நூல்களில் ஏகதேசமாகக் காணப்படும் செய்திகள். முற்சங்க காலத்தையடுத்து, இராம சரிதம் பற்றிய நூல்கள் சில தமிழில் தோன்றின என்று ஊகித்தற்குரிய சான்றுகள் உள்ளன. 'பாதம் பலவரிற் பஃறொடை வெண்பா' என்னும் யாப்பருங்கலச் சூத்திர விருத்தியில், 'பல அடியான் வந்த பஃறொடை வெண்பா இராமாயணமும் புராண சாகரமும் முதலாகிய செய்யுட்களிற் கண்டுகொள்க' என்று காணப்படுகின்றது. இங்குக் குறித்ததேயன்றி நச்சினார்க்கினியர் பொருளதிகார உரையில் (அகத். 54, புறத். 12, 21) காட்டியுள்ள செய்யுட்களால் வேறோர் இராமாயணம் வழங்கியதெனவும் அறிகின்றோம். இதினின்று ஓர் உதாரணம் தருகிறேன் :

கடலு மலையும் நேர்படக் கிடந்த
மண்ணக வளாகம் நுண்வெயிற் றுகளினும்
நொய்தா லம்ம தானே இஃதெவன்
குறித்தனன் நெடியான் கொல்லோ மொய்தவ

வாங்குசிலை யிராமன் தம்பி யாங்கவன்
அடிபொறை யாற்றி னல்லது
முடிபொறை யாற்றலன் படிபொறை குறித்தே:

(தொல். பொருளதி. 76, நச்)

அன்றியும், புறத்திரட்டு என்னும் தொகைநூலில் தொகுக்கப்பட்டுள்ள செய்யுட்கள் சில இவ் இராமாயணத்தைச் சார்ந்தன என்றும் கருதல் தகும். கீழ்வரும் செய்யுள் உதாரணமாகும்;

இருசுடர் வழங்காப் பெருமூ திலங்கை
நெடுந்தோள் இராமன் கடந்த ஞான்றை
எண்கிடை மிடைந்த பைங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
எச்சார் மருங்கினும் எயிற்புறத் திறுத்தலிற்
கடல்சூழ் அரணம் போன்ற
உடல்சின வேந்தன் முற்றிய ஊரே. (புறத். 1333)

இவற்றை ஆழ்ந்து நோக்குமிடத்து. முற்சங்கச் செய்யுட்கள் தொகுக்கப்பட்ட பின்னர், சுமார் கி பி. 650-இல் இராமாயணங்கள் சில தமிழ் மொழியில் இயற்றப்பட்டிருந்தன என்று தோன்றுகிறது. இவற்றிலுள்ள சில சரிதப் பகுதிகள் தமிழ்மக்கள் உள்ளத்தைப் பிணித்து வசிகரித்தன என்றும் நாம் நினைத்தற்கு இடமுண்டு. அவ்வகையான பகுதியொன்று சிலப்பதிகாரத்தில் சுட்டப்படுகின்றது.

பெருமகன் ஏவ லல்லது யாங்கணும்
அரசே தஞ்சமென்று அருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்

(xiii 63 : 66)

இப்பகுதி இராமன் தன் தந்தையின் ஏவலை மேற்கொண்டு லட்சுமணனும் சீதையும் உடன் வர நகர்நீங்கிக் காடு சென்ற பொழுது, அயோத்தி நகரம் வருந்தியதைக் குறிப்பது. இப்படியே லட்சுமணனது அருஞ் சேவையைக் குறித்துப் பெருங்கதை பின் வருமாறு கூறுகிறது :

இறைமீக் கூறிய இராமன் தம்பி
மறுவொடு பெயரிய மதலைக்கு இயைந்த
ஆனாப் பெரும்புகழ் யாமும் எய்தத்
தேனார் தாமரைத் திருந்துமலர்ச் சேவடி
வழிபா டாற்றுதும் (iii. 24, 90-94)

தமிழ்நாடு முழுதும் பரவியிருந்தமை

எனவே, நமது தமிழ்நாடு முழுவதும் இராமசரிதம் பண்டைக்காலந் தொட்டு நன்கு பரவியிருந்தமை வெளியாகின்றது. வைதிக சமயத்தைச் சார்ந்தவர்களுக்குள் மட்டுமே இராம சரிதம் தெரிந்திருந்ததாதல் வேண்டுமெனச் சிலர் கருதலாம். இந்தக் கருத்தும் பிழையேயாகும் என்பது எளிதிற் காட்டக்கூடும். மேலே குறித்த சிலப்பதிகாரமும் பெருங்கதையும் ஜைனர்கள் இயற்றியன. அன்றியும் புத்த ஜாதகக் கதைகளுள் இராம சரித்திரம் ஒன்று காணப்படுகிறது. இங்ஙனமே ஜைனர்களிடையும் இராமாயண சரிதம் வழங்கிவந்துள்ளமை ஸ்ரீபுராணத்தால் அறியக்கிடக்கின்றது. இவ்வாறாக, மத வேற்றுமையினால் ஒதுக்கப்படாது பாரததேச முழுவதும் போற்றி வந்த சரிதம் இராமாயணம் ஆகும். பாரத தேச மக்கள் அனைவரும் அடிப்படையில் ஒரே பண்பாடும் ஒரே நாகரிகமும் உடையர் என்பதை நிரூபிக்க மேற்கூறியது ஒரு தக்க பிரமாணமாகின்றது.

இந்தப் பெருஞ் சரிதையின் நாயகனான இராமன் ஒரு தேசிய வீரனாகவே ஆதியிற் கருதப்பட்டான். பாரததேச மக்களை நலிவித்துத் துன்புறுத்தி வந்த இராவணன் முதலிய அரக்கர்களை நாசம் செய்து இராமன் நாட்டை விடுதலை பெறச் செய்த பெருமையையே முற்காலத்து மக்கள் பெரிதும் பாராட்டி வந்தார்கள். வான்மீகி ராமாயணத்திலுள்ள இடைச் செருகல்களை நீக்கிவிட்டால் அதன் முக்கிய கதி இராமனை வீர புருஷனாகக் காட்டுவதே யாமென வடமொழி ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். காலஞ் செல்லச் செல்ல, இவ் வீர புருஷன் தெய்வ புருஷனாக மாறுகின்றான். பாரத மக்களின் உள்ளத்திலே நெடுங்காலமாக வாசம் செய்து அவர்களால் போற்றப்பட்டு வந்ததன் பயனாகவே, இத்தெய்வத் தோற்றம் ஏற்பட்டு விட்டதென நாம் நினைக்க வேண்டியதா யிருக்கிறது.

லட்சிய புருஷனாகவும், உத்தம புருஷனாகவும் அமைந்த ஒருவன் நமது நாட்டில் எளிதிலே தெய்வத் தன்மையைப் பெற்று

விடுவான் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். இங்ஙனம் தெய்வத் தன்மையைப் பெற்ற இராமனைப் பாரத மக்கள் தங்கள் மனோபாவத்தால் புனைந்து புனைந்து அத்தெய்வத் தன்மை புலப்படும் செய்திகளைக் கற்பித்தனர். அங்கங்கே வழங்கிவந்த செய்தி விசேடங்களையும் புதியனவாக இராம சரித்திரத்தில் சேர்த்தனர். இவ்வாறு சேர்க்கப்பட்டன எல்லாம் மக்களது கருத்து வளர்ச்சியோடு பொருந்தவே அமைந்தன வாதலால், அவற்றை எளிதில் நம் மக்கள் உடன்பட்டு ஏற்றுக் கொள்ளலாயினர். அவை யெல்லாம் ஆதியிலுள்ள இராம சரிதத்திலேயே உள்ளன என்றும் கருதினர். இராமனைத் திருமாலின் அவதாரம் எனவே கொண்டு பாரத மக்கள் வழிபட லாயினர்.

கம்பன் தோற்றம்

இவ் வழிபாடு தமிழ் நாட்டிலே புதியதொரு கோலத்தைப் பெற்றது. சங்க காலத்திற்குப் பிற்பாடு, பக்திப் பெருவெள்ளம் தமிழ் நாடு முழுவதும் பாய்ந்து பரந்தது. பக்தி பெருகுவதற்கொரு கருவியாக இராம சரித்திரம் கொள்ளப்பட்டது. இராமாயணப் பிரவசனமும் சீரிய பக்தியும் ஒருங்கு வளர்வன ஆயின. இராம சரிதப் பகுதிகளை எடுத்துச் சாங்கோபாங்கமாக வியாக்கியானம் செய்து பக்திப் பெருநெறியை நமது நாட்டில் பரவச்செய்து வந்தார்கள். இன்னுமொரு முக்கிய விஷயம் கவனிக்கத் தக்கது. பக்திக்கு நிரந்தர வாழ்வளித்து அதனை வலியுறுத்து வதற்குத் தத்துவ விசாரணை இன்றியமையாதது. இவ்வகைத் தத்துவ விசாரணையும் தமிழ்நாட்டிற் பெருகத் தொடங்கிற்று. இராமாநுஜராதிய பேரறிஞர்கள் இத்துறையில் உழைத்து விசிஷ்டாத்துவித தத்துவங்களை அறுதியிட்டு, பக்தியையும் இராமாயணத்தில் ஈடுபாட்டையும் தமிழ்நாட்டில் செழிக்கச் செய்தனர். இந்நிலையில் இராம சரிதம் புதியதொரு வடிவமும், புதியதொரு பெருமையும், புதியதோர் ஆற்றலும் பெற்றது. இங்ஙனம் பூர்ண வளர்ச்சியுற்று விளங்கிய இராம சரிதத்தைத் தக்கபடி கவிதையில் அமைப்பதற்கு ஓர் அற்புதக் கவிஞன் இன்றியமை யாதவனாயினான். இந்த இன்றியமையாமையை நிரப்புவ தற்குத் தோன்றியவனே கம்பன்.

கம்பனது இராமாயணத்தால், தமிழ்நாட்டுப் பண்பாடு தனக்கே சிறப்பாகவுரிய இயல்புகளைக் கைவிடாது, பாரததேசம் முழுமைக்கும் உரிய பொதுப் பண்பாட்டோடும் ஒத்து இயங்குவ தாயிற்று.

2. கம்பன் கவிச்சக்கிரவர்த்தி

தமிழ்நாட்டிலே கவிச் சக்கிரவர்த்திகள் மூவர் இருந்தனர் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். கலிங்கத்துப்பரணி பாடிய ஜெயங்கொண்டார் ஒரு கவிச்சக்கிரவர்த்தி. ஒட்டக்கூத்தர் மற்றொரு கவிச்சக்கிரவர்த்தி. கம்பன் மூன்றாவது கவிச்சக்கிரவர்த்தி. முற்கூறிய இருவரும் சோழ அரசாங்கத்தோடு நெருங்கிய தொடர்பு உடையவர்கள். தங்கள் தங்கள் காலத்து அரசர்களால் மிகவும் போற்றி ஆதரிக்கப்பெற்றவர்கள்; அந்த அரசர்களது வெற்றிகளையும் பிற புகழ்களையும் சிறப்பித்துப் பாடியவர்கள். எனவே இவ்விருவரையும் கவிச்சக்கிரவர்த்திகள் என்று அவ்வரசர்கள் அபிமானித்துப் பாராட்டுதற்குத் தெளிவான காரணம் உண்டு. ஆனால் கம்பனுக்கு இவ்வகையான அரசாங்கத் தொடர்பு யாதும் இல்லை. இதற்கு மாறாக, இவன் அரசரது கோபத்திற்கு ஆளாகி, வேற்று நாடுகளுக்குச் சென்று மறைந்து வாழும்படியும் நேரிட்டது. இறுதியில் இவன் ஓர் அரசனால் துர்மரணம் அடைந்தான் என்றும் சரித்திரம் வழங்குகின்றது. இவ்வாறிருக்க, இவனுக்குக் கவிச் சக்கிரவர்த்தி என்ற பட்டம் கொடுத்தது யார்?

மக்கள் சூட்டிய பட்டம்

தமிழ்நாட்டுப் பெருமக்கள்தாம் இப்பட்டத்தைக் கம்பனுக்குச் சூட்டியவர்கள். இவனது பேரிதிகாசத்தை அரங்கேற்றும்போது அதனைக் கேட்டு உவந்த பொதுமக்கள் அதன் சுவையில் மிகவும் ஈடுபட்டு, அது அமிர்தம் போன்று இனிமையாயிருப்பதை உணர்ந்து, மண்ணுலகத்திலுள்ள தங்களுக்கு இந்தப் புத்தமிர்தத்தைத் தமிழ் ஆகிய பாற்கடலிலிருந்து கடைந்தெடுத்துத் தந்த வள்ளலுக்கு இப் பட்டத்தைச் சூட்டியது சிறிதேனும் வியப்பாகுமா?

> கம்பநா டுடைய வள்ளல்
>   கவிச் சக்ரவர்த்தி பார்மேல்
> நம்பு பாமாலை யாலே
>   நரருக்கின் றமுதம் ஈந்தான்

என்றார் ஓர் அபியுக்தர்.

அரங்கேற்றிய அன்று சூட்டிய இப்பட்டம் சுமார் 750 ஆண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக, வழங்கிவந்து இன்றும் நாட்டில் நிலைபெற்றிருக்கிறது. முற்கூறிய ஜெயங் கொண்டார், ஒட்டக்கூத்தர் என்ற இருவர்க்கும் வழங்கிய இப்பட்டம் அவர்களுடைய காலத்தோடு நின்றுவிட்டது. அவர் களுக்கும் இப்பட்டம் வழங்கிற்று என்பதனைக் கற்றுவல்லவர்கள் மட்டுமே அறிவர். ஆனால் இன்றும் பொதுப்படக் கவிச்சக்கிர வர்த்தி என்று நாம் சொன்னால், அது கம்பனொருவனையே குறிப்பதாயுள்ளது. இதுமட்டுமன்று. ஆசிரியர் திருவள்ளுவர்க்கு வழங்கும் 'தெய்வப் புலமை' என்ற அடைமொழியும் கம்பனுக்குச் சார்த்தப்பட்டுள்ளது. நமது தேசிய கவியும்,

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை.
உண்மை ; வெறும் புகழ்ச்சியில்லை

என்று கூறியிருப்பது நாம் அனைவரும் அறிந்ததே.

இவ்வாறெல்லாம் புகழ்ந்து பாராட்டுதற்குக் கம்பனிடம் கண்ட பெருமைக்குறிகள் யாவை? ஒரு சிலவற்றை இங்கே பார்ப்போம்.

சொல்வளம்

இதைக் குறிப்பிட்டவுடனே நிகண்டுகள் முதலியவற்றிலுள்ள சொற்களையெல்லாம் மனனஞ் செய்து அவற்றை வரையறை யின்றிக் கவிஞன் தன் செய்யுட்களிலே ஆளுதலை நான் கருதவில்லை. தமிழில் நைடதம் பாடிய அதிவீரராம பாண்டியன் இவ்வகைக் கவிஞர் கூட்டத்தில் உட்பட்டவனே. இடத்திற்கேற்க செய்யுளின் கதிக்கேற்க, சொற்கள் யாதொரு தட்டுத்தடையு மின்றி விரைந்து வந்து உதவும் நிலையையே சொல்வளம் என்று இங்கே கூறியது. எடுத்துக்கொண்ட சுவைகளுக்குத் தக்கபடி யாகவும் சொற்கள் அமைதல் வேண்டும், இலக்கிய வழக்கிலும் உலக வழக்கிலும் உள்ள எல்லாச் சொற்களுக்கும் உயிர் உண்டு; வாழ்க்கை உண்டு; வாழ்க்கைச் சரித்திரமும் உண்டு. பண்டை இலக்கியங்களிலே நிரம்பிய பயிற்சியும், தன் காலத்து வழங்கும் மொழி பற்றி மிக ஆழ்ந்த அனுபவமும், தனது ஆன்மாவோடு ஒன்றிக் கலந்துவிட்ட நிரம்பிய தமிழுணர்ச்சியும் இருக்கும்

கவிஞனுக்குத்தான் சொற்களின் உயிர்த் தத்துவம் நன்கு புலப்படும். இவ்வகையாகச் சிறந்த ஒரு கவிஞன் நினைத்த மாத்திரத்தில் அவன் வேண்டும்போது சொற்கள் அவனது மனக் கண்முன்னே தோன்றி, தம்மைத்தாமே அளித்து ஏவல் கேட்டு நிற்கும். இங்ஙனம் தோன்றும் ஒரு சொல்லுக்கு அதன் பரியாயச் சொல் வேறு எதுவும் சமமாகமாட்டாது. ஆதலால் அச்சொல்லுக்குப் பதிலாக வேறு சொல் அமைக்க முடியாது. கம்பன் இப்படிப்பட்ட சொல்வளம் படைத்தவன். ஓர் உதார ணத்தால் இதை விளக்குகிறேன்.

* * * இருட்

கனியும் போல்பவன் கங்குலும் திங்களும்
தனியும் தானும் அத் தையலும் ஆயினான்

(மிதிலைக். 139)

என்ற அருமையான செய்யுட் பகுதியை நோக்குங்கள். இதன் இன்னிசையிலும் கவித்வப் பெருஞ்சிறப்பிலும் நம் மனத்தை நாம் இங்குப் பறிகொடுக்க வேண்டாம். கனி, பழம் என்ற இரண்டு சொற்களை மட்டும் நன்கு கவனி யுங்கள். இந்த இரண்டிற்கும் பொருள் ஒன்றே. ஆனால் கவித்வ மதிப்பில் இரண்டு சொற்களுக்குமுள்ள வித்தியாசம் அஜகஜாந்தரம். இதனை நன்குணர்ந்து, 'இருட்பழமும்' என்று கூறி ஏனை அடிகளையும் இதற்குத் தக்கவாறு மாற்றாதபடி, 'இருட் கனி' என்று கம்பன் பாடியது நம்மை மிகக் கனிவித்துவிடு கிறது. இங்கே இருட்கனி என்றது இராமனை. சீதையை இச் சொல் குறிக்கும் விசித்திரத்தை, 'கல்லும் புல்லுங் கண்டுருகப் பெண்கனி நின்றாள்' (மிதிலைக், 33) என்ற அடியிற் காணலாம். 'பெண் பழம்' என்று சொல்லிப் பார்த்து வேறுபாடு தெரிந்து கொள்ளலாம்.

இங்கே காட்டியது போன்ற தனிச்சொற்களின் ஆட்சியால் மட்டும் சொல்வளம் நிரம்பிவிடுவதில்லை சொற்கள் ஒன்றோ டொன்று காதல் மணம் புரிந்து வாழும் காட்சியும் இவ்வளத்தில் அடங்கும். உதாரணமாக, 'காதலித்த உருவாகி அறம் வளர்க்குங் கண்ணாளன்' (இராவணன் வதைப். 202) என்ற அருமைச் சொற்றொடரை நோக்குங்கள். 'தருண வஞ்சிக் கொம்பு' (தைலமாட்டு. 15), 'சேதாம்பற் போதனைய செங்கனி வாய்' (நகர் நீங்கு. 101), 'கருணையங்கோயிலு னிருந்த கண்ணனை' (வீபீடண. 50), 'வரங்களின் வாரி' (வீபீடண. 140),

'சிரித்தபங்கயம்' (கைகேசி. 50). இவைபோல எத்தனையோ அரிய இனிய செஞ்சொல் - தொடர்களைக் கம்பன் தனது இதய மாகிய நாணய சாலையினின்று நிருமித்துத் தந்திருக்கிறான். இச் செஞ்சொல்-இன்பம் அடிகள் தோறும் தொடர்ந்து சென்று தெவிட்டாத தீங்கவியாய் நம்மைப் பரவசமாக்கும் இடங்களும் மிக மிகப் பலவாயுள்ளன.

கஞ்சத்துக் களிக்கும் இன்தேன்
கவர்ந்துணும் வண்டு போல
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லாம்
அருளினாள் அருகை மாந்தி (கோலங்காண். 19)

கற்பினுக் கரசினைப் பெண்மைக் காப்பினைப்
பொற்பினுக் கழகினைப் புகழின் வாழ்க்கையை
(மீட்சி. 60)

என்ற செய்யுட் பகுதிகளைப் பாடிப்பாடி நன்கு சுவைத்து நுகர்ந்து நான் கூறியதன் உண்மையை உணரலாம்.

செய்யுள் வளம்

இரண்டாவதாக, செய்யுள் வளம். அபியுக்தர் ஒருவர் இராமாயணத்திலுள்ள செய்யுள் விகற்பங்களைக் கணக்கிட்டு,

வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்றாறே

என்று அறுதியிட்டிருக்கிறார். இங்ஙனம் கணக்கிடுதல் எளிதல்ல அன்றியும் இக்கணக்கினால் மட்டும் செய்யுள் வளத்தை அளந்தறிய முடியாது. செய்யுள் வகைகள் எத்தனை உளதாயினும், அத்தனை வகைகளின் மர்மங்களையும், இதய ஸ்தானங்களையும் நன்றாக இனிது உணர்ந்து அவற்றை அடக்கி யாண்டு, தனது பெருங் காப்பியத்திற்குக் கம்பன் இனிது பயன்படுத்தியுள்ளான். அறுசீர் விருத்தத்தை நாம் எடுத்துக்கொண்டால்தான் எத்தனை வகைகள்!

பொன்னையேர் சடையான் கூறக்
கேட்டலும் பூமின் கேள்வன் (அகலிகை. 71)

இது ஒரு வகை.

கடலோ மழையோ முழுநீலக்
கல்லோ காயா நறும் போதோ (மிதிலை. 65)

இது பிறிதொரு வகை.

குழைக் கின்ற கவரி யின்றிக்
கொற்றவெண் குடையு மின்றி (நகர்நீங்கு 2)

என்பது மற்றொரு வகை.

சிதப் பனிநீ ரளவித்
திண்கா லுறவுந் தண்கால் (நகர்நீங்கு. 39)

என்பது நாலாவது வகை.

ஐவீரு மொருவீரா யகலிடத்தை
நெடுங்கால மளித்தி ரென்றான் (குகப், 67)

என்பது ஐந்தாவது வகை..

யாப்புத் திறன்

இவைகளைக் கம்பன் தனது அரிய யாப்புத்திறனைக் காட்டுவதற்காக வேறுபடுத்தினான் என்று கருதுதல் தவறு. அவனது கருத்தின் இசை, செய்யுளின் கதியாக உருவெடுத்து வெளி வந்து ஒழுகுகின்றது என்றே கொள்ளுதல்வேண்டும். இதனோடும் அவனது செய்யுள் வளம் அமைந்து, விடவில்லை. முக்கியமான கட்டங்களுக்குத் தக்கபடியும், அங்குக் கூறவேண்டும் கருத்துக் களுக்குத் தக்கபடியும், செய்யுளின் வகைகள் தா மா க வே மாறுவதுபோல் மாறிவிடுகின்றன. உதாரணமாக, இராவண னுக்கும் இராமனுக்கும் நிகழ்ந்த போரைச் சொல்லி முடித்து, பின் இராகவனது வாளியால் இராவணன் இறந்துபட்டான் என்பதைக் கூறுமிடத்திலே, விருத்தகதியைமாற்றி,

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்

திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்
றிராகவன் தன் புனித வாளி

(இராவணன்வதை. 198)

என வெற்றியின் பெருந்திறத்தைக் காம்பீரியம் நிறைந்த இவ் விருத்த வகையால் கம்பன் நமக்கு உணர்த்துகிறான்.

இவ்வாறு கட்டங்கள் தோறும் செய்யுள் வகைகளை மாற்றுவதோடு, கதா பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்கவும், செயல்களுக்கேற்கவும் கம்பன் தனது செய்யுட்களை வேறுபடுத்தி அமைத்திருக்கிறான். இதுவும் மிகப் பாராட்டுதற்குரியது. தாடகை வந்து கோபக்கனலோடு இராமனை எதிர்க்கும் நிலையைக் காணுங்கள்;

இறைக்கடை துடித்தபுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயாள்
மறக்கடை யரக்கிவட வைக்கன லிரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென நெருப்பெழ விழித்தாள்.

(தாடகை வதை. 49)

சூர்ப்பணகை தனது ஜகன் மோகன விலாசத்தால் இராமனை வசீகரித்ததற்கு வரும் அழகிய கொஞ்சு நடையைப் பாருங்கள்.

பஞ்சி யொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

(சூர்ப்பணகை. 31)

இதுவும் முந்திய செய்யுளும் விருத்த வகையில் ஓரினத்தைச் சார்ந்தனவே. எனினும் வல்லோசையையும் மெல்லோசையையும் ஆளுந்திறத்தால் இரு வேறு வகைப்பட்ட மனநிலைகள் புலப்படுகின்றன. குகன் பரதனை ஐயுற்று அவன் மீது போர் தொடுப்பேன் என்று வெகுண்டு கூறும் வார்த்தைகளைக் கேளுங்கள்:

போன படைத்தலை வீரர் தமக்கிரை போதாஇச்
சேனை கிடக்கிடு தேவர் வரிற் சிலை மாமேகம்
சோனை படக் குடர் குறைபடச் சுடர் வாளோடும்.
தானை படத்தனி யானைபடத் திரள் சாயேனோ.

(குகப். 20)

இதுகாறும் கம்பனது சொல் வளத்தையும் செய்யுள் வளத்தையும் பற்றிக் கூறினேன். இனி, மூன்றாவதாக அவனது மனோபாவனையின் வளத்தைப் பற்றிச் சில கூறுகிறேன். இது பல முறைகளிலும் பல வழிகளிலும் கம்பனது பெருங் காவியத்திற் காணப்படுகிறது.

உவமை நயம்

முதலாவது உவமை முதலிய நயங்களை நோக்குவோம். உவமையை ஆளுதலிலே மனோபாவனைக்கு இடமேதென்று சிலர் வினவலாம். ஒரு பொருளுக்குப் பல உவமைகள் இருக்கலாம். அவற்றுள் எது சிறந்தது எனத் தெரிந்து ஆளுதல் வேண்டும்; உவமேயத்தை அது நன்றாக விளக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்; உவமையைக் கூறிய அளவிலே கேட்போருக்கு இன்பம் விளைதல் வேண்டும். கவிஞன் உணர்ச்சியிலிருந்து இவ் வுவமை விளைந்தால்தான் கேட்போரும் இன்பம் எய்துவார்கள். இவ்வுணர்ச்சியின் வேகத்தால் மனோபாவனையும் தொழிற்படுகின்றது. இவ்வாறு தொழிற்பட்டு வெளிவரும் உவமைகளே சிறந்தவையாகும். கம்பனது உவமானங்கள் மனோபாவனையினின்றும் பிறந்தனவாம். கேவலம் பழம் பாடங்களை ஒப்பிப்பன அல்ல. கண்களைத் தாமரைக்கு ஒப்பிடுவது பழங்காலந்தொட்டே தமிழ் ,வடமொழி இலக்கியங்களில் காணப்படுவதுதான். ஆனால் இராமனது செவ்வரி பரந்த கண்களை நினைத்தவுடன் கம்பன் அவற்றின் பேரழகில் ஈடுபடுகிறான். உணர்ச்சிமயமாக ஆகிவிடுகிறான், 'சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன்' (கைகேசி. 50) என்ற உவமானம் அவன் இதயத்தினின்றும் எழுகின்றது. இதனைக் கேட்போர் அடையும் இன்பம் மிகப் பெரிதாம் என்பதில் சந்தேகமில்லை.

இராமனைப் பருவ கால மேகத்திற்கு ஒப்பாகக் கூறுதல் பண்டை இலக்கிய வழக்கு. இவ்வாறு சொல்லிய அளவில் நமக்கு நிரம்பிய இன்பம் உண்டாவதில்லை. யாதொரு விதமான

ஆபரணமுமற்று, வேற்று நிறமின்றிக் கார்வண்ணனாய் இருக்கும் அவ் இராமனை, இந்திரவில் நீங்கிய பருவகால மேகத்திற்கு ஒப்பாவான் என்று கம்பன் கூறும் அழகைப் பாருங்கள்.

படர்மழை சுமந்த காலைப் பகர்வரும் அமரர் கோமான்
அடர்சிலை துறந்த தென்ன ஆரந்தீர் மார்பி னானை
(விபீடணா. 135)

இவ்வுவமானம் நம்மை உருக்கி விடுகின்றதல்லவா?

இங்ஙனமே தோழியர்கள் புடைசூழச் சீதை யிருக்கும் அழகிய தோற்றத்தைச் 'சதகோடி மின்சேவிக்கும் மின்னரசு' (மிதிலை 31) என்ற உவமானத்தால் அறிவுறுத்துகிறான்.

வருணனைகள்

இரண்டாவதாக, வருணனைகளை நாம் எடுத்துக்கொள்வோம். இவற்றிலும் கம்பனது மனோபாவனைத் திறன் நன்கு காணப்படுகின்றது. பொருள்களை நேரில் கண்டு அனுபவித்து அவ்வனுபவத்தை மீண்டும் நினைவிற்குக் கொண்டு வந்து அப்பொருள்களின் அழகில் மீண்டும் மீண்டும் ஈடுபடுவதுபோல உள்ளன அவனது வருணனைகள். புலிக்குட்டியை அவன் தம் மனக்கண் முன் கொண்டு வருவதை நோக்குங்கள்:

புன்புற மயிரும் பூவாக் கட்புலம் புறத்து நாறா
வன்பறழ் வாயிற் கவ்வி வல்லியம் இரிந்த மாதோ.
(கடல்தாவு. 7)

இது வெளிப்புறத்தே தோன்றும் ஒரு பொருளை அழகுற வருணிக்கின்றது. புலிக்குட்டி என்ற உணர்ச்சியற்று, அதனைக் கட்டித் தழுவி எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கும்படியாக இவ்வருணனை அமைந்திருக்கிறது. உணர்ச்சி வயத்தால் மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கும் நிலையைக் கம்பன் வருணிப்பது முற்கூறியதைக் காட்டிலும் ஒரு படி மேம்பட்டதென்னலாகும். கைகேசி தான் வேண்டிய வரங்களைக் கேட்டவுடன். தசரதன் வருந்துகிறான். அக்காட்சியின் வருணனையைப் பாருங்கள்.

மேவி நிலத்தில் இருக்கும்நிற்கும் விழும்,
ஓவியம் ஒப்ப உயிர்ப்படங்கி ஒயும்,

பாவியை உற்றெதிர் பற்றிஎற்ற உன்னும்,
ஆவி பதைப்ப அலக்கணெய்து கின்றான். (கைகேசி. 14)

கோசலை, இராமன் வாயிலாக, அவன் நகர் நீங்குவதைக் கேட்டவுடன்,

ஆங்கவ் வாசகம் என்னும் அனல் குழை
தூங்கு தன்செவி யில் தொடரா முனம்
ஏங்கினாள் இளைத்தாள் திகைத்தாள் மனம்
வீங்கினாள் விம்மினாள் விழுந்தாள் அரோ?

(நகர் நீங்கு. 9)

என்று வருணிக்கப்படுகின்றாள். இராமன்பாற் சென்று கற்பின் செல்வியாய்ச் சீதை இலங்கையில் இருக்கின்றாள் என்ற செய்தியை அனுமான் கூறுகின்ற வாசகம் நம்மையும் உயிர் தளிர்க்கச் செய்து கூத்தாட்டுவிக்கின்றது.

விற்பெருந் தடந்தோள் வீர
வீங்கு நீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டே னல்லேன்:
இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை என்ப தென்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம்புரியக் கண்டேன்.

(திருவடிதொழுத. 62)

இங்குக் கூறியவற்றிலும் ஒரு படி மேலாகச் செல்வது பல வேறு கட்டங்களின் வருணனை, இதற்குச் சிறந்த உதாரணமாக உலாவியற்படலம், பூக்கொய் படலம், நீர் விளையாட்டுப் படலம், யுத்த காண்டத்தில் களியாட்டுப் படலம் முதலியவற்றைக் கூறலாம். இப் படலங்களிலுள்ள ஒவ்வொரு செய்யுளும் ஒரு தனிப்பட்ட சித்திரமாகும். மேல் - நாட்டு இலக்கிய மதிப்பாசிரியர் ஒருவர்' ஒரு காவியத்தின் பெருமை எத்தனை அழகிய சித்திரங்கள் அதினின்றும் எடுத்தெழுத இயலுமோ அத்தனை அளவாக உள்ளது' என்று கூறுகின்றார். கம்பனது இராமாயண

முழுவதும் எத்தனையோ அற்புதமான சித்திரங்களுக்கு இடந் தந்து நிற்கிறது. சிறப்பாக மேற்கூறிய படலங்கள் கம்பனது சிருஷ்டிதத்துவத்தின் பெருமைக்குச் சான்றாய் நின்று அளவற்ற உயிரோவியங்களை நமக்குத் தருகின்றன.

சொன்னலங் கடந்த காதற்
சுவையையோ ருருவ மாக்கி
இன்னலம் தெரிய வல்லார்
எழுதிய தென்ன நின்றாள்
பொன்னையும் பொருவு நீராள்
புனைந்தன எல்லாம் போகத்
தன்னையுந் தாங்க லாதாள்
துகிலொன்று தாங்கி நின்றாள். (உலாவியற். 12)

இச் சித்திரத்தை மனத்தினால் பாவித்து நான் கூறியதின் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

இவற்றைக் காட்டிலும் ஒருபடி மேலாக உள்ளது இரண்டு பாத்திரங்கள் சந்திக்குமிடத்து நிகழும் நிகழ்ச்சியைப் பற்றிய வருணனையாம். இதற்குப் பல சிறந்த உதாரணங்கள் கம்பனது இதிகாசத்திலே நம்மை எதிர்ப்படுகின்றன, இராமனும் சீதையும் ஒருவரை யொருவர் காணும் காதற் காட்சி, இராமனை வேண்டி விசுவாமித்திரர் தசரதனிடம் வரும் கோபக் காட்சி, குகன் பரதனைக் கண்டு முதலில் கோபங்கொண்டு பின் உண்மை நிலையை உணர்ந்து அவனை எதிர்ப்பட்டு, 'எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு' (குகப். 30) என்று கூறி, அவனைத் தழுவி நிற்கும் அன்புக் காட்சி, அனுமான் இராமன் முதலியோரைக் கண்டு சுக்ரீவனுக்கு உணர்த்தி நட்புக் கொள்ளும்படி செய்த பக்திக் காட்சி, விபீஷணன் தன் சுற்றத்தாரைத் துறந்து, தன் அரசனையும் துறந்து இராமனிடம் வந்து நீதி யொன்றே புகலிடமாவது என்று சரண் புகும் சரணாகதிக் காட்சி, கும்பகர்ணனும் விபீஷணனும் சந்திக்கும் சகோதரபாவக் காட்சி, இராவணனும் இந்திரஜித்தும் கடைசி முறையாகச் சந்தித்து விடை பெற்றுப் போர்க்குச் செல்லும் பிரியா விடைக் காட்சி, கடைசியாக, இராமன் சீதையைத் தன் முன் கொணர்வித்து அவள் தூய தன்மையை உலகினர்க்கு விளக்கும் பரிசோதனைக் காட்சி, இக் காட்சிகளெல்லாம் கம்பன் வருணனை வாயிலாக வெளித் தோன்றும்போது நம்மையே நாம்

முற்றும் இழந்து, பாத்திரங்களின் உள்ளங்களோடு ஒன்றுபட்டு லயித்துவிடுகிறோம். இவ் வருணனைகள் என்றாவது மங்கி மறைந்துவிடுமா?

இவ்வருணனைகள் ஒருபுறம் இருக்க, கம்பன் கதையை நிகழ்த்தும்போது நிகழும் மனோபாவனையும் மிகவும் வியக்கத் தக்கதாயுள்ளது. வேகமாகச் செல்லவேண்டுமிடங்களில் வேகமாய்ச் செல்லுகிறது. சுருங்கிச் செல்லவேண்டுமிடங்களில் சுருங்கிச் செல்லுகிறது. ஆர அமர மெல்லச் செல்லவேண்டுமிடங்களில் மெல்லச் செல்லுகின்றது. இவ்வாறெல்லாம் செல்லும் இடங்களைக் கம்பனது இராமாயணத்தில் மிகப் பலவாய்க் காணுதல் கூடும்.

பாத்திரப் படைப்பு

முடிவாக, கம்பன் தனது கதாபாத்திரங்களை அமைத்துள்ள பெருந்திறம் நமக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் விளைவிக்கிறது. இரண்டு பாத்திரங்கள் சந்திக்க நேரிடும்பொழுது ஒவ்வொன்றின் சிறப்பான இயல்புகளும் நன்றாக விளங்குவதாகும். அன்றியும் இப் பாத்திரங்களுக்கு இடையே நிகழும் சம்பாஷணையும் இவற்றின் குணாதிசயங்களை மிக நன்றாகத் தெரிவிப்பதாம். இப்பாத்திரங்கள் தனியாக இருக்கும்பொழுது கூறும் தனி மொழிகளாலும் இவற்றின் குணச் சிறப்புப் புலப்படும். இங்ஙனமாகப் பலவழிகளிலும் 'நாம்' பாத்திரங்களின் இயல்பை நன்கு உணர்தல் கூடும். ஆனால் கவிஞன் ஒவ்வொரு பாத்திரத்தின் இயல்பையும் முற்றும் உணர்ந்து, அதன் மயமாய் ஒன்றித்து நின்று, மொழி செயல் முதலியவற்றால் அதனை வெளிப்படுத்துகிறான். இதற்குச் சாமானியமான பாவனாசக்தி சிறிதும் போதியதன்று; சிறந்த நாடக வுணர்ச்சியும் அவசியமாக வேண்டும். பாத்திரங்களைச் செவ்விதாக உருவாக்குவதுதான் மனோபாவனையின் சிகரம் என்று சொல்லலாம். இப் பாத்திரங்கள் கவித்துவத்தின் நூதன சிருஷ்டி யென்றே சொல்லத் தக்கன.

கம்ப நாடகம்

கம்பனது பேரிதிகாசத்தைக் 'கம்ப நாடகம்' என்று கூறுவர். இது கம்பனுடைய நாடகத் திறமையை நன்கு தெரிவிக்கின்றது. இராமன், சீதை, பரதன், அனுமான், குகன், கும்பகர்ணன், இந்திரஜித்து, இராவணன் முதலியோர்கள் கம்பனது முதல் தரமான கவித்துவ சிருஷ்டிகள், இறுதிவரை யாதொரு சொல்லும்

செயலுமற்று. மௌன பாத்திரமாக இருந்த சத்துருக்கனனை அவன் கூறிய இரண்டே செய்யுட்களால் கம்பன் ஒளிர்ந்து விளங்க வைக்கிறான்.

கானாள நிலமகளைக் கைவிட்டுப் போனானைக்
காத்துப் பின்பு
போனானு மொருதம்பி; போனவர்கள் வருமவதி
போயிற் றென்னா
ஆனாத உயிர்விடவென் றமைவானு மொருதம்பி;
அயலே நாணாது
யானாம் இவ் அரசாள்வென் ! என்னே இவ் அரசாட்சி
இனிதே அம்மா !

(மீட்சி. 223)

இச் செய்யுள் சத்துருக்கனனை விளக்குவதோடு கம்பனையும் நமக்கு அறிவிக்கின்றது.

மேலே சம்பாஷணையைப் பற்றிக் கூறினேன். இது கவித்துவத்தையும் நாடகத் திறமையையும் பாத்திர கிருஷ்டியின் சிறப்பையும் ஒருங்கு தெரிவிப்பதாகும். இவ்வகைச் சம்பாஷணை மிக்க நயம் பெற வாய்ந்த இடங்கள் மிகப் பலவாய் இராமாயணத்தில் உள்ளன. சீதை இராமனுடன் தானும் வனத்திற்கு வருவதாகக் கூறுமிடத்தில் நிகழும் சம்பாஷணை ஓர் உதாரணமாம்.

தமிழர் பண்பாடு இலக்கியத்தில் சிறந்து புலப்படுவதற்குக் கம்பனது பெருங்காப்பியம் ஓர் அருமையான எடுத்துக்காட்டு ஆகும். இங்ஙனமாகப் பல வகையினும் கம்பன் பெருமை புலப்படுகின்றது. கம்பன் புகழ் நீடு வாழ்க!

3. கம்பன் காவியம்

இடைக்காலத்துத் தமிழறிஞர்களது உள்ளம் காவிய முயற்சியிற் புகாது வேறுபல துறைகளிற் சென்றுகொண்டிருந்தது. ஆனால் இம் முயற்சிகளெல்லாம் காவியவுணர்ச்சிக்கு உரந்தருவனவாயின. இலக்கணங்கள், முக்கியமாகச் செய்யுளிலக்கணங்களும், அணியிலக்கணங்களும், காவியத்திற்குரிய செய்யுட்கள் நலமிகுந்து விளங்குவதற்கு உதவின. சிற்றிலக்கியங்கள் கேட்போரை இன்புறுத்துதலே இலக்கியங்களின் பிரதான நோக்கமென்பதனை வற்புறுத்தி, அவர்களுக்கு ஏற்கச் செய்யுட்கள் அமைதல் வேண்டுமென்பதனை அறிவுறுத்தின. அன்றியும் செய்யுள் வகைகள் பலவும் பொதுமக்களிடையே பரவுவதற்கும் பயன்பட்டன. சமய நூல்களும், தத்துவ நூல்களும் இலக்கியங்களில் வரும் கருத்துக்கள் ஆழமுடையனவாயும் உரமுடையனவாயும் அமைதற்கு உதவி, அவ் இலக்கியங்கள் நிரந்தர வாழ்வுற்று விளங்கும்படி இயற்றப்பெறல் வேண்டுமென்பதை உணர்த்தின.

பல துறைகளிலும் பரந்துசென்ற தமிழ் மக்களது உள்ளம் வேறொரு முக்கியமான துறையிலும் பிரவேசித்துப் புதியதொரு சக்தியையும் பெற்றது. இதுதான் பக்தி நெறி. சில நூற்றாண்டுகட்கு முன் நாயன்மார், ஆழ்வார்கள் காலத்தே, இப் பக்தியியக்கம் அங்குரித்து வளர்ந்து, அந்நாயன்மார் முதலிய அருட்செல்வர்களைக் கொள்கொம்பாகப் பற்றி நின்று, தமிழ் நாட்டில் செழித்தோங்கியது. நாம் விவரிக்கும் இடைக்காலத்தே, இவ் இயக்கம் கொள்கொம்பு வேண்டாது நாடு முழுதும் பரந்து பொதுமக்கள் உள்ளத்தில் இடம்பெற்றுவிட்டது. சமயப் பொருட்களையும் தத்துவப் பொருள்களையும் சமயக் கடவுளர் பற்றிய சரிதங்களையும் பொதுமக்கள் கேட்டுணர்ந்து கொள்ளுதற்குப் பெரிதும் விரும்பினர். அங்கங்கே பிரவசனகர்த்தர்கள் தங்கியிருந்து இவ்விருப்பத்தை நிறைவேற்றி வந்தனர். பற்பல சமயங்களுக்குரிய ஆசாரிய புருஷர்கள் குறிப்பிட்ட இடங்களில் நிலைபெற்றிருந்து சமயத்தையும் பக்தியையும் ஏற்கெனவே பக்குவப்

பட்டிருந்த பொதுமக்களது உள்ளத்தில் வேகத்தோடு மிக ஆழ்ந்து செல்லும்படி செய்தனர். சில சில இடங்களில் சமயப் பிரசாரத்திற்காக மடங்களும் நிறுவப்பட்டன.

காவியங்களின் தோற்றம்

இவ்வாறு பல பிரகாரத்தாலும் பக்குவப்பட்டு மேம்பாடுற்ற இடைக்காலத்தின் முடிவிலே பெருங் காவியங்கள் தோன்றலாயின. பிற்பட்ட இக்காவியங்களில் முதலாவது கூறத்தக்கது கம்பராமாயணமே. 'இராமாவதாரம்' என்பதே கம்பன் தனது பேரிதிகாசத்திற்கு இட்ட பெயர் என்று கொள்ளலாம். இது

நடையி னின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநி கழ்ந்த இராமவ தாரப் பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே

எனக் கம்பன் தானே கூறுதலாலும், புறத்திரட்டில், இராம சரிதத்தினின்றும் தரப்பட்டுள்ள 27 செய்யுட்களும் இராமவதாரம் என்ற நூலைச் சார்ந்தனவென்று ஆகரம் காணப்படுதலாலும், இச்செய்யுட்கள் கம்பராமாயணத்தில் உள்ளன ஆதலாலும், நன்கு விளங்கும். நேபாள மொழியிலுள்ள இராம சரிதத்திற்கும் 'இராமாவதாரம்' என்ற பெயருண்மை இங்கே அறியத்தக்கது. எனினும் 'எய்த இன்னல்' என்ற புறத்திரட்டுச் செய்யுள் கம்பராமாயணத்திற் காணப்படாமையால், இப் பெயரிற் சில ஐயப்பாடு உண்டு. 'இராம காதை' எனவும் ஒரு சிலரால் இப் பெருங்காப்பியம் வழங்கப்பட்டது. இது,

எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல் சடையன் வாழ்வு
கண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே

என்ற தனியன் செய்யுளால் உணரலாகும். ஆனால் இப் புதுப் பெயர்களெல்லாம் காலகதியில் மங்கி மறைந்தொழிய, வான்மீகி முனிவர் இட்ட 'இராமாயணம்' என்ற பெயரே நிலைபெறுவதாயிற்று.

காலம்

கம்பன் வாழ்ந்த காலமும் அவன் தனது பேரிதிகாசத்தை இயற்றிய காலமும் பல ஆண்டுகளாக விவாத விஷயமாயிருந்தன. ஆனால் தமிழ்நாட்டுச் சரிதமும் தமிழிலக்கிய சரிதமும் உணர்ந்தோர் சிறிதும் ஐயுறவு கொள்ள இடமில்லாதபடி இப்பொழுது அக்காலம் நிர்ணயம் எய்திவிட்டதென்று தயக்கமின்றிக் கூறலாம். நான் எழுதியுள்ள 'தமிழ்ச் சுடர்மணிகள்' என்ற நூலில்* (பக். 111-133) இதுபற்றி விரிவாக ஆராய்ந் தெழுதியுள்ளேன். முக்கியமான சில சான்றுகள் வருமாறு :—

கி. பி. 1376-இல்பொறிக்கப்பட்ட ஒரு கன்னடக் கல்வெட்டு (எபிகிராபியா கர்நாடிக் வால்யூம் 5, ஹாஸ்ஸான் 77) இவ் ஆண்டிற்கு முன் இரண்டு தலைமுறைக் காலமாகக் கம்பராமாயணம் கன்னட தேசத்தில் வழங்கிவந்ததென்று தெரிவிக்கின்றது. எனவே கி. பி. 1325–இல் கம்பனது பெருங்காவியம் கன்னட தேசத்திலும் பெரும் புகழ் பெற்றுப் பரவியிருந்ததென்பது புலனாம்.

பெரிய திருமொழியில் 'மஞ்சுலாஞ்சோலை' என்ற பாசுரத்தின் வியாக்கியானத்திலே 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப' (பால, ஆற்றுப். 10) என்ற இராமாயண அடியை மேற்கோள் காட்டி 'என்று ஆற்று வரவுகளிலே சொல்லுவர்களாய்த்துத் தமிழர்' என எழுதினர் பெரியவாச்சான் பிள்ளை. இவர் பிறந்தது கி.பி. 1228-இல். எனவே, சுமார் கி.பி. 1200-இல் கம்பனது பெருநூல் மிக்க பிரசாரம் எய்தியிருந்ததென்பது விளங்கும்.

தெலுங்குப் பிரதேசமாகிய ஓரங்கல் நாட்டில் பிரதாபருத்ரன் ஆஸ்தானத்திற்குக் கம்பன் சென்றதாகவும், அவனது வள்ளன்மையைப் புகழ்ந்து

அவனிமுழு துண்டும் அயிரா பதத்துன்
பவனி தொழுவார் படுத்தும் —புவனி
உருத்திரா உன்னுடைய ஓரங்கல் நாட்டில்
குருத்திரா வாழைக் குழாம்

---

* தமிழ்ச் சுடர் மணியின் இப்பகுதி இந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

என்ற செய்யுளைப் பாடியதாகவும் ஒரு வரலாறு தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படுகின்றது. இவ்வரலாறு உண்மையென்றே கொள்ளுதற்குரியது. ஏனெனில், கம்பன் தெலுங்கு முதலிய பிறமொழிச் சொற்கள் பலவற்றை எடுத்தாளுகின்றான்.

மசரதம் அனையவர் வரமும் வாழ்வும் (திருவவதாரப். 22)
தாள்மிடைந்தன தம்மி மிடைந்தென (எழுச்சி. 30)
கிச்சிடை யிடுமெனக் கிளக்கின்றார் சிலர் (பிணிவீட்டு. 5)
அக்கட இராவணற் கமைந்த ஆற்றலே (யுத்த. மந்திரப். 32)
அந்து செய் குவனென அறிந்த மாதலி (இராவணன் வதை. 61)

என்பன உதாரணங்கள், இவற்றுள் 'மசரதம்' கானல் நீர் என்றும், 'தம்மி' தாமரை என்றும், 'கிச்சு' நெருப்பு என்றும் தெலுங்கிற் பொருள்படுவன. 'அந்து' அப்படி என்று கன்னடத்திற் பொருளாம். 'அக்கட' என்பது தெலுங்கில் ஒரு வியப்பிடைச் சொல். மேலை வரலாற்றிற் குறிக்கப்பட்ட அரசன் முதலாம் பிரதாப ருத்திரனாவன். இவனது கல்வெட்டுக்கள் கி. பி. 1162, 1179 முதலிய ஆண்டுகளுக்கு உரியனவாயுள்ளன. எனவே, கம்பன் 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவனென இவ் வரலாறு உணர்த்தும்.

இராமாயணத்தில் வரும் ஒரு செய்யுள் மேலை முடிபைத் திட்டமாய் வலியுறுத்துகிறது. இச் செய்யுள் வருமாறு :

வன்னிநாட் டியபொன் மௌலி வானவன் மலரின் மேலோன்
கன்னிநாள் திருவைச் சேர்ந்த கண்ணனும் ஆளுங் காணிச்
சென்னிநாள்-தெரியல் வீரன் தியாகவி நோதன் தெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப்
போனான்.

இச்செய்யுளில் 'தியாக விநோதன்' என்ற சிறப்புப் பெயர் வருதல் காணலாம். மூன்றாங் குலோத்துங்கன் இச்சிறப்புப் பெயரால் வழங்கப்பட்டான் என்பது சாசனங்களால் (செந்தமிழ், 1, 119, 122) புலப்படுகின்றது. இவ்வரசன் கி. பி. 1178 முதல் 1216 வரை ஆட்சி புரிந்தவன். கம்பராமாயணம் இவனைக் குறித்தலினாலே, கி. பி. 1178-இல் அல்லது அதற்குச் சற்றுப் பின்பு இப்பெருங் காவியம் இயற்றி முடிந்ததெனல் வெளிப்படை.

இக்காலவரையறை இராமாயண ஏட்டுப் பிரதிகளில் அருமையாய்க் காணப்படும் ஒரு செய்யுளால் மிகவும் உறுதியடைகின்றது. செய்யுள் வருமாறு :

ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு-மூவலூர்ச்
சீரார் குணாதித்தன் சேய்அமையப் பாடினான்
காரார் காகுத்தன் கதை.

இதனால் சகாப்தம் 1100-இல், அதாவது கி. பி. 1178-இல் இராமாயணத்தைக் கம்பன் பாடினான் என்பது தெளிவாகின்றது. சகாப்தத்தைச் 'சகரயாண்டு' என்றல் அக்காலத்து ஒரு சாசன வழக்கு (தென்னிந்திய சாசனம் XII. 263, 264).

இங்ஙனமாகவும், எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின் மேல்......கம்பநாடன் பண்ணிய இராமகாதை......அரங்கேற்றினானே' என்ற செய்யுள் எவ்வாறு பிறந்ததென்று சிலர் வினவலாம். திரு ரா. ராகவையங்கார் கூறியுள்ளபடி பேரெண்ணாகிய ஆயிரத்தை நீக்கி அப் பதங்களைக் குறிப்பிடுதல் வழக்காதலால், 1000-ன் மேல் எண்ணிய் 107 என்று கொண்டு, சகாப்தம் 1107இல் அதாவது கி. பி. 1185-இல் இராமாயணம் அரங்கேற்றப்பட்டது எனக் கொள்ளுதல் தக்கது. சகாப்தம் 807-ல் அதாவது கி. பி. 885-ல் இக்காவியம் அரங்கேறியதென்று கருதுதல் மேற்காட்டிய சான்றுகட்கும், வைஷ்ணவ சமய சரித்திரத்திற்கும், தமிழிலக்கிய சரிதத்திற்கும் முற்றும் முரணாம். கி.பி. 1178-இல் இப்பேரிதிகாசம் பாடி முடித்தது எனவும் கி. பி. 1185-இல் அரங்கேறியது எனவும் துணிதல் மிகவும் பொருத்தமாகும்.

உலக மகாகவி

கம்பனது பெருங்காப்பியம் நமது பாரதநாட்டுக் கவித்துவக் கொள்கைகளுக்கும் காவியக் கொள்கைகளுக்கும் முற்றும் பொருந்தி அவற்றாலும் சிறந்து மேம்பட்டு விளங்குவதுடன், எல்லாக் காலத்திற்கும், எல்லா இடத்திற்கும் பொருத்தமுள்ள கவித்துவக் கொள்கைகளை வைத்து அளவிட்டு நோக்கினும் அவற்றாலும் தலைசிறந்து விளங்குகிறது.' இதனால் இப்பெருங் கவிஞனை உலக மகாகவிகளுள் ஒருவன் எனப் பலரும் போற்றுகிறார்கள். இவனது பெருநூலை வான்மீகியின் மொழிபெயர்ப்பு என்று கொள்ளுதல் சிறிதும் தக்கதன்று வான்மீகி முனிவர் தம்

காலத்தில் வடநாட்டில் வழங்கிவந்த இராம சரிதத்தைத் தமது அற்புதக் கவித்வ சக்தியால் பேரிதிகாசமாக இயற்றித்தந்தனர். பரதகண்ட முழுதும் இதனைப் பாராட்டுகின்றது. மேலை நாடுகளிலும் காவிய ஆராய்ச்சி செய்வோர் இதனை ஆராய்ந்து, இதன் பல நயங்களையும் வியந்து போற்றுகின்றனர். ஆனால் வான்மீகியின் இராமாயணம் 'வளர்ச்சியிதிகாசம்' என்னும் வகையைச் சார்ந்தது. இவ் இராமாயணம் கதையின் அம்சங்களில் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. இவ்வளர்ச்சி—நிலையில் இராம சரிதத்தின் ஒரு குறிப்பிட்ட படியை வான்மீகி முனிவர் சித்திரித்தனர். அவர் காலத்தோடு இவ்வளர்ச்சி நெறி முடிந்துவிடவில்லை; மேன்மேலும் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. காலத்தின் அடைவில் வளர்ந்து வந்தது போலவே, இடம் பற்றியும் இச்சரிதம் பல நூதன அம்சங்கள் பெற்று வளர்ந்து வந்தது.

தென்னாட்டிலும் அதாவது தமிழ்நாட்டிலும் இச்சரிதம் பரவியது. இங்கே பல பல புதிய அம்சங்களால் சிறந்து விளங்கியது. காவிய நாயகனான இராமன் புருஷோத்தமன் என்ற நிலையினின்று இப்பொழுது லோகநாயகனும் லோக சரண்யனுமான தெய்வநாயகனாக மாறிவிட்டான். இவ்வாறு மாறுவதற்குத் தென்னாட்டில் முழுவேகத்துடன் பிரவகித்துக்கொண்டிருந்த பக்தியியக்கமே தனிப்பெருங் காரணமாகும். இந்நிலையிலே இராம சரிதத்தை வரையறுத்துப் பெரியதோர் அற்புதச் சித்திரமாகக் கம்பன் இயற்றியளித்தனன். இவ்வுண்மையால் இவனது இராமாயணம் மொழிபெயர்ப்பே ஆகாமை தெளிவாம். ஆனால் வான்மீகியின் இதிகாசத்தை முற்றும் ஒதுக்கிவிட்டு இவனது பெருநூல் அமைந்துள்ளதென நினைப்பதும் தவறு. அவ் இதிகாசத்தை முற்றும் நன்கு ஓதியுணர்ந்து, அதனைத் தனது பேரறிவிலும் ஆழ்ந்தவுள்ளத்திலும் தேக்கி நிறைத்து, அதனோடு கம்பன் இரண்டறக் கலந்துவிட்டான். வடமொழியாகிய தெய்வ மொழியின் பேரழகும் இவனைக் கவர்ந்து வசீகரித்துவிட்டது. எனவே,

> தேவ பாடையில் இக்கதை செய்தவர்
> மூவ ரானவர்* தம்முளு முந்திய
> நாவி னாருரை யின்படி நான் தமிழ்ப்
> பாவி னாலி துணர்த்திய பண்பரோ

---

*இம் மூவராவார் வான்மீகி, வியாசர், அகத்தியர் என மலையாள மொழியிலுள்ள 'ராம சரிதம்' உணர்த்துகிறது.

வையம் என்னை யிகழவும் மாசெனக்கு
எய்த வும்மி தியம்பிய தியாதெனின்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே

என்று கம்பன் பாடினான் என்பர். பொது வகையில் வான்மீகி யைப் பின்பற்றியபோதினும், கட்டங்கள் தோறும் இவன் இராம சரித அம்சங்களை வேறுபடுத்திப் பேரழகுபட அமைந்திருக் திருக்கிறான். இவற்றையெல்லாம் ஊன்றி நோக்குமிடத்து கம்பனது பெருநூலை ஓரளவில் முதற் காவியம் என்றும், ஓரளவில் வழிமுறைக் காவியம் என்றும் நாம் கொள்ளுதல் வேண்டும். இத்தகையதொரு பாகுபாடு ஸி. எஸ். லியூயிஸ். Pradise Lost என்ற இதிகாசம் பற்றிய தனது முன்னுரையில் வகுத்துத் தந்திருக்கின்றனர்.

மதிப்பரிய கருவூலம்

கம்பனது பெறலருங் காப்பியம் தமிழ்க் கவித்துவத்திற்குப் பேரெல்லையாய், காவியங்களுக்குச் சிரோபூஷணமாய் விளங்கு கிறது. ஆற்றலும் அழகும் மிக்கு, அளந்தறியலாகாத தமிழ் மொழியின் மதிப்பரிய கருவூலமாக இக்காப்பியம் திகழுகின்றது. தமிழும் வடமொழியும் இனிது கலந்து வேற்றுமையுணர்ச்சி சிறிதுமின்றி, அழகு நிரம்பிச் செல்லும் பேராறு போல விழுமிய தாய் ஒழுகுகின்றது, தென்னாட்டுப் பண்பாடும் வடநாட்டுப் பண்பாடும் ஒன்றுபடக் கலந்து, அறிவையும் உளத்தையும் ஒருங்கு மகிழ்வித்து, உயர்ந்த லட்சியங்கள் பலவற்றைக் குன்றின் மேலிட்ட விளக்கெனத் தோற்றுவித்து, தமிழ் மக்களுக் கும் கவிதையுணர்ச்சியுடைய அனைவர்க்கும் வற்றாத இன்ப சாகரமாக இப்பெருங்காப்பியம் காம்பீர்யத்தோடு அமைந்து கிடக்கின்றது,

இக்காவியம் தமிழரது கவித்துவத்தின் பேரெல்லையை உணர்த்துகின்றது. எத்தனை முறை இவ்வுண்மையை வற்புறுத்திக் கூறினும் தகும். இதற்குச் சிறிது முன் ஒரு சில காவியங்கள் தோன்றின. இக் காவியங்களையும் கம்பன் காவியத்தை யொட்டி இங்கே நினைவு கூர்வது அவசியம்.

ஸ்ரீ ராஜ ராஜ விஜயம்

இவற்றுள் முதலாவது கூறத்தக்கது 'ஸ்ரீராஜ ராஜ விஜயம்' என்ற காவியமாகும் (சாசனத் தமிழ்க் கவி சரிதம், பக். 47-48). முதல் இராஜராஜன் என்ற சோழப் பேரரசன் மீது இக்காவியம் பாடப்பெற்றதாம். இதனை இயற்றியவர் நாராயணன் பட்டா தித்தன் என்பவர் என்று கொள்ளலாம். 'ஸவர்ணன்' என்று இவர் கூறப்படுகின்றார். க்ஷத்திரியப் பெண்ணிடம் பிராமண னுக்குப் பிறந்தவன் 'ஸவர்ணன்' எனப்படுவான் என்று 'வைஜயந்தி' நிகண்டு தெரிவிக்கின்றதென்பர். இந்நூலிலே முதல் இராஜராஜனது பிறப்பு, வளர்ப்பு, திருமணம், அவன் ஆட்சிபுரியத் தொடங்கியமை, ஆட்சித் திறம், அவனது பெரு வெற்றிகள், வள்ளன்மை, அவன் நீதி வழங்கியமை முதலியன காவிய முறையில் விரிவாகக் கூறப்பட்டிருக்க வேண்டும். நூல் இப்போது கிடையாமையால் வேறு யாதும் நாம் தெரிதற்கில்லை. முதல் இராஜராஜனைப் பற்றியதாதலால், இக்காவியம் 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றப்பெற்றதாதல் வேண்டும்.

இந்நூலின் ஆசிரியன் நாராயண பட்டாதித்தன் என்றேன். ஆனால் இதனை விசேட காலங்களிற் படிப்பதன் பொருட்டு இப்பட்டாதித்தனுக்கு நிலம் இறையிலியாக விடப்பட்ட தென்றே சாசனம் தெரிவிக்கின்றது. இதுபற்றி ஸ்ரீ. மு. இராகவையங்கார் பின்வருமாறு கூறியுள்ளார். 'இவ்வாறு நூலோதுவதற்கென்று நியமிக்கப்பட்டோரே அந்நூலை இயற்றியவருமாதல் வேண்டுமென்று கருதலாம். இயற்றியவர் வேறாயின், அரசன் அவர்க்குச் செய்த சிறப்பைப் பற்றி ஒன்றுங் கூறாமல், அதனை அவை முன் படிப்பதற்கு மட்டும் செய்யப் பட்டதைச் சாசனம் எடுத்துக் கூற நியாயமில்லை. அதனால் நூலாக்கியோரே அதனைச் சபை முன் ஓதிப் பலருமறியப் பிரகாசப்படுத்தலை விரும்பி இவ்வாறு நிலம் அளிக்கப்பட்ட தாகக் கருதலே ஏற்புடையதாம்...பிரபலனான சோழன் ஒருவனது வரலாறுகளை விளக்கும் இத்தகைய காப்பியம் இப்போது வழக்கு வீழ்ந்துள்ளமை வருந்தத்தக்கதாம்'.

புராணங்களிலும் [பிற கதைகளிலும் மனத்தைச் செலுத்தி அப் புராண முதலியவற்றிலுள்ள பொருள்கள் பற்றிக் காவி யங்களை இயற்றுதலைக் கைவிடுத்து, உண்மைச் சரித்திரப் பொருள்களைக் காவிய முறையில் அமைத்துப் புலவர் நூலியற்றியமை பெரிதும் போற்றுதற்குரியதாம். வடமொழி

யிலும் 'ஹர்ஷசரிதம்' முதலியனவாக இத்தகைய நூல்கள் உள்ளமை பலரும் அறிவர்.

இந்த இராஜராஜன் காலத்தேயே வேறொரு காவியமும் தோன்றியதென்பது சாஸனத்தால் புலப்படுகின்றது. (சாசனத் தமிழ்க் கவி சரிதம். பக். 48-49). ஆனால் இப்போது தோன்றியது 'நாடக காவியம்' ஆகும். நூலின் பெயர் 'இராஜ ராஜேசுவர நாடகம்.' 'இந்நாடகமும் அச்சோழனது பிறப்பு, வளர்ப்புக்களையும். வீரம், நியாயம் முதலிய அருஞ் செயல் களையும், பிற அறச் செயல்களையும், அவன் தஞ்சையில் நிருமித்த இராஜ ராஜேஸ்வரமான பெரிய கோயில் கட்டப்பட்ட வரலாறுகளையும் பற்றிப் பாடப்பெற்றதாதல் வேண்டும் என்பர் ஸ்ரீ மு. இராகவையங்கார். இந்நாடகத்தைத் தஞ்சைப் பெரிய கோவிலில் விசேட காலங்களிலே நடித்துக் காட்டி வந்தனர். இங்ஙனம் நடித்தற்கு வேண்டும் நிபந்தங்களை முதல் இராஜ ராஜன் மகன் இராஜேந்திரன் ஏற்படுத்தினன் என்று இவன் சாசனத்தால் விளங்குகிறது. இந்நாடகத்தை இயற்றியவரது பெயர் முதலிய வரலாறு யாதும் தெரியவில்லை.

அரசர்களைப் பற்றி மட்டும் காவியங்கள் எழுந்தன என்று நினைத்தற்கில்லை. அவர்களது படைத் தலைவர்களைக் குறித்தும் ஒரு சில காவியங்கள் தோன்றியுள்ளன. இது 'வீராணுக்க விஜயம்' என்ற காவியத்தால் புலனாகின்றது. வீராணுக்கனது முழுப் பெயர் வீரசோழ அணுக்கன் என்பது. இப்பெயர் கொண்டார் பலர் இருந்தனர். முதல் இராஜேந் திரனது மக்களுள் ஒருவனும் இப்பெயரால் விளங்கினன். இவனே வீராணுக்க விஜயத்திற்குக் காவியநாயகன் என்று கொள்ளலாம். பின்னர் வீரராஜேந்திரன் என்று பெயர் சிறந்தவனும் இவனே யாவனெனக் கருதுதல் தகும். இராஜேந்திர சோழனது சேனைப் பிரிவுகளுள் 'வீரசோழ வணுக்கர் படை' எனவொன்றும் உளதா யிருந்தது. இக்காவியத்தைப் பாடியவர் பூங்கோயில் நம்பி என்பவர். இதன் காலம் 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாதல் வேண்டும், வீரராஜேந்திரனாகிய வீரசோழன் தன் தந்தை காலத்தே யுத்த யாத்திரை யொன்று நடத்தி அதில் வெற்றி பெற்றவன் என்பதும், இவ்வெற்றித் திறத்தைப் புகழ்ந்து பாடியவர் இப்பூங்கோயில் நம்பி என்பதும் திருவாரூர்க் கமலால யத்தின் முதற் பிராகாரத்தே தெற்குத் திருமதிலிற் கண்ட ஒரு சாசனம் தெரிவிக்கிறதென்று கூறுவர் ஸ்ரீ மு. இராகவையங்கார் (சாசனத் தமிழ்க் கவி சரிதம், பக். 51-52).

குலோத்துங்க சோழ சரிதை

இதற்குப் பின், 11-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் ஒரு காவியம் தோன்றிற்று. நூலின் பெயர் 'குலோத்துங்கசோழ சரிதை' என்பது. இதனை இயற்றியவர் புதுச்சேரிச் சீமையைச் சார்ந்த திரிபுவனியூரினரான கவி குமுதசந்திர பண்டிதன் திருநா ராயணபட்டன் என்பவர். காவிய நாயகன் முதற் குலோத்துங்கன் என்று கொள்ளுதல் வேண்டும். இவ்வரசனது விருப்பப்படி திரி புவனமகா சபையார் முன்பு இக்காவியம் வாசித்துக் கேட்கப்பட் டது. நூலாசிரியர்க்கு இவ்வூரவர்கள் நிலம் இறையிலியாகவிட்டுக் கொடுத்துச் சம்மானஞ் செய்தனர். இச்செய்தியைக் குறிக்கும் சாசனம் முதற் குலோத்துங்கனது 27-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளமையால், இவனது ஆட்சியின் முற்பகுதியில் நிகழ்ந்த வரலாறுகளே இக் காவியப் பொருளாதல் வேண்டும். இவன் நிகழ்த்திய கலிங்கப் போர் முதலியன இந் நூலில் இடம் பெறவில்லையென்றே தோன்றுகிறது. எனவே, இதன் ஆசிரியர் கலிங்கத்துப் பரணியாசிரியராகிய செயங்கொண்டார்க்கு முற்பட்டவராவர். 'புலவர்களாகிய குமுதங்கட்குச் சந்திரன் போன்றவர்' என்ற பொருளுடைய இவர் சிறப்புப் பெயரினின்று புலவர்களெல்லாம் ஈடுபட்ட வாக்கினிமை யுடையவர் இத்திரு நாராயணபட்டர் என்றும் அத்தகைய மதிப்பை அரசனாற் பெற்று, செயங்கொண்டார்க்கு முன்பே அவன் வாயிற் பெரும் புலவருள் ஒருவராய் விளங்கியவர் இவர் என்றும் கருதுதல் தகும். இந்நூல் அடைந்துள்ள பெருஞ்சிறப்பை நோக்குமிடத்து இது புலவர்களாற் போற்றப்பட்டு அக்காலத்துப் பெருவழக்குப் பெற்றிருந்ததென்றே சொல்லலாம்' என்பர். ஸ்ரீ மு. இராகவை யங்கார் (சாசனத் தமிழ்க் கவி சரிதம் பக். 59-60).

T.6272

பூம்புலியூர் நாடகம்

இவ்வாறாக, அரசர் முதலினோரைப் பற்றிக் காவியங்கள் தோன்றியபோதிலும், சமயச் சார்பான புராண முயற்சிகளும் மறைந்துவிடவில்லை. முற்குறித்த முதற் குலோத்துங்கனது ஆட்சி யின் இறுதிப் பகுதியில் சில புராண காவியங்கள் பிறந்தன. இவை அஷ்டாதச புராணம்' 'கன்னிவன புராணம்' என்பனவாம். அன்றி யும், 'பூம்புலியூர் நாடகம்' என்ற ஒரு நாடக காவியமும் வெளி வந்தது. இவற்றை இயற்றியவர் 'வீரைத் தலைவன் பரசமய கோளரி மாமுனி' என்பவர். இச்செய்தியைக் குறிக்கும் சாசனப் பாடல்கள் குலோத்துங்கனது 41, 49-ஆம் ஆட்சியாண்டு களில் தோன்றியவை. ஆசிரியர் முனி எனக் குறிக்கப்படுதலால்,

இவர் துறவியென்பதும், 'பரசமய கோளரி' எனப்படுதலால் இவர் சமய வாதம்புரிந்து வெற்றி பெற்றவர் என்பதும் புலப்படு கின்றன. இவர்க்குப் பாலையூரில் நிலம் இறையிலிசெய்து அளிக் கப்பட்டது. இறையிலி அளித்தவன் முதற் குலோத்துங்க னாகவே இருத்தல் கூடும். இம்முனிவர் செயங்கொண்டார் காலத்து விளங்கியவராகலாம்' (சாசனத் தமிழ்க் கவி சரிதம், பக். 61, 62).

பெரிய புராணம்

மேற்கூறிய 'ஸ்ரீராஜராஜ விஜயம்', 'குலோத்துங்க சோழ சரிதை' முதலியன போன்று சரித்திர நுட்பமும் 'அஷ்டாதச புராண' முதலியன போன்று சமயவுணர்ச்சியும் பக்தியுணர்ச்சியும் சிறந்துவிளங்குவது 'பெரிய புராணம்' என்று வழங்கும் 'திருத் தொண்டர் புராணமாம்'. இதனை இயற்றியவர் குன்றத்தூர்ச் சேக்கிழார் என்பது தமிழ் மக்கள் நன்கறிந்ததேயாம். இவர் சேக்கிழார் குடியிற் பிறந்தமையால், அக்குடிப் பெயராலேயே வழங்கப்படுகின்றார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. ஆனால், அருண்மொழித் தேவர் என்பதே இயற் பெயர் என்று சேக்கிழார் புராணம் கூறும். தமது பெரிய புராணத்தில் 10 இடங்களில் தமது அரசனைப் புகழ்ந்துள்ளார். அனபாயன் என்ற சோழனது அவையிலே இப்புராணம் கேட்கப்பட்டதாகும். இது

மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன்திருப் பேரம்பலம் செய்ய
தூய பொன்னணி சோழன்நீ டூழிபார்
ஆயசீர் அன பாயன் அரசவை (பாயிரம், 8)

என்ற செய்யுளால் விளங்கும். அனபாயன் என்ற சிறப்புப் பெய ருடையவன் குலோத்துங்க சோழன் என்ற இயற்பெயரினனாவன். இதனை

சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத்
திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரே றென்றும்
புவிகாக்கும்
மன்னர் பெருமான் அனபாயன் வருந்தொல் மரபின்
முடிசூட்டும்
தன்மை நிலவு பதியைந்தின் ஒன்றாய் நீடும்
தகைத்தவ்வூர் (சண்டேசுர: 8)

என்ற செய்யுள் புலப்படுத்தும். இக் குலோத்துங்கன் தில்லையிற் பேரம்பலம் பொன் வேய்ந்தவன் என்பதும், தில்லைத் திருவெல் லையைப் பொன்னின் மயமாக்கியவன் என்பதும் மேலைச் செய்யுட்கள் புலப்படுத்துகின்றன. இச் செயல்கள் குலோத்துங்க சோழனுலாவில்

... ... —சூலத்தான்
ஆடுந் திருப்பெரும்பே ரம்பலமும் கோபுர
மாடம் பரந்தோங்கு மாளிகையும்—கூடிப்
பொலங்கோட்டு மாமேருப் பூதரமும் போய
வலங்கோட் டிகிரியு மான (கண்ணி, 46-48)

என்றுவரும் அடிகளாலும், இராசராச சோழனுலாவில்

சிற்றம் பலமும் திருப்பெரும்பே ரம்பலமும்
மற்றும் பல பல மண்டபமும்—சுற்றிய
மாளிகையும் பீடிகையும் மாடமும் கோபுரமும்
சூளிகையும் எத்தெருவும் தோரணமும்-ஆளுடையான்
கோயிற் றிருக்காமக் கோட்டமும் அக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையும்-தூய செம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்தும்
முன்னிற் கடலகழின் மூழ்குவித்த-சென்னி
திருமகன் சிராசராசன் (கண்ணி 30-34)

என்று வரும் அடிகளாலும் உணரப்படும். இவ்வடிகள் விக்கிரம சோழன் மகனாகிய இக் குலோத்துங்கனுக்கே 'அனபாயன்' என்ற பெயர் உரித்தாகும் என்பதை விளக்கும். இது குலோத் துங்க சோழனுலாவிலுள்ள

... ... —வாசிகை
ஆழிப் பெருமான் அபயன் அனபாயன்
சூழிக் கடாயானை தோன்றுதலும் (கண்ணி 158-159)

என்ற இவ்வடிகளாலும்,

பெருமான் அனபாயன் பேரியம் மூன்றும்
தரும் ஆர வாரம் தழங்க (கண்ணி, 315)

என்ற அடிகளாலும் உணரத் தக்கது. விக்கிரம சோழனுக்கும் இராஜராஜ சோழனுக்கும் இப்பெயரை மூவருலா வழங்காமையும் அறியத்தக்கது.

இங்குக் காட்டிய இலக்கியச் சான்றுகளுக்கு ஏற்பவே, சிலா சாசனச் சான்றுகளும் உள்ளன. 'பூமன்னு பதுமம் பூத்த' என்று தொடங்கும் திருவாரூர்ச் சாசனமொன்றில் (தென்னிந்திய சிலாசாசனம், தொகுதி 7, எண் 485). 'கோவிராஜகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 7-வது திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலத்தானமுடையார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆளுடை நம்பிக்கும் பரவை நாச்சியார்க்கும் அர்ச்சனாபோக இறையிலியாக பழம் பெயரும் முன்னிறை கட்டினபடியுந் தவிர்ந்து யாண்டு 7-வது முதல் அநபாயநல்லூர் என்னுந் திருநாமத்தால்' என வருகின்றது. பழம்பெயர் தவிர்த்து அநபாயநல்லூர் எனப் பெயரிடச் சொல்லுவதனால், இக்குலோத்துங்கன் 'அநபாயன்' என்ற சிறப்புப் பெயருடையான் என்பதை இச்சாசனம் தெளிவிக்கும்.

கோகர்ணக் கல்வெட்டு ஒன்று (தென்னிந்திய சிலாசாசனம், தொகுதி 7, எண் 1044). 'பேரம்பலம் பொன் வேய்ந்த கோவிராஜ கேசரிபன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 12-ஆவது' என் வருகின்றது. இது இக் குலோத்துங்கன் பேரம்பலம் பொன் வேய்ந்ததற்குத் தக்கசான்றாகும். பிற சாசனங்களும் இதனைத் தெரிவிக்கின்றன. இவன் கலிங்கத்துப் பரணிகொண்ட முதற் குலோத்துங்கன் அல்லனென்பது ஸூவெல் துரையால் 1912-இல் நன்கு நிறுவப் பட்டுள்ளது. அனபாயன் குலோத்துங்கனைச் சரித ஆராய்ச்சியாளர் இரண்டாம் குலோத்துங்கன் என்பர். இவன் கி. பி. 1133 முதல் 1146 வரை அரசுபுரிந்தனன் என்றும் வரையறுத்துள்ளனர். ஆகவே சேக்கிழாரும் இக் காலத்தினராவர். இவர் பெரிய புராணம் இயற்றியது சுமார் 1140-ஆம் ஆண்டின் அளவாக இருக்கலாம். 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த கம்பனுக்குச் சேக்கிழார் ஒரு தலைமுறை முற்பட்டவராவார் என்பதும் இதனால் புலனாகும். ஆனால் கம்பன் பெரிய புராணத்தைக் கற்றுப் பயன்படுத்தியுள்ளாரென்று திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் எழுதினார் (சேக்கிழார்: சென்னை கலாசாலைப் பிரசங்கள், சாது அச்சுக்கூடம் 1933). இவ்வாறு எழுதுவதற்குத் தக்க சான்றுகள் இல்லையென்றே தோன்றுகிறது. இவர் கூறுவனவற்றுள் சிறிதளவு கவனிக்கத் தக்கது ஒன்றே உள்ளது.

தெரிவ ரும் பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொரு வருஞ் சீர் புகலலுற் றேன் முற்றப்
பெருகு தண்கட லுற்றுண் பெருநசை
ஒரு சுணங்களை ஒக்குந் தகைமையேன் (பாயிரம், 6)

என்ற பெரியபுராணச் செய்யுளும்

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு ‍நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ

என்ற இராமாயணச் செய்யுளுமே இங்குக் கருதியன. இரண்டு செய்யுட்களும் வெவ்வேறு உவமைகளைக் கையாளுகின்றன. நன்னீரை நாய் குடித்தலும் பாலைப் பூனை குடித்தலும் சாதாரண மாய்த் தோன்றக்கூடியனவே. ஒன்றை நோக்கி நோக்கி மற்றையது அமைக்கப்பட்டது எனற்கு அவசியமே இல்லை. இங்ஙனமே இவர் காட்டும் பிற ஒப்புமைகளும் வலியுடையனவல்ல.

இக் கொள்கைக்கு மாறாக, வேறோர் ஆராய்ச்சியாளர்,

கண்கள் எண்ணிலாத வேண்டும் காளையைக் காண என்பார்
பெண்களில் உயர நோற்றாள் சடங்கவி பேதை என்பார்
மண்களி கூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோம் என்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடு வார்கள்
(தடுத்தாட், 25)

நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்;
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்குமன்ன தேயாம்;
தம்பியைக் காண்மி னென்பார்; தவமுடைத் துலகம் என்பார்
இம்பர் இந்நகரிற் றந்த முனிவனை இறைஞ்சும் என்பார்.
(கார்முகப், 49)

முதலிய சில செய்யுட்களைக் காட்டிக் கம்பனைச் சேக்கிழார் கற்றுளார் என்பர். பெரிய புராணத்தில் வெள்ளிப் பாடல்கள் சில உள்ளனவென்பது யாவரும் அறிந்ததே. ஒற்றுமையுள்ள பாடல்கள் வெள்ளியம்பலத் தம்பிரான் இயற்றிச் சேர்த்தன வாகலாம்.

4. கம்பர் காலம்

தமிழ் நாட்டிலே கவிச்சக்கிரவர்த்தி என்று ஒரு சில புலவர்களுக்குப் பெயர் வழங்கியதுண்டு. கலிங்கத்துப் பரணி இயற்றிய செயங்கொண்டார் ஒரு கவிச்சக்கிரவர்த்தி. இச் செய்தி குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் (14)

.... கலிங்கமேழ்
பாழ்போக வென்ற வொருவன்
பஞ்சா யுதங்களி லிவன்சாது ரங்கபல
முற்றுந் தரைப்பட வடற்
பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி
கவி சக்ர வர்த்தி பரவ

என ஒட்டக்கூத்தர் பாடுதலால் அறியப்படும்.

தஞ்சாவூர் அரண்மனைச் சரஸ்வதி மஹாலில் உள்ள பழையதோர் ஏட்டுப்பிரதியின் ஈற்றில் காணும், 'குலோத்துங்க சோழ பெருமாளுக்குத் தீபங்குடி கவிராச பண்டிதன். கவிச்சக்கர வர்த்தி செயங்கொண்டார் பாடிய கலிங்கப் பரணி முற்றும்' என்ற வாக்கியமும் இங்கே நோக்கத்தக்கது. (Catalogue, Vol, I. p. 288). இங்ஙனமே ஒட்டக்கூத்தரும் ஒரு கவிச்சக்கிரவர்த்தி யாவர். இச்செய்தி தக்கயாகப் பரணியின் ஈற்றிலே வருகின்ற இரண்டு தாழிசைகளால் அறியலாம். அவற்றில் ஒன்று வருமாறு:

ஆக்கம் பெருக்கு மடந்தை வாழியே
ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே
கோக்கும் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே
கூத்தன் கவிச்சக்ர வர்த்தி வாழியே (813)

மேற்குறித்த புலவர்கள் இருவரும் தங்கள் காலத்து அரசர்களால் ஆஸ்தான கவிஞர் என ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களால் பெருஞ் சிறப்புப் பெற்று வாழ்ந்தவர்களாவர். கவிச்சக்கிரவர்த்திப் பட்டமும் அரசறிய இவர்களே தரித்துக்

கொண்டனர். இப் புலவர்கள் காலத்துத் தானே பிற கவிஞர் களும் இவர்களை இப்பெயராலேயே அழைத்துவந்தனர். ஆனால் பொதுமக்கள் இவர்களை ஒருவாறுதான் பாராட்டினார்கள். வேறொருவரையே கவிச்சக்கரவர்த்தி என்று அவர்கள் சிறப்பித் தற்குரிய பெருந்தகுதி வாய்ந்தவர் என்று கருதினார்கள். அவர் தாம் கம்பர். இச் செய்தி,

அம்பிலே சிலையை நாட்டி
 அமரர்க்கன் றமுதம் ஈந்த
தம்பிரான் என்னத் தாமும்
 தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல்
 கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே
 நரருக்கின் றமுதம் ஈந்தான்

(இராமாயணம், தனியன்)

என்ற செய்யுளால் விளங்கும். செயங்கொண்டாரது கவிச்சக்கர வர்த்திப் பட்டம் அவரோடு மாய்ந்துவிட்டது. ஒட்டக்கூத்தர்க் குரிய இப் பட்டமும் சில காலம் நின்று பின் மாய்ந்துவிட்டது. இன்றைக்கும் தமிழுலகில் இப் பட்டத்தால் வழங்கப்பெற்று, கவிஞர்களால் போற்றப்பட்டு வருபவர் கம்பர் ஒருவரே. தமிழ் ஒன்றே வல்ல அறிஞர்கள் மட்டுமின்றி, ஆங்கிலம் முதலிய பல மொழிகளைப் பயின்று காவியங்களை ஒப்பு நோக்க வல்ல அறிஞர்களில் பெரும்பாலாரும் கம்பர் பெருங் கவிஞர் என்பதை ஒப்புக் கொள்ளுகின்றனர், பிறநாட்டுப் பெருங் கவிஞர்களோடு ஒப்பிடற்குரியார் என்றும் கருதுகின்றனர். இத் தகைய பெருங் கவிஞர் வாழ்ந்த காலம்கூட இன்னும் ஐயமறத் துணியப்படாதது வியப்பல்லவா?

ஆராய்ந்து துணிய வேண்டும் அவசியத்தை ஒரு செய்யுள் இடை நின்று மறைத்து அறிஞர்களை மயக்கிவிட்டது. அச் செய்யுள் இராமாயணப் பிரதிகளில் காணும் ஒரு தனியனாகும். அது வருமாறு :

எண்ணிய சகாத்த மெண்ணூற்
 றேழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணை நல்லூர்
 தன்னிலே கம்ப நாடன்

பண்ணிய இராம காதை
    பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே
    கவியரங் கேற்றி னானே [1]

இதில் 'சகாத்தம் எண்ணூற்றேழு' என வருவதால் கி. பி. 884-இல் கம்பர் தமது காவியத்தை அரங்கேற்றினார் என்று வெளியாகிறது. இத்தனை தெளிவாகக் காலம் குறிக்கப்பட்டு இருக்கும்போது, அது பற்றிய ஆராய்ச்சி எதற்கு என வினவலாம். ஆனால் இச் செய்யுள் குறிக்கும் காலத்தை நாம் ஒப்புக்கொள்வதாயின் பல பல அசம்பாவிதங்களை ஒப்புக்கொள்ள நேரிடும்.

ஆழ்வார்களும் ஆசாரியார்களும்

முதலாவது : தமிழ்நாட்டில் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் தோன்றிப் பக்தியைப் பெருக்கெடுத்துப் பரந்தோடும் படியாகச் செய்ததன் விளைவுதான் கம்பரது பெருங் காவியமாகும். இப் பக்திப்பிரவாகம் ஸ்ரீ இராமாநுஜர் காலத்தில் இராம சரிதம் என்னும் பெரு வாய்க்காலின் வழியே சென்று தமிழ் நாட்டில் பாய்ந்து கொண்டிருந்தது. இது,

படிகொண்ட கீர்த்தி இராமாயண
    மென்னும் பக்தி வெள்ளம்
குடிகொண்ட கோயி லிராமா நுசன்
    குணங் கூறும் அன்பர்
கடிகொண்ட மாமலர்த் தாள்கலந்
    துள்ளங் கனியும் நல்லோர்
அடிகண்டு கொண்டுகந்து என்னையு
    மாளவர்க் காக்கினரே

(இராமாநுஜ நூற். 37)

என்ற செய்யுளால் விளங்குகிறது. இதனால், இராமாநுஜருக்குப் பிற்பட்ட காலத்தில் கம்பரை எதிர்பார்ப்போம். ஆனால்

1. இச்செய்யுள் கொல்லம் 753-ல் எழுதப் பற்ற தென்திருப் பேர்ப் பிரதியில் காணப்பெறவில்லை.

முற்குறித்த செய்யுளின்படி கம்பர் காலம் இராமாநுஜருக்குச் சுமார் 2 நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாய் முடிகிறது. இரண்டாவது : நம்மாழ்வாரைக் குறித்துக் கம்பர் சடகோபரந்தாதி பாடினார் என்று கூறுவர். இதன் உண்மை எவ்வாறாயினும், நம்மாழ்வாருக்குப் பிற்பட்டவர் கம்பர் என்பது வைஷ்ணவர்கள் கொள்கையாகும். ஆனால், நம்மாழ்வாரது காலம்[1] கி.பி.10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனத் தக்க காரணங்கள் காட்டி நிறுவப் பட்டுள்ளது. எனவே கம்பர் காலம் நம்மாழ்வாருக்கும் முற்பட்டு விடும். மூன்றாவது : சீவகசிந்தாமணியிலிருந்து கம்பர் விருத்த முறைகளையும் கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளார் என்பது நன்கு தெளியப்பட்டது. சிந்தாமணியின்[2] காலம் சுமார் 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். ஆகவே, கம்பரது காலம் கூறும் செய்யுளை ஒப்புக்கொள்வதாயிருந்தால், அவர் சிந்தாமணியின் காலத்திற்கு ஒரு நூற்றாண்டு முற்பட்டவர் என முடியும். நான்காவது : பிற்காலச் சோழ அரசர்களுள் முதலாவது அரசன் விஜயாலய சோழன். இவனைப் பெரும்புகழ் வாய்ந்தவன் என்று சரித்திரம் கருதவில்லை. இவன் ஆட்சி சுமார் கி. பி. 850-இல் தொடங்குகிறது. சோழர்களுள் வெற்றியினால் பல நாடுகளையும் கைக்கொண்டு சக்கிரவர்த்தி என்று கருதக்கூடிய அளவில் பெரும் புகழ் பெற்று விளங்கியவன் முதல் இராஜராஜன் ஆவான். இவன் ஆட்சி கி. பி. 885-இல் தொடங்கியது. முற்குறிக்கப்பட்டபடி கம்பர் காலம் இவ்வரசன் காலத்திற்கும் ஒரு நூற்றாண்டு முற்பட்டதெனக் கொள்ள நேரிடும். கடைசியாக, புவிச்சக்கிர வர்த்திகளே தங்கள் பெருமைக்கு ஏற்றபடி முதன் முதலில் புலவர்களுக்குக் கவிச்சக்கிரவர்த்தி என்று சிறப்புப் பெயர் கொடுத்து ஆஸ்தானப் புலவர்களாகப் போற்றுதல் மரபு. பின்னரே இவ் வழக்கினைப் பொதுமக்கள் ஆளுவர். முதன் முதலாக இச்சிறப்புப் பெயர் பெற்றவர் கலிங்க வெற்றி பாடிய செயங்கொண்டாரே; இவர்க்குப் பிற்பட்டவராகவே கம்பரைக் கொள்ளுதல் இயல்பு. ஆனால், அரங்கேற்றுச் செய்யுளின்படி, இவர் காலத்திற்குக் கம்பர் காலம் சுமார் 2 நூற்றாண்டுகளுக்கு முற்பட்டுவிடும். இவைகள் அனைத்தும் அசம்பாவிதமாம். வைஷ்ணவ சமயசரிதத்திற்கும், தமிழ் இலக்கிய சரிதத்திற்கும், தமிழ் நாட்டுச் சரித்திரத்திற்கும் 'எண்ணிய சகாத்தம்' என்ற செய்யுள் இதன் இயல்பான பொருளில் முரண்பாடாகவுள்ளது.

---

1. Tamil Studies ; M. Sreenivasa Iyangar p. 324-339.
2. சீவகசிந்தாமணி : சமாஜப் பதிப்பு : முகவுரை 16-22

இக்காரணங்களால் இத் தனியன் சான்றாகக் கொள்ளத் தக்கது அன்று.

வரதராஜர் பாகவதம்

இனி, வேறு சான்றுகள் உண்டோ என நோக்குவோம். கம்பரைக் குறித்து வரதராஜர் பாகவதத்தில்.

சம்பரனை வதைத்துயருந்
  தசரத ராமன் சரிதை
கம்பன் மொழி செந்தமிழின்
  கவித்திறத்தின் காட்சி கண்டும்
அம்புயங்க ளலர்ந்தெழு நீ
  ரிலஞ்சி தனி லாம்பலும்த
தும்பிய போலே வாசு
  தேவ கதை சொல்லினனால்

(திருவரங்கப்படலம். 148)

என வருகிறது. இந் நூலின் காலம் கி. பி. 1543 ஆகும். (திருவரங்கப். 154). எனவே, 16-ஆம் நூற்றாண்டிக்கு முற்பட்டவர் கம்பர் என்பது தெளிவு.

அரசகேசரியரது இரகு வம்சத்தின் பாயிரத்தில்,

பொற்றா மரைமான் ஒழியாது பொலியு மார்ப
எற்றாங்கு மேனி ரகுராம சரிதை யாவும்
கற்றார் கலியிற் பெரிதாந் தமிழ்க் கம்பநாடன்
உற்றாங் குரைத்தான் உரையாதன ஓதுகிற்பாம்

எனக் கம்பர் குறிப்பிடுகிறார். அரசகேசரியார் காலம் கி. பி. 1478 - 1519. எனவே, 15-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் கம்பர்.

அன்றியும், நன்னூலுக்கு மயிலைநாதர் இயற்றிய உரையில் (சூ. 114 உரை), 'கம்பன்' என்னும் பெயர் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. நன்னூலை இயற்றுவித்த அமராபரணன்

சியகங்கன் என்ற அரசன், மூன்றாங் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178-1216) காலத்தவன். எனவே இவ் இலக்கணம் 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியதாகும். மயிலை நாதரது உரையின் காலத்தைத் திட்டமாக அறிதற்குச் சான்றுகள் இல்லை. எனினும், சியகங்கன்மீது இவர் காட்டும் அன்பும் மதிப்புங் கொண்டு, அவன் காலத்தவரென்றேனும் அல்லது அவனுக்குச் சிறிதளவே பிற்பட்டவரென்றேனுங் கொள்ளலாம். சுமார் கி. பி, 1300-இல் இவரது உரை தோன்றியிருக்கலாம். எனவே, இக்காலத்திற்கும் கம்பர் முற்பட்டவராவர்.

கன்னடக் கல்வெட்டு

கி. பி. 1376-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட ஒரு கன்னடக் கல்வெட்டுக் கம்ப ராமாயணத்தையே குறிக்கிறது.[1] தமிழில் அது வருமாறு:—

> ஸகல குண ஸம்பந்நரான வத்ஸ கோத்ரத்து ஆணுக பள்ளி கம்பராமாயண நாராயணருடைய மக்கள் ராமாயணம் ராமப்பனும் லக்ஷ்மணனும் அனுக வள்ளி ராமச்சந்திர தேவர் பாதங்களை நமஸ்காரஞ் செய்து போனார்கள். பிங்கல ஸம்வத் ஸரத்தில் வரைந்தது.

இக் கல்வெட்டினால் கி. பி. 1376-க்கு முன்பு இரண்டு தலைமுறைக் காலமாக, சுமார் 50 ஆண்டுகளாக, கம்பராமா

---

1. விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் தொடக்கத்திலிருந்த அரசர்களுள் ஒருவரான புக்கதேவராயர் காலத்தில் கி. பி. 1376-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட அக்கல்வெட்டு தி. நா. சுப்பிரமணியம் அவர்களால் தமிழுலகிற்கு அறிவிக்கப்பட்டது. அது வருமாறு:—

ஸ்ரீமந் மஹாமண்டலேச்வர அரிராயவிபாட பாஷகெ தப்புவராயரகண்ட சதுஸ்ஸமுத்ராதிபதி ஸ்ரீ வீரபுக்கண்ண வொடெயரு ப்ரிதிவீராஜ்யம் கேயுத்திரே...... ஸகலகுண ஸம்பந்நரப வத்ஸகோத்ரத ஆணுகபள்ள கம்பதராமாயணத நாராயணர மக்களுராமாயணத ராமபனுலக்ஷ்மணனு அனுகவள்ளிய ராமசந்த்ர தேவர பாதக்கே நமஸ்காரவமாடி ஹோதரு. பிங்கள ஸம்வத்ஸரதலி பரத்து—Epigraphica Carnatca, Vol. V. Hessan 77 (சந்திரா-1. பக். 108 - 9).

யணம் கன்னட தேசத்தில் வழங்கி வந்ததென்பது விளங்கும். ஆகவே கி. பி. 1325-க்கு முன்பாகவே கம்பராமாயணம் பாடப் பெற்றுப் பிரபலம் அடைந்திருக்கவேண்டும். இவ்வாறு பிரபல மடைவதற்கு ஒரு நூற்றாண்டு சென்றிருக்கலாம். எனவே கம்பரது காலம் கி. பி. 1225-க்கு முற்பட்டதாதல் வேண்டும். இதனை வேறொரு செய்தியும் வற்புறுத்துகிறது.

பெரிய திருமொழி

பெரிய திருமொழியில் 'மஞ்சுலாஞ் சோலை' என்ற பாசுரத்தின் வியாக்கினத்திலே 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப' என்ற இராமாயண அடியை (பால, ஆற்றுப். 10) மேற்கோள் காட்டி, 'என்று ஆற்று வரவுகளிலே சொல்லுவார்க ளாய்த்துத் தமிழர்' என எழுதினர் பெரியவாச்சான் பிள்ளை. இவர் பிறந்தது கி. பி. 1228-ல் இச் செய்தி கம்பர் கி. பி. 1250-க்கு முற்பட்டவ ரென்பதற்குத் தக்க சான்றல்லவா?

வீரசோழியம்

வீரசோழியத்தின் உரையிலே, 'கம்பனாரிடைப் பெருமை யுளது' (வேற்றுமை 7, உரை) என வருகின்றது. 'நம்பனாரிடை' என்று சிலர் பாடங் கொள்வாராயினும், பழைய ஏட்டுப் பிரதிகள் 'கம்பனாரிடை' என்பதனையே ஆதரிக்கின்றன. வீரசோழியம் வீரராஜேந்திரன் காலத்து (கி. பி. 1063 - 1069) இயற்றப் பெற்றதாகும். இதன் உரையின் காலத்தைத் திட்டமாக வரை யறுத்தற்கு இயலாது. ஆனால், இவ்வுரைகாரர் இராஜேந்திர சோழ தேவன், வீர ராஜேந்திரன் என்ற சோழர்கள் காலத்துச் சாசனங்களையும் பெயர்களையும் மிகுதியாய் எடுத்தாண்டுள் ளார்; இவ்வரசர்கள் காலத்திற்கு மிகப் பிற்பட்டிருக்க முடியாது. இவர்களுக்குச் சுமார் ஒரு நூற்றாண்டு பிற்பட்டவராக இவ்வுரை காரரைக் கொள்ளலாம், எனவே சுமார் 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இவ்வுரை தோன்றியிருக்கலாம். கம்பரும் கி. பி. 1200-க்கு முன் வாழ்ந்தவராதல் வேண்டும்- இப் புலவர் பெருமானை இவ்வுரை குறிக்கும் வாசகத்திலிருந்து இதற்கு இவர் நெருங்கிய காலத்தவரென ஊகிக்கலாம். இக்காலம் பின் னெல்லையாகும்.

கம்பர் பரந்து பட்ட கல்வியறிவுள்ளவர். இது 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்ற உலக வசனத்தாலும், 'கம்பனாரிடைப் பெருமை யுளது' என முன் குறித்த வீர சோழியவுரையில் வரும்

உதாரணத்தாலும் விளங்கும். இவர் சிந்தாமணி, பெருங்கதை[1] முதலிய பல நூல்களையும் கற்றுத் தெளிந்தவர். சிந்தாமணியில் (257)

வாளினாற் பேச லல்லால் வாயினால் பேசல் தேற்றேன்

என வருகின்றது. இதனையே இடத்திற்குத் தக்கபடி சிறிது மாற்றி,

வில்லினாற் சொலி னல்லது வெந்திறல் வெள்கச்
சொல்லினாற் சொலக் கற்றிலம் யாமெனச் சொன்னான்

எனக் கும்பகருணன் வதைப் படலத்தில் (235) கம்பர் அமைத்தனர். சிந்தாமணியில் (579)

துன்ப முற்ற வர்க்கலால்
இன்ப மில்லை யாதலின்

என வருகின்றது. இக் கருத்தையே கங்கைப்படலத்தில் (69)

துன்புள தெனினன்றோ சுகமுளது

எனக் கம்பர் கூறினர். சிந்தாமணியில் (2265)

விருந்தாயினை யெறிநீயென
விரைமார்பகங் கொடுத்தாற்
கரும்பூணற வெறிந்தாங்கவ
னினதூழினி யெனவே

என வருகின்றது. இக் கருத்தையே, இதே செய்யுள் வகையில் இதே சந்தத்திலே, முதற்போர்ப் படலத்தில் (180)

---

1. பெருங்கதையினின்றும் ஓரடியைக் கம்பர் எடுத்தாளும் திறன் மிக வியக்கத்தக்கது; அந்நூலில் (1, 33, 50)

'பரந்துமீ தரும்பிய பசலை வானத்து'

என வருகிறது. இவ்வடியைத் தைலமாட்டுப் படலத்தில் (6)

பரந்துமீ தரும்பிய பசலை வானகம்

என அமைத்திருக்கின்றனர்.

இணையாருமி லவனேர்தர எய்தாவலி செய்தாய்
அணையாயினி யெனதூமென அடராவெளி படரா

எனக் கம்பர் மொழிந்தனர். இங்ஙனம் பல.

சிந்தாமணி 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றப் பட்டதென முன்னரே கூறினேன். ஆகவே, 10-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டுக் கம்பர் தோன்றியவராதல் வேண்டும். இக்காலம் முன்னெல்லையாகக் கொள்ளற் குரியது.

12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி

கி. பி. 1000-ஆம் ஆண்டுக்குப் பின்னும் கி. பி. 1200-ஆம் ஆண்டுக்கு முன்னும் உள்ள இடைக் காலத்தில், கம்பர் எப்பொழுது வாழ்ந்தார்? இக்கேள்வியின் விடைக்குக் கன்ன பரம்பரை வரலாறுகள் சில பயன்படுகின்றன.

தமிழ் நாவலர் சரிதை சுமார் 275 ஆண்டுகட்கு முற்பட்டது. இதில், தெலுங்குப் பிரதேசமாகிய ஓரங்கல் நாட்டில் பிரதாப ருத்திரன் ஆஸ்தானத்திற்குக் கம்பர் சென்றதாகவும், அவனது வள்ளன்மையைப் புகழ்ந்து

அவனிமுழு துண்டும் அயிரா பதத்துன்
பவனி தொழுவார் படுத்தும் - புவனி
உருத்திரா உன்னுடைய ஓரங்கல் நாட்டில்
குருத்திரா வாழைக் குழாம்

என்ற செய்யுளைப் பாடியதாகவும் ஒரு வரலாறு காணப் படுகிறது. இவ் வரலாறு உண்மையென்றே கொள்ளலாம். ஏனெனின், கம்பர் தெலுங்கு முதலிய பிறமொழிச் சொற்கள் பலவற்றை எடுத்தாளுகின்றனர்.

மசரதம் அனையவர் வரமும் வாழ்வும் (திருவவதார, 22)
தாள் மிடைந்தன தம்மி மிடைநதென (எழுச்சி, 30)
கிச்சிடை யிடுயெனக் கிளக்கின்றார் சிலர் (பிணிவீட்டு, 3)
அக்கட இராவணற் கமைந்த ஆற்றலே (யுத்த. மந்திரப், 32)
அந்து செய்குவனென அறிந்த மாதலி
(இராவண, வதைப். 61)

என்பன உதாரணங்கள். இச்சொற்களுள், 'மசரதம்' கானல் நீர் என்றும், 'தம்மி' தாமரை என்றும், 'கிச்சு' நெருப்பு என்றும் தெலுங்கிற் பொருள் படுவன. 'அந்து' அப்படி என்று கன்னடத்திற் பொருளாம். 'அக்கட' என்பது தெலுங்கில் வியப்பிடைச் சொல். மேலை வரலாற்றிற் குறிக்கப்பட்ட அரசன் முதலாம் பிரதாபருத்திரன். இவனது கல்வெட்டுக்கள் கி. பி. 1162, 1179 முதலிய ஆண்டுகட்கு உரியவாயுள்ளன. எனவே, 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவன் வாழ்ந்தவன். ஆதலால் கம்பரும் இக்காலத்தின ராவர்.

கம்பரும் ஒட்டக்கூத்தரும்

வேறொரு வரலாறு கம்பரும் ஒட்டக்கூத்தரும் ஒரு காலத்தவர் என்று கருதும்படி யுள்ளது.

பூணிலாவுங் கம்பனலம் பொலியுந் தமிழாற்
 பொலிவெய்திக்
காணுமாறு காண்டமுறுங் கதையிற் பெரிய
 காதை யெனுந்
தாணிலாவுங் கழலபயன் சபையிற் பயிலுத்
 தரகாண்டம்
வாணிதாச னரங்கேற்ற வைத்தார் சோழ
 மண்டலமே (சோழ. சதகம். 80)

என்று ஒரு செய்யுள் உள்ளது. இதிற் காணும் வாணிதாசன் ஒட்டக்கூத்தரே என்றும், அவர் உத்தர காண்டம் பாடினார் என்றும் கதை[1] கூறுவர். ஆனால், இங்ஙனம் கொள்வதற்கு ஆதாரம் யாதும் இல்லை. வாணிதாசன் என்ற பெயருள்ள வேறொரு புலவர் இருந்தனர் என்று தெரிதலால், அவரே இவ் உத்தர காண்டத்தைப் பாடியிருத்தல் வேண்டும். கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் இயைத்து வேறொரு வரலாறும், தமிழ் நாவலர் சரிதை, சோழமண்டல சதகம் முதலியவற்றில் காணப் பெறாமை இங்கே நாம் அறியத்தக்கது. சுமார் 75 ஆண்டுகளுக்கு முன் இயற்றிய விநோதரச மஞ்சரியில்தான் இருபெரும் புலவர்களையும் இயைக்கும் வரலாறுகள் முதலில் தோன்றியுள்ளன.

1. செந்தமிழ். தொகுதி III, பக். 43.

என்றாலும், இருவரும் ஏறத்தாழச் சமகாலத்தவர் என்பது முழுவதும் ஆதாரமில்லாத கூற்றல்ல. கம்பரை ஆதரித்தவர் சடையப்பர் என்ற வள்ளல் என்பது பிரசித்தம். அவர் தமது இராமாயணத்திலேயே இவ்வள்ளலைப் பத்து இடங்களில்[1] புகழ்ந்துபாடியுள்ளார். அச்சுப் பிரதிகளில் எட்டு இடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் காணப்பெறாது ஏட்டுப் பிரதிகளிற் காணும் இரண்டு செய்யுட்கள் வருமாறு :

அந்தணர் வணிகர் வேளாண்
 மரபினர் ஆலி நாட்டுச்
சந்தணி புயத்து வள்ளல்
 சடையனே யனைய சான்றோர்
உய்ந்தனம் அடிய மென்னும்
 உவகையர் உவரி நாண
வந்தன ரிராமன் கோயில்
 மங்கலத் துரிமை மாக்கள்.

(யுத்த. திருமுடி. 33)

மறையவர் வாழி வேத
 மனுநெறி வாழி நன்னூல்
முறைசெயும் அரசர் திங்கள்
 மும்மறை வாழி மெய்ம்மை
இறையவ னிராமன் வாழி
 இக்கதை கேட்போர் வாழி
அறைபுகழ்ச் சடையன் வாழி
 அரும்புகழ் அநுமன் வாழி.

(யுத்த. விடை கொடுத்த. வாழ்த்து)

சடையப்பருக்குச் 'சரராமன்' (யுத்த. நாகபாச. 263) என்ற பெயரும், 'வெண்ணைத் திரிகர்த்தன்' (சோழ. சத. 91 மேற்

1. பாயிரம் 11 : பால. வேள்விப்படலம், 1 : பால அகலிகை. 18 ; பால. மிதிலைகாண். 74 ; யுத்த. சேதுபந்தன. 6 ; யுத்த. நாகபாச 263 ; யுத்த. மருத்துமலை. 58 ; யுத்த திருமுடி சூட்டு. 33, 38 ; யுத்த. விடைகொடுத்த. வாழ்த்து.

கோள். 91, 92) என்ற பெயரும், 'கண்ணன்' என்ற பெயரும், (பால. அகலிகை. 18; யுத்த. மருத்துமலே. 58) உளவாகத் தெரி கின்றன.

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் காவேரி—பொய்கழுவும்
போர்வேற் சடையன் புதுவையா னில்லறத்தை
யார்போற்ற வல்லா ரறிந்து

என்ற செய்யுளைக் கம்பர் பாடியதாகச் சோழ மண்டல சதகம் காட்டுகிறது. இச் செய்யுள் மூவலூர்க் கல்வெட்டில் (செந் தமிழ் IV, பக். 252) உள்ளது. எனவே இதன் பழமையில் ஐயுறவு கொள்ள இடமில்லை. இதில் கம்பர் தம்மை ஆதரித்து வந்த சடையனைப் புதுவையான் என்கிறார். எனவே, புதுவைச் சடையனும் வெண்ணைச் சடையனும் ஒருவரே யாதல் தெளி யலாம்.

சடையப்பரது தந்தை சங்கரன் என்பவரிடம் ஒட்டக்கூத்தர் தாம் கவிச்சக்கிரவர்த்தியாவதற்கு முன்பு, இளமையில் உதவித் தொழில் செய்து வந்தார். இது சோழ மண்டல சதகத்தில்

புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்கு
உதவித் தொழில்புரி ஒட்டக்கூத்தனை (93)

என வரும் மேற்கோள்-செய்யுளால் விளங்குகின்றது. ஆகவே, ஒட்டக் கூத்தரது முதுமைக்காலத்தில் கம்பர் இளம் பிராயத் தினர் என்று கொள்ளலாம்.

ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத் துங்கன், இரண்டாம் இராஜராஜன் என்ற மூன்று அரசர்களைக் குறித்தும் மூன்று உலாக்கள் பாடியுள்ளார். இம் மூவர்களும் கி. பி. 1118-முதல் சுமார் 1171 வரை 54 ஆண்டுகள் அரசாண் டுள்ளார்கள் எனத் தெரிகின்றது. இராஜராஜன் எதுவரை வாழ்ந்து வந்தான் என்பது சரித ஆராய்ச்சியில் திட்டமாகப் புலப்படவில்லை. ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழனைப் பாடியிருத் தலால் (அப்பொழுது அவருக்குச் சுமார் 25 வயது இருந்திருக்க லாம்). அவர் சுமார் 85-ஆவது வயது வரை இருந்தனர் எனக் கொள்ளவேண்டும். இவரது முதுமைப் பருவத்தில் கம்பர் வாழ்ந்

தனர் என மேலே கண்டோமாதலின், கி.பி 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கம்பர் வாழ்ந்தனர் என்று முன் கூறியது உறுதியாகின்றது.

வேறு சில செய்திகள் கன்னபரம்பரை[1] மூலமாகவும் நூல் வழியாகவும் தெரிகின்றன. அவற்றை உண்மையெனக் கொள்ளுதலில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. நாம் அவற்றைப் புறக்கணித்து ஒதுக்கிவிடலாம்.

இனி, இராமாயணப் பெருங்காப்பியத்திற் காணும் சில செய்திகளை நோக்குவோம். சோழ நாட்டு அரசனைப் பற்றியனவே இங்கே இயைபுடையன. பிலம் நீங்கு படலத்தில் (35)

---

1. கம்பரது உயிர்-நண்பராகிய சடையப்ப வள்ளல் பரராச சிங்கன் என்ற இலங்கையரசன் வேண்ட, பல கப்பல்களில் நெல்லனுப்பினர் என்று சோழமண்டல சதகம் கூறுகிறது. இச் செய்யுள் வருமாறு :—

தேனார் தொடையார் பரராசசிங்கப்பெருமான் செழுந்தமிழ்க்குக்
கானார் நெல்லின் மலைகோடி கண்டிநாடு கரைசேரக்
கூனார் கப்ப லாயிரத்திற் கொடுபோ யளித்த கொடைத்தடக்கை
மானாகரன் சங்கரன் சடையன் வளருஞ்சோ சோழமண்டலமே

பரராச சிங்கனைக் குறித்துப் பல பல ஐயங்கள் உண்டு. கண்டி நாட்டில் இப் பெயருடையவன் ஆட்சி புரிந்ததில்லை யாழ்ப்பாணத்தில் அரசு புரிந்தவனாகலாம் என்று வலிந்து கொள்வர். அந்தகக்கவி வீரராகவ முதலியார் காலத்தில் பரராச சிங்கன் என்ற பெயரிய ஓர் அரசன் இருந்தனன் என்று தமிழ் நாவலர் சரிதை தெரிவிக்கிறது. சடையப்பர் காலத்தில் இப்பெயருடைய அரசன் இருந்தான் என்பதற்கு ஓர் ஆதாரமும் இல்லை. இலங்கைச் சரித்திரத்திலும் காணப்படவில்லை. கம்பரைப் பற்றிக் கதைகள் வளர்ந்துள்ளன போல, சடையப்பரைப் பற்றியும் கதைகள் வளர்தல் இயல்புதானே!

குலோத்துங்க சோழன் காலத்தில் காவேரி பெருகி வெள்ளங் கரை கடந்தது கம்பர் 'கன்னியழிந்தனள்' என்னும் வெண்பாக் கூறினர். நதிப்பெருக்கு அடங்கியது கைம்மாறாகக், குடிகள் செலுத்தி வரும் கலியாண வரியை ஒரு சாசனத்தின் மூலம் அரசன் கம்பருக்குக் கொடுக்க, அவர் கொங்கு நாட்டுப் புலவர்களுடைய வம்சங்களுக்கு அவ்வரியை அளித்துவிட்டனர் என்று கொங்கு மண்டல சதகத்தின் உரைகாரர் கூறுவர்.

புவிபுகழ் சென்னிபோ ரமலன் தோள்புகழ்
கவிகள் தம் மனையெனக் கனக ராசியும்
சவியுடைத் தூசு மென் சாந்து மாலையும்
அவிரிழைக் குப்பையும் அளவி லாதது[1]

என ஒரு செய்யுள் வந்துள்ளது. இங்கே 'அமலன்' என்பது பெயராகக் கருத இடமில்லை. இப் பெயருடைய சோழன் ஒருவன் இருந்தன னென்றும் தெரியவில்லை. பொதுப்பட, சோழ அரசர்கள் பலர் இவ் அடைமொழியோடு கூறப்படு கின்றனர். உதாரணமாக, இரண்டாம் குலோத்துங்கன் 'அனகன்' அதுலன், அமலன்' (உலா, கண்ணி, 157) எனக் கூறப்படுகின்றான். ஆனால், கம்பர் காலத்தேயிருந்த அரசன் உலகம் முழுதும் போற்றும் பேரசனாகவும் சிறந்த போர் வீரனாகவும் பெருங்கொடை வள்ளலாகவும் இருந்தனன் என்பது இச் செய்யுளால் புலனாகிறது. ஒட்டக்கூத்தர் காலத்தவர்க ளான விக்கிரமன், குலோத்துங்கன், இராஜ ராஜன் என்ற மூவர் களுக்கும் அச்செய்யுள் பொருந்து மென்னலாம்.

தியாக விநோதன்

ஆனால், மருத்துமலைப் படலத்தில் (58)

வள்ளி நாட்டிய பொன்மௌலி
வானவன் மலரின் மேலான்
கன்னிநாள் திருவைச் சேர்ந்த
கண்ணனும் ஆளுங் காணிச்

கதுவிவரு பொன்னி கரைகடவா வண்ணம்
பதுமமுகக் கம்பனவர் பாட — வதுவைவரி
மாடை யரைக்கழஞ்சு வண்கம்பர்க் கீந்தபரி
சேடர் குலோத்துங்கன் எழுத்து

என்ற பழைய பாட்டு சாசனத்தின் கருத்தைக் குறிப்பிடுகின்றது என்றுங் காட்டினர். இவ் வரலாறு தங்கள் நாட்டுப் பெருமை தோன்றுவதற்கென்றே பிற்காலத்தார் அமைத்துக் கொண்ட தெனல் எளிதில் உணரலாம்.

1. பாடபேதங்கள் (எண்கள் சீர்களைக் குறிப்பன):

2-4. சென்னியோர் புகழும் பொற்புடை, சென்னியோ னமலன் தொல்புகழ்க்; 2-3 சென்னிபோ ரமலன்: 9 தவிசுடைத்; 10 துகிலுமென்: 12 (ஞ்) சுண்ணமும் 13 அவிர்மணிக்,

சென்னிநாள் தெரியல் வீரன்
தியாக விநோதன் தெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப்
புலன்கொள நோக்கிப் போனான்

என ஒரு செய்யுள் வருகிறது. இங்கேயுள்ள தியாக விநோதன் என்பது குறிப்பிட்ட ஓர் அரசனுக்கு வழங்கிய சிறப்புப் பெய ரென்று தோன்றுகிறது. விக்கிரம சோழன் 'தியாக சமுத்திரம்' எனக் குறிக்கப்படுகிறான்.

செங்கோல் தியாக சமுத்திரம் நண்ணுதலும்
தங்கோ மறுகில் தலைப்பட்டு . (கண்ணி 216)

எனவும்,

ஏனைக் கலிங்கங்கள் ஏழனையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே (கண்ணி, 331)

எனவும், விக்கிரம சோழன் உலாவில் வருகின்றன. தியாக சமுத் திரம் என்ற இப் பெயரோடு கூடிய ஊர்களும் சில உள்ளன. இங்ஙனமே குலோத்துங்க சோழன் II 'தியாகன்' எனக் குறிக்கப் படுகின்றான்.

தியாகனை மானதனைத் திக்கானை எட்டுக்கும்
பாகனையே பின்சென்று பற்றுவார் (கண்ணி, 216)

எனக் குலோத்துங்க சோழன் உலாக் கூறுகின்றது. இங்கே கூறிய இவ் அரசர்கள் தியாகத்திற் சிறந்தவர்களாயிருப்பினும், 'தியாக விநோதன்' என்ற சிறப்புப் பெயர் இவர்களுக்கு வழங்கியதாய்த் தெரியவில்லை. ஆனால் வேறோர் அரசனுக்கு உரியதாய்த் 'தியாக விநோதன்' என்ற இப்பெயரே சாசனங்களில் காணப்படு கின்றது.

கும்பகோணம் வாணபுரீச்சுரர் கோயிலில் மகாமண்டபம் தென்மேற்குப் பக்கமாக மேல் பாலுள்ள ஒரு சாசனப் பகுதி (செந்தமிழ். 1. 122) வருமாறு :

..... திரைமூரான தியாக விநோதன் ஆற்றூர் ஜன்மக் காணி யான படிக்கும் சுருக்கி இறை கட்டின...உள்வரி விருதரராஜ பயங்கர வளநாட்டு மிழலை நாட்டு ஆற்றூருடையான்...

> னளூரர் தேவரான வேணாடுடையார் விக்கிரம சோழ வளநாட்டு விறைக்கூற்றத்துத் திரைமூர் பரிக்கிரத்த .. ரகக் குடியிருப்பு மாறி வீர ராஜேந்திரப் பெருவிலை விற்கிற நிலத்துக்குக் காணிவிலைக்கு ஒடுக்குங்காசு பிரஸாதம் .. பற்றுக்காணியாகப் பெற்ற நிலம்...முன்னுடையாரும் ..ம் பேருமுன் இறை கட்டினபடி . ரகக் ..யபலற்கு ப்ரஸாதக் காணியாக இட்டிருக்கிறபடியும் தவிர்ந்து இவர்...ம் யாண்டு 6-வது முதல் ஜன்மக் காணியான திரை மூரான தியாக விநோதன் ஆற்றூர் நிலம்...

இம் மகா மண்டபம் தென்புறம் மேல் பாலுள்ள ஒரு சாசனப் பகுதி (செந்தமிழ். 1, 119) வருமாறு :

> ...திருபுவன சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் பாண்டி யனை முடித்தலையும் கொண்டருளின குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 11-ஆவது .....வாண கோவரயன் காணி யான விக்கிரம சோழவளநாட்டு மிறைக் கூற்றத்து திரை மூரான தியாக விநோதன் ஆற்றூர் நிலம் .....

இச்சாசனங்கள் மூன்றாங் குலோத்துங்கன் காலத்தன. இவ் வரசன் கி. பி 1178 முதல் 1216 வரை ஆட்சி புரிந்தவன். முதலாவது சாசனத்தில் இடையிடையே எழுத்துக்கள் மறைந் துள்ளமையினால், பொருள் தெளிவாக அறிய இயலாது; என்றாலும், பொதுப்படையாகக் கருத்து விளங்குகிறது. குலோத்துங்கனது 6-ஆவது ஆண்டில் திரைமூரை விலையாகப் பெற்று 'தியாக வினோதன் ஆற்றூர்' எனப் பெயரிட்டு ஜன்மக் காணியாக வழங்கினவை இச் சாசனத்தில் கூறப்படுகிறது. இதனால் 'தியாக வினோதன்' என்பது மூன்றாங் குலோத்துங்கன் சிறப்புப் பெயராதல் வேண்டும். திரை மூராயிருக்குங் காலத் தேயே விக்கிரம சோழ வளநாட்டில் அது உள்ளடங்கியிருந்த தென முதற் சாசனம் தெரிவிக்கின்றது வள நாட்டின் பெயர் விக்கிரம சோழன் காலத்தில் ஏற்பட்டதெனவே பொருந்தும். இச் சோழனுக்கே 'தியாக வினோதன்' என்ற பெயரும் இருந்த தாயின், இவன் காலத்தேயே ''தியாக வினோதன் ஆற்றூர்'' என்று ஊர்ப் பெயர் மாறியிருக்கலாம். அவ்வாறன்றி இவனுக்குப் பிற்பட்ட வேறொரு சோழர் காலத்தில் பெயர் மாற்றம் ஏற்பட் டிருத்தலால், இவ் விக்கிரம சோழனும் தியாகவினோதனும் வேறாவர் என்பது புலப்படும்.

அன்றியும், மூன்றாம் குலோத்துங்கன் காலத்து அதிகாரிகள், பெருமக்கள் முதலியோர் சிலர் இந்தச் சிறப்புப் பெயரையே தாமும் தரித்து வந்துள்ளனர். 'தியாக விநோதன்' (M. E. R. No. 260of 1920), 'தியாக விநோதன் மூவேந்த வேளான்' (ibid. 28 of 1927), 'தியாக விநோதபட்டன்' (ibid 169 of 1927) முதலிய பெயர்களைக் காண்க. (சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக். 83). இச் செய்தியும் இப் பெயர் மூன்றாங் குலோத்துங்கனுக்கு உரியதென்பதைக் காட்டும்.

இவ்வரசன் கீழாகச் சிற்றரசாயிருந்த அமராபரணன் சீயகங்கன் 'அருங்கலை வினோதன்' என வழங்கப்படுதலையும், இவ் அரசன் காலத்தில்கண்ணுடைய பெருமாள் என்பவன் தன்னை 'வீரவினோத விக்கிரமசோழ சம்புவராயனேன் என்று அழைத்துக் கொள்ளுதலையும் (செந்தமிழ், 1. பக். 117) நோக்குமிடத்து, வினோதன் என்ற பட்ட வழக்கு இவனிடமிருந்தே பரவியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இங்கே கூறியவற்றால், மூன்றாங் குலோத்துங்க சோழனே கம்பராற் குறிக்கப்பட்டவன்[1] என்பது தெளிவாம். ஆகவே மூன்றாங் குலோத்துங்கன் காலத்து அதாவது—பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்—கம்பர் வாழ்ந்தவரென்று சிறிதும் ஐயமின்றித் துணியலாம்.

சில இராமாயண ஏடுகளில், விடை கொடுத்த படலத்தின் பின், சில அரிய செய்யுட்கள் வரையப்பட்டுள்ளன. அவற்றுள்,

> ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறொழித்துத்
> தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு — மூவலூர்ச்
> சீரார் குணாதித்தன் சேயமைப் பாடினான்
> காரார்கா குத்தன் கதை

என்ற செய்யுளும் ஒன்றாகும் (செந்தமிழ் III 53). சகாப்தத்தைச் சகரயாண்டு என்றல் அக்காலத்துள்ள ஒரு சாசன வழக்கு (S. I I XII. 263, 264).[2] இதனால், சகாப்தம் 1100-இல்.

---

1. இவ் அரசனுக்குரிய 'தனிநாயகன்' என்ற பெயரினை (147 of 1927), கம்பர் 'நாராயணனே தனிநாயகனே' (உருக்காட்டு. 6) என ஆளுதலும் கருதத்தக்கது.

2. நீலகேசியின் ஆங்கில முன்னுரையில் (பக். 253-9) கொடுக்கப்பட்டுள்ள சாசனங்களும் இவ்வழக்கை மேற்கொண்டுள்ளன.

அதாவது கி. பி. 1178-இல் இராமாயணத்தைக் கம்பர் பாடின ரென்று விளங்குகிறது. இவ் ஆண்டில் கம்பர் தமது பெருங் காவியத்தைப் பாடி முடித்தனரென்று கொள்ளவேண்டும்.

எண்ணிய சகாப்தம்

இங்ஙனமாகவும் 'எண்ணிய சகாப்தம்[1] எண்ணூற்றேழின் மேல்' என்று காலத்தைக் கூறிப்பதற்குக் காரணம் என்ன என்று கேட்கலாம். ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்கள் கூறியுள்ளபடி, பேரெண்ணாகிய ஆயிரத்தை நீக்கி அப்பதங்களைக் கூறுதல் வழக்காதலால் 1000-இன் மேலெண்ணிய 107 என்று கொண்டு சகாப்தம் 1107-இல் அதாவது கி. பி. 1185-இல் இராமாயணம் அரங்கேற்றப்பட்டது எனக் கருதுதல் தக்கது. இப்பேரிதிகாசத் தைப் பாடி முடித்தது கி. பி. 1178-இல் என்றும், அரங்கேற்றி முடித்தது கி. பி 1185-இல் என்றும் கொள்ளுதல் மிகவும் பொருத்தமாகும்.

தமிழ் நாட்டுச் சரிதத்தில் கம்பர் வாழ்ந்த காலம் போல அத்துணை மேம்பாடான காலம் வேறில்லை என்று சொல்லலாம். சேர சோழ பாண்டியர்கள் பன்னூறாண்டுகளாகக் கனவு கண்டுகொண்டிருந்த சக்கரவர்த்தித்துவம் 10-ஆம் நூற்றாண்டிலிருந்து சோழ அரசர்கள் நனவிலே கண்டதோர் உண்மையாயிற்று. தமிழ்நாடுகளை வென்று முற்றும் கைக் கொண்டு, கலிங்கம், கடாரம் முதலிய பல தேசங்களிலும் தமது ஆணை பரவும்படியாகச் செய்திருந்தனர். கடலுக்கு அப்பாலுள்ள சுமத்திரா, ஜாவா முதலிய இடங்களிலும் சோழ அரசர் களுடைய புகழ் பரவி அந்நாட்டரசர்களோடு அரசியல் பற்றி நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தது. 'புவிபுகழ் சென்னிபோ ரமலன்' என்ற கம்பருடைய செய்யுள் சோழரது உச்சநிலையையே உணர்த்துகின்றது. நாட்டின் செல்வ நிலையும் அரசியல் நிலையைப் போலவே மிகவும் மேம்பாடுற்றிருந்தது பிற நாடுகளை வென்று கொண்ட செல்வத்தோடு, தமிழ்நாட்டின் ஆட்சி முறையில் புது வழிகளை வகுத்து நாட்டின் செல்வத்தைச் சோழர்கள் மிகுவித்தனர் சமய நிலையும் சோழர்கள் காலத்தில் மிகவும் சிறந்து விளங்கியது. பக்தி நெறியானது நாடெங்கும்

1. 'முந்நூற்றேழின் மேல்', 'முன்னூற்றேழின் மேல்' என்ற பாடபேதங்களும் பிரதிகளிற் காணப்படுகின்றன.

பரவிச் செழித்திருந்தது. இப் பக்தியின் விளைவே கம்பரது இராமாயணம் என்று கூறினோம். 'படிகொண்ட கீர்த்தி யிராமாயண மென்னும் பக்திவெள்ளம் குடிகொண்ட கோயி லிராமானுசன்' என்பது இராமானுச நூற்றந்தாதி. இந்நெறியின் சின்னமாகப் பெருங் கோயில்கள் பல அங்கங்கே தோன்றின. ஆசாரியர்கள் வைஷ்ணவ சமயத்தைப் பெரிதும் பிரசாரஞ் செய்து வந்தார்கள். கம்பர் காலத்து ஆசாரியர் நஞ்சீயர் என்று கருதலாம். தமிழ் நாட்டிலுள்ள மக்கள் தம்மிடையிருந்த பேத வுணர்ச்சியைப் போக்கி ஒருவாறு ஒற்றுமை யெய்தும்படி, இப் பக்தி நெறி ஊக்கியது. ஆதலால் சமுதாய நிலையிலும் புது நோக்கமும் பரந்த வுணர்ச்சியும் புகுந்து அதற்குப் புத்துயிர் அளித்தன.

நாட்டின் கல்வி நிலைமையும் பெரிதும் போற்றற் குரியதாய் அமைந்தது. தமிழறிவில் வடமொழி யுணர்ச்சியும் கலந்து தமிழ் மக்கள் மணப்பண்பு அழகுபெற்று விளங்கியது. தமிழ்மொழியும் புதிய பேரழகுடன் ஒளிர்ந்தது. எளிமையிலும் நேர்மையிலும் சங்க காலத்துத் தமிழோடு ஒருவகையில் ஒப்பிடக் கூடியதா யிற்று. சொல்லழகில் ஈடுபட்டு அவ்வழகைக் கருவியாகக் கொண்டு, தமிழ் மக்களை வசீகரிக்க முயன்றனர் சைன கவிஞர்கள் முதலியோர். சொல்லழகோடு கூடிய் பொருளழகு தான் உண்மையில் இன்புறுத்தத் தக்கது என்ற கொள்கை கம்பர் காலத்திற் பரவி யிருந்தது. பல வகையான செய்யுள் விகற்பங் களை யெல்லாம் சிறு நூல்களுக்கு ஒதுக்கிவிட்டு, பெருமிதமாய்த் தலைநிமிர்ந்து இனிது செல்லும் விருத்தமே பெருங் காவியங் களுக்கு உரியதாகும் என்ற கொள்கையும் ஓங்கிச் சிறந்தது. 'விருத்தமென்னும் ஒண்பாவில் உயர் கம்பன்' என்ற செய்யுட் பகுதியும் கம்பராமாயணமும் இதற்குரிய சான்றுகள்.

இங்ஙனமாக அரசியல் நிலை, சமய நிலை, சமுதாய நிலை, கல்வி நிலை முதலியன யாவும் ஒப்புயர்வற்றுச் சிறந்து விளங்கிய இக்காலத்தே கம்பர் தமது இராமாவதாரமாகிய கலைப்பெருங் கோயிலை இயற்றினர்.

5. கம்பர் திருநாள்*

தமிழிலக்கிய சரிதத்திலே கம்பர் பெருமானது இராமாயண அரங்கேற்றத்தோடு எல்லா வகையினும் ஒத்த சிறப்புடைய் பிறிதொரு நிகழ்ச்சி இல்லையெனக் கூறுதலே தகும். இதனோடு ஒரு வகையான் குறிப்பிடத்தக்கது வள்ளுவப் பெருந்தகையார் தமிழ்வேதம் அருளிச் செய்த பெருநிகழ்ச்சியென்பது யாவரும் அறிவர். தெய்வப் புலமைத் திருவள்ளுவரது அறிவின் மாட்சி அதிசயிக்கத்தக்கதே. அவரது பேரறிவு எத்துணைப் பெரியாரையும் தலைவணக்கும் இயல்பினது. தேவிற் சிறந்த திருமாலைப் போல, இத் தெய்வப் பெரும் புலவரும் தமது நுண்ணிய மாட்சி மிக்க புலங்கொண்டு அறிவுலகினை முற்ற அளந்து எல்லை கண்டனர். மக்கட்கு உறுதி பயப்பனவற்றை ஆணி முத்தன்ன செஞ்சொற்களால் தெளித்துத் தந்தருளினர் வாழ்வின் பெருநோக்கங்களை அகன்று கூர்ந்து விளங்கும் தமது அறிவினாற்றலாலும், பரந்து கடைபோகிய தமது கல்விகளின் பெருமையினாலும், ஆழ்ந்து சிறந்து முதிர்ந்த தமது அனுபவ வாயிலாலும், நுண்ணறிதின் ஆராய்ந்து தெரிந்து தமிழ் மக்கட்கு உதவியருளினர். எவ்வகையினருக்கும் எவ்வகை நிலையினும் துணை நின்றுதவும் அறிவுரைக் களஞ்சிய மொன்றினை அளித் தருளினர், இவ் அருட்பெருஞ் செல்வர். இவர் இயற்றித் தந்த திருக்குறட் பெருநூலிற் காணும் ஒவ்வொரு குறளும் தனித்தனியே செப்பஞ் செய்யப் பெற்றதொரு மணியேயாகும். ஒவ்வொரு குறள் மணியும் உள்ளத்து இருளகற்றி யொளிருந் தன்மையது. ஓத இனிதாயும், கேட்க இனிதாயும் உணர இனிதாயும் உள்ளது. இத் தெய்விகப் பெருநூல். இதனை இயற்றியருளிய புலமைத் தெய்வத்திற்குக் கோயில் எடுத்துப் போற்றியும், அவர் திருவவதாரம் செய்த திருநாளினைத் தமிழ் மக்களது மங்கல நன்னாட்களுள் ஒன்றாகப் பாராட்டியும் வருவது தமிழுலகத்திற்கு ஒரு பெருமையாகவே என்றும் உள்ளதாகும்.

---

* ஒரு பாவனைக் கட்டுரை : 29—3—'26-இல் எழுதியது

பாரத மாதாவின் தவம்

இத் தெய்வப் புலவரது திருவடிப் பரிசத்தால் தமிழுலகு பரிசுத்தம் எய்தியதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பாகவே, அவர் வகுத்தருளியது போன்ற உத்தம வாழ்வின் பெருவிதிகளுக்குத் தனி நிலைக்களமாகிய புருஷோத்தமன் ஒருவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பாரதமாதா பெருந்தவம் புரிந்து வந்தனள். ஆரிய சமுதாயத்தின் மனோபாவனையானது தானறிந்த ஜாதீய வீரர்களுக்குள் இப் புருஷோத்தமனை நிச்சயிப்பதன் கண்ணும் அவனது சரித்திரத்தினைக் கோவைப் படுத்து அலங்கரிப்பதன் கண்ணும் அநேக நூற்றாண்டுகளாக முயன்று வந்தது. இம் முயற்சியின் நற்பயன் முதன் முதல் உருவம் பெறத் தொடங்கியது வான்மீகியென்னும் மஹரிஷியின் காலத்தேதான். 'ஆதிகவி' என்று இப்பொழுது போற்றப்படும் இம்மஹான் தமது அதியற்புத கவித்வ-சக்தியினாலே ஆரியாவர்த்தத்தில் பரந்து வழங்கிய அச்சரித்திரங்களை யெல்லாம் ஒரு நிலைப்படுத்து, அழகுபெறப் புனைந்து, இராமாயணம் எனப் பெயர் தந்து, இதிஹாஸமாக இயற்றியளித்தருளினார்.

இம் மஹரிஷியின் காலத்திற்குப் பின்பு, ஆரிய - சமுதாயம் விரிந்து பெருகியது; பரதகண்ட முழுவதும் பரந்து சென்றது. தனித்தனியாய்ப் பல வேறிடங்களில் வாசஞ் செய்துகொண்டிருந்த சமுதாயங்கள் பல ஆரிய-சமுதாயத்தோ டொன்றுபடவே, இந்து சமுதாயம் என்னும் சிறப்புடைப் பெருஞ் சமுதாயம் ஒன்று பரிணமித் தெழுந்தது. இச்சரித்திர கதிக்குத் தமிழ சமுதாயமும் உட்பட்டு, இந்து சமுதாயத்தின் உத்தம அங்கங்களுள் ஒன்றாக விளங்கத் தலைப்பட்டது. தனித் தமிழ் மக்கள் உயரிய நாகரிகம் படைத்தவர்; இயற்கை மதிநலம் முதலிய அருஞ் சிறப்புக்கள் பெரிதும் வாய்ந்தவர்; கவித்வசக்தி நிரம்ப உடையவர். இந்து சமுதாயத்தின் பெருமை இத்தனித் தமிழ் மக்களது கலப்பினால் மிக அதிகரித்தது. அதன் ஆத்ம சக்தி உரம் மிகுந்து ஓங்கியது அதன் பாவனா சக்தி ஊக்கம் பெற்று, வளம் பயின்று, புதுமை நாடியது: அதன் கவித்வ சக்தி நூற்றுக் கணக்கான விவிதவர்ணங்கள் அமைந்து, அதிமனோகரமான ரூபவைசித்திரியங்களாகத் திகழ்ந்து தோற்றஞ் சான்று நின்றது. தமிழ்ப் பண்பு மிக்க திராவிட - இந்து சமுதாயத்தின் உள்ளத்தேயும் புதிய உணர்ச்சிகள் கிளர்ந்து பரந்தன; பௌத்த மதம் பரவலுற்றது; ஜைன சமயம் தனித்து நிலைபெற்று வீறுபெற விரும்பிப் பெரிதும் முயன்றது. இவற்றோடு முரணி

வைதிக சமயம் உள்ளத்தில் ஆழ்ந்து நிலைகூடி வெற்றியை யெதிர் நோக்கி நின்றது. வீரமுங் காதலும் விளைந்த நம் தமிழ் நிலத்தே இப்பொழுது அன்பும் அருளும் விளைவுபெறத் தொடங்கின. ஆழ்ந்த பக்தி ஊற்றுக்கண் திறந்து சுரந்து பெருகுவதாயிற்று. இங்ஙனமாக இரண்டு ஜீவநதிகள் ஒன்று கூடிப் பெருகி ஓடுவதைப் போல, ஆரியர் நாகரிகமும் தனித் தமிழர் நாகரிகமும் பேதமின்றிக் கலந்து ஒன்றுபட்டுத் தமிழ் நாட்டிலே பிரவஹிப்பதாயிற்று. காலம் விரைந்து சென்றது. நாகரிகக் கலப்பின் ஆரம்பத்தில் நிகழ்ந்த கலகம், பரபரப்பு முதலியன யாவும் நாளடைவில் மறைந்தொழிந்தன. தக்ஷிண இந்து சமுதாய வாழ்வு அமைதியுற்றுச் சென்றது. தமிழ் மக்கட் குரிய மனப் பண்பு, அநுபவம், நாகரிகம் இவற்றிற்குத் தக்கவாறும், காலகதியின் விளைவுக்குத் தக்கவாறும், பெருஞ் சிறப்புள்ள நூதன சிருஷ்டிகள் முளைத்துச் செழித்தன. பழமையும் பெருமையும் பொருந்திய இரு பெரு நாகரிகங்கள் ஒன்று பட்டதன் முதற் பெரும் பயனாக, வள்ளுவரென்னும் புலமைத் தெய்வம் தோன்றி, தமிழ் வேதத்தை யருளிச் செய்து, திகழ்ந்து, மறைந்து சென்றது. பாரதமாதாவின் கனவு நனவாகுங் காலம் நெருங்கியது.

இராமசரிதம் கனிதல்

பன்னெடுங்காலமாக, வட-ஆரிய சமுதாயத்தின் உள்ளத்தே ஊன்றிக் கிடந்து வான்மீகி மஹரிஷியால் உருவமைந்த இராம சரிதம் இப்பொழுது தன் பூர்வ கதியை அநுஸரித்துத் தக்ஷிண இந்து சமுதாயத்தின் உள்ளப் பரப்பிலேயும் அழுந்திக் கிடந்து ரஸம் இனிது ஊறிக் கனிவதாயிற்று; புதுவதாகிய மனோ பாவனையால் புதுக்கோலம் புனையப்பெற்றது. பாரததேவி அரிதில் தெரிந்துகொண்ட புருஷோத்தமனது சிறந்த குண விசேஷங்கள் நன்கு புலப்படுமாறு நூதன சம்பவங்கள் அழகு பெறச் சேர்க்கப்பெற்றன. இராமபிரானது அபூர்வ குணாதிசயங் களும், அரிய வீரச் செயல்களும், தியாக புத்தியும், மக்களது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இவர் தமது பேரொளித் திருமேனியானது தெய்வ மணத்தாற் கமழ்ந்தது. உயரிய மக்கட் பண்பும் உயரிய தெய்வப் பண்பும் ஒருங்கு சிறந்து விளங்கத் தொடங்கின. இவரது மஹிமையும் பூர்த்தி யெய்தியது. பக்தி நிரம்பிய நம் மூதாதையர்களது உள்ளத்தே, இராமபிரான் தெய்வமாகவே குடிகொண்டு நின்றனர். இராம சரிதத்தில் வழங்கிய இதர கதா பாத்திரங்களின் குண விசேஷங்களும் சிறிது

சிறிது பேதமெய்தின. இராமாயணம் பலவகையானும் செப்ப மெய்தி ஜன ஸமூகத்தில் வழங்கலாயிற்று. நாடகமாகவும் நடித்துவரப் பெற்றது. நடிக்கப்பெறவே, இத்திவ்விய சரிதம் புதுநலங் கனிந்து இன்புறுத்துவதாயிற்று. கல்லிடைகளிலே கசிந்து பிறந்து சிற்றருவியாய்ச் சிற்றோடையாய்ப் பேரருவி யாய்ப் பின்னர் நதியாய்ப் பல சிறு நதிகளோடு சங்கமித்துப் பெருநதியாய் இரு கரையும் புரண்டு பெருக்கெடுத்தோடும் மாரிக் காலத்துப் பேராறுபோல, இராம சரித்திரமும் ஆரிய சமுதாய வுள்ளத்தின் அடிப்பரப்பிலே சிறிதளவில் தோன்றிப் பின்னர் நாளாவர்த்தியில் வரவரப் பெருகி நிரம்பித் தக்ஷிணத்திற் கரை ததும்பிப் பெருக்கெடுத்துச் செல்வதாயிற்று. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் சமுதாயவுள்ளத்தில் இடம்பெற்ற இராம கதையின் வித்தானது முளைத்துச் செழிப்புற வளர்ந்தோங்கித் திண்ணிய கவடுகள் பல திசைதோறும் போக்கிப் பசேலெனத் தழைத்துத் தண்ணிழல் பரப்பி வானளாவி நின்று தனது பூர்ண-ஆகிருதியை அடைந்தது. தக்ஷிண இந்து சமுதாயத்தின் உள்ளப் பரப்பிலே, கருத்துலகிலே, இராம சரிதம் மேற்கூறியவாறாக அங்க - பரிபூர்த்தியை எய்திய போதிலும், வாசா ரூபமான காவியவுலகிலே தக்க கோலத்தோடு வெளிப்பட்டுத் தோன்ற வில்லை. வாசா ரூபமாகப் புலப்படுதற்கு உத்தமப் பெருங்கவிஞ னொருவனை அவாவி நின்றது.

தமிழன்னை திரட்டிய புண்ணியம்

இந்நிலையிலே தென்னாடு செய்த அருந்தவத்தினாலும், தமிழன்னை பன்னெடுங் காலமாகத் திரட்டி வைத்துள்ள அரும் புண்ணியத்தின் பெரும் பயனாலும் கம்பர் பெருமான் தோன்றி யருளினர். இப் பெரியாரது ஜனனத்தைத் தெய்வத் தோற்றம் என்று தான் கூறியமைதல் வேண்டும். பிரகிருதி தேவி தனது அருள்வளம் அனைத்தையும், இவர்பால் வரையாது பொழிந்தனள், 'கருவிலே திருவுடையவர்' என்பதற்கு இவரிடத் தன்றி ஏனையோர்பால் பொருள் நிரம்பக் காணுதலரிது. இயற் கையிலேயே பேரறிவு படைத்தவர். தொட்டனைத் தூறுமணற் கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறும் அறிவு' என்பது பொய்யா மொழி யாகலின், தம் காலத்து வழங்கிய அருங் கலைகள் அனைத்தையும் முற்றக் கற்றுத் தமது அறிவினது அளவினையும் ஆற்றலையும் முன் பின் ஒப்பின்றிப் பெருக்கிக் கொண்டனர். தமது தாய் மொழியை முற்றக் கற்றதனோடு அமையாது, வடமொழிப் பயிற்சியும் நிரம்ப வாய்ந்து விளங்

கினர். தம்மோடு ஒப்பாரும் மிக்காருமில்லாத பெருங் கல்வி யாளராய்ப் புலமை முற்றிய காரணத்தாலே, 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்னும் முதுமொழி கால தேச வர்த்த மானத்தால் அளவு படாத ஒரு பொதுவுண்மையாய்த் தமிழுலகில் வழங்கியது.

உணர்ச்சி - வலி முதலிய பிற மன - நலங்களும் இவர்பால் நிரம்பியிருந்தன. மக்களது உள்ளமாகிய வீணையில் எத்தனை வகையான உணர்ச்சி பேதங்கள் எழக் கூடுமோ அவை யனைத்தும் தமது சங்கற்ப மாத்திரையினாலே எழுந்து இனிது சப்திக்கச் செய்யும் பேரிசையாண்மை பெற்றனர். அகத்தும் புறத்தும் காணப்படுகின்ற சௌந்தர்ய வைபவங்கள் அனைத்தையும் நுண்ணிதினுணர்ந்து ஆழ்ந்து அனுபவித்து ஆனந்த சரீரியாய்த் தோன்றினர். இவரது பாவனாசக்தி எல்லையின்றி அகன்று பரந்தது; கொள்ளக் குறையாத பெருங்கடல் போன்றது; எவ்வுல கத்தினும் சென்று சஞ்சரிக்க வல்லது. எவ்வகைப் பொருளையும் எவ்வகை நிலையினையும் மனக்கண் முன்னே தெளிவாய்ப் புலப் படுத்திச் சித்திரிக்கும் சிறப்பியல் வாய்ந்தது. அறிவின் பெருமை யினாலும், உணர்வின் பெருமையினாலும், பாவனாசக்தியின் பெருமையினாலும் இவரது கவித்வம் முதிர்ந்து கனிந்தது. ஸ்வரங்களும், ராகங்களும், வர்ணங்களும், கீர்த்தனங்களும் ஒன்றின்மேலொன்றாய்ப் படிப்படியாய் இசைச் செல்வத்தோடு பொங்கி வருவதற்பொருட்டு நலன்கள் நிரம்பி நின்ற அரிய வீணை போல, இவரது பண்பு மிக்க உள்ளத்தானும், கவித்வ சக்தியின் வேகத்தால் பண் கனித்தூறும் இனிய கருத்துக்கள் அடுத் தடுத் தெழுந்து ஒன்றோடொன் றிசைந்து நவநவமான கான விலாசத்துடன் ஒழுகிவரும் பக்குவமெய்திற்று.

இருதய கானம்

மதுரமிக்க இவ் இருதய கானத்தை யுணர்த்துவதற்கென்றே அமைத்த தென்னலாம் இவரது அரிய சொற்செல்வம். தமிழ ணங்கு இவ் அருந்திறற் பெரியாரது குறிப்புணர்ந்த மாத் திரையில், அவர் விரும்பிய வண்ணம் இன்சுவை கனிந்த நன்மொழி யினைத் தட்டின்றி யுதவிவரக்காத்து நின்றனள். தமிழ் மொழியின் இனிமையினையும், அழகினையும், ஆற்றலையும் இவர்போல் முற்றவுணர்ந்தார் பிறர் யாரும் இல்லையென்றே கூறலாம். தமிழ் மொழி இவரது தனியரசினுக்கு அன்புற்றடங்கி நின்று குற்றேவல் புரிகுவதாயிற்று.

இங்ஙனம் உத்தமப் பெருங்கவிஞர்க்குரிய உத்தம லக்ஷணங்களனைத்தும் ஒருங்கு நிரம்பி விளங்கினர் கம்பர் பெருமான்.

சடையப்ப வள்ளல் தூண்டல்

பாரததேவியின் அருந்தவம் முற்றுப் பெறுங் காலமாயிற்று. அவ் அம்மை பல நூற்றாண்டுகளாக ஆசையோடு எதிர் நோக்கியிருந்த ஸம்பூர்ண - ராமபிரானை வாசாரூபமாக உலகினர்க்கு அளிக்கக் கம்பர் திருவுளம் பற்றினர். எத்தகைய மங்கல நன்னாளில் நமது கவிஞர் இங்ஙனம் எண்ணித் துணிந்தாரென யாவரால் அளவிட்டுரைக்கத் தகும்? தம்முயிர் போற் கம்பர் பெருமானைப் பாதுகாத்துத் தமக்கும் தமிழ்க்கும் அழியாப் புகழ் தேடிக்கொண்ட சடையப்ப வள்ளலார் தூண்ட இராம சரிதம் பாடுங்கருத்து எழுந்ததெனச் சிலர் கூறுவர். ஆனால் இத்தெய்வ மாக்கதையைப் பாடவேண்டுமென்று கம்பரது உயிரே அளவு கடந்த ஆசை கொண்டிருந்தது என்பது தான் உண்மை. 'ஆசை பற்றி அறையலுற்றேன்' என்றே நமது கவிஞர் சிகாமணியும் நமக்கு உணர்த்துகின்றார். பிறர் யாரேனும் வேண்ட, இத் தெய்வ நறுங்கனி ரஸம் ஊறிப் பழுத்ததாக மாட்டாது. மேலும் இப்பெருங் கருத்து கம்பரது இளமைப் பிராயத்திலேயே இவரது திருவுள்ளத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். இளமை தொட்டே தம்மை இராமாயணத்திற்கெனத் தத்தஞ் செய்தனர். தமது வாழ்வின் தனிப்பெரு நோக்கம் இராமகாதையை இயற்றுதலே யென்று கடைப்பிடித்தனர். இவரது சிந்தை இராம சரிதத்தையே சுற்றிச் சுழன்று வந்தது; இவரது சொற்கள் யாவும் இராம சரித்திரம் பற்றியே விளைந்தன; இவரது செயல்கள் யாவும் இராம சரிதத்தை முற்றுவிக்கும் பொருட்டே எழுந்தன.

ஆரே யெனுமொன்று சொல்லத்
தொடங்கினு மவ்விடத்துன்
பேரே வருமென்ன பேறுபெற்றேன்
பெருநான் மறையின்
வேரே மிதிலையின் மின்னொடும்
போய்வெய்ய கானடைந்த
காரே கடல்கொளுந் தச்சிலை
வாங்கிய காகுத்தனே

என்ற அழகிய செய்யுளின் பொருள் கம்பர் பெருமானது திருவுளத் தன்மையை நினைக்கும் பொழுதுதான் நமக்குப் புலப்படுகின்றது.

உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உகப்பார் என்ற தெய்வத் திருவாக்கின் இன்னிசையிலே நமது மனம் கட்டுண்டு கிடப்பதன் காரணம் இப்பொழுதுதான் நாம் அறிகின்றோம். இவரது அகன்று பரந்த அகவுலகிலே இராம சரித மொன்றே தனியாட்சி புரிந்து வந்தது.

காலம் அளவு முதலிய வரையறையின்றிச் செவிநுகர் கனிகளைச் சொரிந்து தரவல்ல கம்பரென்னும் கற்பகத் தருவினை, அது வெயில் முதலியனவற்றால் வாடி வருந்தாதபடி, நீர் பெய்து அன்போடு பாதுகாத்து வந்த சடையப்ப வள்ளலார் தாமும் இராம சரிதத்திற்கு அடுத்தபடியாகவே நமது கவிஞர் பெருமானது அன்பிற்கு உரியவராயினர். பல ஆண்டுகளாக, இரவும் பகலும், இராமாயணப் பெரும்பொருளையே கம்பநாடர் சிந்தனைசெய்து வந்தாராதல் வேண்டும். கதைப் போக்கினை அழகுபெற ஒழுங்கு படுத்துதலினும், பலவேறு கட்டங்களில் நிகழும் சம்பாஷணைகளின் முக்கியாம்சங்களைத் தெரிந்தெடுத்து அழகு படுத்துதலினும், கதா பாத்திரங்களின் குண விசேஷங்களை அவ்வவர்க் குரிய சொற் செயல் முதலியவற்றால் விளங்க அமைப்பதினும், இவரது வாழ்வுக் காலத்தின் முற்பகுதி கழிந் திருத்தல் வேண்டும்.

இராமசரிதத்தில் தோய்தல்

இராம சரிதம் என்னும் புண்ணிய தீர்த்தத்திலே இவர் தோய்ந்து தோய்ந்து அதன்கண் தம்மை நன்கு ஊற வைத் திருத்தல் வேண்டும். தம்மை இராம சரித மயமாகவே மாற்றி இருத்தல் வேண்டும். பலரும் இவரைப் பித்தரெனவும் பேதை யெனவும் கூறுமாறு, தமது உளக்கோயில் கொண்ட தெய்வப் பெருஞ் சரிதத்திலே ஈடுபட்டுப் பக்தராய் விளங்கினர்.

பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?

என்று நம் கவிஞர் பெருந்தகை கூறுவதன் குறிப்பு உணரத் தக்கது. இவர் தம் பெருங் காப்பியத்தைப் பாடியது பிறரது ஆணையை மேற்கொண்டன்று; பிறர் கேட்டு உளங்குளிரும்

பொருட்டும் அன்று; தமது ஆத்ம தாகத்தைத் தணிக்கும் பொருட்டுத் தாம் பெய்து கொண்ட கானவர்ஷமே யாகும்.

அரும் பெறல் வீணை

இவரது 'இராமாவாதாரம்' இப்பெருந்தகையரது கவித்வ சக்தி இராம சரித்திரத்தை அலங்கரித்தற் பொருட்டாகவே அரும்பி மலர்ந்து, ஒளி சிறந்து, மணங்கமழ்ந்து விளங்கியதாகும். இத் தெய்வ கீதத்தைப் பாடுதற் பொருட்டாகவே அமைத்து நின்ற ஓர் அரும்பெறல் வீணை யென்று நம் புலவர் பெருமானைக் கூறின், அது மிகவும் பொருத்த முடையதே யாகும்.

மனத்தளர்வு

இராம காதையைப் பாடுதற் கெனத் தம்மைப் பக்குவப் படுத்தி அவ் அருஞ் செயலினை மேற்கொள்ளுதற்கண்ணே தாம் ஈடுபட்டிருந்த போதிலும், கம்பர் பெருமானது உள்ளத்தில் இடையிடையே சிறிது தளர்வு தோன்றாமற் போகவில்லை யென்று கருதற்கிட முண்டு. வான்மீகி மஹரிஷியின் பெருமையை நன்குணர்ந்தார் யார்தாம் அவரோடு கவிதையில் இகலி வெற்றிகொள்ள மனமொருப்படுவர்? பாடுதற் கமைந்த தெய்வ சரிதத்திற்குத் தமது கவித்வ சக்தி போதியதாகுமென இறுமாந் திருப்பர்? இவ்வகைத் தளர்வு தோன்றி யிருத்தல் வேண்டும் என்பதற்கு,

நொய்தின் நொய்யசொல் நூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமரம் ஏழ்துளை
எய்த எய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே

என்னும் செய்யுள் சான்றாகும். இங்ஙனம் மனந்தளர்ந்த காலங் களில் சடையப்ப வள்ளலாரே தமது கவிஞர்க்கு ஊன்றுகோலா யுதவினர். தம் உயிர் நண்பரது கவித்வ சக்தியின் பெருமையைப் பலவாறாக அறிந்த சடையப்பர் அவரை அடிக்கடி யூக்கி மனத் தளர்வகற்றி இராம சரித்திரம் பாடுஞ் செயலினை மேற் கொள்ளச் செய்திருத்தல் வேண்டும். இதனை யடிப்படையாகக் கொண்டே இராம காதை சடையப்பவள்ளல் தூண்டலாற் பாடப் பெற்றதென்னும் பரம்பரை வரலாறு எழுந்ததெனக் கொள்ளலாம்.

மனத்தளர்வு நீங்குதல்

தமது கவித்துவ சக்தியின் பெருமையினாலும் சடையப்பரது அன்பினாலும் கம்பர் பெருமானின் உள்ளத்தில் ஏகதேசமாய்த் தோன்றிய தளர்வு அறவே நீங்கியது. தோன்றாத் துணையாய் நின்று உலகனைத்தையும் இயங்கச் செய்யும் இறைவனது திருவருளால் தமது கவிஞர் பெருந்தகையின் சிந்தை செயலாகப் பரிணமித்தது. இராமாயண - கானம் இனிதெழுந்து சப்திக்கத் தொடங்கிற்று. பாரதமாதாவின் தவமுற்றி அவளது உயிராசை நிரம்புவதாயிற்று. அவள் மனத்திற்குகந்த புருஷோத்தமன் என்றும் அழியாத வாசாரூபத்தில் தோன்றுவானாயினன். இராமாவதாரப் பேரிதிஹாஸம் உருப்பெறலாயிற்று.

அன்பு உள்ளம்

பல நூற்றாண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த இவ் அரிய சம்பவம் இப்பொழுதும் நம்மால் அன்போடும் மகிழ்ச்சியோடும் நினைந்து இன்புறத் தக்கதாயுள்ளது. கம்பர் பெருமானோடு உடனுண்டுறைந்து அவரைத் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்து வந்த சடையப்ப வள்ளலார் எத்துணை அன்போடு இப் பெரு நிகழ்ச்சியைப் போற்றி யிருத்தல் வேண்டுமென அறிதல் கூடுமோ? அவரது அன்பின் திறம் யாவரால் உணரத் தக்கது? 'அன்பென்ப தொன்றின் தன்மை அமரரும் அறிந்ததன்றால்' என்று கம்பர் தாமே அருளிச் செய்தது தமது ஆருயிர் நண்பராகிய வள்ளலது பேரன்பினைத் தம் மனத்தகத்துக் கொண்டே போலும்! சடையப்ப வள்ளல் தம் ஊர்ப்புறத்துள்ள ஓர் அழகிய பூஞ்சோலையிலே அவரது அன்பே வடிவெடுத்தாற்போன்ற பெருமை வாய்ந்த மணி மண்டபமொன்று வனப்புத் தோன்ற அமைத்தனரென்று நாம் கருதல் வேண்டும்.

இராமாயண கீதம்

அப்பூஞ்சோலையிலே பிரகிருதி தேவி நிசப்தமாய் அமைதியுற்று விளங்குகின்றாள். மணிமண்டபத்தினுள்ளே கம்பர் பெருமான் அறிவும் அன்பும் அரிய கவித்வ சக்தியும் தமது திருமுக மண்டலத்தே ஒளி சிறந்து தோன்ற நடுவே வீற்றிருந்தருளுகின்றார். சிறிது தூரத்தே விரைந்தேற்குஞ் செவியும் சோர்வறியாத ஞாபகமுமுடைய தமிழறிஞர் மிகப் பலர் ஏடும் எழுத்தாணியும் கொண்டு கவிஞரைச் சூழ்ந்திருக்கின்றனர். வாயிற்படியினருகே நமது சடையப்ப வள்ளலார் ஓர் ஆசனத்தின்

மீதாக அமர்ந்தருளியிருந்து எவ்வகை இடையூறும் எய்தா வண்ணம் கவலையோடு நோக்கி அன்பு பூண்டு விளங்குகின்றார். பூஞ்சோலையிலே அந்நியரது வரவினைத் தவிர்க்கும் பொருட்டுக் காவலாளர்கள் நிற்கின்றனர். தமிழார்வம் தாங்கலாற்றாத தமிழ்ச்செல்வர் சிலர் தமது ஆசையிழுத்துச் செல்லுதலால் அறிமுகமுள்ள காவலாளரைக் கடந்து சென்று மணிமண்டபத் தருகில் வந்து இராம சரிதமாகிய கீதவமுதைச் செவி மடுத்தற்கு ஒற்றியிருந்தனர். 'உலகம் யாவையும் தாமுளவாக்கலும்' என்னும் பொருள் நிரம்பிய மதுரத் திருவாக்கு நமது கவிஞர் பெருந்தகையின் இதயத்தினின்றும் பொங்கி யெழுந்தது. மணி மண்டப முழுவதும் நிறைந்து பூஞ்சோலையிற் பரந்துலவி மக்களிதயத்தே குடிகொண்டு நின்றது இத் தெய்வத் திருவாக்கு. ஏடெழுதும் ஒலி கேட்கலாயிற்று. கம்பர்பெருமானது திருவுள்ளம் இராமாயண - கீதமாகக் கரைந்து பெருகி ஏட்டிற் பிரவஹித்துப் பாய்குவதாயிற்று.

இங்ஙனம் தொடங்கிய இராமாவதாரம் முற்றுப்பெறுதற்கு ஆண்டுகள் பலப்பல சென்றிருத்தல் வேண்டும். சிறந்த ஆங்கிலக் கவிஞரும் நுண்ணிய ஆராய்ச்சியாளருமாகிய கோலரிட்ஜ் என்பவர், பத்து வருஷ காலம் இதிஹாஸத்தின் பொருள்களைக் குறித்துக் கவிஞர் சிந்தனை செய்வதற்கும், பத்து வருஷ காலம் அதனை அவர் எழுதி முடித்தற்கும் ஆக, இருபது வருஷ காலமேனும் ஓர் இதிஹாஸம் பாடி முடித்தற்கு வேண்டப்படும் என்று ஒருவகையாற் கணக்கிடுவித்தனர். ஆனால், இங்ஙனம் கணக்கிடும்போது கம்பரது இராமாவதாரம் போன்ற பேரிதிஹாஸத்தினை அவர் கனவிலும் நினைத்திரார் என்பது திண்ணம்.

மில்டன் எழுதிய 'சுவர்க்க நீக்கம்' என்று பொருள்படும் ஆங்கில இதிஹாஸத்தினையும், ஹோமர் வர்ஜில் முதலானோரது இதிஹாஸங்களையும் மனத்திற் கொண்டே மேற்கூறிய கால வரையறை செய்திருத்தல் கூடும். சுவர்க்க நீக்கத்தினைக் காட்டினும் இராமாவதாரம் நான்கு மடங்கு பெரிது. அதனை யெழுதி முடித்தற்கு 40 வருஷங்களேனும் முன் குறித்த கணக்கின்படி வேண்டுமெனக் கருதலாம்.

இங்கே ஒரு விஷயம் மனங் கொள்ளுதற்கு உரியது. மேல்நாட்டுக் கவிஞர்கள் கவிதை யெழுதும் முறை வேறு; நமது நாட்டுக் கவிஞர்கள் கவிதையெழுதும் முறை வேறு. மேல்நாட்டுக் கவிஞர்கள் தமது மனத்தின்கண் கவிதை தோன்றியவுடனே

அதனைத் தாமே எழுதிக்கொள்ளுதல் பெருவழக்காகும். இதனால் கவிதைப் பிரவாஹமானது இடையீடின்றிச் செல்வதற்குச் சிறிது முட்டுப்பாடு உளதாகின்றது. கவித்துவ - ஆவேசம் நிலைநின்று விளங்குவதற்கும் சிறிது தடை ஏற்படுதல் கூடும். நமது நாட்டுப் பெருங்கவிஞர்கள் கவிதைகள் தோன்றத் தோன்றச் சொல்லி வருதலும், அவர்களது மாணாக்கர்களும் பிற தமிழறிஞர்களும் உடனிருந்து அவற்றை ஏட்டில் எழுதிக்கொள்ளுதலுமே பெருவழக்காக ஏற்பட்டுள்ளது. கவிதைகள் எத்துணை விரைந்து பெருகிவரினும் ஏடெழுதுவோர் அவற்றை வரன்முறையே சிலசிலவாகப் பங்கிட்டுத் தமது திண்ணிய ஞாபக சக்தியால் தவறின்றி வரைந்து எழுதிவந்தனர். அன்றியும் விருத்தம் முதலிய தமிழ்க் கவிதை இசையோடு கலந்தன்றித் தோன்றுதலில்லை. இவ் இன்னிசை சற்றும் இடையீடின்றிச் செய்யுட்கள் விரைந்து வருவதற்குப் பெரிதும் அனுகூலம் செய்கின்றது. இங்கே கூறிய இரண்டு காரணங்களாலும் கோலரிட்ஜ் கணக்கிட்ட முறை நமது பாரத நாட்டிற்கு பொருந்துமாறில்லை? இராமவதாரம் பாடி முடித்தற்கு இத்தனை வருஷங்கள் ஆகியிருத்தல் வேண்டுமென நிச்சயமாய் வரையறுத்துக் கூறுதல் ஏலாது. எனினும், ஒன்று மாத்திரம் ஐயமின்றிக் கொள்ளுதல் தகும். அறிவு, அநுபவம், கல்வி, கவித்துவம்; ஆகிய இவையனைத்தும் முதிர்ந்து விளங்கிய தமது வாழ்வின் உச்சகாலத்தை இராமாவதாரத்திற்கெனக் கம்பர் அர்ப்பணஞ் செய்துவிட்டன ரென்பதே உண்மையாகும்.

தினம் ஒன்றுக்கு 700 செய்யுட்கள் வீதம் இரண்டு வாரத்திற்குள், இராமாயணம் பாடி முடிந்ததெனவும், இத் தினங்களிலே இரவுகள் யாவும் வான்மீகி - ராமாயணம் பொருள் கேட்டலிலே கழிந்தனவெனவும் சிலர் கூறுவர். இதனை.

... ...

அபிநவ கவிநாதன்
விழுந்த நாயிற தெழுவதன்
முன்மறை வேதியருட னாராய்ந்
தெழுந்த நாயிறு விழுவதன்
முன்கவி பாடின தெழுநூறே

என்ற செய்யுள் ஆதரிப்பதாம் என்றுங் காட்டுவர். இவ்வரலாறு முற்றிலும் அசம்பாவிதமாயுள்ளது. உணவருந்துதல் முதலிய அவசிய கர்மங்களால் இடையீடு படாது இராமாவதாரம் பாடப் பெற்றதெனக் கொள்ளினும் நிமிஷம் ஒன்றிற்குச் செய்யு

ளொன்று வீதம் பாடப் பெற்றதாகல் வேண்டும்; அன்றியும் மேற் காட்டிய செய்யுள் ஏட்டுப் பிரதிகள் பலவற்றிற் காணப்பட வில்லை, பிற்காலத்தே கதை பெருக்குவோர்களால் இது பாடப் பெற்றதாதல் வேண்டுமெனக் கருதுதல் தகும். மேலும் நூலி னகத்து ஆழ்ந்து கிடக்கும் சில சான்றுகளும் இவ்வரலாற்றினை அநாதரிக்கின்றன. கடைசியாக, இராமாயணம் போன்ற பெருங் காவியம் பிறக்கும் கவித்துவ தத்துவத்திற்கு இவ்வரலாறு முற்றிலும் மாறாக உள்ளது. இக் காரணங்களால் மேற்காட்டிய செய்யுள் சிறிதும் கொள்ளத் தக்கதன்று. ஆனால் இச்செய்யுள் குறிக்கும் வரலாறு மிகவும் அரியதோர் உண்மையினை அறிவுறுத்துகின்றது. கவித்துவ - ஆவேசம் நிரம்பி உணர்வு மயமாய்க் கம்பர் பெருமான் விளங்கிய அமயங்களில் இராமாவ தாரம் பாடப் பெற்றதாகும். அவ் அமயங்களில் கவிதைப் பிரவாஹம் சிறிதும் இடையீடின்றிப் பெருகிப் பாய்ந்து, கம்பீரமா யோடும் பெருநதி போன்று, விரைந்து சென்றது இதனை யுணர்த்தும் அத்துணையே மேலைச் செய்யுள் உண்மையுடைய தாகும்.

தோன்றிய பயன் முற்றியது

ஆண்டுகள் ஒருசில சென்றன. இராமகாதை முற்றுப் பெற்றது. சம்பூர்ண - இராமபிரான் வாசா ரூபமாகத் தமிழ் நாட்டில் திருவவதரித்துப் பாரதமாதாவின் திருவுளத்தை மகிழ் வித்தனன். கம்பர் பெருமான் தமிழுலகிலே தோன்றியதன் பயன் இனிது முற்றியது. அவரது ஆன்மா சரிதை வடிவமாய் உருவெடுத்து விளங்கியது. தமது இராம காதையினைத் தமிழ் அரங்கேற்றி ஈத்தருளுவதொன்றே அவராற் செயற்பாலதாய் எஞ்சி நின்றது.

அரங்கேற்றம்

புண்ணிய தினமொன்று தெரிந்து கொள்ளப்பட்டது. கம்பரது இதிஹாஸத்தில் நாயக நாயகிகளுக்குத் திருமணப் பெரு விழா நிகழ்ந்ததாகக் கூறும் பங்குனி யுத்தரத்தின் மறுதினமாகிய பங்குனி யத்தநாளே மிக்க பொருத்தமுடைய சுபதினமாகக் கருதப்பட்டது. ஸ்ரீரங்கநாதரது திருச்சந்நிதியே[1] அரங்கேற்று

1. திருவரங்கத்திலே கம்பர் தமது காவியத்தை அரங் கேற்றியதாகக் கூறுவர். அரங்கநாதன் சன்னதி வெண்ணெய் நல்லூரிலுள்ளதென்று கொள்ளும்படி 'எண்ணிய சகாத்தம்' என்னும் செய்யுள் அமைந்திருக்கின்றது.

தற்குரிய் இடமாயமைந்தது. சடையப்ப வள்ளலாரால் அழைக்கப்பெற்ற தமிழ் நாட்டுப் புலவர் சிகாமணிகளும், பிரபு சிகாமணிகளும் அரங்கேற்று மண்டபத்தில் வரன் முறையே வீற்றிருந்தனர். பக்தர் குழாங்கள், பள்ளத்துப் பாயும் தண்ணீர் போல, நானாதிசைகளினின்றும் வந்து சூழ்ந்தனர். பண்டிதர்களும் பாமரர்களும் இடம் பெறாது மிடைந்து நெருங்கினர். மண்டபத்தின் அகத்தும் புறத்தும் புடைசுற்றித் தமிழ் நன்மக்கள் திரண்டு கூடினர். அதன் நடுவே சிறிது உயரிய பீடத்தின் மீது நம் கம்பர் பெருமான் எழுந்தருளி யிருந்தனர்.[1] அவரது திருமுகத்தே பேரறிவும், ஆழ்ந்த சாந்தியும், பெருங் கவித்வ-சக்தியும் நர்த்தனம் புரிகின்றன; அவரது நயனங்கள் ஆழ்ந்தகன்று உள்ள மனைத்தையும் ஒழுங்கு தோற்றி விளங்குகின்றது; நோக்குவோரை யெல்லாம் வசீகரித்தமைகின்றன; அன்பு அலையெறிந்து படர்கின்றது. அறிவு கூர்ந்து விளங்குவதனை யொப்ப அவரது நாசியும் நீண்டு கூர்ந்திருக்கின்றது. அவரது உதடுகள் இளநகை யரும்பி விகசிக்கின்றன. அகன்ற மார்பும் திரண்ட புயமும் பேரழகு பயக்கின்றன. அவரது தடக்கைகள் தாள்களைத் தொட்டு நீண்டிருக்கின்றன. அவரது திருமேனி முழுவதும் தெய்வவொளி பரந்து சுடர்கின்றது. இப் புலவர் பெருமானை யடுத்து யாரினுமினிய பேரன்பினராகிய சடையப்ப வள்ளல் வீற்றிருக்கின்றனர்; கருணையின் நிலையம்; கவிஞரின் புகலிடம். தமிழ் நாட்டுப் புலவர்கள் பலகாலமாக ஈட்டிவந்த புண்ணியம் அனைத்தும் ஒருங்கு திரண்டு வடிவெடுத்து வந்தாற் போன்று அமைந்திருக்கின்றனர். அகக்கண் கொண்டு நுனித்து நோக்குவாமாயின் வேறு சில அற்புதக் காட்சிகளும் காணலாகும்.

தெய்வ கணங்கள் களி சிறந்து குலவுகின்றன. பாரததேவி எல்லையற்ற சாந்தியுடனும் எல்லையற்ற ஆனந்தத் துடனும் விளங்குகின்றாள். அவளது திருமுக மண்டலத்தைச் பற்றி யிலகும் சோபா வலயத்தினூடே உளத்தினின்றும் பொங்கிவரும் களிப்பின் சிற்றருவி மெல்லென வீழ்ந்து ஒழுகுகின்றது. இத் தேவியை யடுத்துத் தமிழன்னை அழகு சிறந்து ஒளிர்கின்றாள்.

---

1. திருவரங்கத்திலுள்ள கற்சிலை யொன்று கம்பர் பெருமானது திருவுருவமாகச் சிலராற் கருதப்படுகின்றது. இங்ஙனம் கருதுதற்கு ஆதாரம் யாதுமில்லை. இக் கற் சிலை கம்பர் திருவுரு அன்றென்பதே உறுதி.

அவளது திருமுடி மீது நூதனமா யமைக்கப் பெற்றதும் விலையற்ற இரத்தினங்களால் இழைக்கப் பெற்றதுமான கிரீடமொன்று குளிர்ந்த ஒளிபரப்பி நிலவுகின்றது. அவளது செந்தாமரைக் கண்கள் கருணை நில வெறிந்து மிளிர்கின்றன; திருமேனி முழுதும் அன்பின் செழுமையால் பொடித்துத் துடிக்கின்றது. ரிஷிகணங்கள் ஒரு பால் குழுமி யிருந்தனர். அவருள்ளே வான்மீகியும் வள்ளுவரும் தலைமை தோன்ற விளங்குகின்றனர். ஆதிகவியாகிய மஹரிஷியின் சிரத்தின்மீது சடைமாமகுடம் இலங்குகின்றது. இராம கதாம்ருதத்தை உலகிற் கருளிய அவரது தெய்வத் திருவதரத்தின் கீழாக முதுமையாற் பஞ்சென வெளுத்துத் தோன்றும் தாடி நீண்டு அடர்ந்து பொலிகின்றது அவரது ஆழ்ந்து தெளிந்த கண்களிலே கவித்வ வொளி இன்னும் நிரம்பிப் பிரகாசிக்கின்றது. மழித்த சிரமுடையவராய்ச் சாந்த மூர்த்தியாய் அமர்ந்திருக்கின்றனர் வள்ளுவப் பெருந்தகையார். பேரறிவும் பேரருளும் அவர் கண்களிற் கனிந்து இலங்குகின்றன. தமிழ்த் தாய் வயிற்றில் தம்மோடு உடன் பிறந்த கவிஞர் பெருந்தகையார் மீது அவரது அளவு கடந்த காதல் படர்ந்து செல்கின்றது. அவரது துரிசிலாத்திருமணத்தே இன்று சிறிது கர்வம் இடம் பெற்றிருப்பது போலத் தோன்றுகிறது.

அரங்கநாதன் சந்நிதியில்

அரங்கநாதன் சந்நிதியில் இத்துணையளவாகச் சிறந்த திருக்கூட்டம் என்றும் இருந்ததேயில்லை யெனலாம். யாண்டும் கண்கள்! யாண்டும் செவிகள்! அனைவரும் ஏகாக்ர சித்தராய்க் கம்பர் பெருமானை நோக்கிய வண்ணமா யிருக்கின்றனர். ''ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக'' என்ற அருமைத் திருவாக்கு எத்துணை யுண்மையுடையதென இன்று ஒருவாறு அறியலாகும். குறித்த அமையம் நெருங்கிற்று. உலக மனைத்தையும் ஆக்கியளித்துத் துடைத்தலையே தனது திருவிளையாட்டாகவுடைய பரம்பொருளை நெஞ்சுற வழுத்திக் கம்பர் பெருமான் தமது இதிஹாஸ கீதத்தைப் பாடி அரங்கேற்றலாயினர். உள்ளத்தை யுருக்கி யுருவஞ் செய்தது போலத் தோன்றிய கவிஞர் பெருந்தகையின் கம்பீரத்தொனி மண்டப முழுதும் பரந்து சென்றது; கேட்டோர் இதயத்தினின்றும் எதிரொலி கிளர்ந்தது; இராமாயணமாகிய அமுத கீதத்திலே ஆண்டிருந்தோர் தம் மனங்கள் லயித்து மயங்கின.

வயிரியர் மதுர கீதம் மங்கையர் அமுத கீதம்
செயிரறு மகர யாழின் தேம்பிழி தெய்வ கீதம்
பயிர்கிளை வேயின் கீதம் என்றிவை பருகி விண்ணோர்
உயிருடை யுடம்பு மெல்லாம் ஓவியம் ஒப்ப நின்றார்

என்று கூறியதனோ டொப்ப, அனைவரும் சித்திரப்பதுமைகள் போன்று யாதும் செய்கையற் றிருந்தனர். இராம சரிதம் படிப் படியாய் வளர்ந்தது. செஞ்சொற் கவியின்பம் இனைத்தென்பது இன்றுதான் உணரப்படலாயிற்று. சில பொழுது அவையகத் தார் வியப்புமேலிட்டு மதிமருண்டு கிடப்பர். சில பொழுது அவையகத்தார் வியப்புமேலிட்டி மதிமருண்டு கிடப்பர்t சில பொழுது உவகை மேலிட்டு ஆநந்த வாரியில் திளைத்திருப்பர்; சில சமயம் சோகத்தால் தம் உளங்கலங்கி நைந்து வருந்துவர்; சில சமயம் பக்தியால் உளங் கனிந்து உருகுவர்; ஒருகால் நகைச் சுவை மீதூர்ந்து மெய் குலுங்கச் சிரிப்பர்; ஒருகால் அச்சம் மிகக் கொண்டு வெருண்டு நடுநடுங்குவர்; ஒரு சமயம் வீரம் மிக மேலிட்டுப் புயம் பூரித்து ஏற்றெழுவர். 'அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்?'

பூவுலகத்திலும் வானுலகத்திலும், நாட்டிலும் காட்டிலும், நதிக்கரையிலும் கடற்கரையிலும், யுத்தகளத்திலும் ஆகாய வீதியிலும் நிகழ்ந்த பெருஞ் சம்பவங்களெல்லாம் திருவரங்கரது சந்நிதியிலே நடித்துக் காட்டப்பெற்றன. அயோத்தி நீங்கிய அரசர் பெருந்தகையும் புஷ்பக விமானமீது ஏறிச் சீதாலக்ஷ்மண சமேதராய் வானரப் பரிவாரங்களுடன் திரும்பத் தனது நகர மடைந்து,

தன்னரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை

வாழ்வித் தருளினன். கைகேசியின் சூழ்வினையால் தடையெய்தி சீதாபஹரணம் என்னும் சோக சம்பவத்தால் இடையீடுபட்ட பட்டாபிஷேக மஹோத்ஸவம் விமரிசையாய் நிகழ்கின்றது.

அரியணை அனுமன் தாங்க
அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடை கவிக்க
இருவரும் கவரி பற்ற

விரிகட லுலகம் ஏத்தும்
வெண்ணெய்மன் சடையன் வண்மை
பரபுளோன் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி

என்ற சிறப்புமிக்க செய்யுளைக் கம்பர் பெருமான் பாடினர். பாடிய அளவிலே அவைக்கணிருந்தோர் அனைவரும் சடையப்ப வள்ளலாரை நோக்கி அவரது பெருமையையே உள்ளத்தில் எண்ணினார்கள். வள்ளலாரோ தலைவணங்கியிருந்தனர்.

இராமாவதாரம் அரங்கேறியது

இராமாவதாரம் அரங்கேற்றி முடிந்தது. கவிதை வெள்ளத்தின் பெருஞ்சுழியில் அகப்பட்டுத் தம்மை யிழந்து நிற்பாரையன்றிப் பிறரைக் காணுதல் அரிதாயிற்று. திடீரென ஓர் அரவம் அங்கு உண்டாயிற்று. வான்மீகி-மஹரிஷி புனைந்த சடைமுடி துளக்கிப் புலவரேற்றினை முகம்பார்த்து மெல்ல நடப்பாராயினர். அவரைத் தொடர்ந்து வள்ளுவப் பெருந்தகை, தமிழ்வேதம் எழுதியருளிய அருமைத் திருக்கரத்தில் பொன்கொண்டிழைத்து மணியைக்கொடு புனைந்த மகுடமொன்று தாங்கிப் பின் சென்றனர். இருவரும் தம்மை யடுத்து வந்ததும், கம்பர் பெருமான் எழுந்து தலைவணங்கி நின்றனர். அப்பொழுது தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்குங் கீர்த்தியுடைய வான்மீகி மஹரிஷி தந்தையினுங் களிகூரத் தழுவி நின்று. ''நீரே கவிச் சக்கரவர்த்தி; எனது அன்பிற்கரிய ஞான புத்திரரை இன்றுதான் காணப்பெற்றேன்'' என்று கூறி வள்ளுவப் பெருந்தகையார் தாங்கிச் சென்ற மகுடத்தை வாங்கிக் கம்பர் பெருமானது முடிமீது புனைந்தருளினர். தமிழ்ப் புலமைத் தெய்வமாகிய வள்ளுவர் அன்பூற்றெடுக்குந் திருநயனங்களாற் கனிந்து நோக்கி முடிபுனைந்த சிரமீது தமது திருக்கைகளை அமர்த்தி ஆசீர்வதித்தருளினர்.

இன்று பங்குனி அத்த* நன்னாள் இந்தச் சுபதினத்தன்று இற்றைக்குச் சுமார் 750 ஆண்டுகட்கு முன்னர்மேல் விவரித்தவாறு

*பங்குனி யத்த நாளில் (29—3—26) சேதுஸம்ஸ்தான மஹாவித்துவான் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்களது தலைமையில், திருநெல்வேலித் தமிழ்-இலக்கிய சங்கத்தினர் நடத்திய கம்பர் திருவிழாவில் வாசிப்பதற்கு இப் பாவனைக் கட்டுரை எழுதப் பெற்றது.

கம்பர் பெருமானது இராமாவதாரம் அரங்கேறுதலாயிற்று. இந்நாள்தான் நமது தமிழ்த்தெய்வம் மணிமா மகுடம் புனைந்து கொண்ட பெருநாள். பாரததேவி பன்னெடுங் காலமாக முயன்று வந்த தவம் பயனிரம்பி முற்றியதும் இந்நாளே. இத் தகைய மங்களத் திருநாளைத் தமிழ் மக்களாகிய நாம் அனை வரும் இன்றுபோல் என்றும் போற்றிப் பாராட்டுவோமாக!

எண்ணிய சகாத்தம் எண்ணூற்
றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணை நல்லூர்
தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை
பங்குனி யத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே
கவியரங் கேற்றி னானே.

6. சடையப்ப வள்ளல்

திருவெண்ணெய்நல்லூர் ஒரு சிற்றூர். இது சோழ மண்டலத்திலே, காவிரியாற்றுக் கருகிலேயுள்ளது. ஊர் சிறியதாயிருந்தாலும் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன் மிகப் புகழ்பெற்று இது விளங்கியது. இப்புகழுக்குக் காரணம் இங்கே ஒரு பெரியார் வாழ்ந்ததுதான். அப் பெரியார் யாரென்றால் சடையப்ப முதலியாரே.

தரும தேவதை

சடையப்பரைத் 'தருமதேவதை' என்றே அவர் காலத்துத் தமிழ் - அறிஞர்கள் அனைவரும் போற்றி வந்தனர். இவர் வாழ்ந்து மக்களுக்குப் பேருபகாரியாய் நின்று அவர்களை இனிது காத்து வந்தனர். இதனாலே, சிதம்பரத்திலே நடராஜப் பெருமான் களித்துக் கூத்தாடுதலை மேற்கொண்டாராம். உலகத்தைக் காக்குந் தொழிலையுடைய கருணாமூர்த்தியாகிய திருமாலும் காவிரி நதியினிடையே திருவரங்கத்திலே கவலையற்றுக் கண்வளர்தலை உளத்துக் கொண்டாராம். இவ்வாறாகத் தெய்வங்களுக்கெல்லாம் அவ்வவர் தொழிலினின்று விடை கொடுத்து, அவர்கள் கவலையை நீக்கி மகிழ்வூட்டி வந்த பெரியாரைத் தரும தேவதை என்று சொல்லுவது சிறிதும் வியப்பாகுமா? இந்த வியப்புரை எனது கற்பனையல்ல. முதலியாரது காலத்தில் வாழ்ந்த ஒரு சிறந்த புலவர்,

கருது செம்பொனின் அம்பலத்திலோர்
  கடவுள் நின்று நடிக்குமே
காவிரித்திரு நதியி லேஒரு
  கருணை மாமுகில் துயிலுமே
தருவுயர்ந்திடு புதுவை யம்பதி
  தங்கு மன்னிய சேகரன்
சங்கரன்தரு சடையன் என்றொரு
  தரும தேவதை வாழவே

என்று அருமையாகப் பாடியுள்ளார்,

வேளாளர் மரபினர்

முதலியார் பரம்பரைச் செல்வராயுள்ள வேளாளர் குலத்தில் தோன்றியவர். இவரது தந்தையார் சங்கர முதலியார் என்பவர். தமிழ்-இலக்கியவுலகில் சக்கரவர்த்தியாக விளங்கிய ஒட்டக்கூத்தர் அவரது இளமைப் பிராயத்தில் இச் சங்கர முதலியாரிடம் உதவித் தொழில் புரிந்து வந்தனர் என்று கர்ண பரம்பரை கூறும். இக் குடும்பத்தினரின் செல்வம் பிறர் வருத்தம் உணராது வாணிக முறையில் திரட்டி வந்த செல்வமன்று வேளாளருக்குக் குலத் தொழில் உழவு. தொல்காப்பியர்,

> வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
> இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி
>
> (மரபு-80)

என்பர். இத் தொழிலின் பெருமையைக் குறித்து வள்ளுவர் தமது திருக்குறளில் உழவு என்ற ஓர் அதிகாரத்தில் பல படப் பாராட்டியுள்ளார். உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணி போன்றவர் உழு தொழிலை மேற்கொள்ளும் வேளாளர்கள். 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' (1032) என்பது திருக்குறள். உலகத்தில் வாழ்வார் என்று சொல்லுதற் குரியவர்கள் உழுதுண்டு வாழ்பவர்கள்தாம். மற்றவர்களெல்லாம் பிறரைத் தொழுது, அதனால் தாம் உண்டு அவரைப் பின்பற்றிச் செல்கின்றவர்களே.

> உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர் (1033)

என்பது திருக்குறள். இக் குலத் தொழிலையே தங்கள் தொழிலாகக் கொண்டு, இம்மரபினர் நிலவளம் மிகுந்த பல காணிகளுக்கு அதிபராய் விளங்கினர்.

கம்பனும்,

> பண்ணை வெண்ணைச் சடையன்

என்றும்,

> கண்ணனும் ஆளுங் காணிப் பொன்னிநாடு

என்றும், முதலியாரது காணிச் செல்வத்தை விவரித்துக் கூறியுள்ளான்.

இவ்வாறு அகன்று பரவியிருந்த பண்ணை நிலங்களிலே விளைந்த விளைவு, விற்பனைக்குப் பயன்பட்டு மேன்மேலும் பொருளீட்டுதற்குக் கருவியாய் அமைந்துவிடவில்லை. ஏழை படும் பாடுகளை எல்லாம் நன்குணர்ந்தவர் சடையப்பர். அவர்களுடைய வறுமைப் பிணியின் கொடுமையையும் நன்கு தெரிந்தவர். எப்பொழுதும் அவ்வேழைகளுடன் பழகி வந்தவர்; அவர்களது எளிய வாழ்க்கை முழுதையும் தெளிய அறிந்தவர். பசிக் கொடுமை என்பது இன்னது என்று அவர்கள் அறியவொட்டாது செய்தலையே லட்சியமாகக் கொண்டவர். நூற்றுக் கணக்கான மக்களுக்குத் தினந்தோறும் பாலுஞ் சோறும் பரிந்தளித்தனர் என்று சோழமண்டல சதகம் கூறுகிறது:

அடையா நெடுங் கதவும்
அஞ்சல் என்ற சொல்லும்
உடையான்

என்று தமிழ் நாவலர் சரிதையில் இவரது வள்ளல் தன்மை புகழ்ந்து போற்றப்படுகிறது. கம்பன் இவரைத் 'தான வீரன்' என்று பொருள்படும் 'கொடை மீளி' என்றனன். அன்றியும், இவரை

மன்னவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன்

எனவும் கூறுகிறான். இச்செய்யுட் பகுதி, 'பசிப்பிணி மருத்துவன்' என்ற அருமையான சங்கநூல்-தொடரை நமக்கு நினைவூட்டுகிறது.

கல்வி கலைக்கு ஆதரவு

தம்மிடம் வந்த அனைவர்க்கும் பசி நீக்கிப் பொருளுதவி உபகாரம் புரிந்து வந்ததோடன்றி, கல்வி, கலை முதலியவற்றை வளர்த்தற் பொருட்டும் இவர் தக்க கொடையளித்து வந்தார். கம்பன்,

தேசங் கலந்த மறைவாணர் செஞ்சொ
லறிவாள ரென்றிம் முதலோர்
பாசங் கலந்த பசிபோ லகன்ற
பதகன் துரந்த உரகம்

என்று நாகபாசம் நீங்கியதனை வருணிக்கிறான்.

இங்ஙனம் ஏழைகளோடு ஏழையாய் வாழ்ந்து வந்தனர் என்பது மட்டும் அன்று அரசர்களுக்குச் சமானமாய், அவர்களும் வியந்து கொண்டாடும்படியாகவும் இவர் பெருக வாழ்ந்தவர். ஒரு முறை, சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்று முடியரசர் களையும் இவர் விருந்துக்கு அழைத்தனராம். விருந்தின் மேம்பாட்டினை யுணர்ந்த அவ்வரசர்கள் இவருக்குத் திரிகர்த்த ராயன் என்ற பட்டப்பெயரை அளித்தார்களாம், இவ்வாறு கூறுவது சோழமண்டல சதகம். இது போன்று பல கதைகள் சடையப்பரது காணி வளத்தையும் செல்வச் செழிப்பையும் கொடைத் தன்மையையும் நமக்கு விளக்குகின்றன.

மேற்குறித்தவாறு புகழ் பெருக வாழ்ந்த இப்பெரியாரிடத்தே நற்குணங்கள் யாவும் பொருந்தியிருந்தன. ஒரு செய்யுள் 'குணங் கொள் சடையன்' என்று இவரைக் கூறுகிறது. சொன்ன சொல் தவறாத கொடையாளி என இவரைக் கம்பன் புகழ்கின்றான்.

அண்ணல்தன் சொல்லே யன்ன
படைக்கலம் அருளி னானே

என்பது அகலிகைப் படலச் செய்யுள்.

கம்பனுடன் பெருநட்பு

இவரது அருள் வாழ்க்கையிலே அரும்பிய ஒரு நன்மலர்தான் இவருக்கும் கம்பனுக்கும் இடையேயுள்ள பெரு நட்பு. இளமை தொடங்கியே இந்நட்பு ஏற்பட்டது என நாம் கொள்ளலாம். சடையப்ப வள்ளல் மாணவராய்ப் பள்ளிச் சாலைக்குச் செல்லும் பொழுது கம்பன் ஏடு தூக்கிச் சென்றவன் என்று ஒரு கதை வழங்குகின்றது. இவரது வீட்டிலேயே கம்பன் வளர்ந்து வந்தவன் என்று சோழ மண்டலச் சதகம் தெரிவிக்கிறது. இவைகள் ஒருவரோடொருவர் அறிமுகமாதற்குப் பொருத்தமாம். நட்பின ராதற்கு வேறு காரணமிருந்தது. கம்பன் கல்வியிற் சிறந்தவன் ஆயினான்; அவனது அற்புத கவித்வ சக்தி சடையப்பரை வசீகரித்துவிட்டது; அவனது அறிவாற்றல் வியக்கத்தக்கதா யிருந்தது. இவற்றை யெல்லாம் சடையப்பர் அறிந்து மகிழ்வ தற்குத் தக்க சந்தர்ப்பங்களும் இருந்தன.

தாம் செல்வர் என்பதையும், கம்பன் தமது வீட்டில் ஏவல் புரிந்து வந்தவன் என்பதையும் அறவே மறந்தார். காலம்

செல்லச் செல்ல. இந் நட்பு முதிர்ந்து பெருகியது. இருவர் உள்ளத்திலும் திருமால் மீதுள்ள பக்தி பெருகத் தொடங்கியது. கம்பன் இவரைக் கண்ணன் என்றே கருதிவிட்டான். 'வெண்ணை வாழ் கண்ணன்' என்று இவரைப் புகழ்கிறான். இவரும் கம்பனைத் திருமாலடியாருள் சிறந்தவனாகக் கருதி அவன் மீது பக்தி கொள்ளலாயினர். இங்ஙனமாக அன்பு முதிர்ந்து நட்பாகி, நட்பு முதிர்ந்து பக்தியாகிப் பரிணமித்துவிட்டது.

இப்பக்தியின் முதிர்ச்சியால் பொதுப்பட யாரும் செய்ய இணங்காத செயலைக்கூடச் சடையப்பர் மனமுவந்து கம்பன் பொருட்டுச் செய்தனர் என ஒரு கதை வழங்குகிறது. கம்பனுக்கு அபூர்வமான மேதையோடு ஓர் இழுக்கும் இருந்ததாம். அவன் பொதுமகளிர் மீது இச்சை கொண்டு அவர்கள் வீட்டிற்குச் சென்று வருவதுண்டாம். இவ்வகைப்பட்ட பொதுமகளிருள் ஒருத்தி சிறப்பாகக் கூறப்படுகின்றாள். இவள்தான் திருவொற்றியூர் வல்லி என்பவள். ஒரு சமயம் இவ்வல்லியின் வீடு மழையினால் ஒழுக்கெடுத்ததாம். அச் செய்தியினைத் தெரிந்து சடையப்பர் அவள் வீட்டை ஓரிரவிற்குள்ளாகவே நெற் கதிரால் வேந்து ஒழுக்கு நீக்கினராம். இச் செய்தியை உணர்த்தும் செய்யுள் வருமாறு :

பொதுமாதர் வீட்டைப் புகழ்பெறவே செந்நெற்
கதிரானே வேய்ந்தருளுங் கங்கைப்—பதிநேர்
வருவெண்ணை நாடன் வருநா வலர்க்குத்
தருவா னவன்சடையன் தான்.

கம்பன்மீது பக்தி

இவ்வாறாக, சடையப்பர் கம்பன்மீது கொண்ட பக்தி, அவனது ஒழுக்கத்தினைச் சிறிதும் பொருட்படுத்தாது நாளுக்கு நாள் வளர்ந்தோங்கிப் பெருகியது.

மேலை வரலாறு சடையப்பரது பக்தியை மாத்திரம் புலப்படுத்துகிறது என்ற அளவில்தான் உண்மையாகலாம். அவ் வரலாறு குறிக்கும் குறைகள் கம்பனிடத்தே இருந்தன என்பதற்குச் சான்றில்லை. அவன் இராமன்மீதும், இராம சரிதத்தின் மீதும் முழு மனதும் வைத்திருந்தான். அவனது ஆசையெல்லாம் இராம சரிதம் பற்றியே நிகழ்ந்தது என அறிகிறோம். அவனது

சிந்தை இராம சரிதத்தையே சுற்றிச் சுழன்று வந்தது. அவனது சொற்கள் யாவும் இராம சரிதம் பற்றியே விளைந்தன. அவனது செயல்கள் யாவும் இராம சரிதத்தை முற்றுவிக்கும் பொருட்டே நிகழ்ந்தன. உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உகந்து வாழ்ந்தனன். தன்னை ஒரு பக்தனாகவே கம்பன் கருதினன் என்பது. 'பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ' என்ற அடியால் நமக்கு விளங்குகிறது. இவ்வாறு பக்தி என்னும் அனலால் குழைந்து உருகி நிற்கும் அவனது மனத்திலே வேறு எவ்வகைக் கருத்தும் புகுதற்கு இடமிருக்க முடியாது.

நினைவரும் குணங்கொ டன்றோ
இராமன் மேல் நிமிர்ந்தகாதல்

என வரும் அடி முதலியவற்றால் அவனது பக்தியின் திறம் உணரத் தகும். இப்பக்தியினாலே தனது அபூர்வ கவித்வ ஆற்றலைக் கொண்டு இராம சரிதத்தை இயற்ற வேண்டுமென்று கம்பன் கருத்துக் கொண்டனன்.

கம்பனுக்கு ஊக்கம்

இக்கருத்தினை முற்றுவிப்பதே தமது வாழ்வின் பெரு நோக்க மாகச் சடையப்பர் கொண்டனர். கம்பனது உள்ளத்தில் இடை யிடையே தளர்வு தோன்றாமல் போகவில்லை. வான்மீகியின் பெருமையை உணர்ந்தவர் யார்தாம் அவரோடு கவிதையில் போட்டியிட மனமொருப்படுவார்? பாடுவதற்கமைந்த தெய்வ சரிதத்தின் பெருமையை உணர்ந்தவர் யார்தாம் தம் கவித்வ சக்தி போதியதாகுமென்று இறுமாப்புக் கொள்வார்? இவற்றை எண்ணிக் கம்பன் மனம் தளர்ந்த காலங்களில் சடையப்ப வள்ளலே இவனுக்கு ஊன்றுகோலா யுதவினர். தம் உயிர் நண்பனது கவித்வ சக்தியின் பெருமையைப் பலவாறாக உணர்ந்த சடையப்பர் அடிக்கடி அவனை ஊக்கி மனத்தளர்வு அகற்றி இராம சரிதம் பாடும் செயலை மேற்கொள்ளச் செய்தனர்.

இராம சரிதம் முற்றுப் பெற்றது. அரங்கேற்றி உலகினர்க்கு அளிக்கும் செயலொன்றுதான் எஞ்சியிருந்தது. அவ்வாறு அரங் கேற்றிய இடம் சடையப்பரது திருவெண்ணெய் நல்லூரே என்று நாம் ஐயமின்றிக் கூறலாம். ஏனென்றால், கம்பன் தானே

நடையி னின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநி கழ்ந்த இராமாவ தாரப்பேர்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே

எனக் கூறுகிறான். இவ் அரங்கேற்று விழாவைச் சடையப்ப வள்ளல் எத்துணையன்போடு போற்றி யிருத்தல் வேண்டும் என்று இன்று நம்மால் அறிய முடியவில்லை. அவரது அன்பின் திறம் யாவராலேனும் உணரத்தக்கதா?

அன்பின் தன்மை

அன்பெனப் தொன்றின் தன்மை
அமரரும் அறிந்த தன்றால்

என்று கம்பனே கூறியுள்ளது, சடையப்ப வள்ளலின் பேரன் பினைத் தன் மனத்தகத்துக் கொண்டே போலும். இவ்விழாவை நாம் மனத்தினாலே பாவனை செய்து நோக்குவோம். சடையப்ப வள்ளல் தம் ஊர்ப் புறத்துள்ள ஓர் அழகிய பூஞ்சோலையிலே அவரது அன்பே வடிவெடுத்தாற் போன்ற பெருமை வாய்ந்த மணி மண்டபம் ஒன்று வனப்புத் தோன்ற அமைத்தனர் என்று நாம் கருதலாம். அப் பூஞ்சோலையிலே இயற்கை யன்னை நிசப்தமாய் அமைதியுற்று விளங்குகிறாள். மணி மண்டபத்தினுள்ளே கம்பன் தனது அறிவும், அன்பும், அரிய கவித்வ சக்தியும் தன் திருமுக மண்டபத்தே ஒளி சிறந்து தோன்ற, நடுவே வீற்றிருக்கிறான். அங்கு அவனை யடுத்து விரைந்தேற்கும் செவியும், சோர்வறியாத ஞாபகமு முடைய தமிழறிஞர் பலர் சூழ்ந்திருக்கின்றனர். வாயிற்படியினருகே நமது சடையப்ப வள்ளல் ஓர் ஆசனத்தின் மீது அமர்ந்தருளியிருந்து, எவ்வகை இடையூறும் வாராதபடி கவலையோடு நோக்கியும், வருவோரை உபசாரமொழி கூறி வரவேற்றும் அன்பு பூண்டு விளங்குகிறார். பூஞ்சோலையின் வாயிலிலே காவலாளர் சிலரும் நிற்கின்றனர். தமிழார்வம் தாங்க இயலாத தமிழ்ச் செல்வர்கள் சிலர் தமது ஆசை இழுத்துச் செல்லுதலால் அறிமுகமுள்ள காவலாளரைக் கடந்து சென்று, மணி மண்டபத்தின் அருகில் வந்து இராம சரிதமாகிய கீத-அமுதைச் செவிமடுத்தற்கு ஒற்றி நெருங்கியிருந்தனர்.

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' என்னும் மதுரத் திருவாக்கு கம்பனது இதயத்தினின்றும் பொங்கி எழுந்தது. மணி மண்டபம் முழுதும் நிறைந்து, பூஞ் சோலையிற் பரந்துலவி, மக்களிதயத்திலே குடிகொண்டு நின்றது இத்தெய்வத் திருவாக்கு. கம்பனது திருவுள்ளம் இராமாயண கீதமாகக் கரைந்து பெருகித் தமிழுலகில் பிரவகித்துப் பாய்வதாயிற்று.

அரங்கேற்று விழா

பல நாட்களாக இவ்வரங்கேற்று விழா நடைபெற்றிருக்க வேண்டும். கடைசி நாளன்று நமது சடையப்பர் மணி மண்டபத் தின் உள்ளாகச் சென்று, கம்பனை யடுத்து விளங்குகிறார். கருணையின் நிலையம் போல்கின்றார் கவிஞரின் புகலிடம் ஆகின்றார்; தமிழ் நாட்டுப் புலவர்கள் பலகாலமாக ஈட்டி வந்த புண்ணிய மனைத்தும் ஒருங்கு திரண்டு வடிவெடுத்தாற் போல அமர்ந்திருக்கின்றனர். இராம சரிதத்தின் இறுதிப் பகுதி அரங் கேறலாயிற்று, கைகேசியின் சூழ்வினையால் தடைபட்டு, சீதாபகரணம் என்னும் சோக சம்பவத்தால் இடையீடுற்ற பட்டாபிஷேகம் விமரிசையாய் நிகழும் கட்டம் வாசிக்கப் பெற்றது.

அரியணை அனுமன் தாங்க
    அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடை கவிக்க
    இருவரும் கவரி பற்ற
விரிகட லுலகம் ஏத்தும்
    வெண்ணெய்மன் சடையன் வண்மை
மரபுளோர் கொடுக்க வாங்கி
    வசிட்டனே புனைந்தான் மௌலி

என்ற கவிதை யோவியத்தைக் கம்பன் தீட்டினன். தீட்டிய அளவிலே, மணிமண்டபத்திலிருந்தோர் அனைவரும் சடையப்ப வள்ளலாரை நோக்கி அவரது பெருமையையே உள்ளத்தில் எண்ணினார்கள். வள்ளலோ தலைவணங்கி யிருந்தனர். இங்ஙனமாக, சடையப்ப வள்ளலாரின் உயிர்வாழ்வு நிரம்பிப் பொலிவதாயிற்று. அவரைக் கம்பன் தனது பேரிலக்கியத்தில் பத்து இடங்களில் புகழ்ந்துள்ளான். அவ்வாறு புகழ்ந்தது சிறிதும் வியப்பாகுமா?

7. கம்பனும் தமிழும்

கம்பன் உலக மகா கவி

கவிச்சக்கரவர்த்தி என்று கம்பனுக்கும் பட்டஞ் சூட்டினர் நம் மூதாதையர்; உலக மகா கவிகளுள் அவன் ஒருவன் என்று தற்காலத்து அறிஞர்களுள் ஒரு சாரார் மதிப்பிடுகின்றனர். இப் பெரும் பதவியை அவன் அடைவதற்கு எத்தனையோ அரிய இயல்புகளும், பக்குவ நிலைகளும் துணைபுரிந்திருத்தல் வேண்டும். முதலாவதாக, கம்பனுக்கு இயற்கையிலே அமைந்த பேரறிவு, பெருங் கவித்வ சக்தி முதலியன; இவற்றை அடுத்துச் செயற்கையில் அவன் பெற்றுள்ள பெருங்கல்வி, கேள்வி முதலியன, இப் பல்வேறு நிலைகளும் பல நூற்றாண்டுளாக நிகழ்ந்துவந்த பரிணாமங்களின் விளைவுகளாகும். இந்த நிலைகளில், சில கூறுகள் துணையாய் அமைந்திருக்கவேண்டும்; வேறுசில பகையாய் எதிர்த்திருக்கவும் வேண்டும். துணையை வளம்படுத்தி, பகையைப் புறங்கண்டு, தனது பேராற்றலை அவன் நிலையீட்டிருக்கவேண்டும். இங்கே தமிழ் காலக்கிரமத்தில் வளர்ந்து கம்பன் காலத்தே பக்குவமுற்ற வரலாறும் அவன் கையாண்ட தமிழினது இயல்பும் பற்றிக் கூறுவதே எனது நோக்கமாகும்.

போலி இலக்கியங்கள்

நமக்குக் கிடைத்துள்ள தமிழ் இலக்கியங்களில் மிகப் பழமையானவை சங்க நூல்களாம். இவற்றில் காணும் தமிழைக் குறித்துக் கூறுவதன் முன்னம் சில போலி இலக்கியங்களைக் குறித்துச் சில சொல்ல வேண்டுவது அவசியம். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்; பண்டைத் தமிழ் இலக்கியங்கள் மீது நம்மவர் பேராவல் கொண்டிருந்தனர். இந்த ஆவலைக்கண்டு சிலர் புதியனவாகப் புனைந்து நம் மூதாதையர்கள் தலை மீது சுமத்தலாயினர். அவற்றுள் ஒன்று 'செங்கோன்றரைச் செலவு' என்பது. இது தலைச் சங்கத்து நூலாம்! தாப்புலிப்பா என்ற யாப்பு வகையில் இயன்றதாம்! டெமி 16-அளவில் 8 பக்கங்கள் கொண்டதாய் இது வெளியிடப்பட்டது. இக்கற்பித நூலையும் இதன் தமிழையும் தமிழ் அறிஞர்கள் ஒப்பியதே இல்லை. இங்ஙனமே மொஹஞ்சதரோவின் அகழ் பரிசோதனையில்

கிடைத்த வரிக் கோவைகளைத் தமிழாகக் கொண்டு, அவற்றில் சில குறள்-பாக்கள் உள்ளன என்று செந்தமிழ்ப் பத்திரிகையில் ஓர் அறிஞர் எழுதினர். அவர்தம் கொள்கைக்கு அவர்தாமே சான்று? வேறு சான்று இல்லை. பண்டை எழுத்தாராய்ச்சி யாவரில் எவரும் அதனை ஒப்புக்கொண்டது இல்லை. அவ் அறிஞர் கொடுத்துள்ள குறள்-பாக்களை நோக்குபவர்கள் அவற்றைத் தமிழென்று சொல்லவும் துணியமாட்டார்கள். இவ்வகை ஆராய்ச்சி - வேடிக்கைகளை உண்மையெனக் கொண்டு மயங்கலாகாது. இவற்றை அறவே ஒதுக்குதல் வேண்டும்.

சங்க நூல்களுக்கு முற்பட்ட தமிழ்-இலக்கியம்

சங்க நூல்களுக்கு முன் தமிழ் இலக்கியங்கள் இல்லை என்று எண்ணுவது தவறு. தொல்காப்பியர் பண்ணத்தி முதலிய செய்யுளின் வகைகளைக் குறிப்பிடுகின்றனர். அவை இக்காலத்து மறைந்துவிட்டன. பெரும்பாலும் அவை சங்க நூல்களுக்கு முற்பட்டன என்று கொள்ளலாம். அவற்றைக் குறித்து யாதொரு விவரமும் அறியப்படாமையால், அவற்றையும் ஈண்டு நாம் ஒதுக்கிவைக்கவேண்டியதே.

மிகப் புராதனமான தமிழின் இயல்புகள் யாவை என்று இனி நோக்குவோம். இவ் இயல்புகளை உணர்வதில் செய்யுளில் பொருளை அறவே ஒதுக்குதல் வேண்டும். செய்யுள் வகையையும் சிறிதளவுதான் கவனித்தல் கூடும். தமிழின், போக்கைச் செய்யுள் வகை ஓரளவு நெறிப்படுத்துமாதலின். ஒரு பழந்தமிழ்ச் செய்யுளை எடுத்துக் கொள்வோம். இச்செய்யுள் புறநானூற்றிலே வருவது:

யாழொடுங் கொள்ளா, பொழுதொடும் புணரா,
பொருளொடும் வாரா ஆயினும், தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை;
என்வாய்ச் சொல்லும் அன்ன ஒன்னார்
கடிமதில் அரண்பல கடந்த
நெடுமான் அஞ்சிநீ அருளன் மாறே. (92)

ஔவையார் பாடிய இப் பாட்டின் தமிழைக் கூர்ந்து நோக்கினால் ஒரு சில தனி இயல்புகள் புலப்படுகின்றன. முதலாவது, இதில் பெரும்பாலும் தமிழ்ச்சொற்களே உள்ளன; ஒருவேளை 'அரண்' என்பது வடமொழித் தொடர்பு உடையதாயிருக்கலாம்.

வேறு வட சொல் ஒன்றும் காணப்படவில்லை. இரண்டாவது 'அன்ன' என்பதனாற் பெறப்படும் உவமம் தவிர, பிற அணியாதும் இல்லை. மூன்றாவதாக, இசையோடு பாடப் பெறுந்தன்மை இங்குக் காணுமாறு இல்லை. நான்காவது, தமிழுக்கு இயல்பாம் அமைந்த நேரிய பெருமித நடையோடு சொற்கள் செல்லுகின்றன. ஐந்தாவதாக, இயற்கையான பேச்சி லுள்ள இயற்கையோசையோடு (speech-rhythm) செய்யுள் நடை அமைந்துள்ளது. ஆறாவதாக, சொல்லும் பொருளும் ஒருங்கே இயைந்து சென்று, பொருள் முடிந்த இடத்துச் சொல்லும் முடிந்து நிற்கிறது; உயிர் நிலையாயுள்ள பொதுக் கருத்திற்குத் தக்க சொற்களே செய்யுளில் பயின்று வந்துள்ளன.

இங்கே குறித்த இயல்புகள் சங்கச் செய்யுள்கள் அனைத்திலும் காணப்படும் என்பது எனது கருத்தன்று. பெரும்பான்மை பற்றியே இங்குக் கூறியது. குறைந்த அடிகளையுடைய செய்யுள்களில் இவ் இயல்புகள் பெரிதும் காணப்படும். நிமிர்ந்த அடிகளையுடைய செய்யுள்களில் இவை ஓரளவில்தான் உள்ளன; சங்கச் செய்யுள்களில் மிகப் பழமையானவை தோன்றிய காலம் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகள் எனக் கொள்ளலாம். இக்காலத்திலேயே இச் செய்யுளில் வடசொற்கள் அருகி வந்துள்ளன. ஒட்டு முதலிய ஒரு சில அணிகளும் அங்கங்கே காணலாம்.

இசையோடு அமைந்த பாடல்கள்

வெகு விரைவிலே, பாடப்பெறும் தன்மை தமிழ்ச் செய் யுள்கள் சிலவற்றிற்கு அமைவதாயிற்று. கலிப்பா இங்ஙனம் இசை யோடு பாடப்பெறுந் தன்மை வாய்ந்ததால், இதனை 'முரற்கை' என நம் மூதாதையர்கள் வழங்கினர். 'செய்யுள் வரலாற்றில் அகவலும் வெண்பாவும் முற்படத் தோன்றியன; கலியும் வஞ்சியும் பிற்பட்டு எழுந்தன' எனச் சில ஆராய்ச்சியாளர் கருதுவதும் மேற்கூறிய நெறியே நோக்கினாலும் உண்மையாதல் காணலாம். செய்யுள் இனங்களில் தாழிசை என்ற பெயரும் இங்கு கூறியதனையே வற்புறுத்தும். கலித்தொகையில் தாழிசைப் பகுதிகள் எல்லாம் இசையோடு நன்றாகப் பாடுவதற் 5 அமைந்த பகுதிகளேயாம். உதாரணமாக,

ஆய்தூவி அனம்என
　　அணிமயிற் பெடை எனத்
தூதுணம் புறவெனத்
　　துதைந்த நின் எழில் நலம்
மாதர்கொல் மான்நோக்கின்
　　மடநல்லாய் நிற் கண்டார்ப்
பேதுறூஉம் என்பதை
　　அறிதியோ ? அறியாயோ ?

என்பதைப் பாடி நோக்குக. நம் முன்னோர்கள் மிகப் பூர்வ காலந்தொட்டே இசை முதலிய கலைகளைப் போற்றியவர்கள். யாழ் முதலிய இசைக் கருவிகள் மிகப் பழைய தமிழ் நூல் களிலேயே காணப்படுகின்றன. ஆடுதலும் பாடுதலும் அவர்கள் மனத்தைக் கவர்ந்தன. அரசர்கள், குறுநில மன்னர்கள் முதலியோர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்துவந்த ஓர் இனத்தவர் முற்காலத்து இருந்தனர். 'பாணர்' என்று இவர்களை வழங்கி வந்தனர். இவர்கள் பாடிய இசை வகை இக்காலத்து நம்மால் முழுவதும் அறியக்கூடவில்லை. எனினும் அதுபற்றி அறிய விரும்புவோர்க்கு அங்கங்கே குறிப்புக்கள் கிடைக்கின்றன. இசைகள் 'பண்' என வழங்கி வந்தன. ஐந்து நிலம் பற்றி இவை வகைப்படுத்தப்பட்டன. பண்டைப் பழங் காலத்தில் இந்த இசைகள் விரிவின்றி எளியனவாக அமைந் திருத்தல் வேண்டும்.

வடமொழிக் கலப்பு

இக்காலத்திற்குப் பின் வடநாட்டு மக்களது கூட்டுறவு பெருகத் தொடங்கிற்று. இதன் பயனாக வட சொற்கள் தமிழில் பெருகத் தொடங்கின. புது வரவினால் விளைந்த நன்மைகளை இனி நோக்குவோம்,

வடமொழிக் கலப்பினாலே தனித் தமிழினுடைய ஒலித் தன்மை நெகிழ்ச்சியுற்றது. தமிழ் மொழியின் ஒலி வேற்று மொழியின் ஒலியோடு நன்கு இயைந்து செல்ல முயன்று, தானும் சிறிது வேறுபட்டு, வேற்றொலியையும் சிறிது வேறுபடுத்தி, இரண்டும் நெருங்கி இழைந்து ஒன்று பட்டன. ஒன்றுபட்ட இந்த நிலையைக் கலவை - உலோகத் திற்கு ஒப்பாகச் சொல்லலாம். உலோகங்கள் தனித்திருக்கும்

நிலையில் அத்தனையாகப் பயன்படுவதில்லை. ஆனால் பிற உலோகங்களோடு கலந்து நிற்கும் கலவை நிலையில் பல புதுத் தன்மைகளைப் பெற்றுப் பல கருவிகளைச் செய்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இதனைப் போன்றே தனி நிலையிற் காட்டிலும் கலப்பு நிலையில் தமிழ் மொழி முன்னையினும் சிறந்ததொரு கருவியாக மாறிற்று. புற - உலகப் பொருள்பற்றிய கருத்துக்களோடு (objective) அக - உலகப் பொருள்களை (subjective) வெளியிடுந் தன்மையும் இக் கலப்பு நிலையில் பெருக்கமுற்றது.

பண் அமைந்த பாடலின் தோற்றம்

இங்ஙனமாக உணர்த்தும் ஆற்றல் மிகுந்தது ஒரு நன்மை; பிறிதொரு நன்மை ஒலியிழைவினால் உண்டாகிய இசை மிகுதி. இப் பிற்கூறிய தன்மையால் இசை கலந்த பாட்டுக்கள் தமிழில் தோன்றுவதற்குத் தக்கதொரு வாய்ப்பு ஏற்பட்டது. எளிய முறையிலிருந்த பண்கள் இப்பொழுது முன்னையினும் விரிவடைந்து சில பல நயங்களுடையனவாய் வளர்ச்சியுற்றிருக்க வேண்டும். இந்நிலையில் முருகவேள் முதலிய தெய்வங்கள் மீது யாழ்க் கருவிக்குத் தக இசைத்த பாடல்கள் தோன்றியன ஆதல் வேண்டும். கற்று வல்லோன் ஒருவன் பாடப் பிறர் கேட்டு இன்புறும்படியாய் இவைகள் அமைந்தன. பரிபாடல் - செய்யுட்கள் இங்ஙனம் பிறந்தனவே. இப் பாடல்களுக்குப் பண் அமைத்தவர்கள் முதலியோர் தம் பெயர்கள் நமக்கு அகப்படுகின்றன. பண்களின் இயல்புணர்ந்து செய்யுள்களை அவற்றிற்கிசைய இசையூட்டினமையால், பெரியதோர் வேறுபாடு தமிழ் மொழியில் ஏற்பட்டது. தமிழ் முறுக்கவிழ்ந்து நெகிழ்ச்சியுற்றது.

மெய்யாப்பு மெய்யார மூடுவார், வையத்துக்
கூடுவார், ஊடல் ஒழிப்பார், உணர்குவார்.
ஆடுவார், பாடுவார், ஆர்ப்பார், நகுவார், நக்கு
ஓடுவார், ஓடித் தளர்வார், போய் உற்றவரைத்
தேடுவார் ஊர்க்குத் திரிவார் இலராகிக்
கற்றாரும், கல்லா தவரும், கயவரும்,
பெற்றாரும், பெற்றாற் பிழையாத பெண்டிரும்,
பொற்றேரான் தானும், பொலம்புரிசைக் கூடலும்
முற்றின்று வையைத் துறை.

(பரிபாடல் - மா நிலந். 19 - 27)

இச் செய்யுட் பகுதியைப் புறநானூற்றுச் செய்யுள் ஒன்றனோடு ஒப்பிட்டால் இங்கே கூறியதன் உண்மை அறியலாம்.

பரிபாடல்

இந்நெகிழ்ச்சியுடன், உலக வழக்கிலிருந்த சொற்களும் சொல் வடிவங்களும் செய்யுட்களில் இடம் பெறலாயின. உதாரணமாக, ஈதா (8, 60), தோழம் (வானாரெழிலி, 70), தோக்கை (22, 49) முதலிய சொற்களையும், என்பாய் (8, 62) இதனை (18. 12), இதுவோ (8, 63) முதலிய சொல் வடிவங்களையும், ஏறுமாறு (18, 8) முதலிய மரபுத் தொடர்களையும் பரிபாடலிற் காணலாம். இதன் காலம் சுமார் கி.பி. 7-ஆம் நூற்றாண்டெனக் கொள்ளலாம்.

வைதிக சமயக் கிளர்ச்சி

ஏறத்தாழ இந்நூற்றாண்டிலேயே, தமிழ் நாட்டில் புதியதொரு கிளர்ச்சி தோன்றத் தொடங்கி, இந்நூற்றாண்டின் இடைப்பகுதியில் உச்ச நிலையை அடைந்தது. சைவ வைஷ்ணவங்களாகிய வைதிக சமயக் கிளர்ச்சியே தான் இங்குக் கருதுவது சங்க காலத்தின் தொடக்கத்திலேயே வைதிக சமயத்தின் தொடர்பு தமிழ்நாட்டில் இருந்தமை வெளியாகின்றது. பாண்டியருள் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியும், சோழருள் ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் இதற்குச் சான்று பகர்வர். சேரருள் செல்வக் கடுங்கோ வாழியாதன்.

உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தணர் அருங்கலம் ஏற்ப, நீர்பட்டு
இருஞ்சேறு ஆடிய மணல்மலி மூற்றம் (54)

உடையவன் என்று பதிற்றுப்பத்து உரைக்கும் ஆகையால் இவனும் வைதிகப் பற்றுக் கொண்டவனே. பௌத்த ஜைன மதங்களும் தமிழ் நாட்டில் அக்காலத்தில் இடம் பெற்றிருந்தன. இளம்போதியார், உலோச்சனார் முதலிய பெயர்கள் இதற்குச் சான்றாம்.

காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர், புகையினர் தொழுவனர், பழிச்சிச்
சிறந்துபுறங் காக்குங் கடவுட் பள்ளியும்

(மதுரைக்காஞ்சி, 465-467)

T. 6272

வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்
பூவும் புகையும், சாவகர் பழிச்ச......
ஆன்று அடங்கு அறிஞர்......நறும்பூஞ் சேக்கையும்
(வெ 475-487)

என்பன முறையே பௌத்தப் பள்ளியையும் ஆருகதப் பள்ளியையும் குறிப்பன. ஆனால் இம்மதங்கள் தொடக்கத்தில் அருகி வழங்கி, அரசர்கள் வாழ்ந்த தலைநகரங்கள் சிலவற்றில் பின்பற்றப்பட்டன. அக்காலத்து இவை ஒன்றோடு ஒன்று வாதத்தில் மாத்திரம் இகலி வந்தன. தமக்கு அரசாங்கத்தையும் குடிஜனங்களையும் துணைக் கொண்டனவாகத் தெரியவில்லை. சுமார் கி. பி. 650-இல் இந்நிலைமை மாறிவிட்டது. இம்மதங்களைத் தழுவிய தமிழ் மக்களின் தொகை வர வர மிகுதியாயிற்று. வடநாட்டிலிருந்து வைதிக சமயிகள் திரளும், பிற சமயிகள் திரளும் கால அடைவில் அதிகரித்தன.

மதப் போராட்டம்

இவர்களுக்கும் இவர் மதங்களுக்கும் அரச பலமும், குடியினர் பலமும் அவசியம் என்று தோன்றி விட்டது. மதப் போராட்டம் தொடங்கியது. வைதிக சமயம் மேலோங்கியது. நாடு முழுவதும் வைதிக சமயப் பெரு வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. அரசர்களும் குடிகளும் இதனை ஆதரிக்கத் தொடங்கினர்; முடிவில் இச்சமயம் இராசாங்க சமயமாகப் போற்றப்பட்டது.

தேவாரத் தமிழ்

இச் சமயத்திற்குரிய ஆலயங்கள் தமிழகத்தில் பல இடங்களிலும் தோன்றிச் செழிக்கலாயின. சமயாச்சாரியர்களாக அப்பர், சம்பந்தர் முதலினோர் விளங்கினர். இவர்கள் அங்கங்கே உள்ள கோவில்களுக்கு அடியார்களின் திரள்களோடு சென்று தரிசனம் செய்து, திருப்பாடல்கள் இயற்றி, அப் பாடல்களைப் பண்ணில் அமைத்து யாழிலே பாடி வந்தனர். இப்பாடல்களை உடன் சென்ற அடியார்களும் திரள் திரளாக நின்று பாடிப் பரப்பினர். பண்ணோடு இயைந்த பாடல்கள் தமிழ் நாடெங்கும் முழங்கி, பண் முறையும் தமிழிசையும் பெரிதும் வளர்ச்சியுற்றன. வைதிக சமயங்கள் வடநாட்டிற்குரிய ஆகலாலும், அவற்றைத் தமிழ் நாட்டிலேயே செழிக்கச் செய்தோர் பெரும்

பாலும் சம்பந்தர் முதலிய அந்தணர்கள் ஆதலாலும், வடமொழி நூலுணர்ச்சி தமிழ் நாட்டில் பெருகி வந்த காரணத்தாலும், வட சொற்கள் மிகுதியாகத் தமிழில் புகுந்தன. இசையின் இனிமைக்கும் இச் சொற்கள் மிகப் பயன்பட்டிருக்க வேண்டும். தமிழ்ச் சொற்களில் முன்னையினும் அதிக வேறுபாடுகள் உண்டாயின. மொழியும் மிகமிக நெகிழ்ந்து பொது ஜனங்கள் எளிதில் உணரத்தக்க பக்குவநிலையை அடைந்தது. எளிமையும், உணர்ச்சி வேகமும் இசையினிமையும் தமிழின் சிறப்பியல்புகளாக முடிந்தன. ஓர் உதாரணம் காட்டுகிறேன்.

> ஈண்டுச் [செய் நல்வினை ஆண்டுச்சென்று உணீ இயர்
> உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனென்
> (புறம், 174)
> தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்
> (புறம், 214)

என வருவனவற்றில் எளிமையும் உணர்ச்சி வேகமும் இல்லாமை உணரலாம். இதற்கு மாறாக,

> மாசில் வீணையும், மாலை மதியமும்,
> வீசு தென்றலும், வீங்கிள வேனிலும்,
> மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
> ஈசன் எந்தை இணையடி நீழலே (5, 90, 1)

என்ற அப்பர் திருவாக்கிலே பேரின்ப வெள்ளத்தில் முழுகித் திளைக்கும் உணர்ச்சி உவமானங்களின் மூலமாக எளிதில் புலப்படுகிறது. இத் தேவாரத் தமிழின் எளிமையும், உணர்வு ததும்பும் தன்மையும், சங்கத் தமிழின் செவ்விய நேரிய பெருமிதமும், ஒருங்கு அமைந்து, பண்டைத் தமிழின் அழகிற்குப் பேரெல்லையாக விளங்குவது தமிழ் வேதமாகிய திருக்குறள்.

> இனிய உளவாக இன்னாத கூறல்
> கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று (100)

என்ற திருக்குறளில் மேற்காட்டிய இயல்புகள் நன்கு திகழ்வன வாதல் காணலாம். வடநூற் கருத்துக்களும் வடசொற்களும் மிகுதியாகப் பயின்ற பல செய்யுட்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சிற்சிலவற்றிலும் தேவாரம் முதலிய அருளிச் செயல்களிலும் உள்ளன. உதாரணமாக,

மத்த மயில்அன்ன சாயலாய் மன்னியசீர்த்
தத்தன் சகோடன் சவுத்திரன்-புத்திரி
புத்திரன் பொய்யில் கிரிதன் அபவித்தன்
இத்திறத்த எஞ்சினார் பேர்

என்னும் ஏலாதிச் செய்யுளையும் (31)

மங்க லக்குடி யீசனை மாகாளி
வெங்க திர்ச்செல்வன் விண்ணொடு மண்ணும் நேர்
சங்கு சக்கர தாரி சதுர்முகன்
அங்கு அகத்தியனும் அர்ச்சித் தாரன்றே

என்னும் தேவாரப் பாடலையும் (5, 73, 3) நோக்குக.

காவியத் தமிழ்

தேவார காலத்தை (7, 8-ஆம் நூற்றாண்டுகளை) அடுத்துத் தமிழிற் புகுந்து அதனை இயக்கி வந்த சில சக்திகளை இனி நாம் கவனிக்கவேண்டும். வடமொழி உணர்ச்சி தமிழ்வாணர் களிடையே மிகப் பரந்துவிட்டது. இதன் பயனாகச் செய்யுளினங் களும் அணிகளும் மிகுதியாகப் பெருகின. விருத்தங்கள் தமிழில் புகுந்ததை இங்கே சிறப்பாகச் சொல்லுதல் வேண்டும். பண் பற்றி எழுந்த தேவாரப் பாடல்கள் இவ் விருத்தங்களுக்குத் தோற்றுவாய் செய்துவிட்டன. விருத்தங்கள் புகவே, காவியங் களும் புகுந்தன. இக்காவியங்களில் தமிழ் ஒரு புதிய இளமையைப் பெற்றுவிட்டது. மிதமாக வடசொற்களைக் கலந்து, ஓசையையும் இனிமையையுமே தலை சிறந்த இயல்புகளாகக் கொண்டு, புதிய சுவை ஒன்றைத் தமிழுக்கு இக்காவியங்கள் ஊட்டின. செய்யுட் பொருள் தமிழ் மொழியின் இனிய ஓசை நயத்தினுள்ளே மறைந்து போயிற்று. இந்த ஓசை யின்பம் கற்போர் நெஞ்சை அள்ளின. இனிமையிற் சிறந்த தமிழ்ச் சொற்கள், இனிமையிற் சிறந்த வடசொற்கள், இன்பினால் இழைத்த செஞ் சொல் - தொடர்கள் : இவை இத்தமிழுக்குப் புத்தழகு தந்தன. தமிழ் நடை என்னும் ஓர் புத்துணர்ச்சி தனித்து விளங்குவதா யிற்று. சூளாமணி, சிந்தாமணி முதலிய காவியங்கள் இதற்குச் சான்று பகரும்.

மாம்பொழில் மருங்கு சூழ்ந்த
 மணிச்சிலா தலத்து மேலால்
காம்பழி பணைமென் தோள்மேல்
 கருங்குழல் துவண்டு வீழப்
பூம்பொழில் விளங்கத் தோன்றும்
 பொன்னிதழ் மறிந்து நோக்கித்
தேம்பொழி செய்யு ளின்பம்
 செவிமுதற் சேர்த்து வாரும்.

(சூளாமணி, சுயம். 85)

பொழிந்துகு காதல் பூண்டு
 புல்லுகை விடாது செல்லக்
கழிந்தன இரண்டு திங்கள்
 காளையும் மற்றோர் நாளால்
பிழிந்துகொள் வனைய பெண்மைப்
 பெய்வளைத் தோளி தன்னோடு
அழிந்துவீ ழருவிக் குன்றில்
 ஆய்மலர்க் காவு புக்கான்.

(சிந்தாமணி, 1503)

பழமை பற்றிய காவியங்கள்

ஒரு சிலர் இங்ஙனம் புதுமையில் மனம் விரைந்து நின்றனர் வேறு சிலர் பழமையிலே மனத்தைச் செல்ல விடுத்து. பழைய சங்கத் தமிழை நெகிழ்வித்து, காவியங்கள் இயற்றினர். இவற்றுள் சிறந்தன பெருங்கதையும், சிலப்பதிகாரமுமாம்.

பன்மணி விளங்கும் பள்ளிக் கட்டிலும்
பொன்னின் அடைப்பையும் பூரண கலசமும்
கவரியும் கடகமும் கதிர்முத் தாரமும்
நிகரின் மாண்கல நிதியொடு நிறைந்த
ஆரியச் செப்பும் யவனமஞ் சிகையும்

(உஞ்சை 32, 72-76)

என்பது பெருங்கதை. இங்கே வடமொழியும் தமிழும் தம்மின் இயைந்து இன்னோசை மிக்கு அழகுறச் செல்வது உணரலாம்.

இந் நெகிழ்ச்சியும் இனிமையும் தமிழ் தனித்து இயங்கும் காலத்தும் பதம் முற்றி விளைந்து இன்பம் பயக்கின்றன. உதாரணம் வருமாறு :

இடந்தொறும் பல்கிய மன்னர்போல
வரம்பில் பன்மீன் வயின் வயின் விலங்கிப்
பரந்துமீது அரும்பிய பசலை வானத்து

(உஞ்சை 33, 48-50)

வரிப்பாடல்கள்

இப்பெருங்கதை வட நூலின் வழித் தோன்றியது. இதிலுள்ள நயங்களெல்லாம் அமையத் தமிழ்க் கதை ஒன்றைத் தழுவி இயற்றியது சிலப்பதிகாரம். இக் காப்பியத்தில் இரண்டு சிறப்புக்கள் தனிப்பட எடுத்துக் கூறத்தக்கன. செய்யுட் பொருளுக்கும் உணர்ச்சி ஆற்றலுக்கும் தக்கபடி தமிழும் தமிழ் நடையும் அமைந்து, பல இடங்களிலும் அழகு ததும்பி இன்பம் விளைக்கின்றன. வழக்குரை காதையை எடுத்துக்காட்டாகக் கூறலாம். பிறிதொரு சிறப்பு வரிப் பாட்டுக்களைப் பற்றியது, இவை தேவாரம் போன்று செயற்கையாகப் பண் ஊட்டியன என்று கருதமுடியவில்லை. இயற்கையிலே இசையின்பமும் உணர்ச்சி நலமும் உள்ளன என்று தோன்றுகின்றன. தமிழ்க் கடலிலே விளைந்து உலகு முழுதும் போற்ற விளங்கிய ஒண்முத்துக்கள் போன்று, தமிழ் நாட்டுப்புறங்களில் விளைந்து பழுதறத் திருந்திய இன்னிசை நன்முத்துக்களென இவற்றைக் கூறலாம். உதாரணமாக,

தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க;
அம்மென் இணர அடும்புகாள்! அன்னங்காள்!
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்.
அன்னம் துணையோடு ஆடக் கண்டு
நென்னல் நோக்கி நின்றார் அவர் நம்
பொன்னேர் சுணங்கிற் போவார் அல்லர்

(சிலப். 7, 32, 45)

என்பனவற்றைப் பாடிப் பாடித் தன்னை மறக்கச் செய்யும் தமிழ் இன்பத்தை நுகரலாம்,

சோழர் மொழி பேணியது

இக்காவியங்கள் தோன்றிய காலத்திற்குச் சிறிது முன்பின்னாக, பல்லவர்களும் பிற் சோழர்களும் தமிழ் நாட்டில் அரசு புரிந்து வந்தார்கள். சோழர்கள் தங்கள் வெற்றித் திறத்தால் தங்கள் இராச்சியத்தைப் பெருக்கி வந்தனர்; முடிவில் ஏகாதிபத்தியமும் பெற்றார்கள். வட நாட்டிலும் இவர்கள் வெற்றிக் கொடி பரவியது. கங்கை, கடாரம் முதலிய பிரதேசங்களிலும் கடலுக்கு அப்பாலுள்ள சுமத்ரா, ஜாவா முதலிய தீவாந்தரங்களிலும் இவர்கள் தம் சேனா பலத்தால் புகழோடு விளங்கினார்கள். கல்வியைப் போற்றி வளர்த்தவர்களுள் இவர்கள் முதன்மைப் பதவி பெற்றார்கள். பாரபக்ஷமின்றித் தமிழையும் வடமொழியையும் பேணி வந்தார்கள். இரு மொழிகளிலும் பல துறைகளிலே நூல்கள் வெளிவந்தன. தமிழ்க் கவிவாணர்கள் இவர்கள் புகழைக் கவிகளில் அமைத்துப் போற்றினர். கலம்பகம், பரணி முதலிய பிரபந்தங்கள் தோன்றத் தொடங்கின. சங்கச் செய்யுட்கள் பெரும்பாலும் அரசர் முதலியோரைப் போற்றின; ஆதலால் அவர்கள் எளிதில் பொருள் உணருமாறு ஒரு சீரிய நேர்மை அவற்றில் பாய்ந்திருந்தது. தேவாரம், நாலாயிரம் முதலியன மக்கள் திரளாகக் கூடிப் பண்ணுடன் பாடுதற்கு அமைந்தன; உணர்ச்சி வேகத்தையே தம் தலைமை நோக்கமாகக் கொண்டன; காவியங்களோ எனில் கல்வியாளர்க்கே இயற்றப்பட்டன; ஆதலால் பொது மக்களுக்குப் பொருள் உணர்தற்கு அரியவாயின. பிரபந்தங்கள், அரசர், வள்ளல் முதலியோர் பொருட்டுத் தோன்றின; எனவே இவற்றில் பயின்ற தமிழிலும் சங்கச் செய்யுட்களிற் போன்று ஒரு நேர்மை காணப்பட்டது. ஆனால் கற்றுவல்லோர்களும், புலவர்களும் நிரம்பிய அரசவையிலே ஆங்குள்ளார் பலரும் வியந்து கொண்டாட இக்கவிகள் பாடப்பெற்றன. ஆகவே கவிஞர் தமது கல்வி ஆற்றலைக் காட்ட வேண்டிய சமயங்களும் அடிக்கடி நேர்ந்தன. இங்ஙனம் தோன்றிய தமிழ் கல்வியாளர்களும் உணர்தற்கு அரிதாய் முடிந்தது

தமிழில் செயற்கை நலம் அதிகரித்தல்

பலவகை அணிகளையும் கவிஞர் கையாண்டனர். இயற்கைத் தமிழைக் கைவிடுத்துச் செயற்கைத் தமிழைப் போற்றுவாராயினர். தமிழும் செயற்கை நலன்கள் மிகுந்து வளரலாயிற்று; எனினும் இயற்கை நலத்தைப் பேணியவர்களும் அருகியிருந்தனர். ஆதலால் இயற்கை நலன்கள் ஒருபாலும் செயற்கை

நலன்கள் ஒருபாலும் தமிழில் செழித்து வரலாயின. அணி நூலார் இவ்விருவகை நலன்களையும் முறையே வைதர்ப்ப நெறி என்றும் கூறுவர். வைதர்ப்ப நெறி ஒரு சிலராலும், கௌடநெறி வேறு சிலராலும் போற்றப்பட்டன. கௌடநெறி முதன்மை பெற்று வந்தது என்றுதான் சொல்லவேண்டும்,

சொல் அதிகமாதல்

கி. பி. ஆறாம் நூற்றாண்டளவில் பக்தி - இயக்கம் தமிழ் நாட்டில் புகுந்தது என்று கூறினேன். அதன் வழியாக வந்து சேர்ந்த ஒரு விளைவை இங்கே சொல்ல விரும்புகிறேன். பக்தி எத்தனை கனிவுற்றுச் சிறந்திருந்தாலும், அது ஒழுக்கமென்னும் நன்மரத்தில் உண்டாக வேண்டுமென்று நம் முன்னோர்கள் கொண்டனர். இதன் பயனாக ஒழுக்க நூல்கள் தோன்றின. வடமொழி ஸ்மிருதிக் கருத்துக்களும் ஆசாரம் பற்றிய நியதிகளும் தமிழ் நாட்டில் கைக்கொள்ளப்பட்டன. தமிழ் மொழியும் இவற்றால் சிறிது விரிவு பெற்றது. நல்லொழுக்கமே யன்றி, உலக இயல்பு, இறைவன் இயல்பு, உயிர் இயல்பு என்பனவற்றைக் குறித்த தத்துவ விசாரணைகளும் பக்தி விளைவுக்கு உரந்தருவன என்று நம்மவர்கள் கருதினார்கள். இதனால் பலவகையான சமய சாஸ்திர உணர்ச்சியும் அவசியமாயிற்று. இச்சாஸ்திரங்கள் வடமொழியிலிருந்தமையால் இவற்றைக் கற்பது அறிஞர்கள் தமது கடமையெனக் கொண்டனர். இவற்றின் மூலமாகச் சாஸ்திரங்கள் பலவற்றிற்குரிய வட சொற்கள் தமிழில் இடம் பெறலாயின. இங்கே கூறிய இருவகைச் சொற்களும் தமிழுக்கு இன்றியமையாதனவாய் முடிந்தன.

இச் சொற்களோடு அமையாதபடி, மேலும் மேலும் வட சொற்களே வந்து பெருகிக் கொண்டிருந்தன. இதன் காரணங்கள் எளிதில் ஊகிக்கத்தக்கன. வடமொழி மிக்க செல்வாக்குடையதாய் நம் நாட்டில் அமைந்தது. கணிதம் முதலிய பல சாஸ்திரங்களும் அம்மொழியில் இருந்தன. பல்வேறு மதங்களுக்குரிய பிரமாண நூல்களும் பிறவும் அம்மொழியிலேயே அமைந்திருந்தன. தமிழ் நாட்டில் மட்டுமன்றிப் பாரத தேசம் முழுமையிலும் அது போற்றி வளர்க்கப்பட்டது. வழக்கில் இல்லாமையால் அது தெய்வ மொழியென்று கருதப்பட்டது. எல்லா மொழிக்கும் அது தாய்மொழி எனவும் எண்ணத் தொடங்கிவிட்டனர்.

கரை கடந்த வட சொற் பெருக்கு

வீரசோழியம் முதலிய நூல்களும் தோன்றின. தமிழ் முதலிய மொழிகளில் வட சொற்களைச் சேர்த்துக்கொள்வது பெருமையெனவும் கருதினர். இச் சொற்கள் நாளடைவில் மேன்மேலும் தமிழில் அதிகரித்து வந்தன. இவற்றை அளவுக்கு மிஞ்சிக் கலந்து புதியதொரு மொழி நடையையும் வகுத்தனர். இதுதான் மணிப்பிரவாள நடை என்று சொல்லுவது. வசனத்தில்தான் இந்நடை பெரும்பாலும் வழங்கி வந்தது. கி. பி. 10 முதல் 15-ஆம் நூற்றாண்டு முடிய, இந்நடை தமிழ்நாட்டில் பிரபலமாக வழக்கில் இருந்தது. சிலாசாசனம் ஒன்றில் ஒரு செய்யுள் (தஞ்சை ஜில்லா, செம்பியன் மகாதேவியில் முதல் இராஜராஜனது மூன்றாம் ஆண்டில், அதாவது கி, பி, 998-இல் பொறித்தது.) இந் நடையில் உள்ளது. இதைத் தவிர வேறு எடுத்துக்காட்டு இல்லாமையால் தமிழ்ச் செய்யுளில் இந்நடை இடம் பெறவில்லையென்று துணிதல் பொருந்தும். தொடக்கம் முதற்கொண்டே இந் நடையைத் தமிழ் மக்கள் ஆதரிக்கவில்லை. பிற்காலத்தில் இது அறவே வழக்கொழிந்து விட்டது. தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியவற்றில் இந்நடை புகுந்து அம் மொழியிலுள்ள செய்யுட்களிலும் ஏறி, முடிவில் அம்மொழிகளையே கவளீகரித்துவிட்டது.

வடசொற் பெருக்கைத் தமிழ் எதிர்த்து வெல்லுதல்

தமிழ் மொழி ஒன்றுதான் வடமொழிப் பெருக்கை எதிர்த்து நின்று அணையிட்டுத் தடுத்தது. எனினும், பாரத தேசம் முழுமைக்கும் கலைப் பண்பு ஒன்றே எனக் காட்டுதற்குரிய இயல்புகள் சிலவற்றை இந்நடையின் மூலம் தமிழ் பெற்றது. தமிழின் சொல்வளம் சிறந்தோங்கியது; தன்னியல்பு குன்றாது தமிழின் மேனியும் செழித்தது. தொடர்ந்து பெய்த பெருமழையால் பெருக்கெடுத்து கரை புரண்டு சென்று. மிகுதியும் கலங்கி, பின் அணையிட்டுத் தடுத்து வெள்ளத்தைப் பிரித்து விடுதலாலும் காலக்கிரமத்தில் நீர் வடிந்துவிடுதலாலும் பெருக்கு நீங்கி, குடைந்தாடுதல் முதலிய பயன் பெறுதற்குத் தக்கபடி அளவு சுருங்கி, தெளிவுற்று இனிது செல்லும் ஆறு போன்றதாயிற்று நமது தமிழ் மொழி.

12-ஆம் நூற்றாண்டில் தமிழ்

12-ஆம் நூற்றாண்டளவில் தமிழ் மொழி இந்நிலையை அடைந்தது. பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு சக்திகளால் இயக்கப்பட்டு, பலவாறாகப் பெருங் கவிஞர்களால் கையாளப் பட்டு வந்தமையினாலே பல நல்லியல்புகளைத் தமிழ் பெற்றது. குறித்த பொருளை நேரிதின் உணர்த்தும் நேர்மையும் பேச்சின் இயற்கை ஓசையும், நெகிழ்ந்த ஓசை இனிமையும், கல்லார்க்கும் கற்றவர்க்கும் ஒருங்கே இன்பமூட்டி உணர்வைப் பெருக்குகின்ற பண் இனிமையும் பொருளை விழுங்கி நின்ற நடை இனிமையும் தமிழில் இயைந்தன. இவையேயன்றி, அணிகட்கு அணியாம் இயற்கையழகும், பலவகைக் கருத்துக்களையும் உயர்த்த வல்ல ஆற்றலும் அமைந்தன. இந்நல்லியல்புகளோடு தமிழ் அமைந்து விடவில்லை. வடசொற்கள் மிகுதியாகக் கலந்து தமிழின் இயற்கை நலத்தைக் கெடுக்கக்கூடிய நிலைமையும் இருந்தது. ஒரு சில ஆடம்பர நெறிகளால் தமிழின் இயற்கைச் சுவை கெடுகின்ற நிலைமையும் இருந்தது. இவற்றைப் புறக்கணித்து விட்டால், இயற்கை நெறி, நேர்மை, தெளிவு, சுருக்கம், இனிமை, அழகு, சுவை, ஆற்றல் முதலிய நல்லியல்புகளைப் பெற்று நன்கு திருந்தியமைந்த கருவியாகத் தமிழ் உருப்பெறத் தக்கதாய் நின்றது.

கம்பனது தோற்றம்

இந்நிலையில் கம்பன் தோன்றினன். கல்வியிற் பெரியவன் கம்பன் என்பது ஆன்றோர் மொழி. இதற்கு ஏற்பத் தமிழ்க் கல்வியிலும் வடநூற் கல்வியிலும் ஒப்பற்ற புலமை எய்தினன். தமிழினின்று ஒழிக்கவேண்டிய இயல்புகளை ஒழித்தனன். வளர்க்க வேண்டும் நல் இயல்புகளை வளர்த்தனன். தனது பெருங் கவித்வ சக்தியினாலே, தமிழ்க் கருவியைத் திருந்த அமைத்து அற்புதத் தெய்விகக் கருவியாக முற்றுவித்தான்.

இயற்கைத் தன்மை

கம்பனது தமிழின் இயல்பைச் சில செய்யுட்களால் விளக்கு கிறேன். இயற்கை நெறி என்ற தொடரால், பாத்திரங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் தக்கபடி எழும் இயற்கைப் பேச்சினது இயற்கை ஓசை இங்கே குறிக்கப்படுகிறது. தீயால் இலங்கை அழிந்து மீண்டும் இயற்றப்பட்ட பின்னர் இராவணன் தன் மந்திரி முதலானவர்களோடு ஆலோசனை செய்கின்றான்.

மந்திராலோசனை சபையிலுள்ளோரில் கும்பகர்ணனைப் போன்று இராவணன் மீது அன்பு கொண்டார் யாரும் இலர் என்றே சொல்லலாம். ஆனால் இராவணனது புன்தொழிலை அவன் மிகவும் வெறுத்தான். இவ்வெறுப்பை எத்தனை இயற்கையாகக் கம்பன் காட்டுகிறான் என்பது.

ஆசில்பர தாரம்அமையச்சிறை அடைப்பேம்;
மாசில்புகழ் காதல்உறு வேம்; வளமைகூரப்
பேசுவது மானம்; இடை பேணுவது காமம்;
கூசுவது மானுடரை; நன்றுநம கொற்றம்!

(யுத். மந்திர, 52)

என்ற செய்யுள் கொண்டு உணரலாம். இங்கே இயற்கை ஓசை சிறிதேனும் தவறியதாயின் கும்பகர்ணனது நோக்கமே தோன்றாது ஒழிந்துவிடும். இங்ஙனமே வாலி இராமனைப் பழித்துக்கூறும் செய்யுட்கள் இயற்கை - ஓசையோடும் வேகத்தோடும் வருகின்றன. ஓர் உதாரணம்:

வீரம்அன்று, விதி அன்று, மெய்ம்மையின்
வாரம் அன்று, நின் மண்ணினுக் கென்னுடல்
பாரம் அன்று, பகை அன்று, பண்பொழிந்து
ஈரம் அன்று இது என்செய்த வாறுநீ?

(வாலி, 84)

நேர்மைத் தன்மை

இவ் இயற்கைத் தன்மையோடு நெருங்கிய தொடர்புடையது நேர்மை. அருமை மைந்தனும் சிறந்த போர் வீரனுமாகிய இந்திரசித்து 'சீதையை விட்டுவிடுக' என்று சொல்லத் துணிந்த பொழுது இராவணன் கூறுவதைக் காண்க;

முன்னையோர் இறந்தா ரெல்லாம்
இப்பகை முடிப்பர் என்றும்,
பின்னையோர் நின்றா ரெல்லாம்
வென்றனர் பெயர்வர் என்றும்;

உன்னை நீ அவரை வென்று
தருதியென் றுணர்ந்தும் அன்றால்;
என்னையே நோக்கி யான் இந்
நெடும்பகை கொண்ட தென்றான்.

(இந்திரசித்துவதை. 8)

இங்கே குறித்த இயல்புகள் இரண்டும் பாத்திரத்தினது இயல்பை ஓரளவு பொறுத்தன. தமிழின் இயல்பை மட்டும் குறித்தன தெளிவும், இனிமையும் அழகும் ஆம்.

தெளிவு சுருக்கம்

தெளிவினைக் கம்பன் 'சவியுறத் தெளிந்து' எனக் கூறினன். ஒரு பிரெஞ்சு ஆசிரியர் உரை நடையைக் குறித்து எழுதும்போது அதன் தனி இயல்பாக, தெளிவு, மிக்க தெளிவு, இன்னும் மிக்க தெளிவு அமைதல் வேண்டும்' என்றனர். இச் செய்யுளை நோக்குங்கள் :

உற்ற போதவன் உள்ளக் கருத்தெல்லாம்
கொற்ற வீரன் உணர்த்தென்று கூறலும்,
'முற்ற ஓதியென்? மூர்க்கன் முடித்தலை
அற்ற போதன்றி, ஆசை அறா'தென்றான்

(அங்கதன் தூது. 43)

இதிலே தெளிவும் சுருக்கமும் ஒருங்கே அமைந்துள்ளன.

சம்பக நறும்பொழில் இயற்றருண வஞ்சிக்
கொம்பழ கொசிந்தன எனச்சிலர் குழைந்தார்:
வம்பளவு கொங்கையொடு வாலுகம் வளர்க்கும்
அம்பவள வல்லிகள் எனச்சிலர் அசைந்தார்.

(தைலமாட்டு. 15)

இனிமை அழகு

இங்கே வடமொழியும், தமிழும் ஒன்றோடொன்று குழைந்து தழுவி நின்று மிக்க இனிமை பயத்தலை எளிதின் உணரலாம் சீதை தோன்றிய அற்புதத்தை

உழுகின்ற கொழுமுகத்தின் உதிக்கின்ற கதிரினொளி
பொழிகின்ற புவிமடந்தை திருவெளிப்பட் டெனப்புணரி
எழுகின்ற தெள்ளமுதோடு எழுந்தவளும் இழிந்தொதுங்கத்
தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினாள்.

(கார்முகப், 17)

என்ற செய்யுள் அற்புதமாகத் தெரிவிக்கின்றது. விபீஷணன் முன் இராமன் தோன்றிய கோலத்தை,

கற்றைவெண் நிலவு நீக்கிக்
கருணையால் அமிழ்தங் காலும்
முற்றுறு கலையிற் றாய
முழுமதி முகத்தி னானைப்
பெற்றவன் அளித்த மோலி
இளையவன் பெறத்தான் பெற்ற
சிற்றவை பணித்த மோலி
பொலிகின்ற சென்னி யானை.

(விபீடணனடைக், 136)

என்ற செய்யுள் புலப்படுத்துகின்றது. இரண்டு செய்யுட்களிலும் அழகு ஒழுகுகின்ற தன்மை நன்கு காணலாம்.

சுவை

மேற்குறித்த நான்கு இயல்புகளும் தனித்தனிச் செய்யுட்களில் காணப்பெறுவன. இங்ஙனமேயன்றித் தொடர்ந்து செல்லுகின்ற செய்யுட்களில் தோன்றும் நலங்களை நோக்குவோம். இவற்றுள் முதலாவது கூறத்தகுவது சுவை. பலவகையான உணர்ச்சிகளுக்கும் தக்கபடி இச்சுவையைக் கம்பனது தமிழ் மேற்கொண்டு நம்மை உணர்ச்சி உலகில் செலுத்தித் தன்னிலை அழியச் செய்கிறது. கும்பகர்ணன் மடிந்தான் என்பதைக் கேட்டுத் துடித்துப் புலம்புகிறான் இராவணன். தான் சீதை முன்பு இரந்து கெஞ்சிக் கொண்டிருப்பதையும் உணரவில்லை. சீதையின் உள்ளத்திலோ களிப்புப் பொங்குகிறது, சோகத்திலே மூழ்கியிருந்தவள் இப்பொழுது மகிழ்ச்சியால் உடல் தடித்தாள். கம்பன் தமிழைப் பாருங்கள்.

அண்டத் தளவும் இனைய பகர்ந்தழைத்துப்
பண்டைத்தன் நாமத்தின் காரணத்தைப் பாரித்தான் ;
தொண்டைக் கனிவாய் துடிப்ப மயிர்பொடிப்பக்
கெண்டைத் தடங்கண்ணாள் உள்ளே கிளுகிளுத்தான்,

வீங்கினாள் கொங்கை ; மெலிந்த மெலிவகல
ஓங்கினாள் ; உள்ளம் உவந்தாள் ; உயிர்புகுந்தாள் ;
தீங்கிலாக் கற்பிற் றிருமடந்தை சேடியாம்
பாங்கினாள் உற்றதனை யாரே பகர்கிற்பார் !

(மாயாசனகப், 87, 88)

பிரம்மாஸ்திரத்தால் மயங்கியிருந்த இராமனைக் காணச் சீதையைப் போர்க்களத்திற்கு இட்டுச் செல்லுகின்றனர் அரக்கர்கள். இறந்தவன் போல் கிடக்கும் தன் நாயகனைக் கண்டதும் அவள் எய்திய அவல நிலைமையை வர்ணிக்கிறான் :

மங்கை அழலும் வானாட்டு
  மயில்கள் அழுதார் ; மழவிடையான்
பங்கில் உறையும் குயில் அழுதாள் ;
  பதும மலர்மேல் மாதழுதாள் ;
கங்கை அழுதாள் ; நாமடந்தை
  அழுதாள் ; கமலத் தடங்கண்ணன்
தங்கை அழுதாள் ; இரங்காத
  அரக்கி மாருந் தளர்ந்தழுதார்.

விழுந்தாள் ; புரண்டாள் ; உடல் முழுதும்
  வியர்த்தாள், உயிர்த்தாள், வெதும்பினாள்.
எழுந்தாள், இருந்தாள், மலர்க்கரத்தை
  நெரித்தாள், சிரித்தாள், ஏங்கினாள் ;
கொழுந்தா ! என்றாள் ; அயோத்தியர்தங்
  கோவே ? என்றாள் ; எவ்வுலகும்
தொழுந்தாள் அரசே ! ஓ' என்றாள் ;
  சோர்ந்தாள், அரற்றத் தொடங்கினாள்.

(பிராட்டி களங், 5, 8)

மாயாசனகன் ஒருவனை இயற்றி அவனைச் சீதை முன் கொணர்ந்து, அவளை உடம்படுத்த மகோதரன் முயல்கின்றான். இச்சனகனைத் தன் தந்தையென நினைத்து அவனைக் கோபித்துக் கூறும் தமிழைப் பாருங்கள் :

அறங்கெட வழக்கு நீங்க அரசர் தம் மரபுக் கான்ற
மறங்கெட மெய்மை தேய வசையுற மறைகள் ஓதும்
திறங்கெட ஒழுக்கங் குன்றத் தேவரும் பேணத் தக்க
நிறங்கெட இனைய சொன்னாய் சனகன் கொல்? நினையின், ஐய!

வழிகெட வரினுந் தத்தம் வாழ்க்கை தேய்ந் திறினு மார்பம்
கிழிபட அயில்வேல் வந்து கிடைப்பினும் ஆன்றோர் கூறும்
மொழிகொடு வாழ்வ தல்லால் முறைகெடப் புறநின் றார்க்கும்
பழிபட வாழ்கிற் பாரும் பார்த்திவ ருளரோ! பாவம்!

நீயும்நின் கிளையும் மற்றிந் நெடுநில வரைப்பும் நேரே
மாயினு முறைமை குன்ற வாழ்வெனோ? வயிரத் திண்தோள்
ஆயிர நாமத் தாழி யரியினுக் கடிமை செய்வேன்
நாயினை நோக்கு வேனோ நாண்துறந் தாவி நச்சி?

(மாயாசனகப். 65-67)

தமிழின் ஆற்றல்

சுவையை அடுத்து, இரண்டாவதாக நோக்கத்தக்கது தமிழின் ஆற்றல். இதுதானும் நூல் முழுவதிலும் காணப்படும் இயல்பே எனினும், ஒரு சில இடங்களில் கம்பன் தன்னையே வென்று விடுகின்றான். விபீஷணனை அடைக்கலமாக ஏற்றுக்கொள்ளுதல் பற்றி அனுமன் கூறியனவும் (விபீடணனடைக். 87—105), விபீஷணனும் கும்பகர்ணனும் போர்க்கலத்தில் சந்தித்து, தத்தம் லட்சியங்களைக் கூறி, பிரியா விடை பெறும்பொழுது கூறியனவும் (கும்பகர்ணன் வதை. 128-167) தண்டமிழின் மேலாந்தர மாவன. 'அழகெலாமொருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்;'

கம்பன் தமிழ்

இங்ஙனமாக, இராமாவதாரம் என்ற கலைத் தெய்வக் கோயிலைக் கம்பன் இயற்றியுள்ளான். தமிழ் மக்களுக்கு அழிவற்ற கலைச் செல்வத்தை வைப்பு நிதியாகச் சேரத் திரட்டி அளித்துள்ளான். நமது அருமைத் தமிழை நலன்கள் பலவும் முற்றிக் கனிந்த இனிய அழகிய கருவியாகப் பதப்படுத்தியுள்ளான். அவனது அற்புதக் கவித்வப் பேராற்றல் நமது மொழியிலே படிந்து. தனிப்பட்ட சிறப்போடு 'கம்பன் தமிழ்' என்பதாக விளங்குவதாயிற்று.

கம்பன் தமிழ்நெறி தழைத்தோங்குக !

8. கம்பனின் பாத்திரப் படைப்பு

உத்தம சகோதரன்

மக்கள் வாழ்விலே சகோதர பாசத்தை அறுப்பதற்கு எத்தனையோ கடுமையான பகைகள் உள்ளன. இளமையிலே, ஒருவன் தன்னிடத்திற் காட்டினும் தம் உடன் பிறந்தவனிடம் பெற்றோர்கள் அதிக அன்பு காட்டுகிறார்கள் என்பதனால் அவனை வெறுக்கத் தொடங்குகிறான். பின் கல்வி பயிலும் பருவத்தில் தன்னைவிடத் தன் உடன்பிறந்தவன் கெட்டிக்காரனாயிருக்கிறான் என்ற பொறாமைக் காரணத்தால் அவன்மீது மனவேற்றுமை கொள்கிறான். பின் இருவருக்கும் மணமாகிறது; மனைவியர் மூலமாகச் சிறு சிறு சச்சரவுகள் விளைகின்றன; மனத்தாங்கல்கள் அதிகப்படுகின்றன. பிதிரார்ஜிதத்தைப் பிரிவினை செய்யுங்காலம் வருகிறது. இந்தப் பிரிவினைகளால் எத்தனையோ வேற்றுமைகள் நேரிடுகின்றன. சில வேளை நியாயஸ்தலத்துக்குச் செல்லும் அவசியம்கூட ஏற்படலாம். பின்னால் முற்றும் பிரிந்துவிடும்நிலைமை வருகிறது. இளமையில் ஏற்பட்ட சிறு பிளவு வரவரப் பெரிதாகி இருவருக்கும் இடையே அகாதமான பெரும் பிளவை உண்டு பண்ணிவிடுகிறது. இத்தனை இடையூறுகளையும் பொருட்படுத்தாது நீடித்திருக்கும் சகோதர பாசம் மிகவும் அருமை என்றுதான் சொல்ல வேண்டும். இங்ஙனம் இடையூறுகளே மலிந்து பெருகி, விஷப்பூண்டுகள் நிரம்பிய வனாந்தரம்போல் ஆகிவிடுகிறது நமது வாழ்வு. இவ்விஷப் பூண்டுகளை எரித்தழித்துவிடும் தூய பேரொளிப் பிழம்பாகப் பிரகாசிக்கிறது, இராமபிரானது திவ்விய சரித்திரம்.

மேற்கூறியன போன்ற விஷப்பூண்டுகள் செழித்து வளர்வதற்கு இராமனது சரித்திரத்தில் இடம் இல்லையென நினைக்கவும் முடியாது. நிரம்ப இடம் இருந்தது.

முதலாவது, அவனும் அவன் உடன் பிறந்தோர்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் அல்லர். பரதன் கைகேயினுடைய பிள்ளை: இலக்குமணனும் சத்துருக்கனும் சுமித்திரையின்

பிள்ளைகள்; இவ்வகை உடன் பிறப்பினர்கள் எவ்வளவு ஒற்றுமையுடன் வாழக்கூடும் என்பது தற்காலத்துக் குடும்பங்கள் சிலவற்றை நோக்கினால் விளங்கும்.

இரண்டாவது, தந்தையாகிய தசரத சக்கிரவர்த்தி இராமன் மீது விசேஷ அன்புகொண்டு அவனைத் தமது உயிரென்றே பாவித்தார். விசுவாமித்திர முனிவருடன் இராமனும் தம்பியும் சென்ற காலத்து

மன்னன் இன்னுயிர் வழிக்கொண்டால் என
(கையடை 20)

என்று கம்பன் கூறுகிறான். இங்கே மன்னன் என்றது தசரத சக்கரவர்த்தியை. இங்ஙனமே கைகேயியும் தன் புத்திரனாகிய பரதன் மீது தனிப்பட்ட அன்பு வைத்திருந்தாள் என்பது சரித்திர நிகழ்ச்சியாய் அறிகிறோம்.

மூன்றாவதாக, தமது அரசுச் செல்வத்தை இராமனுக்கே அளித்து அவனுக்கே முடிசூட்டுவதாகத் தசரதர் நிச்சயித்து விட்டார். சகோதரர்களுக்குள் எவ்வளவு பகையை அரசுரிமை மூட்டக்கூடியது என்பதைப் பல தேசத்துச் சரித்திரங்களாலும் நாம் நன்கு அறிவோம்.

நான்காவதாக துர்ப்புத்தி சொல்பவர்களும் இருந்தனர். மந்தரை சூழ்ச்சி ஒன்றே இதை நன்கு எடுத்துக் காட்டவல்லது.

ஐந்தாவதாக, அயோத்தி நகரத்து நன்மக்கள் இராமனிடத்து விசேஷ அன்பு காட்டி வந்தார்கள். உண்மையில் அவர்கள் இராமனைத் தங்கள் உயிரெனவே கொண்டிருந்தார்கள். கம்பன் பல இடங்களிலும் இவ் உண்மையைக் கூறியிருக்கிறான். இராமன் தன் தந்தையைக் காணச் செல்லுமிடத்து நகர மக்கள்,

இருகையும் இரைத்து மொய்த்தார்
இன்னுயிர் யார்க்கும் ஒன்றாய்ப்
பொருவருந் தேரிற் செல்லப்
புறத்திடைக் கண்டார் போல்வார்
(கைகேயி சூழ்வினை, 83)

ஆயினர். இராமன் வனஞ் செல்கின்றபொழுது எல்லா மக்களும் அழுது புலம்பி உடன் தொடர்கின்றனர். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் இச்செய்தியை

பெருமான் ஏவல் அல்லது யாங்கணும்
அரசே தஞ்சமென்று அருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்திபோல
(சிலப். xiii 63-65)

என்ற அடிகளால் புலப்படுத்துகிறார்.

ஆறாவதாக, இப் பொதுமக்களைப் போலவே முனிவர்களும் இராமன்மீது பெரும்பற்றுக் கொண்டிருந்தனர். விசுவாமித்திரர்

நால்வரினும் கரியசெம்மல் ஒருவனைத் தந்திடுதி
(கையடை. 10)

என்று கேட்டனர்; பலை, அதிபலை என்ற மந்திரங்களை அவனுக்கே உபதேசித்தனர்; வில்வித்தை முதலியவற்றைக் கற்பித்தனர். இவர் தாமே இராமனது வில்லாற்றலைக் குறித்து,

தீய்ந்தேறச் சுடுகிற்கும்
படைக்கலங்கள் செய்தவத்தால்
ஈந்தேனும் மனமுட்க
இவற்கேவல் செய்குனவால்
(குலமுறை கிளத்து. 28)

என்று வியந்து கூறுகிறார்.

காட்டில் தவஞ்செய்து வாழும் முனிவர்களும் இராமனைத் தெய்வமாகக் கொண்டு வரவேற்று உபசரிக்கிறார்கள்.

பண்ணி னோக்கும் பராவமுதைப் பசுங்
கண்ணி னோக்கினர் உள்ளங் களிக்கின்றார் (கங்கை. 11)

என்று இவர்களைப்பற்றிக் கம்பன் உணர்த்துகிறான்.

இங்ஙனமாக இராமபிரான்மீது அவன் தம்பியர்கள் அனைவரும் அத் தம்பியர்களுக்குச் சார்பாக உள்ளவரும் பொறாமை

கொள்ளுதற்குரிய காரணங்கள் பல இருந்தன. எனினும் பொறாமைத்தீ உண்டாகவில்லை. மந்தரையால் இத் தீ கைகேயியின் உள்ளத்தில் மூட்டப்பட்டதே யன்றி இயல்பாகக் கிளர்ந்ததன்று. இப் பொறாமை குறித்து வள்ளுவர்

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும் (குறள். 168)

என்றனர்.

இராமனது அரும் பெருங்குணங்கள்

காரணங்களிருந்தும் பொறாமைத் தீ ஏன் உண்டாகவில்லை? முற்காலத்தில் தமையன்மாரைத் தந்தைபோலப் பாவித்துத் தம்பியர்கள் ஒழுகவேண்டும் என்பது விதியாயிருந்தது. ஐம்பெருங் குரவர்களுள் ஒருவனாக அவனைப் போற்றுவது வழக்கம். இக் காரணத்தால் ஊரார் பழிப்புக்கு அஞ்சித் தம்பியர் பொறாமையைக் காட்டாது அடக்கிவைத்திருந்தார்களா? இல்லை. இதற்குக் காரணமாயிருந்தன இராமபிரானது அரும் பெருங் குணங்களேயாம். இவனது தம்பியரது பெருங்குணங் களும் காரணங்கள் என்று கூறலாம். பொருள் முதலியவை களிலே பற்றுச் சிறிதுமின்றித் தூய உள்ளம் படைத்த புருஷோத்த மனாய் விளங்கியவன் இராமன். இவ் அரிய குணம் விளங்கிய இடம் பலரும் அறிந்ததே. இராமனுக்கு முடிசூட்டுந் தறுவாயில், கைகேயி இவனை அழைத்து 'பரதன் பூமியாளட்டும்; நீ சடை முடி புனைந்து காடு செல்' என்று கூறினள். இராமனது உள்ளத் திலே யாதும் தடுமாற்றம் இல்லை. கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்ற வருத்தம் சிறிதும் இல்லை. தான் ராஜ்யபாரத்திலிருந்து விடுதலை பெற்றதாகக் கருதி உள்ளம் மிகவும் மகிழ்ந்தான். இவனது திருமுக மண்டலம் முன்னிலும் அதிக ஒளியுற்று விளங்கியது.

இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கு
எளிதே யாகும்
செப்பருங் குணத்து இராமன் திருமுகச்
செவ்வி நோக்கில்,
ஒப்பதே முன்பு; பின்பு அவ்வாசகம்
உணரக் கேட்ட
அப்பொழுது, அலர்ந்த செந்தா மரையினை
வென்ற தம்மா! (கைகேயி சூழ்வினை 108)

தன் தம்பி அரசு பெறுவதில் இராமனுக்குப் பெரு மகிழ்ச்சி. ஆனால் இவனது நிழல்போன்ற இலக்குமணனுக்குப் பெருங் கோபம். இக்கோபத்தையும் தணித்து விடுகிறான் இராமன். கோசலாதேவியைப் பரதன் காணும்பொழுது.

கைகயர் கோமகள் இழைத்த கைதவம்
ஐயநீ அறிந்திலை போலுமாம் என்றாள்

(பள்ளி படை, 95)

என்று அவள் கூறுவதனால் அவளும் பரதன்மீது சிறிது சந்தேகம் உற்றாள் எனத் தோன்றுகிறது. பரத்துவாச முனிவரும், வஞ்சனையால் தன்தாய் பெற்ற அரசை ஏற்றுக்கொள்ளக் கூடியவள்தான் பரதன் என நினைத்தாரென்று வான்மீகி கூறுகிறார். கம்பன்

எடுத்த மாமுடி சூடிநின் பால்இயைந்து
அடுத்த பேரர சாண்டிலை; ஐயநீ
முடித்த வார்சடைக் கற்றையை முசுதூசு
உடுத்து நண்ணுதற்கு உற்றுளது யாதென்றான்

(கிளைகண்டு 22)

என்று கூறியமைகின்றான்.

ஆனால் இராமனோ சிறிதும் ஐயுறவு கொண்டதேயில்லை. இவ் உண்மை இவனது ஒப்பற்ற பெருங்குணத்தை நன்றாக எடுத்துக் காட்டுகிறது. அன்பு அன்பை விளைவிக்கும். பரதன் இவனது அன்புக்கு முழுதுந் தகுதியானவன் என்பதில் சந்தேகமே யில்லை. அத்தகுதி இவனது செயல்கள் ஒவ்வொன்றிலும் பிரதி பலிக்கிறது:

தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!

(குகப். 35)

எனக் குகன் கூறுவதே இதற்குச் சான்று :

இங்ஙனமாக, இராமன் தான் எய்திய அரசைத் தன் தம்பி பரதனுக்கு அளிக்க இசைந்தான்; அத் தம்பியின்மீது கோபம் கொண்டோரை யெல்லாம் தணிவித்தான்; அவன்மீது ஐயங் கொள்ளுதல் சிறிதும் தகாதென வற்புறுத்தினான். தான் திரும்ப நாடு மீண்டு அரசை ஏற்றுக்கொள்ளத் தன்னைப் பரதன் வேண்டிய பொழுது, மறுத்துப் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வாழத் துணிந்தான். இவையெல்லாம் உத்தம சகோதரத்துவத் தைக் குன்றின் மேலிட்ட தீபம்போற் காட்டும் அருஞ்செயல்கள்.

இவற்றிற் கெல்லாம் சிகரம் வைத்தது போன்ற ஓர் ஆச்சரிய மான செயலைக் கம்பன் கூறுகின்றான். இராவண வதம் நிகழ்ந்தது; சீதை மீட்கப்பட்டனள். ஆனால் அவள் துன்பம் இன்னும் நீங்கிய பாடில்லை. ஏனெனில் இராமன் அவளை ஏற்றுக்கொள்ள மறுத்தான். தீயில் வீழ்ந்து அவள் தன் உயிரை மாய்த்துக்கொள்ளுதலே தக்கதென்றனன். அவ்வாறு வீழ்தலும், அக்கினிக் கடவுள் அவளை ஏந்திச் சென்று, குற்றம் அற்றவள் எனச் சான்று கூறி, அவளை ஏற்கச் செய்தான். பிரமனும் சிவனும் அவள் புகழ்க்குரியவன் என்றனர். பின்பு, சிவனது ஏவலின்படி, தசரதர் இராமன் முன்பு தோன்றி, அவனையும் சீதையையும் தழுவி நின்று துன்பமகற்றி அவனுக்கு வேண்டும் வரம் கேட்கும்படி விரும்பினர். அதற்கு இராமன் கூறியது இச் செய்யுள் :

ஆயினும் உனக்கு அமைந்த தொன்று
 உரையென, அழகன்
தீயள் என்று நீ துறந்த என்
 தெய்வமும் மகனும்
தாயுந் தம்பியு மாம்வரந்
 தருகெனத் தாழ்ந்தான்;
வாய் திறந்தெழுந்து ஆர்த்தன
 உயிரெலாம் வழுத்தி (மீட்சி 129)

தசரதர் புத்திரசோகத்தால் வருந்திக் கிடந்தபொழுது கைகேயியைக் குறித்து 'இவள் என் தாரம் அல்லள்; துறந்தேன். அரசாளுதற்கு வரும் பரதனையும் என் மகனென்று கருதேன்' என்று கூறினார். இவ் இரண்டு கொடும் பழிகளும் நீங்கிப் பரதனைத் தமது புத்திரனென்று தசரதர் அங்கீகரிக்கும்படி இராமன் வரம் வேண்டிப் பெற்றனன். இவனன்றோ உத்தம

சகோதரன்! இவனது பெருமையை உலகத்துள்ள உயிர்களெல்லாம் புகழ்ந்து வாழ்த்தி ஆரவாரித்ததில் என்ன வியப்பு?

லட்சியத்திற்கு எடுத்துக்காட்டு

உத்தம சகோதரத்வம் ஒரு லட்சியம். இந்த லட்சியத்திற்கு எடுத்துக் காட்டாக உள்ளவன் இராமன். ஆனால் இந்த லட்சியத்தையும் கடந்துசென்று இதைக்காட்டிலும் பலமடங்கு சிறந்ததான லட்சியமொன்று இருக்கிறது. இத்தகைய அரிய லட்சியத்தையும் தன் வாழ்க்கையில் நிகழ்த்திக் காட்டியவன் இராமன். அயோத்தி நீங்கிக் கங்கைக் கரையில் குகன் என்னும் வேடனோடு நட்புக்கொண்டான். அந்நட்பு சகோதர உரிமையாகக் கனிந்தது. கிஷ்கிந்தையில் வந்ததும் சுக்கிரீவனோடு நட்பு ஏற்பட்டது. அவனும் உடன்பிறப்பாக முற்றிவிட்டான். பின்னர் விபீஷணன் சரண்புகுந்தான். அவனையும் சகோதரனாகவே ஸ்வீகரித்தான் இராமன். இங்ஙனமாக நேர்ந்த ஸர்வ ஸகோதரத்வத்தையும் கம்பன்,

குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின்
    குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்; எம்முழை
    அன்பின் வந்த
அகனமர் காதல்ஐய! நின்னொடும்
    எழுவர் ஆனேம்;
புகலருங் கானந் தந்து புதல்வரால்
    பொலிந்தான் நுந்தை

(விபீஷணன் அடைக்கலப், 146)

என்ற செய்யுளால் விளங்க வைத்துள்ளான்.

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற தமிழர் பண்பாடு இங்கே சிறந்து விளங்குகிறதல்லவா?

அந்நிய தேசத்தினரை அடிமையாக்கி அவர்களைச் சுயநலத்திற்குப் பயன்படுத்தும் இந்தக் காலத்தில், உலகம் முழுவதையும் கவளீகரித்து யுகமுடிவுபோல் மன்னுயிர்களை நாசஞ்செய்யும் மகா யுத்தம் நிகழ்கிற* இந்தக் காலத்தில், இராமனால் நிலையிடப்பட்ட இந்த லட்சியங்கள் இரண்டும் மக்களினத்தாரால் பெரிதும் போற்றத்தக்கன.

---

* இக்கட்டுரை 1944-இல் எழுதப்பட்டது.

2. இலக்குமணன்

இராமனோடு உடன் பிறந்தவர்கள் மூவரென்பது உலகப் பிரஸித்தம். இராமசரிதம் எழுதிய கம்பன் இம்மூவர் தவிர வேறு மூவரையும் தன் உடன் பிறந்தோராக இராமன் கொண்டருளினா னென்று கூறினன். பிற்கூறிய மூவராவார்: குகன், சுக்கிரீவன், விபீஷணன் என்பார். குகன் வேட்டுவ மரபினன்; சுக்கிரீவன் குரங்கினத்து அரசன்; விபீஷணன் அரக்கர்கள் தலைவன். இன்னோருடைய நிலைமைகளை நோக்கும்போது, பிறப்பு எவ்வகை வேறுபாடுகளையும் கருதாது குணமேம்பாடு ஒன்றனையே கருதி இராமபிரான் தோழமை பூண்டருளினா னென்பது நன்கு விளங்கும். அவனது ஸௌலப்ய குணம் இங்கே இனிது புலப்படுகின்றது. 'நினைவருங் குணங் கொடன்றோ இராமன்மேல் நிமிர்ந்த காதல்' (குகப். 37) என்றனன் கம்பனும். இக்காலத்தே பெரு நோக்காகக் கொள்ளப்படும் ஸர்வஜீவ 'ஸகோதரத்துவம், (Universal brotherhood) என்னும் உயரிய கொள்கையைக் கம்பனும் தனது திருமனத்தால் கூர்ந்து உணர்ந் துள்ளானென்பதை எண்ணுந்தோறும் நாம் பெரிதும் மகிழ்ச்சி கொள்கிறோம்.

தனித்துரிய சிறப்பு

உடன்பிறந்த மூவருள் இலக்குமணனுக்கே தனித்துரிய சிறப்பொன்று உளது. இவனே தன் காலம் அனைத்தையும் இராமனோடு உடன் கழித்தவன். பிள்ளைப்பருவ முதற் கொண்டே இருவரும் ஒன்றாக ஓடியாடித் திரிந்தவர்கள். கம்பனும்

மைதவழ் பொழில்களும் வாவியுமருவி
நெய்குழ லுறுமிழை யெனநிலை திரிவார்

(திருவவதாரப். 130)

எனக் கூறுகின்றான். பதினான்கு வருஷ காலம் இருவரும் வனப் பிரதேசங்களில் பகைவருக்கிடையில் அவர்களோடு போராடி வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இராமன் துன்புற்று வருந்தும்

நிலைகளிளெல்லாம் இலக்குமணனும் உடனிருந்து அத்துன்பத்தில் தானும் உழந்திருக்கின்றான், எல்லையற்ற இடர்களையெல்லாம் இருவரும் ஒக்க அனுபவித்திருக்கிறார்கள். இராமன் பொருட்டாகவே இவ் இடர்களையெல்லாம் இலக்குமணன் ஏற்றனனேயன்றித் தன் பொருட்டன்று. உத்தம உடன்பிறப்பிற்கு லட்சியமாகவும் மேல் வரம்பாகவும் இலக்குமணன் அமைந்துள்ளான் என்பது தெள்ளிது.

உத்தம லட்சியம்

உடன்பிறப்பிற்கு உத்தம லட்சியம் நமது பண்டை நூல்களிலே பல இடங்களிலும் கூறப்பட்டிருக்கிறது.

> அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
> நிகரில் குரவரிவ் வைவர் இவ்ரிவரைத்
> தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே
> யாவரும் கண்ட நெறி (16)

என்பது ஆசாரக் கோவை. இங்கே தமையனை ஐங்குரவருள் ஒருவனாக வைத்தெண்ணுவதும் அவனைத் தெய்வத்தைப் போலத் தொழுது ஒழுகுக என்று கூறுவதும் கவனிக்கத்தக்கன. 'எழுக' என்று செய்யுளில் வந்தது உபலட்சணமாக ஒழுகுதலைக் குறித்தது என்று கொள்ளுதலே தகுதி. இந்த லட்சியத்திற்குத் தானும் இணங்க ஒழுகுதல் அரியதொரு காரியமாம். ஆனால் இலக்குமணனது ஒழுக்கத்தை நோக்குங்கால் இந்த லட்சியத்தையும் கடந்து சென்று, இதனாலும் எட்டுதற்கு அரியதோர் லட்சியத்தையுடையவனாக விளங்குகிறான்.

அன்பின் திறன்

இலக்குமணனது அன்பின் திறத்தை எடுத்துக்கொள்வோம். பொதுவாக ஒருவன் கொள்ளும் அன்பு அவனுக்கு ஏதாவதொரு வகையிற் பயனை எதிர்நோக்கியதா யிருக்கும். இலக்குமணனிடம் நாம் காணும் அன்போ இத்தன்மையதன்று. அவனது மனம் இராமன் மீது கொண்ட அன்பினாலே இழைக்கப்பட்டதென்றே சொல்லத்தக்கது, அன்பின் பேரெல்லையாகிய காதலன் காதலிகளது அன்பே அவனது அன்போடு ஒப்பிடக்கூடியது. காதலனுக்கும் காதலிக்கும் வாழ்வு ஒன்று. ஒருவரின்றி மற்றவர் இல்லை. ஒருவரது பிரிவு மற்றவரது மரணம், ஒருவர்

முன்னிலையில் இருப்பதே மற்றவர்க்கு எல்லையற்ற இன்பம். இக்கருத்து

நீருள எனின்உள மீனும் நீலமும் ;
பாருள எனின்உள யாவும் ; பார்ப்புறின்
நாருள தனுவுளாய் ; நானும் சீதையும்
ஆருள ரெனின் உளேம்? அருளு வாய் எனின்

(நகர் நீங்கு. 156)

என இலக்குமணன் கூறுவதிலே வெளிப்படுகின்றது.

இவ்வகையான பேரன்பு இராமன் முடிசூடும் பெரு நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது. தந்தையின் வரத்தால் பரதன் முடிசூட, இராமன் காடு செல்கின்றா னென்பதை யுணர்ந்ததும், இப்பேரன்பு முழுதும் ஆற்ற வொண்ணாத பெருங்கோபமாக மாறுகின்றது. தந்தையின் முதுமைச் செயலை எண்ணியெண்ணி இலக்குமணன் மனம் கொதிக்கின்றது. அரசுசெல்ல வேண்டும் தாயமுறை ஒழிக்கப் பட்டது ஒருபுறமிருக்க, அவ்வரசுரிமையை இராமனுக்கு முன் ஈந்துவைத்துப் பின் இல்லையென்ற அநீதி தாங்குதற்கரிதாய் முடிகின்றது. இவ் அநீதிக்குக் காரணமாயிருந்தாரது முன்னிலையில் இராமனுக்குக் கொற்ற மௌலி கவித்துப் பார்க்க வேண்டுமென்னும் பேரவாப் பொங்கியெழுகின்றது. இங்ஙனம் எழுந்த கோபத்திற்கு மாற்று யாது? அன்பே அத் தீயை அவித்தது :

கால்தாக்க நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும்
ஆறாக்கனல் ஆற்றுமோர் அஞ்சன மேகம் என்ன

(நகர் நீங்கு. 125)

இராமன் வந்து சில சொல்லிய அளவில்,

சீற்றந் துறந்தான்; எதிர்நின்று தெரிந்து செப்பும்
மாற்றந் துறந்தான்; மறைநான்கென வாங்கல் செல்லா
நாற்றெண் டிரைவேலையின் நம்பிதன் ஆணையாலே
ஏற்றந் தொடங்காக் கடலிற்றணி வெய்தி நின்றான்

(நகர் நீங்கு. 141)

இங்கே அன்பு பணிவாக மாறி அமைந்து நிற்பதை நாம் காண்கி றோம். முடிவில், இராமன் தன் காதலியோடும் துணைவனோடும் காடு செல்லுகிறான். பின் கேகய நாடு சென்ற பரதனும் திரும்பு கிறான். அவன் இராமனைக் கண்டு மீண்டும் அயோத்திக்கு அழைத்துவரச் சேனைகளுடன் செல்கின்றான். காட்டிலும் தமையனைத் தொடர்ந்து துன்புறுத்த அவன் வருகின்றானென ஐயுற்று இலக்குமணன் வெகுண்டெழுகின்றான். அப்போதும் இராமன் அவனைத் தணிவித்துப் பரதனது குணவிசேஷங்களை எடுத்துக்கூறி, அவனை ஐயுறுதல் தக்கதன்றென வற்புறுத்து கிறான் :

சேணுயர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை அன்னது நினைக்க லாகுமே? (கிளைகண்டு, 47)

எனைத்துள மறையவை இயம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே;
அனைத்திறம் அல்லன அல்ல; அன்னது
நினைத்திலை என்வயின் நேய தெஞ்சினால் (கிளைகண்டு, 44)

தன்மீது கொண்ட அன்பு காரணமாகவே பரதனை ஐயுறுகின்றா னென இராமபிரான் உட்கொண்டருளினானென்று கம்பன் கூறுவது சிந்திக்கத்தக்கது. இராமனது திருமொழியும் பரதனது அவலமெழுதிய திருமேனியும் இலக்குமணனை உணர்வுசோரச் செய்து பணிவித்தன.

ஆனால் எரிமலையின் அனற்பிரவாகம் போன்று ஏகதேச மாகப் பொங்கிப் பெருகுவதனோடு மட்டும் உயர்தர அன்பு அமைந்துவிடுவதன்று. அன்புக்குரிய தலைவன்மீது இடைய றாத சிந்தை: அவனது சுகவாழ்விற்கு உரியனவற்றை இடை விடாது ஆராய்ந்து தெளிகை; அங்ஙனம் தெளிந்தவற்றை இடம் வாய்க்குந்தோறும் அன்பு தோன்றச் செய்கை. அவனது துக்கத் தைப் பலவழியாலும் தணிக்க முயலுகை; அத்துக்கத்தை மாற்ற முயலுகை: அத்துக்கத்தை அறவே யொழிக்க முயலுகை: இங்ஙனமாக எப்பொழுதும் அவனது நினைவாகவேயிருந்து அவனுக்கு அன்புவழிபாடு ஆற்றுகையே சிறந்த அன்பிற்குச் சிறந்த அறிகுறியாக உள்ளது. இலக்குமணன் வாழ்வு அர்ப்பித வாழ்வு. அது முழுதும் இங்குக் கூறிய செயல்களால் நிரம்பியுள் ளமை இராமகாதையிற் சிறிது பயிற்சியுடையாரும் அறிவர். காளிந்தி நதியைக் கடந்து செல்வது எவ்வாறென்று இராமன்

சிந்தித்திருக்குமளவில், இளையோன் மூங்கிற் கழைகளைத் துணித்து மாணைக் கொடியால் நன்கு கட்டித் தெப்பம் அமைத்து அதனைத் தன் கைகளால் நீரில் இழுத்துக்கொண்டு நீந்திச் சென்ற செய்தி வனம்புகு படலத்திற் கூறப்படுகின்றது -

வாங்கு வேய்ங்கழை துணித்தனன்
    மாணையின் கொடியால்
ஓங்கு தெப்பமொன் றமைத்ததி
    னும்பரின் உலம்போல்
வீங்கு தோளண்ணல் தேவியோ
    டினிதுவீற் றிருப்ப
நீங்கி னான்அந்த நெடுநதி
    இருகையால் நீந்தி (வனம்புகு. 36)

சிதையும் இராமனும் தங்குவதற்கு இலக்குமணன் சாலை அமைத்த செய்தி சித்திரகூடப் படலத்தில் பதந்தோறும் அன்பு ததும்ப வருணிக்கப்படுகின்றது.

மாயம் நீங்கிய சிந்தனை மாமறை
தூய பாற்கடல் வைகுந்தம் சொல்லலாம்
ஆய சாலை அரும்பெற லன்பினன்
நேய நெஞ்சின் விருப்பின் நிரப்பினான்

மேவு கான மிதிலையர் கோமகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன;
தாவில் எம்பிகை சாலை சமைத்தன?
யாவை யாதும் இலார்க்கியை யாதவே?

என்று சிந்தித் திளையவற் பார்த்திரு
குன்று போலக் குவவிய தோளினாய்
என்று கற்றனை நீயிது போலென்றான்
துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான்.

(சித்திரகூடப். 51 - 53)

கண் இமையாது காத்து நிற்றல்

இதுபோன்ற அன்புச் செயல்களுக்குச் சிகரம் வைத்தது போன்ற ஓர் அரிய செய்தி இலக்குமணனைப் பற்றிக் கூறப் படுகின்றது.

மாலைவாய் நியமஞ் செய்து மரபுளி
இயற்றி வைகல்
வேலைவா யமிர்தன் னாளும் வீரனும்
விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல் வைகினன் :
வரிவில் ஏந்திக்
காலைவா யளவுந் தம்பி இமைப்பிலன்
காத்து நின்றான். (கங்கைப், 48)

இதனை நோக்கிக்கொண்டிருந்த குகனது மனத்திலே என்றும் அழியாத துக்க சித்திரமொன்று ஆழ்ந்து பதிந்துவிட்டது :

தம்பிநின் றானை நோக்கித் தலைமகன்
தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீ ரருவிசோர்
குன்றி னின்றான். (கங்கைப், 49)

இங்கே குறித்த துக்க சித்திரத்தைக் குகன் பரதனுக்கு உணர்த்துகின்றான் :

அல்லையாண் டமைந்த மேனி
யழகனும் அவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய்
கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்
இமைப்பிலன் நயனம் என்றான். (குகப். 42)

இதனைக் கேட்ட பரதன் தனது அன்பின்மையையும் இலக்குமணனது பேரன்பினையும் நினைந்து உளம் நைந்துருகிப் பின்வருமாறு கூறுகின்றான் :

என்பத்தைக் கேட்ட மைந்தன் இராமனும்
இளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில் யான்என்றும்
முடிவி லாத

துன்பத்துக் கேது வானேன் அவன் அது
துடைக்க நின்றான்
அன்பத்துக் கெல்லை யுண்டோ அழகிதென்
அடிமை என்றான்; (குகப். 43)

இங்ஙனம் இலக்குமணன் கண் இமையாது இரவிற்காத்து வந்தது ஒரு நாள் இருநாள் அன்று; பதினான்கு வருஷகாலமும் இவ்வாறு காத்தனன் என்பது சரித்திரம். 'துஞ்சலில் நயனத்தைய' (விபீஷணன். 144) என்பது போன்ற தொடர்களால் இச் செய்தியைப் பல இடங்களிலும் கம்பன் உணர்த்துகின்றான். அக் காலத்தும் 'உறங்காவில்லி' என்ற பெயர் இவ் அரிய செயலையே புலப்படுத்துகின்றது. இலக்குமணனது இடையறாத அன்புப் பணிவிடைக்கு இப்பெயரைக் காட்டினும் சிறந்ததோர் கைம்மாறு இல்லை. இத்தகைய அன்பினை நாம் என்னென்று கூறுவது? 'அன்பத்துக்கு எல்லை யுண்டோ!' என அதிசயித்து நாமும் கனிந்துருகுவதல்லது, பொருள்களை அளந்துணரும் சாமானிய அறிவினால் ஒன்றும் அறியமாட்டாதவர்களாகின்றோம்.

இப்பேரன்பு இணையற்ற பெருவீரனொருவனிடத்தே தான் தோன்றுதல் இயல்பு. இலக்குமணன் இத்தகைய பெருவீரனென்பது சொல்ல வேண்டா. இவனது வில்லின் டங்கார ஓசையைக் கேட்டு இராவணனும் இவன் ஒரு மனிதனா? என்று ஆச்சரியமெய்தித் தன் மகுடத்தை ஏற்றினான் (முதற் போர். 143) என்று சொல்லப்படுகிறது. இவனொடு விற்போர் செய்து, சலித்து, 'வில்லினால் இவன் வெல்லப்படான்' (முதற் போர். 205) என்று தெரிந்து இராவணன் வேறுவகைப் போர் செய்யத் தொடங்கினமையும் சொல்லப்படுகிறது. மயங்கிக்கிடந்தவனை எடுக்கப்புகுந்த இராவணன், வெள்ளியங்கிரியை யெடுத்ததற்கு அவன் பட்டபாடுகளெல்லாம் பட்டானென்றும், அப்படி முயன்றும் அவனை யெடுத்ததற்கு முடியவில்லையென்றும் தெரிகின்றோம் (முதற் போர். 209 - 212), இராவணனது போர் வீரர்களுள்ளே தலைசிறந்து விளங்கியவனாகிய இந்திரசித்தையும் இலக்குமணன் போரில் வென்று அழித்தானென்றால், இவன் ஒப்புயர்வற்ற பெருவீரன் என்பதிற் சிறிதும் ஐயமுண்டோ?

வீரமும் அன்பும்

இலக்குமணனிடத்தே நிறைந்து விளங்கிய இவ் வீரமானது இவனது அன்பிற்கு ஒரு காம்பீர்யத்தைக் கொடுத்து நம்மை

மகிழச் செய்கின்றது. அச்சம் என்பது இவன் அறியாத ஒரு பொருள். தனது முன்னோனாகிய இராமனுக்கும் அஞ்சான், நெஞ்சுரங் கொண்டு சில உறுதி மொழிகளை அவனுக்குக் கூறத் துணிகின்றான். மாயமானைப் பின்தொடர்ந்து செல்லுதல் தக்கதன்றென உரைக்கின்றான். வாலி - சுக்கிரீவ யுத்தம் 'குரங்கின் எள்ளற் கரும்போர்; அதில் தலையிடுதல் தக்கதன் றெனக் குறிப்பிக்கின்றான் (வாலிவதைப். 32, 33). இராமன் வளர்ச்சியுற்று வருந்துங் காலங்களில் ஊக்கம் அளிக்கின்றான். சீதையைத் தேடிக்காணும் முயற்சியே எப்பொழுதும் கைக் கொள்ளலாவது என்கின்றான். அவள்பொருட்டுப் புலம்பி நாட்கழித்தல் தம்போன்ற வீரருக்கு அழகிதன்றென உணர்த்து கின்றான். தமிழிலே துணைவன் என்ற சொல்லுக்கு 'உடன் பிறந்தவன்' என்ற பொருளோடு 'மந்திரி' என்ற பொருளும் உண்டு. இவ் இரு பொருளுக்கும் உரியவனாக இலக்குமணன் விளங்குகின்றான். தம்பித் துணைவனாகவும் மந்திரித் துணைவ னாகவும் இவன் இராமனுக்குப் பணி புரிந்தானென்பது நாம் அறியத்தக்கது.

மந்திரித் துணைவனாய், உதவும்போது, இராமன் நினைத் ததையே நினையாதபடி தனக்கெனத் தனிப்பாங்கு ஒன்று உண்டெனக் கருதி விஷயங்களை நுனித்து ஆராய்ந்தறிந்தது போல, தன்னை வீரனாக, நினைத்த மாத்திரத்தில், தனக் கெனத் தனிப்பாங்கு ஒன்று உண்டு என்பதனை நன்கு உணர்ந்தவன். தன்னோடொத்த வீரர்கள் யாரும் இல்லை என்பதை நன்றாகத் தெரிந்தவன். இவன் பல இடங்களிலும் கூறும் வீரவசனங்களால் இதை நாம் அறியலாம். இவ்வசனங் களால் இவனைத் தற்பெருமைக்காரன் என்று எண்ணுதல் தக்கதன்று. வீரத்தின் விளைவே இவ்வசனங்கள் என்று நாம் உணர்தல் வேண்டும்.

காவற் பணிவிடை

அன்புச் செயல்களுக்குச் சிகரமாக இவன் இமை கொட்டாது ஆற்றிய காவற் பணிவிடையைக் கூறினேன். இவனது வீரச் செயல்களுக்குச் சிகரமாக இந்திரசித்தனது தலை துமித்ததைக் கூறுதல் வேண்டும். வில்லாளரானார்க்கெல்லாம் மேலவனாகிய இராவணியின் தலை இலக்குமணன் அம்பினால் வெட்டுண்டு வீழ்ந்தது. அங்கதன் அத்தலையைக் கையிலெடுத்து முன் செல்ல. அனுமன் மீது ஆரோகணித்து இலக்குமணன் செல்லுகிறான்,

தேவர்கள் சொரிந்த பூமாரி பந்தராக அமைந்தது. தம்பி வெற்றியுடன் மீண்டு வரவேண்டுமே என்று கவலையுடன் தருமத்தைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்த இராமன்

விரதம்பூண் டுயிரி னோடுந்தன்னுடை
மீட்சி நோக்கும்
பரதன்போன் றிருந்தான் தம்பி வருகின்ற
பரிசைப் பார்த்தான். (இந்திரசித்துவதை, 64)

அவனுடைய திருநயனங்கள் அருவிமாரி பொழிந்தன.

வன்புலங் கடிந்து மீளும்
தம்பிமேல் வைத்த மாலைத்
தன்புல நயன மென்னுந்
தாமரை சொரியுந் தாரை
அன்புகொல்? அழுக ணீர்கொல்?
ஆனந்த வாரியே கொல்?
என்புகள் உருகிச் சோருங்
கருணைகொல்? யார தோர்வார்?

(இந்திரசித்துவதை: 65)

இராமன் திருமுன்பிலே இராவணியின் சிரம் அடியுறையாக வைக்கப்படுகின்றது. அப்பொழுது இராமனது பார்வையில் தோன்றிய திருக்குறிப்பே இலக்குமணனது வீரச் செயலுக்கு ஏற்ற பரிசாக அமைந்தது.

தலையினை நோக்கும் தம்பி
கொற்றவை தழீஇய பொற்றோள்
மலையினை நோக்கும்; நின்ற
மாருதி வலியை நோக்கும்;
சிலையினை நோக்கும்; தேவர்
செய்கையை நோக்கும்; செய்த
கொலையினை நோக்கும்; ஒன்றும் உரைத்திலன்
களிப்புட் கொண்டான். (இந்திரசித்துவதை, 67)

இராமனுக்கு இத்தகைய பெருங்களிப்பு நல்கிய பெருவீரன் அவனை ஈன்றெடுத்த சுமத்திரா தேவிக்கு எத்தனை இனியன் என்பதைக் கூறவும் வேண்டுமா? தன் அருமைப் புதல்வன் இராமனோடும் சீதையோடும் கானகஞ் செல்லுதற்கு விடைபெற வந்தபொழுது அவள் கூறியது ஞாபகமிருக்கலாம் :

ஆகாத தன்றால் உனக்கு அவ்வனம்
இவ் அயோத்தி ;
மாகாத லிராமன் அம் மன்னவன் ;
வையம் ஈந்தும்
போகா உயிர்த்தாயர் பூங்குழற்
சீதை யென்றே
ஏகாய்; இனியிவ்வயின் நிற்றலும்
ஏதம் என்றாள்

பின்னும் பகர்வாள், 'மகனே. இவன்
பின்செல் தம்பி
என்னும் படியன்று; அடியாரினில்
ஏவல் செய்தி;
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின்
வா: அதன் றேல்
முன்னம் முடி' என்றனள் பால்முலை
சோர நின்றாள். (நகர் நீங்கு. 150 - 151)

இக்கட்டளைகளிலே சிறிதும் வழுவாதபடி ஒழுகிய பெருந் தகையே பெருந்தகை. இராமனுக்கு யாரினும் இனிய பேரன் பினனாகவும், உலகோர்க்கு அறம் தலையெடுக்கச் செய்த பெரு வீரனாகவும், தாய் சொற் கடவாத தனிப்பெருங் கடமை பூண்டோனாகவும் விளங்குபவன் இலக்குமணன். இவனது சரித் திரம் தமிழ் மக்களது பண்பாட்டில் ஒரு லட்சியமாக விளங்கு கிறது.

3. கும்பகர்ணன்

நெட்டுறக்கம்

காத்தற் கடவுளாகிய திருமால் தாமே அவதாரஞ் செய்து அழித்தருள வேண்டுமென்று திருவுளம்பற்றிய பெருமை வாய்ந்தவனும், அரக்கர்குலத் தலைவனும், வீரருள் வீரனுமாகிய இராவணனது உடன் பிறந்தோர்களிலொருவன் கும்பகர்ணன் என்பது நாம் யாவரும் அறிவோம். தற்காலத்தே இவனது பெயர் பரிகாசக் குறியாய் வழங்கி வருகின்றது. அவனது பெருங் குணங்களும் வீரப் பெருஞ் செயல்களும் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து நிலைபெறமாட்டாது மாய்ந்தொழிய, நெடிய உறக்க மொன்றே பொது மக்கள் உள்ளத்தில் இவனுக்கு நித்தியத்துவத்தை நல்கியிருக்கிறது. இந்நெட்டுறக்கம் பற்றிய வரலாறு ஒன்று வால்மீகியாற் கூறப்படுகின்றது (யுத்த. ஸர்க். 61). கும்பகர்ணன் பிறவியிலேயே மிக்க வன்மை படைத்தவன். இதனால் உலகிலுள்ள பிராணிகளெல்லாவற்றையும் மிக வருத்திக் கொன்று தின்று வந்தான். தேவர்கள் அனைவரும் பிரமதேவனிடம் சென்று முறையிட, அவர் 'கும்பகர்ணன் எக்காலத்தும் உறங்கிக் கிடக்க' எனச் சபித்தனர் பின்பு இராவணன் பிரமதேவனிடம் சென்று முறையிட்டுத் தனது அன்புடைத்தம்பியின் ஆயுட்காலம் ஆறுமாதம் உறக்கமும் ஒரு நாள் விழிப்புமாக நிகழ்ந்து செல்லுமாறு சாபத்தை மாற்றிக் கொண்டனன். இந் நெட்டுறக்கம் பற்றி வேறொரு கதையும் வழங்குகின்றது. பிரமாவை நோக்கி நெடுங்காலம் கடுந்தவம் இயற்ற, கும்பகர்ணன் முதலியோர்க்கு அவர் வெளிப்பட்டனர். அவர்பால் கும்பகர்ணன் நித்தியத்வம் பெற விரும்பியிருந்தான். தேவர்களெல்லோரும் மிகவும் அச்சங்கொண்டு, சரஸ்வதி தேவியை வணங்கி, அவளருளால் கும்பகர்ணன் வரங்கேட்குஞ் சமயத்து 'நித்தியத்வம்' என்று சரியாய் உச்சரிக்கவொட்டாதபடி செய்தார்கள். இதனால் 'நித்தியத்வம்' என்பதற்கு மாறாக 'நித்திரத்வம்' வேண்டுமென வரங்கேட்டான். இவ்வரத்தின் பயனாகப் பெருந்தூக்கம் இவனுக்கு ஏற்பட்டது என்பர்.

நித்திரை நிலை

பொதுமக்கள் உள்ளத்திற் கரைகடந்த களிப்பை விளை விக்கும் இந்த நித்திரை நிலையிலேதான் கும்பகர்ணனைக் கம்பன் முதன் முதலாகக் காட்டுகிறான். அனுமன் சீதையின் பொருட்டு இலங்கைக்கு வந்து பல இடங்களிலுந் தேடிக் கும்பகர்ணன் மாளிகையை யடைந்தான். மாளிகை மனோரம்யமாக இருந்தது. தென்றல் தன்னைப் பலவாறு பக்குவப்படுத்திக்கொண்டு அந்த அரக்கன் மீது மெல்லென வீசிற்று. அரம்பையர் கால்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். பன்னக - அரசு போலவும், கருங்கடல் போலவும், இருளின் தொகுதி போலவும், தீவினையின் உருவம் போலவும், (ஊர்தேடு, 123) அவன் படுத்திருக்கின்றான். அவனது நாசியில் 'உலகெலாம் துடைக்கு மாருதம் ஊழியின் வரவு பார்த்து உழல்வ தொத்தது' (ஊர்தேடு, 127). அவன் அரண்மனை வாசலினெதிரே வந்துகொண்டிருந்த அனுமானைத் திடீரெனத் தடுத்து நிறுத்தி, பின்பு ஒரு நாசிக்கு அருகில் ஒரு மூச்சு இழுத்தது. இதைக் கண்டு நடுக்கமெய்திப் பக்கத்தில் விலகிக் குதித்து அனுமான் தப்பித்துக்கொண்டான். இங்ஙனம் தப்பித்துக் கொள்ளாவிடின், கும்பகர்ணனது சுவாசச் சூறாவளி யினால் முன்னும் பின்னும் தள்ளுண்டு அவனது நாசியில் ஏறியிறங்கும் திருமேனியாய் உழன்றுகொண்டிருக்க நேரிடும்! வாயுபுத்திரன் என்னும் பெயரைப் புதுக்கி விடுவான்! சீதையைத் தேடுவதும் அதனோடு முடிந்துவிடும்! இவ்வகையான ஆபத்துக் களினின்றும் தப்பித்துக்கொண்ட அனுமான், பெருந் தூக்கத்தில் பெருஞ்சுவாசமிடும் இவன் இராவணன் அல்லன் என்பதைத் தெரிந்து, எவனேயாயினும் வாழ்நாள் முடிந்தவனே ஆவனெனக் கொண்டு,

செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன் அனையவன் உறையுளைக் கடந்தான்

(ஊர்தேடு, 132)

இச்செய்திகளுக்கு அப்புறம் வெகுகாலஞ் சென்றுவிட்டது: சீதையென்னுங் கற்புத் தெய்வத்தைத் தரிசனஞ் செய்யும் பாக்கியம் அனுமனுக்குக் கிடைத்தது. அசோகவனம் அதப் பட்டது. சம்புமாலி, அட்ச குமாரன் முதலாயினோர் வதஞ் செய்யப்பட்டனர். இலங்கை அக்கினிக்கு இரையாக்கப்பட்டது. இராமபிரான் அனுமானால் சீதையின் ஸ்திதியை யுணர்ந்து இலங்கைக்குச் செல்லவெண்ணிக் கடற்கரையில் வந்து தங்கியிருக்

கிறான். அழிவெய்திய இலங்கை நகரம் மீண்டும் மயனால் புதுப்பிக்கப்பட்டது. இராவணன் தனது மந்திராலோசனை சபையில் மந்திரிகளும், உற்ற சுற்றத்தார்களும் புடைசூழ ஆலோசனையில் அமர்ந்திருக்கிறான்.

இராவணனுக்கு ஆலோசனை

இம் மந்திரி சபையில் கும்பகர்ணனையும் நாம் பார்க்கிறோம். இப்போது அவன் உறங்கிக் கொண்டிருக்கவில்லை. ஒவ்வொருவரது ஆலோசனையையும் கூர்ந்து கவனித்து வருகிறான். நல்ல உறக்கத்திற்குப் பின் புத்தி மிகத் தெளிந்திருப்பது இயற்கையல்லவா? ஆழ்ந்து சிந்தித்துத் தன் உடன் பிறப்பாகிய இராவணனுக்குத் தன் ஆலோசனையையும் கூறுகிறான்.

கும்பகர்ணனது பேருருவம்

கும்பகர்ணனுக்குச் சமானமான சரீர – ஆகிருதியை யுடைய அரக்கர்கள் ஒருவரும் இல்லையென்று விபீஷணன் இராமனுக்குத் தெரிவிப்பதாக வால்மீகி கூறுகின்றார். 'வாமனனாக அவதரித்து, பலிச் சக்கிரவர்த்தியினிடத்தில் மூன்று அடி நிலங் கேட்டு மூன்று உலகங்களையும் மூன்று அடிகளில் அளப்பதற்காகத் திருமேனிகொண்டு வளர்ந்த திருமாலைப் போலப் பிரகாசித்தான்' என்று முதல் - நூல் முனிவர் கூறுவர். இதனையே மகாகவி கம்பனும்

> விண்ணினை யிடறு மோலி;
> விசும்பினை நிறைக்கு மேனி;
> கண்ணெனும் அவையி ரண்டும்
> கடல்களிற் பெரிய ஆகும்;
> எண்ணினும் பெரிய னான
> இலங்கையர் வேந்தன் பின்னோன்
> மண்ணினை அளக்க நீண்ட
> மாலென வளர்ந்து நின்றான்
>
> (கும்பகர்ணன் வதை. 57)

என நயம்பெறக் கூறினன். இதோடு கும்பகர்ணனது பேருருவம் கம்பனது கருத்தைவிட்டு அகன்றுவிடவில்லை. பலவழியாற் பல

இடங்களில் அவனது அசாதாரண சரீர அமைப்பை நமக்குப் புலப் படுத்துகின்றான். மகோதரன் என்னும் மந்திரி இராவண னிடத்துக் கும்பகர்ணனைப் போர்க்குச் செல்லவிட வேண்டு மென்று கூறுகிறவிடத்தே அவனது சரீரத் தோற்றத்தைக் கண்ட மாத்திரையிலேயே வானரரெல்லாரும் அஞ்சி யோடுவர் எனக் கூறுகிறான் :

நின்ற திருக்கோலம்

ஆங்குஅவன் தன்னைக் கூவி ஏவுதி
　　யென்னின், ஐய
ஓங்கலே போல்வான் மேனி காணவே
　　ஒளிப்பர் அன்றே;
தாங்குவார் செருமுன் என்னின் தாபதர்
　　உயிரைத் தானே
வாங்கும்! என் றினைய சொன்னான் அவனது
　　மனத்துட் கொண்டான்.

(கும்பகர்ணன் வதை. 41)

கும்பகர்ணனது நின்ற திருக்கோலம் இவ்வாறாயிற்று. அவன் இருந்த திருக்கோலம், உலகெலாங் கலக்கி வென்று இமயத்தை உலையவாங்கிய இராவணன் நின்றதனோடு ஒக்கும் என்னுங் கருத்துப்பட,

இருந்த போதும் இராவணன் நின்றெனத்
தெரிந்த மேனியன் (கும்பகர்ணன் வதை. 62)

என்று கம்பன் வேறோரிடத்துக் கூறினன். இதுவே யன்றி,

நல்லன்றோ ரோடுங் காலத்துக் கால்தேய்க்க
மல்லொன்று தோளாய் வடமேரு (மாயாசனகப். 81)

என இராவணன் புலம்புகின்றான். வடமேரு, கும்பகர்ணன் நீராடுங்காலத்துக் காலைத் தேய்ப்பதற்கு வைக்கப்பெற்ற தொரு கல்லெனத் தோன்றும்படி அத்துணை நெடிய பெரிய சரீர முடையவன் என்பது இதன் கருத்து. இராவணன் பல இடங் களிலும் வடமேருவிற்கு உவமிக்கப்படுகின்றான். உதாரணமாக,

தேரு மாவும் படைஞரும் சேற்றிட
மூரி வன்னெடுந் தானையின் முற்றினான்
நீரொ ரேழு முடிவில் நெருக்குநாள்
மேரு மால்வரை யென்ன விளங்கினான்.

(முதற்போர்ப். 100)

என்ற செய்யுளைக் காண்க. மேருமலை கால்தேய்க்கும் கல்லாரும் தரத்ததானால், அம்மலையோடு ஒப்பிடப்பெற்ற இராவணனைக் காட்டிலும் கும்பகர்ணன் எத்தனை மடங்கு பெரிய சரீரமுடையவனென்று உய்த்துணரத்தக்கது.

சீதையை அபகரித்தது பாவச்செயல்

இங்ஙனமாக, தேவ தானவர்களும் ராக்ஷஸ வானரர்களும் வெருவியோடும்படியான பெருந்தோற்றமும் பெருஞ் சரீரமும் உடையவன் கும்பகர்ணன். இவன் மந்திராலோசனை சபையில் யாது சொல்லியிருக்கக்கூடும்? சரீர பலமுள்ளவர்கள் புத்தி நுட்பமுள்ளவராயிருத்தல் மிக அரிது. நுணுகி நுணுகி யெண்ணிக் காரணம் காணும் அறிவு நுட்பம் இன்னாரிடம் இருத்தல் இயல்பன்று. நுணுகிய அறிவினைத் தீவழியிற் செலுத்துங்கால் ஏற்படும் வஞ்சகம் கபடு முதலியனவும் இவர்கள்பாற் காணுதல் பெரும்பாலும் இல்லை. இவர்களுடைய புத்தி நேர்வழியிலேதான் செல்லவல்லது. இம்மானஸிக தத்துவத்தை நன்குணர்ந்த கம்பனும் மேற்கூறியதனை அனுசரித்தே கும்பகர்ணனது குணவிசேஷத்தை அமைத்து அவனை வார்த்தையாடும்படி செய்கின்றான். சீதையைத் தன் தமையன் அபகரித்துக் கொண்டு வந்தது பெரியதோர் பாவச் செயலெனக் கும்பகர்ணன் உணர்கிறான். அவ்வாறு உணர்ந்ததைச் சிறிதும் தடுமாற்றமின்றி அஞ்சாது தைரியத்தோடு 'குடிமை மூன்றுலகுஞ் செய்யுங் கொற்றத்தோன்' ஆகிய இராவணனுக்கு எடுத்துக் கூறுகின்றான்.

... ...வேறொரு குலத்தான்
தேவியை நயந்துசிறை வைத்தசெயல் நன்றோ?
பாவியர் உறும்வழி யிதிற்பழியும் உண்டோ?

(யுத்த, மந்திரப். 49)

நினைப்பினுஞ் சுடுகின்ற இத்தீச் செயலொன்றின் காரணமாகவே அரக்கர் புகழ் ஒழிந்து போவதாயிற்று என வற்புறுத்தி உரைக்கின்றான்.

என்றொருவன் இல்லுறை தவத்தியை இரங்காய்
வன்றொழிலி னாய்மறை துறந்துசிறை வைத்தாய்
அன்றொழிவ தாயின அரக்கர் புகழ். ஐயா,
புன்றொழிலி னார்இசை பொறுத்தல் புலமைத்தோ?

(யுத்த, மந்திரப்; 51)

இவ்வாறு பஞ்சமகாபாதகங்களுள் ஒன்றாகிய பாதாரகமன இச்சையினால், தவத்தினாலும், வரத்தினாலும், பலத்தினாலும் வெற்றியினாலும் பெற்றிருந்த புகழெல்லாம் அழிவெய்துவன வாயின என்று கூறினன், அதனோடமையாது பரிகாசத்தின் பேரெல்லையினின்று நகைச்சுவையும் அருவருப்பும் ஒருங்கு ததும்ப, தமையன் மனம் பிளந்து போம்படி, பின்வருமாறு பேசுகிறான்;

ஆசில் பரதாரம் அவைஅச் சிறை யடைப்பேம்,
மாசில்புகழ் காதலுறுவேம்; வளமை கூரப்
பேசுவதும் மானம் இடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை; நன்றுநம கொற்றம்!

(யுத்த. மந்திரப், 52)

ஆனால் இங்ஙனம் கடிந்தும் பரிகசித்தும் அருவருத்தும் கூறுஞ் சொற்கள் அன்பில்லாத மனப்பாறையினின்று தோன்றியன வல்ல. கும்பகர்ணன் தன் உடன்பிறந்தான் மீது கொண்டிருக்கும் பேரன்பு காரணமாகவே இச்சொற்கள் எழுந்தன என்பது ஆரம் பத்திலேயே வெளியாகின்றது.

எம்பியென கிற்கில்உரை செய்வல்இதம் என்னாக்
கும்பகருணப் பெயரினான் இவை குறித்தான்

(யுத்த மந்திரப்: 47)

'என்னுடைய தம்பி அன்புரிமை பற்றி இடித்துரைக்கின்றானென் நேர்மையோடு நீ கொள்ளுவதாயின், உனக்கு இதமானதைச் சொல்லுகிறேன்' என்பது இதன் கருத்து.

வீரர் பெருந்தகை

இராவணன் இயற்றிய பாவச்செயலை அறவே கடிந்துரைத்த கும்பகர்ணன் யாது செயற்பாலதெனக் கூறுகிறான் என்பது உற்றுநோக்கத்தக்கது. சீதாதேவியைச் சிறைவிடு செய்வதற்குப் பூரண மனமுடையவனாயிருப்பினும் அவ்வாறு செய்க என்று அவன் கூறவில்லை. பாவச் செயல்மீதுள்ள வெறுப்பும் தங்கள் வலிமைபற்றிய மானமும் போராடி, மானமே வென்று விட்டது. இதனால் சீதையை விட்டுவிட்டோமாயின், நம்மை எளியரென யாவரும் இகழ்வர்; போர் செய்தலே நன்று; போரில் இறந்துபடினும் பழியன்றாம்' எனக் கூறுகின்றான்.

சிட்டர் செயல் செய்திலை; குலச்சிறுமை செய்தாய்;
மட்டவிழ் மலர்க் குழலினாளை. இனி மன்னா,
விட்டிடுது மேல்எளியம் ஆதும்; அவர் வெல்லப்
பட்டிடுதுமேல் அதுவும் நன்று; பழியன்றால்.

(யுத்த. மந்திரப். 53)

இத்தகைய பெருமித வார்த்தையைக் காட்டினும் வேறொன்று அவ்வீரர் பெருந்தகையின் இயல்பிற்கு ஒத்ததாகக் காணுதலரிது. இந்திரசித்துத் தன் தந்தையிடம் விடைபெற்றுக் கடைசிமுறை யுத்தத்திற்குச் செல்லும் சமயத்துச் 'சீதையை விட்டு விடுக' என்று கூறியபொழுது,

வென்றிலேன் என்ற போதும்
  வேதமுள் ளளவும் யானும்
நின்றுளன் அன்றோ! மற்றுஅவ்
  இராமன் பேர்நிற்கு மாயின்:
பொன்றுதல் ஒருகாலத்துந்
  தவிருமோ? பொதுமைத் தன்றோ?
இன்றுளார் நாளை மாள்வர்;
  புகழுக்கும் இறுதி உண்டோ?
விட்டனன் சீதை தன்னை
  என்னலும், விண்ணோர் நண்ணிக்
கட்டுவ தல்லாற் பின்னை
  யானெனக் கருது வாரோ?

பட்டனன் என்ற போதும்
எளிமையிற் படுகிலேன் யான்
எட்டினோ டிரண்டும் ஆய
திசைகளை யெறிந்து வென்றேன்

(இந்திரசித்துவதை. 10, 11)

எனக் கூறிய இராவணனது மனப்பான்மையோடு கும்பகர்ணனது மனப்பான்மையும் எத்துணை பொருந்தியிருக்கின்றதென நோக்கற்பாலது. தன் கருத்தோடு முடிவில் இணங்கி விட்டானென்பது தெரிந்த இராவணன், கும்பகர்ணன் முன் கூறிய கடுஞ்சொற்களை மறந்து.

நன்றுரை செய்தாய் குமர நான்இது நினைந்தேன்
ஒன்றும்இனி யாய்தல் பழுது

(யுத்த மந்திரப் 57)

எனக் கூறிப் படையெழுக எனக் கட்டளையிடுகின்றான்.

இம்முடிவு விபீஷணன் மந்திராலோசனை சபையிற் கூறிய நீதி நிரம்பிய வாக்கியங்களாலும் அசைவுபெறவில்லை. இராவணனால் வெருட்டப் பெற்று விபீஷணன் இராமபிரானைச் சரணாகதி அடைகிறான். உலக - இலக்கியங்களிலே காணங் பெறும் இனிமையும் அழகும் ஒருங்கு ததும்புஞ் சிறந்த கட்டங்களுள் ஒன்றாகக் கணிக்கத்தகும் இப்பகுதியை இப்பொழுது கடந்து மேற்செல்வோம்.

இன்று போய் நாளை வா

மந்திராலோசனை நிகழ்ந்து சில நாட்களாயின. இரு பக்கத்தும் சேனைகள் அணிவகுக்கப் பெற்றாய்விட்டன. முதல் நாள் யுத்தம் நடைபெறுகின்றது. இராவணனே போர் முனையில் எதிர்க்கின்றான். அவன் கைப்பிடித்த ஆயுதங்களெல்லாம் இராமபாணத்தால் அழிகின்றன. நிராதபாணியாய்த் தன்னந்தனியனாய் முகம் கவிழ்ந்து நிற்கின்றான். அப்போது.

பேராண்மை யென்ப தறுகண்; ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு (குறள், 773)

எனத் தமிழ்ப் பேராசிரியரான வள்ளுவர் பெருமான் கூறிய யுத்த தர்மத்திற்கேற்ப, ஸ்ரீராகவனும், இன்று போய்ப் போர்க்கு நாளைவா என்னுங் கருத்துப்பட உரைக்கின்றான் :

ஆள யாவுள அமைந்தன? மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை: இன்று போய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன்; நாகிளங் கமுகில்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்

(முதற்போர் 256)

என்பது அச்செய்யுள்.

மேற்கூறிய வண்ணம் தோல்வி யெய்திய இராவணன் போர்க்களத்திலே தனக்கு அருமையாயுள்ளன யாவற்றையும் இழந்து,

வாரணம் பொருத மார்பும்
வரையினை யெடுத்த தோளும்
நாரத முனிவற் கேற்ப
நயம்பெற உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமுங் களத்தே விட்டு
வெறுங்கையோடு இலங்கை புக்கான்

(கும்பகர்ணன். 1)

என்றபடி வெறுங்கையோடு இலங்கை வந்து சேர்கின்றான். நகர வீதியில் எவ்வணஞ் சென்றான் என்பதைக் கம்பன் பேரழகு படக் கூறியுள்ளான்.

மாதிரம் எவையும் நோக்கான்
வளநகர் நோக்கான்; வந்த
காதலர் தம்மை நோக்கான்;
கடற்பெருஞ் சேனை நோக்கான்;
தாதவிழ் கூந்தல் மாதர்
தனித்தனி நோக்கத் தான்அப்
பூதலம் என்னும் நங்கை
தன்னையே நோக்கிப் புக்கான்.

(கும்பகர்ணன் 3)

இங்ஙனமாகத் தனது அரண்மனை புகுந்த இராவணன் மானத்தால் புழுங்கிக்கொண்டிருந்தான்; வானமும் மண்ணுமெல்லாம் நகும் என்பதற்குச் சிறிதும் நாணாது, சானகி நகுவள் என்பதற்குப் பெரிதும் நாணினான்.

இவன் பக்கல் பாட்டனாகிய மாலியவான் வந்து யாது நிகழ்ந்ததென வினவுகின்றான். மனத்தில் விம்மித் தாக்கி மோதிக்கொண்டிருந்த துக்க வெள்ளமெல்லாம் கரையுடைந்து வெளிப்படுகிறது. இராம லட்சுமணரது போர் வன்மையைக் குறித்துப் பலவாறு விவரித்துப் புகழ்கின்றான். தான் வீரர் பெருந்தகைகளுள் ஒருவனென்பதை இதன் மூலம் நன்கு நிறுவுகின்றான். முடிவில்,

போயினித் தெரிவதென்னே?
பொறையினால் உலகம் போற்றும்
வேயெனத் தகைய தோளி
இராகவன் மேனி நோக்கில்,
தீயெனக் கொடிய வீரச்
சேவகச் செய்கை காணில்
நாயெனத் தகுதும் அன்றே
காமனும் நாமும் எல்லாம்

(கும்பகர்ணன் 30)

வாசவன் மாயன் மற்றை
மலருளான் மழுவாள் அங்கை
ஈசன்என றினைய தன்மை
இளிவரும் இவரா லன்றி
நாசம்வந் துற்றபோது
நல்லதோர் பகையைப் பெற்றேன்:
பூசல்வண் டுறையுந் தாராய்,
இதுஇங்குப் புகுந்த தென்றான்

(கும்பகர்ணன், 21)

எனக் கூறுகின்றான். இதனைக் கேட்டுப் புத்திமதி கூறிய மாலியவானைத் தடுத்து மகோதரன் என்னும் மந்திரி 'கும்பகர்ணனைப் போர்க்கு அனுப்புதல் வேண்டும்: அவன் நிச்சயமாய் வென்றுவருவான்' என உறுதி மொழிகின்றான்.

துயில் எழுப்புதல்

இச்சமயம் கும்பகர்ணன் யாது செய்கிறானென்று கூற வேண்டுதல் இல்லை. மந்திராலோசனை சபையினின்று தன் மாளிகையடைந்து நித்திரை போகின்றான். இவனை எழுப்பிக் கொணர்தற் பொருட்டு அனுப்பப்பெற்ற வீரர்கள் மாளிகைக் கதவைத் திறந்தார்கள். கும்பகர்ணனது சுவாசக் காற்று ஊழிக் காற்றென்னும்படி சுழன்றடிக்கிறது. அக்காற்றில் அகப்பட்டுக் கொண்ட வீரர்கள் மிகவும் தத்தளித்தார்கள். முடிவில், ஆலோசித்து, ஒருவரது கையை மற்றொருவர் பிடித்துக்கொண்டு, சேர்ந்து வலிந்து நின்று, மூக்கிற்கு நேராக நில்லாதபடி விலகி, வேறு வாசல் வழியாக அவன் மாளிகைக்குட் புகுந்தார்கள். எப்படித் துயிலெழுப்புவதென்று தீர்க்காலோசனை பண்ணிப் பார்த்துக் காதில் சங்கு, தாரை முதலிய வாத்தியங்களை ஊதினார்கள். கும்பகர்ணன் அசையவில்லை. பின் தண்டு முதலிய ஆயுதங்களாற் கன்னப்புறங்களில் அடித்தார்கள். கைகள்தாம் சலித்தனவே யன்றி அவன் மெய்சலிக்கவில்லை; பின் இராவணன் ஏவற்படி குதிரைகளை அவன் மேலே நடத்தினார்கள்.

கட்டுறு கவன மாவா
 யிரம் கடிதின் வந்து
மட்டற உறங்கு வான்றன்
 மார்பிடை மாலை மான
விட்டுற நடத்தி யோட்டி
 விரைவுள சாரி வந்தார்;
தட்டுறு குறங்கு போலத்
 தடந்துயில் கொள்வதானான்

(கும்பகர்ணன் 53).

நித்திரை மிகவும் ஆழ்ந்த சுக நித்திரையாக முடிந்ததேயன்றிச் சிறிதும் கலையவில்லை. இவ்விவரத்தை இராவணனுக்கு அறிவித்ததும், மழு முதலிய ஆயுதங்களைக் கொண்டெறிந்தேனும் துயிலெழுப்பிக் கொணர்க எனக் கட்டளையிட்டான். இராவணன் ஆணைப்படி ஆயிரம் அரக்கர்கள் முசலங்களைக் கொண்டு கன்னத்தில் தாக்கினார்கள். கும்பகர்ணனும் இறந்து

கிடந்தவன் உயிர் பெற்றெழுந்ததுபோல் எழுந்திருந்தான். இந்தப் பகுதியில் விலாப்புறம் இற்றுப் போகும்படி, வயிறு குலுங்கும்படி, நகைச்சுவை ததும்பக் கம்பன் கதை புனைந்திருக் கிறான். முதற்போருக்கும் கும்பகர்ணன் போருக்கும் இடையில் வாசகர்களது மனம் ஒரே நிலையில் நின்று தளர்வெய்தாதபடி இந்த ஹாஸ்ய கட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் கும்பகர்ண வதமாகிய துக்கமுடிவிற்கு முன் அதனோடு மாறுபட்ட ஹாஸ்யச் சுவையை வைத்து, துக்க கதியை மிகுவித்தற் பொருட்டும் இப்பகுதி இயற்றப்பட்டிருக்கிறது என்னலாம்.

நன்று, விழித்தெழுந்ததும் மாமிசமும் மதுபானமும் கொடுக்கப்படுகின்றன.

நூறு நூறு சகடத் தடிசிலும்
நூறு நூறு குடங்களும் நுங்கினான் ;
ஏறு கின்ற பசியை எழுப்பினான் ;
சீறு கின்ற முகத்திரு செங்கணான்.

(கும்பகர்ணன் 60)

இச் சிற்றுண்டியால், அவன் பசி அதிகரித்ததே யல்லாமல் தணிந்தபாடில்லை. பின்னும் எருமை முதலிய பல பலகாரங்களை உண்டு, ஒருவிதமாய்த் தாகசாந்தி செய்துகொண்டான். அப்போதுதான் தமையனார் அழைக்கிறார் என்ற சொல் காதில் விழுகின்றது. உடனே எழுந்து தமையன் மாளிகையையடைந்து அவன் முன் சென்று மண்ணுற வணங்குகின்றான் :

நிலை கிடந்த நெடுமதிட் கோபுரத்து
அலை கிடந்த இலங்கைய ரண்ணலைக்
கொலை கிடந்தவேற் கும்ப கருணன் ஓர்
மலை கிடந்தது போல வணங்கினான்.

(கும்பகர்ணன் 71)

வணங்கிய அன்புடைத் தம்பியை இராவணன் மார்போடு அணைத்தெடுத்துப் பக்கத்தே யிருத்திப் போர்க்கோலஞ் செய் கின்றான்.

போர்க்கோலம்

பேர விட்ட பெருவலி யிந்திரன்
ஊர விட்ட களிற்றோடும் ஓடுநாள்
சோர விட்ட சுடர்மணி யோடையை
வீர பட்ட மெனநுதல் வீக்கினான்

(கும்பகர்ணன் 74)

இங்ஙனமாகப் போருக்கு ஆயத்தம் செய்வித்து முடியும்போதே கும்பகர்ணனுக்கு இடந்துடித்தது; இராவணனும்,

வானரப் பெருந் தானையர் மானுடர்
கோநகர்ப் புறஞ் சுற்றினர் கொற்றமும்
ஏனை யுற்றனர் நீயவ ரின்னுயிர்
பேகனகத் தொழில் முற்றுதி போய் என்றான்.

(கும்பகர்ணன் 78)

கும்பகர்ணனுக்குத் தான் மந்திராலோசனை கூறியதெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது. தமையன் இயற்றிய மகாபாதகச் செயலின் தன்மையைப் பற்றி விபீஷணன் கூறியது மனத்தில் தங்கிக் கிடந்துவிட்டது. சிந்தையில் அளவற்ற சஞ்சலம் ஏற்பட்டது. மனமானது விம்மிப் பொருமிற்று. தன் சொற்களிலே தனது ஆன்மசக்தி முழுவதையும் அமைத்துக் கதறிக் கூறுகிறான்.

ஆனதோ வெஞ்சமர்? அலகில் கற்புடைச்
சானகி துயர்இனந் தவிர்ந்த தில்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ பொன்றுங் காலமே?

(கும்பகர்ணன் 79)

கல்லலாம் உலகினை, வரம்பு கட்டவும்
சொல்லலாம்: பெருவலி யிராமன் தோள்களை
வெல்லலாம் என்பது சீதை மேனியைப்
புல்லலாம் என்பது போலுமால் ஐயா!

(கும்பகர்ணன் 81)

இவ்வண்ணம் மொழிந்து, பின்பு முடிவாக

தையலை விட்டு அவன் சரணந் தாழ்ந்துநின்
மையறு தம்பியோடு அளவ ளாவுதல்
உய்திறம்; அன்றெனின் உளது வேறுமோர்
செய்திறம் ; அன்னது தெரியக் கேட்டியால்

(கும்பகர்ணன் 88)

இங்கே தம்பி என்றது விபீஷணனை.

பந்தியிற் பந்தியிற் படையைவிட்டு அவை
சிந்துதல் கண்டுநீ யிருந்து தேம்புதல்
மந்திரம் அன்று நம் வலியெ லாம்உடன்
உந்துதல் கருமம் என்றுணரக் கூறினான்.

(கும்பகர்ணன் 89)

இங்ஙனம் தன் கருத்தைக் கூறி முடிக்கின்றனன்: கும்பகர்ணன் இங்கே கூறுவதற்கும், முன்பு மந்திராலோசனை சபையிற் கூறியதற்கும் உள்ள வேறுபாடு கவனிக்கற்பாலது. முன் 'நீ செய்தது தீச்செயல்; சீதையை விடுதல் நலம். ஆனால், நாம் எளியம் என்று கருதப்படுவோம்; ஆதலால், அவளைச் சிறை நீக்காது போர் செய்தலே வேண்டும்' என்றான். இப்போது 'நீ செய்தது தீச்செயல்; சீதையை விட்டுவிடுதலே உய்திறம்; இது செய்ய ஒருப்படாயாயின் நான் கூறுமுறையிற் போர் செய்வோம்' எனக் கூறுகின்றான். இவ்வேறுபாட்டிற்குக் காரணம் விபீஷணன் கூறிய ஆலோசனையும், அவன் புரிந்து செல்ல நேரிட்ட பெருந் துன்பமும், முதற்போரில் ஏற்பட்ட தோல்வியுமே யென ஊகித்தல் தவறாகாது.

கும்பகர்ணன் நேர்மை

கும்பகர்ணன் நேர்மையான ஏகபுத்தியுடையவன் என்று முன்பே கூறினேன். இதற்கேற்பவே ஈண்டும் தனது கருத்தைச் சந்தேகத்துக்கிடமின்றித் தெளிவாய்த் தைரியமாய்க் கூறுகின்றான். அவன் வார்த்தையைக் கேட்டதும் இராவணனுக்குக் கோபம் பொங்கிவிட்டது. உடன் பிறப்பு என்ற அன்பு இருவருக்கும் இருந்தமையினாலே புரிந்து கொள்ளவில்லை.

மானுடர் இருவரை வணங்கி மற்றும்அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு உய்தொழில்
ஊனுடை யும்பிக்கும் உனக்குமே கடன்
யான்அது புரிகிலேன் ; எழுதி போதியால்

(கும்பகர்ணன் 92)

என்று கூறிவிட்டு, இராவணன் தானே போர்க்குச் செல்ல ஆயத்தஞ் செய்கிறான். இதைக் கண்டதும் கும்பகர்ணனுக்குச் சகிக்க முடிய்வில்லை. தமையன்மீது அவனுக்குள்ள அன்பிற்கு அளவுகூறப் புகுந்தால், அவனது சரீரத்தின் அளவைத்தான் கூறுதல் கூடும். 'யாவர்க்குந் தொழுகுலமாம் இராமன் பின்பாகப் பிறந்தானும் உளனெனப்' பிரியாதானாகிய இலக்குமணப் பெருமானது அன்பிற்கு இவனது அன்பு சிறிதும் குறைந்ததன்று. இவனது பெருஞ்சரீர முழுமையும் சகோதர வாத்ஸல்யத்தால் நிரப்பி, இவனைச் சிருஷ்டித்த பெருமை கம்பனுக்கு உரியதே யன்றி வால்மீகியாருக்கு உரியதன்று.

போருக்கு வருதல்

கும்பகர்ணன் தானே முற்சென்று போர் புரிய உடம்பட்டு விடை பெற்றுக்கொள்கிறான். இப்பகுதியை வாசிக்கும் நம் உள்ளம் குழைந்து குழைந்து உருகுகிறது.

வென்றுஇவண் வருவனென்று உரைக்கிலேன் விதி
யொன்றது பிடர் பிடித்து உந்துகின்றது;
பொன்றுவள், பொன்றினாற் பொலன்கொள் தோளியை
நன்றென நாயக விடுதி நன்றரோ.

(கும்பகர்ணன் 95)

இற்றையிந் நாள்வரை யான்முன் செய்தன
குற்றமும் உளவெனிற் பொறுத்தி, கோற்றவ,
அற்றதால் முகத்தினில் விழித்தல் ஆரிய
பெற்றனன் விடையெனப் பெயர்ந்து போயினான்

(கும்பகர்ணன் 99)

இவ் அன்பு ஒருபுடைமாத்திர முள்ளதன்று, இராவணனும் தன் தம்பியை உயிர்போல நேசித்தான்.

அவ்வழி இராவணன் அனைத்து நாட்டமும்
செவ்வழி நீரொடும் குருதி தேக்கினான்;
எவ்வழி யோர்களும் இரங்கி யேங்கினார்;
வெவ்வழி யவனும்போய் வாயில் மேயினான்.

(கும்பகர்ணன் 99)

இவ்வாறாக படைகொண்டு போர்க்களத்துக்குச் சேனையோடும் ஆயுதங்களோடும் புறப்படுகின்றான்.

போர்க்களத்தில் வானர சைனியங்களெல்லாம் கும்பகர்ணன் தோற்றத்தைக் கண்டு வெருவி நடுநடுங்கி நானாபக்கங்களிலும் ஓடின. இராமபிரான் இது என்னென்று நோக்கிய அளவில், ஆகாயமும் பூமியும் ஒன்றாகத் தொட்டுப் பெயர்கின்ற பேருருவினைக் கண்டனன். இவன் யார் என அருகு நின்ற விபீஷணனை வினவுகின்றான். விபீஷணனும் வருபவன் கும்பகர்ணன் என்பதை உணர்த்தி அவனது பேராற்றலையும் நற்குணத்தையும் அவன் இராவணனுக்குக் கூறிய அறிவுரையையும் எடுத்து மொழிகின்றான். உடன் நின்ற சுக்கிரீவன் இவனையும் நம் பக்கம் கூட்டிக்கொள்ளுதல் நலமெனத் தெரிவிக்கின்றான். யார் கூட்டி வருவாரென்று இராமன் சொல்லி நிற்க, நானே சென்று கொணர்குவேன் என்று விபீஷணன் விடைபெற்றுச் செல்கிறான்.

கும்பகர்ணன் - விபீஷணன் சந்திப்பு

இவ் இரண்டு சகோதரர்களும் போர்க்களத்திற் சந்தித்து வார்த்தையாடும் பகுதி கம்பன் இயற்றிய காவியப் பூங்கோயிலில் அழகிற் சிறந்து உருக்கமிக்க பாகங்களில் ஒன்றாகும். இவ்விடத்தே தான் கும்பகர்ணனைச் சகோதர வாத்ஸல்ய மூர்த்தியாகக் கம்பன் வருணித்திருப்பதின் பொருள் முழுவதையும் நாம் நன்கு உணருகிறோம். குணத்திற் கும்பகர்ணனைப் போன்ற சகோதரர் வேண்டுமென்று நமது மனம் அவாவுகின்றது. கும்பகர்ணனை யாருங் கௌரவிக்கத் தக்க கதாபாத்திரமாக ஆக்கியதும் இப்பகுதியேயாம். இதுபோன்றவொரு பகுதி வான்மீகத்தில் இல்லை. இப்பகுதியிற் காணப்படும் அற்புதக் கவித்வ நயங்களைத் தமிழுணர்ந்தார் ஒவ்வொருவரும் கற்றுணர்ந்தே அனுபவிக்க வேண்டும்.

இராவணன் சகோதரரில் மூத்தவன்; விபீஷணன் அவருள் இளையவன்; கும்பகர்ணன் இருவருக்கும் நடுவிலுள்ளவன்.

வயதில் இருப்பதுபோலவே, குணத்திலும் இருவருக்கும் நடுத்தன்மையுடையவனாக இருக்கின்றான். விபீஷணன் சிறந்த விவேகி! நீதிமான். நீதியன்றிப் பிறிதொன்றையும் கவனிப்பவனன்று. இவன் இந்திரசித்தினிடம் கூறுவதைக் காண்க:

அறந்துணை யாவ தல்லால்,
 அருநர கமைய நல்கும்
மறந்துணை யாக மாயாப்
 பழியொடும் வாழ மாட்டேன்;
துறந்திலேன் மெய்யை, எய்தும்
 பொய்ம்மையே துறப்ப தல்லால்;
பிறந்திலேன் இலங்கை வேந்தன்
 பின்அவன் பிழைத்த போதே. (நிகும்பலை 171)

இவனது பெறலருங் குணத்திற்கு மாறாக இராவணன் தீச்செயல்களுக்கு அஞ்சாத தீயவனென்று நாம் பொதுப்பட அறிகிறோம். கும்பகர்ணன் தீச்செயல்களுக்கு அஞ்சுகின்றவன்; ஆனால் சகோதர வாத்ஸல்யம் அவற்றைப் புறக்கணிக்கச் செய்கிறது. அன்புக்குப் பாத்திரனான தன் தமையன் தீங்கு இழைப்பினும் அவனைத் துறந்துவிட மாட்டான். வீரருள் வீரனான கும்பகர்ணனிடத்தில் இந்த மக்கட் பண்பு இருந்ததினாலே நாம் அவனைப் பெரிதும் பாராட்டுகிறோம். விபீஷணனைப் போன்ற நீதி மக்களைக் காணுதல் அரிது. அவனது பெருங்குணத்தில் மக்கட் கியல்பான அன்பு, கண்ணோட்டம் முதலிய சிறு குறைகள் இல்லாமை தெளிவு. மேலும் ஒன்று கவனிக்கத்தகும்.

விபீஷணன் நீதி ஒன்றே தன் வாழ்க்கையை நெறிப்படுத்தும் தலைமைக் கொள்கையாக உடையவன்; இது உண்மை. ஆனால், இந்த நீதியோடு கலந்து, நீதியின் நிலையமாகிய இராமபிரானிடத்துப் பெரும் பக்தியுமுடையவன். இவனோடு பரதனை ஒருவாறு ஒப்பிடலாம். கம்பன்.

தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை

(குலமுறை கிளத். 21)

என்று பரதனைக் குறிப்பிடுகிறான். நீதியோடு இராமன்மீது அளவற்ற காதலும் பக்தியுமுடையவன் பரதன் என்பது இராம சரிதத்தை உணர்ந்தார் நன்கறிவர். விபீஷணனும் இவ்விரண்டு தன்மைகளும் உடையவன், இவனிடத்தே நீதியோடு பக்தியும் கலந்துவிட்டமையால், நீதியின் முழுத் தன்மையும் புலப்பட வில்லை. இக்காரணத்தாலேயே இவன்மீது நமது மனம் அத்துணையாசப் பரிந்து செல்லவில்லை.

கும்பகர்ணன் நீதியை மிகவும் நன்றாக உணர்ந்தவன், தனது தமையன்பால் இந்நீதி குறைவுற்ற தன்மையினாலே தங்களுக்குத் தோல்வி உறுதி என்பதையும் நன்கு தெரிந்தவன் நீதியின் நிலையமாகிய இராமனையும் பெரிதும் போற்றி வந்தவன்; ஆனால், அவன்மீது பக்தியால் மீதூரப்பட்டவனல்லன். தனது குலத்திற்கும், தன்னோடு உடன் பிறந்து அரசனாயிருக்கும் இராமனுக்கும் தான் கடமையில் சிறிதும் பிறழக்கூடாது என்று உறுதிப்பாடு உடையவன். இந்த அருங் குணம் நம் மனத்தைப் பெரிதும் கவர்ந்து விடுகிறது என்று சொல் வதில் சிறிதும் கூச்சம் வேண்டாம்,

இராவணன்மீது தான் வைத்திருந்த அளவு விபீஷணன் மீதும் இவன் அன்பு வைத்திருந்தான், இவனுக்குப் பின்னோனாகிய விபீஷணன் போர்க்களத்தில் இவனைச் சந்திக்குமிடத்துக் கம்பன் கூறுவதைக் கவனியுங்கள்.

தந்திரக் கடலை நீந்தித்
தன்பெரும் பலத்தைச் சார்ந்தான்;
வெந்திற லவனுக் கைய
வீடணன் விரைவின் உன்பால்
வந்தனன் என்னச் சொன்னார்;
வரம்பிலா உவகை கூரச்
சிந்தையிற் களிக்கின் றான்தன்
செறிகழல் சென்னி சேர்த்தான்.

முந்திவந் திறைஞ்சி னானை
 முகந்துயிர் மூழ்கப் புல்லி
உய்ந்தனை ஒருவன் போனாய்
 எனமனம் உவக்கின் றேன்; என்
சிந்தனை முழுதுஞ் சிந்தித்
 தெளிவிலார் போல மீள.
வந்ததென் தனியே? என்றான்
 மழையினீர் வழங்குங் கண்ணான்:

(கும்பகர்ணன், 128, 129)

இத்தனை அன்பு இருந்தபோதிலும் விபீஷணனது கருத்திற்கு இவன் இணங்கவில்லை. போர்வீரன் என்ற நிலையில் தனக்குரிய கடமையை மறக்கவில்லை. செஞ்சோற்றுக் கடனிறுத்தல் பாரதநாட்டு வீரமக்கள் பண்டைக் காலந்தொட்டு மேற்கொண்ட தொன்றாம். இக் கடமையே தனக்குரியதெனக் கும்பகர்ணன் கூறுவதை நோக்குங்கள்.

நீர்க்கோல வாழ்வை நச்சி
 நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலஞ் செய்து விட்டாற்கு
 உயிர்கொடாது அங்குப் போகேன்;
தார்க்கோல மேனி மைந்த,
 என்துயர் தவிர்த்தி யாயின்
கார்க்கோல மேனி யானைக்
 கூடிதி கடிதின் என்றான்.

கருத்திலா இறைவன் தீமை
 கருதினால் அதனைக் காத்துத்
திருத்தலா மாகில் நன்றே;
 திருந்துதல் தீரா தாயின்,
பொருத்துறு பொருளுண்டாமோ?
 பொருதொழிற் குரிய ராகி
ஒருத்தரின் முன்னஞ் சாதல்
 உண்டவர்க் குரிய தம்மா.

(கும்பகர்ணன், 154, 156)

தன் குலம்முற்றும் அழிந்துவிடுவது உறுதி. எனினும் தனது தமையனுக்குத் தான் செய்யவேண்டும் கடமையை உலக-லட்சிய மாகவும் வீரலட்சியமாகவும் உளமுருகக் காட்டி வற்புறுத்து கிறான் :

தும்பியந் தொடையல் வீரன்
சுடுகணை துரப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனை யோடும்
வேறுள கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் போற்ற
ஒருவன்மூ வுலகை யாண்டு
தம்பிய ரின்றி மாண்டு
கிடப்பனோ தமையன் மண்மேல்.

(கும்பகர்ணன், 157)

விபீஷணன் 'பெய்திறன் எல்லாம் பெய்து பேசினான். (169). ஆனால், கும்பகர்ணன் மனம் சிறிதும் அசையவில்லை.'

நிலையிற் றிரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. (குறள், 24)

என்றார் வள்ளுவர். இந்த லட்சியத்திற்கு இணங்கவே கும்பகர்ணன் செய்கை உள்ளது. விபீஷணனிடத்து,

மலரின்மேல் இருந்த வள்ளல்
வழுவிலா வரத்தி னால்நீ
உலைவிலாத் தருமம் பூண்டாய்
உலகுள தனையும் உள்ளாய் ;
தலைவன்நீ உலகுக் கெல்லாம்,
உனக்கது தக்க தேயால் ;
புலையுறு மரணம் எய்தல்
எனக்கது புகழ தேயால்

(கும்பகர்ணன், 155)

என்று தன் உறுதியை உரைத்து, இறுதியாக

ஆகுவ தாகுங் காலத்து
    ஆகுவது ; அழிந்து சிந்திப்
போகுவது அயலே நின்று
    போற்றினும் போதல் செய்யும் ;
சேகற உணர்ந்தோர் நின்னின்
    யாருளர் ? வருந்தல் செய்யாது
ஏகுதி, எம்மை நோக்கி
    இரங்கலை, என்றும் உள்ளாய்.

(கும்பகர்ணன், 165)

என்று 'சிரஞ்சீவியாயிரு' என வாழ்த்தி விடை கொடுக்கிறான்.

என்றுஅவன் தன்னை மீட்டும்
    எடுத்துமார்பு இறுகப் புல்லி
நின்றுநின் றிரங்கி யேங்கி
    நிறைகணால் நெடிது நோக்கி
இன்றொடும் தவிர்ந்த தன்றே
    உடன் பிறப்புஎன்ப தென்றான் ;
வென்றிவெந் திறலி னாலும்
    அவனடித் தலத்து வீழ்ந்தான்.

(கும்பகர்ணன், 166)

உடன்பிறந்தோர் பிரிவு

இங்ஙனமாக உடன் பிறந்தோர் இருவரும் பிரிகின்றனர். போர் நிகழ்கின்றது. கும்பகர்ணனது வீரப் பெருஞ் செயல்களால் குரங்குச் சேனை அழிவுற்றது :

ஆக்கினான் களத்தின் ஆங்கோர்
    குரங்கின தடியு மின்றிப்
போக்கினான் ; ஆண்மை யோடும்
    புதுக்கினான் புகழை அம்மா !

(கும்பகர்ணன், 204)

இராமனே இவனை எதிர்த்தழிக்க முன்வருகின்றான். அவனை நோக்கிக் கும்பகர்ணன் கூறும் வார்த்தைகளில் இவனது பேராண்மை கொந்தளித்து வெளிப்படுகின்றது.

உம்பியை முனிந்திலேன்: அவனுக்கு ஊர்தியாம்
தும்பியை முனிந்திலேன்: தொடர்ந்த வாலிதன்
தம்பியை முனிந்திலேன்; சமரந் தன்னில்யான்;
அம்பியல் சிலையினாய், புகழன் றாதலால்.

தேடினன் திரிந்தனன் நின்னை; திக்குஇறந்து
ஓடியது உன்படை உம்பி யோர்ந்தொரு
பாடுற நடந்தனன்; அனுமன் பாறினன்;
ஈடுறும் இவனைக்கொண்டு எளிதின் எய்தினேன்.

(கும்பகர்ணன், 281, 282)

இங்கே 'இவன்' என்றது சுக்ரீவனை. இராமனது அம்புகளால் கும்பகர்ணனது முகத்தினின்றும் சோரி வழிந்து தன்மேற்பட, மூர்ச்சித்துக் கிடந்த சுக்ரீவன் தெளிகிறான். தன்னிலையை உணர்ந்து கும்பகர்ணனது மூக்கையும் செவியையும் அள்ளிப் பிடுங்கி எழுந்து ஆகாயத்தில் பாய்ந்து தங்கள் குரங்குச் சேனை யிருக்குமிடத்திற்கு வந்து சேர்கின்றான். பின்னர் இராமனுக்கும் கும்பகர்ணனுக்கும் கடும் போர் நிகழ்கின்றது. இராமனது வில்லினால் இவனுடைய கைகால் முதலிய உறுப்புக்கள் அற்று வேறு வேறாக வீழ்கின்றன. இந்த நிலையிலும் கும்பகர்ணனது வீரச்செயல் குறைவுபடவில்லை. இராமனும் இதனைக் கண்டு 'மலர்க்கரம் விதிர்ப்புற்றான்' என்று சொல்லப்படுகின்றது. தன் தமையனான இராவணனுக்கு இன்னும் உதவுவதற்கு உறுப் புக்கள் இல்லையே எனக் கும்பகர்ணன் வருந்துகிறான்.

ஐயன் விற்றொழிற்கு ஆயிரம் இராவணர்
அமைவிலர்: அந்தோ; யான்
கையுங் கால்களும் இழந்தனன்; வேறினி
உதவலாந் துணை காணேன்.

(கும்பகர்ணன், 353)

இவ்வாறு நினைக்கும் மனமுடைய கும்பகர்ணனை நம்மால் வியந்து போற்றாதிருக்க முடியுமா? விபீஷணனிடத்துள்ள

அன்பும் இறுதி வரையில் இவன்பால் மிக்கு விளங்குகிறது. அவனுக்கு அடைக்கலங் கொடுத்து அவனை ஆதரிக்க வேண்டுவது ஒன்றுதான் தனது வேண்டுகோள் என இராமனிடம் கூறுகின்றான்.

நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு நெறியறியான் என்தம்பி ;
ஆதியா யுனையடைந்தான் ; அரசருருக் கொண்டமைந்த
வேதியா இன்னுமுனக் கடைக்கலம்யான் வேண்டினேன்.
(கும்பகர்ணன், 356)

உயிர் துறக்கும் சமயத்துத் தனக்கென இவ்வீரர் பெருந்தகை வேண்டியது ஒன்று உண்டு.

மூக்கிலா முகமென்று முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார்; நோக்காமை நுன்கணையால் என்கழுத்தை
நீக்குவாய்; நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவாய்; இதுநின்னை வேண்டுகின்ற பொருள்என்றான்
(கும்பகர்ணன். 359)

இவ்வாறு உடன்பிறந்தோன்பொருட்டு உயிரைப் போர்க் களத்தில் துறந்த கும்பகர்ணனது பெருமை, இராம சரிதத்தி லேயே வரும் ஏனையோர்கள் சரிதங்களை நோக்கத் தனிப்பட்ட மேம்பாடுடையதாகப் புலப்படுகிறது. இராமனுக்கு இரண்டு தம்பியர்கள்; இலக்குமணன், பரதன் என, இவர்களுள் இலக்கு மணன் இராமனது அடிமைபோல இருந்து உடன் சென்று காவலும் ஏவலும் புரிந்து வாழ்கின்றான், பரதன் இராமனது பக்தனாய் விளங்குகின்றான். இவ்விருவரும் போல இராவண னுக்கும் தம்பியர் இருவர். விபீஷணன் தமையனைத் துறந்து நீதியின்பொருட்டுப் பகைப்புலம் சார்கின்றான். கும்பகர்ணன் நீதியினும் தனது கடமையே பெரிதென மதித்து அதன்பொருட்டு மடிகின்றான். வாலி, சுக்ரீவன் என்ற சகோதரர்கள் சரித்திரமும் நாம் இவ்விடத்து நோக்கத் தக்கது. சுக்ரீவன் தனக்குச் சதி செய்துவிட்டான் என்று பிழையாக உணர்ந்து. வாலி அவனைக் கொல்ல முற்பட்டு, தானே மடிகின்றான். சுக்ரீவன் தன் தமை யனது அரசுரிமை பெற்று ஆட்சி புரிகின்றான். இவ் அனைவர் களுடைய சரித்திரத்துள்ளும், கும்பகர்ணனுடைய குணப் பெருமை தனிப்பட்ட நயத்தோடு நம்மை வசீகரிக்கின்றது.

4. மாயா சனகன்

இதிகாசங்கள் செயற்கை யியற்கை யென இருவகைப்படும். செயற்கை யிதிகாசம் ஆசிரியரொருவரால் ஒரு குறிப்பிட்ட காலத்து ஆக்கப்படுவதாம். மிலிட்டனாரது 'சுவர்க்க நஷ்டம்' என்பது இதற்கு உதாரணம். இயற்கை யிதிகாசத்தின் உட்பொரு கதையானது முதன்முதலில் ஒருவரால் ஆக்கப்படாது ஒரு சமுதாயத்தின் பொது வுள்ளத்திலே தோன்றி வளர்ந்து, ஒருபடித்தாய் சமூகவாழ்க்கையி லுதித்த மக்களாற் போற்றிப் போஷிக்கப்பெற்று, காலகதியிற் பேருருத் தாங்கி நிற்பதாகும். இங்ஙனம் வளர்ந்து வந்த பெருங்கதையினைப் பிற்காலத்துத் தோன்றிய பெரும்புலவரொருவர் அங்கப் பிரத்தியங்கங்கள் தகுதி பெற விளங்கும் வண்ணம் உருவமைத்து வெளியீடு செய்வர். இராமாயணம் இயற்கை யிதிகாசமாகுமென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

புதிய நிகழ்ச்சி

வான்மீகி முனிவர் முதன்முதலில் இதனை வெளியிட்டருளினார். இயற்கை யிதிகாசமாதலின் அவர்க்கு முன்பும் இச்சரித்திரம் வழங்கியதாகுமெனவே கொள்ளுதல் வேண்டும். தமிழ் நாட்டிலும் மிகப் பூர்விக காலந்தொட்டு இச்சரிதம் வழங்கி வந்து தமிழ் மக்களது உள்ளத்தைக் கொள்ளைகொண்டு அவர்களது அன்பினால் அழகு செய்யப்பெற்று உருநலங் கனிந்ததேயாகும். 'கடுந்தெறலிராமனுடன் புணர்சீதையை - வலித்தகையரக்கன் வௌவிய ஞான்றை - நிலஞ்சேர் மாதரணி கண்ட குரங்கின் செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு' என்ற புறநானூற்றுச் (378) செய்யுளினடியை நோக்குக. வான்மீகி தந்துள்ள அளவில் இராம சரிதம் நமது நாட்டில் அமைந்துவிடவில்லை. சரிதத்தின் பேரழகு மக்களை வசீகரித்த வண்ணமாகவே இருந்தது. அதனிடையிடையே புதுப்புதுச் சம்பவங்கள் அழகுற அமைந்து விளங்கின. இப் புதுச் சம்பவங்களில் ஒரு சில ஆழ்வாராதியர்களது அருளிச் செயல் களிலே காணப்படுகின்றன. இம் மாயாசனக சரித்திரமும் மேற்கூறியவாறு அமைவுற்ற நூதன சம்பவமே. வான்மீகி

இராமாயணத்தில் இச்சரித்திரம் காணப்படவில்லை, அழகு நலமுற்றி ரசங்கனிந்து தென்னாட்டில் வழங்கிய இராம சரிதத்தைக் கம்பர் தமது அரிய புலமைத்திறத்தால் மதுரவாரியமுதெனை மாந்தும்படி இயற்றியருளினர். இயற்கையழகும் செயற்கை நலமும் கம்பராமாயணத்தில் ஒருங்கமைந்து இன்பஞ் செய்கின்றன.

மாயாசனகர் சூழ்ச்சி

இச் சரித்திரத்தின் வைப்புமுறை நன்கு சிந்தித்தற்குரியது. முதனாட் போரில், தனது ஆண்மையனைத்துந் தோன்ற இராவணன் பொருது முடிவில் தோல்வியுற்றுச் சோர்ந்திருக்கின்றான், அப்பொழுது மாலியவான் இடித்துரைத்துக் குற்றங்களை யெடுத்துக் கூறி நன்மதி கொளுத்த முயல்கின்றான். மகோதரன் மாலியவானைத் தடுத்துக் கும்பகர்ணன் முதலிய போர்வீரர்களிருக்க வருந்துதல் வேண்டா எனக் கூறி அவனைப் போர்க்கு விடுகவெனத் தூண்டுகின்றான். இதற்கிசைந்து இராவணன் கும்பகர்ணனைப் போர்க்குச் செல்ல ஏவுகின்றான்; ஏவியதும் இராவணன் உள்ளம் சிறிது அமைதியுறுகின்றது. இந்நிலையில், சீதையையெய்தும் உபாயம் என்னென மகோதரனை வினவ, மாயாசனகச் சூழ்ச்சி நிகழ்கின்றது. ஒரே சமயத்தே, போர்க்களத்தில் கும்பகர்ண யுத்தமும் இலங்கை நகரில் இராவணன் கொடுஞ் சூழ்ச்சியும் நடைபெறுகின்றன, இராவணனை நோக்குமிடத்து, அவனது உள்ளம் போர்க்களச் செய்தியை யெண்ணி யலைவுறாதபடி தனக்கு ஏற்றதொரு வழியில் முயல்கின்றான். இனிப் படலமுறை தானும் கும்பகர்ண யுத்தத்திற்கும் அதிகாயன் யுத்தத்திற்கும் இடையே வைக்கப் பெற்றிருத்தல் கவனித்தற்குரியது. இவ்விரண்டு யுத்தங்களையும் தொடர்ந்து கற்பதாயின் வாசிப்போருள்ளம் சலிப்பெய்தும்; அங்ஙனம் சலிப்புறாதபடி இடையே வேறு வகையாக மனத்தைக் கவரும்வண்ணம் சரித நிகழ்ச்சியொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

மாயாசனகச் சரிதத்தைக் கம்பர் நிகழ்த்து முறையும் ஆற்றலும் நன்குணர்ந்து இன்புறற்பாலன. சீதையை யெய்தும் உபாயம் கூறுகவென மகோதரனை இராவணன் வினவுகின்றான்; அவன் கூற, மகிழ்ச்சியால் அவனைத் தழுவி மாயாசனகனைச் சீதையிருக்குஞ் சோலைக்குக் கொண்டுவருக வெனப் பணித்து,

தான் அங்கே விரைந்து சென்று அவளைக் காண்கிறான். சீதையைக் கண்டதும், தன் உள்ளத்தைப் பீறியெழுந்த காமப் பெருவெள்ளத்தால் அலைப்புண்டு, அவளை இரந்து நின்று நிலமிசை முடிவைத்து வணங்குகின்றான். சீதை நடுநடுங்கி, வணங்கி நிற்பானைப் பார்த்தல் போலுஞ் செய்யாது, அவனது தீச்செய்கை வானமும் வையமும் தகர்ந்து அழிவெய்தத் தக்கன வெனவும், தான் உயிர் வைத்திருப்பது தனது நாயகனை யின்னுங் காணலாமென்னும் காதலாலும், அரக்கரும் அவர் களைப் பலிகொடு கலந்த பாவியும் தனது நாயகனால் தலைசிந்தி யழிவதைக் காணவேண்டுமென்னும் விருப்பத்தாலு மெனவும் எதிர் மொழிகின்றாள். இராவணன் கோபங்கொண்டு அயோத்தியிலுள்ள வுறவினரையும் மிதிலையிலுள்ள தந்தை முதலினரையும் கொன்று வரும்படி அரக்கர்களைத் தான் ஏவியிருப்பதாக வுரைக்கின்றான், சீதை மிகவும் வருந்து கிறாள்.

சீதையின் சீற்றம்

இந்நிலையில் மாயாசனகனை மகோதரன் பாசத்தாற் கட்டிக் கொணர்கின்றான். சீதை தன்னைத் தாங்கலாற்றாது நிலம் வீழ்ந்து அழுதாற்றுகின்றாள். இவள் படுந் துன்பத்தைக் கண்ட அளவில், சனகன் மீதுள்ள அன்பினால் இவ்வகைத் துயருறுபவள் அவன் பொருட்டுத் தனக்கு இரங்குதல் கூடுமென எண்ணியவனாய்ச் சனகனுக்கு இந்திர பதவி முதலியன கொடுப்ப தாகச் சொல்லி மறுபடியும் வேண்டுகின்றான். சீதை மிகக் கனன்று இராவணனுக்கு வரவிருக்குங் கோர மரணத்தைத் தான் எதிர்நோக்கியவண்ணம் யிருத்தலைக் கூறுகின்றாள். இராவணன் சீற்றங்கொண்டு அவள்மேற் பாய்ந்து ஓடுகின்றான். மகோதரன் 'சனகன் வேண்ட இவள் இசையும்' எனத் தடுத்து நிறுத்து கின்றான். பின் மாயாசனகன் சீதையின் அடிவீழ்ந்து இரக்கின்றான். சீதை பெருஞ்சீற்றங் கொண்டு சனகனைப் பழித்துரைத்து 'நீ சனகன் ஆவையோ' வென ஐயுற்றுக் கூறுகின்றாள். இவனை வெட்டி விடுகின்றேனென இராவணன் எழுகின்றான். இவனையும் கொன்று எல்லோரையுங் கொன்று நீயும் எங்கோனம்பினாற் செத்தொழிவா யெனச் சீதை சபிக் கின்றாள். மகோதரன் இடைப்புகுந்து மாயாசனகன் யாதொரு தவறும் இழைக்கவில்லையே யென்று கூறி இராவணனை விலக்கு கின்றான்.

உண்மை தெளிதல்

இந்நிலையிலே போர்க்களத்தி லெழுந்த ஆரவாரம் இராவணனது செவியிற் படுகின்றது. அவனது உள்ளம் துணுக்குற்றது. தூதர் கும்பகர்ணன் இறந்துவிட்டானென்று உணர்த்துகின்றனர். இராவணன் அடியற்ற மரம்போற் கீழ் வீழ்ந்து புலம்புகின்றான். கும்பகர்ணனது அரிய வீரத் திறனுக்கும் அன்புக்குந் தக்கவாறு நமது உள்ளம் இப் புலம்புரையிலே ஈடுபடுகின்றது. சீதை களிப்படைகின்றாள். இராவணன் அதைக் கண்டு இப்பொழுதே அனைவரையும் கொன்றொழிப்பேனெனத் தீப்பிறந்த கண்ணினனாய்ச் செல்லுகின்றான். மகோதரன் மாயாசனகனைச் சிறையிலிடும்படி கட்டளையிட்டு வேறோர் திசை நோக்கிப் போகின்றான். திரிசடையால் சீதை மாயா சனகனது உண்மை தெளிகின்றாள்.

இப் படலத்தின் கண்ணுள்ள நயங்கள் மிகப் பல. அவை யனைத்தும் பல முறை கற்று இனிதினுணரத்தக்கன.

5. அழகுத் தெய்வம்

கம்பன் என்ற கவிச்சிற்பி இயற்றிய இராமாயணத்தை ஏழு பிரகாரங்களோடு அமைந்த காவியப் பூங்கோயில் என்று கூறலாம். இப் பூங்கோயிலுள் எங்கும் பிரஸன்னமாய் விளங்கும் தெய்வம் அழகுத் தெய்வம். சிற்பி இயற்றும் திருக்கோயில்களுள், பிரதிஷ்டை செய்த ஓரிடத்திலே தெய்வம் நின்று விளங்க, சுற்றுமுள்ள மற்றை இடங்களிலெல்லாம் அதன் தெய்வவொளி பரந்து, தெய்வமணம் பரிமளியா நிற்கும். ஆனால் நம் கவிப் பெருந்தகை இயற்றிய இந்தக் காவியப் பூங்கோயிலே அழகுத் தெய்வம்,

> என்னுறையும் ஒழியாமல் யாண்டையினும் உளனாய்த்தன்
> உள்ளுறையும் அழகனைப்போல் எம்மருங்கும்
>
> (ஊர்தேடு. 234)

உலவிவாரா நிற்கும். அதன்கணுள்ள அழகுத் தெய்வத்திற்குத் தான் எத்தனை வண்ணங்கள்! எத்தனை நிறங்கள்! எத்தனை கோலங்கள்! எத்தனை திருவுருவங்கள்! இத் தெய்வத்தின் விசிஷ்ட குண வைபவங்களெல்லாம் இக்காவியத்திற் காணப் படுதல் போல் வேறு எங்குக் காணலாம்?

அழகுத் தெய்வம் இடந்தோறும் நிர்த்தனம் செய்யும் இக் காவியப் பூங்கோயிலில் அத் தெய்வத்தின் அந்தராத்மாவாய் வீற்றிருக்கும் நாயகனது திருப்பெயர் தானும், 'அழகன் என்ற பொருளையே உட்கொண்டது. கவீந்திரனாகிய கம்பனும் 'அல்லையாண்டமைந்தமேனி அழகனும்' என்றும் 'உள்ளுறையும் அழகனைப்பேரல்' என்றும் கூறுகின்றனன். காளிதாஸனும் தனது ரகு வம்சத்திலே (X. 67.) ''அழகுடைமை பற்றி 'ராமன்' எனப் பெயரிட்டார்'' என மொழிகின்றனன். இப் பெயர் மிகவும் பொருத்தமுடையதாகக் கருதி

> நித்த மணாளர் நிரம்ப அழகியர்
> சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
>
> (திருவாசகம் அன்னைப்; 3)

எனச் சைவ சமயாசாரியருள் ஒருவரும் தமிழ் செய்த தவத்தால் தோன்றியவரும் ஆகிய மணிவாசகப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர். ஆகவே இத் திருப்பெயர் சைவ சமயமும், வைஷ்ணவ சமயமும் ஒருங்கு போற்றிக்கொண்டதாகும்.

அழகெலாம் ஒருங்கே காணல்

இத்தனைச் சிறப்பு வாய்ந்த 'அழகன்' என்று பொருள்படும் இராமநாமத்தைக் கொண்டவனையே கம்பராமாயணம் கதாநாயகனாகக் கொண்டு விளங்கும். இதற்கேற்ப இக்காவியமும் தனது பேரழகுக்கு எல்லை ஆராயப் புகுவோரது அறிவின் அளவன்றிப் பிறிதில்லை என்று கூறும்படி உள்ளது. தன்னகத்தே அழகெல்லாம் ஒருங்கே காணலாம்படி இது விளங்குகின்றது. இதன் பேரழகில் மயங்கி ஈடுபடாத தமிழ் மக்கள் இல்லை.

> அழகெலாம் ஒருங்கே கண்டால்
> யாவரே ஆற்ற வல்லார்?
>
> (கோலங்காண். 20)

மேலும் ஒன்று, கம்பனது பெருங்காவியத்தில் கூறப்படும் பொருளும் ''அழகன்'' எனப் பெயரிய கதாநாயகனது சௌந்தரிய வைபவமேயாகும். இராமபிரானுடைய ரூப - சௌந்தர்யம், குண - சௌந்தர்யம், வீரசௌந்தர்யம் இம் மூன்றையும் அவனது திவ்ய சரிதத்தில் வைத்து உலகிற்கு விளக்குவதே இராமாயணம். அந்தமில் அழகனது மூவகை அழகுகளையும் அழகு பெற அமைத்துப் பாடவேண்டும் என்ற பேரவா மகாகவி கம்பனுக்கு உண்டாயிருத்தல் முற்றிலும் இயல்பே. இப்பேரவாவைத் தனது பேராற்றற் பெரும் புலமை கொண்டு எவ்வகையினும் குறைபாடின்றிக் கம்பன் நிறைவேற்றியுள்ளான் என்பது அவனது காவியத்தைக் கற்றுணர்ந்தோர் யாவரும் நன்கறிவர். இராமபிரானது அழகுகளை அழகுபெற அமைத்தல் எளிதான காரியமன்று. பற்பல கவிஞர்கள் தங்கள் தங்கள் மொழிகளில் இராமசரிதத்தை இயற்றியுள்ளார்கள். இப் புலவர்களது காவியங்களில். இச்சரிதத்தின் பேரழகு முற்றும் தோன்றுகிறதென்று கூறமுடியாது. காலத்தாலும் சிறப்பாலும் ஆதிகவியாகிய வான்மீகி முனிவரது ஆதிகாவியத்தில் மட்டுமே அது ஒருவாறு முற்றிலும் விளங்குகிறது என்று கூறலாம். கம்பன்

அமிழ்தினைச் சுவை செய்தென்ன
அழகினுக் கழகு செய்தார்;
இமிழ்திரைப் பரவை ஞாலம்
ஏழைமை யுடைத்து மாதோ
(கோலங்காண். 3)

என்று கூறியது இங்குப் பொருந்தும். ஆனால், உலக மகா கவிஞருள் ஒருவனாகிய கம்பன் இந்த அருஞ் செயலை மேற்கொண்டு செய்து முடித்து வெற்றி யெய்தினன். செயற்கரிய செய்வார் பெரியாராதலின், பெரும்புலவோரினத்தில் கம்பனை வைத்துப் போற்றல் தக்கதேயாகும். கவித்துவத்தில் இவனைப் போன்ற பெரியோர் உலகத்தில் ஒரு சிலரே உள்ளார். இவனால் அழகுதானும் அழகு பெற அமைக்கப்பெற்ற காவியப் பூங்கோயிலில், அழகுத்தெய்வம் ஆனந்த நிர்த்தனம் செய்தல் இயற்கையே யன்றோ?

பலவகைப் பெருமைகளும் வாய்ந்த கம்பனது காவியத்தில் இராமனது ரூப-சௌந்தர்யம் விளங்கும் பகுதியைச் சிறிது நோக்குவோம். ஒரு காவிய-நாயகனது அழகினைக் கணக்கிட்டு முறைப்படுத்து ஜாப்தா செய்து பாதாதிகேச பரியந்தம் வருணித்தல் தக்க முறையன்று. ரஸிக தத்துவ ஆராய்ச்சியாளர்கள் அதனை உசிதம் எனவும் கருதார். பேரழகுகளை நன்றாக உணர்த்தும் முறையும் அதுவன்று. கதாநாயகன் வீதியில் உலா வரும்போது அவனது பேரழகில் மக்கள் ஈடுபடும் வகையினாலே, அதனை உணர்த்துதல்தான் தக்க நெறியென்று தமிழர் கையாண்டு வந்திருக்கின்றனர். இக் காரணம் பற்றியே பெருங்காவியத்தில் ஓர் உறுப்பாக உலாவியல் கொள்ளப் பட்டிருக்கிறது.

இங்ஙனம் உலா வருவதற்குக் கதாநாயகனது திருமணமே தக்க சந்தர்ப்பமாகப் பெரும்பாலும் கவிஞர்களால் கருதப் பட்டுள்ளது. இதன் காரணம் எளிதில் அறியக்கூடியதே. மக்களுக்குத் திருமணமாகும் பருவத்தில்தான் அவர்களது இயற்கையழகு மிகவும் சோபித்துப் புலப்படுவது. சிந்தாமணி, கந்த புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றில் மணப் பருவமே உலாவிற்குத் தகுந்த அவசரமாகக் கொள்ளப் பட்டுள்ளது. இவைகளினும் சிறந்து விளங்கும் கம்ப-ராமாயணத்திலும் இராமனது திருமண அவசரத்தில்தான், அவன் உலா எழுந்தருளுகின்றான்.

இவ் அரும்பெருங் காவியத்தில் பாலகண்டத்தில் கதாநாய கனையும், கதாநாயகியையும் அலங்கரித்துத் திருமணம் நிகழ்த்தும் பகுதியான கோலங்காண் படலம் கடிமணப் படலம் என்ற இரண்டிற்கும் முன்னால் உலாவியற் படலம் வைக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் சீதைக்குரிய மணவாளன் என்ற ஒரு காரணத்தால் மட்டுமன்று, மிதிலா நகர மாந்தர்கள் இராமனை நேரில் கண்கொண்டு காணவிழைந்தது. இது ஒன்றுமட்டும் இருப்பின் சிறவாது. அவனது பெரும்புகழ் மிதிலையில் நன்கு பரவுதல் வேண்டும். இக்காரணத்தால் இராமபிரானது வாழ்க்கையின் முற்பகுதியில் அவன் நிகழ்த்தியுள்ள மும்மைப் பெருஞ்செயல்களுக்குப் பின்னரே உலாவியல் அமைக்கப்பெற்றிருக் கின்றது. இம்மூன்றும் முறையே தாடகை வதம், அகலிகையின் சாப நிவாரணம், சிவபெருமானது தனுர்ப்பங்கம்.

தசரதர் தம் புத்திரராகிய இராமபிரானைத் தமது ஆவியாகக் கருதி, அன்பு பாராட்டி வளர்த்து வரும் நாளில், விசுவாமித்திர முனிவர் வந்து தமது வேள்வியைக் காத்தற்கு அரசகுமாரர்கள் நால்வரினும் இக் கரிய செம்மலை உதவவேண்டு மென்று உயிரிரக்கும் கொடுங் கூற்றைப் போல் அரசனிடம் யாசிக்கின்றார். முனிவரது கோபாக்கினியை அஞ்சியும், வசிஷ்ட ருடைய தீர்க்க ஆலோசனையை முன்னிட்டும் தசரதர் இணங்கு கின்றார். அங்ஙனமே இராமபிரானும் அவனது நிழல் போன்ற இலக்குமணனாகிய இளைய பெருமாளும் விசுவாமித்திர முனிவருடன் வனத்திற்குச் செல்கின்றனர். அடியெடுத்து வைத்த அளவில், தாங்கரிய பேராற்றலோடு தாடகையே தலைப்படு கின்றாள். இக் கொடிய அரக்கியை வதஞ்செய்து வேள்வியை அரக்கர்களால் இடையூறு சிறிதும் வாராமல் இருவரும் காத்தனர். விசுவாமித்திர முனிவர் தம்முடைய வேள்வி முடிந்ததும் இவர்களை மிதிலை நகரத்துக்கு அழைத்துச் சென்றார். செல்லும் நெறியில், சாபத்தாற் கல்லாய்க் கிடந்த அகலிகையின்மீது இராமனது பாதத்துகள் படுதலும் அவள் பரிசுத்தமெய்திப் பண்டையுருப் பெற்றனள். இவ் இரு பெருஞ் செயலும் இராமபிரான் மிதிலை புகும் முன்னரே நிகழ்ந்தன. ஒன்று, அதாவது தாடகை வதம். இவனது வில்லாற்றலை விளக்குகின்றது. மற்றையது இவன் 'நவையருங் குணங்க ளென்னும் பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணியமூர்த்தி' என்பதனை உணர்த்துகின்றது.

இராமனது பெரும் புகழ்

ஆகவே, இராமபிரான் மிதிலை நகர் புகும் முன்னரே அவனது பெரும்புகழ் அங்கே புகுந்து உலாவுவதாயிற்று. மிதிலை சென்று சேர்ந்ததும், சிவபெருமானது வில்லை யொடித்தவனே சீதைக்குரிய மணவாளன் என்று நிச்சயம் செய்திருந்தபடி, சீதை கழுத்திலிட மணமாலை எடுப்பது போன்று அத்தனை எளிதிற் சிவதனுவை எடுத்து அதனை வளைத்து முறித்தனன்! இவ் அரும் பெருஞ் செயலாம் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த புகழ் இப்போது மிகவும் அதிகரித்து, மிதிலா நகரத்து மக்கள் மனத்தில் இராமபிரானைத் தரிசிக்க வேண்டும் என்ற அவாவை விளைவித்தது. மேல் விவரித்தனவற்றைக் கம்பனே,

அரத்தமுண் டனைய மேனி யகலிகைக் களித்த தாளும்
விரைக்கருங் குழலிக் காக வில்லிற நிமிர்ந்து வீங்கும்
வரைத்தடந் தோளும் காண மறுகினில் வீழும் மாதர்

(உலாவியல். 5)

என்று கூறியிருக்கின்றனன், வில் இறுத்தவுடன் தசரதருக்குச் செய்தி யனுப்பப்படுகின்றது. அவர் அயோத்திமா நகர மாந்தர்களுடன் களிப்புற்று வந்து மிதிலையை நெருங்கினர். இவ் வளவில் ஜனகரும், இராமபிரான் முதலியோரும் எதிர்கொண்டு சென்றனர். தசரதர் தமது மூத்த திருக் குமாரனைக் கண்டதும் உடல் பிரிந்த ஆவி ஒன்று கூடியதுபோல் அன்புறத் தழுவி, அவ் அழகின் செல்வத்தைச் சேனைகள் புடைசூழத் தம்பியர் மருங்குவர முற்கொண்டு செல்கெனப் பணித்தருள் இன்றார். இவ்வாறு முற்கொண்டு செல்லும் அளவில், மிதிலா நகரத்து மகளிர்கள் வீதிகளில் திரண்டு மொய்க்கின்றார்கள். உலாவியல் தொடங்குகின்றது. பாலகாண்டத்தில் எத்தனை பொருத்தமாக, எத்தனை உசிதமாக, எத்தனை அழகாக, உலாவியலின் வைப்பு முறை ஏற்பட்டுள்ளது!

ஒரு சிறு விஷயம் இங்கே கவனிக்கத்தக்கது. மிதிலா நகரத்து மகளிர்கள் வீதியில் திரண்டு மொய்த்தார்கள் என்று கூறினேன். மிதிலா நகர அரசர் எதிர்கொண்டு சென்று தசரதரை அழைத்து வந்து நகருட் பிரவேசிக்கும்பொழுது, அந்நகரத்து ஆடவரிற் பெரும்பாலார் தம் அரசரோடு உடன் செல்வர். இவ் அவசரத்தில் மாளிகைகளில் தங்கியிருக்க மனம் அமைந்து வீதிவந்து

நோக்குவோரெல்லாம் மகளிராய்த்தான் இருக்கவேண்டும். அன்றியும் ஆடவர்களது ரூப செளந்தர்யத்தை அளந்தறிய வல்லார் மகளிரே. அவர்களே அந்த ரூப செளந்தர்யத்தைக் கண்ணால் முகந்து மதிப்பிட்டு ரஸிக்கக் கூடியவர்கள். இக் காரணங்களால் உலாக்காணுதற்குப் பெண்பாலர்களே மாளிகை களிலும் வீதிகளிலும் நெருங்கி திற்பதாகச் சொல்வது கவிமரபு. பெண்பாலருள்ளும் பொதுமகளிருடைய ஈடுபாடுகளும் பரவசச் செயல்களுமே இவ் இயலில் வருணிக்கப்படுவன. இவற்றின் பொருத்தமும் ஒளசித்தியமும் அறிந்து இன்புறற்பாலன.

உலாவியல்

மேலே கதைப்போக்கில் உலாவியலின் வைப்பு முறை உசிதமா யமைந்தமை காட்டப்பட்டது. வேறொரு முறையானும், அதாவது கவிதா ரீதியிலும் ரஸானுபவ முறையிலும், வைப்பு முறை பொருத்தமோவென நோக்குதல் வேண்டும். தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றியவனாகிய இராமன் திரு அவதாரம் செய்தருளிய பின்னர், தசரத சக்கிரவர்த்தி விசுவாமித்திர முனிவரிடம் இராம லக்ஷ்மணர்களை அடைக்கலமாகக் கொடுத்து வழிப்படுத்துங் கையடைப் படலத்திலும் அம் முனிவர்கூடவே சென்று தாடகையை வதஞ் செய்யும் தாடகைவதைப் படலத் திலும், அம் முனிசிரேஷ்டரது வேள்வியை அரக்கரது இடையூற கற்றிக் காக்கும் வேள்விப் படலத்திலும், அவரோடு மிதிலைக்குச் செல்லும் வழியில் அகலிகை சாபந்தீர்த்த அகலிகைப் படலத்தி லும் நம்பி செய்கையானது விரைந்து செல்லுகின்றது. இவ் விரைவோடொப்ப வாசகர் மனமும் கிளர்ந்து விரைந்து உடன் தொடர்கின்றது.

வனைந்தனைய திருமேனி

பின் மிதிலைக் காட்சிப் படலத்தில் இராமனது காதல்பயிர் செழித்து வளரும் அதிமோகனமாகிய இன்ப நிலத்தை இராம னோடு நாமும் கண்டு களிக்கின்றோம். பின்,

> அறந் திறம்புமென்று ஐயன் அயோத்தியிற்
> பிறந்த பின்பும் பிரிவில ளாகி (நகர்நீங்கு. 223)

மிதிலா நகரில் தோன்றிய சீதாதேவியின் திவ்விய தரிசனத்தை இராமனோடு நாமும் பெற்று வனைந்தனைய திருமேனி

அவ்வள்ளலைப் போன்று, அவனது கவியமை கீர்த்தியைக் காவியப்பூங்கோயிலாகக் கற்பித்த கம்பநாடனைப் போன்றும் செஞ்சொற் கவியின்பத்தில் நமது மனமும் அடங்காப் பெருமகிழ் வெய்துகிறது. மிதிலையைக் கண்டு, சீதாதேவியைக் கண்டு ஆச்சரிய விம்மிதராயிருக்கும் இராமனையும் நம்மையும் விசுவாமித்திரர் அந்நகர மன்னராகிய ஜனகர்பால் வழிப்படுத்து கின்றார். இருந்த குலக் குமரர்களாகிய இராமனையும் இலக்கு மணனையும், இரு கண்ணும் முகந்து அழகு பருக நோக்கிய ஜனகருக்கு இராமனது குலப்பெருமையை யுணர்த்த நாமும் உணர்ந்து அவர் மாய-விற்குத் தோற்று மயங்கி வருந்துதலோடு நம் மனமும் குழைந்து பரிவெய்துகின்றது.

பின் கார்முகப் படலத்தில் சிவதானுஸை கொண்டு வரப்பெற்று அது இராமனால் இற்றுண்டதும் ஜனகர் குலமும் சீதாதேவியின் நலமும் பயன் பெற்றவாறு போல், நாமும் பயனுறுகின்றோம். வில்லினை ஒடிக்கும் செய்கை துடிப்புடன் விரைந்து நிகழ்கின்றது. நமது மனமும் மகிழ்வால் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வளவில் அதற்கோர் சாந்தியும் அமைதியும் வேண்டப் படுகின்றது. ஜனகரது திருவோலை பெற்று, தசரதர் சதுரங்க சேனையுடனும் அயோத்தி நகரத்தாருடனும் மிதிலைக்குச் செல்கின்றார். செல்லும் நெறியில் சந்திரசயிலத்தின் மலைவளங் கண்டு பூக்கொய்தும் புனலாடியும் உண்டாடியும் அயோத்தி நகரினர் செல்கின்றனர். சாந்தியும் அமைதியும் விரும்பிப் பெற்ற நம் மனமும் இன்புறுதற்கு ஒருப்பட்டு இன்ப வழி நிற்கின்றது. இராமனும் சீதையும் போலவும், தசரதன் ஜனகன் போலவும் அயோத்தியும் மிதிலையும் ஒன்று கூடும் சந்தர்ப்பத்தில் நமது மனமும் கவியின்பத்தில் ஒன்றிவிடத் தயாராகின்றது.

காய் கனிதல்

இந்நிலையில் உலாவியல் நிகழ்கின்றது. சிறிது முன் காய்ப் பருவத்திலிருந்த இன்பம் இப்போது கனியாய் முதிர்கின்றது. நமது மனமும் இன்பத்தில் ஆழ்ந்து ஈடுபட்டு நிற்கின்றது. வரைக்காட்சிப் படலம் தொடங்கி உலாவியல் முடியவுள்ள பகுதியை, 'கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத் தழுத்திய' முறைக்கு ஒருவாறு ஒப்பிடலாம்! இவ்வாறு இன்பரஸம் கனிந்து சாறாகிப் பெருக்கெடுத்துச் செல்லும் அளவில், நம் சிந்தையைத் தன் வசப்படுத்த வேண்டியது அவசியம் ஆகின்றது. கோலங்காண் படலத்தில், பெரு.வெள்

ளத்தில் அலைப்புண்டு சென்றுகொண்டிருந்த நமது மனம் ஒரு சிறிய கால்வாய் வழியாக இழுக்கப்பட்டு மந்த கதியில் செல்லு கின்றது. பின் கடிமணப் படலத்தில் இராமனும் சீதையும் காதற்கடல் நீந்திக் கரையேறியது போல நம் மனமும் கரையேறு கின்றது. இறுதியில் பரசுராமப் படலத்தில் பரசுராமனது மழு எத்துணை விரைவில் இராமனால் அழிக்கப்பட்டதோ அத்துணை விரைவில் நமது மனமும் அயோத்தி வந்தெய்துகின்றது.

அந்தமில் பேரழகு

இத்தனை அழகாக உலாவியலின் வைப்பு முறை நிற்கின்றது. இனி இவ் இயலைக் கம்பன் வருணிக்கும் முறையை நோக்கு வோம். மாதர்கள் வீதியில் நெருங்கி மொய்க்கின்றமை பொதுப் பட உணர்த்தப்படுகின்றது. இங்ஙனம் மொய்த்து நின்ற அளவில், அந்தமில் அழகன் செல்வத் தேரின்மீது செல்கின்றமை விரைவு தோன்ற ஒரு செய்யுளிற் கூறப்படுகின்றது. பின்பு சீதையின் பெரும் பாக்கியப் பேறு புகழப்படுகின்றது. இராம பிரானது திருமேனி அழகிலே ஈடுபட்ட மகளிர் தம்மையிழந்து நிற்கும் பல்வேறு நிலைகளும் சொற்கொண்டு சிறப்புப் பெறச் சித்திரிக்கப்படுகின்றன. முடிவில் அவனது பேரழகு ஒருவராலும் முடியக் காணமுடியாதபடி யிருந்தது எனக் கூறி உலாவியல் முற்றுப் பெறுகின்றது.

மகளிர் நெருங்கி மொய்க்கின்றமை கூறுவன முதலிலுள்ள ஐந்து செய்யுட்கள். அவர்கள் வீதிகொண்டு நெருங்கி நின்ற அழகைக் கூறுவதோடு உலாவியல் தொடங்குகின்றது, அதனோடு அவர்கள் விரைந்து வீதி சென்ற பரபரப்பு நிலையும் குதூகலமும் கூறப்படுகின்றன. அவர்கள் ஓடிவந்த விரைவும் அவர்களது உள்ளப்பாங்கும் பின் விளக்கப்படுகின்றன.

இங்ஙனம் வீதியை யெய்திய அளவில், இராமபிரானது திருமேனியை ஒருமுறை நோக்க வாய்க்கின்றது. ரூபலாவண் யத்தின் தன்மை இன்னதென் றுணர்த்த முடியாதபடி, பெருமின்னலைக் கண்ட கண்போல, அவர்களது மனம் மறுகு கின்றது. 'காதலித்த உருவாகி அறம் வளர்க்கும் கண்ணாளன்' என நினைவில் அத்துணை யல்லது பிறிதொன்றும் அவர்களால் நினைக்கக்கூடவில்லை. மனத்தின் பிரவாககதி சற்று நிதானம் அடைந்ததும், முன்பு புகழின்மூலந் தெரிந்துள்ள தோளையும் தாளையும் கண்கொண்டு கண்டு நிற்கும் நிலை உளதாகின்றது.

கூர்ந்து நோக்கிய மாதரார் வீதியின் இருமருங்கும் நிற்ப, இராமனது தேர் விரைந்து செல்வது வெகு நயம்பெற உணர்த்தப்படுகின்றது. இவனது திருமேனிப் பேரழகைக் கண்டமாத்திரையில் தங்கள் அரசனது தவப் புதல்வியாகிய சீதாதேவியின் பெறற்கரும் பாக்கியம் நினைவுகூரப்படுகின்றது.

கம்ப சித்திரம்

இதன்பின், நோக்கி நின்ற மகளிருள் ஒரு சிலரை, ஆசிரியர் தமக்கு முற்றிலும் வசப்பட்டுத் தமது ஆணைக்கடங்கி ஏவல் கேட்கும் சொற்களால் சித்திரித்துக் காட்டுகின்றார். இங்ஙனம் சித்திரம் இயற்றுதலால் உலாவியற் பொருளானது நமது கண்ணையும், கருத்தையும் விட்டகலாது மனத்திலே நிலைக்களம் கொண்டுவிடுகின்றது. உல்ருசி என்னும் ஜெர்மன் ஆராய்ச்சியாளர், 'ஒருவனது கவித்வத்தின் பெருமை அவனது கவிதைகளினின்று எவ்வளவு சித்திரங்கள் வரையக் கூடுமோ அவ்வளவாகும்' என்று ஓரிடத்துக் கூறுகின்றனர். கம்ப சித்திரம் என்று கூறுவதன் கருத்தும் இதுவென்றே கொள்ளத் தகும். உலாவியலில் இப்பகுதியில் பலவேறு நிறங்களிற் காணுதல் மிக அருமை. இச் சொற் - சித்திரங்களில் புலப்படும் மனோ பாவனையின் வன்மையும் வண்மையும்தான் என்னென்று சொல்வது! சொல்லும் பொருளை வாசிப்போர் மனக்கண் முன்னே திறம்படப் புலப்படுத்துவதும் நூதன சிருஷ்டி செய்தலுமே மனோபாவனையின் தொழில், கம்பனது அளப்பரிய கவிதா சக்திக்கு இச் சித்திரங்கள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

அழகுக் கலையைத் தமிழ்மக்கள் அனுபவித்த முறை. இது இக்கலை பண்பாட்டின் ஒரு சிறந்த அம்சம் அல்லவா?

6. கற்புத் தெய்வம்

கற்பின் நின்றன கால மாரியே

ஒழுக்க மேம்பாடுபோலப் பண்பாட்டின் சிறப்பினை உணர்த்துவது வேறொன்றுமில்லை, இவ் வொழுக்கமும் மகளிரது கற்பிலே சிறந்து காணப்படுவது, 'மாதரார் கற்பின் நின்றன காலமாரியே' என்றனன் கம்பனும், இக்கற்பின் தெய்வம் தனது ஆற்றல் முழுதும் புலப்பட எங்கே விளங்குகிறது? இராவணனால் சிறை யெடுக்கப்பெற்று, அசோகவனத்தில் அரக்கியர் காவலில் இருக்கும் சீதையிடத்தே என்று ஐயமின்றிக் கூறலாம். இவள் இராமனை எண்ணியவண்ணமாய் நைந்து உருகுகின்றாள், அவள் தன்னை மீட்டுச் செல்வதற்குத் தேடி வரும் வழியை நோக்கி, திசைகள் அனைத்தையும் தன் கண் களால் அளந்து பார்க்கின்றாள்.

> சுருதி நாயகன் வரும் வரும்
> என்பதோர் துணிவால்
> சுருதி மாதிரம் அனைத்தையும்
> அளக்கின்ற கண்ணாள் (காட்சிப். 9)

என்பது கம்பனது அற்புதத் திருவாக்கு. தான் அவனோடு உடன் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த அன்பு - நிகழ்ச்சிகளையெல்லாம் மனத்தால் எண்ணி எண்ணி நைந்து புலம்புகின்றாள். திரிசடை அடிக்கடி தேற்றிய போதிலும், நம்பிக்கை பிறவாது உளம் மாய்கின்றாள். இந்நிலையில் அநுமன் கடலைக் கடந்துவந்து அசோகவனத்தில் புகுந்து சீதையைக் கண்ணுறுகின்றான். அப்போது இராவணன் தோன்றித் தனது காதல் விண்ணப்பங் களைச் சமர்ப்பிக்கின்றான். சீதை அவனை இகழ்ந்து அவனுக்கு வரவிருக்கும் கேட்டினை உணர்த்தித் தனது நாயகனது பேராற் றலையும், தன் கற்பின் திண்மையையும் புலப்படுத்துகின்றாள்; இராவணனும் இப்பெண்கள் நாயகத்தை அச்சுறுத்திவிட்டு அகல் கின்றான். பின்னர், அவனை அங்கீகரித்துக் கொள்ளும்படி யாக அரக்கியர்கள் அவளைத் துன்புறுத்துகிறார்கள். இவ் வாறாக தான் இனி உயிர்வாழ்வது பழிக்கு இடமாம் என்று

கருதிச் சீதை உயிர்விடத் துணிந்து, அடுத்து மாதவிக் கொடிகள் சூழ்ந்த ஒரு மறைவிடத்திற்குச் செல்லுகிறாள்.

இராமதூதன்

அநுமன் அவள் கருத்தை உணர்ந்து அவள் முன் தோன்றி, 'இராமதூதன்' என்று தன்னை உணர்த்தி உய்விக்கின்றான். அவள் பிரிவால் இராமன் அடைந்துள்ள துன்பங்களைத் தெரிவித்து, அவன் அடையாளமாக அனுப்பிய மணி மோதிரத்தைக் கொடுக்கிறான். இதனைக் கண்டதும் சீதைக்கு நம்பிக்கை பிறக்கின்றது. எனினும், இதுபோன்ற சிறு குரங்குகளைத் துணையாகக் கொண்டு இராவணனை வெல்லுதல் கூடுமோ என்று ஐயுறுகின்றாள். அப்போது தன் விசுவரூபத்தைக் காட்டி அவளை அநுமன் தெளிவிக்கின்றான். தனது ஆற்றலைப் புலப்படுத்திய பின் தானே சீதையைத் தன் தோள் மீது ஏற்றி, இராமன் இருக்குமிடத்திற்குக் கொண்டு செல்வதாகக் கூறினன். சீதை இதற்கு இணங்காது தனது நாயகனது ஆண்மைக்கும் தனது பெண்மைக்கும் ஒவ்வாது என்று மறுத்துவிடுகிறாள். இராமனிடம் தனது நிலைமையையும் துன்பத்தையும் உணர்த்தும்படி சில செய்திகளையும் கூறி அனுப்புகிறாள்.

ஒரு திங்களே உயிருடன் இருப்பேன்

முதலாவது தனது உறுதிப்பாட்டைத் தெளிவுற விளக்குகின்றாள். எத்தனையோ இன்னல்களுக்கு ஆளாகி, பெண்கள் உயிரெனப் போற்றும் கற்பினைச் சோதிக்கும் நிலையில் தான் இருந்தபோதிலும், இன்னும் தனது பகைவனான இராவணனது அசோகவனத்தில் ஒரு மாதகாலம் காத்திருக்க எண்ணுகின்றாள். ஏற்கெனவே இவள் உயிர் விடுவதற்குச் சித்தமாயிருந்தாளெனத் தெரிந்துள்ள அநுமன் ஒரு மாதத்திற்கு மேல் சீதை உயிர் வைத்திருக்க மனம் இசையாள் என்ற, இவ் உறுதிப்பாட்டில் சிறிதும் ஐயம் கொள்ளமாட்டான். இவ் உறுதிப்பாட்டை இராமனிடம் தெரிவிக்கவேண்டும் பொறுப்பு அநுமனுக்கு உரியது. நீதி முறைகளைக் கற்று ஐம்பொறிகளையும் அடக்கி ஒழுகும் அநுமன் தனது கடமையைச் செலுத்தத் தவறமாட்டான் இதனை உணர்ந்து, 'நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்' என்று சீதை கூறுகின்றாள். ஒரு மாதத்திற்குள் இராமன் வாராமற் போனால், அவள் இறப்பது திண்ணம். இப்பொழுதே அவளுடைய ஆவி அவளைப் பிரிந்து போவதற்குப் பறந்துகொண்

டிருக்கிறது. அதனை அடக்கிப் பிடித்து வைத்திருக்கிறாள் சீதை. இந்த உறுதிப்பாடு கேவலம் சொல்லளவில் உள்ளதன்று. இராமன் பேரில் ஆணைவைத்து அதனை அநுமனுக்கு வற்புறுத்தியுரைக்கிறாள். இவற்றைக் கூறும் செய்யுளைப் பாருங்கள் :

இன்னும் ஈண்டொரு திங்கள் இருப்பல்யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்
பின்னை ஆவி பிடிக்கின்றிலேன், அந்த
மன்னன் ஆணை, இதனை மனக்கொள் நீ

(சூளாமணிப், 29)

வீரம் காத்தல்

இங்ஙனமாகத் தனது உறுதிப்பாட்டை வெளியிட்ட பின்பு, இராமனது கடமை ஒன்றினை அடுத்துத் தெரிவிக்கின்றாள். சீதை தனது காதற்குரிய நாயகி என்று கருதி அவளைச் சிறை மீட்க வருவது இயல்பு, அவ்வாறு கொள்வதற்கு அவள் மனம் பொருந்தவில்லையென்றாலும், யாரோ ஒரு பெண் பிறனொருவனால் அபகரிக்கப்பட்டுத் துன்புறுகின்றாள் என்ற அளவிலாவது அவன் இரக்கம் கொண்டு, தன்னைக் காப்பாற்ற வருதல்கூடும். இந்த இரண்டு மனப்பான்மையும் அவனுக்கு இல்லையென்றாலும் க்ஷத்திரியன் என்ற நிலையில் அவனது வீரத்தைக் காப்பாற்ற முயலுதல் அவனுடைய சிறந்த கடமையாகும். இக்கடமையைக் கருதியாவது தன்னை மீட்க வரவேண்டும் என்று சீதை உணர்த்துகிறாள்: இங்கே ஒரு வீரன், தனது மனைவியைத் துறந்தாலும், தனது தயை முதலிய குணங்களைத் துறந்தாலும், தனது வீரத்திற்குச் சிறிதும் இழுக்கு ஏற்படுதலைச் சகிக்கமாட்டான் என்ற தத்துவத்தைச் சீதை நன்றாக உணர்ந்துள்ளமை வெளிப்படுகிறது. எவராலும் யாதொரு வேண்டுகோளும் இல்லாதபடியே இங்ஙனம் வீரம் காத்தற்கு இராமன் முற்படுவான் என்பதும் நன்கு புலப்படுத்தப்படுகிறது. இப்போது கம்பனது செய்யுளைப் பாருங்கள் ;

ஆரந் தாழ்திரு மார்பதற்கு அமைந்ததோர்
தாரம் தான்அல ளேனும் தயாளனும்
ஈரந் தான்அகத் தில்லையென் றாலும், தன்
வீரம் காத்தலை வேண்டென்று வேண்டுவாய்

(சூளாமணிப், 30)

இங்ஙனம் இராமனது கடமையை உணர்த்திய பின்பு, தன் மைத்துனனாகிய இலக்குமணனது தனிப்பெருங் கடன் ஒன்றைச் சொல்லியனுப்புகின்றாள். அவன் தன்னைக் காவல் செய்திருந்த காலத்துத்தான் இராவணன் தன்னை அபகரித்துக் கொண்டு சென்றது. ஆகவே, தன்னை மீட்கவேண்டும் பொறுப்பும் அவனுக்குத்தான் உரியது. இதனைக் கூறும் செய்யுள் வருமாறு :

''ஏத்தும் வென்றி இளையவற்கு ஈதொரு
வார்த்தை கூறுதி மன்அரு ளால்எனைக்
காத் திருந்த தனக்கே கடன் இடைக்
கோத்த வெஞ்சிறை வீடென்று கூறுவாய்''

(சூளாமணிப். 31)

இக்கடமையை இலக்குமணன் நிறைவேற்றத் தவறினால், உலகம் புகழும் அவனது வெற்றி பயனற்றதாகும். இராமனே தடுத்தபோதிலும், அவன் தனக்குப் புத்திர ஸ்தானத்திலுள்ள இளையனாதலால் தனது வேண்டுகோளுக்கு இணங்குதல் உறுதி. இதனால் இராமனுடைய கடமைக்கு யாதொரு பங்கமும் இல்லை. ஏனென்றால், அவனுடைய கட்டளைப்படிதான் தன்னை இவன் காத்திருந்தது. இருவருக்கும் தன்னைச் சிறை வீடு செய்தல் கடமையேயெனினும், நேர்படத் தனது காவலை இகழ்ந்தமையால் மீட்கும் பொறுப்பு இவனுக்கு மிகுதியாயுள்ளதாகும். இவையெல்லாம் இச் செய்யுளில் நன்கு புலப்படுகின்றன

விற்பிடித்த வீரக்கை

இங்ஙனம் கூறியவள் தன் உறுதிப்பாட்டை மீண்டும் வற்புறுத்துகின்றாள். ஒரு மாத காலத்தினுள்ளதாகத் தனது நாயகன், தனது தவக்குறையால் வரவில்லை என்றால் தான் உயிர் வாழ்ந்திருப்பாள் என்று சிறிதும் கருதவேண்டாம். தனக்குச் செய்யவேண்டும் இறுதிக் கடன்களைக் கங்கையாற்றின் கரையிலே செய்து விடலாம் என்று தெளிவாய் உரைத்து விடுகின்றாள் ;

திங்கள் ஒன்றில் என் செய்தவம் தீர்தலால்
இங்கு வந்திலனே எனின், யாணர்நீர்க்
கங்கை யாற்றங்கரை அடியேற்கும் தன்
செங்கை யாற்கடன் செய்கென்று செப்புவாய்.

(சூளாமணிப். 32)

தனக்குக் கடன் இயற்றுதற்குத் தன் நாயகன் சிரமம் யாதும் எடுக்கவேண்டும் அவசியம் இல்லை. அவன் மீண்டு செல்லும் வழியிலேயே கங்காநதி ஓடுகிறது. அதன் கரையிலே, தன்னைக் கைப்பிடித்த தோஷத்திற்காக, கதியற்றுத் தவிர்க்கும் அடிமையாகிய தனக்கு இந்தச் சிறு கடனைச் செய்தால் போது மானது. இங்ஙனம் கூறியதும், கடனியற்றும் பொழுது கங்கை நீரை இராமன் கையினால் அள்ளியிறைக்கும் காட்சி சீதையின் மனத்தில் புலப்படுகிறது. அந்த அழகிய கை தானங்கள் செய்து செய்து சிவப்பேறிய கை; விற்பிடித்த வீரக் கை; அன்பிற் குழைந்து தன்னை உயிருறக் கட்டித் தழுவிய கோமளக்கை. அக் கையினால் கடன் செய்யும் பேறு தனக்குக் கிடைக்குமா என்று ஏங்குகின்றாள். தான் இறந்தபின், இராமன் மீண்டு செல்லும் வழியில் செய்ய வேண்டும் இக்கடனை அவன் ஆற்றும்படி வற்புறுத்த வேண்டுகிறாள். அயோத்திக்கு மீண்டு சென்றதும், அவள் தனது மாமியரைத் தொழுதுகொண்டே இறந்தாள் என்ற செய்தியை அவர்களுக்கு இராமன் உணர்த்த வேண்டும் கடமையை அடுத்த செய்யுளிற் கூறுகின்றாள் :

சிறக்கும் மாமியர் மூவர்க்கும் சீதை ஆண்டு
இறக்கின்றாள் தொழுதாள் எனும் இன்னசொல்
அறத்தி னாயகன்பால் அருள் இன்மையால்
மறக்கு மாயிலும், நீ மறவேல், ஐயா!

(சூளாமணிப். 33)

ஆனால் இராமன் இச் செய்தியை அவனது அன்னையர்களுக்குத் தெரிவிப்பானா? அவன் அறத்தின் நாயகன்; அறத்தை நிலை நிறுத்துவதிலே கண்ணும் கருத்துமா யிருப்பவன். தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றியவன் அல்லவா? அரக்கன் வீட்டில் சிறை புகுந்த தன்னைப்பற்றிய சிந்தனை அவனுக்கு இருக்கு மென்று எண்ண இடமில்லை. ஆதலால் அவன் தன்னை அறவே மறந்துவிடலாம். தன்னை மறப்பதே அவனுக்கு அறமாவது என்றுகூடக் கருதிவிடலாம். இவ்வாறு ஒருவேளை அவன் மறந்து போனாலும், நீ மறந்துவிடக்கூடாது என்று அநுமனை வற்புறுத்துகின்றாள்.

பின்னர், சீதையின் மனம் ஊசலாடுகிறது. தனது பிறப்பின் பயன் நிறைவேறிய திருமண நாளை நினைவு கூர்கின்றாள். அன்று நிகழ்ந்த பல செய்திகளையும் எண்ணுகின்றாள். அவனது

பெண் மனத்தில் ஒரு செய்தி ஆழ்ந்து பதிந்து கிடந்தது. அதனை நினைவூட்டச் சொல்கின்றாள் :

வந்தெனைக் கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச்
சிந்தையாலுந் தொடேன் என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்.
(சூளாமணிப், 34)

''ஒரு நங்கையின் நாயகன் அவளுக்கே யுரியன். அவனுக்கும் பிற பெண்டிற்கும் யாதோர் இயைபும் இல்லை' என்று கருதும் பெண்மை இங்கே பேசுகிறது. பெண்மையின் இச்சீரிய ஆன்ம தாகத்தை உட்கொண்டும், தனது தூய ஒழுக்கத்தை உட்கொண்டும் இராமன் அளித்த ஒரு வரத்தை அவன் திருச் செவியில் மெல்லச் சொல்லவேண்டும் என்று சீதை விரும்பு கிறாள். எப்போது அளித்த வரம்? வைதிகச் சடங்குகளுடன் திருமணம் நிகழ்ந்த சமயத்தே என்ன வரம்? இந்தப் பிறவியில் தன்னைத் தவிர வேறொரு பெண்ணைச் சிந்தையினாலும் நினைக்கமாட்டேன் என்ற வரம். சிந்தனையால் ஒரு பெண் ணைத் தொடுதல் கூடுமா? காமம் பற்றிய அளவில் கூடும்; அதற்கும் இராமன் தனது சிந்தை இடங்கொடாது என்றனன். இது போன்ற ஒரு சீரிய வரம் வான்மீகியில் உள்ளதா? அறியோம். சங்க இலக்கியங்களில் உளதா? இல்லை. உத்தம வாழ்விற்குக் கம்பன் வகுத்துக்கொண்ட ஒழுக்கவுலகில் தான் இச்சீரிய விதி காணப்படுகின்றது.

மறுபிறவியிலும் இராமனை அடையும் வரம்

இராமன் கொடுத்த வரம் இந்தப் பிறவியை மட்டுந்தான் பற்றியது. சீதை மறு பிறவியைப் பற்றிய வரம் ஒன்றும் வேண்டு கின்றாள். இப் பிறவியிலே அவள் ஒரு பழிக்கு ஆளாகிவிட்டாள். பழைய தீவினையொன்று அவளைப் பீடித்துக்கொண்டது. இந்தத் தீவினை தீர்தற்காக ஒரு வரம் வேண்டும் என்று இரந்து கேட்கின்றாள் :

ஈண்டு நான் இருந்து இன்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டினாள் தொழுது என்று விளம்புவாய்.
(சூளாமணிப், 35)

மீண்டும் பிறவியெடுத்து, மீண்டும் இராமனையே நாயகனாகப் பெற்று; அவனது திருமேனியைத் தீண்டுதற்குரிய உரிமையைத் தனக்குத் தந்தருள வேண்டுமென்று அவனைத் தொழுது வரம் கேட்கின்றாள் : தான் இங்ஙனம் வரம் வேண்டியதைத் தெரிவிக்குமாறு அநுமனிடம் கூறுகின்றாள். பெண்மையின் உத்தம லட்சியத்திற்குச் சீதையைக் காட்டிலும் சிறந்த உதாரணம் இலக்கியவுலகில் எங்கேனும் உளதா? இவளைக் காட்டிலும் சிறந்த கற்புத் தெய்வத்தை எந்தக் கவிஞன் எங்கே சிருஷ்டித்திருக்கின்றான்?

இம்மை மாறி மறுமை யாயினும்
நீ ஆகியர் எம் கணவனை
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே.

(குறுந்தொகை. 49)

என்று ஒரு தமிழ்க் கற்பரசி கூறுகின்றாள். இந்த லட்சியத்தையே சீதை மேற்கொண்டுள்ளாள். மறுபிறவிக் கொள்கைக்கு இதனைக் காட்டிலும் சிறந்த பயனைக் காணுதல் அரிது. தமிழர் பண்பாட்டிற் சிறந்த ஓர் அம்சமாகிய இக் கற்பின் ஓவியத்தைக் கம்பன் எழுத்தின் ஓவியமாகச் செய்தனன்.

கம்பனது நினைவுக் குறியாக ஒரு பெரு நிலயம் நிருமிக்கும் முயற்சி உளதெனத் தெரிகிறது. இது கனவாக மாய்ந்துவிடாது நனவாகப் பரிணமித்தல் வேண்டும். இதன் சுவரில் மேற்குறித்த அரிய கட்டம் சித்திரிக்கப்படுதல் வேண்டும். இது போன்று எத்தனையோ கட்டங்கள் கம்பன் காவியத்தில் உள்ளன. 'கம்பன் சித்திராலயம்' ஒன்று இயற்றுவதிலும் நமது நாட்டு ஓவியப் பெருமக்கள் முனைந்து முயற்சியெடுத்தல் இன்றியமையாததாம். அப்பொழுது நமது கலையின் சிறப்பும் ஒழுக்க மேம்பாடும் ஒருங்கு தோன்றி நமது பண்பாட்டின் பெருமையை இனிது புலப்படுத்தும்.

சென்னையில் நிகழ்ந்த கம்பன் விழாவொன்றில் பேசியது.

9. கம்பன்: ஆராய்ச்சிப் பதிப்பு

இம்பர் அமுதென் றிராமா யணமளித்த
கம்பன் கழலிணையே காப்பு.

சொல்லினால் இயன்ற திருக்கோயில்களும், கல்லினால் இயன்ற திருக்கோயில்களும் ஒன்றோடொன்று அடிக்கடி உவமிக்கப்படுகின்றன. இதற்கு ஒரு காரணம் உண்டு. கவிஞன் ஓரளவு சிற்பியாய் அமைகிறான். அவ்வாறே சிற்பியும் ஓரளவு கவிஞனாகிவிடுகிறான். சிற்பி கவிஞனானதற்குத் தாஜ்மஹால் என்ற காதல் - மாளிகையை உதாரணமாகக் கூறலாம். கவிஞன் சிற்பியானதற்குக் கம்பனது பெருங்காப்பியத்தை உதாரணமாகக் கொள்ளலாம். இக் காவியத்தின் பல உறுப்புக்களும் தனித் தனியே அழகு வாய்ந்தன. ஒன்றோடொன்று பொருத்த முற்றன. முழுவதும் சேர்ந்து ஒருமை என்ற உணர்ச்சியை நம் மனத்துள் தோன்றச் செய்வன. கலை பற்றிய அளவில் ஒன்று என்னும் உணர்ச்சியே மிகுந்து நிற்கிறது. சிற்றுறுப்புக்களும், உறுப்புக்களுக்குப் பொருத்தமாக இருத்தலோடு ஒருமை உணர்ச்சிக்குப் பயன்படுகின்றன. இக் காரணங்களாலேயே பாரதி,

வல்லவன் ஆக்கிய சித்திரம் போலும்
வண்மைக் கவிஞர் கனவினைப் போலும்
நல்ல தொழில் உணர்ந் தார்செயல் என்றே
நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறக்
கல்லையும் மண்ணையும் பொன்னையும் சேர்த்துக்
காமர் மணிகள் சிலசில கோத்துச்
சொல்லை இசைத்துப் பிறர்செயு மாறே
சுந்தர மாமொரு காப்பியம் செய்தார்

என்று பாடியுள்ளார்.

இந்த உவமானத்திற்கு ஆதாரமான ஒற்றுமை வேறொரு விஷயத்திலும் காணப்படுகிறது. நமது மூதாதையரது பக்தியையும் சிற்பத் திறத்தையும் விளக்கி நின்ற இத் திருக்கோயில்

களை நாம் இன்று பாழடைய விட்டு வருகிறோம். இவைகள் ஜீர்ணமாய் அழிவுபட நிற்கும் நிலையை நாம் சிறிதும் உணர்ச்சியற்றுப் பார்த்து நிற்கிறோம். இந்த ஜீர்ண நிலையையே கம்பனது இலக்கியத் திருக்கோயிலும் அடைந்துள்ளது. ஒரு சிறு வேறுபாடு உண்டு. நாட்டுப் புறங்களிலே உள்ள மக்கள் தங்கள் ஊர்களையும், கோயில்களையும் பாழடைய விட்டு நகரவாசிகளாய், பட்டணவாசிகளாய் வெளியேறிச் செல்கின்றனர். இதனால் கோயில்களிற் சிறப்புடன் போற்றப்பட்டு வாழ்ந்த தெய்வங்களும் மக்களில்லா ஊரில் வாழ மாட்டோம் என்று, அருள் விளக்கமின்றி மறைந்து வருகின்றன. ஆனால், கம்பனது காவியத் திருக்கோயிலில் வாழ்ந்த கவிதைத் தெய்வமோ எனின், தனது பண்டைத் தெய்வீக ஒளியோடு இன்றும் சிறந்து விளங்குகிறது; மறைந்துவிடவில்லை.

நகரங்களிலும், நாட்டுப் புறங்களிலும் உள்ள திருக்கோயில்களைப் பழுது பார்த்துப் பரிபாலிப்பதற்கும், கோயில் சார்பாக நிகழும் பணிகள் பலவும் முட்டின்றி நடைபெறுவதற்கும், அறநிலையப் பாதுகாப்பு மன்றம் நிறுவப்பட்டுள்ளது. முற்காலத்தில் கோயிலதிகாரிகள் ஆற்றிவந்த பணிகளுள் இலக்கியம் முதலிய கல்வித் துறைகளைப் பேணிப் போற்றுதலும் ஒன்றாம். இம் மரபினைப் பின்பற்றி, அறநிலையப் பாதுகாப்புத் தலைவர் அவர்களே இன்று நாம் ஆற்றக் கருதும் இலக்கியத் திருப்பணித் தொடக்கத்திற்கும் தலைமை தாங்குவது பெரிதும் பொருத்தமாம்.*

ஆனால், கோயில் பழுது பார்க்கப்பட வேண்டும் என்று அவர்களிடம் தெரிவித்தால் எவ்வகையான குற்றங் குறைகள் உள்ளன என்று கேட்பார்கள் அல்லவா? 'எத்தனையோ பதிப்புக்கள் வெளிவந்துள்ளனவே! வேறொரு புதிய பதிப்பு எதற்கு?' என்ற கேள்வியைப் பல அறிஞர்களும் கேட்டு வருகிறார்கள். இக் கேள்வியை இவர்களிடத்தேயும் எதிர்

---

* 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காரைக்குடிக் கம்பன் கழகத்தின் சார்பிலே, காரைக்குடியில் 'கம்பன்: ஆராயச்சிப் பதிப்பி'ன் தொடக்க விழா அற நிலையப் பாதுகாப்புத் தலைவர் திரு. சின்னையாப் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது ஆற்றிய சொற்பொழிவே இது. இந்தப்பதிப்பு வேலை சில வசதிக் குறைவுகளால் இப்பொழுது தொடர்ந்து நடைபெறாது நிற்கிறது.

பார்க்கலாமல்லவா? இக் கேள்விகளுக்கு விடையிறுக்கு முகத்தாற் சில சொல்லி, எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதனையும் விவரிக்க எண்ணுகிறேன்.

கம்பனுக்குச் சிறந்த பதிப்பு

கம்பன் உலக மகா கவிகளுள் ஒருவன் என்று கருதத்தக்கவன். அவன் இயற்றிய இராமாவதாரம் வால்மீகி முனிவரின் இராமாயணத்தோடு ஒத்த பெருமையுடையது, பல இடங்களில் அம்முனிவரைவிடச் சிறந்த கவித்வம் கம்பனிடத்தில் காணப் படுகிறது என்பர். இவனது அரிய பேரிலக்கியத்திற்கு இன்றுவரை சிறந்த பதிப்பில்லாதது மிக மிக வருந்தத் தக்கதாகும்.

இப்பெருங் கவிஞன் இயற்றிய ஆறு காண்டங்களுள் சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளையும், தி. த. கனகசுந்தரம் பிள்ளையும் பதிப்பித்த பாலகாண்டம் ஒன்றே இன்றுவரை சுத்தப் பதிப்பாக வெளிவந்துள்ளது. ஆனால், இதுவும் ஆராய்ச்சிப் பதிப்பன்று. பிரதிகளிலுள்ள பாடல்களை ஆராய்ந்து இன்னதுதான் உண்மைப் பாடம் என்று வரையறுத்து, ஆராய்ச்சி யாளருக்குப் பயன்படும்படியாகப் பாட பேதங்கள் முதலிய வற்றைத் தருவதில் இப்பதிப்பு, சிறிதும் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. செவ்விய முறையைப் பின்பற்றிய ஆராய்ச்சிப் பதிப்பு இனித்தான் வெளிவரவேண்டும். இதுவரை வெளி வந்துள்ள பதிப்புக்களெல்லாம் பல அம்சங்களில் குறைபாடு உடையன. உதாரணமாக, சென்னை கலாக்ஷேத்திரத்தினின்று சமீபத்தில் வெளியிடப்பெற்ற பாலகாண்டப் பகுதியைச் சொல்ல லாம். இது காலஞ்சென்ற டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதி வைத்திருந்த குறிப்புக்களையும், அவர்கள் தொகுத்து வைத்துள்ள ஏட்டுப் பிரதிகளையும் உதவியாகக் கொண்டு பதிப்பிக்கப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பதிப்பில், தொடக்கத்திலேயே, தனியன் என்ற பகுதியில் சேர்க்கப்பட வேண்டிய பல செய்யுட்கள் கம்பன் இயற்றிய பாயிரத்துள்ளன வாக அமைத்துப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக,

தருகை நீண்ட தயரதன் தான்தரும்
இருகை வேழத் திராகவன் தன்கதை
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே

என்ற செய்யுள் பாயிரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. நான் பரிசோதித்த 23 ஏட்டுப் பிரதிகளில் ஒன்றிலேனும் இச் செய்யுள் தனியனிற்கூடக் காணப்பெறவில்லை. மழவை மகாலிங்கையர் கி. பி. 1845-இல் வெளியிட்ட பாலகாண்டப் பகுதியிலும், காஞ்சீபுரம் சபாபதி முதலியார், கோமளபுரம் இராஜகோபாலப் பிள்ளை இவ்விருவரது உதவியையும் பெற்று, கிருஷ்ணசுவாமி முதலியார் கி. பி. 1861-இல் வெளி யிட்ட பாலகாண்ட உரைப் பதிப்பிலும் இச்செய்யுள் காணப் பெறவில்லை. எனவே, ஏட்டுப் பிரதிகள் பலவற்றிலும், அனைத் தினும் என்றுகூடச் சொல்லலாம்; முதன் முதலில் வெளிவந்த அச்சுப் பிரதிகள் பலவற்றிலும் காணப்பெறாத இந்தச் செய்யுள் சமீப காலத்தில் அச்சியற்றியவர்களோ பிறரோ எழுதிச் சேகரித் தது என்றே துணியத்தக்கது. இவ்வளவு பிற்காலத்ததாகிய செய்யுள் கூடப் பாயிரத்தில் கம்பன் பாடியதாகக் கொடுக்கப் பெற்றிருப்பது மிகவும் வியப்பிற்கிடமாயுள்ளது. தமிழ் நூல் பதிப்பாசிரியர்களுள் தலைசிறந்தவராகிய டாக்டர் சாமிநாதைய ரவர்கள் பெயர்த் தொடர்பு கொண்டு இப்பதிப்பு வெளிவந் திருப்பது தமிழ் மக்கள் அனைவருக்கும் மிக்க வருத்தத்தை உண்டு பண்ணத்தக்கதாம். ஆனால் ஒன்று; பதிப்பாசிரியரைக் குறை கூறுவதாகக் கருதக்கூடாது. ஒருவரே தனிப்படச் செய்யக்கூடிய காரியமன்று. வித்வான் ம. வே. துரைசாமி அய்யர், வித்வான் கி. வா. ஜகன்னாதன் போன்றவர்களது உதவி கிடைத்திருந்தால் நலமாயிருக்கும். இவ்வகையான பதிப்பு நல்ல பதிப்பு என்ற வரிசையில் வைத்து எண்ணத்தக்கதாகுமா?

தனியன்களுள் வேறொரு செய்யுள் கம்பராமாயணத்தின் காலத்தைக் குறித்துவருதல் அனைவரும் அறிந்தது. அது வருமாறு :

எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல்
சடையன் வாழ்வு
கண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே
கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி
உத்த ரத்தில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங்
கேற்றினானே.

இச்செய்யுள் குறிக்கும் காலம் உண்மையாதல் சாலாது என்பது தமிழிலக்கிய சரிதம் உணர்ந்தார் அனைவர்க்கும் உடன்பாடாம். இதனை ஏட்டுப் பிரதிகள் கொண்டு ஆராய்ந்து துணிய வேண்டுவது மிக அவசியமாம்; இச் செய்யுளின் பழமையும் நாம் ஊன்றி ஆராயத் தக்கது. கொல்லம் 753-ம் ஆண்டில், அதாவது கி. பி. 1578-ல் எழுதப்பெற்ற ஓர் பழைய ஏட்டுப் பிரதியில் இச் செய்யுள் காணப்படுகின்றதா என்று நோக்கி உண்மையைத் தெளி வித்தல் பதிப்பாசிரியர் கடனாகும். இது தமிழ்நாட்டிலும் ஈழம் முதலிய பிறநாடுகளிலும் கிடைக்கும் பிரதிகள் அனைத்தையும் ஒப்புநோக்கித் தெளிவிக்கப்படவேண்டிய ஒரு விஷயமுமாகும். எக்காலத்தில் எந்தப் பிரதேசத்துப் பிரதியில் இது முதல் முதற் சேர்க்கப்பட்டது என்பதை ஆராய்தல் அவசியமாகும். இவ் வகைப்பட்ட பல ஆராய்ச்சிகளுடன் கூடிய பதிப்பு கம்பன் கண்ட தமிழுலகை நமக்கு உணர்த்தி, அங்கே விளங்கிய மொழிநிலை, இலக்கிய நிலை, சமுதாய நிலை, அரசியல் நிலை முதலியவற்றை நாம் தெரிந்துகொள்வதற்கு இன்றியமையாத ஒரு கருவியாய் அமையுமல்லவா?

பிறிதொரு தனியன் காண்டம், படலம், செய்யுள் முதலிய வற்றின் அளவை நமக்குத் தெரிவிக்கிறது. அது வருமாறு :

கரைபொரு காண்ட மேழு;
  கதைகளா யிரத்தெண் ணூறு;
உரைக்கு விருத்தம் பன்னி
  ராயிரத் தொருபத் தாறு;
பரவமர் பத்து நாலு;
  படலநூற் றிருபத் தெட்டு;
வரமுது கம்பன் சொன்ன
  வண்ணமும் எண்பத் தேழே.

எண்பற்றிய அளவில் இச்செய்யுளிற் காணும் பாடபேதங்கள் ஒருபுறமிருக்க, படலங்களின் அளவும் எண்ணும் அச்சுப் பிரதி களிலும் ஏட்டுப் பிரதிகளிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. உதாரணமாக, சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளை பதிப்பில் பாலகாண்டத்தில் பாயிரம் நீக்கி 22 படலங்கள் உள்ளன. ஆழ்வார் திருநகரிப் பதிப்பு ஒன்றில் பாயிரம் நீக்கி 30 படலங்கள் உள்ளன. இவற்றுள் கம்பன் வகுத்த படலங்கள் இத்தனை என்று துணியப்படவேண்டும். இவ்வகை ஆராய்ச்சியிலும் மிகப்

பழைய ஏட்டுப் பிரதிகளையும், மிகப் பழைய ஏட்டுப் பதிப்புக்களையும் நாம் ஒப்புநோக்கி, எவ்வாறு படல வேறுபாடுகள் முதலியன நேர்ந்தன என்று விசாரணை செய்து வரையறுக்க வேண்டுவது கம்பனைக் கற்றுவரும் அறிஞர் குழாம் மேற்கொள்ள வேண்டுவதாகும். எனது நண்பர் பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸையங்கார் தமது பாலகாண்டப் பகுதியில் இராமாயணத் திருவிருத்தங்களை எண்ணிக் கணக்கிட்டுத் தந்துள்ளனர். இராமாயணப் பதிப்பாளர்கள் இங்ஙனமே படலம் முதலிய பிற பொருள்கள் பற்றியும் ஆராய்ந்து முடிவு செய்யக் கடமைப்பட்டுள்ளார்கள். இங்ஙனம் முடிவு செய்த பதிப்பு வெளிவர வேண்டுவதும் அத்தியாவசியமல்லவா ?

பிழையான படலங்களின் பெயர்

படலத்தின் பெயர்கூடப் பிழையாகப் பதிப்பிக்கப்பட்டு வந்துள்ளது. உதாரணம், அயோத்தியா காண்டத்தில் பள்ளியடைப்படலம் என்று காணுவது, பள்ளி படைப் படலம் என்று இருத்தல் வேண்டும். பள்ளிபடுத்தல்என்பது ஈமத்தில் ஏற்றிப் பிரேத ஸம்ஸ்காரம் செய்வதற்கு வழங்கிய ஒரு மரபுத்தொடர். 'பள்ளி படுத்தார்களே' என்பது சிந்தாமணி (292). படலப் பெயர்களைச் சரியாகத் தராதது பெரியதொரு குறைபாடு அல்லவா ?

கம்பன் இயற்றியவைதானா ?

மேற்குறித்த செய்யுட்கள் மூன்றும் தனியனாக உள்ளவை. நூலகத்திலே வரும் செய்யுட்களில் சில கம்பன் இயற்றியவை தாமா என்பது ஆராய்ச்சிக்கு இடமாயுள்ளது. உதாரணமாக,

ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பும் நெறியின் புறம்செலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம்.

என்ற செய்யுளை எடுத்துக்கொள்வோம். இச்செய்யுளின் ஈற்றடி பல பிரதிகளில்,

கோச லம்புனை நாட்டணி கூறுவாம்

என்று எழுதப்பெற்று, பின்னர்.

கோச லம்புனை யாற்றணி கூறுவாம்

எனத் திருத்தப்பட்டுள்ளது. ஆகவே, இது நாட்டணியைக் கூறுவதற்கு என முதலில் சேர்க்கப் பெற்றதாதல் வேண்டும். இக் கருத்திற்கேற்க, ஒரு பிரதியில் இச் செய்யுள் ஆற்றுப் படலத்தின் இறுதியில், நாட்டுப் படலத்தின் முன்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் செய்யுள் வருமாறு :

வாங்கரும் பாதம் நான்கும்
வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிகள் ஆரத்
தேவரும் பருகச் செய்தான்

ஆங்கவன் புகழ்ந்த நாட்டை
அன்பெனும் நறவம் மாந்தி,
மூங்கையான் பேச லுற்றான்
என்ன, :யான் மொழிய லுற்றேன்.

இங்ஙனம் நாட்டணி கூறுவதாக வரும் செய்யுட்கள் இரண்டு அடுத்தடுத்து வருதலை நோக்கி முதற் செய்யுளை ''யாற்றணி'' எனத் திருத்தி ஆற்றுப்படலத்தின் தொடக்கத்தில் வைத்துவிட்டனர் எனக் கருத இடமுண்டு. அன்றியும் இச் செய்யுள், பின்வரும் 'வாங்கரும்' என்ற செய்யுளை நோக்காது இடைச்செருகலாகப் புகுத்தப்பட்ட செய்யுள் என்றும் நாம் துணியலாம். இத்துணிபு எவ்வாறாயினும், இச்செய்யுளைப் பற்றி ஆராய்ச்சி செய்வது பதிப்பாசிரியர் கடமையாகும். இங்ஙனமாகத் தனிப்பட்ட செய்யுட்களைப் பிரதிகளின் உதவி கொண்டும் கருத்தின் அமைதிகொண்டும் ஆராய்ந்து, கொள்ள வேண்டுவனவற்றைக் கொண்டு, தள்ளவேண்டுவனவற்றைத் தள்ளிப் பதிப்பிடுதல் இராமாயண உணர்ச்சிக்கு மிக அவசியமல்லவா? இங்ஙனம் செய்யாதது ஒரு குறைபாடு அல்லவா?

ஐயத்திற்கு இடந்தரும் உட்கதைப் பகுதிகள்

தனிச் செய்யுட்கள் இவ்வாறாக, சில உட்கதைப் பகுதிகளும் பெரிதும் ஐயத்திற்கு இடந்தருவனவாயுள்ளன. உதாரணமாக :

ஏகி மன்னனைக் கண்டெதிர் கொண்டவன்
ஓகை யோடு மினிதுகொண் டுய்த்திடப்
போக பூமியிற் பொன்னக ரன்னதோர்
மாக மாடத் தனையவர் வைகினார்

எனவரும் மிதிலைக்காட்சிப் படலம், 83-ம் செய்யுளுக்குப் பின்

முனியும் தம்பியும் மொய்ம்முறை யால்தமக்கு
இனிய பள்ளிகள் எய்தியபின் இருட்
கனியும் போல்பவன் கங்குலும் திங்களும்
தனியும் தானும்அத் தையலும் ஆயினான் (139)

என்பது வரையுள்ள 56 செய்யுட்கள் ஒரு பழம் பிரதியில் இல்லை. விடுபட்ட இப் பகுதியில் விசுவாமித்திரர் வரலாற்றைக் கௌதம புத்திரரான சதானந்தர் கூறுகின்றார். குறித்த ஏட்டுப் பிரதி திருவிதாங்கூர் அரண்மனை நூல் நிலையத்தில் உள்ளது; இப்பொழுது தமிழ் வழக்காறற்றிருக்கும் அம்பலப்புழை அரண்மனையினின்றும் கொண்டு வரப்பெற்றது; மிகமிகப் பழைய பிரதியாகும். இப்பிரதியில் மேலைச் செய்யுட்கள் காணாமையால் கம்பன் இயற்றிய மூலத்தில், இப்பகுதி உள்ளதோ என்பது நாம் பெரிதும் ஐயுறத்தக்கதே. பாட்டுக்களும் மிகச் சுவை குன்றியுள்ளன என்பதை நாம் மறக்கலாகாது. இப்பகுதியை நீக்கிவிட்டால் செய்யுட் பொருளும் இனிதாகத் தொடர்ந்து செல்லுகின்றது என்பதையும் நாம் மனங்கொள்ளுதல் வேண்டும். விசுவாமித்திரர் தவஞ்செய்த வரலாறு வால்மீகி இராமாயணத்தில் தரப்பட்டிருக்கவும், கம்ப ராமாயணத்தில் அது காணப்பெறாத குறையை நோக்கிப் பிற்காலத்துப் புலவர் ஒருவரால் இப்பகுதி இடையில் செருகப்பட்டது எனத் துணிதல் தகும். எங்ஙனமாயினும், பல பிரதேசங்களிலுமுள்ள நூற் பிரதிகளை நன்கு ஆராய்ந்து இது போன்றவை இடைச்செருகல்களா, அல்லவா என்பது துணியத் தக்கது. இங்ஙனம் ஆராய்ச்சியால் துணிபுகண்ட பதிப்பு வெளிவந்தால்தான் கம்பன் தந்துள்ள இராமாயண மூலத்தை நாம் அறிந்துகொள்ள இயலும். இங்ஙனம் செய்யாதது பெரியதொரு குறைபாடு அல்லவா?

செய்யுட்களில் உள்ள பிழைகள்

இடைச்செருகல்களாகக் கருதத்தக்க தனிச் செய்யுட்களை மேலே கவனித்தோம். இனி, அங்ஙனம் கருதுதற்கு இடமின்றிக்

கம்பனே பாடியுள்ளவை எனக் கொள்ளற்குரிய செய்யுட்களில் சேர்ந்துள்ள பிழைகளை நோக்குவோம். இவற்றுள் ஒரு வகையின முதல் முதலில் பிழையின்றிப் பதிப்பித்த செய்யுட்கள். பின்னர் அச்சுப் பிழைகள் தோன்றி, அவற்றின் உண்மைப் பாடல்கள் மறைந்துவிட்டன. உதாரணமாக, யுத்தகாண்டத்திலே மாயாசனகப் படலத்தில் (8)

இட்டதோர் இரண பீடத் தாமரை யிருக்கை நின்றும்
கட்டதோட் கானம் சுற்றக் சுழலொன்று காலிற் காண
வட்டவெண் கவிகை யோங்கச் சாமரை மருங்கு வீசத்
தொட்டதோர் சுரிகை யாளன் இருந்தனன் இனைய
சொன்னான்

என்று வரும் செய்யுளைக் கூறலாம். இங்கே, 'தாமரை யிருக்கை நின்றுங் கட்டதோள்' என்பதற்குப் பொருள் யாதும் இல்லை'. இராஜகோபாலப் பிள்ளை முதலியோர் பதிப்பித்த யுத்த காண்டத்தை நோக்கினால் உண்மைப் பாடம் தெரியவரும். அவற்றிலே,

இட்டதோர் இரண பீடத் தமரரை இருக்கை நின்றும்

எனக் காணப்படுகிறது. 'தமரரை' என்பதில், ரகரத்தை மகரத்திற்கு முன் தவறாகப் பெய்ததனால் பொருள் விளங்காமற் போக இடமேற்பட்டது. முற்பதிப்புக்களை நோக்கி அச்சிடுகின்ற இடத்துங்கூட இவ்வாறு பிழை நேர்ந்துள்ளது. நமது நாட்டில் பதிப்பாசிரியர்கள் என்று கருதத்தக்கவர்கள் மிகச் சிலரே யுள்ளார்கள் என்பதை இது தெரிவிக்கிறது. ஒரு சிலர் தங்கள் பெயர்களை இரவல் கொடுப்பதேயன்றி உண்மையில் பதிப்பு வேலை செய்வதில்லை. அச்சுத்தாள்களைப் பிழையறப் பரிசோதிப்பதும் இல்லை. இங்ஙனம் பிழையறப் பரிசோதியாமை அருவருக்கத்தக்க குறைபாடு அல்லவா ?

இனிப் பிறிதொரு வகையாக நேர்ந்துள்ள பிழைகளை நோக்குவோம். முதல் முதல் பதிப்பித்த பிரதியிலேயே இவ்வகைப் பிழைகள் நேர்ந்துவிட்டன.

உறமே வியகா தலுனக் குடையார்
புறமே துமிலா ரொடுபூண் முலையான்
மறமே புரிவார் வசமா யினையோ
அறமே கொடியா யிதுவோ அருள்தான்.

(பிராட்டி களங்காண்-16)

என வருவது ஓர் உதாரணம். பிரம்மாஸ்திரத்தால் இலக்குமணன் முதலியோர் உயிரிழந்துவிட்டனர். இராமனும் இத்துயராற்றாது போர்க்களத்திலே மூர்ச்சித்து விழுந்துவிட்டனன். இந்நிலையில் அரக்கர்கள் சீதையைக் களத்திற்குக் கொண்டுவந்து அங்கே வீழ்ந்து கிடந்த இராமன் முதலியோரை அவளுக்குக் காட்டு கின்றனர். அப்பொழுது அறத்தை நோக்கிச் சீதை புலம்புவதாக இச்செய்யுள் அமைந்துள்ளது. முதலாவது 'பூண்முலையாய்' எனத் திரிசடையை விளித்துக் கூறுவதாகக் கருதினர். இங்ஙனம் விளித்து அறத்தை நோக்கியுரைப்பதில் பொருத்தம் யாது மில்லை. எனவே, 'பூண்முலையாள்' எனத் திருத்தினர். இதற்கு, 'பூண்முலையாகிய என் காரணத்தால்' என்பது கருத்தெனக் கொண்டனர். சீதாதேவி தன்னைக் குறித்துப் 'பூண்முலையாகிய என்' என்று கூறவைக்கும் அழகே அழகு! இவ் ஆபாசத்தினின்றும் தப்புதற்கு பூண்முலையார் என இராஜகோபாலப் பிள்ளை பதிப்பித்தனர். இங்ஙனமாக, வழியின்றித் திகைத்தனர், பல பதிப்பாசிரியர்களும். இப் பிழைபட்ட பாடங்கள் எவ்வாறு நேர்ந்தன? ஏட்டுப் பிரதிகளில், 'பூணகிலாய்' என்று உள்ளது. இதன் பொருள் தொடர்பு கொள்ளுகின்றாயில்லை' என்பதாம். இதனைப் பிறழ உணர்ந்து, 'பூண் நகிலாய்' எனப் பிரித்து, நகில் என்ற கடின பதத்தின் பொருளைப் பாட்டிலே பெய்து எவரோ ஒருவர் அமைத்துவிட்டனர். உண்மையான பாடம் மறைந்தே போய்விட்டது. பொய்யாக அமைந்துவிட்ட பாடத்திற்குப் பொருள் காணும் முயற்சியிலேயே அறிஞர்கள் நிலைத்து விட்டனர். நான் கொடுத்துள்ள திருத்தங்களின் உதவிகொண்டு வெளியிடப்பெற்ற கோபால கிருஷ்ணமாச்சாரியார் பதிப்புத் தவிர, ஏனைப் பதிப்புக்கள் பலவற்றிலும் 'பூண் முலையாள்' என்றே உள்ளது. இவ்வாறாக விளைந்துவிட்ட பிழைகளெல்லாம் கம்பனது கருத்தை உணர்வதற்குப் பேரிடையூறுகளாயுள்ளன. இங்ஙனமாக, கம்பனது மூல பாடத்தை உணர்ந்து பதிப் பித்தல் நகைத்தற்குரிய ஒரு குறைபாடு அல்லவா?

ஏடு வாசித்தல்

ஏடு வாசிப்பதில் தவறாகப் பாடல்களைக் கொள்ளுதலும் உண்டு. 'பொன்' என்பதும் 'பேரன்' என்பதும், 'போன' என்பதும் ஒன்றுபோலவே ஏடுகளில் காணப்படும். இடம் நோக்கி, செய்யுளின் ஓசை நோக்கி, பொருள்நோக்கி இன்னது தான் பாடம் என்று திட்டப்படுத்துதல் வேண்டும். மிகச் சிறந்த பண்டிதர்கள்கூட இதில் பிழைபோதற்கு இடமுண்டு. நண்டிற்குக்

'களவன்' என்பது ஒரு பெயராம். இதற்கு வயற்களத்திலே வாழும் உயிர் என்பது பொருள். இதனைக் 'கள்வன்' என்று நெடுங்காலமாகப் படித்து, அச்சியற்றி வெளியிட்டவர்கள் மிகச் சிறந்த வித்வான்களாவர். கம்ப ராமாயணத்திலேயே கைய்டைப் படலத்தில்,

உயிரிரக்கும் கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்

என்பது பலருக்கும் ஞாபகமிருக்கலாம். இதனைச் சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளை, 'உயிரீர்க்கும் கொடுங்கூற்றின்' என்று பதிப்பித்தனர். 'இரக்கும்' என்பதிலுள்ள சுவை இப்பாடத்தில் இல்லாமை காணலாம். இங்ஙனம் சுவையற்ற பாடங்களைக் கொள்ளுதலும் ஒரு குறைபாடு அல்லவா?

வேறு சில இடங்களில் பிழையாக வாசித்து, செய்யுளோசை குறைவுபடுத்தல் நோக்கி அடைமொழி முதலியவற்றைப் பெய்து நிரப்பியுள்ளார்கள். நகரப் படலத்தில் (6)

தங்குமா பொருளுந் தருமமுந் துணையாத்
தம்பகைப் புலங்களைத் தவிர்க்கும்
பொங்குமா தவமும் ஞானமும் புணர்ந்தோர்

எனப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பொருள் என்பதனைப் பொதுப் படச் செல்வம் எனக் கொள்ளுவோம். ஆனால், செல்வத்திற்கும் மாதவம் புரிபவர்களுக்கும் யாதோர் இயைபும் இல்லை. உண்மை யான பாடல 'தங்கு பேரருளும்' என்பது. இதனைத் தங்கு பொருளும் என வாசித்து, ஓசை குறைபடுதலை நோக்கி, தங்குமா பொருளும் எனக் கூட்டி நிரப்பிவிட்டனர். இவ்வகைப் பிழைக்கு வேறொரு சிறந்த உதாரணம் சேதுபந்தனப் படலத்தில் (56) காணப்படுகிறது.

தாவ லோவல மென்றது தாங்கிய
மாவெ லாங்கடல் வீழ்தலும், வண்டெலாம்
காவ லாளர் விழக்களை கண்ணிலா
ஏவ லாளரின் எங்குந் திரிந்தவால்

இப்பாடத்தை வைத்துக்கொண்டு தமக்குத் தோற்றியவாறு பொருள் எழுதினாரும் உளர். ஆனால், உண்மையான பாடல் வருமாறு :

தரவ லோம்வலம் என்றுயிர் தாங்கிய
மரமெ லாங்கடல் வீழ்தலும் வண்டெலாம்
கரவி லாளர் விழக்களை கண்ணிலா
இரவ லாளரின் எங்கும் இரிந்தவால்

இதனை வாசித்த அளவில் பொருள் இனிது விளங்குகிறது; இதுவே உண்மைப் பாடம் என்பதும் நன்கு புலப்படுகிறது. ஈதல் இயலும் வரையே உயிர்வாழ்தல்வேண்டும் என்ற]அரிய கொள் கையை ஓரறி வுயிர்களாகிய மரங்களும் பின்பற்றி யொழுகின. இதுதான் முதலடியின் செவ்விய கருத்தாகும். ஆனால், பழைய பாடத்தையே மேற்கொண்டுள்ளார், எனது நண்பர் கோபால கிருஷ்ணமாச்சாரியார். இது முற்றும் திருப்தியாக இல்லாத இடங்களில் பழைய பாடல்களையே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கொள்கையை உணர்த்துகிறது. இக் கொள்கை எனக்கும் உடன்பாடே. ஆனால், குறிப்பிட்ட இந்த இடத்தில் ஆச்சாரி யார் கொண்டது வேண்டாததோர் ஐயப்பாடே. இவ்வாறு தவறாக வாசித்துக்கொண்டு பாடங்களை அமைத்தல் மிகமிகப் பெரியதொரு குறைபாடு அல்லவா ?

பல ஆண்டுகட்கு முன்னர் யாழ்ப்பாணத்து வித்வான் சி. கணேசய்யர் செந்தமிழ் 2-ஆம் தொகுதி தொடங்கிப் பல பகுதிகளில் 'இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்' என்ற ஆராய்ச்சி வரிசையில் பல பல குறைபாடுகளையும் திருத்தங் களையும் வெளியிட்டுள்ளார்.

இக் குறைபாடுகளெல்லாம் நீங்கிய ஆராய்ச்சிப் பதிப்பு வெளிவந்தாலன்றி, கம்பனை உண்மையில் உணர முடியுமா? முடியாதாகவே, ஆராய்ச்சிப் பதிப்பு வேலையில் நாம் முயலுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

2

குறைபாடுகளின் காரணங்கள்

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று கூறுவார்கள். இந்த நியாயத்தை அநுசரித்து ஒவ்வொரு வகைக் குறைபாட்டிற்கும் ஒவ்வோர் உதாரணங் காட்டினோம். பதிப்புக் களின் அபக்குவமான நிலையை இவை நன்கு காட்டுகின்றன3 இக்குறைபாடுகள் எக்காரணங்களால் நேர்ந்தது என்பது சிறிது நோக்கத் தக்கது.

பிரசங்க முறை

முதலாவது, கம்ப ராமாயணம் தமிழ் உலகில் பரவிவந்த முறையே இக்குறைபாடுகளுக்கு ஒரு காரணமாய் இருந்தது. முற்காலத்தில் ஒரு சிலர் தவிர, பொதுமக்கள் ஏடுகளை வைத்துப் படித்து வந்தவர்களல்லர். 'கற்றலிற் கேட்டலே நன்று' என்பதையே அவர்கள் கடைப்பிடித்து வந்தார்கள். ஏடுகளை வைத்துக் கற்றவர்களில் ஒரு சிலர் பிரதியிலுள்ள செய்யுட்களை மனனம் பண்ணுவதிலேயே கருத்துக்கொண்டவர்களாயிருந்தனர். ஏனெனின், அவர்கள் கம்ப ராமாயணத்தை மக்களிடம் சொல்லி, அதனைப் பொருள் வருவாய் பெறுவதற்கு ஒரு கருவியாகக் கொண்டார்கள். இவ்வாறு பிரசங்கம் பண்ணுவது பெரும்பாலும் இராப் பொழுதாக இருக்கும். இரவில் ஏடுகளை வைத்துப் படிப்பதுதானும் இயலாத காரியம். பிரசங்கமும், இடையறவு பட்டுச் சுவை மிகவும் குன்றிவிடும். மக்கள் ஆவலோடு நீண்ட பொழுதிருந்து கேட்கமுடியாது. ஆகவே, தாம் ஞாபகத்தில் வைத்திருந்த செய்யுட்களை இடையிடையே சொல்லிப் பொது மக்களைத் திருப்திப்படுத்த முயன்றனர். ஆனால், ஞாபகத்தை மாத்திரம் நம்பினால் பலவிதமான தவறுதல்களும் நேரிடுதல் இயற்கையே. இவ்வாறு நேர்ந்த தவறுதல்களுக்கு உதாரணமாக ஒரே பொருளும் ஒரே அளவு ஓசையுமுடைய சொற்களைக் கூறலாம். வரை மலை என்ற சொற்களில் எதுகை தவிர, வேறு எந்த இடங்களிலும் ஒன்றற்கொன்று மாறுவைப்பது செய்யுள் பற்றிய அளவில் பிழையாகமாட்டாது. கம்பனிலிருந்து ஓர் உதாரணம் தருகிறேன். ஆற்றுப் படலம் 4-ஆம் செய்யுளின் இறுதியடி,

வள்ளி யோரின் வழங்கின மேகமே

என்பது. இதில் இறுதிச் சொல் 'வானமே' என்று சில பிரதிகளிற் காணப்படுகிறது. இரண்டிற்கும் பொருளொன்றே. ஆனால் கம்பனது மூல பாடம் யாது என்பது கேள்வி. அது இருக்கட்டும், சொற்கள் மாறுபடுவதற்குப் பிரசங்க முறை ஒரு காரணம் என்பது இதனால் விளங்கும்.

பிரசங்கம் செய்தவர்களிற் சிலர் தக்க சொல்லுணர்ச்சி அற்றவராயிருந்தனர். ஆகவே, தமக்குத் தெரியாத சொல்லுக்குப் பதிலாகத் தெரிந்த சொல்லைப் பெய்து பாடத்தைப் பிறழச் செய்தனர். உதாரணமாக, எழுச்சிப் படலத்தில் (30),

தாள்மி டைந்தன தம்மி மிடைந்தென

என்ற உண்மைப் பாடத்திலுள்ள தம்மி என்பதற்கு மாறாகத் 'தம்மின்' என்ற சொல்லை இட்டனர். 'தம்மி' என்ற தெலுங்குப் பதத்திற்குத் தாமரை என்பது பொருள். இது பிரசங்கித்தவர்க்குப் பிறமொழியுணர்ச்சியில்லாமை காரணமாகச் சொல் - மாறாட்டம் நேர்ந்ததை உணர்த்துகிறது.

இவ்வாறு பிரசங்கித்தவர்கள் கம்ப ராமாயணத்தை மட்டும் சொல்லி வந்தார்கள் என்று நினைத்தல் கூடாது. பொது மக்களை, பாமரமக்களை, இன்புறுத்துவதே அவர்கள் நோக்கம். ஆகவே, இதற்குத் தக்கபடி நகைச் சுவை முதலியன தரும் பல வகையான நூதன கட்டங்களையும், உபகதைகளையும் விஸ்தாரமாக எடுத்துக்கூறி வந்தனர். இதனாலும் கம்பராமாயண மூலத்தில் இல்லாத பல கதைகளுக்கு இடமேற்பட்டுவிட்டது. இங்ஙனம் ஏற்படவே, இக்கட்டங்கள் முதலியவற்றைப் பிற்காலத்தவர் செய்யுளிலும் அமைத்து மூலநூலில் சேர்த்துவிட்டனர் என்று சொல்லலாம். இதற்கு உதாரணம் கும்பகர்ணன் உறங்கிக் கிடந்ததை வருணிக்கும் பகுதி, இப்பகுதி ஒரு சில ஏட்டுப் பிரதிகளில் காணப்படவில்லை.

வால்மீகி கதைப் பகுதிகள்

இவ்வகையான இடைச்செருகல்களே யன்றி, இப் பிரசங்க முறையில் வேறொரு வகை இடைச் செருகல்கள் புகுதற்கும் இடமேற்பட்டது. பிரசங்கம் செய்து வந்தவர்களுள் ஒரு சிலர் வடமொழி ஞானம் படைத்திருந்தார்கள். இவர்கள் வால்மீகி ராமாயணத்திலுள்ள கதைப் பகுதிகள் தமிழ்ப்பெரு நூலில் காணப்படாதிருத்தல் தக்கதன்று எனக் கருதினர்.

தேவபாடையின் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முளும் முந்திய
நாவி னார்உரை யின்படி நான் தமிழ்ப்
பாவி னால்இ துணர்த்திய பண்பரோ

என்ற செய்யுளையும் புகுத்தி, வால்மீகி ராமாயணத்துக்காணும் ஒரு சில பகுதிகளைச் செய்யுள் வடிவில் சேர்த்துவிட்டனர் இதற்கு உதாரணமாக, விசுவாமித்திரரின் வரலாறு கூறும் பகுதியைக் காட்டலாம். இதுபற்றி முன் பகுதியில் கூறியுள்ளேன்.

ஏடுகளில் காணப் பெறாதவை

மேற்கூறியனவேயன்றி, பிறிதொரு வகை இடைச் செருகலும் தோன்றுதற்கு இப் பிரசங்கமுறை காரணமாயிற்று. பிரசங்கம் கேட்கவந்த பொதுமக்கள் பெரும்பாலும் இராம சரிதத்தில் ஈடுபட்டவர்களேயாவர்; கம்ப ராமாய்ணத்தில் அத்தனை ஈடுபாடு உடையவர்களல்லர். ஆகவே, அவர்களுக்கெனப் புரிந்த வர்கள் இராமனது சரித்திரத்தில் சில சில பகுதிகளைச் சேர்த்துக் காவியத்தை வளர்ப்பாராயினர். உதாரணமாக, இராம ஜாதகம் பற்றிய செய்யுட்களைக் கூறலாம். அவை வருமாறு :

மேடமா மதிதிதி நவமி மீன்கழை
நீடுறு மாலைகர்க் கடகம் நீதிசேர்
ஓடைமா களிறனான் உதய ராசிகோள்
நாடின்ஏ காதசர் நால்வர் உச்சரே

என்றனர் பாதகம் இறைவற் கேனையர்
தந்தமக் கும்தகு முறையில் தான்தெரிந்
தொன்றிய தமனியத் தெழுதி யோதினார்
வன்றிறற் சுரர்குரு வாழ்த் தெடுப்பவே

இந்தச் செய்யுட்களைப் பற்றி, சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளை பதிப்பில்,

> (இந்த) இரண்டு கவிகள் சில பிரதிகளிற் காணப்படு கின்றன; அவை பழய ஏடுகளில் இல்லை.

என்ற குறிப்புக் காணப்படுகின்றது. என்னிடமுள்ளவற்றிலும் பெரும்பான்மைப் பிரதிகளில் இச் செய்யுட்கள் இல்லை.

பிரசங்கம் கேட்க வந்தவர்கள் இராம சரிதத்தில் மட்டும் ஈடுபட்டவர்கள் எனக் கொள்ளுதலும் கூடாது. திருமாலினது பரத்துவத்திலும் வைஷ்ணவ சமயப் பிரசாரத் திலும் இவர்கள் கருத்துக் கொண்டவர்களே. பெரும்பாலும் வைஷ்ணவ மதச் சார்பினரே இராமாயணம் கேட்பதில் பேராவல் கொண்டிருந்தார்கள். இன்னாரது திருப்தியின் பொருட்டும் செய்யுட்கள் சில கம்பராமாயணத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே, இவ்வகை இடைச்செருகல் புகுதற்கும் பிரசங்க முறை காரணமாய் அமைந்தது. உதாரணமாக, கடிமணப் படலத்தில் (49),

என்றுநான் முகன்முதல் யாவரும் யாவையும்
நின்றபே ரிருளினை நீக்கி நீணெறி
சென்றுமீ ளாக்குறி சேரச் சேர்த்திடு
தன்றிரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே

என்று வரும் செய்யுளைக் காட்டலாம். இச் செய்யுள் பழைய பிரதிகளில் காணப்பெறவில்லை. சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளையின் பதிப்பில் இச் செய்யுள் கொடுக்கப்படவேயில்லை.

விருப்பு வெறுப்பு காரணம்

இதுகாறும், பிரசங்க முறையில் கேட்போரது விருப்பு வெறுப்புக் காரணமாக இராமாயணத்தில் புகுத்தப்பட்ட இடைச் செருகல்களை நோக்கினோம். இனி, பிரசங்கம் புரிந்துவந்தோர் தங்களுடைய விருப்பு வெறுப்புக்களின் காரணமாகப் புகுத்திய கவிதைகள் சிலவற்றைக் கவனிப்போம். இவர்களிலும் பெரும் பாலோர் வைஷ்ணவ சமயத்தினராயிருந்தனர். ஆகவே வைஷ்ணவ சமய தத்துவங்களைக் கூறினால் பொருந்தும் என நினைத்த பகுதிகளை இவர்கள் சேர்த்துவிட்டனர். உதாரணமாக நாகபாசப் படலத்தில் (251 - 261),

யாரிவ் வதிரேக மாயை யறிவார்

என்று முடியும் செய்யுட் பகுதியைக் கூறலாம். இப் பகுதி நான் பார்வையிட்ட ஒரு பழம் பிரதியில் காணப்படவில்லை. இவை இடைச் செருகல் என்பது எளிதில் புலனாகக்கூடியது. பிரதிகள் அனைத்தையும் நாம் ஆராய்வோமானால் இம்முடிபே பெறப்படும் என்றும் நாம் கொள்ளலாம். ஆனால், அவ்வாறு ஆராயும்வரை சந்தேகம் என்ற நிலையில் இவற்றை வைத்துக்கொள்ள வேண்டுமேயன்றி உறுதியாகத் தள்ளிவிட முடியாது. எவ்வா றாயினும், இந்த முறையிலும் இடைச்செருகல்கள் நேருதற்கு இடமுண்டு என்ற அளவில் இதனைக் கொள்ளலாம்.

சமயச்சார்பு காரணமாகத் திருத்தங்கள்

சைவ சமயத்தினர் சிலரும் இராமாயணத்தில் ஈடுபட்டவர் களாகவேயிருந்தனர். இவர்களும் தங்கள் கொள்கைக்கு ஏற்றவாறு இராமாயணச் செய்யுட்களைத் திருத்திய இடங்கள் ஒரு சில உள்ளன. உதாரணமாக, திரு அவதாரப் படலத்தில் (14)

எழுந்தனர் கரைமிடற்[] றிறையும்

என்று தொடங்கும் செய்யுளைக் கூறலாம். இதற்குரிய பாட பேதங்கள் சைவச் சார்பைத் தெரிவிக்கின்றன.

எழுந்திலன் கறைமிடற் றிறையும்

என்பது ஒரு பாடம். இதனால், சிவபெருமானொழிய ஏனையோர் எழுந்தனர் என்று பொருள் பெற வைத்தனர். சிவபெருமான் எழுந்தனர் என்றல் அவரது முழு முதல் தன்மைக்குக் குறையல்லவா! வேறொரு பாடம்.

எழுந்தனன் கடகளிற் றிறையும்

என்பது. இங்கே 'கடகளிற்றிறை' என்பதற்கு இந்திரன் எனப் பொருள் கொண்டு, சிவபெருமானே இந்த இடத்தில் இல்லை எனக் கருதும்படி செய்தனர். இந்த உதாரணத்தை நோக்கினால் சைவ மக்களும் இராமாய்ணத்தில் தமக்கு வேண்டும் திருத்தங்கள் செய்துகொண்டனர் என்பது புலனாகிறது.

மேலே கூறியன பிரசங்கம் புரிந்தவர்களில் சமயங் காரணமாக நேர்ந்த இடைச் செருகல்கள். இவர்களுள் பெரும்பாலார் தமிழ் இலக்கண இலக்கிய உணர்ச்சி, மிகுதியும் இல்லாதவராகவே இருந்தனர். ஆகவே இராமாயணப் பிரசங்கம் செய்பவர்கள் என்றால், தமிழுணர்ச்சியற்றவர்களென்றே வித்வான்களாற் கருதப்பட்டனர். இக்கருத்து முற்றும் பிழை பாடு உடையதென்றும் கூற முடியாது. இது நிற்க.

வித்வான்களின் இடைச் செருகல்கள்

வேறொரு காரணத்தாலும் இடைச் செருகல் நேர்ந்த துண்டு. இலக்கிய வித்துவான்கள் கம்பனுடைய செய்யுட்களின் தொடர்ச்சியில் ஏதோ தவறு நேர்ந்துவிட்டது என்று ஊகித்து, அத் தவறு நீங்கும்படியாகச் சில இடங்களில் சில செய்யுட்களைச் சேர்த்துள்ளார்கள். உதாரணமாக, அயோத்தியா காண்டத் திலே மந்திரப் படலத்தில் தசரதன் இராமனது பட்டாபிஷேகத் தைக் குறித்து அரசர்களோடு ஆலோசித்தலைக் கூறும் பகுதி யைக் கூறலாம். இப்பொழுதுள்ள பதிப்புக்களில் 79-வது செய்யுள்.

மூவெழு முறைமைஎம் குலங்கள் முற்றுறப்
பூவெழு மழுவினாற் பொருது போக்கிய
சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற்கு
ஆவஇவ் வுலகம்ஈ தறன்என் றார் அரோ

என உள்ளது. அரசர்கள் இங்ஙனம் கூறினார்கள் என்று பொதுப் பட உரைப்பட உரைப்பதில் இலக்கிய வித்துவான்கள் திருப்தி யடையவில்லை. இவர்கள் கருத்தை ஆதரிப்பது போல் 80-வது செய்யுள் பின்வருமாறு அச்சில் உள்ளது :

வேறிலா மன்னரும் விரும்பி அன்னது
கூறினார் அதுமனங் கொண்ட கொற்றவன்
ஊறிய உவகையை ஒளிக்கும் சிந்தையான்
மாறுமோர் அளவைசால் வாய்மை கூறினான்.

இங்கே, வேறிலா என்பதின் பொருளும் அவர்களைச் சிறிது மயக்கியிருத்தல் வேண்டும். இப்பாடத்திற்குச் சில அரசர் களேனும் முற்படக் கூறப்பட்டிருத்தல் வேண்டுமல்லவா? இதற் குத் தக்கபடி இரட்டர், விதர்ப்பர், கலிங்கர், துருக்கர், குருக்கள், கலிங்கர், மிலேச்சர், சிங்களர், சேதியர், விராடர், தெலுங்கர், சேரர், சோழர், தென்னர் ; இவ்வனைவரும் தனித்தனியே கருத்தை ஆமோதித்தனர் என்ற பொருளையடக்கி 14 செய் யுட்கள் இயற்றிச் சேர்த்துவிட்டனர். இவைகளில் கலிங்கரைக் குறித்து இரண்டு செய்யுட்கள் வருதலும் நோக்கத்தக்கது. இச் செய்யுட்கள் ஏட்டுப் பிரதிகள் சிலவற்றில் காணப்படுகின்றன வேயன்றி, அச்சுப் பிரதிகளிற் கூடக் காணப்பெறவில்லை. உண்மையில் 'வேறுலா' என்பது பாடம். இதற்கு 'கருத்து வேறு பாடில்லாத' என்பது பொருள். இப்பாடத்தை, 'வேறெலா மன்னரும்' எனத்திருத்தினர். தங்கள் கவித்துவத்திறம் புலப்படு தற்கு இடம் அமைத்துக் கொண்டனர்.

இவ்வாறாக, பிரசங்கம் நிகழ்ந்த முறைகள், கேட்போர் களின் தகுதி, விருப்பம், இவை முதலிய காரணங்களை முன்னிட்டுக் கம்பராமாயணத்தில் இடைச் செருகல்களும் பாட பேதங்களும் பலவாக நிகழ்ந்துவிட்டன. கம்பனது காலத்தை மிக அடுத்தே பிரசங்க முறையானது தோன்றியிருக்க வேண்டும் என்று நாம் கருத இடமுண்டு. கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கன்னட தேசத்தில் இவ்வகைப் பிரசங்கங்கள்

நிகழ்த்திய இருவர், கம்பராமாயணம் நாராயணர், கம்பராமாயணம் ராமப்பன்' என்ற சிறப்பு - அடைமொழிகள் சேர்த்து வழங்கப்பட்டனர். இது ஒரு கன்னட சாசனத்தால் தெரிய வருகிறது. பெரும்பாலும் நமது தமிழ் நாட்டிலிருந்தே இவ் வழக்கம் கன்னட தேசத்திற்குப் பரவியிருத்தல் வேண்டும் எனக் கொள்ளலாம். கம்பன் காலத்திலேயே இவ்வகையான பிரசங்கங்கள் நிகழ்ந்தன என்று தெரிவிக்கின்றது. அந்த வரலாற்றில் ஒரு செய்தி மிகவும் ருசிகரமானது; எனது கருத்தையும் அது மிக நன்றாக வற்புறுத்துகின்றது. கம்பராமாயணப் பிரசங்கம் நிகழ்ந்த இடத்திற்குக் கம்பன் ஒரு முறை சென்றானாம். அங்குப் பிரசங்கித்த செய்யுட்களையும் பொருள்களையும் வெகு நேரம் கேட்டுக்கொண்டிருந்தானாம், பல போலி இராமாயணச் செய்யுட்களோடு கலந்து இடையிடையே தனது கவிதைகளும் சில சில உள்ளன என்று கூறினானாம். இதனால், கம்ப ராமாயணத்தில் வெகு காலத்திற்கு முன்னரே இடைச்செருகல்கள் மிகுதியாக ஏற்பட்டுவிட்டன என்பது விளங்கும்.

மேற்கூறியவாறு பொதுமக்களிடையே இராமாயணம் பரவுவதற்குப் பிரசங்கங்கள் காரணமாயிருப்பினும், அறிஞரிடையே அது பரவுவதற்கு நூற்பிரதிகளே காரணமாயிருந்தன? முற்காலத்தில் கல்வியைப் பேணிவந்த சில முக்கியமான நகரங்களில் ஏடுகளைப் பிரதி செய்வதையே தமது தொழிலாகக் கொண்டிருந்த சிலர் இருந்தனர். அவர்கள் முக்கியமாகப் பிரதி செய்துவந்தவை ஜனங்கள் மிகவும் போற்றிவந்த இராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடல், திருக்குறள் முதலியனவாம். இராமாயணத்தைப் பிரதி செய்வதில் பேருக்கங் காட்டி வந்தவர்களுள் ஆழ்வார் திருநகரியிலுள்ளாரைக் கூறலாம்

ஆழ்வார் திருநகரி

இற்றைக்குச் சுமார் 500 ஆண்டுகட்கு முன்பு தொடங்கிச் செந்தமிழன்னையைப் போற்றி, அவளது பேரணிகலன்களைப் புனைந்து தமிழ் நாட்டிற்கும் இலக்கிய உலகிற்கும் அரிய தொண்டுகள் இயற்றிவந்த பெருமுது நகர்களுள் குருகூர் எனப் பெயர் பெற்று ஒளிரும் இத்திருப்பதி, பக்தர்களெல்லாம் தரிசனம் செய்தற்குரிய திவ்யக்ஷேத்திரமாயுள்ளது. தமிழுக்கு உரையாணி போன்ற பல பெருமக்கள் வாழ்ந்து தமிழைப் போற்றி வளர்த்த பெருமையினாலே, இப்பொழுது பக்தர்களேயன்றித் தமிழ்நாட்டினர் அனைவரும் சென்று தரிசித்து இன்புறு

தற்குரிய பெருந் தகுதியையும் புண்ணியத்தையும் பெற்று விட்டது.

இங்குச் செழித்த ஆராய்ச்சித் துறையாளர்களின் நன் முயற்சியின் மூலமாகவே பண்டைத் தமிழ் - இலக்கியங்கள் பலவும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. டாக்டர் உ. வே. சாமிநாதையர், மஹா வித்வான். ரா. ராகவையங்கார் முதலியோர்களுக்குப் பண்டைத் தமிழ்க் கருவூலங்கள் அகப்பட்ட புண்ணிய ஸ்தலம் இதுவேயாகும். சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்பு வரை இந்நகரினர் குன்றாத ஊக்கங்கொண்டு, தமிழ் கற்றுத் தமிழ்க்கருவூலங்களைப் பேணிவந்தனர். குருகூரை அடுத்துள்ள வாசிகள் பலரும் இங்குவந்து பிரதிகள் எழுதுவித்துப் பெற்றுக் கொள்வது வழக்கமாயிருந்தது. இவ்வூரிலுள்ள வித்வான்களை அழைத்துச் சென்று பிரதிகள் எழுதுவித்துக்கொள்ளுதலும் உண்டு. எனவே இப்பிரதேசத்திலுள்ள பிரதிகள் வித்துவ பரம்பரையினருள் ஒரு சாராரால் பெரும்பாலும் மரபு நெறி தவறாது எழுதப்பட்டனவாம். தமிழ் இலக்கிய சரிதம் எழுதப் புகுவார் இத்திருப்பதியின் இலக்கிய வாழ்க்கையை மறந்துவிட முடியாது.

குருகூரின் சிறப்பு

பண்டை இலக்கியங்களைக் கற்றுப் பெயர்த்தெழுதிப் பின் சந்ததியினருக்கு இந்நகரினர் உதவியது போலவே, தமிழ்க் கலைவாணியின் மணிமகுடமாகிய கம்பராமாயணத்தையும் இவர்கள் போற்றிவந்தார்கள். இப்பொழுது கன்னடம் வழங்கும் பிரதேசம் ஒன்றில், 14-ஆம் நூற்றாண்டில் கம்பராமாயணப் பிரவசனம் செய்துவந்த குடும்பமொன்று இருந்ததாகச் சாசனத்தால் விளங்குகிறது எனக் கூறினோம். தமிழையும் வைஷ்ணவ சமயத்தையும், ராமசரிதத்தையும் ஒருங்கே போற்றி வந்த திருக்குருகூரினர் ராமாயணப் பிரவசனத்தில் இராமாநுசர் காலந் தொட்டே ஈடுபட்டிருந்தனர் என்பது சொல்லாமலே அமையும். இப்பிரவசனத்திற்குக் கம்ப ராமாயணம் தக்க கருவியாயிற்று. சில குடும்பத்தினர் கம்ப ராமாயணப் பிரவசனத்தினாலே சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதும் விளங்குகிறது.

இங்கே சுமார் 230 ஆண்டுகளுக்கு முன், இராமாயணம் சாத்தாதவர் என்றும், இராமாயணம் திருவேங்கடதாசர் என்றும், இராமாயணம் திருவேங்கடம் உறங்காவில்லிதாசர் என்றும் பெயர்கள் கொண்ட ஒருவர் இராமாயணத்தைப் பிரதிகள்

செய்து வழங்கி வந்தனர். இவர் வாழ்ந்த காலம் கொல்லம் 896-ஆம் ஆண்டை அடுத்துள்ளதாகும். இவர் நீண்ட காலம் வாழ்ந்தவர் என்பது, 'பராங்குச நாடகம்' என்ற ஒரு நூலைக் கொல்லம் 960-ஆம் ஆண்டு இராமாயணம் சாத்தாதவரும் பார்த்து அரங்கேற்றியது எனக் கூறுவதால் அறியலாம். பின் வந்தோர் அவரது பிரதியை நோக்கி எழுதிவந்தார்கள் என்றும் தெரிகின்றது. இவ் ஆழ்வார் திருநகரிப் பதியிலுள்ளவர்கள் பெரும்பாலும் வைஷ்ணவர்கள். அந்தச் சமயத்தில் பெரிதும் ஈடு பாடு கொண்டவர்கள். இவர்கள் இராமாயணச் சுவடிகள் பல வற்றிலும் காணும் பாடல்கள் அனைத்தும் தங்கள் பிரதிகளிலும் இருத்தல் வேண்டும் என்று கருதினார்கள். இக் கருத்திற்கு இயையவே, பிரதிகளையெழுதி முற்றுவித்துப் பரப்பிவந்தனர் நாற்பது ஏட்டுச் சுவடிகளை ஒப்புநோக்கி, அவற்றில் காணப் பட்ட மிகைச் செய்யுட்களையெல்லாம் சேர்த்துத் தயார் செய்த பிரதியொன்று சென்னை அடையாறு கலாசேஷத்திரத்திலே டாக்டர் சாமிநாதையரவர்களது நூல்—நிலையத்தில் உள்ள தெனத் தெரிகின்றது. இப்பிரதி முதலியவற்றில் இடைச்செரு கல்கள் பலபல புகுந்திருக்கவேண்டுமென்று பொதுப்படக் கூற லாம். இன்னும் நுட்பமாகச் சென்று இவர்களால் ஏற்பட்ட இடைச் செருகல்களை ஆராய்ந்து துணிவது இங்கு அவசியமின் றாம். பிரதி செய்தோர்களாலும் இடைச்செருகல் முதலியவை நேர்ந்துள்ளன என்பதொன்றே இங்கு அறியத்தக்கது.

3

இடைச் செருகல்களை நீக்குதல்

இங்ஙனம் நேர்ந்த இடைச் செருகல்கள், குறைபாடுகள் முதலியவற்றையெல்லாம் இதுவரை இராமாயணத்தைப் பதிப் பித்த ஆசிரியர்கள் ஏன் நீக்கவில்லை என்ற கேள்வி இயல்பாக எழக்கூடியது. பதிப்பித்த ஆசிரியர்கள் பலரும் இலக்கிய இலக் கணத் துறைகளில் மிகச் சிறந்து விளங்கியவர்களே யாவர். எனினும், அவ்வித்துவான்கள் இராமாயணத்தைச் செப்பனிட முயலவில்லை. அவர்கள் செய்ததெல்லாம் 'கரலிகித வழுஉக் களைக் களைந்து' அச்சியற்றியதுதான். இப்போது தெரிகின்ற வரை முதல் முதல் வெளிவந்தது கி.பி. 1843-ல் திரு-வேங்கடாசல முதலியார் 14 பிரதிகளைப் பரிசோதித்து அச்சிடுவித்த பதிப்பே யாகும். இவரைக் குறித்த விவரம் விரிவாக இப்பொழுது

நமக்குத் தெரியக்கூடவில்லை. ஆனால், இவர் ஒரு சிறந்த வித்துவானாதல் வேண்டும் என்பது மாத்திரம் நாம் ஒருவாறு ஊகிக்கக்கூடியது. இரண்டு ஆண்டுகட்குப் பின்னர் கி. பி. 1845-இல் மழவை மகாலிங்கையர் பாலகாண்டத்தை வெளியிட்டுள்ளார் இப்பதிப்பாசிரியரது பெயர் தமிழுலகிலே மிகப் பிரசித்தமானதே. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை இவரே முதல் முதல் வெளியிட்டனர். 'மழவைச் சிங்கார சதகம்' என்ற ஒரு நூலை இவர் இயற்றியுள்ளார். சிறுவர்க்குரிய இலக்கணம் ஒன்றும் இவரால் எழுதப்பட்டது என்பது யாவரும் அறிவர். பின்னர் கி.பி. 1858-இல் திருவேங்கடாசல முதலியார் பதிப்பித்த பிரதிக்கிணங்க சுப்பராய முதலியார், சுப்பராயப்பிள்ளை என்ற இருவரும் பதிப்பித்த பாலகாண்டப் பதிப்பொன்று தோன்றியது. இவர்கள் சென்னைக் கல்விச் சங்கத்தைச் சார்ந்தவர்கள். பின்னர் கி பி. 1861-இல் சேலம் ஜில்லா துரைத்தனப் பாடசாலைத் தமிழ்ப் புலவர் கிருஷ்ணசாமி முதலியார் என்பவர் பாலகாண்டத்தை உரையுடன் பதிப்பித்தனர். இப்பதிப்புக்கு உதவியவர்கள் வித்துவான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரும், கோமளபுரம் இராஜகோபாலப் பிள்ளையுமாவர். இப் பதிப்புக்களுக்குப் பிற்பாடு பல வித்துவான்கள் பல காலத்தும் பதிப்புக்கள் வெளியிட்டுள்ளார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள் க. வ. திருவேங்கட நாயுடு. திருமயிலை சண்முகம்பிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப்பிள்ளை, தி. த. கனகசுந்தரம் பிள்ளை, சே. கிருஷ்ணமாச்சாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் முதலியோராவர். திருச்சி சவரிராயப்பிள்ளையும் பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியாரும் சேர்ந்து வெளியிட்டுள்ள கிஷ்கிந்தா காண்டப் பதிப்புத் தனிப்படக் கூறத்தக்கது. இப்பதிப்புப் பல பிரதிகளை ஒப்புநோக்கிப் பாடபேதங்களுடன் வெளிவந்ததாம். சில இராமாயணச் சுருக்கங்களும் வெளிவந்துள்ளன. இவற்றைத் தொகுத்தோர் இராஜதானிப் பாடசாலைப் புத்தக சங்கத்தார், வ. வே. சுப்பிரமணிய அய்யர், ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், தி. கே. சிதம்பரநாத முதலியார் முதலினோர்.

இத்தனை சிறந்த வித்வான்களுள் ஒருவராவது இடைச் செருகல்களை நீக்கி, திருத்தமான பாடங்களை மேற்கொண்டு, பாடங்களை யெல்லாம் தொகுத்துக் கொடுத்து ஆராய்ச்சிப் பதிப்பு ஒன்றை வெளியிடவில்லையே. ஏன்? இதற்கு இரண்டு காரணங்கள் உள என்று தோன்றுகிறது.

முதலாவது, கம்பன் பாடியனவாக ஏட்டுப் பிரதிகளில் காணப்படும் செய்யுட்கள் அனைத்தும் தமது பதிப்பிலும் இருக்க வேண்டும் என்று ஒரு சில அறிஞர்கள் கொண்ட கொள்கையே யாகும். இம் முறையை The principle of inclusiveness என்று ஆங்கிலத்தில் கூறுவர். இம் முறையில் ஆராய்ச்சி என்பதே இல்லை. ஒன்றற்கொன்று முரண்பாடான செய்யுட்கள் உளவெனினும் அவைகளும் இவர்கள் பதிப்பில் காணப்படும். இம்முறை தக்கதாகாது என்பது யாவர்க்கும் எளிதிற் புலனாகும்.

ஆராய்ச்சிப் பதிப்பு

இரண்டாவது காரணம், ஆராய்ச்சிப் பதிப்பு என்ற கருத்தே சமீப காலத்தில்தான் தோன்றியதாகும், ஆங்கில நூல்களையும், ஆங்கில நூற்பதிப்புக்களையும் நோக்கியவர்களே இதன் அருமையை உணர்வார்கள். இம்முறை ஒன்றே கம்பனது இராமாயணத்தை உண்மையாக நமக்குக் காட்டவல்லது. அறிஞர் பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியார் 'வாணி விலாஸ்' அச்சுக் கூடத்திலிருந்து வெளியிட்ட சுந்தரகாண்டப் பதிப்பு ஒன்று உளது. இதில் பதிப்பாசிரியர் தமக்குத் தோன்றியபடியெல்லாம் பாடத்தையும் செய்யுள் முறையையும் மாற்றி அமைத்து விட்டனர். ஆராய்ச்சி முறைப் பதிப்பே புதியது என்பதற்கு இச் சுந்தரகாண்டம் ஒரு நிதர்சனமாகும். ஆங்கில இலக்கியத்தில் பெரும் பயிற்சியுடையவரும் தமிழ்நாட்டுப் பெருமக்களுள் முன்னணியில் நிற்பவருமாகிய நண்பர் ஒருவரோடு இராமாயணப் பதிப்பு விஷயமாய் ஒரு முறை பேச நேர்ந்தது. அப்பொழுது அவர் ஆராய்ச்சிப் பதிப்பு வெளியிடுதலைக் காட்டிலும், பொது மக்களுக்குப் பயன்படும்படியான நல்ல பதிப்பொன்று வெளி வருதலே மிக முக்கியமானது என்ற கருத்துப்பட மொழிந்தனர். தற்காலத்துலவும் பதிப்புக்களில் பிழைகளும், குறைபாடுகளும், இடைச் செருகல்களும், ஏனைக் குழறுபடைகளும் எத்தனை அதிகமாக உள்ளன என்பதை எடுத்துக் கூறுதற்குப் போலும் தகுதியுள்ளவர்கள் இல்லை. நண்பர் கருதும் பொதுமக்களுக்குரிய பதிப்பு ஆராய்ச்சிப் பதிப்பினை ஆதாரமாகக் கொண்டல்லவா தோன்றுதல் வேண்டும்; ஆயினும் இவர்கள் தெரிவித்த கருத்து. தமிழ்நாட்டினர் ஆராய்ச்சிப் பதிப்பினை எந்நிலையில் கொண் டுள்ளனர் என்பதனை விளக்குகிறது.

பண்டை நூல்களைப் பதிப்பிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஒரு நூற்பதிப்புக் கழகத்தார் வாக்கியங்களையும் பாடங்

களையும் தமக்குத் தோன்றியவாறு திருத்தி வெளியிட்டு வருகின்றனர். முனிசிப் வேதநாயகம் பிள்ளையவர்கள் எழுதிய நூல்களை இவ்வாறு பதிப்பித்திருக்கின்றனர், நன்முறையில் அமைந்த பதிப்பு என்ற கருத்தே நமக்குப் புதிது என்பதை இச்செயல் புலப்படுத்தவில்லையா?

மூன்றாவதொரு காரணத்தையும் நாம் இங்கே குறிப்பிடலாம். தமிழ்நாட்டிலுள்ள ஏட்டுப் பிரதிகளுள் பெரும்பாலனவற்றையும் தொகுத்தால்தான் செம்மையான ஆராய்ச்சிப் பதிப்பு வெளிவருதற்கு இடமுண்டு. இது கைகூடுவது எளிதன்று. பழம் பிரதிகளெல்லாம் அழிந்துவரும் இக்காலத்துங்கூடத் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வோர் ஊரிலும் குறைந்த பக்ஷம் மூன்று கம்பராமாயணப் பிரதிகளாவது கிடைக்கலாம் என்று தோன்றுகிறது. இப்பிரதிகளை வைத்திருப்போர் கொடுத்து உதவுவதுதானும் அருமை. இப்பிரதிகள் அனைத்தையும் ஒரு சேரத் தொகுப்பதும், அவற்றை ஆராய்ச்சி செய்வதும் சிறந்த வித்துவான்கள் பலர் ஒன்று கூடியிருந்து பல ஆண்டுகள் உழைத்துச் செய்ய வேண்டும் காரியங்களாம். இப் பெருமுயற்சிக்குரிய பொருட்செலவும் அற்ப சொற்பமானதல்ல. இவ்வாறாகப் பல காரணங்களால் திருந்திய கம்பராமாயணப் பதிப்பு இன்றுவரை நமக்குக் கிடையாமற் போயிற்று.

4

குறைபாடு நீங்கிய பதிப்பு

மேற்காட்டிய குறைபாடுகள் அனைத்தும் நீங்கிய ஒரு பதிப்பு என்னால் தயார் செய்துவிட முடியுமென்று நான் இறுமாப்புக் கொள்ளவில்லை. அதற்குத் தடையாயுள்ள இடையூறுகளையெல்லாம் நன்கு அறிவேன். குறைபாடுகளை நீக்க முழு மனத்துடன் முயலுவேன் என்று மட்டும் நான் உறுதி கூறுவேன். இதற்குச் சில முறைகளை நாம் பின்பற்றவேண்டும். ஆகவே, குறைபாடுகள் நீங்கிய ஆராய்ச்சிப் பதிப்பில் நாம் மேற்கொள்ள வேண்டும் குறைகளைக் குறித்து இனி நோக்குவோம்.

தொகுத்தல்

முதலாவது நாம் செய்யவேண்டுவது, அச்சுப் பதிப்புக்கள் அனைத்தையும், ஏட்டுப் பிரதிகளிற் கிடைக்கக் கூடியன

வற்றையும் ஒருங்குதொகுத்தலாம். ஏட்டுப் பிரதிகள் சேகரிப்பது பற்றி நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டுவது ஒன்று உண்டு. தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேசத்திற்கும் உரிய ஏடுகளைப் பெறுவதில் நாம் முயலவேண்டும். தமிழ்நாடு என்று சொல்வதில் திருவிதாங்கூர், இலங்கை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். இங்ஙனம் பிரதேச வாரியாகச் சேர்க்கும் ஏடுகளில் காலத்தால் மிகப் பழமையானவை நமக்குப் பெரிதும் பயன்தருவன ஆகலாம். ஆகவே, இங்குக் கூறியதை ஞாபகத்தில் வைத்து ஏடுகள் சேகரிக்க நாம் முயலுதல் வேண்டும்.

ஏடுகளை வகைப்படுத்தல்

அடுத்தபடியாக இந்த ஏடுகளைப் பொருத்தமான நியதிகளைக் கையாண்டு வகைப்படுத்தி வைத்தல் வேண்டும். ஓர் ஊரிலுள்ளாரை எடுத்துக்கொண்டால் இன்ன இன்ன குடும்பத்தை, இன்ன நிலையைச் சார்ந்தவர்கள் என்று பிரித்து உணருகிறோமல்லவா? அது போல, இவ்வாறு வகைப்படுத்துதலில் மிக்க கவனம் செலுத்துதல் வேண்டும். மேல்நாட்டுப் பதிப்பாளர்கள் மேற்கொண்டுள்ள முறைகள் நமக்கு மிகவும் பயன்படுவனவாகும். ஷேக்ஸ்பியரைக் குறித்தும், சாஸரைக் குறித்தும் இவர்கள் மூல பாடத்தை நிர்ணயிப்பதற்குக் கையெழுத்துப் பிரதிகள் முதலியவற்றை வகைப்படுத்திப் பயன்படுத்தியுள்ள முறையே இங்கு நான் கருதுவது. இரண்டொரு நூல்களை உதாரணமாகக் குறிப்பிடலாம், ஷேக்ஸ்பியர் பதிப்புப் பற்றி ஜான்ஸன் எழுதியுள்ள முகவுரை நன்கு கற்றுத் தெளிதற்குரியது. இதுபோலவே க்ரெக் (W. W. Greg) என்னும் ஆசிரியர் இயற்றியுள்ள The Calculus of Variants என்ற நூலும் நமது முயற்சிக்குப் பெரிதும் பயன்படுவதாகும். நமது நாட்டிலும் மகாபாரதப் பதிப்புப்பற்றி ஆசிரியர் வி. எஸ். ஸுக்தாங்கர் எழுதிய முன்னுரை நமக்கு ஒரு சிறந்த வழிகாட்டி. சமீபத்தில் பர்த்ருஹரியின் சதகத்ரயம் சுமார் 300 பிரதிகளுக்குமேல் ஒப்பிட்டு நோக்கிப் பதிப்பிக்கப்பட்டுள்ளமை நம்மிற் பலரும் அறிந்திருக்கலாம். இப்பதிப்பு முறையும் நமக்கு ஒருவாறு பயன்படக்கூடியதே.

பாடங்களைப் பரிசோதித்தல்

பின்பு, ஏட்டுப் பாடங்கள் பரிசோதிக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு பரிசோதிப்பதற்கு ஏடுகளை வாசிப்பதில் தக்க பயிற்சியுடையவர்களே உரியர் பயிற்சியற்றவர்கள் ஏடுகளை வாசிப்ப

தால் பெரும் பிழைகள் நேரிடுதல் கூடும். பயிற்சி என்ற அளவில் ஏடுகளை வாசித்தல் மட்டும் அன்று. அது போதுமானதல்ல. செய்யுளோசை, பொருள் முதலியவற்றைக் கவனித்தல்வேண்டும். செய்யுளிலக்கணம் முதலியவற்றிலும் தக்க பயிற்சியுடையாரே இதற்கு உதவக்கூடியவர்கள். இத்தகுதியுள்ள ஒரு சிலர் ஏடுகளை வைத்துக்கொண்டு பாடபேதங்களையெல்லாம் குறித்துத் தொகுத்தல் அவசியமாகும். இப்பாட பேதங்களும் இன்ன இன்ன பிரதிகளில் உள்ளன என்று பிரதிகளின் பெயர்களுடன் குறிக்கப் படுதல் வேண்டும்.

பாடங்களை வரையறுத்தல்

பாட பேதங்கள் அனைத்தையும், இடைச்செருகல்கள் அனைத்தையும், நாம் ஆராய்ச்சிப் பதிப்பில் கொடுத்து விடுவது அவசியமாகும். நாம் மேற்கொள்ளவேண்டும் பாடங்கள் எவை என்பதைத் திட்டமாக வரையறுத்துணர்தல் வேண்டும். பிற பாடங்களையும், ஆராய்ச்சிகளையும் ஆராய்ச்சிக் குறிப்பு என்ற தனிப் பகுதியில் சேர்த்துவிடுதல்வேண்டும். இப்போது அச்சில் வழங்கும் செய்யுட்கள் பிரதிகளின் உதவியாலும், பிறவகை ஆராய்ச்சியாலும் இடைச்செருகல் என உணரப்படுமாயின், அவற்றை உரிய இடங்களில் அடிக் குறிப்பாகக் கொடுத்துவிடுதல் நலம். அதிகப்படியாயுள்ள ஏனைச் செட்யுட்களும், பாட பேதங் களும், ஆராய்ச்சிக் குறிப்புக்களும் ஒவ்வொரு காண்டத்திற்கும் இறுதியிலே ஒருசேரத் தொகுத்துவிடலாம் என்று தோன்றுகிறது. எனவே, நூற்பகுதி ஒன்று, ஆராய்ச்சிக் குறிப்புப் பகுதி ஒன்று என இரண்டு பகுதிகள் இப்பதிப்பில் அமைக்கலாம் என்று கருது கிறேன்.

மூல பாடம்

ஒரு விஷயம் நாம் மனங்கொள்ளுதற்குரியது. கம்பன் மேற் கொண்ட பாடம் ஒன்றேயாகத்தான் இருக்கக்கூடும். அவனது இராமாயண மூலம் பிரதியும் ஒன்றேயாகத்தான் இருத்தல்கூடும். அதினின்றும் பிறந்தனவே தமிழ் நாட்டிலுள்ள ஏனைப் பிரதிகள் அனைத்தும். ஆகவே அவன் தந்துள்ள மூல பாடத்தை நிச்சயிப் பதுதான் நமது பெருமுயற்சி. இதை எடுத்துச் 'சிறந்த' பாடத் தைக் காணுவோம் என்று முயலுதல் அறிஞர்கள் சிலருக்கு உகந்ததாயிருப்பினும், கம்பனது உண்மையான பாடத்தைக் காணுவதாகாது. ஆனால், பல இடங்களில் சிறந்த பாடமும் மூல பாடமும் ஒன்றாகவே அமைதலும் கூடும்- இங்கே கூறிய

முயற்சியைக் கடைபோக முற்றுவித்தல் மிக அருமையாயிருப் பினும், அதுவே செய்யத்தக்கது. அதுவே கம்பனை நமக்கு உள்ள படி உணர்த்துவது. இப் பணியைச் செய்து முடித்தற்கு அருமை என்று கருதி நாம் கைவிடுதல் தகாது. வள்ளுவர்,

அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்

என்றனர். அவரது பொன்மொழியே நமக்கு வழிகாட்டியாக அமைதல் வேண்டும்.

சந்தி பிரித்தல்

மேற் கூறியபடி தெரிந்தெடுத்த உண்மையான மூல பாடத்தை நூற்பகுதியில் அமைத்தலோடு, இப்பகுதியிலுள்ள செய்யுட்களை ஓசை கெடாதபடி சந்தி பிரித்தலும், பொருள் விளக்கத்திற்கு வேண்டும் குறியீடுகளை அமைத்தலும் இப்பகுதியில் நாம் கையாளவேண்டும் முறைகளுள் சிலவாகும். மேலும், நூற்பகுதியின் அடிக் குறிப்பில் பட்சாந்தரமாகக் கொள்ளக்கூடிய பாட பேதங்களுள் முக்கியமானவற்றைக் கொடுத்துவிடுவதும் பயன்படுவதாகலாம். மிக இன்றியமை யாததான குறிப்புரையும் அடிக் குறிப்பாகச் சேர்த்தல் நலமாம்.

கதைச் சுருக்கம்

ஒவ்வொரு காண்டத்தின் முன்பும், கம்பன் அமைத் துள்ளவாறு நயம் தோன்ற எழுதிய கதைச் சுருக்கமும், அவ்வாறே ஒவ்வொரு படலத்தின் முன்பும் அப்படலத்திற்குரிய கதைச் சுருக்கமும், படலப் பொருளின் விவரணமும் சேர்ப்பது வாசகர்களுக்குப் பயன்படலாம் என்று தோன்றுகிறது. அன்றியும் ஒவ்வொரு படலத்திலும் உரிய இடங்களில் தலைப்புக்கள் கொடுத்துக் கதைத் தொடர்ச்சியை எளிதில் அறிந்துகொள்ளு மாறு செய்தலும் அவசியமாம். இங்குக் கூறிய அம்சங்களெல்லாம் பாட பேத ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களைக் கருதியல்ல. பொதுமக்களுக்கும் இப்பதிப்புச் சிறிதளவேனும் பயன்படுதல் வேண்டும் என்ற நோக்கமே இவற்றை அமைக்கப் போதிய காரணமாம்.

ஆராய்ச்சிக் குறிப்புகள்

ஆராய்ச்சிக் குறிப்புப் பகுதிக்குப் பின்பு, அனுபந்தப் பகுதி ஒன்றும் அமைத்தல் வேண்டும். அதில், அபிதான விளக்கம், செய்யுள் முதற்குறிப்பு முதலிய அகராதிகள் இடம்பெற வேண்டும். இறுதியாக, வான்மீகி கூறியுள்ளபடி இராமாயணக் கதைச் சுருக்கமும் கொடுத்தல் அவசியமாகும்.

விரிந்த முன்னுரை

இப்பதிப்பிற்குப் பூர்வாங்கமாக ஒரு விரிந்த முன்னுரை அமைக்கவேண்டுவது மிகமிக இன்றியமையாததாம். அதில், இப்பதிப்பிற்கு உதவிய ஏட்டுப் பிரதிகளின் விவரங்கள், ஏட்டுப் பிரதிகளின் இனப் பாகுபாடுகள், ஏட்டுப் பிரதிகளின் வகைகளில் ஒன்றற்கொன்றுள்ள தொடர்பு, முற்பதிப்புக்களின் விவரங்கள், மூலபாடத்தைக் கண்டுகொள்ளுதற்குக் கையாண்ட முறைகள், கதை வேறுபாடுகளின் விவரங்கள், வரலாறுகள், மிகைச் செய்யுட்கள், சில பிரதிகளில் காணாதொழிந்த செய்யுட்கள், பாடபேத ஆராய்ச்சியிலுள்ள இடையூறுகள், இடைச் செருகல் களின் விசாரணை: உத்தேச பாடங்கள் முதலிய பொருள்கள் பற்றி விரிவாக ஆராய்ந்தெழுதப்படுதல் வேண்டும்,

ஆராய்ச்சிப் பொருள்கள்

இவ்வகையான பதிப்போடு கம்பனைப்பற்றிய ஆராய்ச்சி முடிந்துவிட்டது என்று கருதுதல் தவறு, எத்தனையோ வகை களில் நாம் ஆராய்ச்சி செய்ய இடமுண்டு. ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறேன் :

கம்பன் பயன்படுத்திய மூலநூல்கள்
கம்பன் கண்ட தமிழுலகம்
கம்பன் கண்ட தமிழ்மொழி
கம்பன் கண்ட இலக்கியம்
கம்பன் கண்ட அறிவுலகு
கம்பனது கவித்துவம்
கம்பனது சிற்பத் திறம்
கம்பனது பாத்திர அமைப்பு
ஒப்புநோக்கு ஆராய்ச்சி
மேற்கோளோடு கூடிய நூற்பொருள் அகராதி

சொல்-தொடர் முதலியவற்றின் அகராதி
கம்பன் அகராதி
கம்பனைக் கற்க உதவும் துணை நூல்கள்
இதிகாசங்களின் இயல்புகள்

இவை பற்றித் தனித்தனி ஆராய்ச்சி நூல்கள் இயற்றப்படுதல் வேண்டும்.

முடிவுரை

இவைகளெல்லாம் விரைவில் செய்யவேண்டுவனவே யாயினும், இவற்றிற்கு அடிப்படையாயுள்ள ஆராய்ச்சிப் பதிப்பே இப்போது நாம் மேற்கொள்ள வேண்டும் செயலாகும். தமிழ் மக்களது பண்பாட்டின் உச்சநிலையை அறிவதற்கு, இவ் அரிய காப்பியம் பெரிதும் பயன்படுவது. தமிழ்க் கவித்துவத்தின் பேரெல்லையை உணர்வதற்குத் தக்க கருவியாயுள்ளது இப்பேரிலக்கியம். தமிழ் இலக்கியத்தின் சிகரமாய் அமைந்துள்ளது இப் பேரிதிகாசம். தமிழ் மொழியின் வளத்தையும் அதன் பெருமை முதலியவற்றையும் உணர்த்தி நாம் இன்றும் கையாளுதற்குரிய மூலநிதியைத் தருவது இவ் உலகு புகழ் பெருங் காப்பியம். இவ்வாறெல்லாம் பயன்பட வேண்டுமாயின், மேற்கூறியபடி அமைந்த ஆராய்ச்சிப் பதிப்பு இன்றியமையாதது. ஏட்டுப் பிரதிகள் விரைவில் அழியுந் தன்மையன. இப்போது கிடைக்கும் இராமாயணச் சுவடிகள் சிதிலமுற்று அழிந்து போவதற்கு முன், இம் முயற்சி செய்தற்குரியது. இதனை இனிது நிறைவேறும்படி செய்யவேண்டுவது நம் தமிழ் மக்களது கடமை.

இப்பதிப்பிற்கு வேண்டிய அரிய பணிகளையெல்லாம் காரைக்குடிக் கம்பன் கழகம் மேற்கொள்ளக் கருதியுள்ளது. இக் கழகத்திற்கும் என் போன்ற ஆராய்ச்சியாளர்களுக்கும் ஓர் இனிய தொடர்பினை ஏற்படுத்தி, அனைவரும் ஒருங்கே முயன்று செய்யவேண்டும். இவ் அரிய காரியத்தில் பெரிதும் ஈடுபட்டு வருபவர், தேச பக்த சிரோமணியும், கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் அறிஞருமாகிய எனது நண்பர் திரு. சா. கணேசன் அவர்கள். அவர்களும் கம்பன் கழகமும் முன்னிற்கும்பொழுது இவ் ஆராய்ச்சிப் பதிப்பு இனிது நிறைவேறும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டாகிறது.

இறைவன் திருவருள் முன்னிற்க !

10. இராம காதை

பால காண்டப் பதிப்பு

நாம் இங்குக் கூடியிருப்பது ஒரு மங்களகரமான செயலைப் பாராட்டுதற் பொருட்டு, சமுதாய உலகில் சீர்திருத்தம் செய்வதைப் பல ஆண்டுகளாக மேற்கொண்டு வெற்றி பெற்றுள்ள அன்பர் திருவாளர் சொ. முருகப்பா அவர்கள், இன்று இலக்கிய உலகில் ஒரு திருந்திய பணியை முயன்று செய்து வெற்றி கண்டுள்ளார்கள். இது ஓர் அரிய செயல் என்பதில் ஐயமில்லை. ஒரு நண்பரைப் பாராட்டும் முறையில் நான் இங்ஙனம் கூறவில்லை. இடையூறுகள் நிரம்பிய அசாதாரணமான ஒரு சூழ்நிலையில் குழப்பத்தினின்று ஓர் ஒழுங்கும் நியதியுமுள்ள செயலை அவர்கள் செய்துள்ளார்கள். ஆதலால்தான், இது நமது பாராட்டுக்கு உரியதாயிற்று. இதனினும் மேலாக, நமது நாட்டில் மிக அரிய பொருளாய்ப் போய்விட்டதொன்று இவர்களால் இன்று மீண்டும் கிடைத்துள்ளது. பக்ஷபாதமின்றி நடுநிலையில் பொருள்களை உள்ளவாறு உணர்ந்து நிதானமாய் மதிப்பிட்டு முடிவு காணுதல் நமது நாட்டில் மிக மிக அரிதாக உள்ளது. சாதாரணப் பகுத்தறிவுங்கூட நமது இலக்கிய உலகில் காணுதற்கு இயலாத மிக அரியதோர் பஞ்சப் பொருளாய் உள்ளது. கல்வி-உலகில்தானும் இப்பகுத்தறிவு காணப்படவில்லை என்று கூறினால், உங்களில் சிலருக்கு அது வியப்பை விளைவிக்கும். ஆனால் நான் சொல்வது உண்மை.

வடமொழி

பத்திரிகைகளை வாசிப்பவர்கள் வடமொழியைத் தேசப் பொதுமொழி யாக்கவேண்டுமென்றும்: அதனை மத்திய அரசாங்கத்தார் இந்தியன் ஒவ்வொருவனுக்கும் கட்டாயப் பாடமாக

---

* *17—1—'54*-இல் காரைக்குடிக் கம்பன் கழகத்தின் சார்பில் நடைபெற்ற திரு. சொ. முருகப்பா அவர்களின் பாலகாண்டப் பதிப்பு வெளியீட்டு விழாவின்போது நிகழ்த்திய தலைமை உரை.

ஏற்படுத்த வேண்டுமென்றும் பலரும் பல இடங்களிலும் வற்புறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றி வருவதை அறிவார்கள். இம்முயற்சி நமது நாட்டின் நலத்திற்கும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் இடையூறு பயக்கும் என்பதைக்கூட நினைப் பவர்கள் இல்லை. எனக்கு வடமொழியில் நிரம்பிய பற்று உண்டு. அம்மொழியிலுள்ள கலைச் செல்வங்களைக் கற்று அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை மிக உண்டு. ஆனால் அது ஆராய்ச்சித் துறைக்குரிய மொழியே அன்றி, நாட்டின் முன்னேற்றத்துறை கட்குரிய மொழியன்று. அதன் கலைச்செல்வத்தைத் துய்க்கலாம். ஆனால் அதிலுள்ள ஏனைய அறிவுத் துறைகள் அனைத்தும் பழமை அறிய முயலும் ஆராய்ச்சித் துறையொன்றற்கே உரியவை. மக்களது அறிவு வளர்ச்சியைக் கண்ணாகக்கொண் டொழுகும் எவனும் இம்முயற்சியை ஆதரிக்க முடியுமா? மேலை நாடுகளில் லத்தீன், கிரீக் முதலிய மொழிகளுக்கு எந்தப் பதவி உண்டோ, அந்தப் பதவியே வடமொழிக்கும் உரியது. அம்மொழியிலிருந்து நிரம்பக் கடன் வாங்குவோம்.

அது பொதுவுரிமைச் சொத்தாதலினால் தமிழ் மக்களும் வடமொழியை வளர்க்க உழைத்திருக்கிறார்கள். சமணர் பௌத்தர்களும் உழைத்திருக்கிறார்கள். எனவே இது பொது மொழி என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இந்தப் பொதுச் செல்வத்திலிருந்து வேண்டும் அளவு பொருள் எடுத்துக்கொள் வதற்கு நமக்குப் பூரண உரிமை உண்டு. ஆனால் இந்த முடிபு வேறு: அனைவரும் வலுக்கட்டாயமாக வடமொழியைப் பயிலத் தான் வேண்டும் என்று அரசாங்க ஆணையால் வற்புறுத்துதல் வேறு. அது வழக்கொழிந்துவிட்டது. அதனை வழக்குமொழி யாக்குதல் மக்களால் இயலக்கூடிய காரியமன்று. இம்முயற்சிக்கு நமது அரசியலாரும்கூட ஒருவேளை ஆதரவளிக்கக்கூடுமோ என்று ஐயம் தோன்றுகிறது.

முடியரசர் போனபின்பு — எல்லாம் கூடிக்
குடியரசென் றோர்பெயரைக் கூவி — நெடிய
பழுதே புரியும் இந்தப் பாழு ரதனிற்
பொழுதே விடியாமற் போ

என வேதநாயகம்பிள்ளை அருமையாகப் பாடினார். இதுபோல நாமும் புலம்பவேண்டியதுதானா? இவ்வாறு நிகழுங்காலம் ஒருநாளும் நேர்ந்துவிடக் கூடாதென்று இறைவனைப் பிரார்த் திப்போமாக.

இவ்வாறு, அறிவு வளர்வதே நோக்கமாய் அமைந்த கல்வி-உலகிற்கூட நடுநிலையும் நிதான புத்தியும் பகுத்தறிவும் காணப் பெறாமலிருக்க, இலக்கிய உலகில் அவை காணப்பெறாமை ஒரு வியப்பாகுமா ?

இலக்கிய உலகு

இவ் இலக்கிய உலகில், அதிலும் கம்ப ராமாயண உலகில், பகுத்தறிவு நின்று நிலவுவதற்குப் பெரும்பாலும் இடமில்லாமல் போயவிட்டது. இராமாயணம் என்று சொன்ன உடனேயே இராமபிரானது குணசாகரத்தில் அமிழ்ந்தோ, அல்லது கம்பனது கவிதைக் கடலில் மூழ்கியோ, நம்மை முழுக்க இழந்துவிடு கிறோம். கம்பன்கூட,

> பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
> பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ ?

என்று அவை-அடக்கத்தில் கூறுகிறான். இராமாயணத்தைக் கற்பவரும் பிறருக்கு எடுத்துக் கூறுபவரும் தம்மை மறந்து அதிலே லயித்துவிடுகிறார்கள். இந்த நிலைமையில் இவர்கள் செய்யும் செயலுக்கு வரம்பு குறித்தல் இயலுமா ?

ஓர் உரைகாரர் முழுமகன் என்ற சொல்லுக்கு அறிவு புகுதற்குச் சிறிதும் துளை இல்லாதபடி முழுதாக (மொட்டை மொழுக்காக) இருப்பவன் என்று பொருள் கூறினார். இதுபோலப் பகுத்தறிவு புகுவதற்கு இடமில்லாமல் நெடுங்காலமாகக் கம்பனது பேருலகம் இருந்துவந்தது. இந்நிலைமையினின்று அந்த உலகை மீட்டுவதற்கும் அதில் பகுத்தறிவை ஊட்டுவதற்கும் முயன்ற முயற்சியில் ஓர் அம்சம் இன்று நிறைவேறியதென்றால் இது ஒரு மங்கள நாள் அல்லவா ? இம்முயற்சியை இன்று பாராட்டுதலும் அவசியமல்லவா ?

விஞ்ஞான நோக்கு

பகுத்தறிவே இங்ஙனமாக, விஞ்ஞான நோக்கு கம்பன்-உலகில் காணாதிருப்பது வியப்பாகுமா ? இந்நோக்கினை இராமாயணப் பதிப்பிடுதலில் மேற்கொண்டவர் திரு. சொ. முருகப்பா அவர்கள். இதன் காரணமாகவும் இப்பதிப்பு விழாவை இன்று கொண்டாடுகிறோம். பதிப்பாளர்களில் பலரும் இச்சீரிய நோக்கினை அறிந்துள்ளார்கள் எனவும் கூறமுடியாது. திருந்திய

சுத்தப் பதிப்பாக இராமாயணம் வெளிவர வேண்டும் என்ற கருத்துக்கூட நம்மிற் பெரும்பாலார்க்கு இல்லை. பழைய பதிப்புக்களை அப்படியே வைத்துக்கொள்ளவோ அல்லது தமக்குத் தோன்றியவாறு திருத்தங்கள் செய்யவோ இவர்கள் தயங்குவதில்லை. கம்பனைக் கற்ற நிலையில் பரவசப்பட்டுத் தம்மையும் கம்பனாகவே பாவித்துச் சில செய்யுட்களை இயற்றி, கம்பன் பெருங் காவியத்தில் இடையே புகுத்தி அதனால் ஆத்ம திருப்தி கொண்டு மகிழ்ந்தார் பலர். சிலர் இத்தனை துணிவின்றி கம்பன் செய்யுட்களில் இடையிடையே அங்கங்கே பாடல்களைத் திருத்தி அவ்வளவில் அமைந்து நின்று தமிழ்க் கைங்கரியம் புரிந்துள்ளனர். இவ்வகைத் தமிழ்த் தொண்டுகள் பல. கம்பனுக்கும் கம்பனுலகிற்கும் இதனால் எத்தனை தீமை விளையக்கூடும் என்பதை இவர்கள் உணரவில்லை. இந்நிலையில் கம்பன் புகழ் மங்காதபடி நிலவமுடியுமா ?

தனவைசியர் நாடு

ஆனால் கம்பன் புகழைப் பேணிப் போற்றவும், கன்னித் தமிழை வளர்க்கவும் இத் தனவைசியர் நாட்டில் பெருமுயற்சி நடைபெற்று வருவது அனைவரும் அறிந்த செய்தியே. எனவே, மேற்குறித்த விழா இங்கே நிகழ்வதும் பொருத்தமானதென்றே நான் கருதுகிறேன். திரு. முருகப்பச் செட்டியார் இந்தப் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள் என்ற பொருத்தத்தை நான் கருதவில்லை. பொதுப்பட இந்நாட்டிலுள்ளவர்கள் கம்பனைக் கற்பதிலும் அவன் புகழைப் பரப்புவதிலும் வெகுகாலமாக ஈடுபட்டு வருபவர்கள். அவன் புகழ் பரவுவதற்கு அவர்கள் பெருமுயற்சி செய்து வருகிறார்கள்.

கம்பன் விழா

பல இடங்களில் கம்பன் விழாக் கொண்டாடப்பட்டு வருகிற போதிலும் இந்த நாட்டில்தான் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து மிக விமரிசையாகப் பெரும்பொருட் செலவில் இவ்விழா நடைபெற்றுவருகிறது. இதற்காகும் பொருட்செலவு இங்குள்ள மக்களின் செல்வமிகுதியைக் குறிக்கிறது என்று சிலர் கருதலாம். அவர்களுக்குக் கம்பன் மீதுள்ள பேரார்வத்தை வெளிப்படுத்துகிறது என்றலே தக்கது.

இந்த ஆர்வத்தை மேன்மேலும் தூண்டிவரும் உள்ளக் கிடக்கையும் நாம் உணர்தற்குரியது. கம்பன் இந்த நாட்டில்

மரணம் எய்தினான் என்றும் அவனது சமாதி இங்குள்ள நாட்டரசன் கோட்டையில் உள்ளதென்றும் இந்நாட்டு மக்கள் கருதுகின்றனர்.

திருவழுந்தூர்

நமது கவிஞன் பிறந்த ஊர் திருவழுந்தூர் என்பதற்குப் பழைய சான்றுகள் உள்ளன. அவன் தனது இராமாயணத்தைப் பாடி முடித்தது சடையப்ப வள்ளல் ஊராகிய திருவெண்ணெய் நல்லூர் என்று நாம் ஒப்புக்கொள்ளலாம். அவன் மரணம் அடைந்த இடம் பற்றிய சான்றுகள் நமக்குத் தெரியவில்லை. திருவழுந்தூரிலுள்ள கம்பன்மேடு என்ற இடத்தைச் சுட்டி அங்கேதான் அவன் வாழ்ந்துவந்த வீடு இருந்ததென்றும், அவனது சமாதியும் அங்கேயே உள்ளதென்றும் ஒரு சிலர் கூறுகின்றனர். இது தற்காலத்தவர் ஊகமேயன்றி வேறல்ல. ஆதாரம் யாதுமில்லை,

ஓர் ஆதாரம்

நாட்டரசன்கோட்டைச் சமாதியின் சரித்திரம்தான் யாது? இது பற்றியும் பெரும்பாலோர்க்கு யாதொன்றும் தெரியமாட்டாது. திருநெல்வேலியிலிருந்து இங்கு வந்து பல ஆண்டுகளாக உங்களோடு வாழ்ந்துவந்த திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியார் முதலியோர்கள் சொல்லித்தானே இச்செய்தி நெல்லைப் பிரதேசத்திலும் பிற இடங்களிலுமுள்ள மக்களுக்குத் தெரியவந்தது? இந்நிலையில் சரித்திர நியதிப்படிக்குச் சான்றுகள் வேண்டும் எனக் கடின சித்தமுள்ள சரித்திர ஆசிரியர்கள் வற்புறுத்தக் கூடுமல்லவா? அவர்களுக்கு நான் சில சொல்ல விரும்புகிறேன். நாட்டரசன் கோட்டைக் கம்பன் சமாதி தற்காலத்திற் கற்பனை செய்து கொண்ட ஒரு கதையன்று. கர்ண பரம்பரைச் செய்தியாக இது வழங்குகிறது. ஆனால், சரித்திர - ஆசிரியர்களை எளிதில் திருப்திசெய்ய முடியுமா? கர்ண பரம்பரை உளதென்பதற்கு ஆதாரம் யாதெனக் கேட்பார்கள். இச் செய்தி 'கண்ணுடையம்மன் பள்ளு'ப் பிரபந்தத்தில் காணப்படுகிறது. இப் பிரபந்தமும் சுமார் கி. பி. 1775-இல் தோன்றியது. எனவே, இச் செய்திக்கு ஓர் ஆதாரமும் உளது; இதனை எளிதில் ஒதுக்கி விட முடியாது. மிக்க வன்மையுள்ள சான்றுகள் கிடைக்கும் வரை, இச் செய்தியையே நாம் ஒப்புக் கொள்ளுதல்வேண்டும்.

ஏதேனும் சரித்திர உண்மை கண்டு பிடிக்கப்படுமேயானால் அதனால் விளையும் நன்மை ஏதேனும் இருத்தல்தான் சிறப்பு: திருவழுந்தூர் கம்பன் பிறந்த ஊர் என்பது பலரும் அறிந்த உண்மையே. இதிலிருந்து ஏதேனும் நன்மை உண்டாயிருக்கிறதா? இல்லை. கம்பனை இவ்வூரில் போற்றி வருவது கூட, பிற இடங்களில் அவன் போற்றப்படுவதைப் பார்த்துத்தான் எனத் தோன்றுகிறது. அதிற் சிறிது பொறாமைகூட இருக்கலாம். கம்பனது புகழ் பரவுவதற்கு ஏதேனும் முயற்சிகள் செய்திருக்கிறார்களா? இல்லை. கம்பன் வாழ்ந்து வந்ததாகக் கூறும் வீட்டினையேனும் துலக்கித் தமிழ் மக்கள் அனைவருக்கும் உரிய புனித ஸ்தலமாகவும், காட்சி நிலையமாகவும் வைத்திருக்கிறார்களா? அதுவும் இல்லை. அவ்வூரில் உள்ளார் கம்ப ராமாயணப் பிரதிகளையேனும் தொகுத்து வைத்துப் பலரும் பார்வையிடும்படி செய்திருக்கிறார்களா? அதுகூட இல்லை. எனக்குத் தெரிந்த வரை ஒரு பிரதியேனும் அவ்வூரிலிருந்து கிடைத்ததாகச் சொல்ல முடியாது. கம்பன் பிறப்பைப் பற்றியுள்ள இம்மலட்டு உண்மையினால் என்ன பயன்? திருவழுந்தூரிற் கம்பன் பிறந்துள்ளது பற்றி இவ்வூரினர்க்கு இருந்த சிறப்புரிமையை இவர்கள் தங்கள் உதாசீன புத்தியால் இழந்துவிட்டார்களென்று சொல்லத் தோன்றுகிறது. இதற்கு மாறாக, நாட்டரசன் கோட்டையில் கம்பன் சமாதி அடைந்தான் என்ற கொள்கை மிக்க பயன் தருவதாக உள்ளது. அதனால் விளைந்துள்ள நன்மைகளும் பல. ஒப்புக்கொள்ளற்குரிய தக்க சான்றுகள் கிடைக்காமற் போனாலும் கூட, இங்குள்ளவர்களது ஆர்வத்தையும் ஊக்கத்தையும் உழைப்பையும் கண்டு இவற்றின் காரணமாகவேனும் இக் கர்ண பரம்பரைச் செய்தியை உண்மை என்று நாம் கொள்வதில் யாதோர் இழுக்கும் இல்லை.

கம்பன் திருநாள்

என்னென்ன நன்மைகள் இதனால் விளைந்துள்ளன என நோக்குவோம். ஆண்டு தோறும் கம்பன் திருநாள் மிகச் சிறப்பாக இங்கே கொண்டாடப் பெற்று வருதலை முன்பு குறிப்பிட்டேன். அத் திருநாட்களில் கம்பனது பெருங் காப்பியத்தை நன்கு கற்றுள்ள அறிஞர்கள் பல இடங்களிலிருந்து வந்து இங்கே கூடுகின்றனர். கம்பனைப் பற்றியுள்ள பல விஷயங்களையும் குறித்துச் சொற்பொழிவுகள் நிகழ்கின்றன. பல ஆராய்ச்சிகளும் விவாதங்களும் நடைபெறுகின்றன. கம்பனது புகழ் பரவுவதற்கு வேண்டும் முயற்சிகள் பலவும் செய்யப்படுகின்றன. இவற்றோடு

நிற்கவில்லை. தமிழ்க் கவிதையின் உண்மை இயல்புகள் பற்றிப் பல விமர்சனங்களும் இங்கே வெளிப்படுத்தப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஆண்டுதோறும் பங்குனி அத்தத்தில் இங்குக் காணலாம்.

குறிப்பிட்ட கால வரையறையின்றி, எப்பொழுதும் அமைதியாக நிகழும் நிகழ்ச்சி ஒன்றும் இங்கே கூறுதற்கு உரியது. வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் கம்ப ராமாயணப் பிரதிகளைத் தொகுத்து வைக்க இங்குள்ள அன்பர்கள் முயன்று வந்திருக்கின்றனர். இங்கிருந்து ஏட்டுப் பிரதிகள் ஒன்றிரண்டு நானும் பெற்றுள்ளேன். பிரதிகள் நோக்கி, பாடங்களைத் துணிய வேண்டுமென்ற முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இன்று வெளியிடும் பாலகாண்டப் பதிப்புக்கு நண்பர் சொ. முருகப்பா அவர்கள் சில பிரதிகளை ஒப்பிட்டு நோக்கியுள்ளமை இதற்கு உரிய ஒரு சான்று.

இவையெல்லாம் தற்கால நிகழ்ச்சிகள். வெகு காலத்திற்கு முன்னர் கம்ப ராமாயணம் பற்றிக் 'கம்ப நாடர்' என்ற ஒரு மாத வெளியீடு இங்கே தோன்றித் தமிழ்நாடு முழுவதும் உலவி வந்தது பலருக்கும் ஞாபகமிருக்கலாம். இந்நாட்டிலுள்ள மக்களின் ஆதரவும், ஆர்வமும் ஊக்கி வந்ததனாலேயே இந்தப் பத்திரிகாசிரியராகிய மோ. கோவிந்தராஜ அய்யங்கார் இம்முயற்சியில் ஈடுபட்டனர்.

கம்பனுக்கு நல்ல மதிப்பு

இராமாயணப் பதிப்பு ஒன்று சிறந்த முறையில் பாடபேதங்களுடன் வெளியிடப்பட வேண்டும் என்ற அவாவும் அப்போதைக்கப்போது இந் நாட்டில் பிறந்துள்ளது. இதற்காகப் பல முறையும் பல அன்பர்களும் முயற்சி செய்ததும் உண்டு. மிகப் பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டிலுள்ள பெரியார் ஒருவர் செய்த முயற்சியை நான் குறிப்பிட வேண்டியது அவசியம், ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய மூத்த சகோதரரான திரு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் பல பிரதேசங்களிலிருந்து ஏட்டுச் சுவடிகளை வரவழைத்து ஸ்ரீ பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியார் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இராமாயணத்தை முற்றும் வெளியிடவேண்டுமென்று கருதிப் பெருமுயற்சி செய்தார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் டாக்டர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையின் கீழ் இங்கே கூடிய 'கம்பர் திருநாள்' கூட்டத்தில் இப்பதிப்பு வெளியீட்டு முயற்சியைப் பற்றிச் சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறியுள்ளமையும் நீங்கள் அறிவீர்கள். நன்மைக்கு வித்தாகிய இம்முயற்சிகள் அனைத்தும் தோன்றிய நாடு இந்த நாடு.

செட்டிநாட்டின் புகழ்

இவ்வாறாக, கம்பனுக்கும் இந் நாட்டிற்கும் அழியாத ஒரு தொடர்பு இருந்துவருகிறது. முருகப்பா அவர்களின் மூலமாய்ப் பிரத்தியட்சத்திலேயே இங்கு நிகழ்ந்து வந்த முயற்சிகள் இன்று ஓரளவு பயனளித்து இத்தொடர்பினை வலியுறுத்திவிட்டன: இதுவும் பிறர் தூண்டுதலின்றி இந் நாட்டவர்கள் தமது அறிவு கொண்டே துணிந்து அமைத்துக்கொண்டதாகும். பிதுரார்ஜித மாய் வருகிற உரிமையைக் காட்டிலும் இந்த சுயார்ஜித உரிமை மிகவும் போற்றத்தக்கதல்லவா? இக்காரணத்தால் செட்டி நாட்டின் புகழ் மற்றப் பாரததேசப் பகுதியின் புகழையெல்லாம் ஒளி மழுங்கச் செய்துவிட்டது. பரதனது உண்மை அன்பைத் தெரிந்து அவனிடம் பெரிதும் ஈடுபட்ட குகன் கூறியது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

> என்புகழ் கின்ற தேழை எயினனேன்! இரவி யென்பான்
> தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்
> மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்க ளெல்லாம்
> உன்புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர்குணத்து உரவுத்
> தோளாய்:

இங்ஙனம் கூறியது போலவே, பல பிரதேசங்களிலிருந்தும் கம்பனை ஆராய்ந்து கற்று அனுபவித்து வருகிற தொண்டர் குழாத்தினர் பெற்று வந்த பெருமை முழுவதையும் இந்நாட்டினரே தமதாகச் செய்துகொண்டனர். இந்த நகரிலேயுள்ள கம்பன் கழகம் இங்குக் கூறிய உண்மைக்கு ஓர் அறிகுறியாக உள்ளது. பேணிப் போற்றும் இடத்தில் அல்லவா பிள்ளையும் தெய்வமும்? கவிஞனும் அப்படித்தானே? கம்பனது புகழுடம்பு நிலைபெறுகின்ற இவ்விடத்திலேயே அவனது பூதவுடம்பு மறைந்ததெனல் ஒரு வகையில் பொருத்தந் தானே?

பாலகாண்டப் பதிப்பு

''அந்தம் ஆதி என்மனார் புலவர்'' என்று மெய்கண்ட சாஸ்தரம் கூறுகிறது. இந்நாட்டில் சமாதி அடைந்த கம்பனே மீண்டும் இன்று தனது நூல் வடிவமாக இந் நாட்டிலே தோன்றியிருக்கிறான் என்று சொல்லலாம் அல்லவா? கம்பன் தோன்றினால் என்ன? அவன் நூலின் முதற் காண்டமாகிய பாலகாண்டம் தோன்றினாலென்ன? கம்பன் தனது நூலில் தன்னை முழுதும் அமைத்துவைத்திருக்கிறானே. ஆகவே, திரு சொ. முருகப்பா அவர்களின் இராமாயணப் பாலகாண்ட வெளியீட்டால் கம்பன் மீண்டும் இவ்வூரிலேயே தோற்றமெடுத்துள்ளான் என்பது விசதமாகின்றது. கம்பன் இன்று இங்கே பிறந்துள்ளான் என்பது நாம் அனைவரும் கண்கூடாகக் காணும் உண்மை. சைவ சித்தாந்தக் கொள்கைப்படி பார்த்தால், கம்பன் இங்கு இவ்வாறு தோற்றம் எடுப்பதற்கு அவன் முன் அந்தமான இடமும் இதுவேயாகவேண்டும் என்று ஏற்படுகிறது. சைவ சித்தாந்த சாஸ்திரமே இவ்வாறு சித்தாந்தித்துக் கூறும்போது. கம்பன் இந் நாட்டில் சமாதியடைந்த இடத்தைக் குறித்து யாரே இனிமேல் மறுக்கத் துணிவார்கள்!

ஒப்பற்ற பெரும் புலவனாகிய கம்பன் மீண்டும் திரு அவதாரம் செய்யும் இப் புனித நாளை ஒரு மங்கல நாளாகக் கொண்டு போற்றி விழாக் கொண்டாடுவது எவ்வகையாலும் பொருத்தமுடையதேயாம்.

கம்பன் வாழ்ந்திருந்த காலத்தில் இதைப் போன்ற ஒரு மங்கல நிகழ்ச்சி நடைபெற்றது. அதுதான் அவன் தன் வாழ்வின் தனிப் பெருநோக்காகக்கொண்டு இயற்றிய மகா காவியத்தைச் சடையப்பரது வள்ளன்மை நிரம்பிய ஆதரவிற் பொதுமக்களிடம் சமர்ப்பித்த நிகழ்ச்சியாம். இந்த நாள் யாது என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்துவேற்றுமைகள் உள்ளன. சிலர் ''எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின் மேல்'' என்னும் பாடலை ஆதாரமாகக் கொண்டு கி. பி. 885-இல் இவ்வுத்தம காவியம் அரங்கேற்றப்பட்டது என்பர். வேறு சில அறிஞர்கள் இக்காவியம் அரங்கேறிய காலம் 12-ஆம் நூற்றாண்டின் இறுதி என்பர். இவ்விரு கொள்கைகளில் வன்மையுடையது எது என நாம் துணிதல் வேண்டும்.

கால நிர்ணயம்

இதனைக் கேவலம் காலம் பற்றிய ஆராய்ச்சி என்று எண்ணி விடுதல் தகாது. காலநிர்ணயம் கம்பனை முற்ற அறிந்து அனுபவிப்பதற்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகும் ஒரு நூலின் தன்மை அது தோன்றிய காலம், சூழ்நிலை முதலியவற்றால் நிச்சயிக்கப்படும் என்பது இலக்கிய ஆராய்ச்சியில் ஓர் உண்மை, இவற்றை நன்கு அறிந்தாலன்றி, நூலின் பொருள் நுட்பங்களையெல்லாம் நாம் முற்ற அறிந்துவிட்டோம் என்று கூற முடியாது. எனவே இலக்கிய வளர்ச்சிக்கும் இது அவசியம் என்பது எளிதில் விளங்கும். இதனால் இக்கால நிர்ணயம் மிக முக்கியமானதென்று நாம் உணரவேண்டும். 'நாராயணனே தனி நாயகனே. (உருக்காட்டு. 6) என்ற தொடரில் 'தனி நாயகன்' என்பது ஓர் அரசனது சிறப்புப் பெயர்களிலொன்று என அறிந்த அளவில் அவன் காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் எத்தனை குதூகலத்தோடு இத்தொடரைக் கேட்டு மகிழ்ந்திருப்பர்! சிலர் நினைப்பது போல, இலக்கிய நுட்பங்களை அறியும் ஆற்றல் இல்லாதவர்கள் செய்துவரும் வீண் முயற்சியல்ல இந்த ஆராய்ச்சி. நமது முன்னோர்களும்,

காலம் களனே காரணம் என்று இம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே

என்று ஆணை தந்துள்ளார்கள். நூலாசிரியர் பலரும் இவ்வாணைக்கு அடங்கி ஒழுகாமற்போனாலும். இது ஒரு முக்கியமான கருத்து என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

''சகாப்தம் எண்ணூற்றேழின் மேல் ..அரங்கேற்றினானே'' என்ற செய்யுளைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். இதனை ஒப்புக்கொள்வதாயின், ஆழ்வார்கள் பலருடைய காலத்திற்கும் கம்பன் காலம் முற்பட்டதென்று ஏற்படும்: கம்பன் சடகோபர் அந்தாதி பாடிய வரலாறு உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். சடகோபரது (நம்மாழ்வார்) காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டாகுமெனத் தக்க ஆதாரங்களால் நிறுவப்பட்டுள்ளது ஆழ்வார்களில் கடைசியாகத் தோன்றியவர் இவரே. நாலாயிரத்தையும் முதல் ஆச்சாரியராகிய நாத முனிகளுக்கு இவர் உபதேசித்தவர் என்று ஐதிகம் கூறுகிறது. 9-ஆம் நூற்றாண்டினராகிய திருமங்கையாழ்வாரது அருளிச் செயலினின்றும் ஒரு பாசுரத்தைக் கம்பன் அப்படியே அமைத்திருக்கிறான்.

ஏழை யேதலன் கீழ்மகனென்னா
    திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கியுன் தோழி
    உம்பி யெம்பியென் றொழிந்திலை, உகந்து
தோழ னீயெனக் கிங்கொழி யென்ற
    சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட
ஆழி வண்ணநின் அடியிணை யடைந்தேன்
    அணிபொ ழில்திரு வரங்கத் தம்மானே (1418)

என்ற பாடலின் கருத்தும் சொல்லும்:

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்

(சுந்தர, காட்சி, 29)

என்னும் பாடலில் அமைந்திருத்தலைக் காணலாம்.

ஆழ்வார்களுக்குக் கம்பன் பிற்பட்டவன்

இச்செய்தி முதல் நூலாகிய வான்மீகத்தில் இல்லை. இதனால் கம்பன் திருமங்கையாழ்வார் பாசுரத்திலிருந்தே இக்கருத்தை எடுத்திருக்கிறான் என்பது விளக்கமாகிறது. இங்ஙனமே கூனியின் முதுகில் உண்டைதெறித்த கதை வான்மீகத்தில் இல்லை. இச்செய்தி,

கூனிகூன், உண்டை கொண்டரங்க வோட்டி உளமகிழ்ந்த
நாதன் (800)

எனத் திருமழிசையாழ்வார் பாசுரத்திலும்,

கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்

என நம்மாழ்வார் பாசுரத்திலும் வந்துள்ளது. கம்பன் இதனை,

பண்டை நாள் இராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத் தன் உள்ளத்து உள்ளுவாள்

(மந்தரை சூழ்ச்சி, 41)

எனத் தன் நூலில் குறிப்பிடுகிறான். எனவே ஆழ்வார்களுக்குக் கம்பன் பிற்பட்டவன் என்பது மலையிலக்கு. இங்ஙனமே சீவக சிந்தாமணி, சூளாமணி முதலிய காவியங்களுக்கும் கம்பனது காவியம் கடப்பட்டுள்ளது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இக்காவியங்களும் 10-ஆம் நூற்றாண்டளவில் தோன்றியவையே. பண்டை நூல்களிலிருந்து கம்பன் ஒவ்வோர் அகப்பை அள்ளித் தனது நூலில் அமைத்துக்கொண்டான் என்ற பரம்பரைச் செய்தியும் இவற்றால் வலியுறுகிறது. இந்த அகச் சான்றுகளுக்கு முற்றும் மாறாக, 'எண்ணிய சகாப்தம்' என்ற செய்யுள் கம்பனை ஆழ்வார்களுக்கு முற்பட்டவனாக்குகிறது. இது முற்றும் அபத்த மாகும். வைணவ சமய வரலாறும் இதற்கு மாறாகவுள்ளது.

சகாப்தம்

மேலும் சகாப்தம்'தமிழ்நாட்டில் 8-ஆம் நூற்றாண்டளவிலே தான் வழங்கத் தொடங்கியது எனச் சாசன வாயிலாக அறிகிறோம். இவ்வாறு வழங்கத் தொடங்கிச் சில நூற்றாண்டுகள் சென்ற பின்னரே அது பொதுமக்களால் வழங்கப் பட்டு, காவியங்களில் குறிக்கப்பட்டிருத்தல் கூடும். இங்ஙனம் கொள்வது பெரும்பாலும் உண்மையாதல் சாலும். எனவே சகாப்த வழக்கு கி. பி. 885-இல் தமிழ் நூல்களில் காணப்படுதல் பெரிதும் அசம்பாவிதமாம். வேறொரு முக்கியமான செய்தியும் இங்கே சிந்திக்தற்குரியது. 'அரங்கேற்றுதல்' என்பது அறிஞர்கள் கூடிய அவையில் நூல்கள் படிக்கக்கேட்டு அங்கிகரிக்கப்படுவதைக் குறிப்பதற்கு, முன்னாளில் வழங்கப்படவில்லை. தொல்காப்பி யத்தில்,

நிலந்திரு திருவிற் பாண்டிய னவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அறங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி

என்றே வந்துள்ளது. சிலப்பதிகார, மணிமேகலைப் பாயிரங் களில் கூட,

உரைசா லடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்

(சிலப், பதி. 88-89)

இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்.........
அறிய வைத்தனன் (மணிமேகலை, 65-68)

என்றேதான் வந்துள்ளன.

சிந்தாமணியில் 'தேனூற நின்று தெருண்டாரவை செப்ப லுற்றேன்' என வருகிறது. சூளாமணியில். 'தேமாண் அலங்கல் திருமால் நெடுஞ்சேந்தன் என்னும் கோமான் அவையுள் தெருண்டார் கொளப் பட்டதன்றே' என்று உள்ளது. பெரிய புராணம் முதலியவற்றிலும் இங்ஙனமே.

அரங்கேற்றம் என்ற வழக்கு

அரங்கேற்றம் என்ற தொடர் வழக்கு நாட்டியக்கலை ஒன்றினுக்கே உரித்தாக முதலில் வழங்கி வந்துள்ளது. சிலப்பதி காரத்தில்' அரங்கேற்று காதை' என வருமிடத்தை நோக்குக. 'ஐய நுண்ணிடையார் ஆடும் நாடக அரங்கு கண்டார்' என்றனன் கம்பனும். கற்றறிந்தார் அவையில் நூலைக் கேட்பித்தற்கு இத்தொடரை மிகப் பிற்பட்ட காலத்தே தான் வழங்கலாயினர். இப்பிற்பட்ட வழக்கு இப்பாடலில் வந்துள்ள தால் இதன் காலமும் மிகப் பிற்பட்டதே எனத் துணியலாம். எவ்வளவு பிற்பட்டதென நாம் துணியவேண்டும் அவசியமில்லை. இக்காரணங்களால் இச்செய்யுள் கம்பன் காலத்தது அன்று. இப்போது கிடைக்கும் இராமாயணப் பிரதிகளுள் மிகப் பழைய தாகிய தென்திருப்பேரைப் பிரதியில் இச்செய்யுள் காணப்பட வில்லை. இதுவும் மிக முக்கியமான செய்தி. இப்பிரதி கொல்லம் 753-இல், அதாவது கி. பி. 1578-இல், எழுதப்பெற்றதாகும். எனவே, பிற்பட்ட காலத்தொருவரால் இச் செய்யுள் இயற்றப் பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறே மக்கள் அபிமானித்துப் பாராட்டும் ஒரு நூலை மிகப் பழமையுடையதென்று காட்டுதற்கு ஆதாரமாகச் சில செய்யுட்களைப் புதிதாகப் புனைந்து புகுத்தி யுள்ளமை இலக்கிய ஆராய்ச்சியாளர் அறியாததல்ல. கம்பனுக்கு மிகப் பிற்பட்டுத் தோன்றிய கச்சியப்ப சிவாச்சாரியார் (இவர் அந்தகக் கவி வீரராகவ முதலியார் காலத்தவர்) இயற்றிய கந்த புராணத்தை இராமாயணத்திற்கும் ஒரு நூறாண்டு முற்பட்டதெனத் தொன்மை காட்டும் பொருட்டுத் தோன்றிய செய்யுள் ஒன்றை இங்கே ஞாபகமூட்டலாம். அச்செய்யுள் வருமாறு :

கம்பன் காலம்

வேதமொடு வேதாங்கம் பயின்று வல்லோன்
விரிந்த சிவாகமம் உணர்ந்து மேன்மை பூண்டோன்
போதம் நிறை சிவமறையோன் காஞ்சி வாழும்
புனிதமிகு கச்சியப்ப குரவனானோன்
வாதமுறு புலவர்குழாம் மகிழ்ந்து போற்ற
மதிமலி மாடம் புடைசூழ் குமரகோட்டத்து
ஏதமறு சகாத்தம் எழுநூற்றின் மேலாய்
இலகு கந்தபுராணமரங் கேற்றினானே.

இங்குக் கூறியவற்றால் கம்பன் காலம் 9-ஆம் நூற்றாண்டு என்னும் கொள்கை சிறிதும் வலியற்றதாயொழிகின்றது. அவனது காவியத்திலுள்ள பல குறிப்புக்களினால் 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இராமாயணத்தைப் பாடி முடித்தான் என்பது விளங்குகிறது. சோழ அரசர்களின் புகழ் உச்ச நிலையிலிருக்கும்போதுதான் கம்பன் வாழ்ந்திருந்தான்:

புவிபுகழ் சென்னிபே ரமலன் தோள்புகழ்
கவிகள்தம் மனையெனக் கனக ராசியும்

என வந்துள்ளமை இதற்குச் சான்று. முதலாம் இராஜராஜனுக்கு முற்பட்ட அரசர்களுள் ஒருவரையேனும் இங்ஙனம் கூறுதல் கூடாது.

சென்னிநாள் தெரியல் வீரன்
தியாகவிநோதன் தெய்வப்
பொன்னி நாட் டுவமை வைப்பைப்
புலன்கொள நோக்கிப் போனான்

என ஒரு செய்யுள் மருத்துமலைப் படலத்தில் (58) வருகிறது. இதில் குறித்த ''தியாக விநோதன்'' மூன்றாம் குலோத்துங்கனுக்கு உரிய பட்டப் பெயராகும்; சாசனங்களும் இதனை வலியுறுத்துகின்றன. இவ்வரசன் கி. பி. 1178 முதல் 1216 வரை ஆட்சி புரிந்தவன். இவன் கீழ் சிற்றரசர் ஆகவும் அதிகாரி முதலினோராகவும் அமர்ந்திருந்தவர்கள் தங்கள் பட்டப் பெயரில் இவ்விநோதன் என்றதனைச் சேர்த்து வழங்கியிருக்கிறார்கள். தியாக விநோத மூவேந்த வேளான், தியாக விநோதபட்டன்,

அருங்கலை விநோதன் முதலிய சாசனத் தொடர்களை நோக்குக. இவற்றால் கம்பன் 12-ஆம் நூற்றாண்டின் கடைப் பகுதியில் தனது பெருங் காவியத்தை இயற்றியுள்ளான் என்று புலப்படும், மிகப் பழைய ஏட்டுப் பிரதி ஒன்றில்,

> ஆவின் கொடைச் சகர ராயிரத்து நூறொழித்துத்
> தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு - மூவலூர்ச்
> சீரார் குணாதித்தன் சேயமையப் பாடினான்
> காரார்கா குத்தன் கதை

என்ற செய்யுள் காணப்படுகிறது. இதுவும் இம்முடிவினையே வற்புறுத்துகிறது. சிலர் 'சகரயாண்டு' என்று கூறுவது அபத்தம் என்று கொண்டு இச்செய்யுள் மரபறியாதார் ஒருவரது பிற்கூற்று என்று சொல்வர். ஆனால், அக்காலத்து வழங்கிய சாசனங்கள் பலவற்றிலும் இத்தொடர் காணப்படுகிறது. சகாப்தம் புதிதாக வந்த வழக்கு ஆதலால், வரலாற்றினை உணராது, தவறாகச் 'சகரயாண்டு' எனப் பெயர் வழங்கியது போலும்.

மேற்குறித்த கால நிர்ணயத்திற்கேற்பவே கம்பனைக் குறித்த வரலாற்றுச் செய்திகள் பலவும் அமைந்துள்ளன. ஒட்டக்கூத்தரைப் பற்றியும் பிரதாபருத்திரனைப் பற்றியும் வரும் செய்திகள் இத்துணிவினையே முற்றும் ஆதரிக்கின்றன. எனவே 'எண்ணிய சகாப்தம்' (என்ற செய்யுள் கொள்ளத் தக்கதன்று. ''ஆவின் கொடைச்சகரர்' என்ற செய்யுளே கொள்ளத்தக்கது. கம்பன் 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவன் என்பதே தேற்றம்.

ஆராய்ச்சிப் பதிப்பு

ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முற்பட்டுத் தோன்றி, பல தரத்திலுள்ள பலராலும் பல இடங்களிற் பிரதி செய்யப்பெற்று, பல பிரதேசங்களிலும் பரவியிருந்த இந்தப் பெருங்காவியத்தில் பாட பேதங்கள் இருத்தல் முற்றும் இயல்பே. பலராலும் இடையிடையே செருகப்பட்ட கவிகள் இருத்தலும் இயல்பே. இவற்றையெல்லாம் ஆராய்ந்து சுத்தப் பதிப்புத் தயாரித்தல் மிக அவசியமானது. ஆனால் அது எளிதில் முடிகிற ஒரு காரியமல்ல. அதன் தேவையைப் பலரும் உணர்ந்தும் இன்றுவரை அத்தகைய பதிப்பு ஒன்று வெளிவராமையே அதன் அருமைப்பாட்டை நன்கு விளக்குகின்றது; இதற்கு வேண்டும் தகுதியையும் துணையையும்

பற்றிப் பல இடங்களில் கூறியிருக்கிறேன்; எழுதியுமிருக்கிறேன். அத்தகைய பதிப்பு வெளிவருமாயின் தமிழ் மக்களது பாக்கியம் என்றே கருதலாம். ஆனால், அவ்வகைப் பதிப்பு வெளியிட முடியும் என்பது முற்றும் உறுதியே.

சுந்தர காண்டப் பதிப்பு

இராமாயணப் பதிப்பு பற்றிச் சிலர் செய்த முயற்சிகள் இங்குக் குறிப்பிடத்தக்கன. பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியார் சுந்தரகாண்டப் பதிப்பு ஒன்று பல ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டனர். இப்பதிப்பில் முதன் முறையாகத் தாமே துணிந்து பல திருத்தங்களைச் செய்தனர். செய்யுள் முறை வைப்பையும் வேறுபடுத்தினர். பின்னர் முகப்புப் பக்கம் இன்றி ஒரு கிஷ்கிந்தா காண்டப் பதிப்பை அவரும் பண்டித சவுரிராய பிள்ளையும் வெளியிட்டனர். இதில் மாறுதல்கள் செய்யவில்லை; பல சுவடிகளிலிருந்து திரட்டிய பாட பேதங்களையும் கொடுத்துள்ளனர். ஆச்சாரியர் தமது சுந்தரகாண்டப் பதிப்பில் தாம் முன்னர் செய்துவிட்ட பிழையினையும் அந்நெறியில் கம்பன் காவியத்தைப் பதிப்பிடுதலில் வரும் தீமைகளையும் உணர்ந்தே கிஷ்கிந்தா காண்டத்தை நல்ல நெறியில் பதிப்பிக்கத் துணை தேடிக்கொண்டனர் போலும். சுவடிப் பாடங்களைத் திருத்துவதில் அவருக்கு வழிகாட்டியாக இருந்தவர் ஸ்ரீ சி. வை. தாமோதரம் பிள்ளையாவர். சூளாமணிக் காவியத்தில் இவர் சில இடங்களில் மூலத்திலுள்ள ஒரு சில சொற்களை மாற்றியுள்ளனர். மாற்றுவதற்குரிய காரணங்களை அந் நூலின் முன்னுரையில் இவர் தந்திருக்கிறார். இவர் கருதியபடி ஏட்டில் கண்ட பாடத்திற்குப் பொருள் விளங்கவில்லை என்பது தக்க காரணமாகாது. அதன் பொருள் பின்னர் விளங்கலாம். பிழையெனக் கருதும் பாடத்தோடு திருத்தும் பாடம் சொல்லாலும் எழுத்தாலும் ஒலியாலும் ஒற்றுமையுடையதாயிருத்தல் வேண்டும். அங்ஙனமாயினும் ஏட்டிற் கண்ட பாடத்தைத் திருத்தாதபடி, திருத்தப் பாடத்தை அடிக்குறிப்பில் உத்தேச பாடமாகக் கொடுக்கலாம். இது முறையாயிருக்க, பிள்ளையவர்கள் செய்த இச் செயலை ஒப்புக்கொள்ளுதல் இயலாததாகும்.

வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் பதிப்பும் இங்கே குறிப்பிடத்தக்கது. இராமாயணப் பெருங் காவிய முழுவதும் பாட பேதங்களுடனும், பதவுரை விளக்கங்கள் முதலியவற்றுடனும் இதன்கண் காணலாம். ஆனால் இது ஆராய்ச்சி ...

பதிப்பு அன்று. கம்பராமாயணத்தைப் பொறுத்த அளவில். இருக்கிற பாட பேதங்களே மிகப் பல. அவையனைத்தையும் திரட்டி அவை எவ்வாறு விளைந்தன என்பதை வரலாற்று முறையால் நோக்கி ஒவ்வொரு காலத்திற்குமுரிய மொழி யியல்பை நினைவிற்கொண்டு சிந்தித்து உண்மைப் பாடத்தைத் துணிதல் வேண்டும். அவ்வாறு துணிதற்குரிய காரணங்களையும் காட்டுதல் நன்றாம். இங்ஙனம் செய்வதே நெறியாக இருக்க, இதனைக் கைவிட்டுப் புதிய பாடங்களை நாமாகவே நிருமிக்கப் புகுவது குழப்பத்தைப் பெருங்குழப்பமாகச் செய்வதேயாகும் என்று நிச்சயமாகக் கூறலாம். இப்புதிய பாடங்கள் மூலபாட மாக இருக்க முடியாது. ஏனெனில் அத்திருத்தங்களுக்குப் பதிப்பாளர்கள் தாமே பொறுப்பாளிகள் என்று ஒப்புக்கொள் கின்றனர். கம்ப ராமாயணம் என இதனைக் கூறுதலும் பொருந்தாது.

ஷேக்ஸ்பியர் நாடகப் பதிப்பு

ஆங்கில இலக்கியத்திலே ஷேக்ஸ்பியரது நாடகங்களைப் பதிப்பித்த வரலாற்றை நோக்கினால் அது நமக்கு ஒரு தக்க வழிகாட்டியாகும். ஆரம்ப காலத்தில் போப் முதலிய ஒரு சிலர் மூலத்திலுள்ள சொற்களையும் தொடர்களையும் தாமே துணிந்து திருத்தினார்கள். சில பகுதிகளை ஷேக்ஸ்பியர் எழுதியவை அல்ல என்று ஒதுக்கியும் இருக்கின்றனர். அவ்வாறு ஒதுக்கிய பகுதிகளை ஓரத்தில் கொடுத்து நீக்கியதற்குரிய காரணங் களையும் தருகிறார்கள். 'Nonsense, trash, ridiculous' என்பன அக்காரணங்களில் சில. இங்கே போப் ஒரு சர்வாதிகாரி போல ஆணையிடுகிறார். இம்முறைகளையெல்லாம் கண்டித்து தியோ பால்டு என்ற பதிப்பாசிரியரும், பின் வந்தவர்களும் எழுதி யுள்ளனர்.* ஷேக்ஸ்பியரை முதன் முதலாக விஞ்ஞான

---

* The next editor, Alexander Pope (1725), brought to his task a poet's instinct and an exquisite metrical sense. But, for the drudgery of editorial labour he was totally unfitted, and, though he added passages from the quartos and identified as various verse lines printed as prose, his failures were many. These were severely exposed in 'Shakespeare Restored' (1726) by Lewis Theobald (1688-1744), the first important critic and reviser of the old texts.

Pope had no talent for editorial worksmanship, but he had a genius for spite, and he replied to Theobald's cri-→

நோக்கோடு பதிப்பித்தவர் எட்வர்டு கேப்பெல் என்பவராவர். இவர் மூலப்பிரதிகளை ஒப்பு நோக்கி அவற்றினின்றும் தக்க பாடங்களைத் துணிந்து வெளியிட்டுள்ளார். இதுவே நேரிய முறையென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஸ்காட்-திருக்குறள்

நமது நாட்டில் கையாளப்படும் பதிப்பு முறைகளை நோக்கினால் அவை போப்பின் செய்கையும் தோற்கும்படியாக அமைந்திருக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையில் வழக்கறிஞராயிருந்த ஸ்காட் (சுகாத்தியர்) என்பவர் திருக்குறளைத் திருத்தி மொழிபெயர்ப்புடன் வெளியிட்ட வரலாற்றை அறிந்திருப்பீர்கள். அப்பிரதிகளையெல்லாம் பாண்டித்துரைத் தேவரவர்கள் விலை கொடுத்து வாங்கி அழிக்கும்படியாக நேர்ந்தது. இப்பதிப்பைப் போன்றதே தற்காலத்தார் சிலர் வெளியிட்டுவரும் இராமாயணப் பதிப்புக்கள், சொற்களையும், தொடர்களையும், திருத்துதல், பல பகுதிகளை ஒதுக்குதல்

---

ticism by making him the hero of The Dunciad. Theobald's own edition of Shakespeare appeared in 1733. He was followed by Sir Thomas Hanmer (1744), who produced an edition for gentlemen by a gentleman, with everything handsome about it execept the text which was naught. The next editor, William Warburton (1698-1779), Bishop of Gloucester, was one of those bullies of literature whose success is incredible to later ages. His edition (1747) is remarkable alike for its insolence and its ignorance. His conjectures would furnish a curiosity shop of Impossible words. Almost the sole value of Warburton's edition is that it drew from Thoms Edwards in 1748 an ironical supplemnet, which, reissued as The Canons of criticism, takes high place among critical studies of Shakespeare. The long announced and long-delayed edition of Dr. Johnson appeard in 1765 and atoned for its technical defects by the great preface, which is one of the landmarks in English literary criticism. With the next editor, Edward Capel (1713-'81), begins the scientific study of the text, for he was the first to make complete and exact collations of all the old copies and thus to put textual criticism on the right path. His arrangement of the lines is that now usually followed.

—The concise Cambridge History of English Literature pp. 279-280

இவற்றோடு நிற்காது, புதிதாகச் செய்யுள் அடிகளை இயற்றி இடையே புகுத்திவிடுதல் முதலியன காணப்படுகின்றன. இச்செயல் விருந்தாளியாகத் தன் நண்பனிடம் வந்த புலவன் அந்த நண்பனது வாழ்க்கைத் துணைவி சட்டியைத் தன் கணவன் தலையில் போட, சட்டியின் கழுத்து ஆரமாக நண்பன் கழுத்தை அலங்கரிக்க, அப்புதுமையைக் கண்டு வியந்து

வீணாய் உடைந்த சட்டி வேணதுண்டு என்தலைமேல்
பூணாரம் பூண்ட புதுமை நான் கண்டதில்லை

என்று பாடிய நயமான அடிகளை நமது நினைவுக்குக் கொண்டு வருகிறது. கம்பன் இப்பொழுது உயிர் வாழ்வதா யிருந்தால் இப்படித்தான் கூறியிருப்பான். புதிது புதிதாகச் செய்யுளில் அடிகளை இயற்றித் திணித்து வைப்பது நமது நாட்டிலன்றிப் பிற நாடுகளில் காண்பதற்கரிது.

இவ்விநோதச் செயல்களையெல்லாம் கைவிடுதல் வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள கம்பராமாயணப் பிரதிகள் அனைத்தும் இக் காரைக்குடி நகரில் அல்லது சென்னையில் தொகுத்து வைக்கப்பெறுதல் வேண்டும். அப்பிரதிகளைத் தந்தவர்கள் இருந்து ஒப்பு நோக்கி எல்லா பாடப் பேதங்களையும் குறித்து ஒரு பதிப்பு வெளிவருதல் வேண்டும். இப்பதிப்பு ஆங்கிலத்தில் Howard, Furness என்ற பெயருடைய தந்தையும் குமாரனும் பதிப்பித்த New Variorum Shakespeare என்ற பதிப்பைப் போன்றுளதாகும். இதனை ஆதாரமாக வைத்துக்கொண்டு உண்மைப் பாடங்களையும் உண்மை மூலங்களையும் ஆராய்ந்து தெளிந்து ஒரு பதிப்பு வெளிவந்தால்தான் யாவராலும் நன்கு மதிக்கப்பெறுவதாக இருக்கும். இவ்வகை இராமாயணப் பதிப்பு சிற்ப அழகில் சிறந்த திருக்கோயிலோடு ஒப்பிடத்தக்கது. கற்கோயில் அழிந்துவிட்டாலும், இக்கலைக்கோயில் ஒரு நாளும் அழிந்துவிடாது. பழுதுபட்ட கற்கோயில்களைத் திருந்த அமைத்துப் புகழ் கொண்டவர்கள் இந்நாட்டில் உள்ளவர்கள். இராமாயணம் ஆகிய இக்கலைக்கோயிலை நிருமிக்கும் பணியையும் மேற்கொண்டு அதனை முற்றுவிக்கும் பொறுப்பும் அவர்களையே சார்ந்ததென்று கூறுவேன்.

சொ. முருகப்பா பதிப்பு

நண்பர் சொ. முருகப்பா அவர்கள் பதிப்பித்துள்ள இராம காதையின் முதற்காண்டம் மேற்கூறிய கலைக்கோவிலுக்குச் செல்லும் நெறியிலே முன்வாயிலாக அழகுற அமைந்துள்ளது.

அவர்கள் தமது பதிப்பில் கையாண்டுள்ள முறை போற்றத் தக்கதொன்றாகும். செய்யுளை வேண்டும் அளவு பிரித்துப் பொருளை விளங்கவைத்துள்ளார்கள். பாலகாண்டத்துக் கதை முழுவதும் தொடர்பாக வரும்படி செய்யுட்களைப் பொறுக்கித் தொகுத்திருக்கிறார்கள். நயமான செய்யுட்கள் பெரும்பாலும் விடப்படவில்லை. ஒரு செய்யுளையேனும் சுவடிகளின் ஆதார மின்றி அவர்கள் தாமே திருத்திவிடவில்லை. கற்றறிந்த பல அன்பர்களோடு பல காலமாக ஆராய்ந்து இப்பதிப்பைத் தயார் செய்துள்ளார்கள். இந்தப் பதிப்பு - நாணயப் பண்பை இந்நூற்கு மதிப்புரைகள் அளித்த பலரும் பாராட்டி எழுதியுள்ளார்கள். முருகப்பா அவர்கள் எழுதியுள்ள உரை தெளிவாக உள்ளது. தாம் கூறும் பொருளையும் கருத்தையும் அதிகார தோரணையில் கூறவில்லை. இது அவர்கள் பண்பட்ட உள்ளத்தை நன்றாக விளக்குகிறது. பிற உரைகளை மறுக்கும் இடங்களிலும் மிக்க நிதானத்தைக் கையாண்டிருக்கிறார்கள்.

உரையின் சிறப்பு

தற்கால அறிஞர்கள் சுவையோடு அனுபவிக்கும் முறையில் உரையும் விளக்கமும் அமைந்துள்ளன. பூர்வ இலக்கியங்களி லிருந்து மேற்கோள்கள் தந்துள்ளார்கள். ஆனால் இவற்றை மிகுதியாகத் தந்து இலக்கணக் குறிப்புக்களையும் பாரமாக ஏற்றித் துன்புறுத்தவில்லை. நூலகத்தே வரும் கதைக் குறிப்புக் களைத் தொகுத்து அனுபந்தத்தில் விளக்கியிருக்கிறார்கள். முகவுரைக்குப் பின் பாலகாண்டக் கதையை பாலர் முதல் பெரியோர் வரையுள்ள அனைவரும் எளிதில் உணருமாறு எளிய நடையில் தந்துள்ளார்கள். இவர்களது உரையின் சிறப்பை அறிதற்கு ஒரு சில உதாரணங்கள் காண்போம். ''ஆலமர் வித்தின் அருங்குறளானான்'' என்றதன் உரை இங்கே குறிப்பிடத் தக்கது.

''ஓர் ஆலமரத்தில் ஆண்டுதோறும் பழுக்கிற பழத்தை எண்ணி முடியாது, ஓர் ஆண்டில் ஒரு மரம் ஒரு கோடி பழம் பழுக்கும். இப்படி எத்தனை கோடி மரம் உலகில் இருக்கின்றன! எத்தனை ஆண்டுகள் உயிருடன் இருந்து பழுத்துக்கொண்டே இருக்கின்றன. சரி, ஒரு பழத்தினுள் எத்தனையோ விதை. ஒரு விதைக்குள் ஓர் ஆலமரம் அடங்கியிருக்கிறது. அந்த ஆலமரம் எத்தனையோ பழம் பழுக்கும். ஒவ்வொரு பழத்தில் எவ்வளவோ விதைகள், அந்த ஒவ்வொரு விதைக்குள்ளும் ஒவ்வொரு ஆலமரம்

அடங்கியிருக்கிறது. இப்படிப் பார்த்தால் படைப்பின் உள்ளீடு விளக்கமாகக் கூடும். எப்படி ஆலம் விதையானது பெரிய தத்துவத்தை அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறதோ அப்படித் தான் நிலவுலகத்தையெல்லாம் ஓர் அடியில் அடக்கும்படி பேருருவத்தை அடக்கிக்கொண்டு இந்தச் சிறு குறளன் நிற்கிறான்.

அகலிகைப் படலத்தில்,

பொன்னையேய் சடையான் கூறக்
கேட்டலும் பூமி கேள்வன்
என்னையே என்னையே இவ்வுலகியல்
இருந்தவண்ணம் !
முன்னை யூழ் வினையினாலோ ?
நடுஒன்று முடிந்ததுண்டோ :
அன்னையே அனையாய்க்கு இவ்வாறு
அடுத்தவாறு அருளுகென்றான்.

என வருகிறது. இதில் இராமன் தாயுணர்ச்சியைத் தவிர வேறு எந்தவித உணர்ச்சியையும் கொண்டு எப்பெண்ணையும் பாராத குழந்தையுள்ளம் உடையான். அவன் உலகியல் அனுபவத்தில் முதற் படியில் இருக்கிறான் என்பது காட்டப்படுகின்றமை உரைகாரர் குறிக்கின்றனர். இதனைச் 'செய்யுளின் நோக்கு' என்றனர்.

நைவளம் நவிற்று மொழி நன்னவர லோடும்
வையம்நுகர் கொற்றவரும் மாதவரு மல்லார்
கைகள்தலை புக்கன கருத்துளது மெல்லாம்
தெய்வமென உற்ற: உடல் சிந்தைவச மன்றோ ?

இச்செய்யுளுக்குப் பிறர் செய்துள்ள உரையையும், முருகப்பரது உரையையும் ஒப்பு நோக்கினால் எது தெளிவான, சிறந்த உரை என்பது விளங்கும். இங்ஙனம் வரும் அருமைகள் பலவாம்.

இந்நூல் கம்பனது இராமகாதையைக் கற்பதற்குப் பெரிதும் துணைபுரியவல்லது. இங்ஙனமே எல்லாக் காண்டங்களும் வெளிவந்து இவர்களது முயற்சி இனிது நிறைவேறி வெற்றி பெறுவதாகுக.

11. கம்ப இராமாயணமும் ஜைன இராமாயணமும்

கவிதையை அனுபவிப்பதற்குக் கலையுணர்ச்சி நிரம்ப இருத்தல் வேண்டும். மக்களுக்கு இன்பமூட்டுதலொன்றே அதன் தனிப்பெரு நோக்கம். மகிழ்ச்சியால் உளம் நெகிழ்ந்த நிலையில், உயர்ந்த லட்சியங்களைப் பாராட்டவும் அவற்றை வாழ்வில் மேற்கொள்ளவும் செய்தல் இயலும். ஆனால் இன்புறுத்துதல் மாத்திரமே கவிதையின் நோக்கமாகக் கருதத்தகும். இதைத் தவிர, வேறு நோக்கம் இருத்தல் கூடாது. அதிலும் சமய நோக்கம் கூடவே கூடாது. இன்ப நோக்கத்திற்கு அனுகூலமாயிருப்பதுதான் கலையுணர்ச்சி.

வால்மீகி

வால்மீகி உயர்ந்த லட்சியங்களை முன்னிறுத்தி அவை விளங்கும் அழகிய சரிதமொன்றினை இயற்றினர். இதுவே இராமாயணம். ஆனால் இராம சரிதத் தொடக்கம் இவ்வாறிருப்பினும், பின்னர், கால அடைவில், சமய நூலாகவும் பக்தி நூலாகவும் பரிணமித்துவிட்டது. இராமன் மனுஷ்ய நிலை கடந்து தெய்வமாகிவிட்டான். இம்மாறுதலுக்கு ஏற்ப, பிற பேத கதிகளையும் இராமாயணம் பெற்றுவிட்டது. எனினும், கவிஞரின் கவித்துவ மேம்பாட்டினாலே, சரிதத்தின் அழகு குறையவில்லை; கலையுணர்ச்சியும் குறைந்துவிடவில்லை. மக்களை இன்புறுத்தும் பயனும் நிரம்பாமற் போகவில்லை.

கம்பன்

வால்மீகியையே கம்பன் பெரும்பாலும் பின்பற்றுகிறான். கம்பனைப் படிக்கும்போது அவன் வைஷ்ணவன் என்ற எண்ணமே நமது மனத்தில் தோன்றுவதில்லை. கலையுணர்ச்சியைத்தான் அவனிடம் காண்கிறோம். தனது சமயத்தையும் கலைமயமாகச் செய்துவிடுகிறான். சமயத்தை அதன் தனிப்பட்ட நிலையில் கலையின் எல்லைப் புறத்திலேயே நிறுத்தி வைத்திருக்கிறான்.

இராமன் முதலிய உத்தம பாத்திரங்களைப் புதிதாகச் சிருஷ்டித்துள்ளான். அவனது தமிழைப் படித்து நைந்து நைந்து உருகும்படி, தமிழுக்கு ஏற்றமளித்திருக்கிறான். தமிழ்நாட்டினர்க்கே ஒரு தனிப்பட்ட கௌரவத்தை அவன் தந்துவிட்டான். அவனது புகழ் வானளாவிப் பரந்து நிற்கிறது.

அத்யாத்ம இராமாயணம்

மதத்தை முக்கிய நோக்கமாகக் கொண்ட இராமாயண காவியங்களும் பலவாயுள்ளன. 14-ஆம் நூற்றாண்டளவில் அகஸ்தியர் இயற்றியதாகச் சொல்லப்படும் அத்யாத்ம இராமாயணம் இத்தகையதே. இதில் பக்திச் சுவைதான் மிகுந்து காணப்படுவது: கலைச் சுவையன்று. இந்த இராமாயணத்தைப் பின்பற்றியே மலையாளத்தில் எழுத்தச்சனும், ஹிந்தியில் துளஸிதாஸரும் தங்கள் இராமாயணத்தை இயற்றியுள்ளார்கள். மிகப் பூர்வகாலத்திலும் இவ்வகை இராமாயணங்கள் தோன்றின. பௌத்த-இராமாயணம் புத்த ஜாதகக் கதைகளிலிருந்து புலப்படுவதாம். பௌத்த மதக் கொள்கைகள் இதில் காணப்படுவதோடு வேறு சில செய்திகளும் உள்ளன. அவற்றுள் ஒன்று நமக்கு விநோதமாகத் தோன்றும். புத்தர் சாக்கிய மரபைச் சார்ந்தவர். அம்மரபில் உடன் பிறந்த ஆணும் பெண்ணும் மணந்துகொள்ளுதல் வழக்கம். இவ்வழக்கினைப் பின்பற்றி, சீதையும் இராமனும் உடன் பிறந்தவர்களென்று பௌத்த இராமாயணம் கூறும். ஜைன இராமாயணத்திலும் மத நோக்கமே மேம்பட்டு நிற்பது. ஜைனர்களது கொள்கைகளும் புராண வரலாறுகளும் இதில் காணப்படுகின்றன.

ஜைன இராமாயணம்

ஜைன இராமாயணத்தில் தசரதன் காசி அரசன் என்றும் பிறகு அயோத்திக்கு அரசனானதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே ஜைனர்கள் கதையை வேறுபடுத்துத் தமிழில் இராமாயணம் ஒன்று இயற்றியுள்ளார்கள் என ஊகிக்கலாம். ஏறத்தாழக் கம்பன் காலத்தில், கன்னட மொழியில் ஜைனர்கள் ஓர் இராம சரிதம் இயற்றியுள்ளார்கள். நாகச்சந்திரன் அல்லது அபிநவ பம்பா என்ற கவிஞன் சுமார் கி. பி. 1100-இல் இயற்றிய பம்பா இராமாயணம் என்று வழங்குகிற இராமச்சந்திர சரித புராணம் மிகப் பிரசித்தமானதே. இப் புராணத்தோடொப்ப, ஜைனர்கள் தமிழிலும் ஓர் இராம சரிதத்தை இயற்றியமை ஸ்ரீபுராணத்தால் நமக்கு விளங்குகிறது; பிற்பட்டெழுந்த ஸ்ரீபுராணத்தில் வரும்

இராம சரிதப் பகுதியிலே ஒரு சில செய்யுட்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இவை இப் பழைய ஜைன இராமாயணத்தைச் சார்ந்தன என்று கொள்ளலாம். அச்செய்யுட்களில் சில வருமாறு :

உருமிடிப் புண்ட அருமணி நாகமெனத்
திருமணி நிலத்திற் றேவி சோர்ந்து
செய்த பாவையின் மெய்திரி பின்றி
மையலி னுயிர்த்து மடிந்துடன் கிடப்ப
விம்முறு துயரிற் கொம்மென வுயிரா

விளைந்த தெல்லாம் உளங்கொள வுணரா
எழுதுகண் ணருவிய ளினைந்தினைந் திரங்கலின்
ஒழுகுபு கழிய் முழுகிய மேனியள்
அழுதழு தலறி யாவோ வென்னும்
இணைபிரி யன்றிலி னேங்கி நீங்காத்

துணைவனை நினைந்து சோகமீ தூர்தர
வான்பழி சுமந்துநின் வனமலர்ச் சேவடி
யான்பிரிந் தேதில ளிடவயின் இடர்ப்பட
மான்பின் போகிய மன்னவ னேயெனும்;
மாயோன். செய்த மாய மானிடை

மாயவன் செய்த மகிழ்ச்சி கண்டருளி
ஆவதொன் றின்றி யதன்வழி யொழுகிய
நாயக னேயெனை நணுகாய் வந்தெனும்
கொற்றவன் துணையே குலவிளங் களிறே
செற்றலர்ச் செருக்குஞ் சினத்தீ யுருமே

மைத்துன மலையே மன்னவனே யெனுங்;
நாற்கடற் பரந்தன வேற்படைத் தானையொடு
கூற்றுறழ் மொய்ம்பில் கொடுஞ்சிலைத் தடக்கைத்
தம்பித் துணைவனிற் றனிப்படப் பிரிந்திட்
டெம்பெரு மகனை யென்வயி னிறுவி

மாற்றவன் செய்த மாய மானினை
நோற்றி லாதே னோக்கிய நோக்கின்
அருவினை யேனை யருளிய மனத்தால்
மருவிய மாய வுருவுதரற் கெழுந்த
வரிசிலைக் குரிசில மன்னர் பெருமானை

மான்மறி தொடர்ந்துசெல் வாளரி போலக்
கானெறி விடுத்துக் கடுவனம் புகுந்து
மாயப் புணர்ப்பின் மன்னனை நினைந்து
ஆயமுந் தாயருந் தோழியு மின்றியோர்
நொதும லாளன் விதிவழி யொழுகி

இடனிடை யிட்ட சேய்மைத் தன்றியும்
கடலிடை யிட்ட காப்பிற் றாகிய
இலங்கை மூதூ ரிடுசிறைப் பட்டு
மலங்கு விழிமான் வழிதேர்ந் தருளிய
மன்னவற் குற்றதும் இன்னதென் றறியாது

இன்னற் படவெனை யின்னண மிழைத்த
வினையே வலிதே விளிதரல் புரிவாய்
மனுவே யனையனை வார ணாசியில்
தனியொரு மான்பிணை தன்னின் விடுத்தே
எனையுந் தனியே யிவணிட் டதுவே.

சுழல்விழித் தறுகட் பேழ்வாய்ச்
சுடர்க்கைவேற் றிரண்ட தோளாய்
உழைவிழி யார் சொற் கொண்டார்
உறுவர்வெந் துயர மென்னும்
பழமொழி யதனை யோர்ந்தும்
பாவியேன் சொல்லைக் கேளா
உழையின் பின் போன வேந்தே
உனக்குற்ற தறிகி லேனே.
கோம்பி கண்டு குலுங்குபு கலங்காச்
சாம்பிய மஞ்ஞையிற் சாய்ந்தனள் கிடப்ப.

சீதையின் சோகத்தையுணர்த்தும் இச்செய்யுட்களை நோக்கினால் இவ் இராமாயண நூல் மிகவும் சுவைபட அமைந்ததாம் என்பது விளங்கும். ஸ்ரீபுராண ஆசிரியர் கையாளும் நடைக்கும் இச்செய்யுள் நடைக்கும் பெரிதும் வேற்றுமை காணப்படுதலினாலே, இவை மேற்கோள் செய்யுள் எனவே பெரும்பாலும் கொள்ளத்தக்கன.

சரித வேறுபாடு

ஜைன இராமாயண கதை நமது வைதிக இராமாயணச் சரித்திரத்திலிருந்து மிகவும் வேறுபட்டமை மேலே குறிக்கப் பட்டது: தசரதருக்கு இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கனன் என்ற நான்கு புதல்வர் இருந்தனர். ஜனகர் ஓர் யாகம் செய்தனர். அதற்கு இராமனை அனுப்புமாறு தசரதரை வேண்டினர். அவ்வாறே அனுப்ப, இராமன் அங்குச் சென்று சீதையை மணந்தனன். இவர்களைக் காசியில் வாழ்ந்துவரும்படி தசரதர் நியமித்தார். ஒருமுறை வனத்தில் விளையாடி இன்புறுதற் பொருட்டு இராமன், இலட்சுமணன், சீதை என்ற மூவரும் சித்திரகூடம் சென்று அங்குத் தங்கியிருந்தனர். அப்பொழுது நாரதர் அங்கு வர நேர்ந்தது. இராமன் அவர் வரவை அறியாமையினாலே அவருக்கு வந்தனை வழிபாடாற்றாது இருந்தனன். நாரதர் மிகவும் கோபித்துச் சென்று இராவணனை அடைந்து அவனுக்குச் சீதையின் பேரழகை எடுத்துக் கூறினர். இராவணன் தாங்கொணாத காமங் கொண்டு மாரீசனோடு சித்திரகூடம் போய் வஞ்சனையாகச் சீதையை எடுத்துச் சென்றனன், அப்பொழுது அயோத்தியில் நிகழ்ந்த உற்பாதத்தால் தசரதர் முற்கூறிய செய்தியை உணர்ந்து தூதர்கள் மூலம் ஆறுதல் சொல்லியனுப்பினர். கௌசல்யை, பரதன் முதலியவர்களும் சுக்ரீவன், அனுமஹான் (அனுமான் முதலிய வித்தியாதரர்களும் இராமனிடம் வந்து சேர்ந்தனர். அனுமஹான் சீதையைக் கண்டு வந்து இராமனிடம் தெரிவித் தனன். பின்னர் இராமன் அனுமஹானைத் தூதாக அனுப் பினன். வாலி தன்னைச் சேர்த்துக்கொள்ளும்படி இராமனிடம் வேண்ட, இராமன் மறுத்துவிட்டனன், வாலிக்கும் சுக்ரீவனுக்கும் போர் நிகழ்ந்தது. இப்போர் நிகழ்ச்சியில் இலட்சுமணன் வாலியைக் கொன்றுவிட்டான். விபீஷணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்தனன். பின்னர் இராவணன் முதலிய வித்தியா தரர்களுக்கும் இராமன் முதலியோர்களுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. இப்போரில் இலட்சுமணனால் இராவணன் முதலி யோர் அழிவெய்துகின்றனர். இறுதியில் இராமன் தீக்ஷை பெற்று மோக்ஷமடைகின்றான். அவ்வாறே அனுமஹான் முதலி யோரும் தீக்ஷை பெற்றனர்; ஆனால் இலட்சுமணன் மாத்திரம் நரகம் அடைந்தனன்.

ஸ்ரீபுராணம்

இச்சரித வேறுபாடு ஸ்ரீபுராணத்தில் காணப்படுகின்றது. இந் நெறியிலேயே ஸ்ரீபுராணத்திற்கு முந்திய ஜைன இராமாயணத்

திலும்[1] கதை சென்றது என நாம் ஊகிக்கலாம். இதில் வரும் செய்யுட்கள் சுவையுடையனவாயிருத்தல் வேண்டும் என்று கூறினேன். ஆனால், கதை அமைப்பில் ஜைன இராமாயணம் மிகவும் கீழ்ப்பட்ட தரத்தது எனவே நாம் துணிதல் வேண்டும்.

விநோதச் செய்திகள்

பழைய ஜைன - இராமாயணங்களிலுள்ள சில செய்திகள் நமக்கு விநோதமாகத் தோன்றும். குரக்கினத்தவர்கள் என்றது வித்தியாதரர்களை. இவர்களது கொடி முதலியவற்றில் குரங்கு அடையாளம் இருந்தனவாம். அரக்கர்கள் வித்தியாதர மரபைச் சார்ந்தவர்கள். இராவணன் இந்த அரக்கர்களின் தலைவன். இவன் தங்கையின் பெயர் சந்த்ரமுகா; இவனது சகோதரர்கள் பானுகர்ணனும் விபீஷணனும். இராவணன் கழுத்தில் இவனது அன்னை அணிவித்த முத்து மாலையிலே இவனது முகம் ஒன்பது முறை பிரதிபலித்ததால், இயற்கைத் தலையையும் உடனெண்ணி இவனைத் தசமுகன் என்று அழைத்தனர். இவன் ஒரு ஜினர் பக்தன். இலங்கையில் சிறைவைக்கப்பட்ட இந்திரன் தனது புத்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்துப் பின் ஜைனத் துறவியாகி முத்தி எய்தினான். இராவணன் மேருவின் மீதுள்ள ஜினர் கோயில்களில் வழிபாடின்றி அனந்த வீரியரிடத்தில் தர்மோபதேசம் பெற்றுக் கேவல ஞானம் பெற்றான். இந்த உபதேசங்களால் அனுமானும் ஜைன மதத்தைத் தழுவினான். இவனுக்கு இராவணன் உதவியால் ஆயிரம் மனைவியர் கிடைத்தனர். தசரதருக்கு மூத்த சகோதரர் அநந்தரதர். அநந்தரதர்

1. மகாவீரர் நிர்யாணமாகி 530 ஆண்டுகட்குப் பின்னர், விமல சூரி என்பவர் 'பஉமசரிய' (பத்ம சரித) என்ற இராம சரிதத்தைப் பிராகிருதத்தில் இயற்றினர். இதனைத் தழுவி, ரவிஷேணர் கி. பி. 678-ல் 'பத்ம புராணம்' என்ற இராம சரிதத்தை வடமொழியில் இயற்றினர். பின்னர் உத்தர புராணம் 68ஆம் பருவத்தில் இச்சரிதம் கூறப்படுகிறது. இது 9ஆம் நூற்றாண்டில் ஜினசேனரது சிஷ்யர் குணபத்திரரால் இயற்றப்பட்டது. 12ஆம் நூற்றாண்டில் ஹேமசந்திரர் தமது த்ரிஷஷ்டி சலாகா புருஷ சரித்திரம் 7-ஆம் பர்வத்தில் ஜைன - இராமாயணத்தை அமைத்திருக்கின்றனர். இவையிரண்டும் பாத்திரப் பெயர்கள் பற்றிய அளவில் நமது இராமாயணத்தைத் தழுவியுள்ளன. இறுதியாக, கி. பி. 1596இல் தேவ விஜய கணி என்பவர் இராம சரிதத்தை வடமொழியில் வசனமாக எழுதினர். (History of Indian literatur Vol. 2 PP. 489-495)

துறவு பூண்டதும், தசரதர் அரசாட்சி புரியத் தொடங்கினர். இவரது பட்டமகிஷி அபராஜிதை (கோசலை). சீதை பூமியினின் றும் பிறந்தவளல்லள்; இயற்கை நெறியில் ஜனகனுக்குப் பிறந் தவளே.[1] தனக்குப் போரில் உதவி புரிந்தது பற்றி, ஜனகன் சீதையை இராமனுக்கு மணம் புரிவிக்க இசைந்தான். ஆனால் வித்தியாதரர்கள் இதற்கு இசையவில்லை. இவர்கள் வீர்ய சுல்கமாக வில்லைக் கொணர்ந்தார்கள். இராவண வதத்தின் பின் இராமன் கேவல ஞானம் பெற்று நிர்வாணம் அடைந்தனன்.

அனுமான் அணுவாகவும் மஹான் ஆகவும் உருவெடுக்க வல்லவனாதலால், அப் பெயர் பெற்றான். அணுமஹான் என்பதே அனுமான் எனத் திரிந்தது.

கம்ப-இராமாயணம் சீதையை யன்றி வேறு பெண்களை இராமன் 'சிந்தையாலும் தொடேன்' என்றதாகக் கூறும். இதற்கு மாறாக, ஒரு ஜைன-இராமாயணம் அவன் பதினாயிரம் பெண்களை மணந்துகொண்டதாகக் கதை அமைந்துள்ளது.

மத நோக்கம் மேற்பட்டால் கலையுணர்ச்சியும் கவிதை யுணர்ச்சியும் முற்றும் மறைந்துவிடும்.

1. ஓர் இராமாயணம் இவளை ராவணன் புத்திரி யென்றும் கூறும்.

12. கம்பனைக் கற்கும் நெறிகள்

இலக்கிய உணர்ச்சியை எவ்வாறு உண்டுபண்ணுதல் வேண்டும்? சிறந்த இலக்கியத்தை எம்முறையில் கற்றல் வேண்டும்? இவ்வகை இலக்கியத்தை எந்நெறியைப் பின்பற்றிப் பொதுமக்களிடையே பரப்புதல் வேண்டும்? இராமாயணத்தை நாம் எவ்வாறெல்லாம் பயின்று வருகிறோம் என்பதைச் சிறிது நோக்கினால் சரியான நெறி நமக்குப் புலப்படாமற் போகாது.

இராமாயணம் உலகத்தில் வழங்கும் சரிதங்களுள் மிக்க பெருமையும் கௌரவமும் பொருந்தியது. இதனைப் பற்றி யெழுந்த காவியங்கள் உலகப் பிரசித்தி வாய்ந்தன. தமிழில் இதனை இயற்றிய கம்பன் உலகமகா கவிகளில் ஒருவன். எனவே, இந்த இராமாயணம் தலைசிறந்த இலக்கியச் செல்வங்களுள் ஒன்று. இதனைச் சரியான நெறியைக் கைக்கொண்டு நாம் கற்றல் மிக அவசியமாம். இப்போது வழங்கும் முறைகள் யாவை?

காலக்ஷேப முறை

இராம சரிதத்தை இராக் காலங்களிலே பொது இடத்திலே மக்கள் பெருந் திரளாய்க் கூடியிருந்து கேட்டு இன்புறும்படியாகச் சொல்லிவரும் முறையானது வெகுகாலமாக நிகழ்ந்து வந்திருக்கிறது. இதைக் காலக்ஷேப முறை என்று நாம் குறிப்பிடலாம். இந்த முறையிலே கம்பன் செய்யுளைக் காட்டிலும் இராம சரிதத்தில் அதிக ஈடுபாடு காணப்படும். கேட்பவர்களுக்கு நகைச்சுவை விளைவிப்பதும் அவர்களுக்குப் பக்தி உண்டுபண்ணுவதும்தான் இந்த முறையின் முக்கியமான நோக்கங்கள். நகைச்சுவை விளைவித்தற் பொருட்டு, பலவகையான கீர்த்தனங்களையும் தெம்மாங்குகளையும் பாடுவார்கள். இப்பாட்டுக்களைத் தவிர, உபகதைகளையும் வேடிக்கைக் கதைகளையும் சொல்லிச் சொல்லி நகைப்பு விளைவிப்பார்கள்.

இம்முறை எந்தக் காலத்தில் தோன்றியது என்று துணிந்து கூறமுடியாது. ஆனால், வைஷ்ணவப் பிரபந்தத்திற்கு வியாக்கியானம் வகுத்த ஆசிரியர்களது காலத்தில் இக்காலக்ஷேப முறை

தோன்றியிருக்கலாம். வடநாட்டுப் பக்தர்களுடைய சரித்திரத்தைக் காலக்ஷேப முறையில் கூறுவது தமிழ்நாட்டில் பரவிய பின்னர், இராமாயணக் காலக்ஷேப முறைக்கு ஒரு தனி மதிப்பும், பெருமையும் உண்டாகத் தொடங்கிற்று. காலக்ஷேபம் செய்வோர் சங்கீதத்திலும் வல்லவர்களாயிருந்தனர். ஆகவே, இந்த சங்கீதமும், இம்முறை மக்களிடையே பரவுவதற்குக் காரணமாயிருந்தது. தற்காலத்தில் இம்முறையானது மிக மிக அருகியே காணப்படுகிறது. பொதுமக்களிடமிருந்து யாசகம் பெறவுதவும் முறை இது என்று பலரும் இதனை ஏளனமாகக் கருதுகிறார்கள். இம்முறையில் கம்பனது கவிதைச் சிறப்பை அறியும் முயற்சி சிறிதும் இல்லையென்று சொல்லலாம்.

பண்டித முறை

வேறொரு முறையும் முற்காலந்தொட்டுப் பயின்று வந்துள்ளது. இதனை நாம் பண்டித முறை என்று கூறலாம். இலக்கண இலக்கியங்களைக் கற்று வல்லவர்கள் இராமாயணத்தை எடுத்துக்கொண்டு, பொருளை விளக்கி உபந்நியாசம் செய்து வந்தனர். இப்பண்டிதர்கள் கம்பனது கவித்துவச் சிறப்பைக் காட்டிலும் தங்களது பாண்டித்தியச் சிறப்பே மிக முக்கியம் என்று தோன்றுமாறு இராமாயணப் பிரசங்கம் புரிந்தார்கள். ஒரு செய்யுளுக்குப் பலவகையான அர்த்தங்களைக் கற்பனை செய்வதில் தங்கள் கல்வியறிவு முழுவதையும் இவர்கள் காட்டி வந்தனர். இவ்வாறு நலிந்து பலபொருள் கூறுவதற்கு இவர்கள் இலக்கணத்தையும் பக்கத்துணையாகக் கைக்கொண்டார்கள். செய்யுளில் வரும் ஒவ்வொரு சொல்லையும் எடுத்துக்கொண்டு அதற்குப் பதசாரம் சொல்லித் தமது புலமையைப் பலரும் வியக்கச் செய்துவந்தனர். இந்த முறையிலே கம்பனது உள்ளக் கிடக்கையைக் காணும் முயற்சி மிகவும் சிறிதளவே காணப் பட்டது.

தர்க்க முறை

மூன்றாவது ஒருமுறையும் முற்காலந்தொட்டு வழங்கி வருகிறது. அதனை நாம் தர்க்க முறை என்று கூறலாம். இம் முறையிலே செய்யுளில் வரும் ஒவ்வொரு சொல்லையும் எதிர்த்துப் பொருள்காணவேண்டுமென்று வற்புறுத்திவந்தனர். ஓரிடத்தில் இவர்கள் கொண்ட தர்க்கநெறிப்படி பொருள் அமையாமல் போனால், வேறு இடங்களில் வரும் குறிப்புக்களால் பொருளை அமைத்துக்கொள்வதில் சிறிதும் தயங்கமாட்டார்கள். பூட்டைத்

திறப்பதற்குரிய திறவுகோல், அதன் வாயில் இல்லாமற்போனால், ஏதேனும் வேறோரிடத்தில் அத்திறவுகோல் காணப்படுதல் உறுதி என்று நம்பி வந்தனர். கம்ப ராமாயணத்தில் அத்திறவு கோல் அகப்படவில்லை என்றால், அதனைத் தேடி வால்மீகி இராமாயணத்திற்குச் செல்லுவார்கள். அங்கும் வெளிப்படை யாகக் காணமுடியாமற்போனால், சுலோகங்களை நலிந்து பொருள் பண்ணித் தங்களுக்கு வேண்டும் குறிப்பைக் கொள்ள முயல்வார்கள். கம்பன், வால்மீகி முதலியோரது கவித்துவப் பெருமை தங்கள் அறிவு - ஆற்றலையும் சொல்லாற்றலையும் துணைவேண்டி நிற்கின்றன என்று கருதினர். தங்களால்தான் இப்பெருங் கவிஞர்கள் மதிக்கப்பட்டு வருகிறார்கள் என்றும், தாங்கள் நினைத்தால் இவர்களது பெருமையை அடியோடு அழித்துவிடலாம் என்றும் உள்ளூரச் செருக்குக் கொண்டனர். இம்முறையிலும் இத்தருக்க நிபுணர்கள் தங்கள் அறிவாற்றலின் விளையாட்டுக்களைத் தாமே காணமுனைந்தார்களே தவிர, கம்பனைக்காண முயலவில்லை.

அலங்கார முறை

இத்தனை ஆழ்ந்து செல்லாது மேலெழுந்தவாரியாகச் சொற்களை வேட்டையாடித் திரியும் முறை ஒன்றும் ஒரு சிலரால் கையாளப்பட்டு வருகிறது. இதனை அலங்கார முறை என்று அழைக்கலாம். தாம் நீண்ட காலமாக வழங்கிவரும் சொல்லலங் காரத்தோடு, நூலில் அங்கங்கேயுள்ள தொடர்கள் முதலிய வற்றை எடுத்தாண்டு, கம்ப இராமாயணத்தைப் பிரசங்கிப் பார்கள். இம்முறையால், கம்பனை வினோத உணர்ச்சிக்குரிய ஒரு பொருளாகவே செய்துவிடுகிறார்கள். இவர்களிடத்தும் அவன் கவிதையின் பெருமையைக் காணுதற்குரிய முயற்சி சிறிதும் காணுதல் இல்லை.

இனி நவீன ஆராய்ச்சிப் பொருள்களை மேற்கொண்டு இராமாயணப் பொருளை விளக்கும் முறைகள் சிலவற்றை நோக்குவோம். பொதுப்பட ஒன்று கூறி அமையலாம். இம்முறைகள் 'அனைத்திலும் கம்பனையும் அவனது கவிதை யையும் உணர்வதைக் காட்டிலும், அவன் கூறியுள்ள சரிதத்தின் உட்கிடையான பொருளே முக்கியம் என்று இவ்வகை ஆராய்ச்சி யாளர் கருதுகிறார்கள். ஆகவே, இவர்கள் இராமாயணத்தை இலக்கியச் செல்வம் என்ற முறையில் அனுபவிக்க முயலவில்லை.

இவர்களுள் ஒரு சிலர் இராமாயணத்தைப் பூர்வ மக்களின் வரலாறுகளை மறைமுகமாகத் தெரிவிக்கும் ஒரு நூல் என்று கொள்ளுகிறார்கள். ஆரிய மக்கள் தென்னாடு நோக்கிப் புறப்பட்டு வந்து, தென்னாட்டு மக்களை வென்று, இவர் களையும் இவர்கள் நாட்டையும் சுவாதீனப்படுத்திய வரலாற்றை இராமாயணம் குறிப்பதாகும் என்று இவர்கள் கொண்டுள் ளார்கள். பூர்வ வரலாற்று முறை என்று இதனைக் கூறலாம். குரங்குகள் அரக்கர்கள் என்று குறிக்கப்படுவோர் தமிழகத்துப் பூர்வ மக்கள் என்றும், இராமன் ஆரிய மக்களின் பிரதிநிதி என்றும், அவன் தன் சத்துருக்களிடையே பகை மூட்டி, ஒரு சிலரைத் துணைக்கொண்டு, அந்த சத்துருக்களை நாசம் செய்தனன் என்றும், சீதை திராவிடப் பெண் என்றும், திராவிடனான இராவணன் அவளைச் சிறையெடுத்துச் சென்றது பொருத்தமே என்றும் இவ்வாறாகப் பல விநோதமான முடிவுகளை இவர்கள் செய்திருக்கிறார்கள்.

ஜாதிச் சூழ்ச்சி முறை

மேற்கூறியதனோடு இவ்வகை ஆராய்ச்சி முடிந்துவிட வில்லை. தற்காலத்துள்ள ஜாதிச் சச்சரவுகளுக்கும் இராம சரிதத்தைத் துணைப் பிடித்துக்கொள்கின்றார்கள். தமிழ் மக்களாகிய தங்களை இழிவுபடுத்துவதற்கென்றே ஆரிய மக்கள் சூழ்ச்சி செய்து இந்நூலை இயற்றியுள்ளார்கள் என்றும், இந்தச் சூழ்ச்சியை அறியாதபடி, தமிழ் மகனாகிய கம்பன் வால்மீகியைப் பின்பற்றி ஆரியர்களின் பெருமையைப் போற்றித் தமிழில் இராமாயணம் செய்துவிட்டான் என்றும் இவர்கள் துணிந்திருக் கிறார்கள். ஜாதிச் சூழ்ச்சி முறை என இத்துணிவை அழைக்கலாம். தமிழர்கள் பெருமையை உணர்த்துவதற்கு அவர்களுடைய பிரதிநிதியாக இவ்வாராய்ச்சியாளர் கருதும் இராவணனைக் கதாநாயகனாகக் கொண்டு 'இராவண காவியம்' என்ற ஒரு நூலும் வெளியிடப்பட்டுள்ளது.

பொய், மெய் முறை

வேறோர் சாரார் இராம சரிதத்தில் வரும் நிகழ்ச்சிகளை எடுத்துக்கொண்டு, அவற்றைப் பொய்யா மெய்யா என்று தெரிவதே ஆராய்ச்சி நெறியெனக் கொண்டு, உலகியற்கையோடு ஒப்பிட்டு, பொய் என்ற முடிவிற்கு வந்து, அவ்வளவில் திருப்தி யடைந்து மகிழ்கிறார்கள். இதனைப் பொய் மெய் முறை என்று குறிப்பிடலாம். இன்னும் ஒரு சாரார் இராமாயணத்தில்

உப கதையாக வரும் அகலிகை சரித்திரம், சீதையின் பாதாதிகேச வருணனை முதலியவற்றைத் துணைக்கொண்டு, அதில் காமரஸமே முக்கியமாக காணப்படுகிறது என்று முடிவுகட்டி, அதனை இலக்கியமாகக் கொள்ளுதல் தக்கதன்று என வற்புறுத்தி வருகின்றனர். காமரஸ முறை என்று இதற்குப் பெயரிடலாம். இவ்விரு முறையையும் பின்பற்றுபவர்கள் இராமாயணத்தை நெருப்பிலிட்டுக்கொளுத்தி அழித்துவிட வேண்டும் என்ற முயற்சியையும் மேற்கொண்டுள்ளனர்.

தத்துவார்த்த முறை

ஆராய்ச்சி முறையைக் கைக்கொள்ளும் பிறிதொருசாரார் இராமாயண சரிதத்தை நுணுகி உணர்ந்துகொள்ளும் அளவில் நில்லாது. அதற்கு உட்கிடையாகச் சில தத்துவங்கள் இருக்க வேண்டுமென்று கருதி, அத் தத்துவங்களைக் காணுவதற்கு முயலுகின்றனர். இம்முறையைத் தத்துவார்த்த முறை என்று கூறலாம். இராமனைப் பரமாத்மாவாகவும், சீதையை ஜீவாத்மாவாகவும் கொண்டு தத்துவார்த்தங்களை இராம சரிதத்திற்கு இவர்கள் கற்பிக்கின்றார்கள், இவர்களும் இராம சரிதையில் வரும் நிகழ்ச்சிகளைப் புறக்கணித்துவிட்டு, கதை நயத்தையும் பொருட்படுத்தாது, இலக்கியம் என்னும் கலையொன்று உள்ளது என்ற உணர்ச்சியே இல்லாதிருக்கின்றனர். காமரஸ முறையில் காமத்தை எங்கும் காணுவதுபோலவே, இவர்கள் எங்கும் தத்துவங்களைக் கற்பித்துக் கொள்ளுகின்றனர். இம்முறையிலும் இராமாயணம் ஓர் இலக்கியச் செல்வம் என்ற உணர்ச்சி காணப்படவில்லை.

இலக்கிய நய முறை

மேற்கூறிய ஆராய்ச்சி முறைகளை விடுத்து, இலக்கிய நய முறைகள் சிலவற்றை இனி நோக்குவோம். இவ்வகையில் முதலாவதாகக் கூறத் தக்கது சித்திர முறையாகும். இம்முறையில் கம்பன் கருத்துக்களை நயம்படச் சித்திரித்துக் காட்டுவதே முக்கிய நோக்கமாகும். இதில் காலக்ஷேப முறையும் நடையும் ஓரளவு பின்பற்றப்படுகின்றன. நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டுவது ஒன்றுண்டு. இராமாயணத்தைக் கேவலம், கதைப் பொருளாகக் கருதாது, கதையமைப்பிலும், கதையைச் சொல்லும் கவிஞனின் கவித்துவ ஆற்றலிலும் நம் மனத்தை இம்முறை ஈடுபடுத்துகின்றது. இலக்கியம் என்ற தனியுணர்ச்சி இம்முறையிலே நன்கு தோன்றுகிறது.

ரஸிக முறை

இம்முறையை அடுத்துக் கூறத்தக்கது ரஸிக முறையாகும். இராமாயணச் செய்யுட்களை ஓசை, தாளம், அழுத்தம், அமைப்பு முதலியவற்றின் மூலமாய்ப் பலரும் ரஸிக்கும்படியாகச் செய்வதே இம்முறையின் நோக்கம். கதை நிகழ்ச்சிகளைக் காட்டிலும், தமிழ்ச் செய்யுட்களை எடுத்து, அவற்றின் நயங்களையே இம் முறை புலப்படுத்திச் செல்லும். தனிச் செய்யுட்களுக்கு ஏற்ற அடி நிலம் (Background) அமைத்து அவற்றை விளக்குதலும் இம் முறையின் ஓர் முக்கிய இயல்பாகும். ஓசை, தாளம், அழுத்தம், அமைப்பு, பொருத்தம் முதலியன தாம் கருதும் முறையில் ஒரு செய்யுளிலே அமையவில்லை என்று தோன்றினால், அச்செய்யுள் தம் கருத்துப்படி திருத்தம் பெறவேண்டும் என்ற கொள்கையும் இம்முறையைக் கையாளுபவர்களுக்கு உண்டு. நாணய பரிசோதகன் ஒரு நாணயத்தைச் சுண்டிப் பார்த்து ஓசையின் தன்மையால், அது போலியாதலையும் அல்லாமையையும் அறிதல்போல, செய்யுட்களின் ஓசையால் அவை ஆசிரியனது வாக்குத்தானா என்பதை அறிய முடியும் என்பர். அவனது வாக்கன்று எனத் தாம் கருதுவனவற்றை நீக்கிவிடுதலும் இவர் களுக்கு உடன்பாடு. அச்சுப் பாடங்கள், ஏட்டுப் பாடங்கள், ஏட்டுப் பரிசோதனை முதலிய யாவும் இவர்களுக்கு ஒரு பொருட் டல்ல. இலக்கிய நயம், கவிதை நயம் இவைகளின் ஓர் அம்சமே இசை, தாளம் முதலியன ஆகும் என்பதையும், ஆசிரியனது செய்யுட்கள் எல்லா இடங்களிலும் ஒரு படித்ததாகவே இருக்க மாட்டா என்பதையும் இவர்கள் புறக்கணித்துவிடுகின்றனர். அன்றியும் நாணய பரிசோதனை முறையில் தவறுகள் நேர்வதற்கு இடமுண்டு என்பதையும் இவர்கள் கருதவில்லை. என்றாலும், செய்யுளின் நயத்தை உணர்வதற்கு இது ஒரு சிரிய முயற்சியாகும்.

உளநூல் முறை

இம்முறையை அடுத்து நாம் நோக்கவேண்டுவது உளநூல் முறை. இராமாயணத்தைப் பலமுறை கற்று, அதில் அமைந்துள்ள பாத்திரங்களின் உண்மை யியல்புகளை உணர்ந்து அவ்வியல்பு களுக்குத் தக்கபடியும், சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடியும், பிற சூழ்நிலைகளுக்குத் தக்கபடியும் செய்யுட்களும் கதை நிகழ்ச்சி களும் அமைந்திருத்தலைக் காட்டுவதே இம்முறையின் முக்கிய நோக்கமாகும். பாத்திரங்களின் உண்மையியல்பு வெளிப்படும் வாயில்களே கதை நிகழ்ச்சிகளும் சந்தர்ப்பங்களும், மேலை நாடுகளில் பெரிதும் ஆராயப்பட்டு வரும் உளநூல் - உணர்ச்சி

இம்முறைக்கு இன்றியமையாதது. இம்முறை இலக்கிய நயத்தை உணர்த்துவதில் மிக முக்கியமான ஓர் அம்சம் என்பது சொல்லாமலே விளங்கும்.

காவிய அமைப்பின் சிறப்பைப் புலப்படுத்துவது சிற்ப முறையாகும். ஓர் அழகிய மாடத்தில் அதன் பல பகுதிகளும் பொருத்தமுற எவ்வாறெல்லாம் அமைக்கப்படுமோ, அதைப் போல, கதையின் பல பகுதிகளும், ஒருமை நயமும் வேற்றுமை நயமும் தோன்றத் தக்கவாறு ஒன்றோடொன்று பொருத்தமுற்று முழுக் கதைக்கும் தகுந்த உறுப்புக்களாக அமைந்து, உறுப்பழகு நிரம்பி முடிதல் வேண்டும் என்று இம்முறை உணர்த்துகிறது. நூல் முழுவதையும் ஒரே பார்வையில் நோக்கி அதன் பல பகுதிகளின் தகுதியையும் பொருத்தத்தையும் உணர்ந்து கதையின் ஒருமை நோக்கத்திற்கு இயையக் கதை அமைந்திருப்பதை இம்முறை தெரிவிக்கின்றது. இம்முறையும் இலக்கியத்தை உணருவதற்குப் பயன்படுவதேயாகும்.

பொருள்கோள் முறை

கடைசியாக, பொருள்கோள் முறையைக் கூறலாம். இதில் சொல்லின் ஆட்சியும், கருத்தின் ஒற்றுமையும் முன் நூல்களிலும் சமகால நூல்களிலும், இராமாயணத்தில் பிற இடங்களிலும் வந்துள்ளனவற்றைக் கவனித்துச் செய்யுட்களுக்குப் பொருள் கொள்ளவேண்டும் என்று இம்முறை வற்புறுத்தும். பாட பேதங்களில் இம்முறை மிகுதியும் கவனம் செலுத்தும். இம்முறையில் பாட நிச்சயம் செய்தல் அவசியமாகும். இது கம்பனது காவிய உலகு எவ்வாறு உள்ளது எனத் துணிய முயலும், கம்பனது கவித்துவச் சிறப்புக்கள் பலவற்றையும் புலப்படுத்துதலும் இம் முறையின் ஓர் அம்சமாகும்.

இங்ஙனமாகப் பலவேறு முறைகளைப் பின்பற்றி இராமாயணம் நமது நாட்டில் கற்கப்பட்டு வருகிறது. இவற்றுள் சிறந்த முறைகள் அனைத்தையும் மேற்கொண்டு இராமாயணம் ஓர் இலக்கியம் என்பதை நன்குணர்ந்து, கம்பனது கவித்துவச் சிறப்பைக் காணுதல் தமிழ் மக்களது கடமையாகும். பேரிலக்கியங்களைக் கற்கும் முறைகள் மேற்கூறியவற்றால் ஒருவாறு புலனாகும்,

13. இராமாயணப் பதிப்பு முயற்சிகள்

சென்ற முப்பது ஆண்டுகளாகக் கம்ப ராமாயணப் பதிப்புப் பற்றிப் பெரு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மூல பாடத்தை நிர்ணயித்துச் சுத்தப் பதிப்பு வெளியிடும் முயற்சி அவற்றுள் ஒன்று. இது பலராலும் மேற்கொள்ளப்பட்டு முடிவெய்தாது நிற்கின்றது. தற்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரும், சென்னைக் கலாக்ஷேத்திர நிர்வாகிகளும் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இது நன்கு முற்றுப் பெற வேண்டுமாயின், பல பிரதேசத்துப் பிரதிகளையும் தக்க முறையில் ஒப்பிடுதல் வேண்டும். மூலபாட நிர்ணயத்திற்குரிய நியமங்களை அடிகோலிக்கொள்ள வேண்டும். கம்ப ராமாயணத்தையும் பூர்வ இலக்கியங்களையும் நன்கு கற்றுணர்ந்த சிலரேனும் ஒரு கலைக் கூடத்தில் ஒருங்கு கூடியிருந்து ஆராய்தல் வேண்டும். பதிப்பு முதலியன பற்றி மேல் நாட்டினர் கையாண்டுள்ள நெறிகளை நன்குணர்ந்தவர்களே இவ்வாராய்ச்சியில் தலையிடுதற்குரியர். ஆராய்ச்சி செய்வோரும் பொறுப்புணர்ச்சியோடுஇவ்வேலையில் முனைதல் வேண்டும். முயற்சி மேன்மேலும் நிகழ நிகழ, புதுப்புது நியமங்களைக் கைக்கொள்ள வேண்டிய தாயுமிருக்கும். இங்ஙனமாகப் பல ஆண்டுகள் ஒரே சிந்தனையாய் உழைத்து வந்தால்தான் இம்மூலபாட நிர்ணயப் பதிப்பு முற்றுப் பெறுவதாம். இதற்குரிய பொருட் செலவும், துணையாளருதவியும், கால அளவையும் எத்துணையாக வேண்டப்படும் என்பதை நாமே ஊகித்துக் கொள்ளலாம். இம்முயற்சியில் நாம் போராடி வெற்றி கொள்ளுதல் அவசியமே. ஆனால், இடையூறுகளும் மிகப்பல,

இவற்றுள் ஒரு சிலவற்றை நண்பர் சொ. முருகப்பா அவர்கள் 'கம்பர் காவியம் ; அதன் நிலை விளக்கம்' என்ற நூலில் ஆராய்ந்துள்ளார்கள். அவர்களது முடிவு இவ்வகை ஆராய்ச்சிப் பதிப்பு

---

* சொ. முருகப்பாவின் பாலகாண்டப் பதிப்பு ''இராம காதைக்கு அணிந்துரையாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

என்றேனும் வெளிவருமா என்ற மலைவுதான். வியாச பாரதப் பதிப்பிற்குப் பூனா நகரத்தில் செய்து வந்துள்ள முயற்சியை நோக்கினால், இம்மலைவிற்கு அவசியமில்லை என்பது காணலாம்,

அடுத்தபடியாக நாம் கருதக்கூடியது யாது? இப்போதுள்ள அச்சுப் பிரதிகளை எடுத்துக்கொண்டு, அவற்றோடு இரண்டொரு ஏட்டுப் பிரதிகளையும் உடன் வைத்து ஒப்புநோக்கிப் பிழைகளை நீக்கி, ஒருவாறு சுத்தஞ் செய்து ஒரு பதிப்பு வெளியிடுதலாகும். இது தமிழ் மக்கள் பெரும்பாலார்க்கு ஒருவாறு திருப்தி தரலாம். ஆனால், இடைச்செருகல் என்று மிகத் தெளிவாய் விளங்கும் பகுதிகளும் இதில் இடம் பெற்றுவிடும். எனினும் பிழை பொதிந்துள்ள தற்காலப் பதிப்புக்களைவிட, இது கொள்ளத் தக்கதாதல் வெளிப்படை. இது போன்ற பதிப்புக்கூட, இன்னும் வெளிவரவில்லை. பலர் பதிப்பித்ததாக வெளிவந்துள்ள பிரதிகளின் தலைப்புப் பக்கத்தில் 'பல தேசத்துமுள்ள பிரதி ரூபங்களைப் பரிசோதித்துப் பிழையறப் பதிப்பித்து' என்று காணப்படுகிறதேயன்றி உண்மையில் அவ்வாறு பதிப்பிக்கப் பெறவில்லை. பிழைகள் மிகுதியாய்ப் பல்கியதுதான் இவ்வுழைப்பின் பயன்.

அவசர – ராமாயணம்

இதனை அடுத்துச் செய்யக்கூடிய முயற்சி இராமாயணச் சுருக்கம் பற்றியதாகும். என்னிடமுள்ள 'அவசர-ராமாயணம்' என்ற ஏட்டுப் பிரதி இந்நெறியைப் பின்பற்றியதே. இந்நெறியில் அச்சுப் பிரதி வெளிவந்தது 1838-இல் ஆம். 'இது வித்தியாசாலைகளின் உபயோகத்துக்காகப் பிழையறப் பரிசோதிப்பித்துச் சென்னை ராஜதானிப் பாடசாலைப் புத்தக சங்கத்தாரது கருத்துக்கிணங்கப் படலக் கதைகளின் சுருக்கத்துடன் பதிப்பிக்கப் பட்டது. பாலகாண்டத்தில் காணும் 1405 செய்யுட்களில் 1171 செய்யுட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.' இச்சுருக்க நெறியைப் பின்பற்றித் தோன்றியது வ. வெ. சு. ஐயரவர்களது பதிப்பு.

சுருக்க நெறியிலே நாம் கையாளுதற்குரிய நியமங்கள் சிலவற்றை இங்கே ஞாபகப்படுத்திக்கொள்ளலாம்.

1. கதை தொடர்புற அமைதல்.

2. முக்கிய நிகழ்ச்சிகள் அனைத்தும் அவற்றுக்குரிய பூர்வாங்கத்துடன் காணப்படுதல்.

3. கதாபாத்திரங்களின் தனிச் சிறப்பு விளங்குதல்.

4. நூலின் அமைப்பு, பெருமை, இதிகாசம் அல்லது பெருங்காப்பியத்தின் சிறப்பியல்புகள் முதலியன நன்கு புலப்படுதல்.

5. சுவையுடைய கவிதைகள் அனைத்தும் உளவாதல்,

இவற்றையும் இவை போன்ற பிற நியமங்களையும் இயன்ற வரை தழுவிச் சுருக்கம் அமைதல் நலமாகும். கம்ப ராமாயணம் பற்றிய அளவில், அது ஒரு பேரிதிகாசம் என்பதை நாம் மனங் கொள்ளவேண்டும்: கிளைக்கதைகள் வருதல் இதிகாசத்துக்கோர் இலக்கணமாகும். எவ்வகையான கிளைக் கதைகளைச் சுருக்கத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டுமென்பது பற்றியும் கலையுணர்ச்சியோடு ஆராய்ந்து. கொள்ளத் தக்கன கொள்ளப்படுதல் வேண்டும்.

இதிகாசத்தின் மற்றோரிலக்கணம் அதில் வரும் தலைமைக் கதை பரம்பரைக் கேள்வி வாயிலாகவும் பிறவாறாகவும் ஒரு நாட்டிலுள்ளார் அனைவர்க்கும் தெரிந்தொன்றாயிருக்கும். இராம காதை அவ்வாறுள்ள தொன்றல்லவா? எனவே, சாதாரண 'நாவல்'களில் அடுத்து வரும் நிகழ்ச்சி யாது யாதென அறிவதற்கு அவாவி நிற்கும் மனவிரைவு இதிகாசம் பற்றிய அளவில் தோன்றுவதில்லை. கதையைச் சாவகாசமாய்க் கவிஞன் கூறுவான். சில இடங்களில் விரைந்து செல்வான். சில இடங்களில் உளங் கூர்ந்து அனுபவித்து நிற்பான். சில இடங்களில் தவழ்ந்து சென்று அயற் காட்சிகளை கனாக் கண் முன் நிறுத்தி மகிழ்ந்து தோன்றுவான். கவிதை வளமும் கதை வளமும் நிரம்பிச் செல்லும்போது, கவிதையின் போக்கு நின்றுவிட்டதோ என்றுகூட நாம் கருதிவிடுவோம். இவ்வாறெல்லாம் செல்லும் கதியைத்தான்.

சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி

எனக் கம்பன் உணர்த்தினான்.

சித்திர ராமாயணம்

கதை இங்ஙனம் செல்லு முறையில் கம்பனது மேதா விலாசம் தோன்றவில்லை என்று எண்ணுதல் இயல்புதானே!

நூலின் விரிவும் மிக்க மலைவு உண்டு பண்ணுமல்லவா? எனவே, ஒரு சில அறிஞர்கள் ஒவ்வொரு பகுதியிலும் சுவையும் அழகும் உடையனவாகத் தாம் கருதும் செய்யுட்களைத் தெரிந்தெடுத்து, தொடர்பிற்கு வேண்டிக் கதைப் பொருளைத் தமது சொந்த வசன நடையில் அமைத்துப் பதிப்புக்கள் வெளியிடலாயினர். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வெளியிட்டுள்ள கம்ப ராமாயண இன் கவித்திரட்டு, ஆனந்த விகடனில் எனது நண்பர் பி. ஸ்ரீ. ஆச்சாரியா எழுதி வரும் சித்திர - ராமாயணம் முதலியன இந்நெறியைப் பின்பற்றி எழுந்தன. ஆனால், கம்பனது பேராற்றலிற் பல அம்சங்கள் இவ்வகை உரையிடையிட்ட சுருக்கங்களில் காணப்படுதலில்லை. இதை யாவரும் எளிதில் உணரலாம்.

டி. கே. சி. பதிப்பு

மேல் விவரித்த மூல நிர்ணயப் பதிப்பு, சுத்தப் பதிப்பு, சுருக்கப் பதிப்பு, உரையிடையிட்ட சுருக்கப் பதிப்பு என்பன எல்லாம் ஒரு புறம் இருக்க, வேறொரு பதிப்பு முயற்சி நமது நாட்டில் நடைபெற்று வருகிறது. இம்முயற்சியை மேற்கொண்டவர்கள் எனது அருமை நண்பர் ரஸிகமணி டி. கே. சி. முதலியார்[1] அவர்கள். திரு. முதலியாரவர்கள் கம்பனை ஆழ்ந்து கற்றவர்கள்; செய்யுளோசையை நுனித்தறிவதில் பெருந்திறல் வாய்ந்தவர்கள்; கவிதை யின்ப நுகர்ச்சியில் எப்பொழுதும் திளைத்து வாழ்பவர்கள்; ஆங்கில இலக்கிய அறிவு நன்கு பெற்றுள்ளவர்கள்; செய்யுட் சுவையைப் பகிர்ந்தளிப்பதிலும், 'கற்றசெலக் சொள்வதிலும் பேராற்றல் படைத்தவர்கள்; நாணய பரிசோதகனைப் போல ஓசையின் தன்மை கொண்டே 'இது கம்பன் பாட்டு, இது கம்பன் பாட்டு அல்ல' என்று துணிதலில் பெருந் தெளிவுள்ளவர்கள்.

இவர்கள் தங்கள் இயற்கையான அறிவாற்றலாலும், கலையுணர்ச்சியாலும் இப்பொழுதுள்ள இராமாயணப் பதிப்பென்னும் குப்பையிலே மறைந்து கிடக்கும் நன்மணிகளைப் பொறுக்கியெடுத்துக் கோக்க முயன்று வருகிறார்கள். இதனைத் 'தெரிவுப் பதிப்பு முயற்சி' என்றலே தக்கது. பாலகாண்டமும் அயோத்தியா காண்டமும் ஆரணிய காண்டமும் இப்பொழுது வெளி

1. திரு. முதலியாரவர்கள் 16-2-1954-இல் மறைந்து விட்டது பெரிதும் வருந்தத்தக்கது.

வந்துள்ளன. பாலகாண்டத்தில் இவர்கள் பொறுக்கி யெடுத்துள்ளவை, 167 கவிதைகளே. தற்காலப் பதிப்புக்களிலுள்ள செய்யுட்களில் எட்டில் ஏழு பங்கிற்கு மேல் கம்பனது கவிதைகள் அல்லவென முதலியாரவர்களால் நீக்கப்பட்டுள்ளன. இப்பதிப்பில் தொடர்ச்சியென்பது இருக்கமுடியாது. 'பாலகாண்டக் கதை பற்றிக் கம்பன் பாடிய மற்றைப் பாடல்களெல்லாம் அழிவெய்தி விட்டன; இவற்றிற்குப் பதிலாக இப்போது காணப்படுவன அனைத்தும் இடைச் செருகல்கள்' என்பது திரு. முதலியாரவர்கள் கருத்து. இவ்வாறு கூறிய அளவில், இவர்களது முயற்சியை முற்றக் கூறியதாகாது. தெரிவுச் செய்யுட்களில் பல இவர்களது உயரிய கவிதை-லட்சியத்திற்கு ஒத்தொழுகவில்லை. இவற்றைச் செம்மையாக்கி, இவர்கள் கருத்துப்படி கம்பன் பாடல்களாக அமைக்கும் பொறுப்பும் முதலியாரவர்களைச் சார்ந்துவிட்டது. ஆகவே, அங்கங்கே திருத்தம் செய்யவேண்டும் அவசியம் ஏற்பட்டது. இவர்கள் வெளியிட்டுள்ள பாலகாண்டப் பதிப்பு முதலியன இவ்வாறு திருத்தப்பட்டவையே. இவ்வகைப் பதிப்பினைத் 'தெரிவுத் திருத்தப் பதிப்பு' என்று நாம் கூறலாம். ஆனால், இவர்கள் 'உண்மை மூலபாடப் பதிப்பு' என்பார்கள்.

திரு டி. கே. சி. அவர்களது நூதன ஆராய்ச்சி நெறியிலே செல்லாது, பழைய நெறியொன்றிலே செல்வது அன்பர் சொ. முருகப்பா அவர்களது பாலகாண்டப் பதிப்பு. இவர்கள் நீண்டகாலமாகத் தமிழ்ச் சமூதாயத்திற்கும், தமிழுக்கும் தொண்டு புரிந்துவருபவர்கள்.

கம்பராமாயணப் பதிப்பு முயற்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள். இக்காவியத்தின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை விளக்கிச் சில மாதங்கட்கு முன் ஒரு நூலும் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இதனால் பதிப்பு முறை பற்றி நன்கு சிந்தித்துள்ளமை வெளியாகின்றது. எனவே இவர்களது பதிப்பு முயற்சியில் பல சிறந்த அம்சங்கள் காணப்படுதல் இயல்பே.

முதலாவது, தலைமைக் கதைத் தொடர்பு இடை முரியாமற் செல்லுகிறது. இதனால் தொடர்பு தெரிதற்குப் பதிப்பாளரது வசனப் பகுதி சிறிதும் வேண்டியதில்லை. பிற விஷயங்கள் எவ்வாறாயினும், கம்பன் இராமனது சரிதத்தை முற்ற எழுதியுள்ளான் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கதையின் தொடர்புக்குரிய செய்யுட்களெல்லாம் மறைந்துவிட்டன எனல் சம்பாவிதமன்று. ஆனால் இப்பதிப்பாளர் செய்ததுபோல்

திருவவதாரப் படலக் கதையை நீக்கலாமா என்று சிலர் கேட்கலாம். இப்பகுதியில் கவிதை வளமில்லை; கதையின் வளந்தான் உள்ளது. குலமுறை கிளத்து படலத்திலே அவதார வரலாறு மிக அற்புதமாகக் கூறப்பட்டுள்ளது. இப்படலம் இருக்க, திருவவதாரப் படலத்தை நீக்குதல் ஒருவகையில் தக்கதே எனத் தோன்றுகிறது. கிளைக் கதைகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிலும் கவிதை வளம் காணுதல் அரிது. பூக்கொய் படலம், உண்டாட்டுப் படலம் முதலியவற்றிலும் பல பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. இவையும் வேறொரு காரணத்தால் நீக்கத்தக்கனவே. அழகுணர்ச்சியில் விரஸம் தோன்றச் சிறிதும் இடங்கொடுக்கலாகாது.

கதையிலுள்ள முக்கிய நிகழ்ச்சிகள் எதுவும் இப் பதிப்பில் விடப்படவில்லை. இது நன்றாகக் கவனிக்கத்தக்கது இங்ஙனமே கதாபாத்திரங்களின் இயல்புகள் நன்கு விளங்கும் பகுதிகள் இப் பதிப்பில் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக, தசரதன் தனது முதற் புதல்வனாகிய இராமனிடத்தில் வைத்திருக்கும் பிரேமாதிசயத்தைக் கூறலாம். இன்னுமொன்று; சுவையுடைய கவிதைகள் பெரும்பாலும் இப்பதிப்பில் தரப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் நோக்கும்போது, இந்தப் பதிப்பு இராமாயணச் சுருக்கமேயாகுமெனத் தடையின்றிக் கூறலாம்.

முருகப்பா பதிப்பு

பாலகாண்டத்தில், இப்பதிப்பிற்காணும் செய்யுட்களை மாத்திரந்தானா கம்பன் இயற்றினான் என்ற சர்ச்சை இங்கு அவசியமே இல்லை. முருகப்பா அவர்கள் ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கியிருக்கிறார்கள். எதன் பொருட்டு என்றால், ஏதேனும் ஒரு சிறந்த பாடத்தைத் தேர்ந்தெடுப்பதன் பொருட்டே. இவர்கள் தாமே கவிதைகளைத் திருத்திவிடவில்லை என்பதும் நாம் போற்றிக்கூறவேண்டும் அம்சங்களில் ஒன்றாகும்.

இப்பதிப்பில் இராமாயணத்தின் பெயர் 'இராம காதை' எனக் கொடுக்கப்பட்டுள்ளது. கம்பன் இட்ட பெயர் எதுவாயிருப்பினும், இப்பெயர் சுருக்கமாகவும், விளக்கமாகவும் கம்பன்

தன் நூலினுள் ஆண்டுள்ளதாகவும் (செய்யுள் 2) காண்கின்றது. இதனைப் பதிப்பாசிரியர் நூற்பெயராகக் கொடுத்தது பொருத்த முடையதே.

இச்சுருக்கத்தைச் சந்தி பிரித்துப் பதிப்பித்திருக்கும் முறையும், பலரும் கற்று அனுபவிக்கவேண்டு மென்ற தனிப் பெரு நோக்கத்துடன் இயற்றிய உரையும் சிறப்பாகக் கூறத்தக்க அம்சங்களாம். ''கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்'' (126) என்பதன் உரையில் 'இந்தப் பொருளுக்கெல்லாம் இடங் கிடையாது' என்று எழுதுகின்றார்கள். இந்த மனப்பான்மையே தற்கால உரைகாரர் மேற்கொள்ளத்தக்கது. அதிவியாக்கியானம் அதி விருஷ்டியைப் போன்றது; இரண்டும் கேடுபயப்பனவே யாகும். கேட்போர் வியப்புக் கடலில் அமிழ்ந்து கரையேறா வண்ணம் இராமாயணப் பிரசங்கிகள் விரித்துச் சொல்லும் அதிவிநோத வியாக்கியானங்களெல்லாம் இலக்கியச் சுவை நுகர்ச்சியில் விஷமென்றே கருதத்தக்கது.

இங்ஙனமாகப் பல வகையிலும் இப்பதிப்புச் சிறந்து விளங்குகின்றது.

பின் இணைப்பு

KAMBAN AS EDITED BY T. K. C.

(Hindu: 14-2-'54)

Sri T. K. Chidambaranatha Mudaliar, the reputed Kamban scholar has brought out a second edition of the first two kandoms of Ramayanam with introduction, notes and appendix. His first edition appeared in 1942.

For over thirty years, Mr T K C (as he is popularly known) has been devoting his time to a study of Kamban and more than anybody else, he has been responsible for popularising Kamban among the cultured higher circles of our society. His discourses are always conducted in easy colloquial style, with a charm all its own. His expository power is great. His mind is essentially poetic and his approach to poetry, is, in the main, artistic. He has a theory of poetry (Introd. VII-XXVIII) which he elaborates with due emphasis and illustrates amply from Tamil poems. He possesses a remarkable sense of rhythm. with such unique equipment, Mr. T. K C. began to work at the text of Kamban. He easily found out that several stanzas in the available editions did not come up to the level of Kamban's art and genius Hence he attempted the great task of excision of such spurious stanzas and, of discovery of the genuine Kamban Out of several thousands, he could vouch for the genuineness of only a few hundreds. For instances, of the 1420 stanzas of Balakandam, he could at first count only 169 stanzas undoubtedly ascribable to Kamban He had his results tested in the presence of sympathetic friends who sat enthralled by the charm of his exposition. He felt assured that he could, with unerring insight, distinguish the genuine from the spurious stanzas so abundant in Kamban's great Kavya.

He further continued his researches into genuine Kamban and decided, in the edition now before the public, to omit a couple of stanzas from those of his former edition. So in the Balakandam only 167 stanzas have survived Mr. T K C.'s acid test. He does not mince matters and remarks with perfect candour that 'the stanzas of text herein presented are the only genuine utterances of Kamban in the kanda. They must not be taken as a string of stanzas selected from a bigger text The rest of the stanzas (1253) are all interpolations and being inappropriate in every respect and altogether lifeless, they are deliberately omitted' (Introd. P. XVII). He justifies this wholesale omission by stating that a major portion of the genuine text had fallen a prey to accidents and was destroyed (Introd. P. XV). According to this view, there must be a considerable number of gaps even in the narration of the Ramayanam story and the question would naturally arise whether Kamban ever wrote his great kavya from beginning to end. As if in reply to this, he states further that 'later poets have supplied the deficiency by interpolations and additions which have completely swamped the original' This is quite a novel position and literary criticism would put Mr. T K. C. to the strictest proof of everyone of his assumptions and statements. Vague generalities, ipse dixits, dictatorial pronouncements and intuitive perceptions are entirely out of place in any scientific study, textual criticism not excluded. Each omission of stanzas, incidents and episodes must be separately taken up and examined critically. The nature of the Epic poem must be constantly borne in mind. So long as this procedure is not adopted, we are compelled to hold that Mr. T. K. C.'s conclusion is not valid. To judge of Kamban without his Ramayanam is something inconceivable.

Even of these 167 stanzas, as many as 75 are found corrupt and do not, according to Mr. T K. C., come up to the level of Kamban's poetic genius. These have been corrected by him without any manuscript authority and

made worthy of this great poet. Most of these corrections are listed in the appendex. One of them may be instanced here. In st. 93 of Balakandam (T K.C.'s edition), the first line has been entirely altered without any textual authority and so also the last two metrical feet. To take such unwarrented liberties with the text and yet to claim that it is genuine Kamban is past understanding. By the way, the third and fourth feet of tha first line betray a false rhythm wich can never be associated with any poet, let alone Kamban. If these corrections are meant to be emendations, then each instance of the proposed emendation must be shown to have some relation to the existing text and the editor has the further responsibility of tracing all the corruptions to their respective original, genuine texts, as he conceives them to be. Study and collation of manuscripts are the first requisites of any scientific textual criticism,

The chandam (tana tannana, etc,) given in the edition is a feature altogether new and is very original. What it is, Mr. T. K C. does not explain. Our ancient prosodists applied this term to quatrains, each line of which might have uniformly a minimum of 4 letters and a maximum of 26 letters, consonants always excluded. Such quatrains were not considered capable of being reduced to a pattern like tana, etc. Evidently this is not meant. Latterly the term was applied to rhyme-patterns where tana tana, etc., had relevancy. But its application was more exacting. The quantity and quality of the letters of each cir were required to correspond to the patttern, time-beat being a controlling factor, Perhaps Mr. T. K. C. means this. If so, the term is a misapplication. It is applicable only in respect of rhymes such as we find in Arunagirinathar's Tiruppugal which is a classic example and has no application to Kamban's poem. It may be that Mr. T.K.C. includes in this term the rhythmic flow of verses. In that case, it totally ignores the fundamental distinction between rhyme and rhythm. Rhythm is the 'form which the poetic spirit seeks spontaneously to fashion for itself and as such, it perfects poetry by

providing it with its most natural and adequate means of expression. It adds greatly to the aesthetic pleasure which it is a chief function of poetry to afford.'. But it cannot be reduced to any pattern like tana tana etc. Chandam (rhyme) in Kamban's poetry—of course excepting initial rhymes — is simply non-existent. May be it is used in the loose sense of a 'mettu.' Whatever is meant by 'chandam', it becomes unnecessary when the stanzas are properly scanned. Not content with providing this misunderstood and misapplied 'chandam', to the various metres of the work, most of the stanzas are so scanned as to make the last syllabic instant hang apart, as if it does duty for a cir. The introduction to the edition clearly mentions cir (metrical foot) as an important element of a verse-line (p. IX) and yet its nature seems to have been somewhat overlooked.

Even in the domain of the chief divisions of Ramayana, considerable inroad has been made by T.K C. Several 'padalams' are omitted, e. g., Ahalikai-padalam, Parasurama-p-padalam. A few padalams are clubbed together and given new titles, e. g., Arrup-padalam and Nattu-p-padalam are included in Kosala-Nattin-valam. Independednt padalams are subsumed under a single padalam, e, g,. Ulaviyar-padalam and Kolam-kan-padalam are given under Elucchi-p-padalam. Stanzas are transferred from one padalam to another. This occurs mainly in suppressed padalams, e. g., St. 1 of Ulaviyar padalam is given under Elucchipadalam (St, 141). Consequently the order of events undergoes changes.

The titles of sub-headings given by the editor smack very much of a propagandist's fare. Kandippargala pulavargal (p. 2), Itho varukirathu vel! (p. 32), atata! thuyar-ali-t-thuyinrane (p. 76), Janakan Jaagaikku elugiran (p. 129) and Dasaratha mannanukku Jey! (p. 227) amply prove this.

The introduction contains many statements which are worthy of serious consideration. But some of them are no more than the editor's crotchets. Such for instance

are his slighting remarks about the inferiority of English poetry in general. His sarcastic reference to our University men is again of this nature. He has scant respect for historical investigations. It may be noted in this connection that he has accpted Seka 807, Panguni Hasta, as the date of arangerram of Kamba Ramayana. When was the Saka era introduced in the Tamil country by its rulers? How long after did it come into general vogue? When was the term arangerram (originally applied to Natya inauguration) applied to the publication of literary works? These questions do not trouble him in the least. The fact that the verse which gives this date is not found in the earliest Kamban ms. (Kollam 753 A. D. 1578) now available has no significance for him. That this date would make Kamban chronologically earlier than the Alvars (e. g. Thirumangai, Nammalvar), to some of whom he is not indebted for ideas, expression and incidents is not a matter of any importance to him. The truth is that Kamban lived in the latter half of 12th century, as he mentions Tyaga-vinodan, the title of his contemporary king Kulottunga III. There is also an old stanza in support of this date. This date accords well with almost everything known of Kamban and handed down to us by tradition.

But tradition, even though recorded, has no value for Mr. T. K. C, execept as providing a basis for his poetic fancy to weave stories about Kamban. For instance, the stanza 'Ullangal' at p XXXI is a composition of Kalamegham about Amur-kalappalan and it is recoreed as such by Padikkasup pulavar in his Thondaimandala Satakam written about A. D. 1710 (see Peruntogai, st. 1239). Mr. T. K. C ascribes this quietly to Kamban and narrates a story, all a creation of his own fancy. Of course he tampers with the original. Such pranks have become a habit with him. The last stanza 'Inrallo Kamban iranta nal' (P. XXXVII) is a capital instance in this line. He quietly corrects the original 'Inro nam' into 'Inrallo' forgetting the whole history of 'allo'. This word is a modern colloquial from of the word 'anro' and it could not have been used by any poet of Kamban's time. In

fact. it is a prochronism. Even at the present day, it does not find a place in literrary usage. Yet Mr. T. K. C. claims (P. XXXVIIF. N.) that the stanza (with his alteration) is worthy of Kamban and could have been composed either by him or by his resurrected self or by a great poet of Kamban's order and genius!

Such failings apart, Mr. T. K C. is at his prefatory remarks and explanatory notes. His easy colloquial style is charming and his explanations are almost always clear and to the point. He emphasises the emotional value of Kamban's utterances and we are grateful to him for drawing our attetion to this aspect which is generally ignored by our commentators, A few melodramatic features and inanities such as we find in his explanation of the musical naivalam (p. 135) could have been avoided. The first line index as given by T. K. C. is not easily serviceable and a person requires some practice before using this.

Mr T. K. C.'s Ayodhya Kandam also follows the same lines as his Balakandam. However, he is more generous here and admits 550. stanzas as genuie Kamban, out of a total of 1,210. The usual but incorrect name 'Palliyadaippadalam' is retained though literary usage favours only Pallipadaippadalam.

On the whole Mr. T K. C.'s Ramayanam is a welcome addition. It indicates to us a poetic approach to Kamban, which is at once easy and pleasant. It gives us a text artistically printed and pleasing to the eyes. It shows us the several pitfalls in the way of reconstructing a reliable Kamban text. It makes us realise that aesthetic enjoyment of poetry must rest on a sure foundation of critical scholarship. And finally, it impresses on us the urgent necessity of bringing out a Kamban edition conceived in a scientific spirit and based on a systematic study and collation of all available manuscripts.

S. Vaiyapuri Pillai

THE AGE OF KAMBAN–A REJOINDER

(Reproduced from the Indian Express with slight modifications)

Some months back I reviewed in the columns of the Hindu (dated 14-2'54) an edition of Kamban's Bala and the Ayodhya Kandams with introduction, notes etc., by my late lamented friend Mr. T K. Chidambaranatha Mudaliar. In the course of the review, I criticised his opinion about the date of the poet and summed up briefly the several reasons which made totally unacceptable. These reasons had already been fully discussed by me in my Tamil-Chudar Manigal (1952: Second Edition, pp. 111-133).

M. A. C. Paul Nadar of the Tuticorin Bar, leaving out the main points raised in my review, took up the above chronological question alone for consideration and wrote a review of my review entitled "The Age of Kamban" which appeared in the columns of the 'Indian Express' (Sept. 21, 1954). As its readers are likely fo.be misled, and as the matter itself is of great importance to the History of Tamil Literature, I am writing this rejoinder,

The point at issue is whether Kamban is to be ascribed to the Saka era 807 or later by about three centuries. The only ground for the former view is a stanza 'Enniya Sakattam' found as a taniyan in a lagre number of Kamban manuscripts; while several historical facts bear strong evidence for the later date. Responsible scholars, such as the late V, Kanakasabhi Pillai, M, Sree nivasa Iyengar and others held this favourite stanza as obviously spurious, and simply brushed it aside even without mentioning it. However the late Mahavidwan R, Raghava Iyengar thoroughly examined the position and came to the conclusion that the earlier Saka date 807 was untenable (Sen Tamil, Vol. 3). The late

Mr. T. Selvakesavaraya Mudaliar also confirmed this position by several other reasons. The world of scholars accepted the later date as settled. But occasionally discordant voices were heard, mainly from V. V. S Iyer and from T. K C. (to whom, according to Mr. Nadar, historic investigations lay outside the scope of his great work, and his followers. This fact and the desire to complete my series of studies on Kamban made me enter into the question de novo. I was able to add some further reasons strengthening the view of a later date for Kamban's great Kavya. I broadcast my conclusions from the A I R, Madras Station. Later, my views were embodied in a section on Kamban in my Tamil-Chudar Manigal (2nd edition 1952).

MANUSCRIPTS

In my review, I pointed out that a manuscript (dated Kollom 753) in my possession did not contain the stanza 'enniya-sakattam,' Mr. Nadar threw doubt even at the existence of this manuscript. He seems to be under the impression that the stanza is without exception found in all Kamban manuscripts now available. He could have easily verified my statement, and satisfied himself about its existence and the absence of the stanza. This direct method did not somehow appeal to him. He must have his own reasons not to have availed himself of this method Whatever they are, Mahavidwan R. Raghava Iyengar had pointed out that another stanza 'Avin-kodai-c cakarar-ayirattu-nurolittu'[1] was found in some manuscripts (Sen Tamil III, p. 53). This would show that in such manuscripts at least 'enniya Sakattam' was absent. When I referred to the former stanza, Mr. Nadar found fault with me

---

1. ஆவின் கொடைச் சகர ராயிரத்து நூறொழித்துத் தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு - மூவலூர்ச் சீரார் குணா தித்தன் சேயமையப் பாடினான் காரார் காகுத்தன் கதை.

that I had not given the stanza in full. But he had forgotten that it was a review that I wrote for an English Daily and that I could merely refer to the stanza in such a paper. Moreover In my Tamil-Chudar Manigal, it had been given in full and, as I said before, R. Raghava Iyengar quoted it fifty years ago in 'Sen Tamil'. As a student of Kamban and his chronology, Mr. Nadar could have known it. This stanza affirms that Kamban composed his great Kavya in Saka 1100.

SAKA ERA

About the saka date I set a series of queries, which if considered critically, would in no uncertain manner lead to a correct solution of the chronology. I had asked when was the Saka era introduced in the Tamil country by its rulers and how long after did it come into general vogue.

Mr. Nadar proclaimed that the era[2] began in 78 A. D. We are indeed greateful for this piece of information. But it should be noted that the era itself is not associated with the Sakas till more than five hundred years after its foundation (The Age of Imperial Unity, Bharatiya Vidya Bhavan. 1953) He has also given four instances where it occurs. One of these is a colophon in Loka-vibhaga, a Jaina treatise in Prakrit.

Of the other instances, the so-called Aivarmalai inscription alone is relevant. Its date is given as Saka 792. It Is one of the two earliest inscriptions[3] in Tamil,

---

2. The various views connected with the founder of the era and with the date when it began are all given listed in Appendix V of the History of Indian Literature, Vol. II, by M Winternitz. pp 611 to 614.

3. About the Saka date, Dr. Fleet says : "18 quote the Saka era; and of these 12 are in Kanarese, 4 in Telugu and only 2 in Tamil inscriptions. The Saka year 991 is is quoted in the date of a Tamil inscription of Virarajendra which does not admit of Verification." (EI, xiii p 261)

the other belonging to a Bana King (S I I III, No. 44) of Saka 810. The former inscription records 'the renewal' of the images of Parsva Bhatarar and Yakhsis at Tiruvayirai by one Santiviraguravar, the pupil of Gunaviraguravadigal' (The Pandyan Kingdom, K A N sastri, p. 95). From a study of these inscriptions, we are compelled to hold that the Jain were the first to introduce the exotic Saka era in the South. For they came originally from North India where this era was founded and spread gradually in the South with their great learning. The history of the Kaliyuga and of the Vikrama era of the Vedic Hindus may be here compared. The rulers of Kannada country where Jainism was predominant, adopted first this system of chronology in c. 600 A.D. About 800 A.D., the Aivarmalai inscription was recorded. A century atleast must have elapsed before it found favour with the Tamil Kings, and was introduced by them in their inscriptions. Most probably it came into general vogue about the end of 10th century A.D. Hence the stanza mentioning the Saka era 807 in Kamban mss. could have been only a later fabrication.

Attention may also be drawn to the fact that no Tamil literary work bearing Saka date is found in the 9th or 10th century AD. Even inscription bear only regnal years of Kings. With regard to Saka 1100, the date of the stanza discovered by Raghava Iyengar, no such objection could be taken. Inscription as well as literary work of the period quote this era.

ARANGERRAL

The spuriousness of the stanza containing Saka 807 is evident from other expressions also. The phrase arangerrutal was originally technical term and applied to the first performance of a danseuse in the august presence of a King and his assembly. The Silappadikaram has used it in this sense in Arangerru-kadai. It was never applied

in early days to any literary-exposition for the first time of a work by its author in a learned assembly either with the King presiding or without. References to Pattiyal works such as Pannirupattiyal (C. 12th century) Vacchananthi malai (C. 13th Century) and Navanitha-p-pattiyal (C. 14th century) will make this plain. These do not use the term 'Arangerrutal' in connection with the first exposition of any literary work. The prefatory stanzas of Chulamani, Chintamani etc. also bear evidence to this. Later on, the meaning of the term has been extended to the literary performance also. If in the printed editions of the above works the term is found, it is only as headings introduced by editor according to its modern usage. The authors themselves, till about 13th or 14th century did not use this term in its later sense. As the stanza 'enniya-sakattam' contains this term in this sense, it could have been only a fabrication of a late date.

This argument of mine was misunderstood by Mr. Nadar. Instead of showing instances from classics where the term has been applied to their first exposition in an assembly, he has replied that 'such a practice seems to be as old as Tolkappiyam, as is indicated in the introductory stanza. I never questioned this fact and my criticsm was all about the non-applicatian of the term 'arangerral' to such an exposition.

KAMBA-NADU

There is one other expression which has to be considered in this connection. It calls Kamban as Kambanadan. There has never been such a district as Kamba-Nadu known in the Tamil land. When the unrivalled genius of the poet became a recognisd fact and his great influence in spreading Vaishnava religion was felt more and more, his admirers began to add epithets to his name. His religious followers gave him the attribute of Alvar and styled him Kambanattalavan ; his secular followers

who admired only his poetic genius styled him as Kamba-nadan creating for him an imaginery nadu or district which he couid rule over. Some or these followers called him Kavi-c-Chakravarti. These attributes came to be applied in about the 16th century A. D. The earliest instance of "Kamba-nadan" occurs in a stanza of Arasakesari, the author of Raghuvamsam in Tamil. So most probably the stanza 'enniya-sakattam' was a fabrication of the 16th century.

VAISHNAVA ALVARS

I had argued at length, quoting parallels, that Kamban was indebted to Tirumangai and Nammalvar for ideas, expressions, and incidents and that therefore he must have flourished long after these Alvars. For this arguments of mine, Mr. Nadar says that there is nothing intrinsically wrong in holding that Kamban was born earlier than these Alvars. This statement is startling. The History of Tamil Literature and the history of Vaishnavism in the south are all against Mr. Nadar's view. I shall leave his reply at that.

TYAGA-VINODAN

'Tyaga-vinodan' occurs in Ramayanam (Maruttum-alai-p-padalam, st. 58). A certain town which went by the name of Tiraimoor during Vikrama Chola's reign was some decades later, re-named Tyaga-vinodan arrur and this change took place during the time of Kulottungo III who reigned from A D. 1178 to 1216 (Sen Tamil, I p. 119, 121; K A N Sastri's Cholas II, 115). This shows clearly that 'Tyaga-vinodan' was a title of a king and that he was none other than Kulottunga III. Following the king some of his officers added this title to their names. For instance 'Tyaga-vinoda muvenda velan' (M. E. R. 28 of 1927), 'Tyaga-vinoda Bhattan' (ibid. 169 of 1927) His feudatories assumed titles ending in Vinodan

such as 'Arungalai-vinodan' (Nannul, prefatory verse), 'Vira-vinodan' (Sen Tamil I, 117). The stanza where this title is found cannot be easily forged and interpolated. It requires a very intimate knowledge of Chola history, and there is no necessity also for forging it. It is found in all manuscripts without exception. The Saka 1100 in the stanza 'avinkodai-c-cakarar-ayirattu-nurolittu' exactly coincides with the beginning of the reign of Kulottunga III. By this fact, the genuineness of this taniyan also is amply proved. The traditional stories which connect Kulottunga and Kamban, some of them testified to by inscriptions, illustrative verses in the earliest commentary on Nannul (of Kulottunga's time) and by stray stanzas, are all, though not in their present from, confirmed to some extent by the stanza in Maruttumalai-p-padalam. If we assign Kamban to the latter half of 12th century and the beginning of 13th cent. (c 1150-1225) we may not be far from truth. For this definite conclusion, the above stanza (Maruttumalai 58) is of supreme importance and its historical value is unimpeachable.

The treatment of such a piece of evidence by Mr. Paul Nadar is characteristic. He says 'no theory can be based on the vague reference made in a stray stanza of dubious authenticity.' No comment is necessary.

3. KAMBAN

Kamban is far and away the greatest of the Tamil poets. Yet it is curious that Chola King of the time, a great patron of art and learning, did not give him the recognition that his merit deserved. His elder contemporary, Ottakkuttar was the Kavichakravartti, or poet-laureate of the Chola court and was the recipient of all its honours. According to tradition, he jealously guarded his position and influence and he kept down young aspirants to fame, Kamban included Neither with him nor with the king did Kamban find favour, for he was a Vaishnavaite, and Saivaism was the state religion. And those were not days of toleration. Not that Kamban was a fanatic. His humanity was too deep, his culture too wide, and his learning too profound to be disturbed by little religious differences. He preferred to live a quiet, simple life which he did in the company of a kindred spirit Sadaiappa Vallal, a noble of the time. It need not surprise us therefore that he did dot seek the limelight and the pomp of the king's court. But there seems to have been another and a deeper cause for the neglect by the literary circles. Kamban was not a blind follower of poetic tradition; he was a daring genius and an iconoclast. In his days, the current ideal of poetry scorned simplicity and naturalness while exalting sonorous artificiality. The prevalent taste was morbid, and had a weakness for mere tricks of verse, elaborate alliterations, and frequent internal rhymes. These were all abhorrent to Kamban. He made ever new experiments in metre and verse, and produced a harmony never achieved before. He set up in fact a new tradition, which began to find followers. Thus he exercised an adverse influence against the current notions of poetry. The poets of his age looked down upon this heresy, and taunted him with his humble birth.

We know very little about his early life. He belonged to the Uvaccha caste and was a native of Tiruvalundoor, in

Tanjore District. His father was one Adittan. Tradition weaves round him a good many stories and has given him a son called Ambikapati. But these accounts are of very doubtful authenticity. We need not enter into further details, for we are concerned here more with his work as a poet than anything else.

In spite of the unfavourable milieu noted above, his genius seems to have been recognised even by his contemporaries. In the commentary of Virasoliyam, for instance, we find it stated : கம்பனாரிடைப் பெருமையுளது (In Kamban indeed is greatness). The king's indifference and the animosity of his poet laureate could do nothing and Kamban's fame was an established fact as soon as his great Kavya was published.

Heterodox scholars like the commentator on Virasoliyam. and the great gatherings of people who had the rare privilege of listening to the poem from the poet's own mouth, spread his reputation The king had to take notice and our poet seems to have been invited to the court where he stayed for some time. But he was an exotic in his new surroundings and came back to the people and his old friends. His poem became increasingly popular; and everywhere he was hailed as a divinely inspired poet. The public conferred on him the title that the king denied So he became Kavi-chakravartti, the Emperor of Poets and, to this days, he alone of all the Tamil poets. is known by that glorious title And the more we study his poem, the more we realise how just the popular verdict is.

The subject that poet chose was one of the causes of the popularity of his great poem. The story of Rama is as old as our motherland. We cannot say when or where it had its origin. It is not the simple and original composition of one poet, Valmigi. This great sage tells us that

it was Narada who first narrated the story to him. So, it belongs to that type of ancient story which forms the basis of authentic epic or epic of growth. It must have existed as 'epic material' long, long prior to Valmiki's days and was, perhaps, fragmentary, scattered, loosely related, sometimes contradictory, each piece, of comparatively small size, with no intention beyond hearty narrative. It was a national heritage and the genius of Valmiki converted it into an epic

Even in the earliest times, this national story had spread throughout the length and breadth of our country. In Purananuru, and Ahananuru which belong to the earliest strata of extant Tamil literature and which may be ascribed to the early centuries of the Christian era, we find references to the Ramayana story. Later, there seems to have been a complete version of the Ramayana even in those days. It was in venba metre and a few verses of it have come down to us. Thus we see that the story of Rama had been exercising a potent influence in the Tamil land from the earliest times. Local legends too were absorbed into the main story. The mythological element in the original developed in course of time into a religious element and the hero of the story was conceived as an avatar. The Alvars had sung of the hero in their soul-stirring hymns. The pietistic school, which flourished in the eleventh century and later, embellished the story and expounded it in a vivid, conversational style.

At the beginning of the twelfth century, the Chola power was at its height, and an imperial state was realised for the first time in the history of the Tamils. It looked as though Kamban appeared just then to give artistic expression to this sovereign power.

It was through the great story of Rama, which had been developing through the ages to mighty proportions, that he sought this poetic expression. The danger he was courting would have dismayed a lesser poet. On the one

side, there was Valmiki's epic grand, majestic, melodious and simple. On the other, there was the great populace who were familiar with the theme in all its details, and who would constantly sit in judgment, and condemn him forthwith, If his poem failed in emotion or flagged in narration. And they were clearly the supreme judges, for epics in our country were primarily intended for public recitation.

Whoever thd judges, Kamban was all eager and dared the great task. How his poetic genius unfolded itself through the long panorama of incidents must be a matter of study for years. Kamban was no mere imitator of Valmiki. The plot is conceived anew in the light of changed ideals. The characters in the story are drawn with a power and inwardness rarely equalled. His poetic vision is so powerful that he seizes the very soul of a situation and makes his characters live through action and dialogue. Owing to this rare dramatic power, his poem has been called Kamba Natakam. Every incident passes through his iridescent imagination and is portrayed in a manner which grips our soul. He is a master of every kind of sentiment, and is equally at home in depicting love and war. There are altogether fourteen pitched battles described in the poem and each action stands out clearly individualised.

He was a close observer of life and we get glimpses of it all over his great work. He describes the court of two kings, viz, Dasaratha and Ravana. He portrays an ideal state in describing Dasaratha's country. He says Dasaratha ruled his kingdom with that amount of care and attention that a poor cultivator would bestow upon his one little piece of land.

எய்யென எழுபகை யெங்கும் இன்மையால்
மொய்பொரு தினவுறு முழவுத் தோளினான்
வய்யக முழுவதும் வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக் காத்து இனிது அரசு செய்கின்றான்.

And in describing Ravana's durbar, he gives us more than one picture of a tyrannous king's court where fear dwelt in all hearts. He says :

இன்னபோது இவ்வழி நோக்கும் என்பதை
உன்னலர் கரதலம் சுமந்த உச்சியர்
மின்னவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறைமுறை துறையிற் சுற்றவே.

Not knowing when their master's glance will fall on them, the Vidyadharas that surround his court hold up their hands in a fixt salute over their diademed hands.

Even if he speaks to his handmaidens, the mighty Siddhas gathered there, think that he is addressing them, Their heads bow down, their hands clasp each other and their hearts, shrink with fear ;

மங்கையர் திறத்தொரு மாற்றங் கூறினும்
தங்களை யாமெனத் தாழும் சென்னியர்
அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர்
சிங்கவேறு எனத்திறற் சித்தர் சேரவே.

Kamban's sense of humour is keen. He laughs at the very gods. And he makes Hanuman laugh at Ravana himself, who was far mightier than all the gods put together. Ravana makes inquiries of Hanuman concerning Vali, and receives the answer: "Have no fear! Vali has gone to heaven and will return no more ; yes, he and his tail are gone for ever!"

வன்துணை யாய வாலி வலியன்கொல் அரசின் வாழ்க்கை
நன்றுகொல் என்ன லோடும் நாயகன் தூதன் நக்கான்
அஞ்சலை யரக்க பார்விட்டு அந்தரம் அடைந்தான் அன்றே
வெஞ்சின வாலி மீளான் வாலும்போய் விளிந்தது அன்றே.

He has handled a vast variety of metrical forms with extraordinary skill, changing them to suit the themes. For rapid narration, he chooses metres which carry us on their wings quickly and pleasantly, as in Arruppadalam Surpanakha becomes Kamavalli and mining trip is thus described in lilting verse:

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சகமகள் வந்தாள்.

Her pride and her thirst for vengeance speak through her laments when she was disgraced :

நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியுமிது சிறிதன்றோ தேவரெதிர்
தலையெடுத்து விழியாமை சமைப்பதே தழலெடுத்தான்
மலையெடுத்த தனிமலையே யிவைகாண வாராயோ.

Mandodari laments thus on the death of Indrajit :

கலையினால் திங்க ளென்ன வளர்கின்ற காலத் தேயுன்
சிலையினால் அரியை வெல்லக் காண்பதோர் தவமும் செய்தேன்
தலையிலா ஆக்கை காண எத்தவஞ் செய்தேன் அந்தோ
நிலையிலா வாழ்வை இன்னும் நினைவனோ நினைவி லாதேன்

Ravana's seething anger towards Hanuman fulminates thus in quick spurts of fiery words :

உற்றக லாமுன்
கற்ற குரங்கைப்
பற்றுமி னென்றான்
முற்று முனிந்தான்.

Kamban's instinct for the right word, his suggestiveness, his concentrated style and the technique of his poetry are remarkable, He has a unique gift of phrasing, for cxample :

கல்லும் புல்லுங் கண்டுருகப் பெண் கனி நின்றாள்...
அறம் வளர்க்குங் கண்ணாளன்...
அல்லையாண் டமைந்த மேனி யழகன்...
கருணையங் கோயிலு ளிருந்த கண்ணனை...
இருட் கனியும் போல்பவன்...

I have done no more than indicate lines of approach to a study of Kamban's poetry. Judged by any standard, he is assuredly one of the world-poets; and his Ramayna remains a monumental wonder for all ages.

கம்பனுக்குத் திருந்திய பாடம்

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் மூத்த மகனார் திருமதி வை. சரோஜினி தம் தந்தையாரைப் பற்றி எழுதிய வையாபுரிப் பிள்ளை ''வாழ்க்கைக் குறிப்புக்கள்'' என்னும் நூலில் இடம் பெற்றுள்ள நண்பர்கள் பாராட்டு வரிசையில் திரு. பி. ஸ்ரீ. ஆச்சார்யா ''கம்பனைக் காண வழிகாட்டுபவர்'' என்றதொரு கட்டுரை வரைந்துள்ளார். அதில் அவர் பின் வருமாறு எழுதுகிறார்.

''மூலபாடத்தை நிச்சயிப்பதற்குப் பொருத்தமான நியதிகளை மேற்கொள்ளுவதும் அவசியமாகும். 'கம்பர் கவியின் உண்மையுருக் காண்டற்கு, அவர் எடுத்து ஆளும் சொற்களும், தொடர்களும், கருத்தும், பொருளும் ஆகியவற்றின் அமைதியையும், கவியின் நடை யமைதியையும் அவருடைய கலையறிவும் உலகியலறிவும் சமயக் கொள்கையும் அவர் காலத்திலும் அதற்கு முன்பும் வழங்கிய மரபுகளும் வழக்காறுகளும் ஆகிய குறிப்புகளையும் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்' என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் சுந்தரகாண்ட முதற்பகுதிக்குத் தாம் எழுதியுள்ள பதிப்புரையில் கூறியுள்ளார். ஆனால் இத்தகைய நியதிகளைக் கடைப்பிடித்தே இப்பதிப்பில் மூலபாடங்கள் துணியப்பட்டுள்ளன என்று முடிவு கட்டுவதற்கு இடமில்லை.

இயன்றவரையில் இத்தகைய நியதிகளைக் கடைப்பிடித்திருந்தால், அனுமன் சீதாபிராட்டியைக் காண்பதை வருணிக்கும் கம்பன் பாட்டு,

விரிமழைக் குலங்கிழித்
　　தொளிரு மின்னெனக்
கருநிறத் தரக்கியர்
　　குழுவிற் கண்டனன்,
குருநிறத் தொருதனிக்
　　கொண்ட லூழியான்
இருநிறத் துற்றளற்
　　கியைந்த காந்தத்தை !

என்ற வடிவில் அமைந்திருக்க முடியுமா ?

'இருநிறத்து—பெரிய மார்பின் கண்; உற்ற—பொருந்திய, எற்கு—ஒளிக்கு, காந்தம்—ஒருவகை மணி' என்றெல்லாம் உரையும் வரையப்பட்டுள்ளது. சுந்தர காண்டத்தின், இம் முத-

பகுதியில் 'மூந்நூற்றுக்குக் குறையாத பாடல்களுக்குத் திருந்திய பாடங்களும் புதிய உரையும் அமைந்திருத்தலை அறிஞர்கள் காணலாம்' என்று பதிப்புரை தெரிவிக்கிறது. இந்தப் பாட்டிலும் திருந்திய பாடமே அமைந்திருப்பதாக ஊகிக்கக் கூடுமல்லவா?

ஆனால், செய்யுளின் பிற்பகுதி முற்பாதிபோல் அவ்வளவு தெளிவாயிருக்கிறதா என்பதை நாம் முதன் முதல் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இருநிறத்(து) உற்றஎற்(கு)
இயைந்த காந்தத்தை

என்ற நடையமைதி இச் செய்யுளுக்குப் பொருந்துவதுதானா? இக்கவிதையின் இசையமைதிக்கு இசைந்திருக்கிறதா இந்த இறுதி அடி? பொருளை நோக்கும்போது 'எற்கு இயைந்த காந்தத்தை' என்று இருப்பது அனுமன் காட்சிக்குச் சிறப்புடையதாகுமா? 'எற்கு' என்பதற்கு 'எனக்கு' என்றும் பொருள் இருப்பதால் பக்தர் நெஞ்சு புண்படவும் கூடுமே!

''ஏறக்குறையச் சரியான பாடம் கலாக்ஷேத்திரப் பதிப்பில் காணப்படுகிறது :

விரிமழைக் குலங்கிழித்
தொளிரு மின்னெனக்
கருநிறத் தரக்கியர்
குழுவிற் கண்டனன்
குருநிறத் தொருதனிக்
கொண்ட லாமெனத்
திருவுறப் பொலியுமோர்
செல்வன் தேவியை

''பிற்பாதியின் சிதைந்த வடிவைத்தான் பல்கலைக் கழகப் பதிப்பில் காண்கிறோம்; பெரும்பாலும் திருந்திய மூல பாடத்தைக் கலாக்ஷேத்திரப் பதிப்பில் காண்கிறோம். 'திருவுற' என்பது மட்டும் 'திருவுரு' என்று ஸ்ரீ வையாபுரிப் பிள்ளை குறித்து வைத்திருக்கும் திருந்திய பாடத்தில் காணப்படுகிறது. இந்த முக்கியமான செய்யுளுக்குச் சரியான பாடத்தை முதல் முதல் கண்டு பிடித்துக் கூறியவர் திரு. வையாபுரிப் பிள்ளையே யாவர் என்பதை இவரது இலக்கிய நண்பர்கள் அறிவார்கள்.''

கம்பனுக்குச் சுத்தப் பதிப்பு முயற்சி

கம்பனுக்கு மூல பாடத்தை நிர்ணயித்துச் சுத்தப் பதிப்பு (A CRITICAL AND DEFINITIVE EDTTION) வெளியிட வேண்டுமென்று பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை பல ஆண்டுகளாகத் திட்டமிட்டு முயற்சி செய்து வந்தனர். இதன் பொருட்டு 77 கம்பராமாயண ஓலைச் சுவடிகளை[1] ஆழ்வார் திருநகரி முதலான இடங்களிலிருந்து தேடித் தொகுத்து வைத்திருந்தனர். பாட வேறுபாடுகளையும் குறித்து வைத்தனர். பல ஆண்டுகள் இப்பணி நடைபெற்றது. இந்த ஆராய்ச்சிப் பதிப்பிற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

முதலில் 'சக்தி' வை. கோவிந்தனுடன் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. இது நிறைவேறவில்லை[2] அடுத்தபடியாக பேராசிரியரின் கல்லூரித் தோழரும் நண்பருமான ஆர். கே. சண்முகம் செட்டியார் கம்பராமாயணப் பதிப்பிற்காக உதவ முன்வந்தார். அவர் பொது மக்களுக்குப் பயன்படக் கூடிய பதிப்பு போதுமானது, ஆராய்ச்சிப் பதிப்பு தேவையில்லை என்று கூறிப் பின் வாங்கிவிட்டதால் இம் முயற்சி கைவிடப்பட்டது. அதன் பிறகு 1950–ஆம் ஆண்டு காரைக்குடி கம்பன் கழகத்தின் செயலாளர் சா. கணேசன், கம்பன் கழகத்தின் ஆதரவில் ஆராய்ச்சிப் பதிப்புக்குப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையைப் பதிப்பாசிரியராகக் கொண்டு ஒரு திட்டம் தயாரித்தார். பல காரணங்களால் இதுவும் நிறைவேறவில்லை. இந்த வரலாற்றினைப் பின்வரும் கடிதங்கள் தெளிவுபடுத்துகின்றன.

---

1. இச்சுவடிகள் இப்போது கல்கத்தா தேசிய நூலகத்தில் உள்ளன.

2. இதுபற்றிய குறிப்பு 'சக்தி' காரியாலயம் 1958-ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ஆம் நாள் வெளியிட்ட கம்பராமாயண பால காண்டம் - அயோத்தியா காண்டம் பதிப்புரையில் காணப்படுகிறது.

கடிதம் - 1

44, சித்திரக்குளம் வடக்குத் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4
7-2-50

அன்பார்ந்த நண்பர் அவர்களுக்கு

நலம். நலம் அறிய விரும்புகிறேன். தாங்கள் எழுதிய கடிதமும், கார்டும் உரிய காலத்தில் கிடைத்தன.

இம்முறை அறுவடையின் பொருட்டு நான் முதலில் உத்தேசித்தபடி திருவனந்தபுரத்திற்கும் போகவில்லை. வேறு ஏற்பாடுகள் செய்துகொண்டேன். நான் போகாததற்கு ஒரு காரணம் திரு. R K. ஷண்முகம் செட்டியார் வருகிற காலத்தில் நான் சென்னையில் இருக்கவேண்டும் என்பதொன்று.

திரு. செட்டியாரைப் பிப்ரவரி மாதம் முதல் தேதி நானும் மற்ற நண்பர்களும் சந்தித்தோம். ஒரு சில விவரங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். அவர் முதலில் எங்களிடம் கூறியதை விடுத்து, வேறு சில நிபந்தனைகளைக் குறித்தும் பேசினார். எதற்கும், தாம் நாகபுரிக்கு மறுநாள் செல்லுவதாகவும், திரும்பி வந்தவுடன் விரிவாகவும், முடிவாகவும் பேசிக்கொள்ளலாம் என்றும் தெரிவித்தனர். அவ்வாறே அவர் திரும்பிவந்ததும் 4-ஆம் தேதியன்று தாங்கள் அவரைச் சந்திப்பதாக இருந்தது. ஆனால், முன்கூட்டி எங்கள் கருத்துக்களை அவர் அறியவேண்டும் என்று நினைத்து நாம் செய்யும் பதிப்பு முயற்சியின் விவரங்களைத் தருவதன் அவசியத்தைக் குறித்தும் அதனால் பொதுமக்களுக்கும் பொருளுதவி செய்யும் அன்பர்களுக்கும் நேரிடக்கூடும் பயன் களைக் குறித்தும், அச்சுச் செலவு, சிப்பந்திச் செலவு முதலிய வற்றைக் குறித்தும், இம்முயற்சி முற்றுதற்கு வேண்டும் கால அளவைக் குறித்தும் விரிவாக எழுதி அவரிடம் சேர்ப்பித்தோம். அவர் தமது கருத்தோடு எங்கள் குறிப்புக்கள் ஒத்துவராமை கண்டு இம்முயற்சியைத் தற்காலத்திற்கு நிறுத்தி வைத்துக் கொள்வது நலம் என்று தெரிவித்துவிட்டார். முற்றும் விட்ட பாடும் இல்லை. இம்மாதம் 25-ஆம் தேதி தாம் சென்னைக்கு வர நேரும் என்றும் அப்பொழுது இன்னும் பரியாலோசனை செய்து கொள்ளலாம் எனக் கூறினர். எங்களுடைய அகத்தில், நாம்

கருதியுள்ளபடியுள்ள பதிப்புக்கு அவர் இப்பொழுது தயாராக இல்லை என்று தோன்றுகிறது' கம்பன் பதிப்பு பெரும்பாலும் கனவாகவே முடியலாம்.

இந்த நிலையில் தங்களுக்கும் ஸ்ரீ T. C. சீனிவாச அய்யங்கார் அவர்களுக்கும் எழுதி, பயனற்ற நம்பிக்கையை உண்டுபண்ணி விட்டேனே என்று வருந்துகிறேன். திரு. செட்டியாரிடத்தில் வேறு சிலர் கலந்து இம்முயற்சியைத் தடைப்படுத்தியிருக்கக்கூடும் என்றும் தோன்றுகிறது. எல்லாம் இறைவன் செயல்.

இக்கடிதத்துடன் ஸ்ரீ T. C. சீனிவாச அய்யங்கார் அவர்களுக்கும் ஒரு கடிதம் எழுதியனுப்பியிருக்கிறேன். 25-ஆம் தேதி திரு. செட்டியாரை மீண்டும் ஒரு முறை பார்ப்பதாக இருக்குமானால் அது பற்றிப் பின்னர் கடிதம் எழுதுகிறேன். நேற்றுத் தான் அவரது கருத்துத் தெளிவானபடியால் இன்று தங்களுக்கு இக்கடிதம் எழுதுகிறேன்

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
(கையொப்பம்) எஸ், வையாபுரிப்பிள்ளை

Sri. T. K. இராமாநுஜ அய்யங்கார்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை

கடிதம்-2

44, Chitrakulam North Street,
Mylapore, Madras-600 004.
7—2—50

My Dear Sir,

Mr R.K.S. Chettiar wants at present only a popular edition with short commentary. Realising the financial implication of our efforts towards a critical definitive edition of Kamban he has now given up this idea. So I regret to inform you that our long thought out scheme has come to naught. In a vague way Mr. Chettiar says that the matter may again be discussed with us on the 25th instant when he will be returning to Madras. But I fear that this is only way of putting it off indefinitely. I do not build much hope on this,

It is a pity that neither our universities nor the enlightened publishers, nor our men of higher leading do not yet see the imperative need of an authorised critical text of Kamban. Such is the low state of culture in this unfortunate country of ours.

I am extremely sorry that I took seriously Mr. Chettiar's half-formed ideas, wrote to you and Mr. T. K. Ramanuja Iyengar about much needed edition and raised some expectations. My own disappointment is deep for words.

Yours Sincerely,

(Sd) S. Vaiyapuri Pillai

To

Sri T. C. Srinivasa Iyengar
Madurai Tamil Sangam
Madurai.

கடிதம்-3

கம்பன் கழகம்

காரைக்குடி
16—3—1950

திரு ச. வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கு,

நமஸ்காரம், கம்பன் திருநாள் சம்பந்தமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிகழ்ச்சி நிரல் தயாராகி அச்சுக்குப் போய்விட்டது. சம்பிரதாயப்படி கம்பன் பதிப்பு வேலை 3—4—50-இல் பகல் 1 மணிக்குக் கம்பன் சந்நிதானத்தில் தங்களாலே தொடங்கப்பெறுகிறது. ஆனால், 2—4—50 மிக நல்ல நாளாயிருப்பதனால், அன்று அந்தப் பணியைத் தாங்களே தொடங்கிவைத்துவிடலா மென்பது சிறியேனுள்பட ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களின் விருப்பம். அதற்குத் தாங்கள் சம்மதமளிப்பீர்களென்று நம்புகிறேன். சம்பிரதாய பூர்வமான தொடக்க விழாவிலே தாங்கள் ''கம்பன் பதிப்பு'' என்ற தலைப்பில் தங்கள் உரையை நிகழ்த்துவீர்களென்று நிகழ்ச்சிக் குறிப்பிலே காணப்பட்டிருக்கிறது.

நாமிருவரும் தங்கள் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது தங்கள் உரை அச்சிடப்பெறவேண்டுமென்று முடிவுசெய்ததைத் தங்கள் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆனதால், தங்கள் உரை கிடைத்து அச்சிடவேண்டும். நாள் நெருங்கி விட்டது. தயைசெய்து விரைவில் கிடைக்கும்படி செய்தால், நலமாகயிருக்கும். தங்கள் உரை கிடைத்ததன் பின்னரே, எனது பேச்சும் தயாராக வேண்டுமென்பதை ஏற்கெனவே தங்களிடம் கூறியிருக்கிறேன்.

சீர்காழி முதலியார் வீட்டு ஏட்டுக்கு அநுமதி கிடைத்து விட்டது. மற்றபடி இன்னும் முயற்சி பலமாக மேற்கொள்ள முடியவில்லை, திருநாள் வேலை காரணமாக. வேறு நான் செய்ய வேண்டியதற்கு என்ன கட்டளையிட்டாலும் உடனே நிறை வேற்றிவைக்கிறேன்.

தங்கள் அன்பான பதிலையும், உரையின் பிரதியையும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன், வந்தனம்.

என்றும் உங்கள்
சா கணேசன்,
செயலாளன்.

கடிதம்-4

S. Vaiyapuri Pillai
B.A.B.L.

44, Chitrakulam North St.
Mylapore, Madras-4
18-3-50

அன்பார்ந்த நண்பர் அவர்களுக்கு,

தாங்கள் 16-ஆம் தேதி எழுதிய கடிதம் கிடைத்தது. தங்கள் கருத்துப்படியே 2-4-50-இல் கம்பன் பதிப்பு வேலையைத் தொடங்கிவிடலாம், இப்பதிப்புப் பற்றிய எனது உரையை ஒரு வாரத்திற்குள் தங்களுக்குக் கிடைக்கும்படியாகச் செய்கிறேன். அச்சிடுதற்கு வேண்டும் சாவகாசம் இருக்கும் என்று நம்புகிறேன்.

ஏட்டுப் பிரதிகள் பற்றிய முயற்சி கம்பன் விழா முடிந்த பிற்பாடுதான் தீவிரமாக நடைபெறும் என்று நினைக்கிறேன். ஆனால், அதற்கு முன் பதிப்பகத்திற்கு வேண்டும் தலைவர், உதவியாளர்கள் பற்றியும், அவர்களுக்குரிய நிவேதனத் திட்டம் பற்றியும், இந்நிவேதனத்திற்கும், அச்சுச் செலவு முதலியவற்றிற்கும் வேண்டும் பொருள் வருவாய் பற்றியும் நாம் தெளிவாகக் கலந்துகொள்ளுதல் நலம் என்று தோன்றுகிறது. தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

விழா நெருக்கடியில் மேற்குறித்த விஷயம் பற்றி ஆலோசிப்பதும், எழுதுவதும் தங்களுக்குச் சிரமமாக இருக்கலாம். ஆனால் தாங்கள் ஏற்கெனவே இவைபற்றி ஏதாவது மனத்தில் திட்டம் போட்டிருக்கக்கூடும். அதை மாத்திரம் எனக்குத் தெரிவித்தால் போதுமானது. ஒருவிதத் தீர்மானமும் தாங்கள் செய்யவில்லையென்றால், விழாக்காலத்தில் நாம் கலந்து பேசிக் கொள்ளலாம்.

பதிப்பாசிரியர் குழு ஒன்று அமைக்கவேண்டுமென்று நாம் பேசிக்கொண்டிருந்தது தங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். நான் அதைக் குறித்து ஆழ்ந்து ஆலோசனை செய்ததில் அவ்வகைப் பதிப்பாசிரியர் குழு வேண்டும் என்று தோன்றவில்லை. ஆலோசனைக் குழு ஒன்று அமைத்துக்கொள்வோம். இதுபற்றிய மற்றை விவரங்கள் நேரில் கலந்துகொள்வோம்.

கம்பன் பதிப்பு இனிது முற்றுப்பெற வேண்டும் என்ற பேரவாவினாலேயே மேற்குறித்த விஷயங்களைத் தங்களுக்கு எழுதும்படி நேர்ந்தது. ஆதலால்' என் கடிதத்தைத் தவறாக உணர்ந்து கொள்ள மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

தங்கள் விவரமான பதிலை எதிர்பார்க்கும்
தங்கள் அன்புள்ள
(கையொப்பம்) எஸ். வையாபுரிப் பிள்ளை

திரு. சா கணேசன்
செயலாளர்
கம்பன் கழகம், காரைக்குடி,

கடிதம் - 5

கம்பன் கழகம்

காரைக்குடி
19—3—1950

அன்புள்ள வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கு,

நமஸ்காரம். தாங்கள் 18—3—50 கடிதம் வந்தனம். தங்கள் உரை சீக்கிரம் கிடைக்கும் என்ற தங்கள் எழுத்துங் கண்டு மிக்க மகிழ்ச்சி.

கம்பன் ஏட்டுப் பிரதி சம்பந்தமான யாத்திரை கம்பன் திருநாள் நிறைவேறிய பின்னர்தான் தொடங்க முடியும் என்று தாங்கள் அபிப்பிராயப்படுவது முற்றிலும் சரி. ''அதற்கு முன் பதிப்பகத்திற்கு வேண்டிய தலைவர், உதவியாளர்கள் பற்றியும், அவர்களுக்குரிய நிவேதனத் திட்டம் பற்றியும் நாம் தெளிவாகக் கலந்துகொள்ளுதல் நலம்'' என்று எழுதியிருக்கிறீர்கள். எல்லாம் ஒரு அளவாக நாம் முடிவு செய்ததுதானே? தாங்கள் தான் தலைவர், ஸ்ரீ. ராமானுஜ ஐயங்கார், ஸ்ரீ. ஷண்முக சுந்தரம், ஆகிய இருவரும் உதவியாளர்கள் என்றும், இன்றும் ஒருவர் யார் நலம் என்று முடிவுசெய்வோம் என்றும் அன்று தங்கள் இல்லத்தில் முடிவானதாகப் பேசிக்கொண்டோம். உதவியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் நூறு வரை கொடுக்கலாம் என்று நாம் முடிவுசெய்தோம். தலைவர் நிவேதனம் பற்றி மட்டும் தங்களிடம் நான் நேரடியாகக் கூறவில்லை. ஆனால் நண்பர் அப்புசாமி அவர்களிடம் கூறினேன். எல்லாவற்றிற்கும் நான் 24-ந் தேதி வாக்கில் அங்கு வர எண்ணியிருக்கிறேன். அப்பொழுதும் பேசலாம்.

ஆனால் ஒன்று மட்டும் சொல்லிவிடுகிறேன். புத்தகப் பதிப்பும், உரிமையும் கம்பன் கழகத்தைச் சேர்ந்தது என்றாலும் தாங்கள்தான் பாடாந்தரம் முதலிய சகல விதமான பதிப்புமுறை பற்றியவரையும் இறுதி அதிகாரி என்பதில் எட்டுணையும் சந்தேகமில்லை. எந்தக் காகிதத்தில் எந்த மாதிரி எத்தனை பிரதிகள் அச்சிடுவது என்பதெல்லாம் என்னைப் பொறுத்தது. இதையும் அன்று தங்களிடம் நேரில் சொல்லிவிட்டேன். எல்லாவற்றிற்கும் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளவும் தயாராயிருக்கிறேன். சரிதானே?...

பதிப்பாசிரியர் குழுவுக்குப் பதிலாக ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துக்கொள்ளலாம் என்ற தங்கள் அபிப்பிராயத்திற்குச் சம்மதிக்கின்றேன். என்ன ஆனாலும் ஆண்டவன் அருளாலும் அன்பர்கள் துணையாலும் அழகிய அருமையான, விபரங்களுடன் கூடிய கம்பன் கழகப் பதிப்பான கம்பராமாயணப் புத்தகத்தை இரு ஆண்டுகளுக்குள் தமிழ்த்தாய் திருவடிகளில் வைத்து வணங்க வேண்டும், வந்தனம், என்றுமுங்கள்.

சா. கணேசன்

கவிமணி டி. கே. சி. அவர்களின்

இராமாயணப் பதிப்பிற்கு எழுதிய மதிப்புரை பற்றி

6. கவிமணி கடிதம்*

புத்தேரி
3—2—'54

அன்புள்ள ஐயா அவர்களுக்கு அநேக நமஸ்காரம்.

தாங்கள் கொடுத்தனுப்பின புஸ்தகமும், 'கம்பர் தரும் ராமாயணம்' விமர்சனமும் வந்து சேர்ந்தன. விமர்சனத்தை மாமனார் அவர்கள் ஒருமுறைக் கிருமுறை படிக்கச் சொல்லிக் கேட்டார்கள். படித்துக் கொண்டிருக்கும்பொழுதே அவர்கள் சொன்ன அபிப்பிராயத்தை அடியில் தந்திருக்கிறேன்.

''அருமையான விமர்சனம். நடுநிலையில் நின்று கூற வேண்டிய விஷயங்கள் ஒளிவு மறைவின்றிக் கூறப்பட்டிருக்கின்றன; குற்றங் குறைகள் தக்க காரணங்களுடன் விளக்கப்பட்டிருக்கின்றன. பாராட்ட வேண்டிய பாகங்களைப் பாராட்டாமலிருக்கவுமில்லை. ஆனால், சில பாகங்கள் பதிப்பாசிரியர் படிக்கும்பொழுது அவருக்கு வருத்தமுண்டுபண்ணக்கூடும். அவற்றை மறைப்பதாயிருந்தால் உண்மையான விமர்சனமுமாகாது. தமிழ் இலக்கிய உலகத்துக்கு விசேஷப் பயனும் ஏற்படாது.

மார்ஜினில் பென்ஸிலால் முக்கியமான அநேக பாகங்களுக்குப் புள்ளிகள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சில மேற்கூறிய படி ஆசிரியருக்கு வருத்தத்தை உண்டு பண்ணக்கூடியவை.

---

* மதிப்புரை பற்றிக் கவிமணி அவர்களின் கருத்தைத் தெரிந்து, பின் பிரசுரிக்க எண்ணி, பத்திரிகாலயத்தாருக்கு அனுப்பும் முன்னரே கவிமணி அவர்களுக்கு மதிப்புரை முதன் முதல் அனுப்பப்பட்டது. மதிப்புரையை வாசிக்கக் கேட்டு, தம்மால் எழுதக்கூடாத நிலையில், தமது கருத்தை மருகர் ஸ்ரீ குமாரசுவாமிப் பிள்ளையைக் கொண்டு எழுதுவித்து அனுப்பியிருந்தார்கள். அக்கடிதமே இங்குப் பிரசுரிக்கப்படுகிறது.

என்ன செய்யலாம்! நிவர்த்தி வேறு இல்லை, இது அணிந்துரையுமல்ல, சாற்றுக்கவியுமல்ல, முகத்தைப் பார்த்து விமர்சனம் எழுத முடியாது, புஸ்தகத்தைப் படித்துத்தான் எழுதலாம். விமர்சகருடைய கடமையும் அதுவேயாகும்.

இந்த மாதிரியான ஒரு அரிய விமர்சனம் எழுதுவதற்கு அவர்களைத் தவிர தமிழ்நாட்டில் வேறு யாருமில்லை'' என்று சொல்லி முடித்தார்கள்.

விமர்சனமும் இதனுடன் அனுப்பப்பட்டிருக்கிறது. இங்கு எல்லோரும் க்ஷேமம். தங்களுடையவும் வீட்டில் அம்மாள் முதலானவர்களுடைய க்ஷேமத்துக்குக் கடிதம் எழுத வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

K. குமாரசுவாமி

முன்னுரைகள்*

தமிழர் பண்பாடு

இந்நாலிலுள்ள கட்டுரைகள் தமிழர் பண்பாட்டின் ஒரு சில அம்சங்களைப் பற்றியன. எனவே தமிழர் பண்பாடு என்ற பெயர் கொண்டே இந் நூல் இப்பொழுது வெளிவருகின்றது

பண்பாடு என்பது ஒரு புதிய சொல். நமது தாய்மொழியில் மட்டும் பயிற்சியுடைய தமிழ்ப் பண்டிதர்கள் இச்சொல்லை ஒப்புக்கொள்வார்களோ என்பது சந்தேகம். ஒப்புக்கொண்ட போதிலும், குணம் அல்லது இயல்பு என்ற பொருள்தான் இதற்குரியது என்று சொல்வார்கள். ஆனால், இச்சொல் மேல் நாட்டில் ஆங்கிலத்தில் வழங்கும் ஒரு கருத்திற்குரிய 'கல்ச்சர்' (culture) என்ற சொல்லைத் தமிழில் மொழிபெயர்த்து அமைத்துக்கொண்டதேயாகும். இச் சொல்லை இப்பொழுது சில ஆண்டுகளாக ஆங்கிலம் அறிந்த தமிழறிஞர்கள் வழங்கி வருகின்றனர்.

இதன் பொருளை வரையறை செய்துகொள்ளுதல் நலமாகும். கல்ச்சர் என்பது ஆங்கிலத்தில் இரண்டு பொருள்களில் வழங்கப் படுகிறது. ஒன்று தொன்மக்கள் நூலில் (Anthropology) வருவது. மக்களின் ஆதி வரலாற்றில் ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் இயற்றிக்கொண்ட கருவிகள் முதலியனவும், அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தினது பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் முதலியனவும், அவர்களது சமயம் பற்றிய கொள்கைகள் முதலியனவும் வெளிப் படுத்தும் அறிவு - நிலையே கல்ச்சர் என இவ்வகை நூல்கள் பெயரிட்டு ஆளுகின்றன. இதுவே விஞ்ஞானத்திற்குரிய சங்கேதப் பொருள். 'சிவிலிஸேஷன்' (Civilisation) என்பதற்கும் கல்ச்சர் என்பதற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. முந்தியதை

* இம்முன்னுரைகள் முன்னர் தனி நூலாக வெளியிடப்பட்ட போது பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை எழுதியது.

நாகரிகம் எனக் கூறி வருகின்றோம். இந் நாகரிகம் மிக விரிந்த பொருளுடையது. கல்ச்சர் என்பது இதில் அடங்கிவிடும். ஆனால், கல்ச்சர் என்பதில் நாகரிகம் அடங்க மாட்டாது. ஏகதேசமாக இரண்டு சொற்களையும் பொருள் வேறுபாடின்றி வழங்குவதும் உண்டு.

கல்ச்சர் என்பதனைப் பிறிதொரு பொருளிலும் ஆங்கிலத்தில் வழங்குகிறார்கள். இது ஒரு பொதுப் பொருள். மக்களது அறிவு நலம், கருத்து நலம், குண நலம், கொள்கை நலம், ஒழுக்க நலம், வாழ்க்கை நலம் முதலியன மேன்மேலும் திருந்திவரும் திருத்த நிலையே இங்குக் குறிப்பிட்ட பொருள். இது விஞ்ஞானத்தில் வழங்கும் பொருளன்று. ஆனால், மாத்யூ ஆர்னால்டு முதலிய இலக்கியப் பேராசிரியர்கள் சிலர் இப்பொருளை உற்பத்தி செய்துவிட்டனர். இப் பொருளிலேயே தமிழ் அறிஞர்கள் இச் சொல்லையும் இதன் மொழி பெயர்ப்பாகிய பண்பாடு என்ற சொல்லையும் வழங்கி வருகிறார்கள். தமிழர் பண்பாடு என்ற தொடரில் இதுவே பொருளாகும். இதனைத் தமிழ் மக்கள் அடைந்துள்ள திருந்திய அறிவு-நிலை (Intelluctual Development) என்று பொதுப்படக் கொள்ளலாம். இப் பண்பாட்டில் கருத்து-நலம் ஓர் அம்சமாகும். இக்கருத்துக்கள் மிகச் சிறந்து தோன்றுவது இலக்கியங்களில் என்பது சொல்ல வேண்டா. ஆகவே, 'தமிழர் பண்பாடும் இலக்கியமும்' என்ற கட்டுரையோடு இந்நூல் தொடங்குகிறது. பிறிதோர் அம்சம் வாழ்க்கை நலமாகும். இதனைப் பற்றியதே 'பண்டைத் தமிழக வாழ்க்கை' என்ற கட்டுரை. வாழ்க்கை நலத்தில் போர் முதலியன பற்றியும், காதல் முதலியன பற்றியுமுள்ள கருத்துக்கள் மிக முக்கியமானவை. இவை முறையே 'புறநானூறும் தமிழரும்', 'அகநானூறும் காதலும்' என்ற கட்டுரைகளில் புலப்படுத்தப்படுகின்றன.

வாழ்க்கை செம்மையாக நடைபெறுவதற்குச் சிறந்த லட்சியங்கள் வேண்டும். இந்த லட்சியங்கள் மக்கள் உள்ளத்தில் நன்கு பதிந்து அவர்களை முன்னின்று செலுத்துதல் வேண்டுமாயின், அவைகள் கலைகள் மூலமாகவும் சரித்திரங்கள் மூலமாகவும் உணர்த்தப்படுதல் வேண்டும். தமிழ் நாட்டில் உயர்ந்த லட்சியங்களை விளக்குவதாகப் போற்றப்பட்டு வந்த சரிதம் இராம சரிதமாகும். எனவே, 'இராம சரிதமும் தமிழ்நாடும்' என்ற கட்டுரை ஐந்தாவதாக அமைக்கப்பட்டுள்ளது. லட்சியங்களைப் பாவனா சக்தியின் வன்மையால் வற்புறுத்தல் வேண்டும்: இப் பாவனா சக்தி மிக மேம்பட்டுத் தோன்றுவது கவிதையிலேதான். மேலும்

தலைசிறந்த பெருங் கவிஞர்கள் உணர்ச்சி மயமாய் நின்று பாடும் கவிகளில்தான் இந்த லட்சியங்களின் முழுவடிவும் நன்கு தோன்றுவது. ஆகவே, கவிதையைக் குறித்தும் கம்பனைக் குறித்தும் வரும் கட்டுரைகள் அடுத்து வைக்கப்பட்டுள்ளன. பண்டைக் காலத்து வழங்கிய ஒரு சரிதத்தைக் கூறும் கவிஞன் அதில் வரும் பல பாத்திரங்களையும் செம்மையாகத் தெளிவாகச் சிருஷ்டிப்பதன் மூலமாகவே லட்சியங்களையும் லட்சியங்கள் அல்லாதவற்றையும் வெளிப்படுத்துகின்றான். இவ்வாறு பாத்திரங்களை அமைக்கும்போது, சில மரபுகளையும் பின்பற்றுகிறான். இவ்வகை மரபுகளையும் பாத்திர சிருஷ்டிகளையும் பற்றியதே அடுத்து வரும் கட்டுரை.

பொதுப்பட லட்சியங்களை அன்பு பற்றியன, அழகு பற்றியன, ஒழுக்கம் பற்றியன முதலியனவாகப் பலபடக் கொள்ளலாம். அன்பு பற்றியன உத்தம சகோதரன், இலட்சுமணன், கும்பகர்ணன் என்ற கட்டுரைகள். அழகு பற்றியது 'அழகுத் தெய்வம்' என்ற கட்டுரை. சமுதாயத்தின் திட்பத்திற்கும், வளர்ச்சிக்கும், பெருமைக்கும், அடிப்படையாயுள்ள மகளிரின் ஒழுக்க நலம் 'கற்புத் தெய்வம்' என்ற கட்டுரையில் விளக்கப்படுகின்றது.

ஆனால், மனிதன் சீரிய கருத்துக்களையும், சீரிய வாழ்க்கையையும், சீரிய லட்சியங்களையும் ஒன்றாகக் கட்டிவைத்த தொகுதி என்று நாம் கொள்ளுதல் கூடாது. இத் தொகுதியினின்றும் நெகிழ்ந்து விடுபட்டு, தன்னையும் தன்னைச் சூழ்ந்தாரையும் மகிழும்படி செய்யும் இயல்பும் அவனுக்கு உண்டு. இவ் இயல்பும் சேர்ந்துதான் அவன் முழுமனிதன் ஆகின்றான்; நிரம்பிய வாழ்வு பெறுகின்றான். இதுபற்றிய கட்டுரையே 'நகைச் சுவை' என்பது.

செம்மையான வாழ்க்கைக்கு உரிய லட்சியங்கள் கலைகள் மூலமாகவும் சரித்திரங்கள் மூலமாயும் விளக்கம் எய்தும் என்றேன். இவ்வாறேயன்றி மக்களது சரித்திரத்தில் ஒரு காலத்தும் அவர்களை விட்டு நீங்காத சமயத்தின் கொள்கைகள் மூலமாகவும் லட்சியங்கள் விளங்கும். சமயக் கொள்கைகள் கால அடைவில் மேம்பட்டு வருகின்றன. அவை உபதேசிக்கும் லட்சியங்களும் அவ்வாறே கால அடைவில் வரவர மேம்பட்டு விளங்கும். இது பற்றியதே இறுதிக் கட்டுரையாக உள்ளது.

இக் கட்டுரைகள் பத்திரிகைகளில் ஏற்கெனவே வெளி வந்தவை. அவற்றைத் தொகுத்து, சில சில இடங்களில் புதுக்கி, ஒருநெறிப்படுத்தி இப்பொழுது பதிப்பித்துள்ளேன்.

பல்வேறு காலங்களில் பற்பல பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகள், ஆதலின், அவற்றைத் தொகுக்கும்பொழுது சில செய்யுட்களும் சில கருத்துக்களும் இரண்டாம் முறை மீண்டும் வந்துள்ளன. இவ்விடங்களை நான் மாற்றவில்லை. சொல்லிவரும் பொருளின் விளக்கத்தைக் கருதியும், கருத்துத் தொடர்ச்சி கருதியும், அவற்றை முன் எழுதியபடியே வைத்துள்ளேன் அன்றியும், ஒருசில கட்டுரைகள் சொற்பொழிவுக்காக எழுதியவை- இவற்றில் வரும் முன்னிலை வாசகங்களையும் நான் மாற்றவில்லை. மேற்கோளாகக் காட்டியுள்ள இராமாயணப் பாடல்கள் சில அச்சுப் புத்தகப் பாடல்களினின்றும் சிறிது வேறுபட்டிருக்கக் காணலாம். அவை ஏட்டுப் பிரதிகளில் உள்ள பிரதி பேதங்களாகும்.

கட்டுரைகள் வெளிவந்த பத்திரிகைகளின் தலைவர்களுக்கு எனது நன்றி.

எனது இலக்கிய முயற்சிகளில் பிரதி செய்தல், ஒப்பு நோக்குதல் முதலிய பல உதவிகள் செய்துவரும் வித்வான் மு. சண்முகம் பிள்ளை இக் கட்டுரைகளைப் பதிப்பித்தலிலும் ஒத்துழைத்தனர். அவருக்கு என் அன்பு நிறைந்த ஆசி.

எனது கட்டுரைகளை நூல்வடிவில் தொகுத்து வெளியிட வேண்டும் என்று வற்புறுத்தி, வெளியிடும் பொறுப்பையும் மேற்கொண்டு மிகுந்த ஊக்கங் காட்டிவரும் தமிழ்ப் புத்தகாலயத்தாருக்கு எனது நன்றி.

சென்னை,
20-5-1940

எஸ். வையாபுரிப் பிள்ளை

மூன்றாம் பதிப்பின் முன்னுரை

இரண்டாம் பதிப்பின் பிரதிகள் முற்றும் செலவாகிவிட்டபடியால், இப்பொழுது மூன்றாம் பதிப்பு வெளிவருகிறது.

இந்நூல் வெளிவந்ததன் பிற்பாடு, இதன் பொருளை உட்கொண்டு ஒருசில நூல்கள் தோன்றியுள்ளன. 'தமிழ் மக்கள் பண்பாடு' என ஒருநூல் சென்னையிலிருந்து வெளிவந்துள்ளது. 'தமிழர் சால்பு' என ஒரு நூல் இலங்கையினின்றும் ஒரு நண்பரால் எழுதப்பட்டுள்ளது.

முதல் இரண்டு பதிப்புக்களிலுமுள்ள ''கம்பன்'' என்ற கட்டுரை வேறொரு நூல் தொகுதியில் அமைக்கப்பட்டுவிட்டது. எனவே அதற்குப்பதிலாகக் 'கலையும் பண்பாடும்'' என்ற கட்டுரையும் ''கதைப் பாட்டு'' என்ற கட்டுரையும் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. ''தமிழர் பண்பாடும்'' என்ற கட்டுரையும் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. ''தமிழர் பண்பாடும் இலக்கியமும்'' என்றதனை அடுத்து ''கலையும் பண்பாடும்'' என்ற கட்டுரையும், ''கவிதை'' என்றதனை அடுத்து ''கதைப் பாட்டு'' என்ற கட்டுரையும் வைக்கப்பெற்றிருத்தல் காணலாம். இவற்றின் பொருத்தமும் இடம் நோக்கி அறியத்தகும்.

இப்புதிய பதிப்பில் பல பல திருத்தங்களும் அங்கங்கே செய்யப்பட்டுள்ளன.

இக் கட்டுரைத் தொகுதிகளை வெளியிட்டுவரும் தமிழ்ப் புத்தகாலயத்தாருக்கும், இப்பதிப்பை அழகாகவும், விரைவாகவும் வெளியிட்டுதவிய சாது அச்சுக்கூடத்தினருக்கும் எனது நன்றி.

சென்னை
30-6-1955

எஸ். வையாபுரிப் பிள்ளை

கம்பன் காவியம்

'கம்பன் காவியம்' என்ற இத் தொகுதியுள் நான் பத்திரிகைகளுக்கு எழுதிய சில கட்டுரைகளும், காரைக்குடி முதலிய இடங்களிற் செய்த சொற்பொழிவுகளும் அடங்கியுள்ளன. பல பத்திரிகைகளிலும் நூல்களிலும் சிதறிக்கிடந்த பொருள்களை ஒருசேரத் தொகுத்து வெளியிடுதல் கற்போருக்குத் திருப்தி யளிக்கும் என நம்புகிறேன்.

'கம்பன் காவியம்' என்ற முதற் கட்டுரை காவிய வரலாற்று முறையில் இப்பெருங் கவிஞனுக்குரிய நிலையை ஆராய்கிறது. கம்ப இராமாயணமும் ஜைன இராமாயணமும் என்ற கட்டுரை பெயரினாலேயே விளக்கமுற்றிருக்கிறது. ஆனால், ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன். இராமாயணமும் பல சமயத்தினர் களிடையேயும் எவ்வாறு போற்றப்பட்டு வந்திருக்கிறது என்பது நாம் அறிதற்குரிய ஒரு பொருளாகும். 'கம்பனைக் கற்கும் நெறிகளை கவிதைகளை அநுபவிக்கவேண்டும் முறையை உளப்படுத்தி, அம் முறைகளுக்கேற்பக் கம்பனை நாம் கற்றல் வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றது. நான்கு முதல் ஆறு வரையிலுள்ள மூன்று கட்டுரைகள் கம்பனது காவியம் இது வரையும் ஆராய்ந்து பதிப்பிக்கப் பெறாமையைக் காட்டி, ரஸிக மணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் வெளியிட்டுள்ள பதிப்பு தவறான முறைகளைக் கைக்கொண்டுள்ளது என்பதையும் விளக்குகின்றன. 'கம்பனும் தமிழும்' என்ற ஏழாவது கட்டுரையில், தமிழ மொழி சங்க காலந்தொட்டு வளர்ந்து வந்திருக்கிற வகையினையும், கம்பன் காலத்தில் அது உச்சநிலையை அடைந்து தனது வளமனைத்தையும் கொழித்து நிறைவு பெற்றுள்ளது என்பதனையும் தெளிவிக்கிறது. எட்டாவது கட்டுரையில் நமது பெருங் கவிஞன் கதாபாத்திரங்களின் அம்சங்களை நன்குணர்ந்து தனது மனோபாவனையினால் சிருஷ்டித்துள்ள பேராற்றலைத் தெளிவு பெற உரைக்கிறது.

அனுபந்தமாக ரஸிக மணி திரு. டி. கே. சி. அவர்கள் வெளியிட்ட கம்பராமாயணம் : முதலிரண்டு காண்டங்களுக்கு ஹிந்துப் பத்திரிகையில் நான் எழுதியுள்ள மதிப்புரையும், இம் மதிப்

புரையில் கம்பனது காலம் குறித்த அளவில் எனது கருத்தை மறுத்து எழுதிய திரு. எ. ஸி. பால் நாடார் அவர்களின் கட்டுரையை ஆராய்ந்து எழுதிய கண்டனவுரையும், ஆங்கிலத்தில் கம்பனைப்பற்றி நான் எழுதிய ஒரு கட்டுரையும் சேர்த்துள்ளேன். இதுவரை வெளிவந்துள்ள இராமாயணப் பதிப்புக்களின் விவரம் தெரிந்தவரையில் தொகுத்து அநுபந்தத்தில் கொடுத்திருக்கிறது. நூலில் மேற்கோளாகவும் பிறவாறாகவும் எடுத்தாளப்பெற்ற சிறப்புப் பெயர் அகராதி முதலியனவும் அநுபந்தத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

கம்பனைக் கற்க விரும்புவோர்க்கு இத்தொகுதி பயன்படும் எனக் கருதுகிறேன். முக்கியமாக வரலாற்று நெறியை அனுசரித்துத் தக்க சான்றுகள் கொண்டு காலத்தை நிர்ணயிக்க வேண்டும் என்பதும், முற்படவே சில கோட்பாடுகளை மனத்தில் வைத்துக்கொண்டு ஒரு கவிஞனைக் கற்றல் கூடாது என்பதும், ஆராய்ச்சிப் பதிப்புக்கள் இன்னின்ன நெறியை மேற்கொள்ள வேண்டும் என்பதும் தொகுதியில் காணலாம். எனவே, கம்பன் கையாண்ட தமிழ், அவன் இயற்றிய பாத்திரங்கள் இவற்றைத் தெளிதலும் இலக்கிய ஆராய்ச்சியைச் சேர்ந்தனவாம். எனவே, காலம் (Chronology). உண்மைப் பாட ஆராய்ச்சி (Textual critici(m). இலக்கிய ஆராய்ச்சி (Literary criticism) முதலிய பல வகைகளிலும் கற்போர் சிந்தனைக்குரியவாய்ப் பல பொருள்கள் இதன்கண் உள்ளன

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் கடைசியாக எனக்கு எழுதிய கடிதம் இந்நூலின் அநுபந்தத்தில் தரப்பட்டுள்ளது. நடுநிலை குன்றாது தமது கொள்கைகளை இனிதாக எடுத்துச் சொல்லும் பெருங்குணம் வாய்ந்த கவிஞர் அவர்கள் டி. கே. சி அவர்களின் பதிப்பைக் குறித்து நான் எழுதியதை முற்றும் ஆமோதிக்கிறார்கள். இவர்களது மறைவுக்குப்பின் நான் வெளியிடும் முதல் நூல் இதுவே யாதலால், இதனை அவர்களின் நினைவுக் குறியாக, அவர்களுக்கு அன்புரிமை யாக்குகிறேன்.

இந்நூலில் அமைந்த கட்டுரைகள் முதலியன வெளிவந்த பத்திரிகை முதலியவற்றின் ஆசிரியர்களுக்கு எனது நன்றி.

இக்கட்டுரைகளைத் தொகுப்பதிலும் அச்சுத்தாள்களைத் திருத்துவதிலும், நான் எழுதியவற்றைப் பிரதி செய்வதிலும்

மிக்க ஊக்கத்துடன் உதவி செய்து வந்தனர் வித்துவான் மு. ஷண்முகம் பிள்ளை ஆவர். இவருக்கு எனது அன்பு நிறைந்த ஆசி.

இந்நூல் தொகுதியை வெளியிடத் தொடங்கிச் சில மாதங்கள் இப்போது ஆகிவிட்டன. எனது உடல் - நலக் குறைவால் இங்ஙனம் காலதாமதம் நேர்ந்தது.

இந்நூல் முதலியவற்றை மனமுவந்து பதிப்பித்து எனக்கு மிக்க ஊக்கமளித்துவரும் தமிழ்ப் புத்தகாலயத்தாருக்கு எனது நன்றி.

கம்பன் நிலையம்
காந்தி நகர், சென்னை
12—2—1955.

எஸ். வையாபுரிப் பிள்ளை

கம்பன் காவியம்

உரிமை - உரை

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் எனது உயிர்த்துணைவராய் அமைந்து எனது இலக்கிய முயற்சிகளுக்கெல்லாம் ஊக்கங் கொடுத்து வந்தவர்களும், தற்காலக் கவிஞர்களுள் தலைசிறந்து விளங்கியவர்களும், இலக்கிய ஆராய்ச்சி, சரித ஆராய்ச்சி, கல்வெட்டு ஆராய்ச்சி முதலிய பல துறைகளில் மேம்பாடுற்றவர்களும் ஆகிய காலஞ் சென்ற **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை** அவர்களுக்கு இந்நூலை அன்புடன் உரிமையாக்குகிறேன்.

5. கம்பராமாயணப் பதிப்பு விவரம்

திருவேங்கடாசல முதலியார்

பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை - மூலம் 1840—1843
உத்தரகாண்டம் மூலம்
[14 பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து பிழைகளைத் திருத்திப் பதிப்பித்தது]

மழவை மகாலிங்கையர்

பாலகாண்டம் – மூலம் 1845

சுப்பராய முதலியார் - சுப்பராய பிள்ளை

பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை - மூலம் 1858
உத்தர காண்டம் மூலம்
[திருவேங்கடாசல முதலியார் பதிப்பிற்கிணங்கப் பதிப்பித்தது.]

கிருஷ்ணசாமி முதலியார்

பாலகாண்டம் உரையுடன் 1861

காஞ்சீபுரம் சபாபதி முதலியார் - கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை

பாலகாண்டம் - உரையுடன் 1861

கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை

பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை-மூலம் 1861–
யுத்தகாண்டம் 1884
[10 பிரதிகளைக் கொண்டாராய்ந்து கரலிகித வழுக்களைந்து பதிப்பித்தது.]

வி. கோவிந்தப் பிள்ளை

சுந்தரகாண்டம் 1864

[திரிசிரபுரம் தமிழ்த் தலைமைப் புலவராகிய வி. கோவிந்தப் பிள்ளை அவர்களால் பார்வை யிடப்பட்டு, புங்கத்தூர் கந்தசாமி முதலியாரால் பு. ம. சபாபதி முதலியாரது கல்வி விளக்க அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது]

கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை

ஆரணிய காண்டம் மூலம் 1870

[சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்ப்புலவர் திருவேங்கடாசல முதலியாரால் – 600 திருவிருத் தமும் சேமங்கலம் மகாவித்வான் நாராயணசாமி முதலியாரால் மற்றைத் திருவிருத்தம் யாவும் 14 பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து கையெழுத் துப் பிழைகளைக் களைந்து பதிப்பித்த பிரதிக் கிணங்க, சென்னை போதனா சக்தி விர்த்தி வித்தியாசாலை என்னும் நார்மல் ஸ்கூல் தமிழ்த் தலைமைப் புலவர் கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளையவர்களால் பார்வையிடப்பட்டு பத்தி இராமநுசுலு நாயக்கர் அவர்களது ஸ்ரீநிகேதன அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.]

திருமழிசை முத்துசாமி முதலியார்

பாலகாண்டம் முதல் சுந்தரகாண்டம் வரை-மூலம் 1873

[காஞ்சிபுரம் வீராசாமி முதலியார் குமாரர் திருவேங்கட முதலியார்க்குரிய இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம்.]

புங்கத்தூர் கந்தசாமி முதலியார்

ஆரணிய காண்டம் – மூலம் 1876

தவராச கவிராயர்

பாலகாண்டம் முதல் சுந்தரகாண்டம் வரை மூலம் 1884

யுத்த, உத்தரகாண்டங்கள் - மூலம் 1885

சாத்தம்பாக்கம் கிருஷ்ணசாமி முதலியார்

பாலகாண்டம் மூலம் - (தனி நூல்)
பாலகாண்டம் முதல் சுந்தரகாண்டம் வரை மூலம் 1885—6
யுத்தகாண்டம்-உத்தரகாண்டம்-மூலம் 1887

காணியம்பாக்கம் முருகேச முதலியார்

சுந்தரகாண்டம்-மூலம் 1900

சா. வ. திருவேங்கட நாயுடு

பாலகாண்டம்-மூலம் 1900
உயுத்த, உத்தரகாண்டம்-மூலம் 1901

ஈ. இரத்தின முதலியார்

ஆரணிய காண்டம் 1903
[சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஈ. இரத்தினவேலு முதலியார் அவர்களைக் கொண்டு பரிசோதித்து காணியம்பாக்கம் முருகேச முதலியார் குமாரர் சண்முகமுதலியார் பதிப்பித்தது.]

சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார்

அயோத்தியா காண்டம்-உரை 1904
[உரையாசிரியர் தக்கோலம் இராமசாமி நாயுடு]

எம். ஆர் கந்தசாமிக் கவிராயர்-உடுமலைப்பேட்டை

ஆரணியகாண்டம் - உரையுடன் 1905

திருமயிலை சண்முகம் பிள்ளை

யுத்தகாண்டம்-மூலம் 1905
பாலகாண்டம் முதல் சுந்தரகாண்டம் வரை-மூலம் 1913
யுத்தகாண்டம்-மூலம்
உத்தர காண்டம்-மூலம்

பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியார்

சுந்தரகாண்டம்-மூலம் 1907
[வாணிவிலாசினி பிரஸ்]

பண்டிட் பி. கே. கிருஷ்ணமாச்சாரியார்

பாலகாண்டம்-மூலம் 1907

பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியார்-பண்டித சவரிராய பிள்ளை

கிஷ்கிந்தா காண்டம்-மூலம் 1910
[பாட பேதங்களுடன்]

அமரம்பேடு இராமசாமி முதலியார் அண்டு சன்ஸ்

பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை-மூலம் 1914
உத்தரகாண்டம்-மூலம்
[கோமளபுரம் வித்வான் இராசகோபாலப் பிள்ளை மாணாக்கராகிய ம. சண்முகம் பிள்ளை அவர்களால் பரிசோதித்த பிரதிக்கு இணங்க, இராமசாமி முதலியார் பூமகள் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.]

தி. த. கனகசுந்தரம் பிள்ளை

பாலகாண்டம்-குறிப்புரையுடன் 1918

மு. ரா. அருணாசலக் கவிராயர்

கிஷ்கிந்தா காண்டம்-மூலம் 1919

இராமசாமி நாயுடு

பாலகாண்டம் - உரை 1922
[உரையாசிரியர் ஸ்ரீநிவாச முதலியார்]

க. இராமரத்ந ஐயர்

பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம்-மூலம் 1926
உத்தரகாண்டம்-மூலம்
[பி நா. சிதம்பர முதலியார் பதிப்பு]

டி. ஸி. பார்த்தசாரதி ஐயங்கார்

பாலகாண்டம் முதல் சுந்தரகாண்டம் வரை-மூலம் 1928
யுத்த-உத்தரகாண்டங்கள்-மூலம்

வித்வான் ராமசாமி நாயுடு

காலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை-உரையுடன் 1929

டி. என். சேஷாசலம்

பாலகாண்டம்-உரையுடன் 1930

எஸ். வையாபுரிப் பிள்ளை

யுத்தகாண்டம் முதல் மூன்று படலங்கள்-மூலம் 1932
[பல பிரதிகளைக் கொண்டு தொகுத்த பாட பேதங்களுடன்]

எஸ். வையாபுரிப் பிள்ளை - பெ. நா. அப்புஸ்வாமி

பாலகாண்டம் முதல் ஏழு படலங்கள் மூலம் 1937
[பல பிரதிகளைக் கொண்டு தொகுத்த பாட பேதங்களுடன், திருஞான முத்திரைக் கோவை வெளியீடு, பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்]

பக்ஷிராஜ அய்யங்கார் - மகரபூஷணம்

பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை-மூலம் 1942-1954
[ஆழ்வார் திருநகரிப் பிரதிகளின்படி-திருஞான முத்திரைக் கோவை வெளியீடு. பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.]

சென்னை கலாக்ஷேத்திர வெளியீடு

பால, அயோத்தியா கண்டங்கள்-குறிப்புரையுடன் 1946-1951

வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

பாலகாண்டம் முதல் யுத்த காண்டம் வரை உரையுடன் 1894-1932

கம்ப ராமாயணச் சுருக்கங்கள்

சென்னை ராஜதானிப் பாடசாலைப் புத்தக சங்கத்தார்

பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை 1868-1883
[வித்தியாசாலைகளின் உபதேசத்துக்காகப் பிழை யறப் பரிசோதித்தது.]

வ. வெ. சு. ஐயர்

பாலகாண்டம் — சுருக்கம் 1917
[அரும்பொருள் விளக்கத்துடன்]

குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்

பாலகாண்டம் முதல் யுத்த காண்டம் வரை - சுருக்கம் 1920
சே. சிவஞானம் பிள்ளை

வெ ப. சுப்பிரமணிய முதலியார்

கம்பராமாயண சாரம் 1936-1937
பால காண்டம் முதல் யுத்த காண்டம் வரை - சுருக்கம்
[உரை விளக்கக் குறிப்புகளுடன்]

பி. ஸ்ரீ.

பாலகாண்டம் - சுருக்கம் 1940
கம்ப சித்திரம் - விளக்கம் உரை முதலியவற்றுடன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

கம்பர் தரும் இராமாயணம்
பால, அயோத்தியா, ஆரணிய காண்டங்கள் 1942

அ. சே. சுந்தரராஜன்

கம்பர் கவிதைக் கோவை - மூன்று தொகுதி 1950

பொருட்குறிப்பு அகரநிரல்

ஆசிரியர் அகர நிரல்

அகத்தியர் 112, 176, 198, 383
அடியார்க்கு நல்லார் 11
அதிவீரராம பாண்டியன் 182
அந்தகக்கவி வீரராகவ முதலியார் 219
அப்பர் 17, 107, 116, 257
அப்புசாமி 430
அபிநவபம்பா 383
அரிஸ்டாடில் 153
அருணகிரி நாதர் 121
அலெக்ஸாண்டர் போப் 170, 377
அவ்வையார் 163, 252
அறுபத்து மூவர் 119
ஆச்சாரியார், பி ஸ்ரீ. 365, 399
ஆடுசாபட்டி அஷ்டாவதானம் அரமையப்ப பிள்ளை 81
ஆண்டாள் 134, 135
ஆதிசங்கராச்சாரியர் 14
ஆனந்தரங்கம் பிள்ளை 168, 169
இராகவையங்கார், மு. 201
இராமசாமி செட்டியார் 367
இராமாநுஜ அய்யங்கார், T K. 426
இராமாநுஜர் 42, 180, 209, 210, 351
இராமாநுஜாச்சாரியார், ஸ்ரீ. 9, 14
இளங்கோ அடிகள் 9, 18, 77, 274
இளம்பூரணர் 11
உல்ருசி 234
உலோச்சனார் 256
எட்வர்டு கேப்பெல் 378
எழுத்தச்சன் 383
ஒட்டக்கூத்தர் 181, 182, 207, 208, 216, 218, 375, 416
க்ரெக் 356
கச்சியப்ப சிவாச்சாரியார் 373
கணேசய்யர், சி. 343
கணேசன், சா. 360, 424, 428
கபிலர் 48
கம்பன் 7, 9, 10, 42, 43, 76, 79, 121, 125, 126, 148, 154, 181, 182, 184, 186-189, 191, 192, 194-197, 199, 205, 206, 208, 211, 213-218, 224, 230-233, 235-239, 241, 242, 246-250, 265, 268, 270, 273, 290, 291, 293, 297, 300, 305, 306, 313, 316-318, 323, 325, 327, 330-332, 334, 336, 337, 339, 340, 341, 343, 348, 349, 354, 357, 359, 363, 368-371, 373, 374, 388, 391, 392, 398, 400, 401, 403-405, 408, 410, 411-417, 419-421
கவிமணி 81, 431
கனக சுந்தரம் பிள்ளை. கன்னாகம் 334, 336, 342, 346, 353
காண்ட் 78
காணே பி. வி. 69
காரியாசான் 83
காளிதாசன் 177, 316
கிருஷ்ணசாமி முதலியார் 335, 353
கிருஷ்ணமாச்சாரியார், கே. 353
கிருஷ்ணமாச்சாரியார் பி. ஆர். 353, 354, 367, 376

குணபத்திரர் 387
குமாரசுவாமி K, 432
குமாரசாமிப் பிள்ளை, சுன்னாகம் 334, 336, 342, 346, 353
குலசேகராழ்வார் 121, 124, 139
கொங்கு வேள் 43
கோபால கிருஷ்ணமாச்சாரியார் வை. மு. 341, 343, 353
கோலரிட்ஜ் 235, 236
கோவிந்தராஜ அய்யங்கார் மோ. 367
கோவிந்தன், வை. 424
கௌடில்யர் 17
சங்கர முதலியார் 244
சங்கராச்சாரியார் 9, 41
சண்முகம் செட்டியார் ஆர். கே. 368, 424, 425
சண்முகம் பிள்ளை, திருமயிலை 359
சண்முகம்பிள்ளை. மு. வித்வான் 436, 440
சதானந்தர் 339
சபாபதி முதலியார், காஞ்சிபுரம் 335
சம்பந்தர் 68, 84, 257, 258
சவுரிராயப்பிள்ளை, திருச்சி 353, 376
சாட்விக் 175
சாமிநாத ஐயர், உ.வே. 165, 167, 334, 351
சாஸர் 356
சிதம்பரநாத முதலியார், டி. கே. 1, 353, 399, 400, 404, 409, 438, 439
சின்னையாப் பிள்ளை 333
சீனிவாச அய்யங்கார், T.C, 426, 427
சுந்தரம் பிள்ளை 41, 44
சுந்தரமூர்த்தி சுவாமிகள் 17, 55
சுப்பராய முதலியார் 353
சுப்பிரமணிய அய்யர், வ. வே. 358
சுப்பிரமணியம். தி. நா. 212
சுப்பிரமணிய முதலியார், சி. கே. 205
சுப்பிரமணிய முதலியார், வெ. ப. 353, 399
சுப்புராயப் பிள்ளை 353
சுவாமி விவேகாநந்தர் 148
செயங்கொண்டார் 92, 102, 203, 208
செஸ்டர்டன் ஜி.கே. 159
செஸ்டர் பீல்டு 83
சேக்கிழார் 203, 205, 206
சேனாவரையர் 11
ஞானசம்பந்தர் 107, 116
டார்வின் 78
டிக்கன்ஸ் 81
தத்துவராய சுவாமிகள் 85
தாமோதரம் பிள்ளை, சி. வை. 376
தியாகராச செட்டியார் 165 - 167
தியோபால்டு 377, 378
திருத்தக்க மாமுனி 43
திருநாராயண பட்டன், குமுத சந்திர பண்டிதன் 202
திருமங்கையாழ்வார் 17, 370, 371, 407, 414
திருமழிசை யாழ்வார் 371
திருவள்ளுவர் 3, 7, 8, 9, 32, 39, 52, 67, 76, 118, 122, 150, 155, 163, 164, 182, 226, 228, 238, 241, 275, 297, 308
திரு. வி. க. 165, 168
திருவேங்கடதாசர், இராமாயணம் 351
திருவேங்கட நாயுடு, க. வ. 353

திருவேங்கடம் உறங்காவில்லி தாசர், இராமாயணம் 351
திருவேங்கடாசல முதலியார் 352, 353
தீபங்குடி கவிராச பண்டிதன் 207
துரைசாமி அய்யர், ம.வே. 335
துரைசாமி அய்யர், ம.வே. 335
துளசி தாஸர் 383
தேசிக விநாயகம் பிள்ளை, கவிமணி 15, 81, 439
தேவ விஜயகனி 387
தொல்காப்பியர் 15, 27, 28, 31, 39, 43, 45, 75, 82, 252
நக்கீரர் 11
நச்சினார்க்கினியர் 11, 86, 110 177
நம்மாழ்வார் 121, 134, 210, 407, 414
நமச்சிவாய முதலியார், சி.ஆர். 170
நல்லந்துவனார் 65
நல்லாவூர் கிழார் 71
நாதமுனி 42, 370
நாயன்மார் 42, 116, 117, 193
நாராயணன் பட்டாதித்தன் 200
நீலகண்ட சிவாசாரியார் 42
பதஞ்சலி 130
பர்த்ருஹரி 357
பரவை நாச்சியார் 205
பரவையார் 55
பரிமேலழகர் 11
பவ்ருயிட் 78
பாண்டியன் அறிவுடைநம்பி 31
பாணினி 126, 129
பாரதி 8, 14, 15, 57, 58, 125. 142, 383
பால் நாடார், ஏ.ஸி. 409, 415, 439
பிரடெரிக் ஹாரிசன் 2
பூங்கோயில் நம்பி 201
பெர்க்ஸன் 78
பெரியவாச்சான் பிள்ளை 195
பெரியாழ்வார் 116, 124, 131, 134, 135, 136, 162
பேராசிரியர் 11
மகாலிங்கையர், மழவை 335, 353
மணிவாசகப் பெருமான் 317
மயிலை நாதர் 211, 212
மாணிக்கவாசகர் 116
மாத்யூ ஆர்னால்டு 1. 2. 8
மில்டன் 153, 235, 312
மீனாட்சி சுந்தரம், பிள்ளை 165. 166, 168
முருகப்பச் செட்டியார் 364
முருகப்பா சொ. 361, 363, 367-369, 379, 396, 400
மெய்கண்ட தேவர் 42
மெகஸ்தனீஸ் 19, 127
ரவிகேஷணர் 387
ராகவன், வி. 169
ராகவையங்கார், மு. 200
ராகவையங்கார், ரா. 197, 224, 241, 351, 409-411
ராமாநுஜக் கவிராயர், முகவை 169, 170
ராமானுஜ ஐயங்கார் 430
லயூயிஸ், ஸி. எஸ். 199
வராஹமிகிரர் 60
வாணிதாசன் 216
வாசுதேவர் 127, 128
வாத்ஸ்யாயனர் 17
வால்மீகி 33, 121, 175, 198, 227, 228, 233, 241, 248: 289, 291, 303, 312, 334, 382, 391, 392, 417-419

விசுவா மித்திரர் 190, 274,319, 339, 345
விமலசூரி 387
வியாசர் 198
விவேகானந்தர், சுவாமி 148
வில்லி புத்தூரார் 91, 112
விற்றாற்று மூதெயினனார் 71
வேதநாயகம் பிள்ளை 423,424, 427, 428, 429, 430, 433, 436, 437, 440
ஜகந்நாதன், கி. வா. 335
ஜயதேவர் 136
ஜான்சன் 356
ஜெயங்கொண்டார் 181, 182
ஸ்ரீநிவாசையங்கார், வெ. நா 337
ஷண்முக சுந்தரம் 430
ஷேக்ஸ்பியர் 358, 377
ஷோப்பென் ஹாயெகர் 78
ஸ்காட் 154, 162, 166, 167
ஸ்டீக்தாங்கர். வி. எஸ். 356
ஸ்டீவல் 205
ஹாஸ்லிட் 78, 83
ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் 78
ஹேமச் சந்திரர் 387

Alexander Pope 377
Chidambaranatha Mudaliar, T. K. 404, 409
Fleet, V.V.S. 410
Furness 379
Howard 379
Iyer V. V. S. 410
Kalamagam 407
Kamban 403 - 405, 408, 410, 411, 414-417 419-421
Kambanadan 414
Kambanattalvan 413
Kanakasabhai pillai, V. 409
Lewis Theobald 377, 378
Meyer, J. J. 33
Nammalvar 407, 414
Ottakkuttar 416
Padikkasup pulavar 407
Paul Nadar, M. A. C. 409, 415
Perry 78
Raghava lyengar, R. Mahavidwan 409-411
Sastri, K. A. N. 412, 414
Selvakesavaraya Mudaliar, T. 410
Sreenivasa lyengar 409
Srinivasa lyengar, T. C. 427
Thirumangai 407, 414
Thomas Edward 378
Thomas Hammer. Sir 378
Vaiyapuri pillai, S. 427, 429
Valmiki 417, 418, 419
William warburton 378
Winternitz, M. 411

நூல்கள், இதழ்கள்... அகரநிரல்

அகநானூறு 4, 55-59, 72, 106, 123, 176, 418
அஞ்சுவதைப் பரணி 85
அத்யாத்ம இராமாயணம் 383
அதர்வண வேதம் 128
அபிதான விளக்கம் 359
அர்த்த சாஸ்திரம் 17
அவசர - இராமாயணம் 397
ஆசாரக் கோவை 280
ஆண்டாள் சரித்திரம் 134
ஆழ்வார்கள் பாசுரங்கள் 140
இரகுவம்சம் 211, 414
இரணிய வதைப் பரணி 85
இராசராச சோழனுலா 204
இராமகாதை 194, 197, 228, 237, 282, 379, 381, 396, 398, 401
இராமச்சந்திர சரிதபுராணம் 383
இராம சரிதம் 121, 175, 177, 179, 180, 198, 209, 228, 229, 232, 233, 240, 247, 248, 312, 313, 346, 389, 393
இராமாநுச நூற்றந்தாதி 225
இராமாயணம் 10, 89, 121, 177, 178, 194, 196, 208, 213, 217, 219, 224, 226, 237, 296, 312, 339, 347, 348, 350, 352, 363, 365, 373, 374, 389, 390, 394, 395, 414
இராமாவதாரம் 23, 235, 236
இராவண காவியம் 392
இராஜராஜேசுவர நாடகம் 201
இலக்கண விளக்கப் பாட்டியல் 85
இறையனார் அகப்பொருள் 113
இறையனார் களவியற் பொருள் 56
உத்தர புராணம் 387
எபிகிராபியா கர்நாடிக் 195
என் சரித்திரம் 165
ஏலாதி 259
ஐங்குறுநூறு 4, 61, 62, 105
கண்ணன் பாட்டு 125
கண்ணுடையம்மன் பள்ளு 365
கந்தபுராணம் 113, 373
கம்பநாடகம் 191, 419
கம்பராமாயணம் 10, 74, 196, 212, 213, 313, 317, 318, 335, 339, 344-346, 346, 377, 388, 391, 398, 407
கம்பன் காவியம் 193, 376, 396
கமலாம்பாள் சரித்திரம் 81, 179
கலிங்கத்துப் பரணி 181, 202, 205, 207, 262
கலித்தொகை, 33, 65, 67, 105, 123, 176, 253
களவழி 87
களவியலுரை 11
கன்னிவன புராணம் 202
காமசூத்திரம் 17-19
குமரம் 113
குமார சம்பவம் 113
குயிற்பாட்டு 58
குலோத்துங்க சோழ சரிதை 202, 203

குலோத்துங்க சோழனுலா 204, 221
குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் 207
குற்றாலக் குறவஞ்சி 12
குறுந்தொகை 4, 6, 26, 29, 63, 105
சக்தி 424
சங்க இலக்கியங்கள் 4, 68, 105, 110, 175, 252, 330
சடகோபர் அந்தாதி 370
சதகத்ரயம் 356
சதுரகராதி 12
சமயக் கொள்கைகள் 435
சாசனத் தமிழ்க் கவி சரிதம் 200, 201, 203, 223
சித்திர ராமாயணம் 398, 399
சிலப்பதிகாரம் 8, 18, 32, 154, 178, 179, 260, 261, 274, 372, 373
சிறிய திருமடல் 84
சிவக சிந்தாமணி 9, 210, 214, 259, 259, 260, 318, 337, 372, 373, 413
சிறாப்புராணம் 12
சுரபுராணம் 133
சுவர்க்க நீக்கம் 243, 312
சூரபத்மனின் வதை 111
சூளாமணி 9, 259, 260, 372, 373, 376, 413
செங்கோன்றரைச் செலவு 251
செந்தமிழ் 169, 196, 216, 217, 222, 252, 343, 409, 411, 414, 415
செருக்கள வஞ்சி 87
சோழமண்டல சதகம் 216, 219, 245, 246
த்ரிசஷ்டி சலாகா புருஷ சரித்திரம் 387
தக்கயாகப் பரணி 85, 207
தமிழ்ச் சுடர்மணிகள் 195, 409, 410
தமிழ் நாவலர் சரிதை 196, 215, 216, 245
தமிழ் மக்கள் பண்பாடு 437
தமிழர் சால்பு 437
தாப்புலிப்பா 251
திருக்குறள் 7, 8, 11, 24, 32, 33, 36-39 151, 156, 166, 226 258, 350
திருத்தொண்டர் புராணம் 203
திருப்பாவை 67
திருப்புகழ் 121
திருமுருகாற்றுப் படை 4, 105, 112, 113, 120, 121
திருவள்ளுவமாலை 43
திருவாசகம் 7, 25
திருவாரூர்ச் சாசனம் 205
திருவிளையாடல் 350
திருவிளையாடற் புராணம் 318
திருவெம்பாவை 67
திருவெழுகூற்றிருக்கை 84
திவ்ய சூரிய சரிதம் 120
திவாகரம் 92, 131
தென்னிந்திய சாசனம் 197
தென்னிந்திய சிலாசாசனம் 205
தேம்பாவணி 12
தேவாரம் 7, 45, 113, 262
தொல்காப்பியம் 8, 23, 32, 36-38, 44, 62, 63, 69, 78, 353
நவநீதப் பாட்டியல் 86, 413
நவீன கீதை 141-143
நற்றிணை 4, 19, 64, 66, 105, 106
நன்னூல் 167-169, 211, 415
நாச்சியார் திருமொழி 73

நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் 81
நாலடியார் 154
நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் 162
நாலாயிரம் 7, 262
நீலகேசி 223
நெடுந்தொகை 56
நெடுநல்வாடை 26, 161
பகவத்கீதை 121, 140-142
பஞ்ச காவியங்கள் 84
பட்டினப் பாலை 37, 38
பத்துப்பாட்டு 4
பத்ம புராணம் 387
பத்மாவதி சரித்திரம் 171
பதிற்றுப் பத்து 4, 31, 35, 256
பதினெண் கீழ்க்கணக்கு 7, 258
பம்பா இராமாயணம் 383
பரணி 87, 89
பராங்குச நாடகம் 352
பரிபாடல் 6, 18, 65, 66, 105, 110, 112, 113, 120, 123, 225, 256
பரிபாடல் திரட்டு 28, 177
பவும சரிய (பத்ம சரித) 387
பழமொழி 31
பன்னிரு பாட்டியல் 84, 85, 413
பன்னூல் திரட்டு 162
பாகவத புராணம் 137
பாரதம் 10, 113
பாரத வெண்பா 91
பிரதாப முதலியார் சரித்திரம் 171
பிரபந்த மரபியல் 84
புறத்திரட்டு 42, 162, 178, 194
புறநானூறு 4, 27, 29, 35-39, 41, 44, 46-52, 54, 61, 62, 105, 116, 122, 175, 252, 312, 418
புறம் 26, 30, 32, 33, 35-37, 39
பெரும்பாணாற்றுப் படை 6
பைபிள் 167
பொருநராற்றுப் படை 6, 24
பௌத்த இராமாயணம் 383
மகாபாரதம் 89, 109, 126-128, 140
மணிமேகலை 9, 18, 372
மதுரைக் காஞ்சி 25, 29, 176, 256
மலைபடுகடாம் 30
மலையாள அகராதி 110
மழலைச் சிங்கார சதகம் 353
முக்கூடற் பள்ளு 12
முத்தொள்ளாயிரம் 11
முல்லைப் பாட்டு 25
மூவருலா 12, 205
மெய்கண்ட சாஸ்திரம் 369
யாப்பருங்கல சூத்திர விருத்தி 177
யாப்பருங்கல விருத்தி 8, 43
ரகுவம்சம் 177, 316
ராஜராஜ நாடகம் 21
ரிக்வேதம் 126
வால்மீகி-ராமாயணம் 113, 175, 179, 136, 339, 345, 390, 391
விக்கிரம சோழன் உலா 221
விநோதரச மஞ்சரி 216
வியாகரணம் 127
வீரசோழியம் 213, 264, 417
வீராணுக்க விஜயம் 201

வெண்பாப் பாட்டியல் 84, 85
வெண்பா மாலை 90
வைஜயந்தி நிகண்டு 200
ஜைன இராமாயணம் 383, 384, 386-388
ஸ்ரீ புராணம் 119, 179, 383, 386
ஸ்ரீ ராஜராஜ விஜயம் 200, 203
ஸ்கந்த புராணம் 111
ஸ்காந்தம் 120
ஸ்மிருதிகள் 72, 74
ஸ்மிருதி நூல்கள் 70
ஹர்ஷ சரிதம் 201

Ahananuru 418
Aivarmalai Inscription 411, 412
Apastamba 33
Arunagirinathar's Tiruppugal 405
Chintamani 413
Chulamani 413
English Literary Criticism 378
Epigraphia Carnatica 155
Growth of civilization 78
History of Indian Literature 411
Kamba Natakam 419
Kamba Ramayanam 407
Nannul 415
Navanitha-P-Pattiyal 413
New Variorum Shakespeare 379
Pannirupattiyal 413
Peruntogai 407
Pride and prejudice 155
Purananuru 418
Ramayanam 414
Raghuvamsam 414
Sacred Books of the Buddhists 35
Sen Tamil 409, 411, 414, 415
Sexual life in India 33
Shakespeare Restored 377
Tamil-chudar manigal 409, 410
The Age of Kamban 409
The Concise Cambridge History of English Literature 378
The Pandyan Kingdom 412
Thondaimandala Satakam 407
Vachananthi Malai 413
Vira soliyam 417

பொருட்குறிப்பு அகரநிரல்

அகச்சமயம் 133
அகப்பை 372
அகப்பொருட் கவிகள் 43
அகம் 5, 31, 47, 56
அகராதிகள் 359
அகலிகை 319
,, சரித்திரம் 393
,, சாபம் 177
,, படலம் 381
அகவல் 253
அகவற்பா 7
அகழ் பரிசோதனை 251
அச்சுப் பதிப்புகள் 355
,, பாடங்கள் 394
,, பிழைகள் 340
,, யந்திரம் பிரசாரம் 14
,, யந்திரம் 12
அசுப கிரகங்கள் 71
அசோகவனம் 325, 326
அடிக் குறிப்பு 376
அடிநிலம் 394
அடிபுதை அரணம் 25
அடியவர்கள் வரலாறு 120
அடியார்கள் 6
ராஜாஸர் 367
அண்ணாமலைச் செட்டியார், இராஜா, ஸர் 367
பல்கலைக் கழகத்தார் 396
அணங்கு 91
அணிகலம் 31
அணியிலக்கணங்கள் 193
அணு 114
,, மஹான் 388
அதிகமான் 30
அதிகாயன் 313
அதிமானுஷ்ய வியக்தி 127
அதிவியாக்கியானம் 402
அதி விருஷ்டி 402
அந்தணப் பேய் 100
அந்தணர் 28, 31, 35, 167, 258,
,, வேள்வி 38
அநபாய நல்லூர் 205
அநாகரிக மணம் 69, 70
அநித்தன் 140
அநுமன் 325
அபக்கிரியைகள் 35
அபயன் 89, 92, 94-96, 101
அபரச் சடங்குகள் 70
,, சுப்ரமண்யம் 131
அபாராஜிதை (கோசலை) 388
அபியுக்தர் 181, 184
அம்பலப் புழை அரணமனை 339
அம்பா ஆடல் 67
அம்மி மிதித்தல் 71, 74
அமராபரணன் சீயகங்கன் 211, 212, 223
அமைச்சர் 36
அயோத்தி 178, 240, 273, 282, 322, 386
அர்ச்சுனன் 129, 141
அர்த்தமாகதி 119
அரக்கர் 269, 294, 299, 314
அரங்கநாதன் சந்நிதி 239
அரங்கேற்றம் 237, 372, 373, 413
அரங்கேற்று காதை 373, 412
,, விழா 249, 250
அரச கேசரியர் 211
,, கேசரியார் காலம் 211
அரசர் 18, 26, 35, 36
அரசியல் நிலை 336

அரசியல் வரலாறுகள் 4
,, கொள்கைகள் 4
அரபுச் சொற்கள் 15
அரிசிப் பல்லி 99
அருகக் கடவுள் 119
,, சமயத்தவர்கள் 39
,, சமயம் 38
அருகர்களுடைய பிறப்பு வரலாறுகள் 118
அருங்கலை விநோதன் 223, 375, 415
அருங்கேடன் 46
அருண்மொழித் தேவர் 203
அருந்ததி காணுதல் 71
அருளாட்சி 120
அல்லியக் கூத்து 30
அலங்கார முறை 391
அவதாரம் 131
அவுணன் 111
அழகுத் தெய்வம் 316
அழுகை 79, 82
அழுத்தம் 394
அறநிலையப் பாதுகாப்புத் தலைவர் 333
அறநெறி 52
அறம் உரைக்கும் மன்றம் 27
அறிவு-ஆற்றல் 391
அனந்த ரதர் 387
,, விரியர் 387
அனபாயன் 203, 204
அனுமான் 189, 191, 290, 386, 387
அஜகஜாந்தம் 183
அஷ்டநாக பந்தங்கள் 171
ஆகமம் 67
ஆங்கிலம் 46, 60, 78, 119, 167, 208, 354
ஆங்கிலம் நூல்கள் 354
ஆங்கிலேயராட்சி 46, 47
ஆசாரிய புருஷர்கள் 193
ஆசாரியார்கள் 209
ஆடல் 30
ஆத்ம விளக்கம் 171
ஆதி கவி 227
,, காலம் 23
,, காவியம் 317
,, நிலை 68
ஆந்தைகள் 93
ஆராய்ச்சி 163
,, குறிப்பு 357, 358
,, பதிப்பு 332, 334, 343, 354, 360, 375, 439
,, வண்ணம் 14
ஆரிய சமுதாயம் 227
,, தெய்வங்கள் 39
,, மக்கள் 6, 28, 175, 392
,, வகுப்பு 71
'' நாகரிகம் 228
ஆருகதப் பள்ளி 257
ஆலோசனைக் குழு 430
ஆழ்வார்களுக்குக் கம்பன் பிற்பட்டவன் 371
ஆழ்வார் திருநகரி 350, 352
ஆறு ருதுக்கள் 23
ஆனி 60
இக்குவாகு 89
இகவாழ்வு 53
இசைக் கருவிகள் 5
இசைக்குரிய பாடல்கள் 5
இசையுணர்ச்சி 6
இடைச் செருகல் 338, 339, 346, 347, 400
,, சேரி 124
இடையர் குலங்கள் 137
இடையன் 35
இத்தாலி 78
இதிகாசம் 132
இந்தியன் 361

இந்திரசித்து 82, 191 285 421
இந்திரர் 13, 50
இந்திரன் 90, 177, 348
,, பதவி 314
,, ஜால வித்தை 94-96
இந்துஸ்தானிச் சொற்கள் 15
இம்மை 39
,, பயன் 14
,, உலகம் 31
இமயகிரி 96
இமயம் 175
இயல், இசை, நாடகம் 11
இயற்கை ஒத்திசைப்பு 5
,, இதிகாசம் 312
,, ஓசை 253
இயற்கையோடு ஒட்டியநெறி 55
இயற்சொல் 19, 45
இரட்டர் 349
இரட்டை வாளி 99
இரண்டாம் இராஜராஜன் 218
,, இராசேந்திரன் 90
,, குலோத்துங்கன் 205, 218, 220
இரணியன் 132
இரவலர் 27, 30
இராக்கிவிஸ் 127
இராச மகேந்திரன் 90
இராசாதித்தன் 90
இராமன் 76, 82, 132, 179, 180, 185, 189-191, 274, 277, 279, 281, 282, 304, 310, 311, 319-323, 326-328, 341, 346, 386, 388-393, 400
இராம கதாம்ருதம் 239
,, கிருஷ்ண பரமஹம்ஸர் 148, 150
,, சரிதப் பகுதிகள் 175
,, தூதன் 326
இராம ஜாதகம் 133
இராமாயண உணர்ச்சி 338
,, ஏடுகள் 223
,, கதைச் சுருக்கம் 359
,, காலக்ஷேப முறை 390
,, கானம் 230
,, கீதம் 234, 235, 250
,, சுருக்கம் 397
,, செய்யுள் 206
,, சுவடிகள் 352, 360
,, திருவிருத்தங்கள் 337
,, பதிப்பாளர்கள் 337
,, பதிப்பு 367, 376, 378, 379
,, பிரசங்கம் 348, 390
,, பிரசங்கிகள் 402
,, பிரதிகள் 208, 373
இராமாவதாரம் 194, 233, 235, 236, 271
,, செய்யுட் பாடாந்தரம் 343
இராவணன் 176, 179, 185, 191, 265, 289, 291, 292, 296, 297, 299, 305, 310, 313-315, 328, 386, 387
இராஜ கேசரி 89,
இராஜ ராஜன் 201, 205, 220, 264
இராஜேந்திர சோழ தேவன் 213
இராஜேந்திரன் 201
இலக்கணங்கள் 193
இலக்கிய ஆராய்ச்சி 369, 439
,, ஆராய்ச்சியாளர் 373
,, சரிதம் 42, 195
,, நயமுறை 393
,, நிலை 336
,, வரலாற்று ஆராய்ச்சி 161
,, வரலாறு 13

இலக்கியம் என்னும் கலை 393
இலக்குமணன் 82, 272, 279, 280, 282, 285, 286, 288, 311, 341
இலங்கை அரசன் 219
இலங்கைச் சரித்திரம் 219
,, போர் 97
இளமை 82
இளவேனில் 23, 61
இறைச்சி 72
இறையிலி 200, 202, 203
ஈசல் 30
உக்கிரசேனன் 137
உக்கிரப் பெருவழுதி 56
உக்கிர பாவம் 120
உச்சிப் பொழுது 29
உடல் நூல் 78
உடைகள் 24
உண்டாட்டுப் படலம் 79, 80
உண்டி அளித்தல் 71
உண்மைப் பாடம் 377, 379
,, ,, ஆராய்ச்சி 439,
,, மூலங்கள் 379
,, மூலபாடப் பதிப்பு 400
உணர்ச்சிப் பாடல்கள் 5
உத்தம இலட்சியங்கள் 37
உத்தம சகோதரன் 272
உத்தம பாத்திரங்கள் 383
உத்தம புருஷன் 179
உத்தர காண்டம் 177, 216
உத்தராயணம் 61
உத்தராயணம் புதுமை 68
உத்தேச பாடம் 359, 376
உத்யான யாத்திரைகள் 20
உதீசி 45
உபகதை 345, 389
உபந்நியாசம் 390
உபநிஷத் 126
உபாத்தியாயர்கள் 80, 81
உமாதேவி 105
உயர்தர வகுப்பினர் 152
உயிர்த் தத்துவம் 59
உரைகள் 11
உரைகாரர் 18, 45, 363
,, ஆணி 350
,, இடையிட்ட சுருக்கப் பதிப்பு 399
,, இயல் காலம் 10, 11
,, நடை 267
,, நடை நூல்கள் 163
உருத்திர சன்மன் 113
உருத்திர யோகினி 96
உலக அனுபவம் 80
உலக இலக்கியங்கள் 296
உலக மகாகவி 197
உலாவியல் 321-324
உவமம் 253
உளநூல் 78
உளநூல் ஆசிரியர் 79
உளநூல் உணர்ச்சி 394
உளநூல் முறை 394
உளுத்தஞ் சோறு 72
ஊது கொம்பு 64
ஊர்ப்புறம் 27
ஊர்ப் பொது மன்றம் 117
எச்சவியல் 15
எண்ணெண் கலை 18
எண்ணெய்தேய்த்து நீராடுதல் 28
எண் பேராயம் 86
,, வகை மணம் 70
எலிய டோரஸ் 127
எள்ளல் 82
எஸ்பிளனேட் 169
ஏகபத்தினி விரதம் 51
ஏகாதிபத்தியம் 262
ஏகாவலி 99
ஏட்டுப் பரிசோதனை 394

ஏட்டுப் பாடல்கள் 394
,, பிரதிகள் 335, 359, 429, 436
ஏடு வாசித்தல் 341
,, எழுதுவோர் 236
ஏழு சோற்றுத் திரளை 70
ஏழு நூற்றாண்டுகள் 65
ஐதிகங்கள் 21
ஐம்பெருங்குழு 36
ஐரிஷ் பக்கள் 75
ஐரோப்பியர் 12, 15
ஒட்டகங்கள் 93
ஒருவனுக்கு ஓர் மனைவி 32
ஒழுக்கக் கலை 17
ஒழுக்க நூல்கள் 7
ஓசை 394
ஓமம் 72
ஓமம் வளர்த்தல் 70
ஓரங்கல் நாடு 195, 215
ஓவியம் 18
கங்கை 90, 128, 262, 329
கச்சி 97
நகர் 98
கட்டளைக் கலித்துறை 43
கடம்ப மரம் 111
கடற்கரை 58
கடாரம் 90, 224, 262
கடை நிலை 27
கண்டி 219
கண்ணகி 73, 77
கண்ணன் 106, 107, 134, 141
கண்ண பிரானது திவ்விய சரித்திரம் 121
கணிகை 18
கணிதப் பேய் 96
கப்பல் 58
கம்சன் 123, 138, 139, 140
,, வதம் 127
கம்ப சித்திரம் 324
கம்பர் காலம் 207, 210
,, திருவிழா 241
கம்பரது இராமாவதாரம் 235
கம்பராமாயணம் 225, 313, 317, 318, 335, 339, 342, 344-346
கம்பராமாயண உலகு 363
கம்பராமாயணப் பதிப்பு 355
,, ,, முயற்சி 400
,, பிரதிகள் 355, 366, 367, 379
,, பிரவசன் 351
கம்பன் இயற்றிய பாயிரம் 334
,, உலக மகாகவி 251
,, ,, கவிகளுள் ஒருவன் 689
,, கருத்துக்கள் 393
,, காலம் 374, 383
,, சமாதி 365
,, சித்திராலயம் 331
,, தமிழ் 271
,, திருநாள் 366, 368
,, தோற்றம் 180
,, பாட்டு 399
,, புகழ் 364
,, மேடு 365
கம்பனது இலக்கியத் திருக் கோயில் 333
,, உள்ளக் கிடக்கை 390
,, கவித்துவச் சிறப்புக்கள் 395
,, காவிய உலகு 395
கம்பனைக் கற்கும் நெறிகள் 389
,, குறித்த வரலாற்றுச் செய்திகள் 375
கமல பத்தங்கள் 171
கர்ண பரம்பரை 219, 365
கரணம் 69

கரிகாலன் 90
கருணாகரத் தொண்டைமான் 88, 89, 98
கருநாண் 99
கருடத்வஜம் 127
கருத்துலகு 46
கல் 37
கல்ச்சர் 2
கல்யாணம் 80
கல்வி 46
,, பயிலும் கழகம் 117
கல்வியின் எதிர்காலம் 153
கல்வெட்டுக்கள் 196
கலம்பகம் 262
கலாக்ஷேத்திரம் 352
பதிப்பு 423
கவி 253
கலிங்கம் 224
,, நாடு 96
,, வீரர்கள் 100
,, வெற்றி 90, 210
,, போர் 89, 97, 202
கலிங்கர் 349
கலிப்பா 253
கலிப் பாடல்கள் 6
கலிபந்தம் 127
கலியாணவரி 219
கலியுகம் 113
கலை 17
,, உணர்ச்சி 399
,, காட்சிகள் 21
,, கோயில் 379
கலைகளின் பரப்பு 21
,, வரலாறு 20
கலையின் வகைகள் 17
கவிச்சக்கரவர்த்தி 181, 182
கவித்துவ சிருஷ்டிகள் 191
,, மதிப்பு 183
கவித்துவத்தின் நூதன சிருஷ்டி 191
கவிதை 163
,, தெய்வம் 333
,, பிரவாஹம் 236, 237
கவிதையின் நோக்கம் 382
கழங்கூடுதல் 33
கழுகு 97, 102
களப்பலி 91
களவழிக் கவிதை 90
கற்கோயில்கள் 379
கற்பின் ஓவியம் 331
கற்பு நெறி 31
,, தெய்வம் 290, 325, 331
கற்றல் 154
கறிகள் 29
கன்னடம் 45, 119, 264
,, கல்வெட்டு 195
,, சாசனம் 350
,, சொற்கள் 15
,, தேசம் 195
,, மொழி 119
கன்னடமும் தெலுங்கும் 44
கன்னிப் பருவம் 33
கன்னி வன புராணம் 202
கஸீண்டி 127
காக்கை அழைத்தல் 162
காசி அரசன் 383
காஞ்சி 88
காட்டுத் தெய்வம் 110
காடு கிழவோன் 91
காண்டம் 336
காதல் 5, 23
,, கதைகள் 133
,, நெறி 55
,, மணம் 70
காந்தருவ மணம் 70
காந்தியடிகள் 50

காப்பு நாண் கட்டுதல் 73
காபாலிகம் 42
காமக் குறிப்பில்லாத
விளையாட்டு 66
காமன் 68
காமரஸம் 393
,, முறை 393
கார் 23, 61
கார்த்திகை மகளிர் அறுவர் 111
காரைக்குடி 379, 438
,, கம்பன் கழகம் 333, 360, 361
கால நிர்ணயம் 370
காலக்ஷேபம் 390
,, முறை 389, 393
காவல் பணிவிடை 386
காவிரி 90, 243
காவிய உணர்ச்சி 193
,, காலம் 8, 9
காவியங்களின் தோற்றம் 194
காவேரி 219
காளாமுகம் 42
காளி கோயில் 86
,, தேவி 92
கிரீக்கு 78, 362
கிருஷ்ணன் 123, 126, 129, 136, 137, 139, 141
,, சரிதம் 132
,, புரம் 127
கிருஷ்ணாவதாரம் 131
கிள்ளி வளவன் 90
கிளி 59
கிறிஸ்து சமயம் 14
கிஷ்கிந்தா காண்டம் 376
கீதம் 18
,, கோவிந்தம் 136
கீதம் வாத்திய நிருத்தங்களின்
அரங்கு 117
கீர்த்தனைங்கள் 22
கீரை 29
கீழ்த்திசை 45
குகன் 186, 191
குசேலனுடைய சரித்திரம் 122
குட்டைச்சி 99
குடிகாரர்கள் 79
குடியேற்றம் 46
குண சாகாரம் 363
,, சௌந்தர்யம் 317
,, பத்திரர் 387
குதிர் வயிறு 99
குதிரைகள் 299
குதிரையினுதிரம் 160
குப்பாயம் 25
கும்பகர்ணன் 190, 191, 266, 289-291, 292-296, 300-307, 309-311, 313, 315
,, வதைப் படலம் 314
கும்பகோணம் 221
குமரக் கடவுள் 110
குமரி 175
குயவன் 35
குரக்கினத்தவர் 387
குரவை 71
,, கூத்து 64, 86
,, அயர்வு 65
குருக்கள் 147, 349
குருகூர் 350, 351
குருபரம்பராப் பிரபாவம் 120
குருக்ஷேத்திரம் 128

குலதனம் 59
குலோத்துங்கன் 90, 202, 204, 220
,, சோழதேவர் 205
,, சோழன் II 221
,, ,, காலம் 219
குழம்பு 30
குறவன் 35, 85
குறள் 24, 32
,, பாக்கள் 252
,, வெண்பா 43
குறிஞ்சி 105, 110
குறுநில மன்னர் 26
,, மோடி 99
,, வெண்பாட்டு 43
கூத்தன் 35
கூத்திப்பேய் 101
கூத்து 17
கூதிர் 61
கூரெயிறி 99
கூலிப்படை 46
கூழ் 29
,, சமைத்தல் 99
,, வார்த்தல் 100
கூளிப்பேய் 98
கூறை 24
கூனி 371
கேகய நாடு 282
கேசவன் 123
கேசி 123
கைகேயி 272
கொங்கு நாடு 219
கொல்லன் 35
கொள்ளியாறு 89
கொளு 91
கொற்றவை 92
,, நிலை 91
கோகர்ணக் கல்வெட்டு 205
கோகுலம் 138
கோட்டியூர் 124
கோடை 61, 62
கோதமை 89
கோதாவரி 89
கோபியர்கள் 123
கோயில் 26, 110
,, மடங்கள் 12
கோர ஆங்கிரஸர் 129
கோவர்த்தனகிரி 125
கோழி 28
கௌசல்யை 386
கௌடநெறி 263
கௌமாரப் பருவம் 126
கௌரவர் 141
சக்கரக் கோட்டம் 87
சகரயாண்டு 197
சகாப்தம் 372
,, வழக்கு 372
சகோதர வாத்ஸல்யமூர்த்தி 304
சங்க காலம் 16, 24, 68, 73, 180
,, செய்யுட்கள் 253, 262
,, தமிழ் 260
,, நூல் தொடர் 245
சங்கரன் 218
சங்கஷணர் 128
சங்கு 64, 73, 299
சடகோபரந்தாதி 210
சடங்குகள் 69, 70
சடையப்பர் 217, 219, 231, 233, 238, 241, 243, 245, 247, 250, 369
சத்துருக்கன் 372, 386
சதய நாள் 90
சதுரர் 19

சந்த்ர முகா 387
சந்திரகுப்த மௌரியர் 127
சந்நியாசி 80
சப்த சித்திரங்கள் 121
,, பதி 70, 72
சமணப்பேய் 100
சமணர் 362
சமயம் 46, 144-148
,, வளர்ச்சி 67
,, கொள்கை 4, 6, 7
,, சாஸ்திர காலம் 9
,, தத்துவங்கள் 9
,, நிலை 382
,, நூல் 20
,, பொருள்கள் 193
,, வாதங்கள் 117
சமஸ்கிருதம் 168, 169
சமாதி 369
சமுதாய நிலை 336
,, நூல் 78
,, ,, ஆசிரியன் 79
சமூக இயல் நூல் 69
,, சேவை 50
சர்வாதிகாரி 377
சரராமன் 217
சரவணபவன் 111
சரஸ்வதி 128
,, மஹால் 207
சரித்திர ஆசிரியர்கள் 365
,, பங்கயம் 184
,, புருஷன் 170
சரித நயம் 87
,, வேறுபாடு 386
சலனக் கலைகள் 17
சனகன் 314
சாக்கிய மரபு 383
சாதி 29
,, தொழில்கள் 38
சாந்த பாவம் 120
சாமிநாதையரவர்களது நூல் நிலையம் 352
சார்வாசர்கள் 104
சானகி 298
சாஸ்திர உணர்ச்சி 9, 10
சாஸ்திரங்கள் 263
சிங்களம் 45
சிங்களர் 349
சித்திரம் 17, 18
,, கூடம் 386
,, சாலை 117
,, தன்வன் 90
,, மண்டபம் 88
,, முறை 398
சித்திரை 60
சிதம்பரம் 243
சிபி 89
சிருஷ்டி தத்துவம் 190
,, ரகசியம் 57
சிலம்பு 19, 86
சிலாசாசனம் 264
சிவன் 85
,, குமாரர் 112
,, தனுஸு 322
,, புராணம் 120
,, பூசை 167
,, பெருமான் 105, 111, 113, 130, 133, 320, 348
,, விஷ்ணு மூர்த்திகள் 119
சிவாலயம் 29
சிற்பம் 17, 18
,, நூல்கள் 118
,, முறை 395
சிற்றரசர் 374
சிற்றிலக்கியங்கள் 193
சிறுகதைகள் 171, 172
,, இனங்கள் 172
சிறு துயில் 36
,, தெய்வங்கள் 38

சிறு பாட்டுக்கள் 7
சிறுவர்க்குரிய இலக்கணம் 353
சினிமா அரங்குகள் 55
சீதை 82, 178, 290, 293, 295, 313, 314, 318, 320-322, 325-327, 329, 330, 341, 386, 388, 393
,, இராவிடப்பெண் 392
சீதையின் பாதாதி கேச வருணனை 393
சீதோஷ்ண நிலை 23
சுக்ரீவன் 310, 311, 386
சுத்தப்பதிப்பு 396, 399
சுந்தர காண்டப் பதிப்பு 376
சுப்பிரமணியம் 131
சுமங்கலி 71
சுமத்திரா 224, 262
சுமித்திரை 272
சுரகுரு 90, 94, 96
சுராதிராசன் 89
சுருக்கப் பதிப்பு 399
சுலோகங்கள் 391
சுவடிப் பாடல்கள் 376
சுவர்க்கம் 39
சுவாதித் திருநாள் 22
சுற்றம் ஓம்பல் 32
சூடகம் 99
சூர்ப்பணகை 76, 186
சூரபத்மன் 111
சூரிய வணக்கம் 129
சூலிப் பேய் 101
செங்கட் சீயம் 132
செஞ்சோற்றுக் கடன் 307
செட்டி நாடு 368
செப்பியன் மாதேவி 264
செய்யுள் 336
,, இலக்கணம் 357
,, ஓசை 344, 357, 394
,, பொருள் 339
செய்யுள் நோக்கு 381
,, முதற்குறிப்பு 359
,, முறை வைப்பு 376
,, வகைகள் 184,
,, வரலாறு 253
,, வளம் 184, 187
செயற்கை நலன்கள் 5
,, இதிகாசம் 312
செல்வக் கடுங்கோ வாழியாதன் 256
செறிதவர் 66
சென்னை 169, 331, 379
,, கல்விச்சங்கம் 353
,, கலாக்ஷேத்திரம் 334
,, ,, நிர்வாகிகள் 396
,, ராஜதானிப் பாடசாலை புத்தக சங்கத்தார் 397
சேதிபர் 349
சேயோன் 105, 110
சேர சோழ பாண்டியர்கள் 224, 246
சேரநாடு 87
சேர பாண்டியர் 52
சேரர் 18, 349
சேவல் 112
சேனை 304
சைவம் 107, 117, 132
,, உணவு 30
,, சமயம் 317
,, ,, உணர்ச்சி 65
,, சித்தாந்தி 168
,, ,, கொள்கை 369
,, வைஷ்ணவ சமயத்தினர் 162
சொல் வரலாறு 61
,, வளம் 183, 187
சொல்லங்காரம் 391

சொல்லாற்றல் 391
சொல்லுணர்ச்சி 344
சொற்களின் உயிர்த்தத்துவம் 183
சொற் செல்வம் 45
சோழ அரசர்கள் 10, 11
,, அரசாங்கம் 181
,, நாட்டு அரசன் 219
,, மண்டலம் 213
சோழர் 349
,, காலம் 15
,, ராஜ்ஜியம் 21
,, வம்சம் 96
சோழன் செங்கணான் 90
ஞான யோகம் 130
டச்சு 15, 45
டன்ஸியாட் 170
டி. கே. சி. பதிப்பு 399
தத்துவ நன்மொழி 53
,, நூல் 45, 78
,, பொருள்கள் 193
,, விசாரணை 37, 180
தத்துவார்த்த முறை 393
தச்சன் 35, 81
தசமுகன் 387
தசரதன் 133, 188, 273, 277, 319, 320, 383, 386, 388
,, ஜாதகம் 133
தஞ்சாவூர் அரண்மனை 207
தஞ்சைப் பிரதேசங்கள் 115
தமிழ் 44, 78, 199, 267
,, அன்னை 229, 238
,, இலக்கணம் 112
,, ,, இலக்கிய உணர்ச்சி 348
,, இலக்கியம் 112, 161, 252
,, இலக்கிய வரலாறு 4, 197, 210, 336, 351
தமிழ் உணர்ச்சி 54, 182
,, உலகு 336
,, கதை 261
,, கல்வி 60
,, கலை வாணியின் மணி மகுடம் 351
,, கவிதை 236
,, கற்பரசி 331
,, சமுதாயம் 34
,, தெய்வம் 242
,, நாட்டுச் சரிதம் 195, 210
,, நாட்டுப் பண்பாடு 180
,, நாடு 125, 179, 180, 181, 336
,, நூல் பதிப்பாசிரியர்கள் 335
,, பண்பு 227
,, பேரிதிகாசம் 10
,, மக்கள் 7
,, மறை 122
,, மொழி 1, 7, 12, 15, 16, 112, 263-265
,, மொழியும் இலக்கியமும் 4
,, வசனம் 11
,, வடமொழி இலக்கியங்கள் 187
,, வேதம் 228
தமிழக வாழ்க்கை 23
தமிழர் 318
,, பண்பாடு 13, 16, 193, 278, 331, 433
தமிழின் தந்தை 112
தமிழுக்கே கதியாவர் இருவர் 7
தர்க்க முறை 890
தர்மோபதேசம் 387
தருப்பை 37
தருமதேவதை 243
தலைச் சங்கத்து நூல் 251
தலைமுறை வேறுபாடு 47

தன வைசியர் நாடு 364
தனித் தமிழர் நாகரிகம் 228
தனிச் செய்யுட்கள் 388
தனியன் 194, 208, 211, 334-537
தனுர் ராசி 60
தற்றுடுத்தல் 24
தக்ஷிண இந்து சமுதாய வாழ்வு 228
தக்ஷிணாயநம் 61
தாடகை 319
,, வதம் 319
தாடி 29
தாம்பூலம் 101
தாமரைப்பூ 31
தாய்மொழி 229
தாரக வதம் 111
தாருகன் 111
தாரை 299
தாலம் 30
தாலிகட்டும் சடங்கு 72
தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 152
தாழிகை 6, 253, 287
தாளம் 394
தாளிதம் 29
தாஜ்மஹால் 332
திசைச் சொல் 15, 45
தியாக சரித்திரம் 221
,, விநோதன் 196, 220-222, 374
,, ,, பட்டன் 374
,, ,, மூவேந்த வேளான் 374
திராவிட-இந்து சமுதாயம் 227
,, மொழிகள் 44
திராவிடனான இராவணன் 392
திரிகர்த்தராயன் 246
,, சடை 315, 341
திரிசொல் 15, 45
,, புரம் 106
,, புவனி 202
,, ஷஷ்டி சலாகா புருஷர்கள் 119
திருக்குருகூரினர் 351
திருக்கோயில் 20, 332
திருச்சீரலைவாய் 111
திருச்செந்தூர் 106, 111, 112
திருத்தப்பாடம் 376
திருந்திய அறிவு நிலை 434
திருநாமத்துக் காணி 21
திருநெல்வேலி 365
திருப்பதிகம்பாடிய வரலாறு 116
திருப்பரங்குன்றத்துச் சித்திர மண்டபம் 177
திருப்பரங்குன்றம் 111, 112
திருப்புகழ் 113
திருமணம் 69
திருமந்திர வோலையாள் 88
திருமால் 38, 85, 97, 117, 131, 132, 180, 226, 291, 346
,, முதல் குலோத்துங்கன் ஈறாகவுள்ள பரம்பரை 89
,, இருஞ்சோலை 123
திருமுக மண்டலம் 238, 275
திருவதிகை 88
திருவரங்கம் 237, 243
திருவழுந்தூர் 365, 366
திருவனந்தபுரம் 22, 84, 356
திருவாங்கூர் அரண்மனை நூல் நிலையம் 339
திருவாணைகள் 47
திருவாதிரை 67
திருவாரூர் உடையார் 205
திருவாரூர்க்கமலாலயம் 201
திருவாவினன்குடி 111

திருவிளையாடல் 120, 126
திருவெண்ணெய்நல்லூர் 243, 248, 365
திருவேரகம் 111
திருவொற்றியூர் வல்லி 247
தில்லை 88, 204
திவாகரச் சூத்திரங்கள் 62
திறவுகோல் 391
திறைப்பொருள்கள் 88
தீக்கடைகோல் 26
தீண்டாச் சாதியார் 148
தீர்த்தங்களால் நீராட்டுதல் 73
திவலம் செய்தல் 70, 72, 74
தீக்ஷிதர்கள் 116
திவை 386
துடியன் 35
துயில் எழுப்புதல் 299
துர்க்கை 92
துருக்கர் 349
துரோணாச்சாரி 129
துலுக்கு 45
துவராபதி 106
துறை 7
தூக்குகள் 72
தூது 35
தெய்வ உணர்ச்சி 6
,, கணங்கள் 238
,, சாந்நித்தியம் 104
,, நாயகன் 198
,, பெருஞ்சரிதம் 232
,, புருஷன் 179
,, மொழி 198
,, யானை 111
,, வணக்கம் 156
,, வரலாறுகள் 105, 133
தெய்வங்களின் வரலாறு 109
தெய்வம் பற்றிய கொள்கை 6
,, பாடல்கள் 5
தெரிவுத்திருத்தப் பதிப்பு 400
தெரிவுப் பதிப்பு முயற்சி 395
தெலுங்கர் 349
தெலுங்கு 45, 196, 264
,, சொற்கள் 15
,, பிரதேசம் 193, 215
தென்திருப்பேரைப் பிரதி 209, 373
தென்னர் 349
தென்னவன் 176
தென்னாடு 136, 198, 393
,, பண்பாடு 199
,, மக்கள் 392
தேகப் பயிற்சி 25
தேசப் பற்று 50, 160
தேசிய உணர்ச்சி 14, 141
,, கவி 182
,, கீதை 142, 143
,, வீரன் 179
தேவதேவன் 127
தேவாரத் தமிழ் 257
,, பாடல் 259
தை 68
,, நீராட்டு 68
,, நீராடல் 60, 63, 66
,, நீராடும் நோன்பு 67
,, பூச நாள் 68
தொகை நூல்கள் 163, 178
தொடித்தோட்செம்பியன் 90
தொல்காப்பியச் சூத்திரம் 35, 105
தொல்காப்பியர் காலம் 34
,, கூற்று 81
தொன் மக்கள் நூல் 433
நகர நம்பியர் 19, 20
,, பதியோர் 19
,, மக்கள் 19
,, வாசிகள் 383
நகைச்சுவை 75
நகைப்பு 82

நச்சினார்க்கினியம் 37, 90
நஞ்சியர் 225
நடராஜப்பெருமான் 243
நடுகல் 49
நந்த கோபால் 136
நந்தன் 138
,, வீடு 139
நாகம் 39
நரசிம்மம் 133
நரி 162
நல்லாடை 24
நல்லொழுக்கம் 8
நவ நிதிக்குவை 89
நவீன ஆராய்ச்சிப் பொருள்கள் 391
நவீனத்தின் வரலாறு 171
நாக கன்னி 90
,, சந்திரன் 383
,, புரி 425
நாகரீ 119
நாகரிகம் 19
,, மக்கள் 19
நாகரிகர் 19
நாச்சியார் திருமொழிப் பாசுரம் 68
நாஞ்சில் படை 106
நாட்டணி 338
நாட்டரசன்கோட்டை 365, 366
நாட்டியக்கலை 373
நாட்டுத் தெய்வங்கள் 39
,, பற்று 48
,, புறம் 333
நாடகம் 17, 30
,, அரங்கு 55, 373
,, காவியம் 201
நாடுகாவல் 36
நாணய பரிசோதகன் 399
,, பரிசோதனை 394
நாணல் 74
நாரத முனிவர் 175
,, வாக்கியம் 175
நால் வகைச் சாதி 34
,, வருணம் 35
நாவல்கள் 162, 171
நாள் நிச்சயித்தல் 73
நாளவை 31
நாளோலக்கம் 36
நாற்பால் 52
நாஸ்திகர்கள் 104
நிகண்டுகள் 182
நித்தியப் பொருள் 55
நிபந்தங்கள் 21, 115
நியூட்டன் 81
நிருத்தம் 18
நிருத்தியம் 18
நிலவழி 37
நிலைக் கண்ணாடி 29
,, கலைகள் 17
நீண்ட அகவல்கள் 5
நீதிகள் 171
நீதித்தலம் 27
நீர்த்துறை 28, 64
நீர்வழி 37
நீராடுதல் 28
நுண்கலை 17
நூதன கட்டங்கள் 345
நூல் வழக்கு 15
நூற்பொருள் அகராதி 359
நெட்டுறக்கம் 289
நெடுமான் அஞ்சி 30
நெய்தல் 105
நேபாள மொழி 194
நைடதம் 182
நோன்பு 64, 66
பஃறொடை வெண்பா 177
பக்தி 6
,, இயக்கம் 13, 198, 263
,, ஒழுக்கம் 14

பக்தி நூல் 382
,, பாடற்காலம் 7
,, பெருக்கின் விளைவு 7
,, பெருவெள்ளம் 180
பகலுண்டி 29
பங்குனி 60
பங்குனியத்த நாள் 237, 241
பசிப்பிணி மருத்துவன் 51
பஞ்சமா பாதகங்கள் 294
பஞ்சாட்சரம் 96
பட்டணவாசிகள் 26
பட்டாடை 24
பட்டாபிஷேக மஹோத்ஸவம் 240
படலம் 336
படிகாரர் 27
பண் 7, 255
பண்டித முறை 390
பண்டை இலக்கியங்கள் 182
,, எழுத்தாராய்ச்சி 252
,, காலம் 28
,, தமிழ் இலக்கியங்கள் 251, 351
,, தமிழர்கள் 27, 40
பண்ணத்தி 44, 252
பண்பாட்டின் அச்சம் 76
,, தன்மை 2
,, மேன்மை 51
பண்பாடு 1, 8
பத்திரகாளி 139
பத்து அவதாரங்கள் 131
பதசாரம் 390
பதிகங்கள் 31
பதிப்பாசிரியர் 336, 340
,, கடமை 338
,, குழு 430
பதிப்பு நாணயப் பண்பு 380
பதினெண் கீழ்க்கணக்கு 162
பந்தக்கால் நடுதல் 70
பம்பாநதி 89
பயிற்சிப் பண்பு 1
பரகேசரி 89
பரசமய கோளரி 203
பரணி 85
,, கூழ் 96
,, நாள் 85
பரத கண்டம் 198
பரதன் 186, 272, 284, 306, 311, 386
பரம்பரை வரலாறு 233
பரமபதம் 42
பரமாத்மா 393
பராச சிங்கன் 219
பரிபாடல்கள் 6
பரிபாடல் திரட்டு 28
பரிபாடற் செய்யுள் 4
பரிவேட்டை 97
பருந்து 97, 102
பருவங்கள் 61, 62
பல்லவ அரசர்கள் 115
பல்லவர்கள் 262
பலராமன் 106
பலியிடுதல் 145
பழங்கால மணவினை 72
பழங்குடி மக்கள் 71
பழம் பிரதி 339
பழமுதிர் சோலை 111
பழமொழி 78
பழைய தமிழ் நூல்கள் 254
பழைய பாடம் 342
பள்ளர் 84
பள்ளிப் படுத்தல் 337
,, படை 27
பறையன் 35
பனிக்காலம் 23
பனையோலை 68
பாகவத வடிவு 45

பாகு வலயம் 99
பாசுபதம் 42
பாட்டி 80
பாட்டியல் நூல்கள் 84
பாடகம் 99
பாடநிச்சயம் செய்தல் 395
,, பேத ஆராய்ச்சி 359
,, பேதங்கள் 220, 336, 375–377, 379, 395
பாடல் 30
பாடினி 31
பாண்டவர் 141
பாண்டித்துரைத் தேவர் 378
பாண்டிநாடு 87
பாண்டிய அரசர் 56, 115
பாண்டியர் படை 90
பாணன் 6, 31, 35-37, 254
பாணாசுரன் 140
பாணிக்கிரகணம் 70, 72, 74
பாத்திரப்படைப்பு 191
பாதம் 177
,, ரக்ஷை 73
பாதாதி கேசம் 318
பார்சுவ நாதர் 119
பார்ப்பனப் பெரியோர்கள் 73
பார்ப்பான் 73
பாரத கண்டம் 227
,, தேசம் 69, 148, 175, 179, 180, 263, 264
,, தேவி 238, 242
,, தேவியின் அருந்தவம் 231
,, நாட்டு வீர மக்கள் 307
,, மாதா 227, 237
,, யுத்தம் 132, 141
பாரதியின் வசன நூல் 163
பாரா வளை 99
பாரி 48, 62, 108
பாரிஸ் புத்தகாலயம் 169
பால் 39
பால காண்ட உரைப் பதிப்பு 335
,, பகுதி 334, 335
,, பதிப்பு 361, 367, 369, 396
பாலாற்றங்கரை 97
பாலாறு 88
பாலிமொழி 119
பாலையூர் 203
பாவனா சக்தி 230
பாவனைக் கட்டுரை 226
பாவை நோன்பு 28, 67
பாற்கடல் 181
பானு கர்ணன் 387
பாஹ்ய வளர்ச்சி 115
பாஷ்யம் 114
பிணி முகம் 112
பிதிரார்ஜிதம் 272
பிரகலாத ஆழ்வான் 124
பிரகலாதன் 132
பிரகிருதி நூல் 78
பிரசங்கம் 344, 347
,, முறை 344, 346
பிரதாப ருத்ரன் 196, 215, 375
பிரதி 375
,, பேதங்கள் 436
,, ரூபங்கள் 397
பிரபந்தங்கள் 11, 12, 84, 85, 87, 165, 262
பிரபுக்கள் 18
பிரபுட தேவராயர் 121
பிரம்மா 138
பிரம்மாஸ்திரம் 82, 341
பிரவசன கர்த்தர்கள் 176
பிராகிருதம் 27, 119
,, சொல் 126
பிராசி 45
பிராம்மணம் 126
பிராம்மணர்கள் 130
பிருந்தாவனம் 137

பிரெஞ்சு 15, 45, 78
,, ஆசிரியர் 267
பிலத்துவாரம் 90
பிலநீங்கு படலம் 219
பிள்ளைத்தமிழ் 43
பிற்கலச்சோழர்கள் 115
,, ,, வம்சம் 84
பிற்காவிய காலம் 11
பிற்சங்க இலக்கியம் 4, 176
,, காலம் 6
,, புலவர்கள் 5
பின்பனி 23, 61, 62
பின்னைப் பிராட்டி 134
பிக்ஷையளித்தல் 100
புக்க தேவராயர் 212
புகையூட்டல் 29
புத்தப்பேய் 100
புத்தமிர்தம் 181
புத்தஜாதகக் கதைகள் 179, 383
புத்தேரி 431
புதுச்சேரி 202
புதுமைத் தமிழ் 143
புதுவை புத்தகாலயம் 169
புதுவையான் 218
புராணம் 14, 60, 85, 165
,, சாகரம் 177
,, வரலாறுகள் 115
புராதன இலக்கியங்கள் 160
புருஷோத்தமன் 198, 227
புரோகிதர்கள் 73, 116
புல்வேய் குரம்பைக்குடில் 25
புலையன் 35
புளிங்கறி 30
புறக்கடை 26
புறச்சமயங்கள் 133
புறத்திணை 27, 86
புறநானூற்றுச் செய்யுள் 256
புறம் 5, 47, 56
புறம்பு 62
புன்னகை 77
பூச்சூட்டுதல் 162
பூசகர்கள் 67
பூந்தோட்டிகள் 26
பூதேவி 138
பூப்புள்ளி 26
பூர்வ இலக்கியங்கள் 161, 380
,, சரித்திரம் 160
,, சரித்திர உணர்ச்சி 14
,, வரலாற்று முறை 392
,, ஜன்மம் 118
பூர்வாங்க நிகழ்ச்சிகள் 70
பூரண பொற்குடம் வைத்தல் 72
பூவை நிலை 109
பூனா நகரம் 397
பெண்களின் நிலை 51
பெண்ணையாறு 89
பெரிய புராணச் செய்யுள் 206
பெரிய வாச்சான் பிள்ளை 213
பெருங்கதை 73
,, காப்பியம் 10, 184, 192, 232, 360
,, காவியம் 187, 318
,, கோழி நாய்கள் 34
,, சோற்றமலை 71
பெரு நற்கிள்ளி 256
,, வாழ்வு 33
பேதைமை 82
பேய் 84, 87, 93, 94, 97
பேரம்பலம் 204
பேரிதிகாசம் 181, 195, 398
பேரிலக்கியங்கள் 395
பைத்தியக்காரர்கள் 79
பொது இடங்கள் 26, 27
,, பண்பாடு 180
பொய்மெய் முறை 39
பொய்யாடல் 66
பொரிமுகத்து அட்டுதல் 74
பொருத்தம் 394

பொருள் 357
பொருள்கோள் முறை 395
பொற்கலங்கள் 30
,, காசுகள் 31
பொன் முகரி 89
போதி சத்துவ நிலை 119
,, சத்துவர்கள் 133
போர்க்களம் 304
,, கோலம் 301
போர்த்துகீசிய மொழி 45
போர்த்து கீசு 15
போலி இலக்கியங்கள் 251
பௌத்தம் 42, 106, 117
,, துறவிகள் 35
,, நூல்கள் 9
,, சமயம் 13, 133
,, ,, வரலாறு 119
,, மதம் 227
,, ஜாதகம் 118
,, ஜைன மதங்கள் 256
பௌத்தர்கள் 362
பௌம சரிதம் 133
பௌராணிக வரலாறு 176
மகரம் 60
,, ஸங்கிராந்தி 60
மகாபலிபுரம் 115
மகாபாஷ்யம் 127
மகோதரன் 298, 314, 315
மங்கல நாள் 365
மஞ்சன நீர் 71
மஞ்சனமாட்டி வைத்தல் 74
மணமகன் வருதல் 73
,, மாலை அணிவித்தல் 73
,, முரசு 72
,, வினை சடங்குகள் 70
மணிப்பிரவாள நடை 15, 45
,, மண்டபம் 249
மத்தளம் 73
மதப் பிரவர்த்தன ஸ்தா பனங்கள் 20
மதப் போராட்டம் 257
மதுபானம் 72
மதுரை 111, 127, 166
மதுவகை 30
மந்திர பூர்வம் கோடிப்புடவை 73
மந்திரியர் 36
மயன் 291
மயிர்குறை கருவி 29
,, சாந்து பூசல் 29
மயில்கள் 112
மரக்கலங்கள் 37
மரபியல் 44
மருதம் 105
,, மரம் 28
மல்யுத்தம் 25
மல்லன் 35
மலைக்குகை 8
,, பிரதேசங்கள் 25
மலையாளம் 44, 45, 198, 264
மழலை 59
மழைக்காலம் 23
மழு 299
மறுபிறப்பு 146
மறுமலர்ச்சி 15
மறுமை 39
,, பயன் 14
,, உலகம் 31
மன்றம் 27
மனப் பண்பு 83
மனு 89
,, நீதி 87, 88
மனைவிளக்கு 71
மனோ பாவனை 14
,, பாவனையின் வளம் 187
மஹாராஜா 22
மாங்கலிய சூத்திரம் 73
மாடம் 26

மாதவி 20
,, கொடிகள் 326
மாந்தாதா 89
மாயாசனகன் 314, 315
,, சூழ்ச்சி 313
மாயோன் 105
மார்கழி 60, 68
,, நீராடல் 67
மாரீசன் 386
மாவியவான் 298
மாலை புனைதல் 29
மானவ கிருஹ்ய சூத்திரம் 72
மானஸிகம் 114
மிகப் பழைய ஏட்டுப் பதிப்புக்கள் 337
,, பிரதிகள் 336, 337
மிதிலா நகரம் 318 320, 321
மிருக சிரிஷம் 68
மிலேச்சர் 349
மீசை 29
மீராபாய் 134
முக்கட் செல்வன் 38
முகமதிய அரசர்கள் 15
முகமயிர் 29
முசரம் 167
முசலங்கள் 299
முசுகுந்தன் 89
முடிகொண்ட சோழ மூவேந்தவேள் 88
முத்துப்பொடி 99
முதல் இராசராசன் 90, 210, 374
,, இராசேந்திரன் 90
,, குலோத்துங்க சோழன் 84, 7, 89, 90, 203
,, பதிப்புக்களின்விவரங்கள் 359
,, பராந்தகன் 90
முதலாம் பிரதாபருத்திரன் 196
முது பெண்டிர்கள் 71
,, பேய் 94
,, வேனில் 23, 61
முயல் 30, 81
முரசம் 59
முரசு 73
முருகன் 39
,, கடவுள் 105
,, கடவுளின் வரலாறு 110
,, வேள் 6, 225
முருகனும் கண்ணனும் 120
முல்லை 105, 139
முளைப் பாலிகை 73
முற்காவிய காலம் 8, 11
முற்சங்கப் புலவர்கள் 4
,, செய்யுட்கள் 178
,, நூல்கள், 4, 63, 66, 67, 175
,, பிறவி 146
முன்பனி 23, 61, 62
மூங்கிற் குழாய் 30
மூதிர் பெண்டிர் 85
மூர்த்தி விசேஷங்கள் 117
மூல நதி 360
,, நிர்ணயப் பதிப்பு 399
,, நூல்கள் 359
,, பாடம் 357, 377, 396
,, ,, நிர்ணயம் 396
மூவலூர்க் கல்வெட்டு 217
மூளைச் சோறு 93
மூன்றாங்குலோத்துங்கன் 196, 212, 222, 223
மெய்க்கீர்த்தி 89
மெய்ப்பை 35
மேகலை 19
மேதாவிகள் 81
மேரு 114, 292, 387
மேலுலகம் 39, 146
மேனாட்டு அறிவு 14

மையோவவ 66
மொழியுணர்ச்சியில்லாமை 345
மொழி வரலாறு 44
மோக வதைப் பரணி 85
மோகினி மாதர் 95
மோட்சம் 80
யசோதை 138
யமுனை 122, 128
யவனர் 25, 30
யாகங்கள் 35
யாசகர் 390
யாப்புத்திறன் 185
யாழ்ப்பாணம் 46, 219, 356
யாற்றணி 338
ரதபந்தங்கள் 171
ரஸிக தத்துவ ஆராய்ச்சியாளர் 318
,, முறை 394
ராசக்கிரீடை 134
ராதை 134, 136
ராமன் 133
,, சரிதம் 351
ராமநாதபுரம் 169
ரிஷி கணங்கள் 239
ருக்மணி 140
ருபஞண சீலம் 18
ருபசௌந்தர்யம் 317
ரோகிணி 72
லட்சிய புருஷன் 179
லட்சுமணன் 121, 178
லட்சுமி 106, 136
லத்தீன் 78, 363
லிரிக்ஸ் 5
லௌகிகத்துறை 31
லௌகிக வைதிகத்துறைகள் 21
வசன நூல்கள் 15
வஞ்சி 253
வடகலிங்கத்து மன்னன் 88
,, சொல் 15, 45, 253, 254
,, வடதிசை 45
,, நாட்டுக் கிருஷ்ண சரித்திரங்கள் 136
,, நாட்டுக்குரிய சரித்திரம் 175
,, நாட்டுப் பண்பாடு 199
,, நாடு 257
,, நூற்கல்வி 265
,, மதுரை 128, 129, 137
,, மீன் 51
,, மொழி 10, 17, 27, 45, 60, 61, 78, 113, 119, 179, 199, 200, 268, 267, 361, 362
,, ,, உணர்ச்சி 225, 259
,, ,, கலப்பு 254
,, ,, ஞானம் 345
,, ,, நூலுணர்ச்சி 258
,, ,, வாக்கிய அமைதி 45
,, மொழியாளர் 69, 70
,, மொழியும் தமிழும் 260
வண்டற் பாவை 64, 65
வண்ணம் 184
வணக்கம் 6
வதுவை மணம் 71, 72
வரதராஜர் பாகவதம் 211
வரலாற்றுப் பெருமை 117
வரலாறுகள் 359
வரிக் கோணங்கள் 252
வரிப் பாடல் 9, 261
வருணன் 105
வருணனைகள் 188, 191
வருணாச்சிரம தருமங்கள் 142
வழக்குரை காதை 261
வழிமுறைக் காவியம் 199
வள்ளி அம்மை 111
வளர்ச்சியிகாசம் 198
வளிமறை 26
வன்ன சரங்கள் 99

விக்கிரம சோழன் 88, 205, 218, 220
,, ,, வளநாடு 222
விஞ்ஞான நோக்கு 363
விடுகம்பி 99
வித்யாதரர்கள் 386, 387
விதர்ப்பர் 349
விபீஷணன் 190, 270, 296, 304–308, 311, 386, 387
வியப்பிடைச் சொல் 196
வியாக்கியானம் 180
வியாச பாரதப் பதிப்பு 397
விராடர் 349
விருத்தம் 79
விளக்குகள் 92
விஜய நகர சாம்ராஜ்யம் 212
விஜயாலய சோழன் 210
விஷ்ணு 136, 138
வீடுகளின் அமைப்பு 25
வீர்ய சுல்கம் 388
வீரம் 5, 23
,, உணர்ச்சி 50
,, சோழ அணுக்கன் 201
,, ,, அணுக்கர்படை 201
,, சௌந்தர்யம் 317
,, தலைவன் பரசமய கோளரி மாமுனி 202
,, புருஷன் 179
,, மரணம் 49
,, ராஜேந்திரன் 201, 213
,, வாழ்வு 33, 49
வெண்சோறு 29, 72
வெண்ணைச் சடையன் 218
வெண்ணெய் நல்லூர் 237
வெண்பாக்கள் 91
வெயிற் காலம் 23
வேசியர் 18, 20, 21
வேசை 96
வேட்டுவன் 35
வேடிக்கைக் கதைகள் 389
வேதம் 28
,, ஓதும் பாடசாலை 117
,, வணிகர் 37
வேதாந்த விஷயங்கள் 171
வேந்தன் 105
வேலவாடல் 110
வேளாளர் 35, 38
,, மரபினர் 244
வைகாசி 60
வைசியர் 35
வைணவ சமய வரலாறு 372
வைதிக ஆசாரங்கள் 14
,, இராமாயணச் சரித்திரம் 386
,, சமயம் 13, 35, 38, 132, 179, 228, 257
,, ,, வளர்ச்சி 256
,, தெய்வங்கள் 14
,, மதச் சார்பினர் 14
வைஷ்ணவம் 107, 117, 132
,, சமயம் 317
,, ,, உணர்ச்சி 65
,, ,, சரிதம் 210
,, பிரபந்தம் 389
வைஷ்ணவர்கள் 133, 210, 352
வைஷ்ணவன் 382
வௌவால்கள் 93
ஜயஸ்தம்பம் 89
ஜனகர் 320, 322, 386, 388
ஜாதிச் சூழ்ச்சி முறை 352
ஜாதி மதங்கள் 150
ஜாவா 234, 262
ஜின சேனர் 387
ஜின-பக்தன் 387
ஜினர் கோயில்கள் 387
ஜீவாத்மா 393
ஜெர்மன் 78, 324
ஜைனம் 42, 106, 117, 387
,, இராமாயண கதை 386, 388
,, காவியங்கள் 10
,, சமயம் 7, 13, 67, 133, 227
,, ,, பெரியார்கள் 65
,, ,, வரலாறு 119
,, துறவி 387

ஜைனர்கள் 179
ஜோதிஷ நூல்கள் 60, 61
ஸ்ரீ புராண ஆசிரியர் 385
,, ரங்கநாதரது திருச்சந்நிதி 237
,, ராகவன் 897
,, ராமன் 121
,, ராஜராஜ விஜயம் 200, 203
ஷேக்ஸ்பியர் நாடகப்பதிப்பு 377
,, பதிப்பு 356
ஸ்தல புராணக்காரர்கள் 111
ஸ்மிருதிக் கருத்துக்கள் 263
ஸகோதரத்துவம் 279
ஸம்ஸ்காரங்கள் 69
ஸம்ஸ்கிருத மொழி 142
ஸவர்ணன் 200
ஸோவியத் 150, 151
க்ஷத்திரியன் 327
க்ஷவரம் 28.

——

additions 404
aesthetic enjoyment of poetry 40
Ambikapati 417
Amur-Kalappalam 407
Arangerral 412, 413
Arangerru Kadai 412
Arungalai-Vinodam 415
Bala Kandam 403, 404
Bana King 411
Bharatiya Vidya Bhavan 411
Chandam 405, 406
City Men 19
Civilised Men 19
Critical and defenitive Edition 424
,, ,, of Kamban
,, Scholarship 408
,, Text of Kamban 427
Dasaratha 419
dictorial pronouncements 404
emendations 405
explanatory notes 408
gunavira guravadigal 412
genuine kamban 404, 405
Hetrodex Sholars 417
Indrajit 421
Interpolations 404
Ipse dixits 404
Kama Valli 420
Kamban Ms 407
,, Nadu 413
Kanarese 411
Kavi Chakravarthi 414, 416, 417
Kulottunga III 414, 415
Literary Criticism 404
Madurai Tamil Sangam 427
Mandodari 421
Manu Scripts 410
Narada 418
Nonsense 377
Padalams 406
Poet-laurate 416
Prefatory remarks 408
Ramayana Story 418
Ravana 419, 420
Sadaiappa Vallal 416
Saka era 407, 411
Saivaism 416
Scientific Textual Criticism 405
Surpana Kha 420
Tanjore District 417
Text of Kamban 403
Textual Criticism 378, 404
The Danciad 378
Tiruvalundoor 416
Trash 377
Tyaga Vinodan 407, 414
,, Bhattan 414
,, Mavenda velan 414
uvaccha Caste 416
Vaishnavism 414
Vaishnavite 416
Vali 420
Vikrama Chola 414
,, era 412
Vira Rajendra 411
,, Vinodan 415

———

வையாபுரிப் பிள்ளை நூற் களஞ்சியம்

இதுவரை வெளிவந்தவை :

இலக்கியச் சிந்தனைகள்	ரூ.	42 00
தமிழின் மறுமலர்ச்சி	ரூ.	42 00
தமிழ் இலக்கிய சரிதத்தில் காவியகாலம் திராவிட மொழிகளில் ஆராய்ச்சி	ரூ.	50 00
இலக்கிய உதயம்	ரூ.	70 00
தமிழர் பண்பாடு - கம்பன் காவியம்	ரூ.	75 00

இனிவரும் தொகுதிகள்

தமிழ்ச்சுடர் மணிகள்

பல்பொருள் மாலை

7.6272